ஸ்ரீ வெங்கைய ஸ்வாமியின் வாழ்க்கைச் சரிதம்

தினந்தோறும் பாராயணம் செய்வதற்கு உகந்த நூல்



தொகுப்பு
பெசல சுப்பராமையா




BHAGAVAN SRI VENKAIAH SWAMY

மாதாஜி வக்கெம்மா



பக்தசிகாமணி ஸ்ரீ அக்கிம் வெங்கட்ராமிரெட்டி



ஸ்வாமியின் சமாதி மந்திரம் கட்டப் பொருளுதவி செய்த



ஸ்வாமியின் பக்தை துளசிப்பாட்டி


ஸ்ரீ சுண்டு நாகய்யா என்ற ரோசிரெட்டி




ஸ்ரீ வல்லபு ரெட்டி ஆதி நாராயணரெட்டி




ஸ்ரீ கொமரகிரி ரமணய்யா



ஸ்ரீ வெங்கையஸ்வாமி



ஸ்வாமி உபயோகித்த பொருட்கள்



வண்டி, பாதுகைகள், டோலி, பால் காய்ச்சும் பாத்திரங்கள்

ஸ்ரீ வெங்கைய ஸ்வாமியின் வாழ்க்கைச் சரிதம்

நாள்தோறும் பாராயணம் செய்வதற்குரிய நூல்

தொகுப்பு :

பெசல சுப்பராமையா

தமிழாக்கம் :

S. லக்ஷ்மி

ஸ்ரீ ஸ்வாமிக்ருபா பப்ளிகேஷன்ஸ் ட்ரஸ்ட்

கொலகமூடி

(வயா) ஸர்வேபல்லி, நெல்லூர் ஜில்லா, ஆந்திர பிரதேசம்

PIN - 524 321.

All rights reserved by the Publishers

முதற்பதிப்பு : 2001

விலை : ரூ. 60/-

இடைக்குமிடம் :
பெசல சுப்பராமய்யா
ஸ்ரீ ஸ்வாமிகிருபா பப்ளிகேஷன்ஸ்
கொலகமூடி போஸ்ட்
(வயா) ஸர்வேபல்லி - 524 321
நெல்லூர் ஜில்லா - ஆந்திரப்பிரதேசம்

அச்சிட்டோர் :
ஸ்ரீ மாருதி லேஸர் பிரிண்டர்ஸ்,
173, பீட்டர்ஸ் சாலை,
சென்னை - 600 014.
போன் : 8524256



ஆசார்யா ஸ்ரீ எக்கிரால பரத்வாஜா

ஆசார்யா ஸ்ரீ எக்கிரால பரத்வாஜா அவர்கள், ஸ்வாமி நம்மிடையே இருக்கும்போதே அவரது வாழ்க்கைச் சரித்திரத்தை வெளியிடும்படியும், அது முடியாவிட்டால், ஸ்வாமியின் திவ்ய லீலைகளைப் பற்றிக் காகிதங்களில் அச்சிட்டு நெல்லூரில் உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் விநியோகிக்கும்படியும் ஸ்வாமியின் சேவகர் களை மிகவும் ஊக்குவித்தார். அவர்களால் அவ்வாறு செய்ய இயலவில்லை.

எனவே, வித்யாநகர் சாயிபாபா கோவிலின் கும்பாபிஷேக சந்தர்ப்பத்தில் வெளியிட்ட நினைவு மலரில் ஸ்வாமியின் புகைப் படத்தையும் அவரது திவ்ய லீலைகளையும் முதன் முறையாகப் பிரசுரித்து ஸ்வாமியைப் பற்றி உலகத்துக்குத் தெரியப்படுத்தினார். இவ்வாறு செய்வதனால் ஸ்வாமியின் கோபத்திற்கு ஆளாக வேண்டி யிருக்கும் என்று பலர் எச்சரித்தனர். அதற்கு அவர் ''இதன் மூலம் எவ்வளவோ பேருக்கு நன்மை ஏற்படும். அதனால் நான் ஒருவன் நான்கு பிறவிகள் பின்னோக்கிச் சென்றாலும் எனக்குக் கவலையில்லை'' என்றார். ஸ்வாமி நம்மிடையே இருக்கும்போது என் மூலமாக அவரைப் பற்றிய செய்திகளைச் சேகரிக்கச் செய்து ஸ்வாமியின் முதல் வாழ்க்கைச் சரிதத்தைப் பிரசுரித்து உலகத்தாரால் பூஜிக்கத்தக்கவர் ஆனார்.

முன்னுரை

எளிய மக்களை உய்விப்பதற்கும் பக்தர்களைக் காப்பதற்கும், முக்தியடைய விழையும் ஜனங்களுக்கு வழிகாட்டுவதற்காகவும் பரமாத்மாவே நம்மிடையே ஸத்குருவாக அவதரிக்கிறார். அத்தகைய ஸத்குருவிடம் எங்கும் வியாபித்துள்ள தன்மை, எல்லாம் வல்ல தன்மை, எல்லாமறியும் தன்மை ஆகிய குணங்கள் முழுமையாகக் காணப்படும். இத்தகைய ஸத்குருவே கொலகமூடியில் வாழ்ந்த அவதூத ஸ்ரீ வெங்கையஸ்வாமி.

தம் உடலை விட்டு விட்ட பிறகும் எப்போதும் உள்ளவர் களான மஹான்களால் தமக்கு விருப்பமான இடத்தில் விரும்பிய உருவத்தில் தோன்ற இயலும். அவர்கள் சர்வ சாகூியாக இருந்து நம் பிரார்த்தனைகளையும் நம் செயல் களையும் எப்போதும் கவனித்துக் கொண்டே இருந்து நாம் அவர்களைப் பிரார்த்திக்காவிடினும் நன்மை எப்போதும் காப்பாற்றுவர். வெங்கையஸ்வாமி மகாசமாதியடைந்த பிறகு நிகழும் அவரது லீலைகளே இதற்குச் சான்றாகும். ஸ்வாமிக்கு மதபேதம் இல்லை. அவரது சமாதியை எல்லா மதத்தவர்களும் எல்லாச் சாதியினரும் தரிசித்துத் தமது துன்பங்களைப் போக்கிக் கொண்டிருக் கின்றனர்.

இடைவிடாது ஸத்குருவை நினைப்பதன் மூலம் ஒருவரது சம்சார பந்தங்கள் யாவும் ஒழிந்து அவருக்கும் குருவுக்கும் வித்தியாசமின்றிப் போய் அவர் முக்தியடைகிறார்

நன்றியுரை

இந்தப் பிரபஞ்சமென்ற நாடகத்தில் எனக்கும் ஒரு பாத்திரத்தை அளித்து என் வாழ்வைத் தூய்மையான வழியில் நடத்தத் தூண்டிய பரமாத்மாவுக்கும், அந்தப் பரமாத்மாவின் பிரதிரூபமும், என்மீது பெற்ற தந்தையைவிடப் பேரன்பைச் சொரிந்து என்னை ஸ்வாமியின் சந்நிதிக்கு அனுப்பி அவரது வாழ்க்கைச் சரிதத்தை தொகுக்கச் செய்து அவரது சரிதத்தை முதன் முதலாக வெளியிட்டவருமான ஆசார்ய ஸ்ரீ எக்கிராள பரத்வாஜா அவர்களின் பாத கமலங்களுக்கும் எனது ஆயிரக் கணக்கான சாஷ்டாங்க நமஸ்காரங்களைச் சமர்ப்பிக்கின்றேன்.

இத்தகைய எனது சேவையை ஏற்றுக் கொண்ட ஸ்ரீ சாயி நாதருக்கும், ஸ்ரீவெங்கைய ஸ்வாமிக்கும் எனது சாஷ்டாங்க நமஸ்காரங்கள்.

மேன்மை பொருந்திய என் தாய் பெசல சேஷம்மாவுக்கும் எனது தமையனார் ரமணய்யாவுக்கும் நன்றியோடு கூடிய வந்தனங்கள். இந்த நூலை அச்சிட உதவிய ஒங்கோல் எம். வெங்கடேஸ்வர்லு அவர்களுக்கும், சூலூர்பேட்டை ஏ. ஸோமிசெட்டி வெங்கடேஸ்வர்லு அவர்களுக்கும் ஸ்ரீஸ்வாமியின் ஆசிகள் எப்போதும் இருக்க வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

பெசல சுப்பராமய்யா

என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. இவ்வாறு ஸ்வாமியின் மீது நம் மனதை இடைவிடாது நிறுத்துவதற்கு அவரது வாழ்க்கைச் சரிதத்தை நினைவு கூர்வது என்பது பெரும் உதவியாக இருக்கும். அதனால் தான் அவருடைய தோற்றம், மொழிகள், வாழ்க்கை முறை ஆகியவற்றைப் பற்றி இந்த நூலில் விவரிக்கப் பட்டுள்ளது. ஸ்வாமியின் வாழ்க்கையே சாதகர்களுக்கு மலையின் மீதுள்ள ஒளியைப் போல வழிகாட்டியாக விளங்குகிறது. எல்லா உயிர்களின் மீதும் அன்பு, எளிமை, தன் லக்ஷியத்தின் மீது ஈடுபாடு, செயல்களில் சிரத்தை, வைராக்கியம், தர்மத்தைக் கடைப்பிடித்தல், இந்திரியங்களை அடக்குதல் முதலியவை அவர் தம் வாழ்வில் கடைப்பிடித்துக் காட்டிய வழியாகும்.

ஸ்ரீசாயிநாதரையும், ஸ்ரீரமண மஹரிஷியையும் நாம் பார்க்க வில்லை. ஆனால் 1962-ம் ஆண்டு வரை நம்மிடையே வாழ்ந்த ஸ்வாமியைத் தரிசிக்க முடிந்த நாம் மிகவும் அதிருஷ்டசாலிகளே. அவர் உடலோடு வாழ்ந்தவரை தம் மேன்மையை ரகசியமாகவே வைத்திருந்தார். தமது புகழ் பரவுவதை அவர் விசித்திரமான முறைகளில் தடுத்தார். அவரது மஹாசமாதிக்குப் பிறகே பக்தர்கள் தமது அநுபவங்களை ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டு ஆனந்தமடையும் வாய்ப்புக் கிடைத்தது. எல்லோரும் இத்தகைய ஸத்குரு ஸ்மரணையின் மூலம் அவரது அருளைப் பெற்று உய்ய வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு பக்தர்களின் அநுபவங் களைத் தொகுத்து இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

பாராயணம் செய்யும் முறை

இந்தப் புனிதமான புத்தகத்தை முறைப்படி பாராயணம் செய்தால் ஸ்ரீஸ்வாமியின் அருள் சிறப்பான முறையில் நமக்குக் கிடைக்கும். அது ஸ்ரீதத்தாத்ரேய சம்பிரதாயம்.

வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் ஒவ்வொருவரும் ஸப்தாஹ பாராயணம் செய்வதற்குச் சௌகரியமாக இருக்கும் படி இந்தப் புத்தகம் தொகுக்கப்பட்டுள்ளது. அல்லது அமாவாசை அன்று ஸ்வாமியை பூஜித்துவிட்டுப் பிரதமை யன்று பாராயணம் ஆரம்பித்து பூர்ணிமை அன்று (15 நாட்கள்) பாராயணத்தைப் பூர்த்தி செய்யலாம். ஒவ்வொரு நாளும் எவ்வளவு படிக்க வேண்டும் என்பதை அவரவர்களே நிர்ணயித்துக் கொள்ளலாம். அவரவர்களின் சௌகரியத்தைப் பொறுத்து பாராயணம் ஆரம்பிக்கும் போது ஸ்ரீஸ்வாமியின் படம் அல்லது ஸ்ரீதத்தாத்ரேய ஸ்வாமி படம் அல்லது அவரது பூர்ணாவதாரமான ஸ்ரீசாயிபாபாவின் படத்துக்கு தூப தீபம் அர்ப்பித்துப் பின் பாராயணம் செய்ய வேண்டும். பாராயணம் முடிந்தபின் நூற்றிஎட்டு முறை அக்ஷதைகள், துளஸி, மலர்கள் முதலியவற்றால் பூஜித்து நைவேத்தியம் அளித்துப் பின் கற்பூர ஆரத்தி செய்ய வேண்டும். அல்லது ஒரு வியாழக்கிழமை அன்று ஆரம்பித்துப் பதினைந்தாவது நாள் ஆன வியாழனன்று முடிக்கலாம். பாராயணம் பூர்த்தி செய்யும் நாள் அன்று ஸ்வாமிக்கு தேங்காயும், பூக்களும் அர்ப்பணித்து விட்டு அவருடைய உருவமாகக் கருதி ஒருவர் அல்லது மூன்று அங்கஹீனம் உள்ள ஏழைகளுக்கு சாதம் போட்டுத் தம் சக்திக்கேற்றவாறு தக்ஷிணை தாம்பூலம் அளிக்க வேண்டும். அவ்வாறு செய்யச் சாத்தியப்படா விட்டால் ஸ்வாமிக்கு என்று

சங்கல்பித்து உணவை வீட்டுக்கு வெளியே போட்டுவிட்டு அன்னதானம் செய்வதற்கு ஆகும் செலவை ஸ்ரீ பூர்ணா ஸ்ரமத்துக்கு அனுப்பலாம்.

பெண்கள் வீட்டுக்கு விலக்காக இருக்கும் சமயங்களில் இந்தப் புத்தகத்தைப் படிக்கக் கூடாது. எவராவது உறவினர் இறந்ததன் காரணமாகத் தீட்டு இருந்தாலும், மனதில் வருத்தம் இல்லையென்றால் பாராயணம் செய்யலாம்.

எப்போதும் பாராயணம் செய்யும் எண்ணிக்கை 1, 3, 5 என்று ஒற்றைப் படையிலேயே இருந்தால் நல்லது.

ஸ்வாமியின் பக்தர்களுக்கு ஆண்டுதோறும் ஸ்வாமியின் ஆராதனைக்கு வந்து தரிசனம் செய்வது, சேவை செய்வது முதலியவை மிகவும் நன்மையளிக்கும்.

சில முறைகள் பாராயணம் செய்தபிறகு இந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ள மற்ற மஹான்களின் சரித்திரத்தைக் கூடப் பாராயணம் செய்வது மிகவும் நன்மையளிக்கும்.

ஸ்ரீ ஸ்வாமிக்கு தக்ஷிணை அனுப்ப விரும்புபவர்கள்

The Secretary,
BHAGAVAN SRI SRI VENKAIAHSWAMY HUMANITARIAN MISSION
Golagamudi - 524 321, Nellore District, Andhra Pradesh.

என்ற முகவரிக்கு அனுப்பவும்.
தனி நபர்களின் பெயர்களில் அனுப்ப வேண்டாம்.

ஸ்ரீஸ்வாமியை வழிபடும் முறை

1. ஸ்வாமியின் வாழ்க்கைச் சரிதத்தைப் பாராயணம் செய்தல்.
2. சமைத்தவுடன் முதலில் சிறிது சாதமும் சமைத்த காய்கறி பதார்த்தத்தில் சிறிதும் ஒரு இலையிலோ அல்லது காகிதத்திலோ வைத்து வெளியே நமது வாசல் அருகே வைத்து விட்டு எல்லா உயிர்களிலும் விளங்கும் வெங்கைய ஸ்வாமிக்கு அர்ப்பிக்கிறேன் என்று வணங்கி அந்த சாதத்தைப் பிராணிகள் தின்னுமாறு விட்டுவிட வேண்டும்.
3. ஸ்வாமியின் அக்னிகுண்டத்துக்குத் தேங்காய், விறகு, சாம்பிராணி, நவதானியங்கள் முதலியவற்றைச் சமர்ப்பிக்க வேண்டும். தம் வாழ்நாள் முழுதும் ஸ்வாமி அக்னிகுண்டத்தை மிகவும் உயிருக்குயிராகப் போற்றி அன்போடு வழிபட்டார்.
4. ஸ்வாமியின் படத்தை வீட்டில் வைத்து பூஜிக்க வேண்டும்.
5. பெண்மணிகள் வீட்டுக்கு விலக்காளபோது மற்றொருவரைக் கொண்டு மேற்கூறியவற்றை நிறைவேற்ற வேண்டும்.
6. ஸ்வாமியின் அக்னிகுண்டத்துக்கும், ஸமாதி மந்திரத்திற்கும் ஒருமுகமான மனதுடன் நூற்றியெட்டு பிரதக்ஷிணங்கள் செய்ய வேண்டும்.
7. ஸ்வாமியின் சந்நிதிக்கு வந்தபோது உலக விஷயங்களைப் பற்றி பேசுவதை விட்டுவிட்டு பிரதக்ஷிணம், நாமஸ்மரணை, புனித நூல்களைப் படித்தல் முதலியவற்றில் காலத்தைக் கழிக்க வேண்டும்.

ஸ்வாமி, தமக்கு சேவை செய்பவர்கள் மற்றவர்களைப் பற்றி விமர்சித்தாலோ, அல்லது கோபம் முதலான தீய குணங்களுக்கு ஆட்பட்டாலோ, அவர்களது சேவையை ஏற்றுக் கொள்ள மாட்டார்.

மற்றவர்களைப் பற்றி அடுத்தவர்கள் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்பதும் தவறே. ஒரு முறை ஒரு சேவகர் அத்தகைய புறங்கூறுதலைக் கேட்டுவிட்டு வந்து ஸ்வாமிக்குக் கஞ்சி ஊற்றப் போனபோது ''புறங் கூறியதைக் கேட்டுவிட்டு வந்திருக்கிறாய். நீ ஊற்றும் கஞ்சி எனக்கு வேண்டாம் போ'' என்றார் ஸ்வாமி.

பிரபஞ்சத்திலுள்ள எல்லாவற்றையும் விட அதிக மதிப்புள்ளது நிம் மனது. அதனை மிகவும் தூய்மையாக, மேலேகூறிய தீய குணங்கள் சேராமல் ஸ்வாமியை நினைப்பதற்கு மட்டுமே உபயோகித்தால், ஸ்வாமி நமது வழிபாடுகளை ஏற்று மகிழ்வாரென்று உணர வேண்டும். அவ்வாறு செய்ய முடியாதபோது நமது வழிபாடுகள் அனைத்தும் வீணே.

தம்முடைய அக்னிகுண்டத்தைக் காண்பித்து ஸ்வாமி ''கோடி லிங்கங்களின் பூஜையல்லவா இங்கே நடக்கிறது'' என்றார். எனவே நாம் எவ்வளவு நியமமாக தூய்மையோடு குண்டத்தை வழிபட வேண்டும் என்றுயோசித்துப் பாருங்கள்.

8. கொலகமூடியில் ஒரு தாய் தன் குழந்தை காணாமல் போன பொழுது ஸ்வாமியிடம் ''நான் உனக்குச் சமர்ப்பித்த நைவேத் தியங்கள் எல்லாம் என்ன ஆயின? நான் செய்த பாராயணம் என்ன ஆயிற்று? என் குழந்தையை உணவு இல்லாமல் வெயிலில் கஷ்டப்படும்படி விடுவது உனக்கு நியாயமா?'' என்று கோபித்துக் கொண்டபோது உடனே அவருக்கு மயக்கம் ஏற்பட்டு அக்னி குண்டமும் அதில் அகண்ட தீபமும் காட்சியளித்தது. அன்று மாலையே அவளது மகன் பத்திரமாக வீடு வந்து சேர்ந்தான். அக்னிகுண்டம், அகண்ட தீபம் ஆகியவற்றின் உருவத்திலேயே இங்கு நான் எப்போதும் இருந்து கொண்டு உங்களது நைவேத் தியங்களை ஏற்றுக் கொள்கிறேன் என்று ஸ்வாமி இதன் மூலம் நமக்குப் போதிக்கிறார்.

தீக்ஷை மேற்கொள்பவர்களுக்கு யோசனைகள்

1. 'வாய்திறவக் கூடாது ஐயா'' என்று கூறினார் ஸ்வாமி. தீக்ஷை ஏற்றுள்ள காலத்தில் மௌனத்தை அனுஷ்டிப்பது மிகவும் முக்கிய மாகும். மிக அவசியமான விஷயங்களைத் தவிர மற்ற விஷயங் களைக் குறித்துக் கேட்பதோ, பேசுவதோ, யோசனை செய்வதோ கூடாது. உள்ள நேரத்தை எல்லாம் ஸ்வாமியைப் பற்றிய சிந்தனையி லேயே கழிக்க வேண்டும். அதற்கு அவரது லீலைகளைப் பாராய ணம் செய்வதும் மனனம் செய்வதும் மிகவும் உதவியாயிருக்கும்.

2. பகலில் உறங்குவதைத் தவிர்க்க வேண்டும். இதற்கு மிதமான உணவு கொள்ளுதல் மிகவும் அவசியமாகிறது. அதிகமாக உறங்கு தலும் ஆகாது.

3. பொய் கூறுவதும், சண்டை சச்சரவுகளில் இறங்குவதும் அறவே கூடாது.

4. நாமஜபம் செய்து கொண்டே நவதானியங்கள், விறகுகள், தேங்காய், நெய், சாம்பிராணி, அரிசி முதலியவற்றை அக்னி குண்டத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

ஸ்வாமி நம்மீது கருணை காட்டினாலும் அது நம்மை அடைய விடாமல் நம் தீவினைகளே தடுக்கின்றன. அவற்றை நாமஜபத்தின் மூலம் போக்கிவிட வேண்டும். இறைவனின் நாம ஸ்மரணையின் சக்தியைப் பற்றிப் பெரியவர்கள் ''பெரிய காயம் ஏற்படும்படி விதி இருந்தாலும், இறைவனின் நாமஸ்மரணையின் விளைவாக அது வெறும் ஊசியினால் குத்தின அளவுக்கு அற்பமாகக் குறைந்துவிடும்'' என்றார்கள். எவ்வளவோ பக்தர்களின் அனுபவங்கள் கூட அது உண்மையே எனக் காட்டுகின்றன. எனவே, ஒரு கணம் கூட விடாமல் நாமஜபம் செய்வது அவசியம்.

5. ஒரு நாளைக்கு 108 பிரதக்ஷிணங்களுக்குக் குறையாமல் எவ்வளவு முடியுமோ அவ்வளவு பிரதக்ஷிணங்கள் செய்ய வேண்டும்.

6. எல்லாவற்றையும் விட முக்கியமானது ஸ்வாமி சரித்திர பாராயணம் செய்வதே. படிக்கத் தெரியாதவர்கள், பிறரைப் படிக்கச் சொல்லிக் கேட்க வேண்டும்.

7. முழுமையான நம்பிக்கையோடும் பொறுமையோடும் இருக்க வேண்டும்.

எவ்வளவு முறை அழைத்தாலும் பிறகு பார்க்கலாம் என்ற ஸ்வாமி, அன்று எனது பிரார்த்தனையை மதித்து என் வீட்டுக்கு வந்தது மன்றி சேஷகிரிராவ் வீட்டில் நடந்த நாமசங்கீர்த்தனையும் ஆசீர்வதித்தார்.

நான் சாயி சரித்திர பாராயணம் செய்து கொண்டிருந்த போது ஒரு நாள் ஸ்வாமி கனவில் ''எண்ணெய் இல்லாமல் சுடு'' என்றார். இந்த விஷயத்தைப் பற்றி நான் காலையில் ஸ்வாமியைக் கேட்ட போது அவர் மௌனம் வகித்தார். ஆனால் எண்ணெய்ப் பதார்த்தங்களைத் தின்ற போது எனது ஆஸ்துமா நோய் அதிகமாவதைக் கவனித்தபோது ஸ்வாமியின் சொற்களின் பொருள் விளங்கியது.

1960-ஆம் ஆண்டில் நான் சில நாட்கள் ஸ்வாமியின் ஸந்நிதியிலிருந்து அவருக்குச் சேவை செய்கிறேன் என்று தெரிவித்தபோது என் உணவை நானே தயாரித்து உண்டு இருக்கும்படிக் கூறினார். ''எதற்காக அப்படிச் செய்ய வேண்டும்?'' என்று கேட்டபோது ''அவர்கள் பிராமணர்கள்; இங்கே உண்ணக் கூடாது'' என்று பதிலளித்தார். நாணடைவில் அவரது சொற்களே உண்மையாய் வீட்டில் தவிர வேறெங்கு சாப்பிட்டாலும் எனது உடல் நலம் சீர்கேடடைந்ததால் அந்த நியமத்தையே கடைப்பிடித்து வருகிறேன்.

1983-ஆம் ஆண்டில் ஒரு நண்பனின் பலவந்தத்தால் எனது நியமத்திலிருந்து வழுவியதால் குளிர், இருமல், ஆஸ்துமா முதலிய தொல்லைகள் தொடங்கின. ஒரு மாதகாலம் வரை ஆயுர்வேதம், ஹோமியோ, அலோபதி முதலிய வைத்திய சிகிச்சைகள் செய்து கொண்டும் பலனளிக்காமல் மருத்துவரின் ஆலோசனைப்படி மதராஸ் போக எண்ணினேன். ஆனால் அதற்கு முன் ஸ்வாமியின் சமாதியைத் தரிசித்து மூன்று இரவுகள் அங்கு இருந்து விட்டுப் பிறகு மதராஸ் போகலாம் என்று எண்ணி கொலகமூடி போகும் பஸ்ஸில் ஏறிய கணத்திலிருந்து எனது துன்பங்கள் யாவும் மறைந்தன. ஸ்வாமியின் சமாதியருகில் மூன்று இரவுகள் நித்திரை செய்த பின் வீட்டுக்குத் திரும்பியவுடன் என் துன்பங்களும் திரும்பவும் வந்துவிட்டன. பூஜாரியான நாகய்யாவின் ஆலோசனைப்படி பகல் பூராவும் உத்தியோகம் செய்துவிட்டு மாலையில் ஸ்வாமியைத் தரிசித்துக் கொள்கிறேன் என்று வேண்டியவுடன் எனது தொல்லைகள் நீங்கின. அப்போது முதல் இன்றும் அறுபது கிலோமீட்டர் பிரயாணம் செய்து உத்தியோகம் செய்துவிட்டுத் திரும்பி கொலகமூடிக்கு வரலானேன். 1989-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து ஸ்வாமியின் கட்டளைப்படி விருப்ப ஒய்வு பெற்று கொலகமூடியிலேயே குடும்பத்துடன் வசித்து வருகிறேன். துன்பங்களும் அருளுக்கு அறிகுறியே என்பதைத் தெரிந்து கொண்டேன்.

ஸ்வாமியின் சந்நிதியில் அமர்ந்த மாத்திரத்திலேயே எனது ஆஸ்துமா வியாதி மறைந்துவிடும். அதற்கு நன்றி செலுத்தும் விதமாக தினந்தோறும் நான்கு இட்லிகள் வாங்கிக் கொண்டு வழிநெடுக நாமஜபம் செய்து கொண்டே வந்து ஸ்வாமிக்கு ஸமர்ப்பிப்பேன்; அவர் உண்பார். ஒரு நாள் என் சட்டைப் பையில் பத்து பைசாக்களே இருந்தன. பத்து பைசாக்களுக்கு ஒரு இட்லி வாங்குவதா அல்லது கடனுக்கு நான்கு இட்லிகள் வாங்குவதா என்ற யோசனையிலும் பின்னர் நான்கு இட்லிகள் வாங்கிய பிறகு நான் செய்தது சரியா, தப்பா என்ற யோசனையிலும் என் நாமஜெபம் அடிபட்டுப் போயிற்று. அன்று ஸ்வாமி இட்லிகளைத் தொடவில்லை.

மற்றொரு நாள் ஸ்வாமியின் சேவகர்கள் அனைவருக்கும் வீட்டிலிருந்து இட்லி செய்து கொண்டு வருவதாகக் கூறினேன் - இட்லிக்கு அரிசியும் உளுந்தும் நனைத்தநிலிருந்து, காலையில் இட்லி தயாரிக்கும் வரை விடாமல் நாமஜெபம் செய்து கொண்டு இட்லிகளைக் கொண்டு வருவதற்குள் ஸ்வாமி ஹோட்டலிலிருந்து வாங்கி வந்த இட்லிகளைத் தின்றுவிட்டார். அந்த விஷயம் தெரிந்தவுடன் மிகவும் வருத்தத்துடன் உட்கார்ந்துவிட்டேன். நரஸாரெட்டியின் மனைவி எனது வருத்தத்துக்குக் காரணம் தெரிந்து கொண்டு ஒரு தட்டில் நான்கு இட்லிகளை எடுத்துக் கொண்டு ஸ்வாமியை அணுகினாள். ஸ்வாமி அந்த இட்லிகளைத் தின்றார். எனக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. முந்தைய உதாரணத்தில் ஸ்வாமி இட்லிகளை நிராகரித்ததற்கும் இரண்டாவது உதாரணத்தில் இட்லிகளை ஏற்றதற்கும் நாமஜபமே காரணமாதலால் அனைவரும் நாமஜபம் செய்து நன்மை அடைய வேண்டுமென்பது எனது பிரார்த்தனை.

பெசல சுப்பராமையா

பொருளடக்கம்

	முன்னுரை	iv
	நன்றியுரை	vi
	பாராயணம் செய்யும் முறை	vii
	ஸ்வாமியை வழிபடும் முறை	ix
	தீக்ஷை மேற்கொள்பவருக்கு யோசனைகள்	xi
	குரு தரிசனம்	xii
1.	ஸ்ரீவெங்கைய ஸ்வாமியின் வாழ்க்கைச் சுருக்கம்	1
2.	தனக்கென்று ஒரு உறைவிடமற்றவர்	8
3.	அவதூத லீலைகள்	27
4.	எல்லாவற்றையும் அறியவல்ல ஸ்வாமி	32
5.	எல்லாம் வல்லவர்	56
6.	ஐம்பூதங்களை அடக்கியாளும் திறமை	68
7.	துன்பங்களில் துணை நிற்பவர்	79
8.	அமுத வாக்கு	87
9.	கருணைக்கடல்	97
10.	பாவிகளைப் புனிதமாக்குபவர்	106
11.	அவதூத வைத்தியம்	112

12. நல்லோரால் வணங்கப்படுபவர் 119
13. தகுதிணை 122
14. பிகூான்ளம் 126
15. முற்பிறவிகளின் தொடர்பு 129
16. தெய்வீக அநுபவங்கள் 132
17. எதில் உழல்கிறார்களோ அதற்கே போய்ச் சேர்வர் 142
18. ஸ்வாமி அளித்த அபய மொழிகள் 147
19. தர்மத்தைக் கடைப்பிடித்தல் 151
20. ஸ்வாமியின் போதனைகள் 155
21. ஸ்வாமியின் உபதேச மொழிகள் 173
22. நம்பியவர்களுக்கு நன்மை - நம்பாவிடில்? 176
23. ஸ்வாமிக்கும் சாயிக்குமிடையேயுள்ள வேறுபாடற்ற நிலை 180
24. மஹாசமாதி 188
25. ஸ்வாமியின் உண்மையான நிலை 192
26. ஸ்வாமியின் அருளைப் பெறும் வழி 197
27. மஹா சமாதிக்குப் பின் நிகழ்ந்த லீலைகள் 200

1. ஸ்ரீ வெங்கைய ஸ்வாமியின் வாழ்க்கைச் சுருக்கம்

இறைவன் நாம, ரூப, குணங்களற்றவன். அத்தகைய இறைவனின் வெளிப்பாடே அன்பு என்பது. அன்பு என்பது செயல்களின் மூலமே வெளிப்படுகிறது. அதிலும் எல்லையற்ற அன்பு, நிரந்தரமான அன்பு, தந்நலமற்ற அன்பு உடைய இதயமே இறைவனின் உருவமென்று கூறப்படுகிறது. அத்தகைய அன்பான அமுதம் நிரம்பிய இதயத்தவரே நமது சுவாமி.

நெல்லூர் ஜில்லாவிலுள்ள தலுப்பூர் செல்லோபல்லி ஒரு சிறு குக்கிராமம். நீண்டகாலமாக சரியான மழை இல்லாத காரணத்தால், அந்தப் பிராந்தத்தில் பசும்புல்லே இல்லாமல் போயிற்று. இந்த நிலையில் பசியால் வாடியவனுக்கு உணவு கிடைத்தாற் போன்ற மகிழ்ச்சியோடு அந்த ஊர் மக்களனைவரும் 'ஸ்வாமி வந்திருக்கிறார்', ஸ்வாமி வந்திருக்கிறார்' என்று கூறிக்கொண்டு ராமாலயத்தின் அருகில் கூடினார்கள். அவர்கள் எதிரில் ஒரு முதியவர் தரையில் போட்டிருந்த பனையோலை மீது அமர்ந்துள்ளார். அவர் எதிரில் ஒரு அக்னிகுண்டம் எரிந்து கொண்டிருக்கிறது. எண்ணைப்பானையைப் போல பளபளக்கும் அந்த மெல்லிய தேகத்தின் மீது கோவணத்தைத் தவிர வேறு எந்த மறைப்பும் இல்லை. நன்கு மழிக்கப்பட்ட தலை, உள்ளிறங்கிய கன்னங்கள், பொக்கை வாய், மிகக்கூரிய கண்கள் கொண்ட அந்த முதியவர், கைவிரல்களை எண்ணிக் கொண்டும் தனக்குத்தானே பேசிக் கொண்டும் இடையிடையே நெருப்புக்குண்டத்திலுள்ள விறகுகளை சரிப்படுத்திக் கொண்டும் இருக்கிறார். மிகவும் எளிமையாகவும் வெகுளியாகவும் தோற்றமளிக்கும் அந்த முதியவர்தான் ஸ்வாமி என்றால் நம்பத்தகுந்ததாக இல்லை. அந்தக் கிராமத்தவர்கள் அவரிடம் ஏதோ கூற விழைகிறார்கள். ஆனால் அவரது முகபாவத்தைப் பார்த்துப் பேச்செழாமல் பார்த்துக்கொண்டே நின்றுவிட்டார்கள். இதற்குள் அந்த முதியவரின் பார்வை, எச்சில் இலைகளையும் காகிதங்களையும் தின்னும் பசுக்களின் மீது விழுந்தது. சில நிமிடங்கள் அவற்றையே கூர்ந்து கவனித்த அவர் 'ஐயா' என்று உரக்க அழைத்தார். ''என்ன, ஸ்வாமி'' என்று கேட்டவாறு ஒரிரு பணியாட்கள் வந்தார்கள். ''நாம்

ஏரிக்குப் போக வேண்டுமாம். போகலாம், வாருங்கள்'' என்று சுவாமி ஆணையிட்டார். ஏரிக்கு எதற்காகப் போகிறாரோ என்று தெரியாமல் பணியாளர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். சுவாமியை டோலியில் சுமந்து சென்றனர். மழை இல்லாததால் வெடித்துக்கிடந்த, மருந்துக்குக்கூட பசும்புல் இல்லாத அந்த பூமியின்மேல் ஒரு இடத்தில் ஸ்வாமி இறங்கி ''இங்கே நெருப்புப் பற்றவையுங்கள்'' என்றார். சில நிமிடங்களிலேயே சேவகர்கள் அங்கு ஒரு நெருப்புக் குண்டத்தைத் தயாரித்தனர். அங்குச் சிலமணி நேரம் இருந்த பிறகு ஸ்வாமி கூறியபடி அவரைச் சேவகர்கள் கிராமத்தில் சேர்த்தவுடனே ஆகாயத்தில் மேகங்கள் சூழ்ந்து பெரும் மழை பெய்ய ஆரம்பித்தது. விடிவதற்குள் அந்தப் பிராந்தத்திலுள்ள ஏரிகளெல்லாம் நிரம்பிவிட்டன. தமது வெறும் சங்கல்பத்தினால் மட்டுமே பஞ்ச பூதங்களை இயக்கவல்ல அந்த மஹானை அவ்வூர் மக்கள் மட்டுமே யன்றி எல்லா ஜீவன்களும் நன்றியுணர்வோடுகூடிய இதயத்தால் புகழ்ந்து பாடின. இயற்கையன்னை அவரது கருணைக்கு நன்றிகூறு முகமாகப் பசுமையாகப் புனிதத்து நடனம் செய்தாள். அந்தக் கருணாமூர்த்தி அவர்களது துதிகளை மகிழ்ச்சியோடு செவி மடுத்தாரா? அதைப் பற்றிப் பொருட்படுத்தாதவராகத் தனக்கு ஒன்றுமே தெரியாதவரைப் போல அவர் அந்தக் கிராமத்தை விட்டுத் தம் சேவகர்களோடு போய் விட்டார்.

காலச்சக்கரம் வேகமாகச் சுழன்றது. அன்று தலுப்பூர் கிராமத்தை விட்டுப் பற்றற்றவராகப் போனதுபோலவே அந்த மஹானான ஸ்வாமி 1952-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 24-ம் தேதி தமது உடலை நீத்தார். நெல்லூர் ஜில்லா முழுவதையும் அந்தச் சோகச் செய்தி கார்மேகத்தைப் போலக் கப்பியது. பஞ்ச பூதங்களையும் அடக்கவல்ல ஸ்வாமி தம்மை விட்டுப் போனபின் இயற்கையன்னையின் சிற்றத்திலிருந்து தம்மை எவர் காப்பார் என்ற கேள்வி எல்லோருடைய இதயத்திலும் எழுந்தது.

1982-ம் ஆண்டு கோபாரம் பிராந்தத்தில் மழையின்றி வறட்சி ஏற்பட்டது. கால்நடைகளின் தீனிக்கும் நீருக்கும் மிகவும் கஷ்டம் ஏற்பட்டது. பாலகொண்ட சுப்பாரெட்டி, பஸ்ஸில் போகும்போது மனதில் ''ஸ்வாமீ, நீங்கள் உடலோடு இருந்த போது எங்களது கஷ்டங்களை உங்களிடம் கூறினால் அவற்றைத் தீர்த்து வைத்தீர்கள். இப்போது யாரிடம் நாங்கள் கூறுவது? மழையின்றி மக்கள் அல்லல்படுகிறார்களே'' என்று மனதார நினைத்தார். உடனே ஸ்வாமி அவரது மனக் கண்ணில் காட்சியளித்து ''ஐயா, உன் விருப்பம் உலக நன்மைக்காகாது அல்லவா! மூன்று நாட்களில் மழை பெய்யும்'' என்றார். அவ்வாறே மழை வந்தது. அந்த ஆண்டு முழுதுக்கும் அந்தப் பிராந்தத்தில் பெய்த மழை அது ஒன்றே என்றாலும் ஏரிகள் நிரம்பி, பயிர்கள் நன்கு விளைந்தன.

இவ்வாறு நம்மிடையே அவர் உடலோடு இருந்தாலும் இல்லா விட்டாலும் எங்கும் வியாபித்தவராக, நினைத்த மாத்திரத்தில் அருளு பவராக, பக்தர்களைக் காப்பதையே தம் விரதமாகக் கொண்டு அன்றும் இன்றும் மற்றும் சூரிய சந்திரர்கள் இருக்கும் வரை இருப்பேன் என்று ஸ்வாமி நமக்களித்த அபயத்தைத் தாம் மஹாசமாதி அடைந்த பின்னும் தமது பக்தர்களைக் காக்கும் தம் லீலைகளால் நிரூபித்து வருகிறார்.

ஜீவநதியான புனித கங்கை தான் தோன்றிய இடத்தில் சிறு கால்வாய் போன்று பிரவஹித்ததைப் போலவே, இத்தகைய கருணாநிதியான மஹான் தமது வாழ்க்கையின் ஆரம்பநிலையில் உலகத்தினரின் பார்வையில் ஒரு விசித்திரப் பிறவியாக, பித்தனான வெங்கையாவாகத் தோன்றிய நிலையும் இருந்தது.

தெல்லூர் ஜில்லாவிலுள்ள நாகுலவெல்லடூர் கிராமத்தின் வீதிகளிலும் அருகிலுள்ள காடுகளிலும் ''சாகலியோகம், மங்கலியோகம், டுப்டுக் டுப்டுக்'' என்று கத்தியபடி ஓடும் இளைஞனாக முதலில் இந்த மஹான் உலகத்தினரின் பார்வைக்கு ஆளானார். அவரைப் பைத்தியக்கார வெங்கையா என அவர்கள் அழைத்தனர். இந்த உலகம் என்ற பைத்தியகார ஆஸ்பத்திரியில் உள்ள ஜனங்களின் பைத்தியத்தைக் குணப்படுத்த வந்த இணையற்ற மருத்துவர் அவர் என்று அறிந்தவர் யார்? எந்த ஜனங்கள் அவரைப் பைத்தியக்கார வெங்கையா என்று பரிகசித்தார்களோ, அவர்களே பின்னர் அவரை நாடி ஓடி 'பகவான் அவதூத வெங்கையா' என்று புகழ்ந்தனர். உண்மையில் யாருக்குப் பைத்தியம்? சத்தியம் என்பது நம்மிடையே சூரியனைப் போல ஒளிர்ந்து கொண்டிருக்கும்போது அதனை உணரமுடியாத நமக்குத் தான் பைத்தியமோ?

பகவான் ஸ்ரீ வெங்கைய ஸ்வாமியின் தந்தை லோம்பல்லி பெஞ்சலய்யா, தாய் பிச்சம்மா. அவர் பிறந்த இடம் ஆத்மகூர் தாலூக்காவிலுள்ள நாகுலவெல்லடூர். பிறந்த தினத்தைக் குறித்துச் சரியாகத் தெரியவில்லை. 'பெரும்புயல்' வீசியபோது (1927ம் ஆண்டு) இவருக்குச் சுமார் முப்பது வயதிருக்கும்.

வெங்கையா தம் இளம்வயதில் மற்ற பிள்ளைகளைப் போலவே இருந்தார். கொஞ்சநாட்கள் இவர் ஸித்திராஜு ராமய்யாவிடம் இரவு நேரத்தில் படிப்பதற்காகப் போனார். இந்தப் படிப்பு எழுத்துக்களைப் படிப்பதுடன் நின்று விட்டது. விளையாட்டுக்களில் கூட இவருக்கும் மற்றச் சிறுவர்களுக்கும் இடையே எந்தவித வித்தியாசமும் காணப் படவில்லை.

கொமரகிரி ரமணய்யா கூறியதன்படி ஸ்வாமிக்கு ஐந்து வயதாக இருக்கும் போதிருந்தே ஏகாந்தமென்றால் இஷ்டம். விளையாட வரும் படி அவரைப் பிள்ளைகள் அழைத்தால் ''டேய், நான் திருடிவிட்டு

வந்திருக்கிறேன். போலீஸ்காரர்கள் வந்து என்னைப் பிடித்துக்கொள் வார்கள். என்னோடிருந்தால் உங்களையும் பிடித்துக் கொன்வார்கள், போய் விடுங்கள்'' என்று எல்லோரையும் துரத்திவிட்டுக் கதவின் மறைவில் அமர்ந்து தியானம் செய்வார். பழங்கள் பறிப்பதற்காகப் பிள்ளைகள் காட்டுக்குப் போனால் ஸ்வாமி அவர்களோடு போகாமல் மரத்தடியில் இருப்பார். யாராவது அவரைப் பார்க்க வந்தால் முன்கூறியது போலவே கூறி அவர்களை அனுப்பிவிட்டுத் தாம் ஏகாந்தமாக இருப்பார்.

பதினேழு, பதினெட்டு வயதிருக்கும்போது அவர் விறகு வெட்டி, வண்டியில் கொண்டு போய் நெல்லூரில் விற்று வருவார். சாப்பிடுவதற் கான இலைகள் தைப்பதற்காக இலைகளைப் பறித்துக் கொண்டுபோய், நெல்லூரில் விற்பார். வினைநிலங்களில் மிகவும் நன்றாகப் பணி புரிவார். எந்த வேலை செய்தாலும் மற்றவர்களைக் கவரும்படி, அவர்கள் புகழும்படியே செய்வார். கூலிவேலைக்குப் போவார். தாய் தந்தையர் இவரை மிகவும் கௌரவமாக நடத்தினர். மற்ற கூலிகளைப் போல, கூலியாகக் கிடைத்த தானியத்தை மூட்டை கட்டித் தலையின்மீது வைத்துக் கொண்டு வர அவர்கள் வெங்கையாவை அனுமதிக்காமல் அவரது தம்பி தங்கைகளில் எவரையாவது அனுப்பி அந்தக் கூலி தானியத்தை ஒரு கூடையில் எடுத்துக் கொண்டு வருமாறு செய்வர்.

ஸ்வாமியின் இளமைப் பருவத்தைப் பற்றி அவரது சகோதரி மங்கம்மா கூறியது: ''ஸ்வாமி இளம்வயதில் தலைமுடியை முடிந்து கொள்வார். வேஷ்டியும் சட்டையும் உடுத்திக் கொள்வார். உழவுப் பணியை மிகவும் நிறமையாகச் செய்வார். வயலை உழும்போது, ஸ்கேலும் பென்ஸிலும் கொண்டு காகிதத்தில் கோடு போட்டாற்போல அவ்வளவு நேராக உழுவார். ஒரு முனையில் கொழிமுட்டையை வைத்துவிட்டு மறு கோடியில் இருந்து பார்த்தால் தெரியுமளவுக்கு நேராக இருக்கும்''.

''சிறுவனாக இருக்கும்போது ஸ்வாமி ஒருமுறை எங்கள் வீட்டைச் சுற்றி வேம்பு, புளி, முருங்கை ஆகியவற்றின் விதைகளை விதைத்தார். அவற்றைப் பற்றி நாங்கள் பொருட்படுத்தாமலிருந்தாலும் அவை வளர்ந்து பெரும் மரங்களாயின''.

''சிறுவயதிலிருந்தே அவர் அறிவாளியாகவும், மரியாதை மிகுந்தவ ராகவும் இருப்பார். நான் ஸ்வாமியைவிடச் சிறியவளானாலும் என்னை ஒருபோதும் 'இங்கே வா' என்று ஏகவசனத்தில் அழைத்ததே இல்லை. ''சாதம் போடு மங்கம்மா'' என்று கேட்பார். மற்றபிள்ளைகள் அவரை வெங்கண்ணா என்று அழைப்பார்கள். நானும் அவ்வாறே அழைத்த போது, ''நீ அண்ணா என்று கூப்பிடவேண்டும். பெயரைச் சொல்லி

அழைக்கக் கூடாது'' என்று புத்தி கூறுவார். பிள்ளைகள் தங்கள் சண்டை சச்சரவுகளைத் தீர்க்கும்படி ஸ்வாமியிடம் சொல்வார்கள். வயலில் சாணி திரட்டும் பிள்ளைகள் அனைவருக்கும் அவரே தலைவர்.''

''பதினாறு வயதிருக்கும்போது ஸ்வாமி சோளம் அறுவடை செய்யும் போது பார்ப்பதற்கே அழகாக இருக்கும். ஒரு சோளப்பயிர் கூட முறியாது. குவியலாக வைக்கும்போது ஒரு சோளப்பயிர் கூட சிதறாமல் இருக்கும். அறுவடை செய்யும்போது ஒரே உயரத்தில் அளவெடுத்தாற் போலக் கொய்வார். இருவர் செய்யக்கூடிய அறுவடையைத் தான் ஒருவரே செய்வார். எவ்வளவு சிறிய வேலையானாலும் கவனத்தோடு முழுமையாகச் செய்வதே யோகம் என்று நமக்குப் போதிக்க விரும்பினார் போலும்''.

''என்னைத் தென்னிசையில் சற்றுத் தூரமாகவுள்ள ராஜபத்மாபுரத்தில் மணமுடித்துக் கொடுக்க நினைத்தனர். ஸ்வாமி இதற்கு ஒத்துக் கொள்ளவில்லை. அப்போது அவருக்குப் பைத்தியக்காரப் பட்டம் இன்னும் வரவில்லை. ''மூன்று ஆண்பிள்ளைகளுக்கு இடையில் ஒரே ஒரு பெண்ணாக இருக்கும் அவளை அவ்வளவு தூரத்தில் கொடுப்பார்களா?'' என்று தாயோடு போராடி அதனைத் தடுக்கப் பார்த்தார். ஆனால் என் தாய், தான் பிடித்த பிடியை விடாமல் ராஜபத்மாபுரத்திலேயே மணமுடித்தார். மணநாள் அன்று கூட ஸ்வாமி பிணங்கி கல்யாணத்துக்கு வராமல் வயலிலேயே படுத்துக் கொண்டார்''.

சிறுவயதிலிருந்தே ஸ்வாமிக்குப் பொய் பேசுவதென்றால் பிடிக்காது. அவருக்குப் பத்து வயதாயிருக்கும்போது ஒருநாள் வீட்டுக்கு ஒரு பிச்சைக்காரன் வந்தான். ''அவருடைய தாய் 'வீட்டில் தானியம் இல்லை, போ' என்றாள். ஸ்வாமி ''அரைமணி நேரம் கழித்து வந்தால், உள்ளேயிருந்து சோளம் எடுப்பார்கள். அப்போது வாங்கிக் கொண்டு போ'' என்றார். தாம் பகம்புல் கட்டுக் கொண்டு வரும்போது எங்காவது இளைத்துப்போன கால்நடைகள் உலர்ந்த தழைகளைத் தின்பதைக் கண்டால் தன் தலைமீதுள்ள புல்கட்டை அவற்றின் முன் வைத்து விட்டு வெறும் கையோடு வீட்டுக்குத் திரும்புவார். புல் எங்கே என்று கேட்டால் மௌனம் வகிப்பார்.

ஸ்வாமிக்கு இருபது வயதாயிருக்கும்போது ஒருமுறை தீவிரமான காய்ச்சல் ஏற்பட்டது. அந்நாட்களில் மருத்துவர்களும் ஆஸ்பத்திரிகளும் இல்லை. இரண்டு வேளை சாப்பிடாமலிருந்தால் ஜுரம் குறைந்துவிடும் என்று கருதினர். அவ்வாறே ஒரு வாரம் கழிந்துவிட்டது. வேர்க்கடலை கொய்வதற்காகப் போன தம்பிகள் கொண்டுவந்த வேர்க்கடலைகளைத்

றின்று கட்டில் மீதே கிடந்தார் ஸ்வாமி. ஒரு நாள் அவர் ''நம் வீட்டை ஏலம் போடப் போகிறார்கள். நீங்கள் எங்கே இருப்பீர்கள்?'' என்று பெற்றோரைக் கேட்டார். 'நமக்குக் கடன் ஏதும் இல்லை. யார் ஏலம் போடுவார்கள்? ஜுரத்தின் வேகத்தாலும் பித்தத்தினாலும் அவ்வாறு பேசுகிறான்' என்று எண்ணி அவருக்குத் தலையில் எலுமிச்சைச் சாறைத் தேய்த்துக் குளிர்ந்த நீரில் குளிப்பாட்டினார்கள். அழைத்தால் ஸ்வாமி 'ஊ' 'ஆ' என்று மட்டுமே பதிலளித்தார். எனவே அவருக்குப் பேய் பிடித்துவிட்டது என்றும் மூளைக்கோளாறு ஏற்பட்டுவிட்டது என்றும் கருதி பேயோட்டும் வைத்தியங்களும் நாட்டு வைத்தியங்களும் செய்வித்தார்கள். அதனால் பயன் ஏதும் இல்லாததோடு ஒரு மாதத்திற்குப் பின் ''சாகலியோகம், ஜக்கலயோகம், மங்கலயோகம்'' என்று சுத்தியவராக ஊரெங்கும் ஓடலானார். ஜனசஞ்சாரமில்லாத இடங்களிலேயே சுத்திக் கொண்டிருப்பார். இரண்டு, மூன்று நாட்கள் கூட வீட்டுக்கு வர மாட்டார். பெற்றோர், கூலிக்காரனிடம் சாதம் கட்டிக்கொடுத்து அவரைத் தேடும்படிக் கூறுவார்கள். கட்டுச்சாதத்தைப் பார்த்தால் அந்தக் கூலிக்காரனோடு வீட்டுக்கு வருவார். சாதம் சாப்பிட்ட உடனே ஒடிப் போய் விடுவார். ஒருமுறை வீட்டிலுள்ளோர் அவரைக் கட்டிப் போட்டார்கள். அவர் உணவும் நீரும் தொடாமல் அவ்வாறே அமர்ந்திருந்தார். அவ்வாறு அவரைக் கட்டிப்போடுவதில் விருப்பமில்லாத பெற்றோர் அவரைச் சுதந்திரமாக விட்டுவிட்டனர். விளைநிலங்களிலும் ஊருக்கு வெளியே வைக்கோல் போர் இருக்குமிடங்களிலும் சுற்றிக் கொண்டிருப்பார். குலபேதமின்றி யார் உணவளித்தாலும் தின்பார். அதனால் அவர் குலத்திலிருந்து பிறழ்ந்து விட்டார் என்று அவரது குலத்தைச் சேர்ந்த பெரியோர் அவரது நாக்குக்குச் சூடு போட்டார்கள் என்று சிலர் கூற மற்றும் சிலர் அதை மறுக்கிறார்கள். காடுகளில் எங்கெங்கோ திரிவதால் அவர் உடுத்தியிருக்கும் துணி கந்தல் கந்தலாகக் கிழிந்து போய்விடும். அவரது தாய் புதுவேஷ்டி சட்டை கொண்டுவந்து வீட்டில் வைத்தால், எப்போதாவது தோன்றியபோது வந்து புதுத்துணிகளை அணிந்து கொண்டு போய்விடுவார். இளம் வயதுப் பெண்களைக் காண நேர்ந்தால் புலியைக்கண்ட பகவைப்போலப் பாய்ந்து ஓடிவிடுவார்.

இந்த நிலையில் அவரை எல்லோரும் 'பித்தன் வெங்கண்ணா' என்றனர். 'சாகலியோகம் எவருடையது வெங்கண்ணா' என்று கேட்டால் நமது மாமாவின் வீட்டுப் பெயரைச் சொல்வார். ராஜபத்மா புரத்திலுள்ள அவரது தங்கை மங்கம்மாவின் வீட்டில் நீண்டகாலம் உணவு கொண்டு அந்தப் பிராந்தத்தில் ஒடிக் கொண்டிருந்தார். ஒருநாள் சில குறும்புக்காரர்கள் ''வெங்கண்ணா, ஏதாவது கதை சொல்லு. உனக்குக்

கலி கொடுக்கிறோம்'' என்றனர். ''சாதம் போட்டால் கண்கள் போகும்; கலியே கொடுங்கள்'' என்றார் ஸ்வாமி. அதைக்கேட்ட அவர்கள் ''இவருக்குப் பைத்தியம் என்றார்களே, அப்படி ஒன்றும் இல்லையே'', என்று எண்ணினார்கள். பைத்தியம் என்பதற்கு ஆதாரமே இல்லை. எவரையும் திட்டமாட்டார், அடிக்கமாட்டார், மரியாதையின்றிப் பேசமாட்டார். கொடுப்பவர்களிடமே கை நீட்டுவார். இல்லா விடில் ஒய்வு இல்லாமல் தன்னந்தனியே திரிந்து கொண்டே இருப்பார்.

இதே சமயத்தில் ஒரு நாள் மங்கம்மாவின் குழந்தைக்கு ஜுரம் ஏற்பட்டு அது குறையாததால் மங்கம்மா குழந்தைபடும் கஷ்டத்தைப் பார்த்து அழுதாள். ''எதற்கம்மா அழுகிறாய்? குழந்தைக்கு ஜுரம் சரியாகிவிடும். ஒன்றும் பயப்படாதே.'' என்று குழந்தையின் முகத்தைத் தம் உள்ளங்கையால் துடைத்தார் ஸ்வாமி. நான்காவது நாள் எந்த வைத்தியமும் இல்லாமலே குழந்தை குணமடைந்தாள். இன்றைக்கு ஸ்வாமிக்கு நடக்கும் பூஜா வைபவங்களையும் சமாதி மந்திரத்தையும் பார்த்து ''இப்படி எல்லோருக்கும் தெய்வமாக ஆவார் என்று தெரிந்திருந்தால் தலையில் தூக்கி வைத்திருப்பேனே. தெரியாமல் சாதாரணமாக என் அண்ணனாகவே நினைத்து நடந்து கொண்டேன்'' என்று கண்ணீர் விட்டாள் மங்கம்மா. ஸ்வாமி நன்றாகச் சாப்பிடுவார்; இரண்டுபேர் செய்யும் வேலையைத் தான் ஒருவரே செய்வார் என்றும் கூறினாள். ஸ்வாமி உன்மத்த நிலையில் இருக்கும்போது ஏற்றக் கிணற்றின் மீது வளைந்துள்ள மரக்கொம்பில் தன் கால்களைத் தொங்க விட்டுக் கொண்டு தலைகீழாகத் தொங்குவார். கால்கள் வழுக்கிக் கிணற்றில் விழுந்தால் மீண்டும் எழுந்து வந்து அவ்வாறே தொங்குவார்.

சாயிபாபாவுக்கு இத்தகைய சாதனையை அவரது குரு விதித்தார் என்பதையும் அவ்வாறே வேறு சில மஹான்களும் செய்தார்கள் என்பதையும் ''ஸ்ரீ சாயிலீலாம்ருதம்'' என்ற நூலில் காணலாம்.

ஸ்வாமியின் தம்பியான சின்னப்ப நாயுடு தான் கண்ணாரக் கண்ட விஷயத்தைப் பற்றி ''இரட்டை மாட்டுவண்டி போய்க் கொண்டிருந்தால் ஸ்வாமி வந்து அதன் பின்புறம் உட்காருவார். கால்கள் வண்டிமீதும் தலையும் உடலும் கீழே தொங்கியவாறும் இருக்கும். யாராவது பார்த்தால் வண்டியேறி சாதாரணமாக உட்காருவார்'' என்றார்.

2. தனக்கென்று ஒரு உறைவிடமற்றவர்

இவ்வாறு ''சாகலியோகம் மங்கலி யோகம்'' என்று சுத்தியவராக ஜனநடமாட்டமற்ற இடங்களில் ஒடிக்கொண்டிருந்த சோம்பல்லி வெங்கையா தமது இருபதாவது வயதில் வீட்டைவிட்டுப் போய் விட்டார். சிறிது காலம் வரை பெற்றோர்களுக்கு அவரது இருப்பிடமே தெரியவில்லை. இந்தக் காலகட்டத்தில் எந்த மஹான் இவரை அனுக்ரஹித்தாரோ, எங்கெங்கு தவம் செய்தாரோ என்ற விஷயத்தைப் பற்றி ஸ்வாமி ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு விதமாகக் கூறியுள்ளார். மேப்பூர் தசய்யாவிடம் ஸ்வாமி கூறினாராம், ''ஐயா, நான் காடுகளில் அங்கங்கே திரிந்து கொண்டிருக்கும்போது சாதய்யா என்னைச் சந்தித்தார். கண்ணை மூடிக்கொள்ளச் சொன்னார். அவ்வளவுதான். மறுகணம் பெஞ்சலக்கோனா குகையிலுள்ள சாதுக்களின் மத்தியில் இருந்தேன் நான். கண்ணைத் திறந்தவுடன் பெரும் ரிஷீஸ்வரர்களின் கூட்டமாக இருந்தது. அங்கு சிலநாட்கள் இருந்தபிறகு ஸாதய்யா மீண்டும் கண்களை மூடச்சொன்னார். நான் கண்களை மூடித் திறந்த போது சென்னை ஹைகோர்ட் அருகில் இருந்தேன்'' என்று.

விட்டைவிட்டுப் போன பைத்தியக்கார வெங்கையா மீண்டும் அந்தக் கிராமத்தவர்களின் கண்ணில் பட்டபோது ஸ்ரீ வெங்கய்ய ஸ்வாமி என்ற பேரோடு எல்லோருக்கும் ஆபத்பாந்தவராக விளங்கினார். எவ்வளவு பேர் வேண்டிக் கொண்ட போதும் தம் வீட்டுக்கு, ஏன் தம் கிராமத்துள்கூட அவர் அடி எடுத்து வைக்கவில்லை. எப்போதாவது வந்தாலும் ஊருக்கு வெளியே வைக்கோல் போர்கள் இருக்குமிடத்திலோ அல்லது வயல்களிலோ கொஞ்சநேரம் இருந்துவிட்டுப் போய்விடுவார்.

முழங்கால்களுக்கு மேல் கட்டிக்கொண்ட கிழிந்த வேஷ்டி, கிழிந்த சட்டை, கையில் உறியைப் போல் கட்டிய கயிற்றில் தொங்கும் சிறு மண்சட்டி, தடி, முதலியவற்றோடு ஏகாந்தமான தலங்களில் ஸஞ்சரித்தவராய், இளம் பெண்களைக் கண்டால் தூரமாகப் போய் விடுவதுமாக இருந்தார். ஏற்றக் கயிறில் எரியவிடப்படும் தீவட்டி ஒன்று எப்போதும் கையில் பிடித்துக் கொண்டிருப்பார். ஏற்றம் இறைக்கும்

கயிற்றின் துண்டுகளைக் கட்டாகக் கட்டித் தலைமீது வைத்துக் கொண்டு தன்னோடு கொண்டுபோவார். சிலநாட்கள் பெண்ணாநதி அருகிலும், பக்கத்திலுள்ள காடுகளிலும் சஞ்சரித்தார்.

அதன் பின்னர் சலமாநாயுடு ஸ்வாமி சேவைக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டபின் பெள்ளபத்வேலு குன்றின்மீது குடிசை போட்டுக் கொண்டு, அதில் சிறு எண்ணெய் விளக்கு எரியவிட்டவராகத் தம்பூரா மீட்டிக் கொண்டிருப்பார். சலமாநாயுடு அருகிலுள்ள கிராமத்துக்குப் போய் பிக்ஷை கொண்டு வருவார். கால்நடைகளின் வியாதிகளைக் குணப்படுத்துவதோடு காலரா, அம்மை போன்ற தொத்து வியாதிகளிலிருந்தும் ஸ்வாமி கிராமத்தவர் பலரைக் காப்பாற்றினார். பக்தர்களுக்கு வரப்போவது பற்றிக்கூட ஸ்வாமி குறி கூறுவார். அவர் அவ்வாறு குறிகூறும் முறை புதுமையாக இருக்கும். நிருமணத்துக்காகப் பல இடங்களைப் பார்த்து, எந்த இடம் நல்லதென்று ஸ்வாமியைக் கேட்பார்கள். ஒவ்வொரு இடத்துக்கும் அறிகுறியாக ஒரு கல் வீதம் வைத்துவிட்டுத் தம்பூராவை மீட்டி, 'கிழக்கிலிருந்து இரண்டாவது' என்றோ 'மேற்கிலிருந்து மூன்றாவது' என்றோ கூறுவார். அதாவது அந்தக் குறிப்பிட்ட கல் எந்த இடத்தைக் குறிக்கிறதோ அதே ஸ்வாமி தேர்ந்தெடுத்த இடம் ஆகும். சாதாரணமாக இவ்வாறு குறி கூறுபவர் களின் சொற்கள் நாற்பது சதவீதம் கூட உண்மையாகாது. ஆனால் ஸ்வாமி கூறியது ஒன்றுகூட பிழையாகவே இல்லை. ஒருவேளை யாருக்காவது ஸ்வாமி கூறிய பிரகாரம் நடக்கவில்லை என்றால் அவர்கள் ஸ்வாமி கூறியதைப் புரிந்து கொள்வதில் தவறு இருந்திருக்கலாம்.

பெள்ளபத்வேலில் வசித்த பிறகு சில ஆண்டுகள் ஸ்வாமி கோடிதீர்த்தத்தின் அருகிலுள்ள கோயிலில் தங்கினார். இங்கே ஸ்வாமி தம்பூராவைத் தம் முன் வைத்துக் கொண்டு இரவும் பகலும் இரண்டு கைகளிலும் இரண்டு சுச்சங்குச்சிகளை வைத்துக் கொண்டு தம்பூராவை மீட்டிக் கொண்டு 'ஓம் நாராயணா, ஆதி நாராயணா' என்ற மந்திரத்தை உரக்க உச்சரித்துக் கொண்டே இருப்பார். தம்பூராவின் கம்பிகள் அறுந்து விட்டாலும் குச்சிகளை அசைத்துக் கொண்டே மந்திரம் சொல்லிக் கொண்டே இருப்பார். இவ்வுலகச் சிந்தனையே இல்லாமல் நாமம் சொல்லிக் கொண்டிருப்பார். எப்போதோ இவ்வுலக ஞாபகம் வந்த போது தம்பூராவின் கம்பிகளை மீண்டும் கட்டிக் கொள்வார். இடை யிடையே நெருப்பைக் கூட எரியவிடுவார். சலமாநாயுடு முதலிய சேவகர்கள் பிக்ஷைகொண்டு வருவார்கள்.

அதன் பின்னர் சிலநாட்கள் சஞ்சாரம் செய்தார். சாயிபாபா கட்டிக் கொண்ட கப்னி போன்ற நீண்ட அங்கி அணிவார். (முழங்

கால்களுக்குக் கீழே வரை உள்ள ஜிப்பா போன்றது). அந்த அங்கியில், எழுதும் மசியினால் உள்ளங்கை முத்திரை மற்றும் விரல் முத்திரைகள் வைக்கப்பட்டிருக்கும். சில அங்கிகளின் மேல் 'ராம்', 'ராம்' என்ற எழுத்துக்கள் அச்சடிக்கப்பட்டிருக்கும். மசியினால் காகிதத்தின் மீது தமது கட்டைவிரல் முத்திரையை வைத்து அந்தக் காகிதங்களை பக்தர்களுக்குப் பிரசாதமாக அளிப்பார். தமது வலது உள்ளங்கையை நலையின் உச்சியில் வைத்துப் பின்னர் அந்த முத்திரை வைத்த காகிதத்தை உள்ளங்கையால் தொட்டுவிட்டுப் பக்தர்களுக்கு அளிப்பார். நெல்லூரிலுள்ள பல இராமங்களில் திரிந்து கொண்டே இருப்பார். சலமாநாயுடு, போலி ரெட்டி முதலிய சேவகர்களின் குழுவும் ஸ்வாமி யோடு சென்று கொண்டே இருக்கும். எப்போதும் விரல் முத்திரை வைத்துக் கொண்டிருப்பதோடு எப்போதாவது அக்னிவழிபாடும் செய்வார். நாளொன்றுக்கு பல ரீம்கள் காகிதமும் மிகுந்த அளவில் மசியும் உபயோகிப்பார். ஸ்வாமியின் அருளால் வியாதிகள் குணமாகப் பெற்றவர்கள், ஆபத்துக்கள் நீங்கப் பெற்றவர்கள், தம் கால்நடைகளின் வியாதிகள் நீங்கப் பெற்றவர்கள் முதலியவர்கள் ஸ்வாமியின் அந்த நிரந்தர விரல் முத்திரை பக்குத்துக்கு காகிதமும் மசி மாத்திரைகளும் மூட்டை மூட்டையாகச் சமர்ப்பிப்பார்கள்.

அதன்பின்னர் விரல் முத்திரை வைப்பதைக் குறைத்துக் கொண்டு அக்னி குண்டம் வளர்த்திக்கொண்டு இரவு பகல் எப்போதும் குண்டத்துக்கு அருகிலேயே அமர்ந்து விறகுகளைச் சரிப்படுத்திக் கொண்டு பொருளற்ற பேச்சுக்களைப் பேசுவார். நாளொன்றுக்குக் குறைந்தது இரண்டு, மூன்று வண்டி விறகுகளை எரிப்பார். எவ்வளவு மழையானாலும் கொளுத்தும் வெயிலானாலும் நெருப்புக்குண்டத்தி லருகிலேயே உட்கார்ந்திருப்பார். வெங்கையஸ்வாமி பந்தல் என்று ஒரு பழமொழி உண்டு. ஸ்வாமி காலை பத்து மணி சமயத்தில் வெயில் தம் தலைமேல் படாதவாறு ஒரு கும்பத்தை நாட்டி அதில் பனை ஓலையைத் தொங்க விடுவார். இவ்வாறு செய்த அரை மணி நேரம் வரை நிழல் இருக்குமே தவிர பின்னர் நிழல் நகர்ந்து ஸ்வாமி வெயிலிலேயே இருப்பார். ஸ்வாமி நெருப்பை எரியவிடும் பணியில் ஆழ்ந்துவிட்டால் அவர் இவ்வுலக நினைவிலேயே இருக்கமாட்டாராதலால் அவருக்கு நிழலா, வெயிலா என்று தெரியாது. இரண்டு, மூன்று பகல்களும், ராத்திரிகளும் அவ்வாறே நெருப்பின் முன் தொடர்ந்து அமர்ந்திருந்த சந்தர்ப்பங்கள் உள்ளன. எப்போதாவது அந்த குண்டத்துக்கு அருகிலேயே கோணிப்பையின் மேல் படுத்துக்கொண்டு யோகநித்திரை போவார். இந்த நிலையில் அவர் சிலநாட்கள் இடுப்பில் வேஷ்டியும் மற்றும் சில நாட்கள் கௌபீனமும் அணிவார். இடுப்பிற்குமேல் சட்டையோ பனியனோ அணியமாட்டார். இறுதிவரை அவர் கால்களுக்குச் செருப்பு அணிந்தே அறியாதவர்.

அதன் பின்னர் நெல்லூர் தாலுகாவிலுள்ள கொலகமூடி என்ற கிராமத்தை அடைந்து சுமார் எட்டு ஆண்டுகள் அவ்வூரில் நெருப்புக் குண்டம் வளர்த்தார். நாளொன்றுக்கு ஐந்தாறு வண்டி விறகுகளை எரிப்பார். இவ்வாறு ஸ்வாமி எட்டு ஆண்டுகள் அக்னிகுண்டம் வளர்த்திய கொலகமூடியில்தான் இப்போது அவரது சமாதி மந்திர் ஏற்பட்டுள்ளது.

ரமணய்யா என்ற பக்தர் காளை வண்டியில் தொடர்ந்து விறகுகள் ஏற்றிக் கொண்டு வந்து சேர்ப்பார். மேப்பூர் தசய்யா, வெங்கடய்யா முதலிய சேவகர்கள் ஸ்வாமிக்காக விறகுகளும், கள்ளிச் செடிகளையும் வெட்டுவார்கள். பகல்வேளையில் சில சமயங்களில் ஸ்வாமியும் அவர்களோடு காட்டுக்குப் போவதுண்டு. ஆனால் ஸ்வாமி, விறகு வெட்டும் தம் சேவகர்களிடமிருந்து சற்று தூரத்தில் ஏகாந்தமாகத் நிரிந்து கொண்டிருப்பார். சில சமயங்களில் அவர் சில குறிப்பிட்ட மரங்களை மட்டுமே வெட்டுமாறு காட்டுவார். இந்த நிரந்தர அக்னிகுண்டத்தால் சில மைல்கள் தூரம் வரை காடு நிர்மூலமாகிவிட்டது. 'இதெல்லாம் வினைநிலம் ஆகப் போகிறது ஐயா' 'இதெல்லாம் ஊர் ஆகப்போகிறது. ஒரு குளம்படி இடம்கூடக் கிடைப்பது கஷ்டமாகிவிடும்' என்று அன்று ஸ்வாமி கூறிய சொற்கள் இன்று உண்மையாயின.

ஸ்வாமி தமக்குத் தோன்றியபோது தமக்கு எங்கு போகவேண்டு மென்று தோன்றுகிறதோ அந்தக் கிராமங்களுக்குப் போவார். பின்னர் அவரது கால்கள் ஸ்வாதீனத்தை இழந்தன. வைத்தியம் செய்து கொள்வதற்கு ஸ்வாமி அறவே ஒத்துக்கொள்ளவில்லை. ''பூர்வத்தில் நான் ஒரு பசுவை அடித்தேன். அதன் விளைவே இது. எனவே நான் அதை அநுபவித்துக் கர்ம வினையைப் போக்கிக் கொள்ள வேண்டும். அதனால் நான் மருந்து உண்ண மாட்டேன்' என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார்.

நடக்கமுடியாமல் போனதால் ஸ்வாமி ஒரே இடத்தில் இருப்பார். ஒருநாள் தம் சேவகர் ரோசிரெட்டியிடம் ஸ்வாமி 'என்னைப் பனை ஓலையின் மீது உட்கார வைத்துச் சிறிது தூரம் இழுத்துக் கொண்டு போ ஐயா' என்றார். அவர் அவ்வாறே செய்தார். பனைஓலையின் மீது அமர்ந்தி இழுத்துச் செல்வது ஸ்வாமிக்குக் கஷ்டமாக இருக்கும் என்று கருதி, ஆறங்குல உயரமுள்ள நான்கு சக்கர வண்டி ஒன்று செய்வித்து அதன்மீது ஸ்வாமியை அவர் விரும்பிய இடங்களுக்கு இழுத்துக் கொண்டு போவார்கள். சில சமயங்களில் வண்டி பள்ளங்களில் இறங்கும்போது ஸ்வாமியின் உடல்பூராவும் அதிரும். எனவே அவர்கள் ஸ்வாமியை டோலியில் எடுத்துச் செல்ல அவரது அனுமதியைப் பெற்று அவ்வாறே சமந்து செல்ல ஆரம்பித்தனர். இவ்வாறாகத் தாம் மஹா ஸமாதி அடைவதற்கு இரண்டு ஆண்டுகள் முன்புவரை ஸ்வாமி

நெல்லூர், பொதலக்கூர், சிட்டேபாலம் பெள்ளபத்வேல், குல்லூர், ராஜபாலம், சோமசிலா, கோடி நீர்த்தம், இனுகுர்த்தி, முதிகேடு, டேகபூடி, தனுப்பூர், கலிச்சேடு, நவகோடி லிங்தலய்யகோன, செர்லோ பல்லி, திருப்பதி, காஞ்சி, ஸங்கம், பெனவர்த்தி, மைப்பாடு, இந்து கூருபேட்டை, கொலகமூடி முதலிய பிரதேசங்களில் அதிகமாக சஞ்சரித்துக் கொண்டே இருந்தார். ஸ்வாமி ஒருபோதும் குடும்பத்தவர் களை நாடவில்லை. கோயில், பாழடைந்த கட்டிடம், சாவடி, பாடசாலை, வேப்பமரம் முதலியவற்றையே தம் தங்குமிடமாகக் கொண்டார். கள்ளங்கபடமற்ற பக்தி சிரத்தையுடன் மனப்பூர்வமான ஆர்வத்தோடு எவராவது அவரை அழைத்தால் அவர்களுடைய வீடு களுக்குப் போவார். ஆனால் அங்கே அவர் வீட்டுக்கு வெளியிலேயோ, மாட்டுக் கொட்டில் அல்லது வராந்தாவிலோ தான் இருப்பார்.

மழையில் நனையும்போது சில சமயங்களில் ஏதோ ஒரு வீட்டின் சார்ப்புக்கடியில் ஒதுங்குவாரே தவிர வீட்டுக்குள் போகமாட்டார். யார் வீட்டுக்காவது அவர் வந்து அங்கு துனி (நெருப்பு குண்டம்) ஏற்றினார் என்றால் அந்த வீட்டைச் சேர்ந்தவர்கள் மிகவும் அதிருஷ்டசாலிகள் என்று பொருள்.

ஸ்ரீ ஸ்வாமி தனியே இருந்து கொண்டிருந்த நாட்களில் அவருக்குப் பசி எடுக்கும் போது இறைவன் காட்டிய வீட்டிற்குப்போய் அவர்கள் போட்டதைத் தின்றுவிட்டுப் போய்விடுவார். ஆனால் உணவு வைத்துக் கொண்டு இல்லை என்றால் இன்ன இடத்தில், இன்ன உறியின் மேல் இன்ன பதார்த்தம் உள்ளது என்று கண்ணால் பார்த்ததைப் போல் கூறுவார். எனவே பித்தன் வெங்கையா சாமான்யமானவர் அல்ல என்று அவர்கள் தவறாமல் சாதம் போடுவார்கள். அதற்கு நூறு மடங்குக்கும் அதிகமாக அவர்கள் நற்பலனைப் பெற்றார்கள்.

ஸ்வாமி நன்றாக நடந்த நாட்களிலும் கூட ஒருபோதும் செருப்புக் கள் அணியவில்லை. காட்டில் திரிவார். முள் குத்திவிட்டால் அதை எடுப்பதற்கு செம்பினால் ஆனமுள் எடுக்கும் இடுக்கி, கோணியூசி, கத்தி முதலியவைகளை எப்போதும் தம்மிடம் வைத்திருப்பார். அவரது காலிலிருந்து ஒவ்வொரு சமயம் இரண்டங்குல நீளமுடைய முட்களைக் கூட எடுத்த சந்தர்ப்பங்கள் உள்ளன. அதைப் பார்த்தவர்கள் ஆச்சரிய மடைவார்கள்.

ஸ்வாமி குண்டம் வளர்த்தும்போது, குண்டத்துக்கு நான்கு அங்குல தூரத்தில் தலை வைத்துப் படுப்பார். அவ்வளவு அருகில் இருந்தால் மற்றவர்களால் அந்தச் சூட்டைத் தாங்க முடியாது.

குடியானவர்கள், தம் தோட்டத்துக்கருகில் ஒரு பள்ளம் வெட்டி, பெண்ணா நதியின் நீரைக் கால்வாய் மூலம் அதில் தேக்கி, ஏற்றம் முறையில் அதிலுள்ள நீரைத் தம் தோட்டத்துக்குப் பாய்ச்சுவார்கள். ஸ்வாமி அங்குச் சென்று கால்வாயிலுள்ள பாதிநீரை நதிக்கு அனுப்பி விடுவார். மிகுந்த பாதிநீரைத் தோட்டத்துக்குப் பாய்ச்சுவதற்கே இரண்டு மனிதர்கள் தேவையாகும் அளவு நீர் அதிகமாக ஓடும்.

ஸ்வாமி உன்மத்த நிலையில் திரிந்து கொண்டிருந்தபோது, ஒரிடத்தில் திருட்டு நடந்து, திருடர்களைத் தேடி வந்த காவலாளர்கள் ஸ்வாமியைச் சந்தேகித்துப் போலீஸ் ஸ்டேஷனில் காவலில் வைத்தனர். இரண்டு நாட்கள் ஏதும் பேசாமல் அங்கு அமர்ந்திருந்தார். பின்னர் அவரை விட்டுவிட்டார்கள். அங்கிருந்து நேராக ராஜபத்மாபுரத்திலுள்ள தம் தங்கையிடம் போய் இதைச் சொல்லி ஒரேயடியாக அழுதாராம். ஸ்வாமி அழுவதைப் பார்த்து மங்கம்மாவும் அழுதாள். பார்த்தவர் களுக்கு எதுவும் புரியவில்லை. பின்னர் விஷயம் புரிந்தவுடன் 'உன்னைக் காவலில் வைத்தவர்களைக் கூட்டிவந்து அடிப்போம் வெங்கைய்யா' என்று சமாதானப்படுத்தியவுடன் பச்சைக் குழந்தையைப் போல அழுகையை நிறுத்தினாராம் ஸ்வாமி.

அங்குமிங்கும் சுற்றிவிட்டு மாலையில் தங்கையிடம் உணவுக் காகப் போவார் வெங்கண்ணா. வெங்கண்ணா தண்டச் சோறு இன்பதாக மங்கம்மாவின் கணவன் முதலியவர் ஏதாவது எண்ணினால் அங்கே நிற்கவே மாட்டார்; போய்விடுவார். ஸ்வாமி வந்தால் மௌனமாகச் சாதம் போட்டுவிட்டுக் கதவைச் சாத்திக் கொண்டு வெளியே வந்தால் தான் அவர் சாப்பிடுவார். அங்கேயே இருந்தால், ''நீங்கள் வெளியே போங்கள், நான் சாப்பிடுவேன்'' என்பார்.

மாலைவரை விளைநிலங்களிலும் காடுகளிலும் திரிந்து திரிந்து வரும்போது இரண்டு சேர் வேர்க்கடலை பொறுக்கி மூட்டை கட்டிக் கொண்டு வந்து தங்கையிடம் கொடுத்துவிட்டுச் சாப்பிட்டுவிட்டுப் போவார். அவளுக்குக் கடன்படக் கூடாதென்றே அவ்வாறு செய்தார் போலும்.

வீட்டை விட்டுப் போனபிறகு தம் சொந்தக்கிராமமான நாகுல வெல்லடுருக்கு மீண்டும் அவர் வரவில்லை. ஒருமுறை அவர் பக்கத்துக் கிராமங்களில் இருக்கும்போது தம்பிபோய் அழைத்தபோது வந்தார். சோளப்பயிர் கொய்து கொண்டிருந்தனர். ஸ்வாமி கூடக் கொய்ய ஆரம்பித்து ''சாகலியோகம், மங்கலியோகம்'' என்று கத்தியவாறே இருவர் செய்யக்கூடிய வேலையைத்தான் ஒருவரே செய்தார். நான்கு நாட்களில் முடியவேண்டிய அறுவடை இரண்டு நாட்களிலேயே முடிந்து விட்டது.

'ஸ்வாமி' என்ற புகழ் வந்தபிறகு, அவர் இருக்குமிடத்தைத் தெரிந்து கொண்ட அவரது தாய் இனிப்பண்டங்கள் செய்து கொண்டு வந்து அவருக்குக் கொடுத்த போது அவற்றைத் தன்னுடன் உள்ளவர் அனைவருக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கச் சொல்லித் தாம் மிகவும் குறைவாகத் தின்றார். ஒருநாள் ஸ்வாமி மங்கம்மாவின் வீட்டில் சாப்பிட்டு விட்டுப் போய் மீண்டும் வந்து ''பாவா, (சகோதரியின் கணவன்) மங்கம்மா ஏதோ மருந்து கொடுத்தாள். உடம்பு பூராவும் ஊசியால் குத்துவதைப் போல எரிச்சலும் குத்தலுமாக உள்ளது. சாப்பிட வேண்டும். சாதம் போடுங்கள்'' என்றார். அப்போது எல்லோரும் உணவு உண்டுவிட்டுப் படுத்தாயிற்று. ''இப்போது எங்கே வெங்கையா, சாதம் இல்லை. காலையில் சமைத்துப் போடுகிறோம்'' என்றார். அப்படியானால் நெல்லாவது ராகியாவது கொடுக்கச் சொன்னார். இரண்டு சேர் ராகி வாங்கிக் கொண்டு போய் அவற்றைத் தாம் தின்னாமல் எறும்புகளுக்குப் போட்டார். எறும்புகளின் பசி தீர்ந்தால் அவரது பசி நீரும் போலும்.

பத்வேலு கிராமத்தில் அங்காளம்மன் குன்று என்று இடத்தில் பெண்ணா நதி இருபதடி அகலத்தில் ஓடுகிறது. அங்கே ஸ்வாமி தாமே மணல் சுமந்து ஐந்தடி உயரத்தில் கரை கட்டினார். அத்தகைய சமயங்களில் ஜயராமராஜு, வெங்கையா முதலியோர் மணல் சுமந்து ஸ்வாமிக்கு உதவி செய்வார்கள். பெண்ணா நதியின் வெள்ளம் வடிந்தபின், அந்த நீரிலிருந்து இரண்டடி அகலக் கால்வாய் வெட்டி அதில் தண்ணீரை நதி ஓட்டத்தின் எதிர்த்திசையில் கொஞ்ச தூரம் ஓடும்படிச் செய்து பின்னர் அந்த நீரை நதியின் நீரோட்டத்தில் கலந்து விடுவார். இவ்வாறு கால்வாய் நீர் நதியில் கலக்குமிடத்தில் நீரின் மேல் சுள்ளிகளைப் போட்டுத் தம் கையிலுள்ள நீவட்டியின் நெருப்பை அதில் வைப்பார். அவ்வாறு எரியவிடும் போது யாரையும் தம்மருகில் நெருங்க விடமாட்டார்.

அந்த நீரைத் தம்மிடமுள்ள சட்டியால் எடுத்து எரியும் நெருப்புக்கு இரு பக்கங்களிலும் ஊற்றிக்கொண்டே இருப்பார். சேவகர்களிடம் ''ஐயா, அந்த நீரின் மதிப்பு எவ்வளவு என்று எண்ணுகிறாய்? தூலாம் முந்நூறு கோடிகள். இன்று உலகம் முழுவதுக்கும் செலவுக்குப் போக இன்னும் பணம் மிகுந்துள்ளது'' என்பார். ''இதெல்லாம் எதற்கு ஸ்வாமி?'' என்றால், ''பெரியம்மை, காலரா முதலிய பாவங்கள் குறைவதற்காக ஐயா'' என்பார்.

ஒவ்வொரு சமயத்தில் சேவகர்களிடம் பணம் இருக்காது. ''இப்போதே திருவள்ளூர் போகவேண்டும். புறப்படுங்கள். நெல்லூர்,

ஜொன்னவாடா, காஞ்சி முதலிய ஆலயங்களுக்குப் போகவேண்டும்'' என்பார் ஸ்வாமி. ''பணம் இல்லையே ஸ்வாமி?'' என்றால் ''பணம் வரும், நீங்கள் புறப்படுங்கள்'' என்று அவசரப்படுத்துவார். ஸ்வாமி கூறியபடியே யாரோ ஒருவர் வந்து தக்ஷிணை என்ற பேரில் அவர்களது பிரயாணத்துக்குத் தேவையான பணம் சமர்ப்பித்து விட்டுப் போவார்.

ஒருநாள் நடுப்பகலில் தலுப்பூரில் பக்தர்கள் உணவு தயாரித்துக் கொண்டிருந்தனர். ஸ்வாமி 'உடனே புறப்படுங்கள். ஒரு கணம்கூட இருக்கக்கூடாது' என்று கூறிச் சேவகர்கள் புறப்படும் வரை விடவில்லை. சாதம் வெந்து கொண்டிருக்கிறது என்றால் 'நமக்குச் சாப்பாடு வரும், போகலாமய்யா' என்றார். உணவின் மீது ஆசையை விட்டுவிட்டு சேவகர்கள் பஸ் ஸ்டாண்டுக்கு வந்தனர். பொதலக்கூர் பக்கம் போகும் பஸ் வந்தது. ''இதுவல்ல நம் பஸ், அடுத்த பஸ்ஸில் போகலாம்'' என்றார். ''இவ்வளவு நேரத்துக்கு நாம் சாப்பிட்டு விட்டே வந்திருக்க லாமே ஸ்வாமி'' என்றால், ''சாப்பாடு வரும் ஐயா, இருங்கள்'' என்றார். ''பஸ் சார்ஜுக்குப் பணம் இல்லை ஸ்வாமி'' என்றால் ''மேலே உள்ளவர்கள் அனுப்புவார்கள்'' என்றார். அவர் கூறியபடியே கொஞ்ச நேரத்தில் பொட்டேபாலம் ஆதிலக்ஷ்மம்மா ஸ்வாமியைத் தரிசிப்பதற் காகக் காரில் வந்து, கூடையில் கொண்டுவந்த தோசை, வடை, பொங்கல், புளியோதரை முதலிய பதார்த்தங்களை அவர்களுக்குப் பரிமாறித் திருப்தியாகத் தின்னும்படிச் செய்து தேவைக்கதிகமாகவே தக்ஷிணை அளித்துவிட்டுப் போனாள்.

ஒவ்வொரு சமயம், ஒரே ஊரிலேயே இரண்டு, மூன்று இடங் களில் ஸ்வாமி தம் தங்குமிடத்தை மாற்றுவார். குறிப்பிட்ட திசையில் போக வேண்டும் என்று அவர் கூறினால் போவதற்கு எவ்வளவு கஷ்ட மான பாதையானாலும் போகவேண்டியதே. சாதம் சாப்பிட்டிருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி, வெயிலானாலும் சரி, மழையானாலும் சரி, போகவேண்டும் என்றால் போக வேண்டியதே. ஸ்வாமி தாம் நடந்து கொண்டிருந்த காலத்திலும் அவ்வாறே செய்வார்.

காட்டில் ஸ்வாமி என்ன செய்கிறார் என்று பார்க்கவேண்டும் என்று பலர் முயன்றனர். ஆனால் யாராவது தன்னைப் பின்தொடர் கிறார்கள் என்று தெரிந்தால் உடனே ஸ்வாமி முட்களிலும், புதர்களிலும் நடந்து போய்விடுவார். அந்த முட்களில் நடக்கமுடியாமல் அவ்வாறு முயற்சித்தவர்கள் திரும்பி விடுவார்கள்.

பல் தேய்ப்பதும் வாய் கழுவிக் கொப்பளிப்பதும் அவருக்கு வழக்கமில்லை. மென்று கொண்டிருக்கும் புகையிலையை உமிழ்ந்து விட்டு உடனே கஞ்சி குடிப்பார்.

ஒரு நாள் ஸ்வாமியின் முன்னிலையில் அமர்ந்தவுடன் எனது (ஆசிரியர்) ஆஸ்துமா வியாதி குணமானதும் மகிழ்ச்சியுடனும் உற்சாகத் துடனும் இந்த விஷயத்தை எதிர்ப்பட்டவரிடமெல்லாம் சொன்னேன். ஸ்வாமி ஒருநாள் தனிமையாக இருக்கும்போது ''எப்படி எப்படியோ பேசுகிறாயே'' என்றார். அவ்வாறு வாயை மூடிக்கொண்டிரு என்று உபதேசித்தார் ஸ்வாமி. மற்றொரு கொலுசுமூடிவாசி ஒருவரிடம் ''ஐயா, என்னைப்பற்றிக் கதை கதையாகப் பேசுகிறார்களே, அது தப்பல்லவா ஐயா'' என்று ஸ்வாமி கூறினாராம். மற்றொரு முறை ''இவர்கள் இப்போதே மூட்டையை அவிழ்த்து வண்டியில் ஏற்றுகிறார்கள். வேண்டாம் என்று கூறம்மா'' என்று துளசம்மாவிடம் கூறினார்.

மேற்கூறியவாறு தம் மேன்மை மறைவாக இருக்கவேண்டு மென்ற உத்தேசத்தோடு கோடிகள், படங்கள், ராசிகள் என்ற பரிபாஷை யில் பேசுவார். அவற்றின் பொருள் ஜனங்களுக்கு விளங்காமல் பலபேர் அவரை மீண்டும் தரிசிக்க மாட்டார்கள்.

நியமம் எதுவும் இல்லாமல் தமக்குத் தோன்றியபோது முடி வெட்டிக் கொள்வார். எல்லோரும் நாவிதனுக்கு ஐம்பது பைசாக்கள் கொடுத்தால் ஸ்வாமி ஒரு ரூபாயோ இரண்டு ரூபாய்களோ கொடுப்பார். 1980-ஆண்டுக்குப் பிறகு, ஸ்வாமி கேட்காவிட்டாலும் சேவகர்கள் தாமே அவருக்கு இடையிடையே மொட்டையடித்து, மீசையை ஒழுங்கு செய்வர். ஸ்வாமியின் பக்தர்களில் பரிகெல நாகய்யா, முக்கியமாக இந்த சேவையைத் தானே செய்து வந்தார். ஸ்வாமி இளம்வயதில் திரிந்து கொண்டிருந்தபோது எடுத்த மீசை, கிருதா உள்ள போட்டோவை நாம் காணலாம்.

மஹாசமாதி அடைவதற்கு முன்பு ஒரு ஆண்டுக்காலம் தம் கைகள் இரண்டையும் இறுக மூடிக்கொண்டு விரல்களை நீட்ட விடமாட்டார். எவ்வளவு துன்பத்திலிருந்தாலும் யோகநிலையில் இருந்தாலும் முன்னே நகர்ந்து சிறுநீர் கழிப்பாரே தவிரத் தம் படுக்கைமீது கழிக்க மாட்டார். ரோசிரெட்டி ஸ்வாமியின் சிறுநீரை ஒரு துளிக்கூட விடாமல் தீர்த்தமாகப் பருகுவார்.

அதனால் தான் ரோசி ரெட்டிக்குக் கண்பார்வை இல்லாமல் போனாலும், சாதம் சாப்பிடுவதைவிட்டு அவலும் திரவ பதார்த்தங் களும் உண்டு வாழ்ந்தாலும், தம் இறுதி நாட்கள் வரை, ஊரில் பிக்ஷைக்குப் போய் மற்ற பக்தர்களுக்காக பிக்ஷை கொண்டுவரும் தம் சேவையைத் தொடர்ந்து செய்தார். சேவகர்கள் ஸ்வாமிக்கு சேவை செய்தால், இவர் இவ்வாறு சேவகர்களுக்கு சேவை செய்தார். சஞ்சல மற்ற நம்பிக்கையே அவரது பலம்.

ஸ்வாமிக்கு நியமமான தினசரிக் காரியக்கிரமங்கள் என்று எதுவும் இல்லை. ஒவ்வொரு சமயம், இரண்டு இரவுகளும், இரண்டு பகல்களும் தொடர்ந்து ''வண்டியை நிறுத்துங்கள் ஐயா'' என்றோ வேறு ஏதோ சொற்களையோ உரக்கக் கூறியவராக ஒரே ஆசனத்தில் அசையாமல் அமர்ந்திருப்பார். அவர் கத்தும் சொற்களை மீண்டும் மற்றொருவர் உரக்கச் சொல்லிக்கொண்டே இருக்க வேண்டும். ஒவ்வொரு சமயம் இரவும் பகலும் யோக நித்திரையில் இருப்பார். அறியாதவர்கள் மட்டும் ஸ்வாமி பலவீனத்தால் எப்போதும் தூங்குகிறார் என்று எண்ணினார்கள். அத்தகைய நித்திரையில் கூட அவர் தம் எல்லாம் அறியும் சக்தியை வெளிப்படுத்தி பக்தர்களைக் காத்த நிகழ்ச்சிகளை பலரும் அனுபவித் துள்ளனர்.

இதற்கு எடுத்துக்காட்டாக 1978ம் ஆண்டில் ஒருநாள் ஸ்வாமி ஒருநாள் முழுதும் (இரவும் பகலும்) உறங்கிக் கொண்டிருந்தார். பகல் மூன்று மணிக்குத் திடீரென்று எழுந்து அமர்ந்து கொண்டு, அப்போது தான் நாமஸ்மரனை செய்து கொண்டு நடந்து வந்து சேர்ந்த எனக்கு ஒரு சிட்டு எழுதுவித்து, ஆசீர்வாத முத்திரை வைத்துக் கொடுத்துவிட்டு உடனே போர்த்திக்கொண்டு மீண்டும் உறங்க ஆரம்பித்தார். பக்தர்கள் கஞ்சி குடிக்கும்படி வேண்டிக் கொண்டாலும் கேட்கவில்லை. ஐந்து நிமிஷங்களில் என் பாட்டியார் இறக்கும் தறுவாயிலிருப்பதாகவும் என்னை உடனே வரும்படிக் கூறியவராக ஒருவர் வந்தார். நான் உடனே கலிச்சேடுக்குக்குப் போய் ஸ்வாமியின் பாததீர்த்தமும் ஊதியும் பாட்டியின் வாயில் போட்டவுடனே விழுங்கினார். துளஸீதீர்த்தம்கூடப் பருகினார். மருந்து ஊற்றுகிறேன் என்றபோது வாயே திறக்கவில்லை. ஸ்வாமியின் பாததீர்த்தத்தைப் பருகி உயிரை விட்டார். அவர் தன் இறுதிக்காலத்தில் இரவும் பகலும் சாயிநாதரைப் பிரார்த்தித்த புண்ணிய சாலி. எனவேதான் ஸ்ரீசாயி ஸ்வாமியின் ரூபத்தில் தம் ஆசிகளை அளித்து அவருக்கு நற்கதியை அளித்தார்.

மேற்கூறிய நிகழ்ச்சியில் ஸ்வாமி உறங்கிக் கொண்டிருந்தபோதும் அது நம்முடையது போன்ற உறக்கம் அல்ல. அந்த நிலையில் அவருக்கு மூன்று மைல்கள் தூரத்திலிருந்து நான் கால்நடையாக வருவது தெரியும்; இரண்டு மணி நேரத்தில் என் பாட்டி இறக்கப் போகிறாளென்பது தெரியும். என்னை அழைக்க ஒருவர் வரப்போவது தெரியும். அவள் எப்போதும் சாயி நாமத்தை உச்சரிக்கும் புண்ணியசாலியாகையால் அவளுக்கு இறுதிக் கணத்தில் தம் ஆசிகளால் நற்கதி அளிக்க வேண்டு மென்று தெரியும். எனவேதான் உடனடியாகத் தாமாகவே எழுந்து, பக்தர்கள் கஞ்சி குடிக்கும்படி வேண்டியும் குடிக்காமல், சிட்டு எழுது வித்துக் கொடுத்து விட்டுத் தம் யோக நித்திரையைத் தொடர்ந்தார்.

உண்மையான யோகிக்கு இரவும் பகலும் இல்லையென்பது சாஸ்திரம். அது ஸ்வாமியின் விஷயத்தில் எவ்வளவு சரியாகப் பொருந்தியுள்ளது!

ஸ்வாமி சாதனைகள் செய்த காலத்தில் அவரது வைராக்கியம் அனைவரையும் கவர்ந்தது. லட்டு அளித்தாலும் வேண்டாம் என்று கூறமாட்டார். ஆனால் கொஞ்சம் காரப்பொடியோ, வறுகாயோ போடச் சொல்லி அதை லட்டுவோடு கலந்து உண்பார். ஒருசமயம் பக்தர்கள் வேர்க்கடலை, வெல்லம், தேங்காய் முதலியவற்றை இடித்துப் பொடி செய்து டப்பாவில் போட்டு அருகில் வைத்திருந்தார்கள். ஸ்வாமி வேண்டியபோது எடுத்துத் தின்பார். ஒருநாள் தவறுதலாகக் கடலைப் பொடிக்குப் பதிலாக சேவகர்கள் தலை ஸ்னானத்துக்குப் பயன்படும் அரப்புப் பொடி டப்பாவை வைத்துவிட்டார்கள். ஸ்வாமி அரப்புப் பொடியைத் தின்றுவிட்டார். மறுநாள் காலையில் சேவகர்கள் தம் தவறுதலுக்கு வருந்தினர்.

மஹாசமாதிக்கு முன்பு பதினைந்து ஆண்டுகள் ஸ்வாமி தண்ணீர் பருகினதே இல்லை. எப்போது குடித்தாலும் வெந்நீரில் சர்க்கரை கலந்து அளித்தால் குடிப்பார். தன்னையோ தன் பாதங்களையோ எவரையும் தொடவிடமாட்டார். அவரது பத்து சேவகர்களில் எப்போதும் மூன்று பேரை மட்டுமே தன்னைத் தொடுவதற்கு அனுமதிப்பார். தமக்கு எவரும் பூஜை செய்ய விடமாட்டார். அவருக்குப் பிரதக்ஷிணம் செய்தால் ஒரே ஒரு பிரதக்ஷிணம் போதுமென்று கூறுவார்.

தக்ஷ என்ற சம்ஸ்கிருதச் சொல்லுக்கு சிரத்தை என்பது பொருள். நமக்கு எவரிடம் சிரத்தையும் பிரியமும் இருக்கிறதோ அவருக்கு நமது உணர்ச்சியை வெளிப்படுத்தும் முறையே பிரதக்ஷிணம் செய்வதும் தக்ஷிணை அளிப்பதும் ஆகும். நமது மனதைக் கொள்ளை கொண்டவரைப் பற்றி எவ்வளவு தெரிந்து கொண்டாலும் ஆசை தீராது. அவர்மீது உண்மையான பிரியம் உள்ளவர்கள், அவரது செயல்களையும் பேச்சுக்களையும் எண்ணிப் பார்த்துக் கொண்டு தம் இதயம் பூராவும் அவர் நினைவையே நிரப்பிக் கொண்டு புளகாங்கிதமடைவார்கள். நமது அந்தரங்கத்தின் வெளிப்பாடே பிரதக்ஷிணம். இவ்வாறு நமது மனதை எப்போதும் அவரைப் பற்றியே நினைக்கும்படிச் செய்து கொள்ளுங்கள்; அப்படிச் செய்தால் ஒரு பிரதக்ஷிணம் செய்தாலும் போதும் என்றே ஸ்வாமி அவ்வாறு கூறினார் போலும்.

ஸ்ரீஸ்வாமிக்குப் பனை ஓலையே உட்காரும் ஆசனம். மண் சட்டியே பாத்திரம். கோணிச்சாக்கே படுக்கை. பூதேவியே அவரது மஞ்சல். ராகிக் கஞ்சி, பூண்டு, மிளகாய்ப்பொடி முதலியவையே

அவரது அறுசுவை உணவு. பழைய வேஷ்டி துப்பட்டிகளே அவரது பட்டுத் துணிகள். என்னே அவரது வைராக்கியம்!

சிறுவயதிலிருந்தே ஸ்வாமிக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்று எல்லோரும் கருதினாலும் அவர் தம் சொந்த வீட்டிலிருந்த இருபது ஆண்டுகளிலாவது பின்னர் அவர் கால்நடையாகச் சஞ்சாரம் செய்த சமயங்களிலாவது ஒரு முறை கூட அவர் எவரையும் 'அவர் இத்தகையவர், அத்தகையவர்' என்று புகழ்ந்தும் அல்லது இகழ்ந்தும் அறியார். ஸ்வாமிக்கு விருப்பு வெறுப்பு இல்லை. தம்மைச் சுற்றி உள்ள தம் சேவகர்கள் ஊர்வம்பு, பிறரைக் குறித்து இகழ்வது முதலியவற்றில் ஈடுபட்டாலும் கூட ஒரு தடவையாவது "ஏனய்யா, இவ்வாறு பேசுவது தவறு அல்லவா" என்று கூடக் கூற மாட்டார்.

ஒரு நாளும் அவர் எனக்கு இந்தப் பதார்த்தம் வேண்டும் என்றோ, இந்தக் கறி நன்றாக உள்ளது; அது நன்றாக இல்லை என்றோ, இந்த வேலை இவ்வாறு செய்ய வேண்டும் என்றோ கூற மாட்டார். கிடைத்ததைத் திருப்தியாக உண்ணுவார். கஞ்சி இல்லை என்று மிட்டாய் கொடுத்தால் நாக்குக்கு ருசியைப் பழக்கப்படுத்தக் கூடாது என்று அந்த மிட்டாய்க்கு மிளகாய்ப்பொடி கலந்து தின்பார். வெளிப்புற சந்தர்ப்பச் சூழ்நிலைகளைப் பொருட்படுத்தாமல் எப்போதும், அடைய வேண்டியதைக் குறித்து முன்னேறுவதே அவரது லக்ஷியம் என்பது போல நடந்து கொண்டார். வெயில், மழை, காற்று முதலிய எவற்றையும் பொருட்படுத்தாமல் எப்போதும் நெருப்பை நியமமாக எரியவிடுவார்.

ஸ்வாமி உணவுண்ணும் விதத்தைப் பற்றி தேவள்ள வெங்கடையா இவ்வாறு கூறினார். ஸ்வாமி தம் சீடர்களின் குழுவோடு எங்காவது தங்கும்போது, முதலில் இலை நிரம்பச் சாதம் பரிமாற வேண்டும். அதை ஓரங்களில் சுற்றிலும் விளிம்பு மாதிரி வைப்பார். நடுவில் மிகக் கொஞ்சமாகவே சாதம் வைத்திருப்பார். மீண்டும் சாதம் பரிமாறச் செய்து, மோர் ஊற்றிக் கொண்டு சாப்பிட்டு முடித்தபின், இலையைச் சுற்றிலும் விளிம்பு போல் வைக்கப்பட்ட சாதத்தை அந்தந்தப் பக்கங்களில் தரைமேல் தம் விரல்நுனியால் விரிவார்.

மற்றொரு பக்தர் கூறியது : ஸ்வாமி சாதம் சாப்பிடுகின்ற காலத்தில் ஒரு பேலினில் மூன்று இலைகளுக்குச் சரிப்போகும் அளவு சாதம் கொண்டு வந்து அப்படியே இலையில் கவிழ்க்க வேண்டுமே தவிர கரண்டி முதலியவற்றால் பரிமாறினால் ஒத்துக் கொள்ளமாட்டார். முதல் முறை இலை நிறையப் பரிமாறின சாதத்தை தமது மசிக்கறை படிந்த கைகளால் தொட்டுத் தனக்கு உணவு அளித்த பக்தருக்குப் பிரசாதமாக அளிப்பார். இண்டாவது முறை அவ்வாறே இலை நிரம்பச்

சாதம் பரிமாறினால், அதனைத் தாமே உருண்டைகளாகச் செய்து, பெரிய உருண்டைகளை இலையைச் சுற்றிலும் வைத்து மிகுந்த சாதத்தைச் சின்ன உருண்டைகளாகச் செய்து இலையைச் சுற்றிலும் இன்னொரு வரிசையாக வைத்துப் பிறகு மிகுந்த சாதத்தை அவர் உண்பார். மீண்டும் இரண்டாம் முறை சாதம் போட்டுக் கொள்ள மாட்டார். வெங்கம்மா போன்ற பக்தர்களின் வீடுகளுக்கு வந்தபோது முதல் இலையிலுள்ள சாதத்தைத் தொட்டு அவர்களுக்குப் பிரசாதமாக அளிப்பார்.

ஒவ்வொரு சமயம் ''ஐயா, கொஞ்சம் மிளகாய்ப்பொடி போடு இறாயா?'' என்று கேட்பார். அப்போது மிளகாய் வற்றல், உப்பு, வெங்காயம் முதலியவை அளித்தால் உள்ளங்கையில் வைத்து அவற்றை நசுக்கிச் சாதத்தில் கலந்து சாப்பிடுவார்.

இவ்வாறு நடப்பதைச் சிறிதுகாலம் பார்த்த ரோசிரெட்டி, ஒரு பக்தையிடம் கூறி மிளகாய்வற்றல், தனியா, உப்பு ஆகியவற்றை நன்றாகப் பொடி செய்து ஒரு டப்பாவில் போட்டு வைத்துக் கொள்வார். ஸ்வாமி கேட்கும்போது பரிமாறுவார். எப்போதாவது அரிதாக ஸ்வாமி கொஞ்சம் வெல்லம் கொடு ஐயா என்று கேட்டுத் தின்பார். அதனால் ரோசிரெட்டி, வறுத்த வேர்க்கடலை, தேங்காய், வெல்லம் மூன்றையும் நன்றாக இடித்து டப்பாவில் வைத்துக் கொண்டு ஸ்வாமி கேட்கும்போது அந்த டப்பாவைக் கொடுத்தால் அவர் அதிலிருந்து சிறிது எடுத்துக் கொண்டு தின்பார். ஒவ்வொரு சமயம் ஸ்வாமி கறிவேப்பிலைப் பொடி, புளியஇலைப் பொடி, தனியாப்பொடி, மிளகாய்ப் பொடி முதலிய வற்றைக் கேட்டுப் பரிமாறச் செய்து சாதத்தில் கலந்து உண்பார்.

ஒருநாள் ஸ்வாமி தம் சேவகனிடம் ''சாதம் வடித்துப் போடு ஐயா'' என்றார். அவ்வாறே சாதம் சமைத்துப் பக்தர்கள் ஸ்வாமிக்குச் சமர்ப்பித்தார்கள். ஸ்வாமி தமது உள்ளங்கையால் உச்சந்தலையைத் தொட்டுப் பின்னர் சாதத்தின் மேல் உள்ளங்கையை வைத்தார். இவ்வாறு மும்முறை செய்த பிறகு ஸ்வாமி தாம் சிறிது கூட உண்ணாமல் அந்தச் சாதத்தை ஒரு பக்தரிடம் கொடுத்து ''எல்லோருக்கும் கொடு. வியாதிகள் எல்லாம் நீங்கிவிடும்'' என்றார். அவர்கள் அவ்வாறே செய்தனர்.

ஒவ்வொரு சமயம் ''எனக்குச் சீக்கிரமாக வெற்றிலை பாக்கு கொடு ஐயா'' என்பார். கொண்டு வருவதற்குள் பலமுறை கேட்டு அவசரப்படுத்துவார். கொஞ்சம் தின்றுவிட்டு ''சப்பென்று இருக்கிறது ஐயா. காரமாகச் செய்து இன்னும் கொஞ்சம் கொடு'' என்பார். முதலில் கொடுத்ததைப் பூராவும் தின்றுவிடுவார். கொஞ்சம் சுண்ணாம்பு

அதிகமாக வைத்து மறுபடி கொடுத்தால் ''இன்னம்மா, இன்னு, நன்றாக இருக்கிறது'' என்று ஏதோ கட்புலனாகாத ஒருவரிடம் சொல்வது போல் சொல்லிக் கொண்டே தின்பார். சிறிது நேரத்தில் ''இனி அந்தம்மாவைப் போகச் சொல் ஐயா. எல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்பார்.

ஒருநாள் ஆஞ்சநேயஸ்வாமி கோயிலில் அங்கே பக்தர்கள் பாடிக் கொண்டிருக்கும் பாட்டுக்களை நிறுத்தச் சொல்லி ''ஓம் நாராயணா, ஆதிநாராயணா'' என்ற நாமத்தைத் தானும் கூறி மற்றவர்களையும் நீண்டநேரம் கூறவைத்தார். ஒரு போதும் ஸ்வாமி இவ்வளவு நேரம் தாமே கூறி மற்றவர்களை நாமம் கூறும்படிச் செய்ததே இல்லை.

அவர் கஞ்சி மட்டும் குடிக்கும் நாட்களில் எப்போதாவது அரிதாக பூண்டை வேக வைத்தோ, தீயில் வாட்டியோ உரித்து நசுக்கிக் கொடுத்தால் சப்பி விழுங்குவார். சில சமயங்களில் அது வேண்டும் என்று அவரேகூடக் கேட்பார்.

ஸ்வாமிக்குக் கஞ்சி ஊற்றும் சேவையைத் தினமும் ரோசி ரெட்டியே செய்வார். ஒருநாள் அவர் விறகுக்காகப் போயிருந்த சமயத்தில் வேறொரு சேவகர் ''இன்று நான் ஸ்வாமிக்குக் கஞ்சி கொடுப்பேன்'' என்று எடுத்துக் கொண்டு போக, ஸ்வாமி வேண்டா மென்றார். ரோசிரெட்டி விறகுகளைக் கொண்டு வந்து போட்ட பிறகு வழக்கம் போல ஸ்வாமிக்குக் கஞ்சி கொடுக்கப் போனார். ''ஸ்வாமிக்குக் கஞ்சி வேண்டாமாம். நீ எதற்காக எடுத்துக் கொண்டு போகிறாய்?'' என்று மற்ற பக்தர்கள் தடுத்தார்கள். ரோசிரெட்டி அவர்களது சொற்களைப் பொருட்படுத்தாமல் கஞ்சி எடுத்துக் கொண்டு போனார். ''நீ ஆனதால் குடிக்கிறேன் ஐயா'' என்று கூறி ஸ்வாமி கஞ்சி பருகினார். ஸ்ரீஸ்வாமிக்கு தினமும் எந்த சேவகர் எந்த சேவை செய்கிறாரோ அவரே அதைச் செய்ய வேண்டும். அவர் சொன்னால் தவிர சேவகர்கள் தம் தினசரிக் கிரமங்களை மாற்றிக் கொண்டால் அவர் ஒத்துக் கொள்ள மாட்டார்.

ஸ்வாமி சாதம் சாப்பிடும் காலத்தில் கூட ரோசிரெட்டி அந்தச் சேவை செய்து வந்தார். ஒரு நாள் வேறொரு பணியாளர் அன்று தான் தான் அந்த சேவையைச் செய்வேன் என்று பிடிவாதம் பிடித்ததால் ரோசிரெட்டி சாதம் போடப் போகவில்லை. அந்தப் பக்தர் சாதம் கொண்டு வந்து ஸ்வாமியைச் சாப்பிடுங்கள் என்றபோது அங்கே வைத்து விட்டுப் போகச் சொன்னாரே தவிரச் சாப்பிடவில்லை. சிறிது நேரத்துக்குப் பின் ஸ்வாமி ரோசிரெட்டியை அழைத்து ''போட்டால் நீயே சாதம் போடு; இல்லாவிடில் என்னை வண்டியில் ஏற்றி ஆசிரமத்திலிருந்து வெளியே தள்ளிவிடு'' என்று கோபமாகக் கூறினார்.

அன்றிலிருந்து வேறு சேவகர்கள் எவரும் தாம் ஸ்வாமிக்குச் சாதம் போடுகிறோமென்று வம்புக்கு வரவேயில்லை.

ஒருநாள் ரோசிரெட்டியிடம் ஸ்வாமி ''வலது உள்ளங்கையால் இரண்டு கை நீர் குடி'' என்றார். அவ்வளவுதான். அன்றிலிருந்து ரோசிரெட்டிக்கு தாகம் என்பதே இல்லாமல் போயிற்று.

சாதாரணமாக குண்டத்தை சேவகர்கள் சரிப்படுத்தினால் தடுக்காத ஸ்வாமி, ஒவ்வொரு சமயம் அதனருகில் எவரையும் வரவிட மாட்டார். துளசிப்பாட்டி தினமும் அந்தக் குண்டத்தில் சாம்பிராணி போட்டு நமஸ்காரம் செய்து கொள்வாள். ஒரு நாள் ஸ்வாமி தம் கைகளால் அவளைத் தடுத்துக் குண்டத்தினருகில் வரவிடவில்லை. ஒரு வேளை நம் கட்புலனுக்குத் தெரியாத விதத்தில் ரிஷிகளோ தேவதைகளோ குண்டத்தருகில் வந்து இருக்கலாமென்று இந்த நிகழ்ச்சியைப் பற்றி நாம் ஊகிக்கலாம். இவ்வாறே ரோசிரெட்டியைக் கூட ஒருநாள் குண்டத்தைச் சரி செய்யப்போனபோது எரியும் விறகுக் கட்டைகளைத் தொடவிடாமல் ''அப்பப்பா, இப்போது தொடலாமா?'' என்றார்.

ஒரு நாள் பச்சைக் கள்ளிச்செடிகளை துளியில் போட்டு அவை எரிவதற்காகக் காய்ந்த புல்லை குண்டத்தில் போட்டு பகபகவென்று சிரித்தார் ஸ்வாமி. காரணம் கேட்டபோது ''கள்ளிச்செடிகள் சண்டை போட்டுக் கொண்டிருக்கின்றன ஐயா'' என்றார்.

ஒரு சமயம் ஸ்வாமி ஒரு மைதானத்தில் துளி எரிய விட்டுக் கொண்டு அமர்ந்திருந்தார். ஸ்வாமியைப் பற்றி எதுவும் தெரியாத ஒருவர் பீடி பற்றவைத்துக் கொள்ள நெருப்புக்காக வந்தார். ஸ்வாமியின் அருகில் தம்பூரா முதலியவற்றைப் பார்த்துவிட்டு அவர் அந்த நெருப்பில் பீடி பற்றவைக்கலாமோ கூடாதோ என்ற சந்தேகத்துடன் ஆனால் பற்றவைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆத்திரத்தோடு இருந்தார். ''ஏன் ஐயா, பீடி பற்றவைத்துக் கொள்ள வேண்டுமா, பற்ற வைத்துக் கொள்'' என்றார் ஸ்வாமி. அதைக் கேட்ட சேவகர்கள் ஆச்சரிய மடைந்தனர். ஏனெனில் அந்நாட்களில் துளியில் ஒரு சிறு குச்சியைப் போட வேண்டுமானாலும் ஸ்வாமி தாமே போடுவாரே தவிர எவரையும் தொட விடமாட்டார். ஆனால் எதிரே உள்ளவர்களின் உணர்ச்சிகளைப் பொறுத்தே அவர் நடந்து கொள்வார் என்பதை இந்த நிகழ்ச்சி தெளிவுறுத்துகிறது.

தக்ஷிணையாக வரும் பணத்தை ஸ்வாமி தம் சேவகர்களுக்கு அவரவர்கள் மேற்கொள்ளும் கஷ்டம் மற்றும் அவர்களது தேவை முதலியவற்றுக்குத் தக்கபடி அளித்துவிடுவார். தம்மிடம் பணத்தை

மீதம் வைத்துக் கொள்ள மாட்டார். பண்டிகைக் காலங்களில் பக்தர்கள் சமர்ப்பிக்கும் இன்பண்டங்களைப் பக்தர்களுக்கும் தம் சேவகர் களுக்கும் அப்போதைக்கப்போதே விநியோகிக்கும்படி கூறுவார்.

தசய்யா, ரமணய்யா, ரோசிரெட்டி முதலியோர் மிகக் கடினமான பணிகள் செய்பவராதலால் அவர்களுக்காகக் கொஞ்சம் இன்பண்டங் களைத் தனியே எடுத்து வைத்துப் பிரத்தியேகமாகக் கொடுப்பார். இரவும் பகலும் தம்முடன் கண்விழித்திருக்கும் ரோசிரெட்டியை நடு இரவில் தனியாகக் கூப்பிட்டுத் தம் பாய் அடியில் வைத்துள்ள இனிப்புப் பண்டங்களை அளித்துக் குடிசையின் பின்புறம் போய்த் தின்னுமாறு கூறுவார்.

ஸ்வாமி மஹாசமாதி அடையும்போது அவருக்கு 95 - 98 வயது இருக்கும். கடைசி பன்னிரண்டு ஆண்டுகள் அவர் வெறும் திரவ ஆகாரத்தோடேயே வாழ்ந்தார். ஆனால் உடம்பில் ஒரு இடத்தில் கூட மெழுத்தனத்தின் அறிகுறியான சுருக்கமே இல்லை. எலும்புகளை ஒட்டிய வாறு பளபளவென்று இருக்கும் அவரது சருமத்தைப் பார்த்தால் அது யோக சரீரம் என்று தெரியும். ஸ்வாமியின் கண்களிலுள்ள கம்பீரமும், சாந்தியும், எல்லோரையும் கவரக்கூடியது. மின்னலைப் போல் பளிச்சிடும் கண்கள் அந்த மஹாயோகிக்கு இயற்கையாக அமைந்த ஆபரணங்கள்.

குரவைய்யா எப்போதும் ஸ்வாமியின் தலையருகிலேயே இருந்து ஸ்வாமி உரக்கக் கூறும் சொற்களைத் தானும் பின்பாட்டுப் போலக் கத்தியவாறு எப்போதும் விழித்துக் கொண்டே இருப்பார். ஸ்வாமி தம் கைகளால் பின்பக்கம் தலைக்கடியிலுள்ள தலையணையைப் பிடித்தவ ராய்த் தம் திருஷ்டியை ஆகாயத்தின் மேல் நாட்டி அவ்வாறே பார்த்துக் கொண்டே இருப்பார். ஸ்வாமி அந்த நிலையில் இருக்கும்போது குரவைய்யாவுக்கு ஒருவிதமான தன்மயத்துவம் ஏற்படும். அதனால் அவருக்கு ஸ்வாமியை விட்டுவிட்டுப் போக வேண்டும் என்ற எண்ணமே எழுந்ததில்லை. அந்தச் சமயத்தில் ஸ்வாமியிடமிருந்து ஒரு ஒளி தன்னுள் பாய்வதைப் போன்று குரவையாவுக்குத் தோன்றும்.

மஹாசமாதிக்கு மூன்று ஆண்டுகள் இருக்கும்போதிலிருந்து ஸ்வாமி எப்போதும் சமாதிநிலையிலேயே இருந்தார். எனவே படுக்கை போட்டால் அவர் தடுக்கவில்லை. குரவைய்யாவையும் படுக்கை மீது அமரும்படி இழுத்து அமரச் செய்வார்.

அதற்கு முன்பு வைக்கோல் மீது ரச்சம்பாய் அல்லது பளை யோலையைப் போட்டு அதன்மீது பழைய கோணிச்சாக்கை விரித்து

ஸ்வாமியை அமர்த்துவார்கள். அவர் படுத்துக் கொள்ளும் படுக்கையும் அதே. ஸ்வாமியின் சிறந்த பக்தையான வக்கம்மா, பக்தியோடு நாமஜபம் செய்தவாறே நிரட்டிய ஒருவித மிருதுவான மலர்களைக் கொண்டு தயாரித்த படுக்கையை ஸ்வாமி ஏற்றார். பின்னர் அந்தப் படுக்கை இழிந்து போனபின் பஞ்சுப்படுக்கை விரிக்க ஆரம்பித்தார்கள்.

எந்தக் கிராமத்துக்குப் போனாலும் இரண்டு நாட்கள் கழிந்து விட்டால் ஸ்வாமி வேறு ஒரு ஊருக்குப் போவார்; அல்லது அதே கிராமத்திலேயே வேறு ஒரு இடத்துக்குத் தம் தங்குமிடத்தை மாற்றுவார்.

''இரவும் பகலும் எனக்குத் தெரிவதில்லை ஐயா! இப்போது நேரம் என்ன?'' என்பார் இரவுச் சமயத்தில். 10-3-1980-ல் ஸ்வாமி தனுப்பூர் நாராயணதாஸ் ஆசிரமத்தில் தங்கி உள்ளார். குரவையய்யா விடம் ''ஐயா, இது எந்த ஊர்?'' என்று கேட்டார். ''தனுப்பூர் அல்லவா ஸ்வாமி'' என்றால். 'ஆ, சரி' என்றார். பகவத்கீதையில் கூறப்பட்ட

'ந தத் பாஸயதே சூர்யோ ந சசாங்கோ ந பாவக:
யத்கத்வா ந நிவர்த்தந்தே தத் தாம பரமம் மம'

என்ற நிலையில் ஸ்வாமி இருந்தார். ஒளிமயமான எந்த இடத்தில் சூரியன், சந்திரன், நெருப்பு முதலியவற்றுக்குப் பிரகாசிக்கவே தர மில்லையோ, எந்த இடத்தை அடைந்தவர்கள் மீண்டும் திரும்பி வரமாட்டார்களோ அத்தகைய மிக உயர்ந்த இடத்திலேயே ஸ்வாமி அந்நிலையில் இருந்தார் என்பது பொருள்.

ஸ்வாமி நடக்கமுடியாத காரணத்தால் சட்டியில் சிறுநீர் கழித்தால் பக்தர்கள் அதனை எடுத்துச் சுத்தம் செய்வர். மலம் கழிப்பதற்கு, ஊருக்கு வெளியே எவ்ரும் இல்லாத இடத்துக்கு அவரை அழைத்துச் செல்லவேண்டும். நிலத்தின் மீது புல், அல்லது ஆவாரம் இலை, அல்லது மற்ற தழைகளைப் போட்டு அதன் மீது ரச்சம் பாயை விரித்து அவரைப் படுக்க வைத்துவிட்டு சேவகர்கள் தூரமாகப் போனபின் அவர் மலங்கழிப்பார். உடனே நல்ல சூடாக உள்ள வெந்நீரில் ஸ்நானம் செய்வார். அவர் ஒரு போதும் படுக்கையில் சிறுநீரோ, மலமோ கழித்த தில்லை.

மஹா சமாதிக்கு முன் ஒரு ஆண்டுக்காலம் அவர் நிரந்தர நியான நிலையில் இருப்பார். குளிப்பதற்காக வைத்த நீர் சூடு குறைவாக இருந்தால் 'குளிர் குளிர்' என்று கத்துவார். சூடு அதிகமானால் 'அப்பா, அப்பா' என்று கத்துவார். சரியான சூட்டில் நீர் இருந்தால் 'அதே, அதே' என்று கூறிக் கொண்டே ஸ்நானம் செய்வார். ஒவ்வொரு சமயம் ''இனி போதும் அம்மா, இனி போதும், அவ்வளவுதான், அவ்வளவுதான்''

என்பார். அம்மாதிரிச் சமயத்தில் சேவகர்கள் விரைந்து சென்று உடம்பைத் துடைத்ததும் துடைக்காததுமாக ஸ்வாமியை எடுத்துக் கொண்டு போய்ப் படுக்கையில் படுக்க வைப்பார்கள். ஸ்வாமியின் கோவணத்தைப் பிழிந்த நீரை பக்தர்கள் கண்களுக்கு ஒற்றிக் கொண்டு தீர்த்தமாகப் பருகுவார்கள். சிலருக்குக் கண் எரிச்சல், கண்ணில் மறைப்பு இருந்தால், அந்த நீரை கண்களில் விட்டுக் கொண்டு தமது உபாதைகளைப் போக்கிக் கொள்வார்கள். தமது சுயநிலையில் இருந்தால் ஸ்வாமி உடலுக்கு சோப்புத் தேய்க்க விடமாட்டார். அதனால் பக்தர்கள் அவருக்கு சீயக்காய்ப் பொடி, கடலைமாவு முதலியவற்றால் உடலைத் தேய்ப்பார்கள். தம் இறுதி நாட்களில் சோப்புத் தேய்த்தாலும் வேறெது தேய்த்தாலும் ஸ்வாமி பொருட்படுத்தமாட்டார். அவர் புற உலக நினைவில்லாத ஸமாதி நிலையில் இருந்ததால் அவர் எதனையும் தடுக்கவில்லை.

புறஉலக நினைவு ஏற்படும்போது ஸ்வாமி கால்களுக்கும் உடம்புக்கும் நல்லெண்ணெய் தேய்க்கச் சொல்வார். ஸ்வாமியைத் தொடும் அதிருஷ்டத்துக்காகத் தவிக்கும் பக்தர்களின் மனதை உணர்ந்து முள்ளை எடுக்கும் சாக்கிலும், எண்ணெய் பூசும் சாக்கிலும் தம்மைத் தொடும் சந்தர்ப்பத்தை அருளுவார். சாதாரணமாகத் தம் சேவகர்கள் தவிர மற்றவர்கள் தம்மைத் தொடுவதற்கு அனுமதிக்கமாட்டார் ஸ்வாமி.

குளிர்காலத்தில் ஸ்வாமிக்குப் பனித்தொல்லை ஏற்படும் என்று பக்தர்கள் பந்தல் போட்டால் அவர் பந்தலை விட்டுவிட்டு, வெட்ட வெளிப் பிரதேசத்துக்குப் போய் அங்கே துனியைப் பற்றவைத்துக் கொண்டு அமர்வார். தலுப்பூரில் கொசுத்தொல்லை அதிகமாதலால், ஸ்வாமி தமது முதுகைச் சிப்பால் சொரியும்படி சேவகர்களைக் கேட்டுக் கொள்வார். அவரது துன்பத்தைக் கண்டு பக்தர்கள் ஒரு முறை ஸ்வாமிக்குக் கொசுவலை கட்டினார்கள். ஆனால் ஸ்வாமி அதைப் பிடுங்கி எறிந்தார். ஸ்வாமி நகர முடியாதிருந்த இறுதி நாட்களில் மட்டும் பக்தர்களின் முயற்சி வெற்றியைப் பெற்றது. இவரது இச்செயல்கள் ஷீரடி சாயியின் செயல்களை மிகவும் ஒத்துள்ளன.

இரவு நேரத்தில் சேவகர்கள் அனைவரும் ஸ்வாமியைச் சுற்றிலும் மிகவும் அருகாகப் படுத்துக் கொள்வார்கள். ஒரு நாளும் ஒருவரையும் அவர் 'எழுந்து போய் தூரத்தில் படுத்துக்கொள்' என்று கூறியவரே அல்ல.

நிரந்தர சமாதி நிலையில் உள்ள ஸ்வாமி, தம் பக்கத்திலுள்ள பக்தர்கள் மற்றும் சேவகர்கள் செய்யும் தொல்லைகளையும், ஊர்வம்பு, பரதூஷணை, அரசியல் விமர்சனங்கள் முதலியவற்றையும் காதில் போட்டுக் கொள்ள மாட்டார். அவ்வாறு செய்வதை நிறுத்தும்படி அவர்களிடம் சொல்லமாட்டார். ஒரு முறை "போனால் போகவிடுவதே அல்லவா ஐயா" என்றாரல்லவா!

மிகவும் அரிதாக ஒரு நாள் "இன்று ஒருவரும் பேசக்கூடாது. ஸமுத்திர ஸ்னானத்துக்குப் போக வேண்டும். வக்கம்மாவையும் கூட அழைத்துச் செல்ல வேண்டும்" என்றார். ஆனால் ஸ்வாமி சமுத்திர ஸ்னானத்துக்குப் புறப்படவேயில்லை. எனவே அவரது சொற்கள் எவருக்கும் புரியவில்லை. அவர் கூறியபடியே அன்று வக்கம்மாவுக்கு சமுத்திர ஸ்னானம் செய்துவிட்டு வந்ததாகக் கனவு ஏற்பட்டது. அந்தக் கனவு வெறும் கனவு அல்ல என்றும் தாமே அவளுக்கு பவித்திரமான அநுபவத்தை அருளப் போகிறார் என்றும் பக்தர்களுக்குத் தெரியப் படுத்தவே ஸ்வாமி அவ்வாறு கூறினார். ஆனால் அன்று எதற்காக மௌனமாக இருக்கும்படிக் கூறினார் என்று பக்தர்கள் அவரைக் கேட்கவில்லை.

3. அவதூத லீலைகள்

மஹான்கள், பாலர், பித்தர், பிசாசுகள் போல இருப்பார்கள் என்று ஆதிசங்கரர் கூறினார். பூரண புருஷர்களான ஸ்வாமியைப் போன்ற மஹான்களின் செயல்களுக்கு ஏதோ ஒரு பலமான காரணம் இருக்கும். அந்தக் காரணம் நமக்கு விளங்காமல் நாம் அவர்களைப் பித்தர்கள் என்று மயங்குகிறோம். நம் பார்வையில் இத்தகைய அர்த்த மற்றது போல் தோன்றும் செயல்களால் அவர் பக்தர்களைக் காப்பாற்றி உள்ளார் என்று சிறிது காலத்துக்குப் பின் அந்தந்த பக்தர்கள் விளக்கும்போது நமக்குப் புரிகிறது. அத்தகைய பல லீலைகளை நாம் இப்போது காண்போம்.

ஒரு நாள் ஸ்வாமி ''தீ, தீ, அணையுங்கள் ஐயா, நீர் ஊற்றுங்கள்'' என்று கத்தியவாறு டேகபூடி ராமாலயத்தின் மீதும் கவர்களின் மீதும் பல குடங்கள் நீரை ஊற்றச் சொன்னார். ''தீ அணைந்துவிட்டது, ஸ்வாமி இனி நிறுத்துங்கள்'' என்றால் ''இல்லை ஐயா, இன்னும் நீர் ஊற்ற வேண்டும், ஊற்றுங்கள்'' என்று நீண்டநேரம் ஆலயத்தின் மீது கூட நீரூற்றும்படிச் செய்தார். தன் மஹிமையை மிக மறைவாக வைத்துக் கொள்ளும் ஸ்வாமி எந்த பக்தர்களை நிவிபத்திலிருந்து எங்கே காப்பாற்றினாரோ நமக்குக் கூறுவாரா?

ஒரு முறை ஸ்வாமிக்குக் கால்கள், கைகள், மற்றும் உடம்பில் நீப்புண்கள் ஏற்பட்டன. அதற்குக் காரணம் என்னவென்று எவருக்கும் தெரியவில்லை. அவருக்கு அடிக்கடி வலிப்பு மாதிரி வருவதுண்டு. இரவு வேளையில் வலிப்பு வந்து நெருப்பில் விழுந்ததால் அவ்வாறு நீக்காயங்கள் ஏற்பட்டிருக்கும் என்று பக்தர்கள் கருதினர். எவராவது பக்தர்கள் நெருப்பில் சிக்கிக் கொண்டிருக்கும்போது சாயிபாபாவைப் போல் அவர்களைக் காப்பாற்றப்போய் அவர் உடம்பில் நீக்காயங்கள் ஏற்பட்டிருக்கும் என்று மற்றும் சிலர் கருதினர். ''ஸ்வாமி, எப்படித் நீக்காயம் ஏற்பட்டது?'' என்று கேட்டபோது ''ஐயா, மேலே உள்ளவர் கள் வந்து நிராவகம் ஊற்றிவிட்டுப் போனார்கள் ஐயா'' என்றார். முழங் கால்களிலுள்ள காயங்கள் ஆறிக்கொண்டு வரும்போது முள்ளால் அந்த இடத்தை மீண்டும் கீறி ரத்தம் கசியுமாறு செய்வார். ஆற, ஆற மீண்டும்

மீண்டும் இவ்வாறே செல்வார் ஸ்வாமி. இவ்வாறு மூன்று மாதங்கள் வரை செய்தார்.

அதிகமாகத் தீக்காயம்பட்ட வலது புஜத்துக்கு டாக்டர்கள் கட்டுக் கட்ட முயன்றபோது ஸ்வாமி அதற்குச் சம்மதிக்கவில்லை. பக்தர்கள் பலவந்தமாக மருந்து வைத்துக் கட்டுக் கட்டினார்கள். ஸ்வாமி அவை வரையும் ஏமாற்றிப் பேனாக் கத்தியால் கட்டை அறுத்து விடுவார். கத்தியை அவரிடமிருந்து பிடுங்கினால் மீண்டும் கொடுக்கும் வரை ரகளை செய்வார். பக்தர்கள் காவல் காத்து, இரண்டு இரவுகள் கட்டை அவிழ்க்காமல் கவனித்துக் கொண்டனர். மூன்றாவது இரவு, காவலாக இருந்த சேவகர் தூங்கியபோது ஸ்வாமி கட்டை அறுத்துவிட்டார். அந்தப் புண்ணில் மேல் ஆறிக் கொண்டு வந்த பாகத்தை அப்படியே அறுத்து ஒரு சட்டியின் மேல் போட்டார். காயத்திலிருந்து ரத்தம் கசிய ஆரம்பித்தது. சேவகர் எழுந்து 'லபோ திபோ' என்று அடித்துக் கொண்டார். ஸ்வாமி அறுத்துப்போட்ட தோலின் பாகத்தை துளஸம்மாவும், வெங்கம்மாவும் ஒரு டப்பாவில் ரகசியமாக வைத்தனர். அதிலிருந்து ஒரு விந்தையான நறுமணம் ஆசிரமம் முழுவதும் வியாபித்தது. அதன் காரணத்தைக் கூறும்படி பக்தர்கள் துளஸம்மாவையும், வெங்கம்மாவையும் தொல்லைப்படுத்தினர். இறுதியில் வெகுளியான வெங்கம்மா ஒரு பக்தருக்கு அந்தத் தோல் துண்டைக் காட்டினாள். உடனே அந்த அதிசயமான நறுமண வாசனை வீசுவது நின்றுவிட்டது.

ஸ்வாமி நடந்து கொண்டிருந்த நாட்களில் ஒவ்வொரு சமயம் இரவும் பகலும், உணவையும் உறக்கத்தையும் விட்டு நாதம் மீட்டியவாறே இருப்பார். இரவில் தூக்கம் வந்தால் நாகதாளி முள்ளால் மேல் வரிசைப் பற்களின் ஈறுகளில் குத்தி, ரத்தம் கசியும்போது தண்ணீரால் வாய் கொப்பளித்து விட்டு மீண்டும் நாதம் மீட்ட ஆரம்பிப்பார்.

ஒரு சமயம் சேவகர்கள் ஸ்வாமியை இரட்டைக்காளை வண்டியில் அழைத்துச் சென்றார்கள். ஸ்வாமி வண்டியில் படுத்துக் கொண்டார். சிறிது நேரத்தில் அவர் கண்மூடித் தியான நிலையில் இருந்தார். வண்டி குலுங்குவதால் அவரது உடல் நகர்ந்து அவரது முழங்கால் வண்டிச் சக்கரத்தில் மோதி நன்றாகக் காயம் ஏற்பட்டு ரத்தம் ஒழுகியது. சிறிதுநேரத்திற்குப்பின் பக்தர்கள் அதைக் கவனித்து வண்டியை நிறுத்தி, அவரை எழுப்புவதற்குத் துணிவு இல்லாமல், ரத்தத்தைத் துடைக்க முயற்சித்தபோது அவர் எழுந்து அவர்களைத் துடைக்கவிடவில்லை. சமாதிநிலையிலிருந்த ஸ்ரீராமகிருஷ்ண பரம ஹம்ஸரைச் சோதிப்பதற்காக ஸ்ரீ விவேகானந்தர் அவரது தொடைமீது நெருப்புத் துண்டை வைத்தபோதும் அவர் அசையவில்லை என்று படித்தோம். ஸ்வாமி அத்தகைய ஸ்திதியில் இருப்பதை இப்போது பக்தர்கள் பார்த்தார்கள்.

ஸ்வாமி நடக்க முடியாமலிருந்த நாட்களில், ஒரு சமயம் அவர் அக்கிம் வெங்கட்ராமரெட்டியின் வீட்டில் இருந்தார். காலை பத்துமணி வாக்கில், வேலை செய்து கொண்டிருந்த சேவகர்கள் சுவாமி தமது யதாஸ்தானத்தில் இல்லை என்பதைக் கவனித்து அவரைத் தேடலா னார்கள். அங்கு ஒரு புறத்தில் ஒருக்கவித்துப் படுத்துக் கொண்டிருந்தார் ஸ்வாமி. அவரது ஆசனவாயிலிருந்து பன்னிரண்டு அங்குல நீளத்துக்குக் குடல் வெளியே வந்துள்ளது. அதை ஒரு காகம் கொத்திக் கொண் டிருக்க, ரத்தம் ஒழுகுகின்றது. பக்தர்கள் காகத்தை விரட்ட முயன்ற போது "ஐயோ பாவம், அது எடுத்துக் கொண்டு போகும்போது விரட்டினால் எப்படி?" என்றார். இந்தக் காட்சியைக் காணச் சகிக்காமல் வெங்கட்ராமிரெட்டி ஸ்வாமியின் கண்களுக்குப் படாமல் காற்றில் தடியைச் சுழற்றினார். காகம் போய்விட்டது. சிறிது நேரத்தில் குடல் உள்ளே போயிற்று. பக்தர்கள் அவரை எடுத்துக் கொண்டு போக முயற்சித்தபோது ஸ்வாமி சம்மதிக்கவில்லை. தாமே தவழ்ந்து வந்து தம் இடத்தில் அமர்ந்தார்.

ஸ்வாமியின் சந்நிதியில் எவ்வளவோ பேர் இருப்பார்கள். ஒவ்வொரு சமயத்தில் ஒருவரை எழுந்து விட்டுக்குப் போகுமாறு கூறுவார். இன்னொருவரை எழுந்து மற்றொரு இடத்தில் அமருமாறு கூறுவார். மற்றொருவரை ரோடுவரை நடந்து போகும்படிக் கூறுவார். 1980-ஆம் ஆண்டில் ஸ்வாமி தமது பக்தரான நாராயணதாஸின் ஆசிரமத்தில் இருக்கும் போது தம் சேவகர்கள் நான்குபேரைக் கிழக்குத் திசையிலுள்ள கற்குவியல்கள் வரை போய் வரும்படிப் பணித்தார். இருவர் மட்டுமே போய் வந்த போது ஒத்துக் கொள்ளவில்லை. நான்கு பேரும் சேர்ந்து கிழக்குப்புற வழியாகப் போய் அதே வழியில் வரும் போது 'வடக்குப்புறப் பாதையில் வரச்சொல்' என்று மற்றொருவரின் மூலம் சொல்லி அனுப்பினார். இதன் பொருள் எவருக்கும் விளங்க வில்லை.

ஒவ்வொரு சமயம் ஸ்வாமி தமக்குத் தாமே பெரிதாகச் சிரித்துக் கொள்வார். அந்தச் சிரிப்பை ஒலிநாடாவில் பதிவு செய்து கொள்ளும் அதிருஷ்டம் இருந்திருந்தால் எவ்வளவு நன்றாயிருந்திருக்கும்?

பெஞ்சலகோனாவில் இருக்கும்போது ஸ்வாமியிடம் சில நோயாளிகள் வந்தபோது குரவையாவிடம் அவர்களுக்கு துணியால் மந்திரிக்கும்படிக் கூறினார். பிறகு ஸ்வாமி குரவையாவை மந்திரித்தார்.

ஸ்வாமி உடலோடு இருக்கும்போது பென்னபத்வேல் அருகி லுள்ள அங்காளம்மன் குன்று என்ற இடத்தைச் சேர்ந்த ஒரு பெண்மணி தொலைந்துவிட்ட தன் ஆட்டைத் தேடிக் கொண்டு ஸ்வாமி தங்கியுள்ள பிரதேசத்துக்கு வந்தாள். அவளுக்கு ஸ்வாமி குண்டத்தில் நடுவில் அமர்ந்தவாறு காட்சியளித்தார். அன்றோடு ஸ்வாமியின் கதை முடிந்து

விட்டது, இனி அவரைப் பார்க்க முடியாது என்று கருதிக்கொண்டே போய்விட்டாள். விடிகாலை ஏரிக்குப் போனபோது குளித்துவிட்டு வேஷ்டியை உலரவைத்துக் கொண்டு இருந்த ஸ்வாமியைக் கண்டாள். அவள் இந்த விஷயத்தை ஸ்வாமி உடலோடு இருக்கும் போதே கொலகமூடி ஆசிரமத்தில் உள்ள எல்லோருக்கும் கூறினாள்.

ஸ்வாமி ஒருநாள் நாகதாளி முட்களை மிதித்துவிட்டு வந்து தம் குழுவினரிடம் முள்ளை எடுக்கும்படிக் கூறினார். அவர்கள் அவரது பாதத்தைக் குத்திக் காயப்படுத்தினரே தவிர முள்ளை எடுக்க முடியாமல் போயினர். கோடூர் வெங்கம்மாவிடம் ஸ்வாமி முள்ளை எடுக்குமாறு கூறினார். அவள் எவ்வளவு ஆழமாகக் குத்தினாலும் ஸ்வாமி 'அம்மா!' என்று அரற்றவும் இல்லை; காலை அசைக்கவுமில்லை. இறுதியில் அவள் மூன்று அங்குலமுள்ள முள்ளை எடுத்தாள். இந்தப் பெரிய முள்ளோடு அவர் எப்படித்தான் நடந்தாரோ! முள் எடுத்ததற்காக வெங்கம்மாவுக்கு ஒரு ஊசியும் ஒரு ப்ளேடும் வெகுமதியாக அளித்தார் ஸ்வாமி.

நெல்லூரில் போக்குவரத்து நெரிசல் அதிகமாதலால், பக்தர்களின் வீடுகளிலிருந்தோ அல்லது தத்தாத்ரேயரின் கோயிலிலிருந்தோ ஸ்வாமியை பஸ் ஸ்டாண்டுக்கு ரிக்ஷாவில் அழைத்துச் செல்வது வழக்கம். ஒருநாள் ஸ்வாமியின் பணியாளர்கள் அவரைத் தனியாக வெங்கட்ராவ் வீட்டில் விட்டுவிட்டு சினிமாவுக்குப் போய் வந்தனர். மறுநாள் விடிகாலை பஸ் நிறுத்தத்துக்குப் போக ரிக்ஷா கொண்டு வந்தபோது ஸ்வாமி ஏறமறுத்து அந்த ஜனநெரிசலிலும் டோலியில் அமர்ந்து தன்னைச் சுமக்க வைத்தார். இரவு அவரிடம் சொல்லாமல் சினிமாவுக்குப் போனதற்கு இது தண்டனை என்று சேவகர்கள் உணர்ந்தனர். ஸ்வாமியின் சேவையில் அவர் கூறியபடி அன்றி வேறு விதமாகத் தவறாகச் செய்தால், ஸ்வாமி மௌனமாக இருந்து, முக்கியமான சேவகரைத் தகுந்த தண்டனை அனுபவிக்கும்படிச் செய்வதுடன் அது தான் செய்த குறிப்பிட்ட தவறுக்கான தண்டனையே என்று உணரும்படியும் செய்வார்.

ராஜபத்மாபுரவாசியான பிரஜேபல்லி மஸ்தான் நாயுடு தாம் பார்த்த ஒரு அசாதாரணமான நிகழ்ச்சியைப் பற்றி விவரித்தார். ஸ்வாமி ஒருவர் வீட்டுக்குப் போய் "அம்மா, சாப்பிடுவதற்கு ஏதாவது கொடு அம்மா" என்று கேட்டார். அவருடைய வீட்டில் ஸ்வாமிக்கு அளிப் பதற்கு ஏதும் இல்லை. ஸ்வாமியிடம் இல்லை என்று எப்படிச் சொல்வ தென்று தயங்கினாள். ஸ்வாமிக்கு அவளது துன்பம் தெரியாதா என்ன? உடனே "அம்மா கொஞ்சம் மிளகாய்ப்பொடி கொடு அம்மா" என்றார். ஸ்வாமி அதைச் சமையலுக்கு உபயோகப்படுத்துவார் என்று கருதி அந்தப் பெண்மணி ஒரு டம்ளர் நிறைய மிளகாய்ப்பொடி கொண்டு

வந்து ஒரு தட்டில் போட்டு ஸ்வாமிக்கு அளித்தாள். அந்தத் தட்டிலுள்ள மிளகாய்ப்பொடி மொத்தத்தையும் இரண்டு நிமிடங்களில் தின்றுவிட்டு கைகளை உதறிக் கொண்டு ''இனி எழுதிக்கொள் ஐயா!'' என்று அவளுக்கு ஒரு ஆசீர்வாதச் சீட்டு எழுதுவித்து அருளிவிட்டுச் சென்றார்.

சாதுக்களை அவமதித்தல்

பெண்ணா நதியில் கோடிதீர்த்தத்துக்கருகில் பெரிய தூண் போன்ற மரக்கட்டை ஒன்று நீரோட்டத்தில் மிதந்து வந்தது. பலபேர் அதனை எடுத்துக் கொண்டு போக முயற்சித்தும் அது மிகவும் களமாக இருக்கவே திரும்பிவிட்டனர். அன்றிரவு ஸ்வாமி ஒருவரே அதைத் தம் புஜத்தில் சுமந்து கொண்டுபோய்த் தம் குண்டத்தில் போட்டார். காலையில் அதைக் கண்ட குடியானவர்கள் ''ஓ பிச்சிவெங்கையா, நங்கம் போன்ற தூணை இப்படி எரிக்கிறாயே, உனக்காகவா நாங்கள் அதை அங்கே விட்டு விட்டு வந்தோம்?'' என்று திட்டினார்கள். அவர்களில் ஒரு துடுக்குக்காரன் ''இந்த மாதிரிப் பைத்தியக்கார வேலைகள் செய்யாதே'' என்று அவரது கன்னத்தில் அடித்தான். அவன் தன் வீட்டுக்குப் போன போது அது எரிந்து கொண்டிருந்தது. சுற்றுப் புறத்திலுள்ள குடிசையிலுள்ளவர்கள் எல்லோரும் தங்களைக் காக்கும் படி ஸ்வாமியிடம் வேண்டினர். ''பாவம் இருக்கும் வரைக்கே போகும். மற்றவை அப்படியே இருக்கும்'' என்றார் ஸ்வாமி. அவ்வாறே அடித்தவனுடைய வீடு மட்டுமே எரிந்து போயிற்று. மற்ற வீடுகளுக்கு எந்தவிதச் சேதமும் ஏற்படவில்லை. மறுநாள் காலை அவன் ஸ்வாமியின் காலில் விழுந்து மன்னிப்புக் கோரினான்.

ஒருநாள் ஸ்வாமி முதுகேடு கிராமத்தில் ஒருவரது வீட்டுக்குச் சென்று 'அம்மா' என்று அழைத்தார். வீட்டுத்தலைவி புறக்கடையிலிருந்து 'யார்' என்று உரக்கக் கேட்டாள். ஸ்வாமி 'நான்தானம்மா பைத்தியக்காரன்; தின்பதற்கு ஏதாவது கொடுப்பாய் என்று வந்தேன்' என்றார். அவள் இல்லையென்று கூறிக்கொண்டே ஒரு உருண்டைக் களியை அவரது துவாலையில் போட்டாள். பிறகு அதற்குத் தொட்டுக்கொள்ள ஏதாவது கேட்டபோது எரிச்சலோடு கொஞ்சம் ஊறுகாய் போட்டாள். ஸ்வாமி நெய் கேட்டபோது இல்லவே இல்லை என்று கடுமையாகக் கூறினாள். 'உறியின்மேல் இருக்கிறது. கொஞ்சம் போடம்மா' என்றபோது அவள் ஸ்வாமியைத் திட்டினாள். உடனே உறி அறுந்து விழுந்து நெய்முழுவதும் நிலத்தின் மேல் கொட்டியது. ஸ்வாமி சிரித்துக் கொண்டே போய்விட்டார். இதனால்தான் போலும் சாயிநாதர், பிக்ஷை அளிக்காவிட்டாலும், பிக்ஷைக்கு வந்தவர்களை அவமதிக்கக் கூடாது என்றார். நமது பெரியோர்களும் 'தீயினால் சுட்டபுண் ஆறும்; வாயினால் சுட்டபுண் ஆறாது' என்றனர். இதையே ஸ்வாமி ''வாயைத் திறக்கக் கூடாது ஐயா'' என்றார்.

4. எல்லாவற்றையும் அறியவல்ல ஸ்வாமி

சாதனைகள் செய்து அதன் மூலம் ஸத்குருவை அடைந்து அவரது அருளால் ஆத்மஞானம் அடைந்த மஹான்களே சித்தபுருஷர்கள். அவர்களிடம் இறைவனது குணங்களான எல்லாம் அறியும் தன்மை, எல்லாம் வல்ல திறமை, எல்லாவிடங்களிலும் வியாபித்துள்ள தன்மை முதலியவை பரிபூரணமாக வெளிப்படுவதை பக்தர்கள் அனுபவத்தில் அறிகிறார்கள். இத்தகைய மஹான்கள் பிரபஞ்சத்தில் எந்த இடத்தில் என்ன நிகழ்கின்றது என்பதை ஒவ்வொரு கணமும் அறிபவர்களாகத் தம் பக்தர்களைப் பல துன்பங்களிலிருந்து காக்கிறார்கள். இந்த அத்தியாயத்தில் ஸ்வாமியிடம் வெளிப்பட்ட மேற்கூறிய குணங்களைப் பற்றிப் பார்ப்போம்.

கொலகமூடிவாசியான எஸ்.கே. மஸ்தானின் தந்தை ஒரு நாள் நடப்பதற்காக வெளியே சென்றார். அவர் சென்ற சிறிது நேரத்தில் பெரும் மழை பெய்து வெள்ளம் பெருகியது. வீட்டைவிட்டுச் சென்ற முதியவர் மூன்று நாளாகியும் திரும்பி வரவில்லை. அவரை எல்லா இடங்களிலும் தேடினார்கள். அவர் எங்கிருக்கிறாரென்று கூறும்படி ஸ்வாமியைக் கேட்டார்கள். ''அவர் வேஷம் மாற்றிக் கொண்டு விட்டார். நாளை கூடு கிடைக்கும்'' என்றார் ஸ்வாமி. அந்தச் சொற்கள் அவர்களுக்கு விளங்கவில்லை. மறுநாள் காலையில் ஏரியில் ஏதோ ஒரு சவம் இருக்கிறது என்று தெரிந்து போய்ப் பார்த்தார்கள். அந்தச் சடலத்தின் மாமிசத்தையெல்லாம் மீன்கள் உண்டு விட்டு வெறும் எலும்புக்கூடு மட்டுமே இருந்தது. அதன் மேல் இருந்த துணிகளை வைத்து அது அவர்களது தந்தைதான் என்று அடையாளம் கண்டு கொண்டனர். அந்த எலும்புக் கூட்டைக் கொண்டு வந்து அவர்களது சம்பிரதாயப்பிரகாரம் அடக்கம் செய்தனர்.

'அவரது வேஷம் மாறிவிட்டது' என்பதற்கு அவர் இறந்துபோய் மற்றொரு உடலை அடைந்தார் என்றும், கூடு கிடைக்கும் என்பதற்கு எலும்புக்கூடு மட்டுமே கிடைக்கும் என்றும், ஸ்வாமி கூறிய சொற்களின் பொருள் அவர்களுக்கு விளங்கியது.

மஹிமலூர் முனிகூட்டிராமய்யாவின் வீட்டில் ஸ்வாமி இருக்கும் போது அவரை அந்தக் கிராமத்தவர்கள் தம் வீடுகளுக்கு வரும்படி அழைத்தனர். ''வழியில் முட்களை எரியவிட்டு வைத்திருக்கிறார்கள்; வருவதற்கு வழியில்லை'' என்றார் ஸ்வாமி. நம்மிடமுள்ள கெட்ட குணங்களே பக்திமார்க்கத்திலுள்ள முட்களின்றீ என்பது ஸ்வாமியின் எண்ணம் போலும்!

மடபல்லி என்ற இடத்தில் ஸ்வாமி இருக்கும்போது நாகுல வெல்லடுரைச் சேர்ந்த குடியானவர்கள் சிலர் ஸ்வாமியைத் தரிசித்தனர். ''ஸ்வாமி, சோளம் பயிரிட்டிருக்கிறோம். இந்த ஆண்டு சோளம் நன்றாக விளையுமா?'' என்று கேட்டனர். ''ஒரு பயிருக்கு இரண்டு பேர் அல்லவா ஐயா'' என்றார் அவர். ஆனால் விளையும் அல்லது விளையாது என்பதுமட்டும் கூறவில்லை. ஸ்வாமி கூறியபடி ஒவ்வொரு சோளப் பயிருக்கும் இரண்டு புழுக்கள் ஏற்பட்டு எல்லோருடைய பயிரும் பாழாயிற்று.

ஸ்வாமி உன்மத்த நிலையில் இருந்தபோது ஒருநாள், தம் தாய்க்கு முகம் வீங்கி உடல்நிலை சரியில்லாததால் மங்கம்மாவைப் பார்க்க வேண்டும் என்று கூறியதாகச் சொல்லி மங்கம்மாவைத் தன்னோடு வரும்படி அழைத்தார். மங்கம்மா தன் மனதில் ''இந்தப் பைத்தியக் காரனோடு போனால் எங்கேயாவது நடுவில் விட்டு விட்டுப் போய் விடுவானோ'' என்று நினைத்தாள். உடனே ஸ்வாமி ''ஏனம்மா, உன்னை எங்கேயாவது நடுவில் விட்டுவிட்டுப் போவேனா என்ன? சரியான ஆளாக இருக்கிறாயே?'' என்றார்.

ஸ்வாமி தம் குழுவினரோடு சிட்டேபாளம் என்ற ஊரில் இருந்தார். அந்தச் சமயத்தில் கொலகமூடியில் இருந்த ஸ்வாமியின் பக்தர் கொர்ரகூடி புஜ்ஜையாவுக்கு உடல்நிலை சரியின்றிப் பத்திய உணவு சாப்பிடும்படி இருந்தது. ஸ்வாமியோடு போனால் பத்தியம் இருக்க முடியாது என்று அவர் போகவில்லை. ''எனக்கு நல்லவிதமாய் பொழுது போக எவரும் இல்லை. ஸ்வாமியின் சேவகரான ராமதாயுடு என்னுடன் இருந்தால் நல்ல விஷயங்களைக் கூறுவார். இந்தக் கிராமத்தில் எனக்கு அத்தகைய துணை எவரும் இல்லை'' என்று மனதில் ஸ்வாமியை நினைத்து வருத்தப்பட்டார். அதே சமயத்தில் ஸ்வாமி ராமதாயுடுவை கொலகமூடிக்குப் போகும்படி பணித்தார். எப்போதும் தன்னைத் தம்மருகிலேயே வைத்துக் கொள்ளும் ஸ்வாமி எதற்காகப் போகச் சொன்னாரென்று அப்போது அவருக்கு விளங்கவில்லை. அவர் உடனே வந்து புஜ்ஜையாவைச் சந்தித்தபின்னர், ஸ்வாமி தம்மை அனுப்பிய காரணம் புரிந்தது.

சோமசிலா என்ற இடத்தின் அருகிலுள்ள குன்றின்மீது ஸ்வாமி ஒரு சிறு குடிசை போட்டுக் கொண்டு, சின்ன எண்ணெய் விளக்கு ஒன்றைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு இரவு முழுவதும் தம்பூராவை மீட்டிக் கொண்டே இருப்பார். ஒருநாள் மாலை தமக்குச் சேவை செய்து வரும் சலமாநாயுடுவிடம் ''ஐயா, இரண்டு மனிதர்களுக்கு சரிப்போகும் படி அதிகமாக உணவு கொண்டு வா'' என்றார். ஸ்வாமியின் பக்தர் களிடம் இவ்விஷயத்தைக் கூறியவுடன் அவர்கள் வடை பாயசத்தோடு உணவு தயார் செய்து அனுப்பினார்கள். அன்றிரவு ஏழு மணிக்கு, வழி தெரியாமல் தட்டுத்தடுமாறிக் கொண்டு தலுப்பூரைச் சேர்ந்த பெம் மனாளி மஸ்தானையாவும் அவரது சிநேகிதரும் ஸ்வாமியின் தரிசனத்துக் காக வந்தனர். அவர்கள் அங்கு வருவதற்கு முன்பே ஸ்வாமி அவர்களுக்காக உணவு தயார் செய்ததே அதிசயம்.

ஒரு சமயம் தூபிலி பிச்சம்மா, ஸ்வாமியின் ஆசிரமத்தில் தன் சினேகிதிகளோடு சேர்ந்து பஜனை ஏற்பாடு செய்ய வேண்டுமென்று எண்ணினாள். எல்லா ஏற்பாடுகளும் செய்தாள். ஸ்வாமி ஆசிரமத்தில் இல்லை. எனவே அவருக்குக் கூறவில்லை. ஸ்வாமி வெகுதூரத்தில் மற்றொரு இடத்தில் இருந்தார். ''ஐயா, ஆசிரமத்தில் பஜனை மிக நன்றாக நடைபெறுகிறது. அங்கு போக வேண்டாமா? புறப்படுங்கள்'' என்று கூறி பஜனை நடக்கும் நாளன்று ஸ்வாமி தம் கூட்டத்தினருடன் புறப்பட்டு வந்து பஜனைக் குழுவினரை ஆசீர்வதித்தார்.

பெனுகொண்டாவைச் சேர்ந்த போலு மஸ்தானய்யா தம் அநுபவத்தை விவரிக்கிறார். ''ஆயிரம் ஆடுகளுக்கிடையில் இருந்தாலும் நமது ஆட்டைக் காலைப் பிடித்து இழுத்து வரமாட்டோமா? என்ற ஸ்வாமியின் வாக்கு என் விஷயத்தில் உண்மையாயிற்று. பரம நாஸ்திகனாக இருந்த எனக்குக் கடவுளிடம் நம்பிக்கை இல்லை; ஸ்வாமிகள் என்றாலே அருவருப்பு. 1981-ஆம் ஆண்டில் நான் வெளியூர் சென்றிருந்த சமயத்தில் இரண்டாயிரம் ரூபாய்கள் மதிப்புள்ள என் எருமை தீவிரமாக நோய்வாய்ப்பட்டது. மூன்று நாட்களாக வீட்டிலுள்ள பெண்மணிகள் தமக்குத் தெரிந்த வைத்தியமெல்லாம் செய்து பார்த்தனர். எருமை தீனி தின்னவில்லை, நீர் பருகவில்லை. ஊரிலிருந்த ஒரு மிருக வைத்தியரும் அந்தச் சமயத்தில் ஊரில் இல்லை. நான் வீட்டுக்குத் திரும்பிய சமயத்தில் எருமையின் நிலை கவலைக்கிடமாக இருக்கவே உணவு கூட உண்ணாமல் இரவு பத்து மணி அளவில் மனக்கலக்கத்தோடு படுத்தேன்''.

''இதற்குள் என் தம்பியின் எட்டுவயது மகன் வந்து 'வெங்கைய ஸ்வாமியின் விபூதியை எருமைக்குப் பூசுறேன், பெரியப்பா' என்றான். 'உனக்கு நம்பிக்கை இருந்தால் பூசிக்கொள், போ' என்று கூறிவிட்டுத் தூங்கிவிட்டேன். எருமைக்கு விபூதி பூசியபின் அவன் தூக்கத்தில் 'ஸ்வாமி வந்திருக்கிறார், ஸ்வாமி வந்திருக்கிறார்' என்று பிதற்றினானாம்.

சிறிது நேரத்தில் எருமை எழுந்து தினி தின்னத் தொடங்கியது. உடனே என் மனைவி என்னை எழுப்பி 'எருமையின் நிலை நன்றாக உள்ளது. எழுந்து சாப்பிடுங்கள்' என்று கூறி, சிறுவன் தூக்கத்தில் பிதற்றிய சங்கதி யையும் சொன்னாள்''.

''உடனே நடந்த விஷயம் என் மூளையில் உறைத்தது. எனது நாஸ்திக பாவம் மறைந்து உடனே ஸ்வாமியைத் தரிசிக்க வேண்டு மென்று விடியுமுன்பே மூன்று மைல்கள் நடந்து கொலகாமுடியை அடைந்து ஸ்வாமியைத் தரிசித்தேன். நான் எதுவும் சொல்லும் முன்பே ஸ்வாமி ''ஐயா, உன் எருமை நன்றாக இருக்கிறதில்லையா ஐயா'' என்றார். அந்த மொழிகளைக் கேட்டவுடன் எனக்கு ஸ்வாமியிடம் நம்பிக்கை ஏற்பட்டு அவரையே வழிபட்டு பல கஷ்டங்களிலிருந்து அவரால் காக்கப்பட்டு வருகிறேன்.''

கொத்தூரு பரிகெல நாகய்யா : இவர் தற்போது சமாதிமந்திரத்தில் பூஜை செய்து வருகிறார். இவர் தமது பதினெட்டாம் வயதில் கலுவாய் என்ற ஊருக்குத் துணிகள் வாங்குவதற்காக வந்தார். ''பத்வேலு குன்றின் மீது வெங்கையஸ்வாமி என்ற மஹான் வந்திருக்கிறார்'' என்று எவரோ மற்றொருவரிடம் கூறுவது அவர் செவிகளில் விழுந்தது. உடனே அவர் தாம் வந்த பணியை விட்டு விட்டு ஸ்வாமியைத் தரிசிக்கச் சென்றார். ஸ்வாமி அக்னிகுண்டத்தைத் தயாரித்துக் கொண்டிருந்தார். ஜயராமராஜு ஸ்வாமிக்கு சேவை செய்து கொண்டிருந்தார். ஸ்வாமி அவருக்கு மூன்று ஆசீர்வாதச் சீட்டுகள், மூன்று விரல்முத்திரைக் காகிதங்கள் மூன்று நூல்கள் கொடுத்துத் தம் துணியால் தாமே மந்திரித்து விட்டுப் போய் வரும்படிக் கூறினார். நாகய்யா அன்றிரவு ஸ்வாமியிடம் இருந்தால் நன்றாக இருக்கும் என்று மனதில் எண்ணியவுடன் ஸ்வாமி, ''நீ நினைத்தது பிறகு எப்போதாவது பார்க்கலாம் . இப்போது மட்டும் சீக்கிரமாக வீட்டுக்குப் போ'' என்று கட்டளையிட்டார். ''அங்கிருந்து பத்துகிலோமீட்டர் தூரத்திலிருந்த என் கிராமத்தை எப்படி வந்தடைந் தேனோ எனக்குத் தெரியவில்லை. நான் நிஜமான ஒரு மனோ நிலையில் இருந்தேன். இன்னொரு விசித்திரம் என்னவென்றால் நான் ஸ்வாமியிடம் இருந்து புறப்பட்டபோது மாலைப்பொழுது எப்படி யிருந்ததோ வீட்டை அடைந்தபோதும் அவ்வாறே இருந்தது! அதன் பின்னர் நான் கலிச்சேடு மைக்காச் சுரங்கத்தில் உத்தியோகம் செய்த போது ஸ்வாமியைப் பலமுறை தரிசித்தேன்''.

''ஒருநாள் எனக்கு ஸ்வாமியின் சேவையில் நிரந்தரமாக ஈடுபட வேண்டும் என்று தோன்றி அவரது அனுமதிக்காகப் போனேன். நான் இரண்டு ரூபாய்கள் தக்ஷிணை கொடுத்தபோது, 'வாக்கு வராது. மேலும் கொஞ்சம் தக்ஷிணை கொடுக்க வேண்டும்'' என்றார். நான் மூன்று

ரூபாய்கள் சமர்ப்பித்தபின் எனக்கு ஆசீர்வாதச்சீட்டு எழுதி அளித்தார். 'நான் உங்களுக்குச் சேவை செய்கிறேன்' என்று கேட்டபோது 'நீ ஆறு மாதங்கள் இப்போது செய்யும் உத்தியோகம் செய்தால் ஆறுகோடி, நூறு ரூபாய்கள் லாபம் வரும். அதன் பின்னர் என்னிடம் வரலாம்'' என்று கூறினார். அது முதல் நான் நடந்து போகும் போது சுற்றுத்தூரத்தில் ஸ்வாமி நடந்து போவதைப் போலவும் எங்கு அமர்ந்தாலும் படுத்துக் கொண்டாலும் ஸ்வாமி என்னுடன் வருவதைப் போலவும் எனக்குக் காட்சி ஏற்படத் தொடங்கியது. அதற்குமேல் நான் ஸ்வாமியின் பிரிவைப் பொறுக்க முடியாமல் மீண்டும் சென்று என்னை அவரது சேவையில் ஈடுபடுத்திக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டேன். முதலில் ஒரு வருடம் ஆகட்டும் என்றார். மீண்டும் நான் ''ஸ்வாமீ, நீங்கள் முன்பு ஆறு மாதங்கள் என்று கூறினீர்கள். இப்போது மூன்று மாதங்கள் கழிந்துவிட்டன. இனி நான் உங்களை விட்டு இருக்க முடியாது'' என்று கூறினேன். ''ஐயா நீ இன்னும் சில நாட்களில் அல்லது நாளை வந்தால் மிகவும் நல்லது'' என்றார். மறுநாள், எனது நண்பர்கள், அதிகாரிகள் மற்றுமுள்ளவர்கள் யாவரும் வேண்டாம் என்று மன்றாடினாலும் கேட்காமல் மைக்காச்சுரங்க வேலையை ராஜினாமா செய்துவிட்டு வந்து ஸ்வாமியின் சேவையில் ஈடுபட்டேன். அன்றுமுதல் மீண்டும் வீட்டுக்குத் திரும்ப வேண்டுமென்ற புத்தி ஏற்படாதவண்ணம் தம் சேவையில் ஈடுபடும்படி ஸ்வாமியே செய்தார்''.

மனிதர்களின் பிராரப்தகர்மங்கள் இரண்டு விதமானவை. சில வற்றைத் தவத்தினால் போக்கிக் கொள்ளமுடியும். மற்றும் சிலவை அநுபவித்தால் தான் தீரும். இந்தக் கர்மங்களைப் பற்றிய விஷயம் சத்குரு ஒருவருக்கே தெரியும். நாம் அறியாமையால் குருவானவர் நம் துன்பங்களை முழுமையாகத் தீர்க்கவில்லை என்று கூறுவோம். அவ்வாறு அநுபவித்துத்தான் தீர்க்கவேண்டிய தீவினைகளைக் கூட நிரந்தரமான பகவந்நாம ஸ்மரணையின்மூலம் குறைக்கலாம் என்று பெரியோர்கள் கூறுகிறார்கள். அதனால்தான் மஹான்கள் கண்டிப்பாக அநுபவித்தே தீரவேண்டிய தீவினைகளை மற்றொரு பிறவிக்கு என்று ஒத்திப் போடாமல் இந்தப் பிறவிமிலேயே அநுபவிப்பார்கள். இந்த விஷயத்தை ஸ்வாமியே தெளிவுபடுத்தினார்.

தாகூரிவாசியான கஸ்தூரி அங்கய்யா கூறியதாவது: ஸ்வாமிக்கு முழங்காலில் பிடிப்பு ஏற்பட்டு முழங்காலை மடக்க முடியவில்லை. எவ்வளவுபேர் மன்றாடினாலும் வைத்தியம் செய்து கொள்ளவில்லை. ''எந்த வைத்தியம் செய்தால் அவரது கால்கள் குணமடையுமோ அந்த வைத்தியத்தை ஸ்வாமியே நான் கேட்காமலேயே எனக்குக் கூற வேண்டும். அந்த வைத்தியத்தைச் செய்து ஸ்வாமியின் கால்களைக் குணப்படுத்திவிட்டு வரவேண்டும்'' என்று நினைத்துக் கொண்டு அந்தக்

காரியம் நிறைவேறும் வரை ஸ்வாமியின் சன்னிதியிலேயே இருக்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டு அங்கையா கொலக மூடிக்கு வந்தார். அன்று எல்லோரும் பஜனை செய்து கொண்டிருந்தபோது அவர் ஸ்வாமியின் எதிரில் அமர்ந்து கொண்டு மௌனமாகத் தம் கோரிக்கையை ஸ்மரித்தவாறே இருந்தார்.

எல்லாம் அறிபவரான ஸ்வாமி ''இவனுக்கெதற்கய்யா? எண்ணிக்கை குறைகிறது. அங்கே போய் பஜனையில் உட்கார்ந்து கொள்ளாமல்?'' என்றார். உடனே அங்கய்யா பஜனைக்குப் போய் வந்து மீண்டும் இரவு இரண்டரை மணி அளவில் ஸ்வாமியின் எதிரில் அமர்ந்து கொண்டார். மீண்டும் தமது கோரிக்கையையே மனதில் நினைத்தவாறு இருந்தார். ''அப்படிக் கேட்கக்கூடாது ஐயா'' என்றார் ஸ்வாமி. அங்கையா ''அது முடியாது; கூறவேண்டியதுதான்'' என்ற எண்ணத்தைத் தெரிவிப்பதுபோல் தலையாட்டினார். உடனே ஸ்வாமி உச்சஸ்தாயியில் ''அப்படியானால் மறுபடியும் வரவேண்டும் ஐயா! தப்பு, அப்படிக் கேட்கக் கூடாது'' என்றார்.

இந்துக்கூருபேட்டையிலுள்ள ஆத்மகூர் வெங்கையாவின் வீட்டிற்கு ஒரு சமயம் ஸ்வாமி சென்றார். வெங்கையாவின் கம்பீரமாகத் தோற்றமளிக்கும் காளையைப் பார்த்து 'இதற்குக் கால் கண்டம் உள்ளது' என்றார். ஆனால் அதற்கு நிவாரணம் எதுவும் கூறவில்லை. சில நாட்களுக்குப் பிறகு சீரான ரோட்டில் வண்டியை இழுக்கும்போதே எருதின் காலில் 'கடக்' என்ற சப்தம் ஏற்பட்டது. எருது நொண்ட ஆரம்பித்தது. எவ்வளவு வைத்தியம் செய்தாலும் குணமடையவில்லை. சிறிது காலத்துக்குப் பின் அதை விற்றுவிட்டார்கள்.

சோமசிலா ப்ராஜெக்ட்டுக்கு அஸ்திவாரம் போடுவதற்குப் பத்து ஆண்டுகள் முன்பே அதன் அருகில் கட்டப்படவிருக்கும் தேவாலயத்தின் நிர்மாணத்தைப் பற்றி ஸ்வாமி கூறினார். ஒரு நாள் ஸ்வாமி எங்கோ தனியாகப் போய்வந்தபோது ''எங்கு போயிருந்தீர்கள் ஸ்வாமி?' என்று கேட்டதற்கு ''அங்கு ஒரு தேவஸ்தானம் கட்டப் போகிறார்கள். அதற்கு அடையாளக்குறி போட்டுவிட்டு வந்தேன்'' என்று ஒரு இடத்தைக் காட்டினார். அதுதான் இன்று சோமசிலா ப்ராஜெக்ட் அருகில் கட்டப்பட்ட பெஞ்சலஸ்வாமி ஆலயம்.

கோபாரம் பாலகொண்ட சுப்பாரெட்டியிடம் ஸ்வாமி ஒருநாள் ''ஐயா, சமுத்திரம் புரண்டு வருகிறது. நீ இங்கு இருக்கக்கூடாது, உடனே வீட்டுக்குப் போய்விடு'' என்றார். அவர் அவ்வாறே ஸ்வாமியின் ஆக்ஞையின்படி வீட்டுக்குப் போனார். வீட்டை விட்டு நீண்டகாலமாக ஸ்வாமியின் சேவையில் இருக்கிறாரென்று வீட்டிலுள்ளவர்கள் மிகக் கோபமடைந்து சுப்பாரெட்டியை அழைத்துச் செல்ல வேண்டும் என்று

அவரது அண்ணன்மார்கள் வருகிறார்களென்று மாலையில் தெரிந்தது. ஆனால் வழியில் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்ளவில்லை. சம்சாரசாகரமே மிகவும் அபாயமான சமுத்திரம் என்பதும் சாதாரண மான சமுத்திரம் உண்மையில் பாவத்தைப் போக்கக் கூடியதே என்பதும் அவரது கருத்து.

ஒருநாள் கொமரகிரி ரமணய்யாவும், சுப்பாரெட்டியும், குண்டத்துக்கு விறகு வெட்டுவதற்காகப் போனார்கள். இரவு வேளை யாதலால் லாந்தர் எடுத்துக் கொண்டு போகும்படி மூன்று நான்குமுறை மீண்டும் மீண்டும் கூறினார் ஸ்வாமி. ஸ்வாமி கூறினாரே என்று லாந்தர் எடுத்துக் கொண்டு போனார்கள். ஒரு மரத்தினடியில் பெரிய நாகப் பாம்பு ஒன்று சுருண்டு படுத்துக் கொண்டிருந்தது. லாந்தரின் வெளிச்சத்தைப் பார்த்து அது மரத்துக்குள் போயிற்று. ஸ்வாமி நம்மிடம் கருணை காட்டிக் காப்பாற்ற வேண்டுமென்று பார்த்தாலும் நமக்கு அவரது சொற்களில் நம்பிக்கை இல்லாதபோது, அவரது ஆக்ஞைப் பிரகாரம் சிறிது கூட பிசகாமல் நடந்து கொள்ள முடியாதபோது நமக்கு வரவிருக்கும் ஆபத்துக்களை நாம் தவிர்க்க முடியாது. ஸத்குரு ஒருபோதும் வீண் பேச்சுப் பேசமாட்டார் என்றும், எந்தக் காரணமும் இல்லாமல் நமக்கு எதுவும் கூறமாட்டார் என்பதையும் நினைவில் கொண்டு அவர் கூறியபடியே செய்யும் பக்தர்கள் மிகவும் நன்மையை அடைவார்கள். ஸத்குருசேவையில் விருப்பு வெறுப்புக்களை விட்டு விடுவதே உண்மையான தியாகமும் சாதனையும் ஆகும்.

சலமாநாயுடு என்ற பக்தரிடம் ஒருமுறை ஸ்வாமி ''ஐயா, எங்கும் போகாமல் என் அருகிலேயே இரு'' என்றார். ஆனால் அவர் ஸ்வாமியின் சொற்களைச் சட்டை செய்யாமல் வழக்கப்படி தன் சிநேகிதனின் வீட்டுக்குச் சென்றார். நல்ல குடிபோதையில் இருந்த சிநேகிதன் அவரது கன்னத்தில் பலமாக ஒரு அறை வைத்தபோது சலமாநாயுடு கீழே விழுந்து இரண்டு பற்கள் விழுந்துவிட்டன. கழுத்தும் வீங்கியது. ஸ்வாமி கூறிய சொற்களிலுள்ள ஆழம் அப்போது அவருக்கு விளங்கியது.

திருப்பதியில் வசிக்கும் பண்டி வெங்கட முனிரெட்டியார் நியமம் தவறாமல் பௌர்ணமிதோறும் நாராயண வனத்துக்குப் போய் சுரைக்காய் சுவாமியைத் தரிசிப்பார். ''சுவாமி, உடலோடு இருக்கும் போது உம்மைத் தரிசிக்க முடியாமல் போனேன். உங்களைப் போன்ற உடலோடு உள்ள மஹாத்மாக்களின் தரிசனத்தை அருள வேண்டும்'' என்று அடிக்கடி பிரார்த்திப்பார்.

இவர் ஒரு முறை வேலை விஷயமாக இலுகுர்த்திக்கு வந்தபோது ஸ்வாமியைக் குறித்துக் கேள்விப்பட்டு மறுநாளே கொலகமூடிக்கு வந்து ஸ்வாமியை தரிசித்தார். அந்த முதல் தரிசனத்தின் போது ஸ்வாமி

அவருக்கு ஒரு சீட்டு எழுதிக் கொடுத்தார். அதில் ''இருபத்தொன்றாவது நாள் சண்டை நடக்கும். அதனால் உனக்கொன்றும் ஆகாது'' என்று எழுதுவித்தார். உண்மையாகவே இருபத்தொன்றாம் நாள் விளை நிலத்தில் சண்டை ஏற்பட்டு கொலைகள் கூட விழுமளவுக்கு நிலைமை மோசமாயிற்று. ஆனால் ஸ்வாமியின் அருளால் ரெட்டியாருக்கு மிகவும் பொறுமை ஏற்பட்டுத் தன்னைப் பிறர் எவ்வளவு திட்டினாலும் பதிலே பேசவில்லை. ஸ்வாமி கூறியபடியே நிகழ்ந்ததால் அவருக்கு ஸ்வாமியின் மேல் பக்தி இடமாகி மிகவும் சிரத்தையோடு அடிக்கடி திருப்பதியிலிருந்து வந்து ஸ்வாமியின் சமாதியைத் தரிசித்துப் போவார்.

''ஸ்வாமி, வெங்கடமுனிரெட்டியார் நம் அனைவருக்கும் புதுத்துணிகள் கொண்டுவந்திருக்கிறார்'' என்று சேவகர்கள் கூற'' ஐயா அவருக்கு எவ்வளவோ கஷ்டங்கள் தீர்ந்துவிடும் அல்லவா'' என்றார் ஸ்வாமி.

ஸங்கம் கிராமவாசியான பல்லம்ரெட்டி கிருஷ்ணாரெட்டி ஒரு முறை நெல் சாகுபடி செய்தார். நன்றாகப் பயிர் விளைந்து வந்தது. ஆனால் நன்றாகப் பால் பிடிக்கும் தருணத்தில் நீர் பற்றாமல் எல்லாம் பதராகப் போய் விட்டன. நன்றாக விளைந்திருந்தால் 600 மூட்டைகள் ஆகவேண்டியது இப்போது 40 மூட்டைகள் தான் ஆகும் என்று கணக்கிட்டார். குறைந்தது 200 மூட்டைகள் ஆனால் தவிரச் செலவுக்கே சரிப்போகாது. எனவே 200 மூட்டைகள் விளைந்தால் ஸ்வாமிக்கு 100 ரூபாய்கள் சமர்ப்பித்துக் கொள்வதாக வேண்டிக்கொண்டார். பாதி நிலத்தில் அறுவடை செய்து அவற்றைக் குவியலாகச் செய்து அதன்மீது கட்டில் போட்டுப் படுத்துக் கொண்டார். பெரும் மழை வரப்போவது போல் காற்றடித்தது. அந்தக்காற்றுக்கு ரெட்டியார் கட்டிலோடு விழுந்துவிட்டார். ஆனால் ஸ்வாமியின் அருளால் மழை வரவில்லை. அவர் வேண்டிக்கொண்டபடி 200 மூட்டைகள் நெல் விளைந்தது. நூறுரூபாய்கள் எடுத்துக்கொண்டு ஸ்வாமியின் தரிசனத்துக்காக வந்தார். அவரது பிரயாணத்துக்காக முப்பது ரூபாய்கள் செலவழிந்து விடவே, 70 ரூபாய்கள் மட்டுமே ஸ்வாமிக்குச் சமர்ப்பிக்க எண்ணி, யாரிடமும் கூறாமல் அந்தப் பணத்தை ஸ்வாமியின் பாய்க்கடியில் வைத்தார். ''தான் நினைத்தபடி கொடுக்கவில்லை. இன்னும் 30 ரூபாய்கள் கொடுக்க வேண்டும். இதுவும் வேண்டாம். எடுத்துக்கொள்ளச் சொல்லு'' என்றார் ஸ்வாமி. ஸ்வாமியின் அருகிலுள்ள ஒருவர் ''செலவுக்கு இல்லையாம். பிறகு கொடுப்பார் ஸ்வாமி'' என்றபோது ''அவர் கொடுக்கமாட்டார். அந்த பாக்கியை நீ ஏற்றுக்கொள்'' என்றார் ஸ்வாமி. அவர் அதற்குச் சம்மதித்த பிறகு ஸ்வாமி எழுபது ரூபாய்களை ஏற்றுக்கொண்டார். ஆனால் ஸ்வாமி கூறியபடியே கிருஷ்ணாரெட்டியாவது அவரது சிநேகிதராவது ஸ்வாமிக்கு அந்த பாக்கி முப்பது ரூபாய்களைச் செலுத்தவே இல்லை.

தற்போது கலிச்சேடில் உபாத்தியாயராக இருக்கும் அத்புத நீலகண்ட ராஜு என்பவரின் மனைவி நாகபாஸுராதேவி கூறியதாவது: நீலகண்டராஜு சிராலாவிலும் அவரது மனைவி கலிச்சேடிலும் உத்தி யோகம் செய்து வந்தனர். ராஜுவுக்கு கலிச்சேடிலேயே உத்தியோகம் கிடைத்தால் இருவரும் ஒரே இடத்தில் இருக்கலாமே என்று ஸ்வாமியைக் கேட்டனர். மூன்று மாதங்களுக்குள் கலிச்சேடில் உத்தி யோகம் வரும் என்றார் ஸ்வாமி. கலிச்சேடில் அதே உத்தி யோகத்திலிருந்த P. E. T. ஸாப்ஜானுக்கு அங்கிருந்து வேறு இடத்துக்கு மாற்றல் ஆகவேண்டும் என்ற எண்ணமே இல்லாததால் ராஜுவுக்குக் கலிச்சேடில் உத்தியோகம் வராது என்றே நினைத்தனர். ஆனால் சில காரணங்களால் ஸாப்ஜான் ராஜினாமா செய்ததால் அந்த இடத்தில் ராஜுவுக்கு உத்தியோகம் கிடைத்தது. இவர்களின் குழந்தை பத்ம ஜாவுக்கு வலிப்புநோய் அடிக்கடி வரும். ஸ்வாமியைக் கேட்டபோது ஒன்பதாவது வயதில் நோய் நீங்கும் என்றார். அவ்வாறே நிகழ்ந்தது.

பொங்கூர் வாசி பி. தசரதராமய்யா தாம் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் காலத்திலிருந்தே ஸ்வாமியைத் தரிசித்து வந்தார். அப்போது ஸ்வாமி அவரை "சப்-இன்ஸ்பெக்டர் ஆவாய்" என்று ஆசீர்வதித்தார். அதன்படியே சிறுகாலத்தில் இவர் இந்தியப்படையில் சேர்ந்து காஷ்மீரில் காக்கி உடைகளுடன் பணிபுரிந்தார்.

ஒருமுறை நெல்லூர் தாசில்தார் கொலகமூடிக்கு வந்து "ஸ்வாமி! நீங்கள் மஹான் என்று எல்லாரும் கூறுகிறார்கள். எனக்கு உங்கள் மஹிமையைக் காட்டும் படியான அனுபவம் ஏதாவது அளிக்க வேண்டும்" என்று வேண்டிக்கொண்டே இருந்தார். நீண்டநேரம் மௌன மாக இருந்த ஸ்வாமி இறுதியில் "இவருக்கு இன்று பகல் உணவு கிடைக்காது" என்று எழுதிக்கொடுக்கச் சொன்னார். எல்லோரும் தாசில்தாருக்கு உணவுகிடைக்காமல் போகுமா என்ன? என்று எண்ணி னார்கள். அவர் வீட்டை அடைந்தபோது அவர் மனைவிக்கு வயிற்று வலி ஏற்பட்டு ஆஸ்பத்திரிக்குப் போயிருக்கிறாள் என்பதும், கதவு பூட்டப்பட்டிருப்பதும் தெரிந்தது. அவள் எந்த ஆஸ்பத்திரிக்குப் போனாள் என்பது தெரியாமல் மத்தியானம் மூன்று மணி வரை அவர் தேடிக்கொண்டே இருந்தார். அப்போது சாப்பாடு கிடைக்காமல் டிபன் தின்று டீ குடிக்க வேண்டி வந்தது. மறுநாள் அந்தத் தாசில்தார் வந்து ஸ்ரீஸ்வாமியின் மஹிமை தனக்கு நன்றாக அனுபவம் ஆயிற்றென்று கூறிச் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தார்.

ஒரு நாள் ஒரு தம்பதிகள் வந்து தேங்காய் உடைத்து ஸ்வாமியின் குண்டத்தில் சமர்ப்பித்துவிட்டுப் போனார்கள். பின்னர் ஸ்வாமி "ஐயா, அந்தத் தேங்காய் மூடிகளைக் குண்டத்திலிருந்து எடுத்து எறிந்து

விடுங்கள். அவற்றை நாய்கள் கூடத் தின்னாது'' என்றார். அவ்வாறே சேவகர்கள் அதனை எடுத்துப் போட்டார்கள். ஸ்வாமி கூறியபடியே அந்தத் தேங்காய் மூடிகளை நாய்கள் கூடத் தொடவில்லை.

ஸ்வாமியிடம் முழுமையான நம்பிக்கை ஏற்பட்டு அவரைத் தினமும் பக்தியோடு நினைப்பவர்கள் தம் கஷ்டங்களைக் குறித்து அவருக்குச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. அந்த சர்வக்ஞருக்குத் தெரியாதது என்ன இருக்கிறது? தேவையானபோது தம் குழந்தைகளுக்கு என்ன செய்ய வேண்டுமோ அவருக்குத் தெரியும். நாம் கேட்காமலேயே அவர் நமது கஷ்டங்கள் நிருவதற்கு ஏற்ற வழிகளைக் கூறி அவற்றை நீக்கிய சந்தர்ப்பங்கள் எண்ணற்றவை.

உதாரணமாக ஒருமுறை ஸ்வாமி ஸ்ரீராமய்யாவுக்குக் கடிதம் எழுதுவித்தார். அதில் ஆவுல லக்ஷ்மீநரசு வீட்டின் எதிரிலுள்ள ஸ்ரீராமய்யாவின் வீட்டின் முன்புறத்திலுள்ள கல்லறைகளைத் தோண்டி நீக்கவேண்டும் என்று எழுதுவித்தார். அவர்கள் அங்கே வெட்டிப் பார்த்தபோது உண்மையாகவே எலும்புகளும் கரியும் நிறைய இருந்தன. அவற்றை எல்லாம் வெட்டி எடுத்து எறிந்தபின் அவர்கள் வீட்டில் அதுவரை இருந்து வந்த நோய்தொடிகள், மனத்தாங்கல்கள் முதலிய துன்பங்கள் தொலைந்து மனச்சாந்தி ஏற்பட்டது.

பக்தர்களைக் காப்பாற்றுவதையே தம் முக்கிய கடமையாகக் கருதிய ஸ்வாமி நித்திரையின்றி இரவும் பகலும் ஏமாறாமல் பக்தர் களைக் காத்து வருகிறார். நமக்கு வரப்போகும் கஷ்டங்களைத் தவிர்ப் பதற்கு வழிகாட்டுவதோடு அவற்றை நாம் செய்யும்படி மீண்டும் மீண்டும் பெற்ற தாயினும் சாலப்பரிந்து அன்போடு எச்சரித்துக் கொண்டே இருப்பார். பக்தர்கள் அவற்றைச் செய்வதில் தடைகள் ஏற்பட்டால் மீண்டும் அவரே அவற்றைத் தீர்க்க உதவுவார்.

உதாரணமாக இனுகுர்த்திவாசியான காரி ராமஸ்வாமிக்கு மூக்கிலும், வாயிலும் ரத்தம் வந்து கொண்டிருந்தது. மருத்துவர்களால் குணப்படுத்த முடியவில்லை. ஸ்வாமியிடம் வந்தார். ''நாளை அல்லது மறுநாள் போய் விடும். நாற்பத்துநாலு நாட்களில் கண்டம் உள்ளது. அதுவும் போய்விடும். எழுபத்திரண்டு ஆண்டுகள் இரண்டு மாதங்கள் ஆயுள். திருப்பதி, காஞ்சி, திருவள்ளூருக்குப் போய் ஒவ்வொரு இடத்திலும் ஸ்நானம் செய்து, தேங்காய் உடைத்து, நித்திரை செய்து விட்டு வரவேண்டும்'' என்று ஸ்வாமி சீட்டு எழுதுவித்துக் கொடுத்தார். ஸ்வாமி கூறியபடியே இரண்டாம் நாள் வாயிலிருந்து ரத்தம் வருவது நின்றுவிட்டது. பின்னர் அடிக்கடி ஸ்வாமியைத் தரிசித்துக் கொள்வார். ஆனால் திருப்பதி, காஞ்சி மற்றும் திருவள்ளூருக்கு யாத்திரை போக

மறந்துவிட்டார். ஸ்வாமி தலுப்பூரில் இருக்கும்போது அவரைத் தரிசித்தார். ஸ்வாமி, பணமில்லாவிடில் எவரிடமிருந்தாவது கடன் வாங்கிக் கொண்டாவது உடனடியாக யாத்திரை செய்யச் சொன்னார். அவ்வாறே கடன் வாங்கிக் கொண்டு, வீட்டுக்குச் செல்லாமலே யாத்திரைக்குப் புறப்பட்டார். திரும்பிய பிறகு கசூர் மஸ்தானய்யா தர்காவைத் தரிசிக்கச் சென்றார். தர்காவின் பின்புறமுள்ள படிக்கட்டருகில் திடீரென்று பெரிய நாகப்பாம்பு ஒன்று எதிர்ப்பட்டது. பயத்தால் கண்ணைமூடிக் கொண்டு ஸ்வாமியைப் பிரார்த்தித்தார். கண்களைத் திறந்தபோது பாம்பு போய்விட்டிருந்தது. மறுநாள் ஸ்வாமியிடம் வந்து நமஸ்காரம் செய்த உடனே ஸ்வாமி ''நேற்றோடு நாற்பத்து நாலாவது நாள் கண்டம் நீங்கிவிட்டது அல்லவா'' என்றார். இவ்வாறு தம் அன்பை பக்தர்கள் உணரும்படிச் செய்து அவர்களது பக்தியையும் நம்பிக்கையையும் வளரும்படிச் செய்வார்.

ஒருநாள் நெல்லூரியிலிருந்த ஸ்வாமி ''நரஸிம்ம கொண்டக்குப் போகவேண்டும்; பஸ் ஏறுங்கள்'' என்று தம் சேவகர்களுக்குக் கூறினார். பஸ் செலவுக்குக் கையில் பைசா கூட இல்லையென்று ஸ்வாமிக்குக் கூற ''முதலில் நீங்கள் ஏறுங்கள்; பணம் வரும்'' என்றார். சந்தேகத்துடனே அவர்கள் பஸ் ஏறி அமர்ந்தனர். பஸ் நகரத் தொடங்கும்போது, சைக்கிள் மீது அந்த வழியாகப் போய்க் கொண்டிருந்த வெங்கட்ராவ், அவர்களைப் பஸ்ஸில் பார்த்து, வந்து பேசியபிறகு ஐம்பது ரூபாய்கள் அளித்துவிட்டுப் போனார்.

மேப்பூர் தசய்யாவின் வீட்டுக்கும் பக்கத்து வீட்டுக்கும் நடுவிலிருந்த கற்றுச் சுவர் இடிந்து விழுந்துவிட்டது. பின்னர் சரியான எல்லை தெரியாமல் இருவருக்குமிடையே சச்சரவு ஏற்பட்டது. இருவரும் ஸ்வாமியிடம் சென்று தங்களிருவருக்கும் நடுவில் எல்லை எதுவோ கூறும்படிக் கேட்டுக் கொண்டனர். ஸ்வாமி ''அடேடே, முருங்கை மரத்துக்கும் பாகற்காய்ச் செடிக்குமிடையே போராட்டம் ஏற்பட்டதே'' என்றார். அந்தச் சொற்களின் பொருள் எவருக்கும் விளங்க வில்லை. ஸ்வாமி, நிலத்தின் மீது ஓரிடத்தில் தம் கால்களால் கோடுபோட்டு ''இதுவே உங்களிருவருக்கும் எல்லைக்கோடு, நீ அந்தப்புறமும் அவர் இந்தப் பக்கமும் இருங்கள்'' என்று ஆணையிட்டார். சரியாக முன்பு கற்றுச்சுவர் இருந்த இடத்திலேயே ஸ்வாமி கால்களால் கோடுபோட்டது எல்லோரையும் ஆச்சரியப்படுத்தியது. தவிர, ஒருவரின் புறக்கடையில் பாகற்காய்ச் செடியும், மற்றவரின் புறக்கடையில் முருங்கை மரமும் இருந்தன. அதனையே ஸ்வாமி முருங்கை மரத்துக்கும், பாகற்காய்ச் செடிக்கும் சண்டை என்று கூறினார்.

ஒருநாள் ஸ்வாமி கோடூர் வெங்கம்மாவின் வீட்டில் தங்கியிருந்தார். எல்லோரும் உணவு உண்டபின் ஸ்வாமி உண்பது வழக்கம்.

அன்றும் அவ்வாறே ஸ்வாமியை உணவு கொள்ள வரும்படி அவள் வேண்டிக் கொண்டாள். ''நாற்பது பேர் சாப்பிட வரப்போகிறார்கள். ஏன் இந்தப் பைத்தியக்காரி இப்படி நின்று கொண்டிருக்கிறாள்? போம்மா பைத்தியமே; சாப்பாட்டுக்கு ஏற்பாடுகளைப் பார்'' எனறார் ஸ்வாமி. பத்து நிமிடங்களில் உண்மையாகவே நாற்பது பேர் வந்தனர். உடனுக்குடன் சமையல் செய்து அவர்களுக்குப் பரிமாறினர்.

மஹான்கள் ஒருபோதும் எவரையும் 'இப்படிச் செய்' என்று கூறி பலவந்தம் செய்யமாட்டார்கள். மிகவும் நுட்பமாகக் குறிப்பிடுவார்கள். அவ்வாறு அவர்கள் கூறியபடி நாம் செய்தால் நமக்கு எவ்வளவோ நன்மை உண்டாகும். இல்லையேல் மிகவும் துன்பப்பட வேண்டிவரும் என்பதைக் கீழ்வரும் நிகழ்ச்சி நிரூபிக்கிறது.

ஒருமுறை ஸ்வாமியின் சேவகர்கள் மஹிமலூரில் உள்ள ஒருவரிடமிருந்து சாதம் வடிப்பதற்காக ஒரு சின்னப் பாத்திரத்தை வாங்கி வந்தார்கள். மாலையில் அதைக் கொடுப்பதற்காக, மூன்றுமைல் தூரத்திலுள்ள அந்தக் கிராமத்துக்கு ஜயராமராஜு புறப்பட்டார். ஸ்வாமி, ''இப்போது வேண்டாம், நாளை காலையில் போ'' என்றார். 'இருட்டும் நேரம் ஆகிவிட்டது என்று ஸ்வாமி கூறுகிறார் போலும்; நான் விரைவாகச் சென்று வந்துவிடுவேன்' என்று எண்ணிப் புறப்பட்டார் ஜயராம ராஜு. வழியில் ஒரு நாகப்பாம்பு வாலின்மீது நின்று படமெடுத்துப் புஸ்ஸென்று சீறி அவரைத் தடுத்தது. ஒன்றரை மணிநேரம் அவர் எங்கு போனாலும் அங்கு வந்தது; அவர் நின்றால் அதுவும் நின்றது. இறுதியில் அவர் கழிவிரக்கப்பட்டு ''ஸ்வாமி, உங்கள் சொற்களைக் கேட்காமல் வந்ததற்கு எனக்கு உயிருக்கு ஆபத்து ஏற்பட்டது'' என்று கன்னத்தில் போட்டுக் கொண்டு குருவைப் பிரார்த்தித்தார். உடனே அந்தப் பாம்பு படத்தைச் சுருட்டிக் கொண்டு செடிகளுக்கிடையில் சென்று மறைந்தது.

பாலகொண்ட கப்பாரெட்டி தினமும் குளிப்பதற்காக ஸ்வாமியை அருகிலுள்ள நதிக்கு அழைத்துச் செல்வார். தினந்தோறும் வரும்வழியில் குடியானவர்கள் உபயோகப்படாமல் வீசியெறிந்துள்ள எள்ளுப் பயிர்க் குப்பையைக் கட்டு கட்டிக் கொண்டு எடுத்து வரச் சொல்வார் ஸ்வாமி. சிலநாட்களில் அவ்விடத்திலுள்ள குப்பையெல்லாம் காலி ஆகிவிட்டது. வெங்கம்மாவின் வீடு முழுவதும் குப்பைக் கட்டுகளால் நிரம்பி விட்டது. 'இந்தக் குப்பை எல்லாம் எதற்கு ஸ்வாமி?' என்றால் 'ஐயா, ஒரு மாதத்தில் மழை பெய்யப் போகிறது அல்லவா!' என்றார் ஸ்வாமி. அவ்வாறே ஒரு மாதத்தில் இடைவிடாது மழை பெய்ய ஆரம்பித்தது. பூமியில் மரக்கட்டைகளைப் போட்டு அவற்றின் மேல் குப்பையைப் போட்டு அதையே தமது அக்னி ஹோத்திரமாக எரித்தார் ஸ்வாமி. மழைநீர் அதனடியில் ஓடிக் கொண்டிருக்கும். மேலே மறைப்பு வைத்ததால் நீ அணையாமலிருக்கும்.

எவ்வளவோ பக்தர்கள் ஸ்வாமியை நாடி வந்து அவருக்கு சேவை செய்து கொண்டு அவரது லீலைகளைக் கேட்டு பக்தியும், நம்பிக்கையும் நிரம்பப் பெற்றவர்களாய் ஆனந்தித்த காலம் அது. அமெரிக்க விஞ்ஞானிகள் விண்வெளிக்கப்பலில் சென்று சந்திரமண்டலத்தில் இறங்கிவிட்டு வந்தார்கள். உலகம் முழுதும் அதை மிகப் பெரிய சாதனையாகக் கருதியது. அப்போது நூதேடி ஆதய்யா என்ற பக்தர் ''மனிதர்கள் சந்திரமண்டலத்துக்குப் போய் வந்தார்கள்'' என்று ஆச்சரியத்தோடு ஸ்வாமியிடம் கூறினார். அவர் ''அது என்ன ஐயா, ஒரு பாலம் அளவு கூட இல்லை'' என்றார். தூரத்திலும் அளவிலும் பிரபஞ்சத்திலுள்ள இதர கிரகங்களோடும் நக்ஷத்திரக் கூட்டங்களோடும் ஒப்பிட்டால் உண்மையில் சந்திரமண்டலம் மிகவும் சிறியதே. எனவே ஸ்வாமி அவ்வாறு கூறியதில் ஆச்சரியமென்ன உள்ளது?

ஒருநாள் கௌனி பெஞ்சலம்மா ஸ்வாமிக்கு வெற்றிலை பாக்கு அர்ப்பணித்தாள். அங்கே உள்ளவர்கள் 'இப்போது வேண்டாம்' என்று அதனைத் தள்ளி வைத்துவிட்டார்கள். அவள் மனதில் வருத்தத்தோடு தூரமாக ஒரு இடத்தில் போய்ப் படுத்துவிட்டாள். அவளது அன்பை உணர்ந்த ஸ்வாமி வெற்றிலைபாக்குக் கொண்டு வந்து தரும்படி மீண்டும் மீண்டும் அவளைக் காட்டினார். சேவகர்கள் அவளை அணுகி, 'ஸ்வாமி, உன்னிடமிருந்து வெற்றிலை பாக்குக் கேட்டு வாங்கிவரச் சொன்னார்' என்று கூறி எடுத்துச் சென்றனர். அதை அறிந்த அனைவரும் ஆச்சரியப்பட்டனர்.

ஒரு முறை சேவகர்கள் உப்புமா செய்து ஸ்வாமிக்குப் பரிமாறினர். ஸ்வாமி கொஞ்சமே தின்று மிகுதியைத் தொடர்ந்து நான்கு நாட்கள் நாய்க்குப் போடும்படி மல்லிக் வெங்கையா என்ற பக்தரிடம் கொடுத்தார். ஆனால் ஸ்வாமியின் பிரசாதம் கிடைத்ததே பெரிதென்று, வெங்கையா, நாய்க்குப் போடாமல், மறைவாகப் போய்த் தானே முழுவதும் தின்றுவிட்டார். தவிர, ஸ்வாமி அந்த விஷயத்தைத் தெரிந்து கொள்ளவில்லை என்றும் தன்னைத் தடுக்கவில்லை என்றும் எண்ணி மகிழ்ந்து போனார். ஐந்தாம் நாள் ஸ்வாமி ''நாயை மிஞ்சின இரண்டு கால் நாயொன்று திருட்டுத்தனமாகத் தின்கிறது'' என்று கூறியவாறே வெங்கையாவின் கைகளில் கொடுக்காமல் உப்புமாவை குண்டத்தில் போட்டார். வெங்கையா ஏமாற்றமடைந்து கன்னத்தில் போட்டுக் கொண்டார்.

பாலகொண்ட சுப்பாரெட்டி மடபல்லியில் காளை வாங்கிக் கொண்டு வரும்போது வழியில் அது மிரண்டு தப்பித்துக் கொண்டு போயிற்று. இருபத்தைந்து நாட்கள் தேடினாலும் கிடைக்கவில்லை. இறுதியில் அவர் ஸ்வாமியைத் தரிசித்து அதைக் குறித்துக் கேட்டபோது ''தேட வேண்டாம். தானே வரும்'' என்றார். அவ்வாறே அவர்

வீட்டுக்குப் போனபோது அவரது ஆட்கள் எருது எங்கே இருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டு ஒட்டிக்கொண்டு வந்திருந்தனர். ஸ்ரீ சாயியின் சரித்திரத்தில் கூட இவ்வாறே சாந்த் பாடீல் எவ்வளவு தேடினாலும் கிடைக்காத அவரது குதிரையின் இருப்பிடத்தை சாயி வெகு எளிதாகத் தெரியப்படுத்தினார்.

ஒரு முறை ஸ்வாமி பாலகொண்ட சுப்பாரெட்டிக்கு சொந்தமாக பூமி கிடைக்கும் என்று சீட்டு எழுதுவித்தார். சில நாட்களுக்குப் பிறகு ரெட்டியாருக்கு அரசாங்க நிலத்தில் பட்டா கொடுத்தார்கள். ஆனால் ஒரு சந்திற்பட்டம் காரணமாக கர்ணம் அதை ரத்து செய்துவிட்டார். ஆனால் இறுதியில் ரெட்டியாருக்குப் பட்டா கிடைத்தது. கர்ணத்துக்கு உத்தியோகம் போயிற்று. ஸ்வாமியின் சொற்கள் உண்மையாயின.

1978-79-ஆம் ஆண்டு காலகட்டத்தில் ஸ்வாமி தலுப்பூரில் தங்கி இருந்தார். நெல்லூரிலுள்ள தொட்ல சுப்பாரெட்டிக்கு நெருங்கிய உறவினரின் ஐந்து வயதுக் குழந்தை வாயிலிருந்து ரத்தத்தைக் கக்கிக் கொண்டு துன்பப்பட்டுக் கொண்டிருந்தது. எவ்வளவோ டாக்டர்கள் அந்த வியாதியைக் குணப்படுத்த முயன்று தோல்வியுற்றனர். இறுதியில் ஸ்வாமியின் மஹிமையைப் பற்றிக் கேள்வியுற்றுக் குழந்தையை அவரிடம் கொண்டு வந்தனர். குழந்தையின் கழுத்திலிருந்து பாதங்கள் வரை மெதுவாகப் பிடித்துவிடுவதுபோல் ஸ்வாமி தடவினார். குழந்தைக்குப் பரிபூரணமாள குணம் ஏற்பட்டது. அதனால் அவர்கள் அடுத்த வாரம் இருநூற்றைம்பது ரூபாய்கள் ஸ்வாமிக்குத் தக்ஷிணையாக சமர்ப்பிக்கப் போயினர். எவ்வளவு நேரம் வேண்டினாலும் ஸ்வாமி அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. இறுதியில் 'நான்கு மாதங்களுக்குப் பிறகு கொடுங்கள்; வாங்கிக் கொள்கிறேன்' என்றார். சரியாக நான்கு மாதங்களில் அந்தக் குழந்தை மரித்தது. எனவே அவர்கள் மீண்டும் வந்து தக்ஷிணை அளிக்கும் சந்தர்ப்பமே ஏற்படவில்லை. இதனையே ஸ்வாமி முன்பாகவே குறிப்பிட்டார்.

ஸ்வாமியை முழு நம்பிக்கையோடு சரணடைந்தவர்களின் முழுப் பொறுப்பையும் அவரே வகிக்கிறார். ஆனால் இதயத்தில் மயிரிழை கூட சந்தேகமின்றி நம் பிராணனை அவரது கைகளில் அர்ப்பித்து நிச்சிந்தை யோடு இருக்க வேண்டியதே அதிலுள்ள ரகசியம். ஸத்குருவிடம் கடிவாளத்தை ஒப்படைத்த பிறகு கலக்கத்துக்கு இடமே இல்லை என்று சாயிநாதர் கூறிய சொற்களை நாம் இங்கே நினைவு கூரவேண்டும்.

ஒருமுறை கே. புஜ்ஜையாவுக்குப் பணம் தேவைப்பட்டது. தனது ஆடுகளை கசாப்புக் கடைக்காரனுக்கு விற்க நினைத்தார். அன்றிரவு ஸ்வாமி அவரது கனவில் காட்சியளித்து "ஆடுகளைக் கசாப்புக் கடையில் விற்பது எவ்வளவு பாவம்? என்ன விஷயம்?" என்றார்.

உடனே அவருக்கு விழிப்பு ஏற்பட்டது. ''ஸ்வாமி கூறியது உண்மைதான் என்றாலும் என் பணத்தேவைக்கு வேறு என்ன செய்வது? ஸ்வாமியே சரணம்'' என்று கருதி ஆடுகளை நெல்லூருக்கு ஓட்டிப் போனார். அங்கே பல கசாப்புக்கடைக்காரர்கள் அவற்றைப் பார்த்துவிட்டுப் போனார்களே தவிர ஒருவரும் வாங்கவில்லை. சிறிது நேரத்தில் பக்கத்து ஊர்க்காரர்கள் வந்து ''நாங்கள் மேய்த்துக் கொண்டுவருகிறோம்; கொஞ்சம் விலை குறைத்துக் கொடு'' என்றனர். உடனே புஜ்ஜையா அதற்குச் சம்மதித்து விற்றுவிட்டார். இவ்வாறாக ஸ்வாமி அவற்றைக் கசாப்புக் கடைக்காரர்களிடமிருந்து காத்தார். தன்னைச் சரணடைந்த பக்தனைப் பாவத்திலிருந்து காத்தார்.

ஒருமுறை ஸ்வாமி சமுத்திர ஸ்னானத்துக்காக மைப்பாடு என்ற ஊருக்குச் சென்றார். இரண்டு மணி நேரத்துக்குப் பிறகே புஜ்ஜையாவுக்கு இந்த விஷயம் தெரிந்தது. ஸ்வாமியைச் சந்திப்பதற்காக மைப்பாடு புறப்பட்டார். அங்கே ஸ்வாமி ஸ்னானம் செய்த பிறகு கரையில் அமர்ந்தார். வீட்டுக்குப் போகலாமென்று எவ்வளவு முறை சேவகர்கள் அழைத்தாலும் அவர் அசையவில்லை. புஜ்ஜையா வந்து சேர்ந்து ஸ்னானம் செய்த பிறகே எழுந்து வந்தார். அவர் வருவதற்காகவே ஸ்வாமி காத்திருந்தார் என்பது பக்தர்களுக்கு அப்போது புரிந்தது.

தாசூர்வாசி கஸ்தூரி அங்கையா தம் பேரனுக்கு என்ன பெயர் வைக்கலாம் என்று ஸ்வாமியைக் கேட்டபோது ''ஐயா இவன் பூர்வ ஜன்மத்தில் சுப்பண்ணா என்ற பெயருடைய வியாபாரி. அந்தப் பேரையே வை'' என்று கூறி அந்தக் குழந்தைக்கு ஆசீர்வாதச் சீட்டு எழுதுவித்தார். அதில் இரண்டரை வயதில் நீரில் கண்டம் என்றும் வீரராகவஸ்வாமி அந்தக் கண்டத்திலிருந்து காப்பார் என்றும் எழுதுவித்தார்.

இரண்டரை வயதுள்ள சுப்பண்ணாவும் அவனது அண்ணன் பாலாஜியும் சேர்ந்து தம் வீட்டுப் பக்கத்திலுள்ள இறங்கு கிணற்றில் தண்ணீர் குடிப்பதற்காக விளையாட்டாக இறங்கினர். நீர் குடித்துக் கொண்டிருந்த சுப்பண்ணா கால் வழுக்கி கிணற்றில் விழுந்து விட்டான். பாலாஜி கத்தியவாறு கிணற்றிலிருந்து வெளியே ஓடினான். வீட்டிலிருந்த அவர்களின் தந்தை ஓடிவந்து இடுப்பளவு நீரில் முழுகிப் போகாமல் மிதந்து கொண்டிருக்கும் குழந்தையை எடுத்துக் கொண்டு வரும் முயற்சியில் அவரது உடைகள் முழுதும் நனைந்து விட்டன. அவ்வளவு ஆழமான நீரில் விழுந்தும்கூட ஒரு வாய் நீர்கூடக் குடிக்காமல் நீரின் மேல் மட்டத்திலேயே எப்படி குழந்தை இருக்க முடிந்தது என்பதே ஊர்மக்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. பின்னர் ஒருநாள் ஸ்வாமி

எழுதிய சிட்டைப் பார்த்தபோது சரியாக ஸ்வாமி எழுதிய அந்தக் கெடுவிலேயே மேற்கூறிய நிகழ்ச்சி நடந்தது என்பது தெரியவந்தது.

பேரங்கொண்டாவிலிருந்து வந்த நாவுடு கூறினார் : ஸ்வாமியும் மற்றும் சில பக்தர்களும் சேர்ந்து பஞ்சலிங்கால கோனக்குப் போய், அங்கு இளைப்பாறுவதற்காக ஒரு இடத்தில் அமரலாம் என்று நினைத்து ஸ்வாமியைக் கொஞ்சம் நிற்கும்படி வேண்டிக் கொண்டனர். ''இங்கே உட்காரக் கூடாது; படுக்கக் கூடாது. அபாயம்'' என்று அங்கிருந்து வந்து விட்டார். திரும்பி வரும்போது பார்த்தால் அதே இடத்தில் மலைச்சரிவு ஏற்பட்டுப் பெரும் பாறை விழுந்து கிடந்தது. ஸ்வாமி கூறிய அபாயம் என்னவென்று அப்போது புரிந்தது.

சமீபகாலத்தில் புயலினால் நிவி தாலுக்கா மொத்தம் அடித்துக் கொண்டு போன சமயத்தில் ஸ்வாமி தமிழ்நாட்டிலுள்ள மன்னூர் கண்ட்ரிகாவில் இருந்தார். ரேடியோவில் நெல்லூர் ஜில்லாவுக்குப் புயல் அபாயம் உள்ளதென்று அறிவித்தனர். இந்த விஷயத்தை ஸ்வாமிக்குக் கூறியபோது ''ஐயா, நம் குண்டத்தின் காவல் இருக்கிறது அல்லவா! நமக்கு ஒன்றும் நஷ்டம் ஏற்படாது. ஆனால் நெல்லூருக்கு ஒரு ஆண்டு, ஆறுமாதங்கள், பன்னிரண்டு தினங்களில் புயல் அபாயம் உள்ளது'' என்று எழுதுவித்தார். அந்தச் சமயத்தில் அவர் கூறியபடியே நெல்லூருக்கு எந்தவித நஷ்டமும் ஏற்படவில்லை.

மும்மூர்த்திகளின் உருவமான ஸத்குருவின் ஆணைக்குத் தேவதைகள் கூட கட்டுப்பட்டவர்கள் என்பதைப் பின்வரும் நிகழ்ச்சி விளக்குகிறது. இனுகுர்த்திவாசியான காரி ராமஸ்வாமியின் மகளை ஏதோ ஒரு சக்தி வசப்படுத்திக் கொண்டதால் அவள் மன ஸ்வாதீனம் இல்லாமல் இருந்தாள். அவர்களது வீட்டில் புற்றுக்கள் வளர்ந்தன. ககலூர் மஸ்தானய்யா தர்கா, அனாசமுத்திரம்பேட்டை தர்கா, நாகூர் நாகப்பட்டினம் தர்கா முதலிய இடங்களில் ஐந்து ஆண்டுகள் பிரதக்ஷிணம் செய்தும் பயன் இல்லை. ஸ்வாமியிடம் அழைத்துக் கொண்டு வந்தனர். அப்போது அவர் 'ஜொன்னவாடா காமாக்ஷி தேவி இவளது உடல் மீது வருகிறாள்' என்று தெரிவித்தார். தேவி அவளுடைய உடலில் வரும் போது எல்லோருக்கும் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் குறித்து எல்லாம் மிகவும் சரியாகக் கூறினாள். நிறையப்பேர் வந்து கேட்டுக் கொண்டு போவதால் வீடே சந்தைமாதிரி ஆகிவிட்டது. சிறிது காலத்துக்குப் பின் வெள்ளிக்கிழமை தவிர மற்ற நாட்களில் எவரும் வராதபடி சீட்டு எழுதுவித்தார் ஸ்வாமி. அல்வாறே வெள்ளிக் கிழமைகளில் மட்டும் தேவி வந்து குறி கூறினாள். மீண்டும் மிகவும் கூட்டமும் குழப்பமும் ஏற்பட்டது. மணமாக வேண்டிய பெண் இவ்வாறு குறி, ஜோதிடம் கூறுவது நன்றாக இல்லை; எனவே தேவி ஒருபோதும் தம் மகளின் உடலில் வராமல் செய்யும்படி அவர்கள்

ஸ்வாமியை வேண்டிக் கொண்டனர். அவர் அவ்வாறே எழுதுவித்தார். அது முதல் தேவி அவளுடலில் வருவதில்லை. இப்போது அவளுக்கு ஸ்வாமியின் ஆணைப்படி விவாகம் செய்தனர். குழந்தைகள் கூட உள்ளனர்.

எப்போதோ வரவிருக்கும் அபாயங்களையும் ஆபத்துக்களையும் அவற்றைத் தவிர்ப்பதற்குரிய வழிமுறைகளையும் முன்பாகவே கூறி அதன் மூலம் பக்தர்களைக் காப்பார் ஸ்வாமி. பாலகொண்ட சுப்பா ரெட்டிக்கு ஒரு நாள் ஸ்வாமி சீட்டு எழுதுவித்துக் கொடுத்தார். அதில் ''உன் கிராமத்தவர்களுக்கும் பக்கத்துக் கிராமத்தவர்களுக்கும் பெரும் சண்டை வரும். நீ போய் ஒரு வார்த்தை கூறினால் சண்டை நின்று விடும் ஜயா'' என்று எழுதி உள்ளது. ''ஸ்வாமி! அவ்வளவு பெரிய சண்டையில் என் வார்த்தையைக் கேட்பார்களா? என்னால் கூற முடியுமா'' என்ற போது ''இங்கிருந்து போகிறாய் அல்லவா, அதனால் ஒரு வார்த்தையில் சண்டை சரியாகிவிடும்'' என்றார்.

ஸ்வாமி கூறியபடியே அவர் கூறிய காலக் கெடுவிலேயே பொழுது சாயும் வேளையில் அரைகுறை இருட்டில் இரண்டு ஊர் ஜனங்களும் கத்திகள், கோடாரிகள் முதலியவற்றை எடுத்துக் கொண்டு ஊருக்கு வெளியில் கூடினார்கள். ஸ்வாமி கூறிய சொற்கள் நினைவுக்கு வர, சுப்பாரெட்டி அங்கு போய் ''மற்றவர்களுக்கு புத்தி சொல்ல வேண்டிய பெரியவர்களான நீங்களே இவ்வாறு நடந்து கொண்டால் நன்றாக இருக்குமா'' என்றார். அந்தச் சொற்களில் என்ன சக்தியோ, தலைவர்கள் தம் பிடிவாதத்தை விட்டுத் திரும்பிச் சென்றனர். அது ஸ்வாமியின் கட்டளை அல்லவா?

வக்கம்மாவுக்குக் கனவில் ஒரு பெண்மணி மைச்சிமிழ் கொடுப்பது போலவும் வக்கம்மா வேண்டாம் என்று தடுத்துத் தள்ளி விடுவது போலவும் காட்சி ஏற்பட்டது. அப்போது அந்தப் பெண்மணி உள்ளங்கையில் எண்ணெய் ஊற்றிக் கொண்டு அதை வக்கம்மாவின் தலையில் பலவந்தமாகத் தேய்த்தாள். விடிந்தபோது உண்மையாகவே வக்கம்மாவின் தலையின் மேல் கொப்புளங்கள் ஏற்பட்டு வலித்தது. ஸ்வாமிக்குக் கூறியபோது ''நல்லதுதானே அம்மா, வக்கம்மா இனி வரப்போவது இல்லை. தூண் மாதிரி இருப்பாள்'' என்றார். ''தலையில் கொப்புளங்கள் ஏற்பட்டுள்ளன ஸ்வாமி'' என்ற போது மீண்டும் ''இனி வரப்போவதில்லை அல்லவா ஜயா'' என்றார்.

ஸ்வாமி நடிப்பில் கைதேர்ந்தவர். தமது உண்மையான நிலை வெளியாகாமலிருக்க மிகவும் அற்புதமாக நடிப்பார். 'யத்பாவம் தத் பவதி' என்பது போல், ஸ்வாமியின் சொற்களில் ''அவர்கள் இருப்

பதைப் பொறுத்தல்லவா நாம் இருப்பது'' என்பது போலவே நடந்து கொள்வார். தமது பிரச்னைகளைத் தீர்க்கும் வழியைக் கூறும்படிக் கேட்பவர்கள் சிலரிடம் தனது தம்பூராவை மீட்டிக் கொண்டு, விரல்களை எண்ணிக் கொண்டு, ஆகாயத்தைப் பார்த்து ஏதோ சைகைகள் செய்து ஒன்றிரண்டு சொற்கள் கூறுவார். ஆனால் மற்றும் சிலர் வந்ததும் வராததுமாகவே அவர்கள் கேட்காமலேயே அவர்களது விஷயங்களை எல்லாம் விளக்கமாகக் கூறுவார். ஒரு முறை நூதேடி ஸ்ரீராமய்யாவும் வேலூர் கோவிந்தய்யாவும் கர்ப்பவதிகளாக இருக்கும் தம் மனைவிகளுக்குப் பிறக்கப் போகும் குழந்தைகள் ஆணா, பெண்ணா என்று தெரிந்து கொள்வதற்காக ஸ்வாமியிடம் வந்தனர். அவர்கள் வந்ததும் வராததுமாக எதுவும் கேட்பதற்கு முன்பே ஸ்வாமி 'உங்கள் இருவருக்கும் ஆண் குழந்தைகளே பிறக்கும். இனி போகலாம்' என்று கூறி அனுப்பினார். அவ்வாறே நிகழ்ந்தது.

சில ஆண்டுகள் முன் அமெரிக்க விஞ்ஞானிகள் ஸ்கைலாப் என்ற உபகிரகத்தை விண்வெளிக் கப்பலில் அனுப்பினார்கள். அது சிறிது காலம் ஆகாயத்தில் பூமியைச் சுற்றி வந்தது. பின்னர் அதன் இயக்கம் முடிவடைந்தது என்றும் அது நம் தேசத்தில் எங்காவது விழலாம் என்றும் விஞ்ஞானிகள் பிரகடனம் செய்தனர். மக்கள் மிகவும் அச்சத்துக்கு ஆளானார்கள். அந்தச் சமயத்தில் ஒரு பக்தர் ஸ்வாமியிடம் 'ஸ்கைலாப் எங்கே விழும்?' என்று கேட்டார். அப்போது அவர் ''அது எங்கேயோ சமுத்திரத்தில் விழும் ஐயா'' என்றார். அவ்வாறே அது பஸிபிக் சமுத்திரத்தில் விழுந்தது.

கொலகமூடியின் கர்ணம் சுப்பாராவின் மகன் ஸ்வாமியின் பக்தன். அவன் இண்டர் பரீக்ஷைக்குப் போகும்போது ஹால் டிக்கெட்டைச் சுவாமியிடம் அளித்து ஆசீர்வதிக்கும்படி வேண்டினான். ''பரீக்ஷையில் பாஸ் ஆவாய்'' என்று ஆசீர்வதித்துச் சீட்டு எழுதுவித்தார் ஸ்வாமி. ஸ்வாமியின் அருளால் பாஸ் ஆவேன் என்று அவன் மிக மகிழ்ந்தான். ஆனால் தேர்வு முடிவுகள் வெளிவந்த போது பேப்பரில் அவனுடைய நம்பர் இல்லை. அவனது தாய் மிகவும் சோகத்தோடு இந்த விஷயத்தை ஸ்வாமிக்குத் தெரியப்படுத்திய போது ஸ்வாமி ''இல்லை யம்மா அவன் பாஸாகிவிட்டான்'' என்று கண்டிப்பாகக் கூறினார். மதிப்பெண் பட்டியலைப் பார்த்தபோது பாஸ் ஆகி இருந்தான். ஸ்வாமியின் சொற்கள் பொய்க்குமா?

1968-ஆம் ஆண்டில் ஒருநாள் ஸ்வாமி ''ஸ்ரீராமய்யா, உனக்கு வீடு இல்லையே'' என்றார். அது எப்படி என்று கேட்ட ஸ்ரீராமய்யாவிடம் 'உன் வீட்டை அனந்தப்பா வாங்கப் போகிறான் இல்லையா' என்றார். அன்று ஸ்ரீராமய்யா எல்லாம் உன்ன பணக்காரப் பண்ணையார். பக்கத்து வீட்டு அனந்தப்பா மிகவும் ஏழை. ஸ்வாமி கூறியது வெறும் பிதற்றல்

என்று எண்ணினார் ஸ்ரீராமய்யா. ஆனால் காலக்கிரமத்தில் 1983-ஆம் ஆண்டு வாக்கில் இருவரது நிலையும் தலைகீழாகி விட்டது. அனந்தப்பா செல்வந்தராகி, ஸ்ரீராமய்யா தன் வீட்டை விற்க முயன்றபோது அதை வாங்கினார்.

தாராபுல்லையாவின் மனைவி சின்னம்மா தனது அறுபதாவது வயதில் கண் ஆபரேஷன் செய்து கொண்டாள். கண் இன்னமும் வலித்துக் கொண்டே இருந்தது. ஆபரேஷன் எப்படிச் செய்தார்களோ கண்பார்வை வருமோ வராதோ என்று பயப்பட்டு ஸ்வாமியைப் பிரார்த்தித்தாள். ஸ்வாமி கனவில் தரிசனமளித்து ''ஒன்றும் பயமில்லை. ஆபரேஷன் நடந்து முடியும் வரை அங்கேயே இருந்தேனில்லையா?' என்றார். ஸ்வாமி கூறியபடியே கண்வலி குறைந்து நன்றாகக் கண் தெரிந்தது. தன் பிரார்த்தனைக்குச் செவிசாய்த்துக் கனவில் காட்சியளித்த அன்பே உருவான ஸ்வாமிக்குத் தான் மிகவும் கடன்பட்டுள்ளதாக அவள் கூறுகிறாள்.

உண்மையான பக்திக்கும் அன்புக்கும் ஸ்வாமி எவ்வளவு உயர்வான மதிப்பளித்தார் என்பதைக் கீழ்வரும் நிகழ்ச்சி விளக்குகிறது. ஒரு நாள் நான் (ஆசிரியர்) வீட்டில் இட்லிகள் தயார் செய்து ஸ்வாமிக்குக் கொண்டு வந்தேன். இட்லி தயார் செய்யும் போதிருந்து ஸ்வாமி அவற்றை உண்ணும்வரை விடாமல் நாமஜெபம் செய்ய வேண்டுமென்று நாமஜெபம் செய்தவாறே கொண்டு வந்தேன். ஆனால் நான் வருவதற்குள் கடையிலிருந்து வாங்கி வந்த இட்லிகளை உண்டு விட்டார் ஸ்வாமி. இது தெரிந்து நான் மிகவும் மனம் தளர்ந்து போனேன். சேவகர்கள் நான் கொண்டு வந்த இட்லிகளை சுவாமிக்குப் பரிமாறவில்லை. ஏனெனில் அப்போதே அவர் இட்லி தின்றார். சஸ்வரம்மா என்ற பக்தை நான் கொண்டு வந்த இட்லிகளை ஸ்வாமிக்கு நிவேதனம் செய்து அதிலிருந்து கொஞ்சமாவது உண்ணும் படி வேண்டினாள். அந்தக் கருணாமூர்த்தி நான் கொண்டு வந்த நான்கு இட்லிகளையுமே தின்றுவிட்டார். அப்போது என் மனம் மிகவும் மகிழ்ச்சியுற்றது. எல்லாம் அறிந்தவரான ஸ்வாமி இவ்வாறே எவ்வளவோ பக்தர்களை ஆனந்தத்திலாழ்த்தினார்.

சில பக்தர்கள் ஸ்வாமியின் அனுமதி இல்லாமலேயே அவருடைய பேச்சை டேப்பில் ஒலிப்பதிவு செய்தனர். பிறகு போட்டுப் பார்த்த போது பேச்சு ஒலிப்பதிவு ஆகியிருக்கவில்லை. கோட்டாவாசியான வெங்கடரமணய்யா புகைப்படம் பிடிப்பவரை அழைத்து வந்து ஸ்வாமியை போட்டோ எடுக்கச் சொன்னார். எவ்வளவு முறை முயன்றாலும் சரியாகப் புகைப்படம் எடுக்கும் தருணத்தில் ஸ்வாமி அசைவார். பின்னர் ரமணய்யா ''நான் நிர்வாணம் செய்கிறேன். நீ தயாராக

இருந்து ஸ்வாமி நல்ல போஸ் கொடுக்கும்போது படம்பிடி' என்று அவரிடம் கூறிவிட்டுத் தியானத்தில் அமர்ந்தார். சிறிது நேரத்தில் ஸ்வாமி அருள்கூர்ந்து தம் தலையை மேல்நோக்கி வைத்துக் கொண்டு படுத்துக் கொண்டார். உடனே புகைப்படக்காரர் அந்த நிலையில் ஸ்வாமியைப் படம் பிடித்தார். இன்று ஸமாதி மந்திரத்தில் ஸ்வாமி கைகளை இறுக மூடிக் கொண்டு இருப்பதாக காணப்படும் போட்டோ அதுவே. ஸ்வாமியின் போட்டோக்கள் அனைத்திலும் இந்தப் படத்திலேயே புன்னகை தாண்டவமாடும் மிகுந்த மகிழ்ச்சியான தோற்றம் உள்ளதென்று எல்லோரும் புகழ்கின்றனர்.

சுப்பாரெட்டியாருக்கு ஸ்வாமியிடம் ஏற்பட்ட அநுபவங்களை அவரது மகன் காடம்ரெட்டி சுப்பாரெட்டி கீழ்க்கண்டவாறு விவரித்தார். ''1966-ஆம் ஆண்டில் என் தாய் காலமாகி தந்தையார் மனவருத்தத்தோடு இருந்த போது அவரது நண்பர்கள் அவரை ஸ்வாமியின் தரிசனத்துக்கு அழைத்துச் சென்றனர். அந்த முதல் தரிசனத்தில் ஸ்வாமி அவருக்கு எந்தவிதமான மனசாந்தியை அருளினாரோ என்னமோ, அப்போது முதல் என் தந்தை ஸ்வாமியை அடிக்கடி தரிசித்து வந்தார். 1969-ஆம் ஆண்டிலிருந்து வீட்டுப் பொறுப்புகளை என்னிடம் ஒப்படைத்துவிட்டு ஸ்வாமியிடமே இருந்து சேவை செய்ய ஆரம்பித்தார். நான் இடை யிடையே சென்று அரிசியும் பணமும் கொடுத்துவிட்டு வருவேன்.

ஒருநாள் தந்தையார் அக்னிகுண்டத்துக்கு தேங்காய் உடைக்கப் போன போது ஸ்வாமி ''ஐயா, அவனுக்குத் தீட்டு. தேங்காய் உடைக்கக்கூடாது'' என்றார். அவருக்கு ஒன்றும் புரியவில்லை. சிறிது நேரத்தில் என் தம்பி மனைவி இறந்த செய்தி தந்தையாருக்குத் தெரிய வந்தது. ஒரு முறை தந்தையார், வீட்டுக்குப் போய்க் குழந்தைகளைப் பார்த்துவிட்டு வருவதற்காக ஸ்வாமியிடம் அனுமதி கேட்டார். ''ஐயா, எப்படிப் போகிறாரோ அப்படியே வரவேண்டும். கண்ணீர் விடக்கூடாது'' என்று கூறி அனுப்பினார் ஸ்வாமி. தந்தை வீட்டை அடைந்த இரண்டு மணி நேரத்தில் என் தம்பி இறந்தான். ஸ்வாமி 'கண்ணீர் விடக் கூடாது' என்று கூறிய சொற்களுக்கு அப்போது பொருள் விளங்கியது.

எனது தம்பியும் அவன் மனைவியும் இறக்கும் முன்பு எனக்குச் சந்ததி இல்லையென்று கூறினார் ஸ்வாமி. அப்போதே எனக்கு விவாகமாகி எட்டு ஆண்டுகள் ஆயிருந்தன. இனிமேல் குழந்தைகள் பிறப்பார்களென்ற ஆசையே இல்லை. தம்பியும் அவன் மனைவியும் இறந்தபிறகு, அவர்கள் இருவரும் மீண்டும் வருவார்கள்; எனக்குச் சந்தானமாகப் பிறப்பார்கள் என்று ஸ்வாமி கூறினார். முன்பு ஸ்வாமி கூறிய சொற்களுக்கு இவை முற்றிலும் முரணாக இருந்ததால் நான் ஸ்வாமியை மிகவும் ஏளனம் செய்தேன்.

என் தந்தை ஸ்வாமியின் மேன்மையைப் பற்றிக் கூற முற்படும் ாதெல்லாம் எனக்கு உடம்பெல்லாம் பற்றி எரிவதுபோலிருக்கும்; வரை அவமரியாதை செய்து பேசுவேன். ஸ்வாமி கூறியபடியே ஸ்க்கு சந்ததி ஏற்பட்டது. ஆனால் எனக்கு ஸ்வாமியிடம் நம்பிக்கை ட்டும் ஏற்படவில்லை.

ஒருநாள் ஸ்வாமி ''ஐயா, அதோ உன் மகன் தலையின்மேல் ்லையை வைத்துக்கொண்டு வருகிறான். களத்திலுள்ள கூலிகளுக்கு ்பாடு எடுத்துக் கொண்டு போகிறான்'' என்றார். ''எங்கே ஸ்வாமி, களுக்குத் தெரியவில்லையே!'' என்ற போது ''அதோ ஐயா, லையில் தவலையை வைத்துக் கொண்டு'' என்று மட்டுமே கூறினார். ாமியின் சொற்களைச் சோதிக்க எண்ணி என் தந்தை வீட்டுக்கு ்று விசாரித்த போது அதே சமயத்தில் நான் விளைநிலத்திலுள்ள ்களுக்கு உணவு கொண்டு சென்ற விஷயம் உண்மையே என்று ்யவந்தது. அந்த மஹானுக்கு இந்தப் பிரபஞ்சத்தில் யார் என்ன ்தானும் எதுவும் அவரது பார்வையில் படாமலிருக்க முடியாது.

என் தந்தை, ஸ்வாமியிடம் பக்தியும் நம்பிக்கையுமில்லாத என் தையைக் குறித்து அவரிடம் முறையிட்டுக் கொண்ட போது ன் உன்னைவிட மேலானவன் ஆவானய்யா'' என்று அபய ்தார். இன்று எனக்கு ஏற்பட்டுள்ள பக்தியும் விஸ்வாசமும் அவரது ின் விளைவே என்று நம்புகிறேன்.

ஒரு முறை தலுப்பூரில் உள்ள தந்தையாருக்கு அரிசி ்த்துவிட்டு வரும்போது ஸ்வாமி எனக்கு ஒரு சீட்டு எழுதுவித்துக் ்த்தார். அதில் ''இவருக்குக் கோழிகளின் பாவம் சுற்றிக் கொண் து. மூன்று நாட்கள் வைசியரின் வீட்டில் சாப்பிட்டால் அந்தப் போய்விடும்'' என்று எழுதப்பட்டிருந்தது. எனக்கு அந்தச் ன் புரியவில்லை. நான் வாரத்துக்கு நான்கு முறை கோழிகளை ுக் கோழி இறைச்சி தின்பதைப் பற்றி என் தந்தையே ிக்குக் கூறி அவ்வாறு எழுதுவித்திருக்க வேண்டும் என்று எண்ணி ாடு சண்டைபோட்டேன். ''நீயே அந்தப் பாவச் செயலைச் செய்ய ாம் என்று கூறியிருந்தால், உன் வார்த்தைகளிலுள்ள மரியாதை நான் அதை நிறுத்தியிருப்பேன். நான் உன்னைவிடவும் ்யை கௌரவிப்பேன் என்று நினைத்தாயா?'' என்று ஸ்வாமியை ்தன். என் தந்தை கோபமடைந்து என்னைக் கண்டித்தார்.

'ஸ்வாமி, கோழிகள் பாவம் விஷயத்தை மகன் நம்பவில்லை'' என் தந்தை ஸ்வாமியிடம் கூறிக் கொண்டபோது ''ஐயா, ஒரு ்ல் அவனுக்கே தெரிந்து நம்மிடம் வருவான். நீ ஒன்றும் ்பட வேண்டாம்'' என்று கூறித் தேற்றினார்.

''ஒரு மாதத்தில் உண்மையாகவே கோழிஇறைச்சி தின்றால் எனக்கு வயிற்று வலியும் வயிற்றுப் போக்கும் ஏற்பட ஆரம்பித்தது. டாக்டர்களுக்குக் காட்டினபோது குடல் வெந்திருக்கிறது, ஆபரேஷன் செய்ய வேண்டும் என்றார்கள். மூன்று மாதங்கள் மருந்து சாப்பிட்டாலும் துன்பம் குறையவில்லை. காமாலை நோயாளியைப் போல் ஆகிவிட்டேன். தந்தையார் பலவந்தமாக என்னை ஸ்வாமியிடம் அழைத்துச் சென்றார். என்னைப் பார்த்து ஸ்வாமி பகபகவென்று விநோதமாகச் சிரித்தார். ''ஐயா பொழுது சாய்கிறது. மிளகுப் பொடியைக் கலந்து மூன்று கவளம் சாதம் போடுங்கள். போய்விடும்'' என்றார். அவ்வாறே உண்ணும்படிச் செய்தார். பத்து நாட்களில் என் துன்பம் முற்றிலும் நீங்கியது. ஒரு மாத காலத்திற்குள் கோழி இறைச்சியைக் கண்டாலே பிடிக்காத நிலையை ஏற்படுத்தினார் ஸ்வாமி. இப்போது முற்றிலும் அதனைத் தின்பதை விட்டுவிட்டேன். இவ்வளவு நடந்தும் கூட எனக்கு அவர்மீது பக்தியும் நம்பிக்கையும் ஏற்படவில்லை என்றால் அது என் கர்மவினை என்றே கொள்ள வேண்டும்.

ஒரு முறை என் தந்தைக்கு பேதி ஏற்பட்டு மரணத்தறுவாயில் இருந்தார். ஆறு மைல்கள் தூரத்திலுள்ள நெல்லூருக்கு அழைத்துப் போவதற்காக வண்டியில் ஊருக்கு வெளியே வந்தோம். அவர் ஆஸ்பத்திரிக்குப் போக மறுத்து ''என்மீது கொஞ்சமாவது அன்பிருந்தால் நீ ஸ்வாமியிடம் போய் சீட்டு எழுதுவித்துக் கொண்டு வா. நான் இறந்தாலும், பிழைத்தாலும் அவரே எனக்குக் கதி'' என்று பிடிவாதத்துடன் வீட்டுக்கு வந்து விட்டார். வேறு வழியின்றி தனுப்பூரிலிருந்த ஸ்வாமியிடம் போனேன். அன்றிரவு அங்கேயே இருக்க வேண்டி வந்தது. காலையில் ஸ்வாமி என் தந்தை விஷயத்தைக் கேட்டு பகபகவென்று சிரித்து ''அவனுக்கென்ன? அவன் ஆஸ்பத்திரிக்குப் போக மாட்டானே. இவன் போய்ச் சேரும்போது சாப்பிட்டுக் கொண்டிருப்பான்'' என்று கூறி அவரது பரிபாஷையில் கோடி மணங்குகள் என்று ஆசீர்வாதச் சீட்டு எழுதுவித்துக் கொடுத்தார். நான் வீட்டை அடையும்போது தந்தை இறந்து விட்டிருப்பார் என நினைத்தேன். ஆனால் உண்மையாவே அவர் ஸ்வாமி கூறியபடியே சாப்பிட்டுக் கொண்டிருந்தார். இவ்வளவு மேலான அனுபவம் ஏற்பட்டும் என் கர்மவசத்தால் எனக்கு ஸ்வாமியிடம் நம்பிக்கை ஏற்படவில்லை.

ஒருமுறை எங்கள் எருமைகள் காணாமல் போய் பத்து நாட்கள் தேடித்தேடி இறுதியில் நம்பிக்கை இழந்து விட்டோம். என் தந்தை ஸ்வாமியிடம் கூற ''ஐயா அவற்றுக்குச் சுற்றித்திரிய வேண்டிய கர்மா இருந்ததால் அவை சுற்றின. நான்காவது மைலில் எருமைகளைக் கட்டிவைத்து உள்ளார்கள். இரண்டு ரூபாய்கள் கொடுத்தால் ஒட்டிக் கொண்டு வரலாம்'' என்றார். ஸ்வாமியின் சொற்களில் அசையாத

நம்பிக்கையுடைய தந்தையார் யார் என்ன சொன்னாலும் கேட்காமல் ஸ்வாமி கூறியபடியே இரண்டு ரூபாய்கள் மட்டுமே கொடுத்து எங்களது பணியாளை நான்கு மைல் தூரத்தில் தேடும்படி அனுப்பினார். எங்கள் எருமைகள் பாதுகாப்பாக இருந்தது மட்டுமின்றி ஸ்வாமி கூறியபடியே இரண்டு ரூபாய்கள் மட்டுமே பெற்றுக் கொண்டு எருமைகளை விடுவித்தனர்.

எல்லோரும் கலி நின்றாலும் தந்தையாருக்கு மட்டும் பிரத்தியேக மாக ஸ்வாமி அரிசிச்சாதம் வரவழைத்துப் பரிமாறுவார்''.

சிருஷ்டியில் நிர்ணயிக்கப்பட்டுள்ள எந்தச் சின்ன விஷயமானா லும் கூட எல்லாம் அறியவல்ல ஸ்வாமிக்குத் தெரியும் என்ற விஷயத்தைக் குறித்து மேப்பூர் தசய்யாவின் தங்கை வனம்மா கூறிய தாவது: ஒரு நாள் எல்லோருக்கும் கேட்கும்படியாகவே ஸ்வாமி தசய்யாவிடம் ''ஐயா, வனம்மா வேறே போகப்போகிறாள். அப்போது எல்லாம் நாம் கொடுக்க வேண்டும் ஐயா'' என்றார். கணவர் இறந்தபின் அவள் தன் அண்ணனின் வீட்டிலேயே இருந்தாள். இனி அவள் வேறு குடித்தனம் போகும் சந்தர்ப்பமே இல்லை. ஸ்வாமி எதற்காக அவ்வாறு கூறினாரென்று ஒருவருக்கும் புரியவில்லை.

ஒரு வாரத்துக்குப் பின் தசய்யாவுக்கும் வனம்மாவுக்கும் மனத்தாங்கல் ஏற்பட்டு வனம்மா பிணங்கி அந்த வீட்டிலேயே தனியாக சமைத்துக் கொண்டு சாப்பிட்டாள். சாமான்கள் எல்லாம் தசய்யா வுடையதே. நான்காவது நாள் தசய்யாவின் மகன் ''அத்தை இப்படி வேறே சமைத்துக் கொண்டு சாப்பிட்டால் நான் சாப்பிட மாட்டேன். அப்பாவின் பேச்சை மறந்துவிட்டு எப்போதும் போலவே ஒன்று சேர்ந்து இருக்கவேண்டும்'' என்று மன்றாடினான். அதற்கிசைந்து வனம்மா மீண்டும் எல்லோரோடும் கலந்து வாழ்ந்தாள். அதன் பின்னர் அவள் ஸ்வாமியின் தரிசனத்துக்காகப் போனபோது ஸ்வாமி ''வனம்மா வேறே போவது முடிந்து விட்டதே; பிறகு எப்போதும் போலவே தானே'' என்று பகபகவென்று சிரித்தார். ஸ்வாமி எல்லாமறிந்தவர் என்று எல்லோரும் உணர்ந்தனர்.

இந்த லீலையின் மூலமாக ஸ்வாமி நமக்கு ஒரு நல்ல போதனை செய்கிறார். நமது எதிர்காலம் மிக நுட்பமான அம்சங்கள் உட்பட ஏற்கனவே நிர்ணயமாகி இருக்கிறது. எப்போது யார் யாரோடு சண்டை போடுவார்கள், மற்றும் எந்தப் பருக்கை எவரது வாயில் விழவேண்டும் என்பது முதற்கொண்டு எல்லாம் முன்பே நிர்ணயமான விஷயங்களே என்று கபீர் கூறிய விஷயம் உண்மையே என்று தெரிகிறது. அந்த மிக

நுட்பமான நிர்ணயங்கள் ஸ்வாமிக்குத் தெரிந்ததனாலேயே கூற முடிந்தது. யார் என்ன பேசினாலும் என்ன செய்தாலும் முன்பே நிர்ணயிக்கப்பட்ட விதத்திலேயே செய்ய முடியுமே தவிர கொஞ்சம் கூட வேறே விதமாகச் செய்ய முடியாது. ஒரு ஸத்குருவினால் ஆட்கொள்ளப் பட்டவர்கள் மட்டுமே அவரது சங்கல்பத்தின்படி நடக்க முடியும். எனவே யார் என்ன கூறினாலும், என்ன கொடுத்தாலும் எதுவும் கொடுக்காவிட்டாலும், திட்டினாலும் புகழ்ந்தாலும் விருப்பு வெறுப்பு அற்றவர்களாய் உதாசீனமான மனோநிலையுடன் ஸ்வாமி கூறியபடி வாய் திறவாமலிருந்தால் கர்மவினை தீர்ந்து சம்சார சக்கரத்திலிருந்து விடுபடுவோம். ஸ்வாமியின் அருளைப் பூரணமாகப் பெறமுடியும்.

5. எல்லாம் வல்லவர்

குருவருளினால் உடலே தாம் என்ற மயக்கத்தைக் கடந்த ஸ்வாமியைப் போன்ற ஞானிகள் தாமே பிரபஞ்சம் முழுதுமாக இருப்பதோடு எறும்பு முதல் பிரம்மா வரை எல்லாவற்றையும் தம் ஆதிக்கத்தின் கீழ் வைத்திருப்பர். எனவேதான் அவர்கள் தேவை என்று கருதினபோது கர்மசூத்திரங்களைக் கூடத் தளர்த்தி பக்தர்களைக் காக்கவல்ல சிறந்த சாமர்த்தியசாலிகளாயிருப்பர். ஆனால் அத்தகைய அருளைப் பெறுவதற்குத் தகுதியுள்ள முறையில் நாம் நடந்து கொள்ள வேண்டும். அவ்வாறு வாழ்ந்த புண்ணியசாலிகளான எவ்வளவோ பேர் அத்தகைய அருளைப் பெற்றனர்.

ரோஸிரெட்டி நீண்டகாலமாக ஸ்வாமி சேவைக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு வீட்டுப் பக்கமே போகாமல் ஸ்வாமிக்கு சேவை செய்து வந்தார். வயது முதிர்ந்த காலத்தில் கண்பார்வை சரியாக இல்லாதபோது கூட ஸ்வாமியின் சேவையை விடவில்லை. எவரோ அறியாதவர்கள் 'இந்தக் கிழவன் ஒரு வேலையும் செய்யாமல் தண்டத் தீனி தின்கிறான்'' என்றார்கள். அதைச் செவிமடுத்த ரோஸிரெட்டி 'இப்படிப்பட்ட வாழ்வு எதற்கு? இதை விட விஷம் தின்று இறப்பதே மேல்' என்று எண்ணினார். அன்றிரவு ரெட்டியை ஸ்வாமி தனியாக இருக்கும்போது அழைத்து முழங்காலைப் பிடித்து விடச் சொல்லி ''யாரோ ஏதோ சொன்னார்களென்று போக வேண்டும் என்கிறாயா? பிக்ஷை எடுத்துத் தின்று கொண்டு இங்கேயே இரு'' என்று பணித்தார். ஸ்வாமியின் எல்லாமறியும் தன்மையை எண்ணி வியந்துபோனார் ரெட்டியார்.

மற்றொரு முறை ''ஐந்து நாட்கள் சாப்பிடாமல் எவராலாவது இருக்க முடியுமா காட்டு'' என்றார் ஸ்வாமி. ''யாரோ எதற்கு? நானே சாப்பிடாமல் இருப்பேன்'' என்று கூறி ஐந்து நாட்கள் நிரவ ஆகாரத்தை மட்டுமே உண்டார். அதிலிருந்து சில நாட்கள் வரை சனி, திங்கட் கிழமைகளில் முழுமையாக உபவாசமிருந்தார். மற்ற நாட்களில் ஒருமுறை மட்டுமே உணவு உண்பார். அதன் பின்னர் நீண்டகாலம்

சாப்பாட்டை அறவே நிறுத்திவிட்டு அவலும், பாலும் மட்டுமே உண்டு தினந்தோறும் பிக்ஷை கொண்டு வருவதைத் தம் நியமமாக ஏற்படுத்திக் கொண்டார்.

ஒரு முறை ஸ்வாமி ''வெங்கையாவுடையது ஒரே பேச்ச அல்லவா ஐயா'' என்றார். இந்த உண்மையை நாம் எவ்வளவோ நிகழ்ச்சிகளில் உணரலாம்.

ரோசிரெட்டி தன் மனைவி குழந்தைகளை விட்டுவிட்டு எப்போதும் ஸ்வாமிக்கு சிரத்தையோடு சேவை செய்து வந்தார். ஒருநாள் ஸ்வாமி 'ஐயா, உன் கிராமத்துக்குப் போய் எலுமிச்சைச் செடிகளை நட்டுவிட்டு வா' என்றார். ரோசிரெட்டி தன் கிராமத்துக்குப் போய் எலுமிச்சைத் தோட்டம் போட முயற்சித்த போது மனைவியும், குழந்தைகளும் அதற்கு ஆட்சேபம் தெரிவித்தனர். ''செடிகளை நட்டு விட்டு நீ பாட்டுக்கு ஸ்வாமியிடம் போய்விட்டால் யார் அவற்றுக்குத் தண்ணீர் ஊற்றி வேலிபோட்டு எல்லாம் செய்வார்கள்? அது எங்களாலாகாது. எனவே செடிகளை நட வேண்டாம்'' என்றனர். ஆனால் ஸ்வாமியின் சொற்களில் அசையாத நம்பிக்கை உடைய ரோசிரெட்டி, கொஞ்சம் பணம் கடன் வாங்கி ஸ்வாமி கூறியபடியே எலுமிச்சைச் செடிகளை நட்டுவிட்டு ஸ்வாமியிடம் திரும்பினார். பின்னர் அவரது மனைவி மக்கள் செடிகளை நீருற்றிக் காப்பாற்றிக் கொண்டார்கள். அந்தத் தோட்டத்தை வளர்ப்பதைத் தமது சக்திக்கு மீறிய பணியாக எண்ணி ஸ்வாமியிடம் வந்து 'இந்த மாதிரி பாரத்தை எல்லாம் எதற்கு எங்கள் மீது போட்டாய் ஸ்வாமி' என்று அலுத்துக் கொண்டனர். அப்போது ஸ்வாமி ''அந்தத் தோட்டத்துக்கு தெலியே காவல் இருக்கிறாள். அது ஒன்றரை லட்சம் பெறுமான ஆஸ்தியாகும். நீங்கள் அந்தத் தோட்டத்திலேயே குடித்தனம் வைத்துக் கொண்டு அந்த இடத்துக்கு சிறிமென்ன என்ற பெயரை வைத்துக் கொள்ளுங்கள்'' என்று கூறினார். அவர்கள் விருப்பமில்லாமலே அந்தத் தோட்டத்தைப் பராமரித்தனர். ஸ்வாமி கூறியபடி அந்தத் தோட்டம் அந்தப் பிராந்தத்தி லுள்ள எல்லாத் தோட்டங்களையும் விடச் சிறந்து விளங்கிற்று. தற்போது அந்தத் தோட்டத்தை மூன்று லக்ஷங்களுக்குக் கேட்கிறார்கள். ஆனால் அவர்கள் விற்க விரும்பவில்லை.

கலிச்சேடுவாசியான ஈஸ்வரம்மா புதிதாக வீடுகட்டி, ஸ்வாமி யின் பாத ஸ்பர்சத்தால் பாவனம் செய்து கிருஹப்பிரவேசம் செய்ய வேண்டும் என்று ஸ்வாமியிடம் வேண்டினாள். அவர் சரி என்றார். ஆனால் அவளைச் சோதிக்க எண்ணியே போலும் மூன்று மாதங்கள் ஸ்வாமி அந்தப் பிராந்தத்துக்கே போகவில்லை. ஸ்வாமி வராததால்

அவள் இருவரப்பிரவேசம் செய்யாமல் ஸ்வாமிக்காக சபரியைப் போல் காத்திருந்தாள். அப்போது அவளுக்கு வீடு இல்லாத தால் சாமான்களை எல்லாம் ஒரு பெட்டிக் கடையில் வைத்துவிட்டு மழை வந்தால் பெட்டிக் கடைக்குக் கீழே கட்டிலைப் போட்டுப் படுத்துக் கொண்டாள். கிராமத்தவர்கள் யாவரும் இவளைப் பார்த்துச் சிரித்துக் கொண்டனர். அவள் மாத்திரம் தன் பிடியை விடவில்லை. ஸ்வாமி பக்கத்துக் கிராமத்துக்கு வந்தபோது மீண்டும் போய் அழைத்தாள். ''நாளை சூர்யோதய காலம் நன்றாக உள்ளது. நான் வருகிறேன். இருவரப் பிரவேசம் செய்'' என்றார் ஸ்வாமி. ''இந்தக் குறுகிய காலத்தில் ஏற்பாடுகள் செய்ய இயலாதே ஸ்வாமி'' என்றாள் அவள். ''எல்லாம் தானாகவே வரும் பார'' என்றார் ஸ்வாமி. அன்றிரவு அவள் வீட்டுக்குச் சுண்ணாம்பு அடிப்பது, வீட்டைச் சுத்தம் செய்து கோலம் போடுவது போன்ற பணிகளில் ஈடுபட்டாள். எதிர்பாராத விதமாக அவளுக்கு நீண்டகாலமாகக் கடன் பாக்கி உள்ள கூலிகள் வந்து பணத்துக்குப் பதில் வரவு வைத்துக் கொள்ளச் சொல்லி அரிசியும், கொஞ்சம் பணமும் கொடுத்துவிட்டுப் போயினர். கடன் வாங்க வேண்டிய துன்பம் இல்லாமல் போனது. அன்று இரவு ஸ்வாமி சிஷ்யர்களோடு விடியும் வரை வழிநடந்து ஐந்து கிராமங்களைச் சுற்றிவிட்டு விடிகாலை மூன்று மணிக்கு அவளது வீட்டுக்கு வந்தார். ஸ்வாமி தம் கரங்களால் கற்பூரம் ஏற்றி அடுப்பை மூட்டினார். அவள் பத்து இலோ அரிசி சமைத்தாள். அவளது சிநேகிதி அவளுக்கு இருநூறு சாப்பிடும் இலைகள் அளித்தாள். அவற்றைப் பந்தியில் போட்டாள். அந்த இருநூறு இலைகளும் சரியாக இருந்தன. சமைத்த பதார்த்தங்களும் காலி ஆகிவிட்டன. ஸ்வாமிக்கும் அவளுக்கும் மட்டும் சாதம் இல்லை. வெல்லப் பொங்கலைப் பரிமாற மறந்து வைத்திருந்தார்கள். அதனை ஸ்வாமிக்கு நிவேதித்து குருவின் பிரசாதத்தை அவளும் கொஞ்சம் உண்டாள். பத்து இலோ அரிசியைக் கொண்டு இருநூறு பேருக்கு ஸந்தர்ப்பணை நடத்தினார் ஸ்வாமி.

நற்போது பெங்களூரில் உத்தியோகம் செய்து வரும் பூசல மீரய்யாவின் மனைவி ஸ்வாமியின் முதல் ஆராதனைக்கு கொலக மூடிக்குப் போனாள். ஸ்வாமியின் நித்யபூஜைக்காக பக்தர்கள் மாதந் தோறும் கொஞ்சம் பணம் கட்டும் திட்டம் ஏற்பட்டிருந்தது. தான் மாதத்தோறும் பத்து ரூபாய்கள் அனுப்புவதாகத் தன் கணவரின் பெயரைக் கொடுத்தாள். பின்னர் ஸ்வாமியிடம் ''ஸ்வாமி என் கணவருடைய அனுமதியில்லாமலே பெயர் கொடுத்துவிட்டேன். அவர் அதற்கு ஒப்புக் கொண்டு உங்களுக்குப் பணம் அனுப்பும்படிச் செய்ய வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டாள். வீட்டுக்குச் சென்றதும் இவ்விஷயத்தைத் தன் கணவரிடம் கூறினாள். ஆனால் அவர் ''ஸ்வாமி

என்னையே கேட்டால் கொடுப்பேன்'' என்றார். சில நாட்களில் ஸ்வாமி அவரது கனவில் ஜோலியை ஏந்தியவராக தரிசனமளித்து ஏதாவது போடு என்று கேட்டார். ''என்ன கொடுக்கச் சொல்கிறீர்கள் ஸ்வாமி?'' என்று அவர் கேட்க ''என்ன இருக்கிறதோ அதைக் கொடு'' என்றார் ஸ்வாமி. உடனே அந்த பக்தர் அதற்கு முன் உள்ள மாதங்களுக்குக் கூடத் தான் அனுப்ப வேண்டிய பணம் மொத்தத்தையும் ஸ்வாமிக்கு ஸமர்ப்பித்து விட்டு ஸ்வாமி சமாதியைத் தரிசித்தார்.

ஒரு முறை பல்லம்ரெட்டி இருஷ்ணாரெட்டியார் ஸ்வாமியின் சந்நிதியில் விநாயக சதுர்த்தி கொண்டாட வேண்டுமென்று கொலக மூடிக்கு வந்து ஒரு கிலோ கடலைச் சுண்டல், இரண்டு கிலோ அரிசியும் வெல்லமும் கலந்த பொங்கல் மற்றும் ஒரு கிலோ உளுந்து வடையும் செய்வித்தார். தினந்தோறும் ஸ்வாமியின் சேவகர் ஒருவர் அதிகே பல்லிக்குப் போய் பகல் ஒரு மணியளவில் பிக்ஷான்னம் கொண்டு வருவது வழக்கம். ஆனால் அன்று வழக்கமான பஸ்ஸைத் தவற விட்டதால் அவர் வரவில்லை. அப்போதுதான் பொங்கல் அடுப்பில் கொதித்துக் கொண்டிருந்தது. ஸ்வாமி கொஞ்சம் சாதம் கொண்டு வரும்படிக் கேட்டார். 'ஸ்வாமி சாதம் இல்லை; பொங்கல் தான் தயாராகிறது' என்றபோது, ''பரவாயில்லை கொண்டு வா'' என்றார். சுண்டல், பொங்கல், வடை ஆகியவற்றை இலையில் போட்டு ஸ்வாமிக்குச் சமர்ப்பித்தார். ஸ்வாமி கொஞ்சம் நின்றுவிட்டு ''இனி நீங்கள் சாப்பிடுங்கள்'' என்று கொடுத்துவிட்டார். பிக்ஷைக்காகப் போனவர் வரவில்லை. இருஷ்ணாரெட்டி தயாரித்த பிரசாதம் இருபத் தைந்து பேர் வயிறு நிரம்ப உண்ட பிறகும் மிகுந்தது. ஏசு கிறிஸ்து ஏழு ரொட்டித் துண்டுகள், ஏழு மீன்களை ஏழாயிரம் ஜனங்களுக்கு விநியோகித்த பின்னும் ஏழு கூடைகள் நிரம்ப அவை மிகுந்ததைப் போல உள்ளது இந்நிகழ்ச்சி. *(மத்தாய் : 14:17-21)*

ஒரு முறை இவர் கொலகமூடியில் ஸ்வாமி தரிசனம் செய்து கொண்டு வீட்டுக்குச் செல்ல அனுமதி கேட்டார். ஸ்வாமி 'நானும் கூட வருகிறேனே' என்றார். ஸ்வாமியைத் தம் வீட்டிற்கு அழைத்துச் செல்வதில் ரெட்டியாருக்கு ஒரு சங்கடம் இருந்தது. அவரது வீட்டில் இருந்த முதியவர் ஒருவருக்கு ஸாதுக்களையும் மஹான்களையும் வீட்டிற்கு அழைத்துக் கௌரவிப்பது பிடிக்காது. ஸ்வாமியை அழைத்துக் கொண்டு போனால் அவர் ஏதாவது நிந்தித்தால் தாம் வேறு வழியின்றி அதைப் பார்த்துக் கொண்டிருக்க நேரிடும். ஸ்வாமியை அழைத்துக் கொண்டு போய் நிந்திப்பதைவிடச் சும்மா இருப்பது மேல் என நினைத்தார். ஆனாலும் ஸ்வாமியிடம் எங்கள் வீட்டிற்கு வர வேண்டாம் என்று எப்படிக் கூறுவார்? மனதில் குழம்பியவாறு இருந்த

அவரைப் பார்த்து ஸர்வக்ஞரான ஸ்வாமி 'எப்போதாவது வருகிறேன்' என்றார். உடனே இன்னொருமுறை வரும்போது போகலாம் என்று கூறி ரெட்டி போய்விட்டார்.

1982-ஆம் ஆண்டில் ஸ்வாமி மஹாசமாதியடைந்தார். 1986-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ரெட்டியார் வீட்டிலிருந்த முதியவர் காலமானார். பதினைந்தாம் நாள் அவருக்கு பெரிய கர்மா செய்யும்போது சுற்றத்தார்களையும், ஏழைச் சாதுக்களையும் சாப்பாட்டுக்காக அழைத்தனர். நூற்றி எழுபது கிலோ அரிசி சமைத்து சுமார் ஐந்நூறு பேருக்கு உணவு தயாரித்தனர். ஸ்வாமி படத்துக்கு கற்பூர ஆரத்தி எடுத்து உணவு பரிமாற ஆரம்பிக்கப் போகும் தருணத்தில் அந்தக் கிராமத்திலிருந்த ஒரு சாது வீட்டிற்கு வந்தார். உடனே ஆரத்தி எடுப்பதை விட்டு, 'ஸ்வாமி வந்துள்ளார். முதலில் அவருக்குச் சாதம் போடுங்கள்' என்று அவருக்கு உணவு அளித்து அனுப்பிய பிறகே ஸ்வாமிக்கு ஆரத்தி எடுத்து எல்லோருக்கும் உணவு பரிமாறினார்கள். எதிர்பார்த்ததைவிட இரண்டு மடங்கு ஜனங்கள் வரவே, உணவு எல்லோருக்கும் பற்றாதோ என்று ரெட்டியார் கவலைப்பட்டார். மறுபடியும் சமைக்க வேண்டுமென்றால் காலதாமதம் ஆகுமே என்றும் எண்ணினார். தம் வேலையாட்களுக்கு வீட்டிற்குக் கொண்டு போக உணவு கொடுக்காமல் நிறுத்திவைத்தார்.

ஆனால், என்ன ஆச்சரியம்! ஐந்நூறு பேருக்காகச் சமைத்த உணவை ஆயிரம் பேருக்கு மேல் சாப்பிட்ட பிறகும் இன்னும் நானூறு பேர் சாப்பிடுவதற்குச் சரிப்போகும் அளவு உணவு மீந்தது. இந்த விந்தையைக் குறித்து ஆழ்ந்து யோசித்த ரெட்டியாருக்கு நடந்த உண்மை மின்னல்போல் பளிச்சிட்டது. அன்று ஸ்வாமி 'எப்போதாவது வருகிறேன்' என்று கூறியபடி இன்று அந்தச் சாதுவின் உருவில் வந்து உணவு உட்கொண்டு தம் வாக்கைக் காப்பாற்றியது மட்டுமன்றி இத்தகைய அதிசயத்தை நிகழ்த்தித் தன் மானத்தையும் அன்றோ காத்தார்! தவிர ஸ்வாமியை வீட்டிற்கு அழைப்பதற்குத் தடையாயிருந்த முதியவர் இறந்த பிறகே ஸ்வாமி வீட்டிற்கு வந்ததும் கவனிக்கத்தக்க விஷயமே.

நாம் ஸ்வாமியை இதயபூர்வமாக நம்பி நம் பாரங்களை அவரிடம் விட்டுவிட்டு அமைதியாக இருந்தால் அவர் நம்மைப் பற்றிய பொறுப்புக்களையும் நம்மைச் சேர்ந்தவர்களைப் பற்றிய பொறுப்புக்களையும் எவ்வாறு ஏற்று நடத்துகிறார் என்பதைக் கீழ் வரும் லீலையில் பார்க்கலாம்.

நீண்டகாலமாக ஸ்வாமிக்குச் சேவை செய்து வரும் ரோஸி ரெட்டியிடம் ஸ்வாமி ஒரு நாள் 'உன் சின்ன மகனின் பெயரில் ஒரு

சீட்டு எழுதிக் கொடு' என்று அவசரப்படுத்தினார். அவர் எழுதிக் கொடுத்த சீட்டைத் தம் தொடைக்கடியில் வைத்துக் கொண்டு அமர்ந்தார் ஸ்வாமி. தம் மகனை ஏதோ ஆபத்திலிருந்து ஸ்வாமி காப்பாற்றுகிறார் என்று மட்டுமே ரோஸிரெட்டிக்குத் தெரிந்தது. மூன்றாவது நாள் எவரும் அழைக்காமலே ராஜம்பேட்டையிலிருந்து அவரது சின்னமகன் ஸ்வாமியின் தரிசனத்துக்காக வந்தான். ராஜம் பேட்டைக்கு அருகில் முழுபாரம் ஏற்றிய வண்டி மலையில் ஏறும்போது எருதுகள் நுகத்தைவிட்டு வெளியே வந்து, வண்டியை நிறுத்த வழி இல்லாமல் வண்டி பின்னால் உருண்டு நாற்பதடி ஆழமுள்ள மலைச் சரிவிலுள்ள பள்ளத்தாக்கில் விழுந்தது. ஆனால் வண்டிக்கோ, காளை களுக்கோ, வண்டியை ஓட்டினவனுக்கோ எந்தவிதக் காயமும் ஏற்பட வில்லை. இது ஸ்வாமியின் அருளே தவிர வேறில்லை என்று நம்பி ஸ்வாமிக்கு நன்றி கூறுவதற்காக வந்ததாகக் கூறினான் அவன். ஸ்வாமி சீட்டு எழுதுவித்த சமயத்திலேயே அங்கு விபத்து நடந்த விஷயம் எல்லோரையும் ஆச்சரியத்தில் மூழ்க வைத்ததோடு ஸ்வாமி ஸர்வாந்தர்யாமி, ஸர்வவியாபகர், சாமர்த்தியசாலி என்பதையும் எல்லோரும் அறிந்து கொண்டனர்.

வீரபத்ரி சாயிபாபா பக்தரான ஜயசந்திராரெட்டி தமக்கு ஸ்வாமி அளித்த முதல் தரிசனத்தைக் குறித்துக் கூறியதாவது: ''ஸ்ரீஸ்வாமியைப் பற்றி ''ஸ்ரீசாயிலீலாம்ருதம்'' என்ற நூலில் படித்தேனே தவிர அவரைத் தரிசிக்கவில்லை. அவரது மண்டலாராதனை நாள் எப்போது என்று கூட எனக்குத் தெரியாது. சரியாக அதற்கு முன்னிரவு எனக்கு ஒரு விந்தையான கனவு ஏற்பட்டது. நெல்லூரில் காந்தி சிலையின் அருகில் எனக்குப் பரிச்சயமில்லாத ஒரு பெரியவர் என்னிடம் 'நெல்லூர் பிராந்தத்திலுள்ள கொலகமூடியில் உள்ள அவதூதரைத் தரிசித்தாயா? இல்லாவிடில் தரிசித்துக் கொள். நெல்லூருக்குத் தெற்கில் போ! அங்கே மிலிடரிக்காரர்கள் உனக்கு வழி காட்டுவார்கள்' என்றார். நான் கனவிலேயே அவதூதரின் தரிசனத்துக்காகப் போகும்போது வேதாய பாலத்தின் அருகில் மிலிடரிக்காரர்களின் கூடாரங்களைப் பார்த்து அங்குள்ள காவல்காரரிடம் கொலகமூடிக்குச் செல்லும் வழிகேட்டு அறிந்து கொண்டேன். கொலகமூடிக்கு வந்து கொண்டிருக்கும்போது கொண்டாயபாலம் தாண்டின உடனே, கோவணம் கட்டிக் கொண்டு கையில் ஒரு தடியும் சட்டியும் வைத்துக் கொண்டிருந்த ஒரு ஒல்லியான மனிதர் காட்சியளித்தார். பழைய துணிகள், சில பொருட்கள் முதலிய வற்றைச் சின்னச்சின்ன மூட்டைகளாகக் கட்டி அவற்றை மாலை போல் கழுத்தில் போட்டுக் கொண்டிருந்தார். இவர்தான் ஸ்வாமி என்று தோன்றியது. சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தேன். கனவு முடிந்துவிட்டது. விடிந்தவுடனே என் நண்பர்கள். ''ஸ்வாமியின் மண்டலாராதனைக்குப்

போகிறோம், நீயும் வா'' என்று அழைக்க அவர்களோடு கொலக மூடிக்கு வந்து ஸ்வாமியின் சமாதியையும் துளியையும் பூஜித்துக் கொண்டதோடு என் குருநாதரான பரத்வாஜா அவர்களையும் தரிசித்துக் கொண்டேன்.'' இவ்வாறு தம் பக்தனைத் தமது மண்டலாராதனைக்கு வரவழைத்துக் கொண்டார் ஸ்வாமி. ஆயிரம் ஆடுகள் இருந்தாலும் நம் ஆட்டைக் காலைப்பிடித்து இழுத்து வருவேன் என்றார் அன்றோ ஸ்வாமி!

கொலகமூடிவாசியான தூபிலி வெங்கையாவின் மகள் உமாமஹேஸ்வரியை அநிகேபல்லியில் மணமுடித்துக் கொடுத்தனர். சில காரணங்களால் கணவன் அழைத்துப் போகவில்லை. போதாத தற்குத் தனக்கு விவாகரத்துப் பத்திரம் எழுதிக் கொடுக்குமாறு பலவந்தம் செய்தான். மிகவும் கொடூரமாக அவளைத் திட்டுவான்; அடிப்பான், வீதிக்கு மனைவியை வழவழைத்துப் பெரிய மனிதர்கள் முன் விசாரணை செய்ய வைத்தான். இறுதியில் அவள் சலித்துப் போய் விவாகரத்து எழுதிக் கொடுத்து விட்டாள். பின் தாலியைக் கழற்றி விட்டான். அதுமுதல் உமாவை அவளுடைய தாய் ஸ்வாமியின் ஆசிரமத்தில் சேவை செய்வதற்காக துளஸிப் பாட்டியின் பொறுப்பில் விட்டாள். பெரும் பக்தையான துளஸிப்பாட்டியின் கூட்டுறவில் உமா தனக்கு எல்லாம் ஸ்வாமியே என்று ஒரு ஆண்டு சேவை செய்தாள். மீண்டும் வேறு திருமணம் செய்வதற்கு உமா ஒப்புக் கொள்ளவில்லை. இதற்கிடையில் எவ்வளவு பேர் கூறினாலும் தாலியை அணியவில்லை. ''எனக்குக் கணவன் இல்லை போங்கள்'' என்று கத்துவாள். துளஸிப் பாட்டி அவளுடைய தாலியைக் கொண்டு வந்து ஸ்வாமியின் ஆசனத்துக்கு அடியில் வைத்தாள். ஸ்வாமியின் அருளினாலாவது அவள் அதை அணியட்டும் என்பதே அவளுடைய நோக்கம். ஆனால் ஆச்சரியப்படும் வகையில் ஸ்வாமி கணவன், மனைவி இருவருடைய மனதையும் மாற்றினார். ஒருவர் மீது மற்றவருக்குப் பற்று ஏற்படும்படிச் செய்தார். கணவன் அழைத்தால் போவேன் என்று உமாவும் அவள் வந்தால் ஏற்றுக் கொள்வேன் என்று கணவனும் ஒருவருக்கொருவர் மத்தியஸ்தம் செய்பவர்கள் மூலமாகச் செய்தி அனுப்பினார்கள். ஒரு நல்ல நாளில், எவருடைய தலையீடும் இன்றியே உமா குரவைய்யா என்ற சேவகரிடம் கேட்டுத் தன் தாலியைப் பெற்றுக் கழுத்திலணிந்து கொண்டு தன் தாய்க்குக் கூடக் கூறாமல் இரண்டு மைல் தூரத்தில் அநிகேபல்லியிலுள்ள தன் கணவனிடம் போனாள். கணவன் அவளை ஆதரவோடு வரவேற்றான். இப்போது உமாவுக்கு இரண்டு பெண் குழந்தைகள். இருவரும் அன்யோன்யமாகக் குடும்பம் நடத்துகிறார்கள் எல்லாவற்றையும் ப்ரேரேபிக்கும் ஸத்குருவுக்கு மட்டுமே இத்தகைய விசித்திரமான நிகழ்ச்சிகளை ஏற்படுத்துவது சாத்தியம்.

ஒரு முறை பெண்ணாநதிக்கு அக்கரையில் ஸ்வாமி தங்கி உள்ளார் என்று வக்கம்மாவுக்குத் தெரிய வந்தது. ஸ்வாமியின் தரிசனத்துக்காக ஆர்வத்தோடு புறப்பட்டாள். நதி நீர் மிகவும் அதிகமாக ஓடுகிறது என்றும் போகவேண்டாம் என்றும் நண்பர்கள் கூறினர். அதைக்கேட்டு ஸ்வாமியிடம் போக முடியவில்லையே என்று அழுதாள். இறுதியில் ஸ்வாமியிடம் போயே தீரவேண்டும் என்று மிகவும் பலமாகத் தோன்றி நீரில் இறங்கிப் போகலானாள். அவள் கணுக்கால் வரைக்கே நீர்மட்டம் இருந்தது. அந்த மனிதர் எதற்காக இப்படி என்னிடம் பொய் கூறினார்? என்று நினைத்துக் கொண்டாள். ஆனால் அவள் ஸ்வாமி யிடம் சென்றவுடன் சேவகர்கள், 'நீ எப்படி நதியைக் கடந்தாய்?' என்று ஆச்சரியப்பட்டனர். உண்மையில் நதி நிரம்ப நீர் ஓடுகிறது என்றும் ஸ்வாமியின் மகிமையினாலேயே தனக்கு நீர்மட்டம் குறைந்தது என்றும் அப்போது அவள் தெரிந்து கொண்டாள்.

1962-ஆம் ஆண்டில் கன்னவரம் ராஜய்யாவுக்கு பலவீனம், இதயப் படபடப்பு, வெளியே கூற இயலாத பயம் முதலியவை இருந்தன. நெல்லூரில் டாக்டரிடம் காட்ட வேண்டும் என்று நினைத்தார். ஸ்வாமி யின் படத்துக்கு முன் முறையிட்டுக் கொண்டு விக்கி விக்கி அழுதார். காலையில் நெல்லூருக்குப் போய் ஊசிபோட்டுக் கொண்டு வீட்டுக்கு வந்ததும் ரியாக்ஷன் ஏற்பட்டது. உடனே ஸ்வாமியிடம் அழைத்துச் சென்று உடலுக்கு விபூதி பூசி கொஞ்சம் உணவு கொடுத்துவிட்டு அவரைக் காரில் நெல்லூருக்கு அழைத்துச் சென்றனர். காருக்கு முன்னால் இருபது கஜ தூரத்தில் 'கையில் தடியுடன் ஸ்வாமி போகிறார், பாருங்கள்' என்று எல்லோருக்கும் கூறினார் ராஜய்யா. ஆனால் ராஜய்யாவைத் தவிர வேறு யாருக்கும் ஸ்வாமி காணப்படவில்லை. ஆஸ்பத்திரி நேரம் முடிந்துவிட்டது; எனவே டாக்டர்கள் எவரும் இருக்க மாட்டார்கள் என்று நினைத்தார்கள். ஆனால் ஒரு மணி நேரத்துக்கு முன்பே போகவேண்டிய டாக்டர் ஒருவர் மட்டும் தனியாக அமர்ந்திருந்தார். ராஜய்யாவுக்கு ஊசி போட்டு மருந்து கொடுத்த பிறகு அவர் "எப்போதோ வீட்டுக்குப் போயிருக்க வேண்டிய நான் எதற்கு இப்படி அமர்ந்து கொண்டிருந்தேன் என்று எனக்கே தெரியாது! உங்களுக்காகவே கடவுள் என்னை இருக்க வைத்தார் போலும்" என்றார்.

1981-ஆம் ஆண்டு நிருப்பதி வெங்கடமுளிரெட்டிவின் சிநேகிதர் V. போடய்யா ஸ்வாமியின் மகிமையைப் பற்றிக் கேள்விப்பட்டார். பின்னர் அவருக்கு டைபாய்டு ஜுரம் ஏற்பட்டதால் சித்தூரிலுள்ள அரச மருத்துவமனையில் சேர்ந்தார். அவருக்குப் பதினெட்டு நாட்கள் சாதம் போடவில்லை. டாக்டர், அவரால் முடியாதென்று ராயவேலூரிலுள்ள C.M. ஆஸ்பத்திரிக்குப் போகச் சொன்னார். போடய்யா மிகவும் ஏழை

மனிதராதலால் அந்த ஆஸ்பத்திரிக்குப் போகும் வசதி இல்லை. எனவே மிகவும் பயமடைந்தார். அப்போது தான் கேள்விப்பட்ட வெங்கைய ஸ்வாமி நினைவுக்கு வரவே தன் துன்பத்தை மனதாலேயே அவருக்குத் தெரிவித்துக் கொண்டார். உடனே ஸ்வாமி அவரது கட்டிலருகில் பிரத்யட்சமாகக் காட்சியளித்து ''உனக்கொன்றும் பயம் இல்லை. மூன்று நாட்களில் குணமாகிவிடும்'' என்று கூறி மறைந்து விட்டார். உடனே போடய்யாவுக்கு உடலில் சக்தி ஏற்பட்டு டாக்டருக்குக் கூறாமலேயே நள்ளிரவில் பதினெட்டு மைல்கள் தூரம் நடந்து தன் கிராமத்தை அடைந்தார். அன்று முதல் எந்த சிகிச்சையு மின்றிப் பூரண குணமடைந்தார். பின்னர் ஒரு வாரத்தில் ஸ்வாமியைத் தரிசித்துத் தன் அனுபவத்தைக் குறித்து எல்லோருக்கும் கூறினார்.

தனுப்பூர், நாராயணதாஸ் ஆசிரமத்தில் இருக்கும்போது ஒருநாள் ஸ்வாமி ''ஐயா! மேலுலகிலுள்ளவர்கள் எல்லோரும் வந்து பெஞ்சலக் கோனாவில் கூட்டம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். பெஞ்சலய்யா அவர்களுக்கு எந்தவிதமான பதிலும் கூறமுடியாமல் நம்மை வரும்படி மூன்று நாளாக வந்து வந்து அழைத்துப் போகிறார். இன்று நாம் போய் யார்யாருக்கு என்னென்ன கூற வேண்டுமோ கூறி பெஞ்சலய்யாவுக்கு எந்தவிதமான தடங்களுமில்லாமல் செய்துவிட்டு வரவேண்டும் புறப் படுங்கள்' என்று தன் கூட்டத்தினரை அழைத்துக் கொண்டு பெஞ்சலக் கோனாவுக்குப் போனார். தேவாலயத்தின் முன்புறம் அமர்ந்து கொண்டு இரவு எட்டு மணியிலிருந்து விடிகாலை ஐந்துமணி வரை மற்றவர்களது கண்ணுக்குக் காணப்படாத உருவங்களோடு பேசிக் கொண்டிருந்தார். அந்தப் பேச்சுக்களின் பொருள் எவருக்கும் தெரியவில்லை. இறுதியில் ''ஐயா யார்யாருக்கு என்னென்ன கூற வேண்டுமோ, கூறிவிட்டோம். பெஞ்சலய்யாவின் சங்கடம் நீர்ந்தது. இனி போகலாம் வாருங்கள்'' என்று தம் சேவகர்களைப் புறப்படச் சொன்னார்.

அன்று புதன்கிழமை, அந்தக் காலத்தில் சனி, ஞாயிறு தவிர மற்ற நாட்களில் பெஞ்சலக் கோனாவுக்கு பஸ்வரும் வழக்கமில்லை. அந்த விஷயத்தை ஸ்வாமிக்குக் கூறியபோது 'பஸ் வரும், நீங்கள் விரைவாகப் புறப்படுங்கள்' என்று மூட்டைகளைக் கட்டவைத்தார். பதினைந்து நிமிடங்களில் உண்மையாகவே பஸ் வந்தது. 'இன்று புதன்கிழமை யல்லவா? பஸ்ஸை எதற்காக ஒட்டி வந்தீர்கள்' என்று ஒட்டுநரைக் கேட்டபோது ''கோனுபல்லிவிலிருந்து புறப்பட்டு பத்து இருபது கஜ தூரம் போனவுடன் கடவுளைத் தரிசனம் செய்ய வேண்டுமென்று தோன்றி பஸ்ஸைத் திருப்பி ஒட்டிக் கொண்டு வந்தேன். ஸ்ரீவெங்கைய ஸ்வாமிகளை அழைத்துக் கொண்டு போவதற்காகவே கடவுள்

அவ்வாறு செய்தார்'' என்று கூறினார். ஸ்வாமி லங்கல்பித்தார் என்பதை அந்த டிரைவர் உணரவில்லை.

இவ்வாறே கலுவாய்போகும் வழியில் ஸ்வாமி முதலியவர்கள் எட்டுகஜ தூரத்தில் வந்து கொண்டிருந்தபோது, அவர்களைப் பார்த்துக் கூட டிரைவர் பஸ்ஸை நிறுத்தவில்லை. கொஞ்ச தூரம் போனவுடன் பஸ் காரணமின்றியே நின்றுவிட்டது. ஸ்வாமியும் குழுவினரும் பஸ் ஏறியபிறகே பஸ் நகர்ந்தது.

மஹான்கள் தம் அருளை விசித்திரமான முறைகளில் பொழிகிறார்கள். அவர்களது சொற்களும் செயல்களும் அஞ்ஞானிகளான நமக்குப் பொருளற்றவையாகத் தோன்றும். ஆனால் அவர்களது சொற்களில் அசையாத நம்பிக்கை கொண்டு, அவர்கள் எப்போதும் வீண் பேச்சு பேசமாட்டார்களென்று அறிந்தவர்கள், அவர்கள் கூறியபடியே செய்து எவ்வளவோ நன்மையை அடைவார்கள்; அப்படிச் செய்யாதவர்கள் அவரது அருளை அடைய முடியாது.

ஒரு முறை கொர்ரகூடி புஜ்ஜையா, தமது சில கோர்ட் வழக்குகள் மற்றும் தமது தந்தையின் உடல் நலத்தைப் பற்றி மனங்கலங்கியவராக மனச்சாந்திக்காக ஸ்வாமியிடம் வந்து சற்று தூரத்தில் நின்று கொண்டிருந்தார். அவர் எதுவும் கூறுவதற்கு முன்பே ''ஐயா, மனதில் எந்தவிதக் கலக்கமுமில்லாமல் துரிதமாக வீட்டுக்குப்போ. எல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்று அபயமளித்தார். அவ்வாறே புஜ்ஜையா போய்விட்டார். ஸ்வாமி கூறியபடியே எல்லாம் சரியாகி விட்டது.

பின்னர் சில நாட்களில் புஜ்ஜையாவின் தங்கை கணவர் கிரிமினல் வழக்கில் மாட்டிக் கொண்டு கோர்ட்டுக்குத் திரிந்து கொண்டிருந்தபோது, அவருக்கு உதவி செய்யும்படி ஸ்வாமியிடம் வேண்டிக் கொண்டார் புஜ்ஜையா. அப்போது ஸ்வாமி ''ஐயா கொண்டாயபாலம் வரை பஸ்ஸில் போய், அங்கிருந்து நடந்து நெல்லூருக்குப் போய், கேஸைப் பற்றிய விஷயங்களைப் பேசிவிட்டு, நெல்லூர் ரங்கநாயகரின் கோயிலில் பூஜை செய்வித்து பகல் பன்னிரண்டு மணிக்குத் திரும்பி வந்துவிடு'' என்று பணித்தார்.

ஸ்வாமியின் சொற்களின் திடமான நம்பிக்கையுள்ள புஜ்ஜையா அவர் கூறியபடியே எல்லாம் செய்து கோயிலில் பூஜை முடிந்த பின்னர் விரைவாக நடந்தார். பஸ் இல்லை. ஓடி வந்தால் கூட பகல் பன்னிரெண்டு மணிக்கு கொலகமூடிக்கு வந்து சேர முடியாது. ஸ்வாமியையே நினைத்தவராய் விரைவாக நடந்தார். பாதேகான்

பேட்டை அருகில் ஒரு நண்பர் எதிர்ப்பட்டுப் பேசி விஷயம் தெரிந்து கொண்டு உடனே தான் போக வேண்டாம் என்று நினைத்த அரசாங்க காம்ப் வேலையை மீண்டும் ஏற்றுக் கொண்டு அதன் நிமித்தமாகக் காரில் புறப்பட்டு புஜ்ஜையாவையும் அந்தக் காரிலேயே கொலக மூடியருகில் இறக்கிவிட்டுப் போனார். பன்னிரண்டு மணிக்கு முன்பாகவே அவர் ஸ்வாமியிடம் போய்ச் சேர்ந்து விட்டார். அவரது மைத்துனரின் வழக்குகள் எல்லாம் சூரியனைக் கண்ட பனி போல மறைந்து விட்டன. தான் கூறியபடியே நடந்த பக்தனுக்கு நெல்லூரிலிருந்து கொலகமூடிக்கு வரக் கார் உதவியை அனுப்பியது ஸ்வாமியே. தன் பக்தனின் பாரம் தன்னுடையதே என்றார் அன்றோ ஸ்வாமி!

ஸ்வாமி சில செயல்களைச் செய்விக்கும் முறை விசித்திரமாக இருக்கும். சரியாக ஒரு குறிப்பிட்ட நேரத்திலேயே செய்யும்படிக் கூறுவது, குறிப்பிட்ட கோயிலில் பூஜை செய்து விட்டுக் குறிப்பிட்ட மனிதர்களிடம் பேசிவிட்டு வரும்படிக் கூறுவது ஆகியவை அறியாமையில் சூழ்ந்துள்ள நமக்குப் புரியாமல் போவதுடன் சிலர் அவர் செய்வதை பைத்தியக்காரத்தனம் என்றும் எண்ணுவர்.

கொண்டாயபாலம் தொரை தோட்டத்தில் வசித்துவந்த தொட்லராமிரெட்டி தம் வழக்குகளில் வெற்றியடைந்து அதற்காகத் தான் ஸ்வாமிக்குச் செலுத்த வேண்டிய நேர்த்திக்கடனுக்காக ஸ்வாமியிடம் ''ஸ்வாமி! உங்கள் அருளால் வழக்கில் வெற்றி அடைந்தேன். உங்களுக்கு ஒரு வீடு கட்டிக் கொடுக்க வேண்டுமென்று எண்ணுகிறேன். எந்த இடத்தில், எப்படிக் கட்ட வேண்டுமோ கூறுங்கள்'' என்று வேண்டிக் கொண்டார். ஸ்வாமி ''எனக்கு வீடு வேண்டாம். அதற்குப் பதிலாக ஆஞ்சநேயஸ்வாமியின் கோவிலுக்குச் சுற்றுச்சுவர் கட்டு'' என்றார். அவர் சரி என்று கூறிப் பலநாட்கள் வரை அந்த வேலையைச் செய்யவில்லை.

ஸ்வாமி ஒரு நாள் கொர்ரகூடி புஜ்ஜையா, காடம்ரெட்டி சுப்பாரெட்டி இருவரையும் அழைத்து ''ஐயா நீங்கள் இரவு இரண்டு மணிக்குப் புறப்பட்டு தொட்லராமிரெட்டியிடம் நடந்து போங்கள். அவர் ஆஞ்சநேயஸ்வாமி கோவிலுக்குச் சுற்றுச்சுவர் கட்டிக் கொடுப்பதாகக் கூறிய விஷயத்தைப் பற்றிப் பேசிவிட்டு வாருங்கள்'' என்று பணித்தார். அவர்கள் அவ்வாறே இரவு இரண்டு மணிக்குப் புறப்பட்டு ஆறு மைல்கள் நடந்து தொட்லராமி ரெட்டியை எழுப்பி வந்து விஷயத்தைக் கூறினர். ''எனக்கு இன்னும் சில வழக்குகள் உள்ளன. அவை கூட முடிந்தபிறகு கட்டுகிறேன். ஸ்வாமி அனுப்பினார் அல்லவா. அதனால் நாலாறு ரூபாய்கள் தருகிறேன். மேலும் தேவை

யாகும் பணத்தை மற்றவர்களிடமிருந்து நன்கொடை வசூலித்துக் கட்டி முடித்துக் கொள்ளுங்கள்'' என்றார். ''நாங்கள் ஸ்வாமி கூறியபடி செய்வோம். இந்தப் பணத்தை உமக்குத் திருப்பியளிக்கும்படி ஸ்வாமி கூறினால் மீண்டும் வந்து கொடுத்து விடுவோம். அதற்குச் சம்மத மானால் கொடுங்கள்'' என்றார் புஜ்ஜையா. அதற்குச் சம்மதித்து நானூறு ரூபாய்கள் அளித்து அனுப்பினார். ஸ்வாமியிடம் கூறியபோது ''அவரே வந்து கட்டிக் கொடுப்பார். நீங்கள் வேலையை ஆரம்பியுங்கள்'' என்றார். ஸ்வாமியின் உத்தரவுப்படி சுவர் எழுப்பும் வேலையை ஒரு காண்ட்ராக்டருக்கு ஒப்படைத்து நிதானமாக வேலை செய்வித்தனர். நாலாவது நாள் ராமிரெட்டியே வந்து வேலையைப் பார்த்துவிட்டு ''மீதிப்பணத்தையும் நாளே அனுப்புகிறேன். மேலும் அதிக வேலை யாட்களை ஏற்பாடு செய்து விரைவாக வேலையை முடியுங்கள்'' என்று கூறிவிட்டுப் போனார். கூறியபடியே அவரே மொத்தச்செலவு செய்து சுற்றுச்சுவரைக் கட்டினார். இரவு இரண்டு மணியளவில் இரண்டு மனிதர்களை நடந்து செல்லும்படிக் கூறியதில் உள்ள உட்பொருள் ஸ்வாமிக்கே வெளிச்சம்.

6. ஐம்பூதங்களை அடக்கியாளும் திறமை

ஸத்குரு என்பவர் பரப்பிரம்மஸ்வரூபமே ஆதலால் இயற்கையிலுள்ள எல்லா சக்திகளும் அவருக்கு வசப்பட்டிருக்கும். நமது வாழ்க்கையிலுள்ள நிகழ்ச்சிகளை அடக்கியாளவல்ல தெய்வீக சக்தி ஒன்று உள்ளதென்ற நம்பிக்கை நமக்கு ஏற்பட வேண்டும் என்றும் அதன் மூலமாக நமது தினசரி வாழ்வில் விவேகம், வைராக்கியம் முதலியவை ஏற்பட்டு, மனோவாக்குக் காயங்களில் தூய்மையாக தர்மத்தைக் கடைப்பிடித்து நாம் வாழ வேண்டுமென்ற எண்ணமே அவர் நடத்திக் காட்டும் திவ்ய லீலைகளுக்குக் காரணமாகும்.

ஸத்குரு நம்மிடமிருந்து எதிர்பார்ப்பது அத்தகைய தூய வாழ்க்கையையே. அப்போதுதான் நாம் அவருக்கு உண்மையான தகுதிணை அளித்தவர்கள் ஆவோம். அவ்வாறு நாம் வாழாதபோது லீலையின் உருவத்தில் நம்மீது பொழியப்பட்ட ஸத்குருவின் அருள் காட்டில் காய்ந்த நிலவைப் போல வீணே ஆகும்.

ஒரு முறை ஸ்வாமி தலுப்பூரிலுள்ள சிவாலயத்தில் தங்கி இருந்தார். ஒரே ஒரு பக்தர் மட்டுமே அவருடன் இருந்தார். மேகங்கள் திரண்டு சிறு தூறலும் வானம் இருண்டு போய் பெரும் இடிமுழக்கமும் ஏற்பட்டன. மழை வந்தால் ஸ்வாமியை உள்ளே எடுத்துச் செல்வதற்கு எவரும் இல்லையே, ஸ்வாமி மழையில் நனைவாரே என்று அந்த பக்தர் அஞ்சினார். அப்போது ஸ்வாமி பாயைக் கொண்டு வந்து தம்முன் போடும்படிப் பணித்தார். ''ஸ்வாமி, மழை வரும் போலுள்ளது. இன்னும் முன்பக்கம் நகர்ந்தால் நான் ஒருவனே உங்களை உள்ளே சுமந்து செல்ல இயலாதவனாக உள்ளேன்' என்றார். ''இரு ஐயா, மேகம் கலையவேண்டும்'' என்றார் ஸ்வாமி. பாயின்மீது அமர்ந்து கொண்டு சிறிது நேரம் மேகங்களையே உற்று நோக்கினார். அவ்வளவுதான்! மேகங்களும், இடியும், தூறலும் மாயமாய்ப் போய்விட்டன.

1977-ஆம் ஆண்டில் தலுப்பூரிலுள்ள நாராயணதாஸ் என்ற பக்தரின் ஆசிரமத்தில் ஸ்வாமி தங்கி இருக்கும்போது அவரது சேவகராவ பரிகெல நாகய்யா ''ஸ்வாமி, எப்போது மழை பெய்யும்?''

என்று கேட்டார். ''ஐயா, இந்த ஆண்டு மூன்று மழைகளே அல்லவா? ஒன்றரை மாதத்துக்குப் பிறகு ஒரு முறை, இரண்டு மாதம் இருபது நாட்களில் ஒரு முறை, மூன்று மாதம் ஐந்து நாட்களில் ஒரு முறை. மேலுலகிலுள்ளவர்கள் பொழியும் மழை இவ்வளவு தான்'' என்றார். ''ஒன்றரை மாதம் மழை இல்லாவிடில் கால்நடைகள் சாகுமே'' என்றார் நாகய்யா.

''அப்படியானால் நாமாவது கஷ்டப்பட்டு மழையைப் பெய்விக்க வேண்டாமா ஐயா'' என்றார் ஸ்வாமி. ஸ்வாமியிடம் கஞ்சி குடிக்கும்படிச் சொள்ள போது ''நினைத்த காரியம் நடந்தால்தானே ஐயா நீர் பருக வேண்டும்'' என்றார். பின்னர் அவர் ஸித்தலய்யமலை அருகில் மூன்று நாட்களும் கலிச்சேடில் மூன்று நாட்களும் அன்ன ஆகாரம் இல்லாமல் ''வண்டியை நிறுத்துங்கனய்யா'' என்று இரவும் பகலும் சத்திக் கொண்டே இருந்தார். இரவும் பகலும் உறங்காமல் உட்கார்ந்து கொண்டே இருந்தார். ஆசனம் கூட மாற்றவில்லை. முதல் நாள் எவ்வாறு அமர்ந்திருந்தாரோ கடைசி நான் வரை அவ்வாறே உட்கார்ந்திருந்தார். அதற்கு முன்பு ஸ்வாமி எப்போதும் படுத்துக் கொண்டே இருப்பதைப் பார்த்த பக்தர்கள் ஸ்வாமிக்கு முதுமையும், பலவீனமும் வந்துவிட்டது; இனித் தேறும் மார்க்கம் இல்லை என்று நினைத்தார்கள். இந்தக் காட்சியைப் பார்த்தபோது அவர்களுக்கு ஸ்வாமியின் காரிய நிகைடியும் சக்தியும் தெரியவந்தது. ஆறாவது நாள் மாலை நான்கு மணிக்குத் தமக்கு ஸ்னானம் செய்விக்கும்படிக் கேட்டார். அவரைக் குளிப்பாட்டி உட்காரவைத்தவுடனே அவர் பகபக வென்று சிரித்தவாறே ''தடை நீங்கிவிட்டதய்யா'' என்றார். அடுத்த கணம் பெரும்மழை பெய்ய ஆரம்பித்து ஏரிகள் எல்லாம் நிரம்பும்வரை ஓயவில்லை.

ரிஷிகள்தமது தவம், யக்ஞ, யாகங்களால், குறித்தகாலத்தில் மழை பெய்ய வைத்து உலகத்துக்கு நன்மை செய்வார்களென்று புராணங்களில் படித்தோம். ஸ்வாமியைப் பார்த்து அது உண்மையே என்று தெரிகிறது. அவ்வாறு செய்யவல்ல சாமர்த்தியசாலிகளையே பூஸுரர்கள் என்பார்கள் போலும்.

ஸ்வாமி அவ்வளவு சக்தி படைத்தவர் என்றால் மழை பெய்விப்பதற்கு எதற்காக ஆறுநாட்கள் ஆயின என்ற கேள்வி எழலாம். அவ்விடத்திலுள்ள மக்களின் மொத்தத் தீவினைகளில் பலனே அங்கு மழை ஏற்படாததற்குக் காரணமென்று பெரியோர்கள் கூறுவர். அந்தத் தீவினைகளைத் தம் தவத்தினால் அழிப்பதற்கு அவருக்குச் சில தினங்கள் அவசியமாகலாம். மக்கள் தூய பக்தியோடு இறைவனை வழிபடுதல், தர்மத்தைக் கடைப்பிடித்து வாழ்தல், யக்ஞ யாகங்களைச்

செய்தல், தான தர்மங்கள் செய்தல் முதலியவற்றைப் பின்பற்றாததால் தான் மழையின்மை ஏற்படுகிறது என்கிறது சாஸ்திரம்.

ஸ்வாமியை முதிகேடு என்ற கிராமத்திலிருந்து ஸித்தலய்ய மலைக்கு இரட்டைக் காளை வண்டியில் அழைத்துச் சென்று கொண்டிருந்தனர் சேவகர்கள். நடுவழியில் மேகங்கள் திரண்டு சிறு தூறல் ஆரம்பித்தது. சேவகர்கள் ''ஸ்வாமி, பெரும் மழை வரப்போகிறது; நாம் எல்லோரும் சாமான்களோடு நனையப் போகிறோம்'' என்று முறையிட்டனர். ஸ்வாமி மௌனமாகத் தம் கையை மேலே உயர்த்தி உள்ளங் கையை ஆகாயத்தின் பக்கம் திருப்பி ''சிறிது நில்'' என்பது போல் காட்டினார். அவ்வளவுதான். மழை நின்றுவிட்டது. ஸ்வாமி ஸித்தலய்ய மலை அடைந்த உடனே பெரும் மழை பெய்தது. பக்தர்கள் இத்தகைய லீலைகள் பலவற்றைக் கண்ணாரக் கண்டதால்தான் எவ்வளவு கஷ்டமானாலும் பொறுத்துக் கொண்டு, எப்போதும் திரிந்து கொண்டிருக்கும் ஸ்வாமிக்கு இரவும் பகலும் சேவை செய்து புண்ணியசாலிகளானார்கள்.

ஒரு சமயம் தலுப்பூரில் 'டி' மைன் என்ற மைக்காச் சுரங்கத்தில் ஸ்வாமி இருந்தபோது மேகங்கள் திரண்டு பெரும் மழை வரவிருந்தது. ''ஸ்வாமி மழை வந்துவிட்டது. நம் சாமான்கள் எல்லாம் நனைந்து போகும். இங்கே வீடு கூட இல்லையே'' என்றனர் சேவகர்கள். உடனே ஸ்வாமி தம்பூராவை எடுத்துக் கொண்டு அதைக் கொஞ்ச நேரம் மீட்டி ''என்ன வீரராகவா, நாங்கள் இங்கே இருக்கிறோமென்று தெரியாதா? எங்கள் சாமான்களும் நாங்களும் என்ன ஆவது? என்ன ஐயா, எதற்கு இப்படிச் செய்கிறாய்?'' என்று கண்டித்தார். ஐந்து நிமிடங்களில் மேகங்கள் கலைந்து நல்ல வெயில் ஏற்பட்டது. இவ்வாறே ஒரு முறை வீரட்டியில் காற்றும் மழையும் ஏற்பட்டது. அவசரமாக வீட்டுக்குச் செல்ல வேண்டிய பக்தர்கள் கலக்கமடையவே, சாமி மசூதியிலிருந்து வெளியே வந்து ''ஓ அல்லா, என் குழந்தைகள் பாதுகாப்பாக அவசரமாக வீட்டுக்குப் போகவேண்டும். மழையை நிறுத்து'' என்று கர்ஜித்தவுடன் மழை நின்றுவிட்டது.

ஒரு முறை தமிழ்நாட்டிலிருந்து வந்த பக்தர்கள் சிலர் இரண்டு ஆண்டுகாலமாக தமது பிரதேசத்தில் முழுமையான மழை இல்லை யென்று ஸ்வாமியிடம் முறையிட்டனர். ''இறைவனுக்கு விண்ணப்பம் எழுதுங்களய்யா'' என்று கூறி ஸ்வாமி சீட்டு எழுதுவித்துத் தம் தொடையின் அடியில் வைத்துக் கொண்டு ஐந்து நாட்கள் அன்ன ஆகாரமும் நித்திரையும் இல்லாமல் அவ்வாறே அமர்ந்து கொண்டிருந்தார். ஐந்தாம் நாள் அந்தக் குறிப்பிட்ட பிரதேசத்தில் மழை பெய்து ஏரிகள் நிரம்பிய பின்னரே ஸ்வாமி கஞ்சி குடித்தார்.

இவ்வாறே கலிச்சேடில் கூட மழையின்மையால் கால்நடை களுக்குப் புல் இல்லாமல் கிழிந்த காகிதங்களையும் உலர்ந்த இலை களையும் தின்றன. அதைக் கண்ட ஸ்வாமி இரண்டு இரவுகளும் இரண்டு பகல்களும் உணவைக் கூடத் தொடாமல் ''டேய், வண்டியை நிறுத்துங்களடா, மேகங்கள் போகின்றன. எவ்வளவு முறை சொல்வது? எனக்குக் கோபம் வந்ததென்றால் அபராதம் போடுவேன்'' என்று கத்திய வாறே அமர்ந்திருந்தார். மூன்றாவது நாள் தம் நிகழ்வை முடித்துக் கொண்டு ஸ்நானம் செய்துவிட்டுக் கஞ்சி பருகினார். அரை மணி நேரத்திற்குள் மழை பெய்து ஏரிகள் யாவும் நிரம்பின.

கலிச்சேடு ஸித்தலய்யமலை அருகில் ஸ்வாமி இருந்தபோது கட்டுமூடிப்பல்லியில் மழை இல்லாமல் நாற்றுக்கள் வாடிப்போய்க் கொண்டிருந்தன. அங்கிருந்து குடியானவர்கள் வந்து முறையிட்டுக் கொண்டனர். ''கடவுளுக்கு மனுப் போடுவோமய்யா, நாளை பகலுக்குள் ஆறங்குல மழை வரும்'' என்று சீட்டு எழுதுவித்து ஆசீர்வாத முத்திரை யிட்டு அவர்களிடம் கொடுத்தார். விடிகாலையிலேயே மழை பெய்து ஏரிகளெல்லாம் நிரம்பின. மூன்றாவது நாளிலிருந்து நாற்று நட ஆரம்பித்தனர். அந்தக் கிராமத்தவர்கள் ஸ்வாமியின் சக்தியைக் குறித்துப் புகழ்ந்தனர்.

தலுப்பூரில் ஒருநாள் பகலில் தாடிபோலுரு என்ற விஷப்பாம்பு ஸ்வாமியின் தொடைக்கடியில் வந்தது. அந்த விஷயத்தைத் தெரியப் படுத்திய போது ''அது ஒன்றும் செய்யாது நீங்கள் அதனை ஒன்றும் செய்யவேண்டாம்'' என்றார். பின்னர் அது தானாகவே போய்விட்டது.

1974-ஆம் ஆண்டில் நல்ல வெயில்காலத்தில் ஒருநாள் கொலகமூடி ஆசிரமத்தில் மேற்கூரைக்கு எல்லாத்திசைகளிலும் தீ மூண்டது. கரும் புகை ஆகாயத்தில் எழும்பியது. மேற்திலிருந்து காற்று பலமாக வீசிக் கொண்டிருந்தது. அருகில் தண்ணீர் அதிகமாக இல்லை. ரமணய்யா என்ற சீடர் ஸ்வாமிக்கு நமஸ்காரம் செய்து விட்டு, ஏணியின் உதவியால் வீட்டுக்குமேல் ஏறி ஒரு சின்னப்பானையளவு தண்ணீரை அந்தத் தீயின் மேல் தெளித்தார். நெருப்பணைக்கும் எஞ்ஜினுக்குக் கூட கட்டுப்படுத்த முடியாத அந்தப் பற்றிஎரிந்த தீ அந்தக் கொஞ்சம் தண்ணீரால் அணைந்து விட்டது.

ஒருநாள் ஸ்வாமி கலிச்சேடுலுள்ள நரஸாரெட்டியின் வீட்டுக்குப் போனார். அங்கு நரஸாரெட்டியின் மனைவி ஈஸ்வரம்மா சமையல் செய்யும் இடத்துக்குப் போய் அந்த இடத்துக்கு மேல் துத்த நாகத்தகட்டால் கூரைவேயச் சொன்னார். ''அதற்கு எனக்குப் பண வசதியில்லை என்பது தமக்குத் தெரியாதா ஸ்வாமி?'' என்று கூறினாள்.

''அவர்களே காப்பாற்றுவார்கள்'' என்றுமட்டும் கூறினார் ஸ்வாமி. ஐந்து நாட்களுக்குப் பிறகு அவள் வடை செய்து கொண்டிருந்த போது திடீரென்று வாணலியில் ஒட்டை ஏற்பட்டு எண்ணெய் எரியும் அடுப்பில் வழிந்தது. உடனே அவள் போய் ஒரு பேஸின் கொண்டுவந்து வாணலியில் மிகுந்த எண்ணெய்யை அதில் ஊற்றினாள். ஒரு விஷயம் அவளை ஆச்சரியப்படுத்தியது. அவ்வளவு எண்ணெய் எரியும் அடுப்பில் வழிந்தபோதும் நிஜ்வாலை மேலே எழாதது ஏன்? உடனே அவளுக்கு ஸ்வாமியின் நினைவு வந்தது. அதற்காகத்தான் போலும் ஸ்வாமி வராந்தாவுக்கு துத்தநாகத்தகட்டால் கூரை போட்டுக் கொள்ளும்படிக் கூறினார் என்றும் அவர் அபயமளித்ததாலேயே இப்போது விபத்து நிகழவில்லை என்பதையும் அவள் உணர்ந்தாள்.

போயனபல்லி கிராமத்தில் பக்தர்கள் சிலர் ''வீரபிரம்ம ஸ்வாமியின் மனைவி கோவிந்தம்மா தண்ணீரால் தீபங்களை ஏற்றினாராம். எவ்வளவு பெரிய மஹாத்மா அவர்?'' என்று பேசிக்கொண்டிருக்கையில் அதைச் செவிமடுத்த ஸ்வாமி ஒரு செம்பு நீர் கொண்டு வரச்செய்து அவர்களிடம் கொடுத்து ''நீங்களும் ஏற்றிக்கொள்ளுங்கள்'' என்றார். அந்தநீரை ஊற்றி அவர்கள் தீபங்களை ஏற்றினபோது அவை எரிந்தன. ஸ்வாமிதாம் உடலோடு வாழ்ந்த காலம் வரை இத்தகைய விஷயங்களை வெளிப்படுத்தாமல் ரகசியமாக வைத்திருக்கும்படிக் கூறிவந்தார்.

பெனுகொண்டாவில் போலூ மஸ்தானய்யா கூறியதாவது: ''ஒரு முறை நாராயண ரெட்டியின் காரில் ஸ்வாமி பெனுகொண்டாவிலிருந்து தனுப்பூருக்குப் போகும் போது திடீரென்று ''ஐயா, கழுத்தை வெட்ட வேண்டி வருமே'' என்றார். சிறிதுநேரத்தில் ஸ்வாமி போட்ட பெரும் கூச்சலால் ப்ரேக் போடாமலேயே கார் நின்றுவிட்டது. உடனே ஒரு ஆடு கார் முன்னால் ரோட்டைக்கடந்து ஓடியது. அந்தக் கணத்தில் மட்டும் கார் நின்றிராவிடில் அதன் கழுத்து வெட்டப்பட்டிருக்கும். அன்றுவரை ஸ்வாமியிடம் கொஞ்சம் கூட நம்பிக்கையில்லாத நான் இந்த நிகழ்ச்சியினால் அவருடைய பக்தனானேன்''.

ஒருநாள் இரவு ரோலிரெட்டி பந்தலில் சொருகியுள்ள காகிதங்களை எடுக்கப்போனபோது அவரது ஆள்காட்டி விரலைப் பாம்பு கடித்துவிட்டது. ஸ்வாமி அந்த விரலைத் தம் தொடையின் மேல் வைத்து அதன் மீது தம் உள்ளங்கையை வைத்து அழுத்தியவாறு ஐந்து நிமிடங்கள் இருந்தார். வலி முற்றிலும் குறைந்துவிட்டது. ''உன் உடல் சஞ்ஜீவி ஆயிற்று, போ'' என்றார். அது முதல் எந்த விஷப்பிராணி கடித்தாலும் ரோலிரெட்டிக்கு விஷம் ஏறவில்லை.

ஒரு முறை வார்லபாடு என்ற கிராமத்தில் எவ்விதக் காரணமும் இன்றியே மனிதர்கள் இறந்துபோக ஆரம்பித்தார்கள். காரணமறியாமல்

இராம ஜனங்கள் எல்லோரும் பீதியடைந்தனர். ஏதோ ஒரு கெட்ட சக்தி ஊரில் புகுந்து இப்படி கோர தாண்டவம் செய்கிறது என்று கருதினார்கள். ஊர்வாசிகள் பொழுது சாய்ந்த பிறகு வெளியே வரப் பயந்து தத்தமது வீடுகளிலேயே கதவுகளைச் சாத்திக் கொண்டு இருந்தனர். இராமத்தவர் சிலர் ஸ்வாமியைப் பலமுறை வேண்டித் தம் இராமத்துக்கு அழைத்துச் சென்றனர். ஸ்வாமி அந்தக் இராமத்தை அடைந்தபோது இரவு நேரம் ஆகிவிட்டதால், யார் விட்டைத் தட்டினாலும் அவர்கள் அந்த கெட்ட சக்தியே வந்துள்ளதென்று கருதிக் கதவு திறக்கவில்லை. இறுதியில் ஒரு மிழலி துணிச்சலுடன் கதவு திறந்து பார்த்தாள். ஸ்வாமி வந்துள்ளார் என்று அனைவருக்கும் தெரிந்தவுடன் எல்லோரும் ஸ்வாமியைச் சுற்றிக் கூடி அவருக்கு நல்வரவு கூறினார்கள். அவர்கள்மீது ஏற்பட்ட கருணையினால் ஸ்வாமி அந்த ஊரில் ஒரு இடத்தில் தம் நெருப்புக் குண்டத்தை வளர்த்திச் சில நாட்கள் அந்தக் இராமத்திலேயே தங்கினார். அதன் பின்னர் அந்த ஊரில் ஒருவர் கூடக் காரணமின்றி இறக்கவில்லை.

மேப்பூர் தசய்யாவும் கொமரகிரி ரமணய்யாவும் வன்னிமரம் ஒன்றை வெட்டினர். அதனை இரட்டைக்காளை வண்டியின் அடியில் கட்டி ஒட்டிக் கொண்டு வர வேண்டும். அந்த மரத்தின் உச்சிப்பாகத்தை வண்டிக்குக் கட்டினார்கள். அடிப்பாகத்தை மேலே தூக்க எவ்வளவு முயற்சித்தாலும் முடியவில்லை. அப்போது ஸ்வாமி வர, அவரிடம் கூறினார்கள். ''புலவு நின்பவர்களைக் கூப்பிடுங்கள் ஐயா, மேலே எழும்பும்'' என்று கூறிவிட்டு ஸ்வாமி போய்விட்டார். அவரது சொற்களின் பொருள் என்னவென்று தெரியவில்லை. என்றாலும் கடைசி முறையாக முயற்சிப்போமென்று அவர்கள் முனைந்தபோது அது மிகவும் சுலபமாக மேலே எழும்பியது.

ஒருநாள் வக்கெம்மா ஸ்வாமியின் சன்னிதியில் இருந்தாள். வெள்ளத்தில் அடித்துக் கொண்டு வரப்பட்ட கூடையைக் கொண்டு வந்து ஸ்வாமி பெண்ணாநதியின் நீரின் மேல் வைத்தார். அந்தக் கூடையைத் தம்மிடமுள்ள நீவட்டியால் கொளுத்தினார். பின்னர் நதியின் நீரைத் தம்முடைய சட்டியினால் முகந்து எரியும் தீயின் மேல் தெளித்தார். தீக்கொழுந்துகள் அணைவதற்குப் பதில் நீர் படப்பட மேலும் மேலும் நன்றாக எரிந்தன. இத்தகைய லீலையை நாம் அக்கல் கோட் ஸ்வாமியின் சரித்திரத்திலேயும் காணலாம்.

எருகலராஜ்மியின் இணற்றில் வெயில் காலத்தில் நீர் இருக்காது. மழைக்காலத்தில் நீர் இருந்தாலும் புழு பூச்சிகள் ஏற்பட்டு துர்வாசனை அடிக்கும். ஒரு நாள் ஸ்வாமி அந்தக் இணற்றில் முழுகிவிட்டு வந்தார். அது முதல் அதன் நீர், புழுபூச்சிகள் துர்வாசனையின்றி என்றும் குறையாததாக ஆகிவிட்டது.

ஒரு முறை மங்குபல்லியில் காலரா கோரதாண்டவம் ஆடியது. மக்கள் கூட்டம் கூட்டமாக இறந்தனர். நதியில் மிக ஆழமாக நீர் ஓடிக் கொண்டிருந்ததால் அக்கிராமத்தவர்கள் ஒருவரும் ஸ்வாமியிடம் வர முடியாமல் போயிற்று. அத்தருணத்தில் ஒருநாள் ஸ்வாமி ஒரு நீவட்டியைக் கொளுத்திச் சலமாநாயுடுவிடம் கொடுத்து அங்கும் இங்கும் பார்க்காமல் நீவட்டியின் மீதே பார்வையை நிலைநாட்டி நடக்கச் சொன்னார். சலமாநாயுடு முதலிலும் அவர் பின் ஸ்வாமியும் நடந்து அந்தக் கிராமத்தை அடைந்தனர். ஏரியில் நீர் சலமாநாயுடுவின் முழங்கால் வரைக்கே இருந்தது. ஸ்வாமி அந்த ஊரின் வெளியே ஒரு தடியை நாட்டி, அதன் மீது ஒரு சீட்டு எழுதுவித்துக் கட்டிவிட்டுத் திரும்பி வந்துவிட்டார். அதன்பின் ஒருவர் கூட அந்த கிராமத்தில் காலராவுக்குப் பலியாகவில்லை. ஸ்வாமியை நம்பியவர்களுக்கு அவர்கள் கேட்காமலேயே அவரது பாதுகாப்புக் கிடைக்கின்றது என்பதைக் கவனிக்க வேண்டும்.

''வெங்கையாவின் பேரில் ஒரு பிடிச்சாதம் போட்டவர்கள், கொண்டு வந்தவர்கள், ஆகியவரின் நன்மை தீமைகளை நாம் பார்க்க வேண்டாமா ஐயா'' என்று ஸ்வாமி அபயம் அளித்துள்ளார். அது கீழ்க்கண்ட நிகழ்ச்சியில் எவ்வாறு உண்மையாயிற்று என்று பார்ப்போம்.

ஸ்வாமி தன்னந்தனியே காடுகளில் அலைந்து கொண்டிருந்த நாட்களில் அவர் அடிக்கடி செர்லோபல்லி கிராமத்திலுள்ள எஸ். சேஷய்யா நாயுடுவின் வீட்டுக்குப் போவார். நள்ளிரவில் ஸ்வாமி வந்தாலும் சேஷய்யாவின் தாய் அன்போடு அவருக்கு வயிறு நிறையச் சாதம் போடுவாள். 1976-ஆம் ஆண்டில் ஒரு நாள் சேஷய்யாநாயுடு தெருவில் வந்து கொண்டிருக்கும்போது ஸ்வாமி அவரை அழைத்து ''உனக்கு ஒரு ஆண்டு, நான்கு மாதம், ஆறு நாட்களுக்கு ஒரு கண்டம் உள்ளது. திருவள்ளூர் வீரராகவஸ்வாமி காப்பாற்றுவார்'' என்று சீட்டு எழுதுவித்துக் கொடுத்தார். சில நாட்களுக்குப் பிறகு வயலுக்கு நீர்பாய்ச்சி உழுவதற்காக வயலில் இறங்கியபோது ஒரு காளை வயலில் இறங்கிய வுடனே கீழே விழுந்து கால்களை உதைத்துக் கொண்டது. உடனே அவசரமாக வயலில் இறங்கின நாயுடுவுக்குக் கால்களில் அதிர்ந்தது போன்ற உணர்வு ஏற்பட்ட போதும் பொருட்படுத்தாமல் காளையை இழுக்கும்போது வயலில் மின்சாரம் பாய்கிறது என்று உணர்ந்து உடனே சத்தம்போட்டு மெயினை நிறுத்தச் சொன்னார். அந்தக் காளை மட்டும் உடனே இறந்துவிட்டது. மற்றொரு காளை தப்பித்துக் கொண்டது. ஆனால் அவருக்கு மட்டும் ஒருவித அபாயமும் ஏற்படவில்லை. காளையின் மரணத்துக்குக் காரணம் தெரியாமல் மெயினை ஆன் செய்து சோதித்தபோது வயல் முழுவதும் மின்சாரம் பாய்வது தெரிந்தது. சிறிது

நேரம் யோசித்த பிறகு அன்று ஸ்வாமி எழுதிக் கொடுத்த சீட்டைத் தேடிக் கண்டுபிடித்துப் பார்த்தபோது ஸ்வாமி குறிப்பிட்ட கண்டம் உள்ள நாள் அன்றே என்று தெரிந்தது. அந்தக் கண்டத்திலிருந்து ஸ்வாமியின் அருளாலேயே தப்பினோம் என்று நாயுடு உணர்ந்தார்.

அணிமாதி அஷ்டஸித்திகளும் கூட ஸ்வாமிக்கு சேவை செய்தன. பாலகொண்ட சுப்பாரெட்டி ஒருநாள் வண்ணான் குளத்துக்கு அருகில் ஒரு வன்னிமரத்தை வெட்டினார். ஸ்வாமி நடந்து கொண்டிருந்த நாட்கள் அவை. ''நாம் உடனே போகவேண்டும். மரத்தை எடுங்கள்'' என்றார் ஸ்வாமி. அது மிகவும் கனமாக இருந்தது. ஸ்வாமி கூறியதனால் எப்படியோ மிகவும் கஷ்டப்பட்டு அதைத் தலைமேல் வைத்துக் கொண்டார். ஆனால் கீழே விழுந்து விடுவார் போல அவ்வளவு கனமாக இருந்தது. கொஞ்ச தூரம் நடந்த பிறகு ஸ்வாமி ''கனமாக இருக்கிறதா ஐயா? அங்கே போடு'' என்றார். அப்பாடா என்று கீழே போட்டார். ஸ்வாமி தம் கைத்தடியால் அந்த மரத்தை இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் குத்தினார். ''இப்போது எடுத்துக்கொள்'' என்றார். அப்போது சுமந்தபோது அந்த மரம் உண்மையாகவே மிகவும் லேசாக இருந்தது. '''ஸ்வாமி நினைத்தால் என்ன வேண்டுமானாலும் செய்ய இயலும்'' என்று உணர்ந்தார் சுப்பாரெட்டி.

நரசாபுரத்தைச் சேர்ந்த ஒரு குடியானவனின் வயலில் இணறு எவ்வளவு ஆழம் தோண்டினாலும் நீர் ஊறவில்லை. அவன் ஸ்வாமியைச் சரணடைந்தான். ஸ்வாமி அந்தக் இணற்றில் தேங்காய் உடைத்துக் கொஞ்சமாகத் தோண்டிவிட்டு வெளியே வந்தார். விடிவதற்குள் இணறு நிரம்ப நீர் ஊறியிருந்தது. இந்த வித்தையைக் கண்ட ஊர்மக்கள் அனை வரும் ஆச்சரியத்தோடு ஸ்வாமிக்கு மரியாதை செலுத்தினர்.

நாகுல வெல்லடுர்வாசியான நூதேடி ஸ்ரீராமுலுநாயுடு தம் வயலில் இணறு வெட்டிக்கொண்டிருந்தார். பதினெட்டு அடிகள் தோண்டியபிறகு கடினமான பாறை இருக்கவே தோண்டமுடியவில்லை. அந்தப் பிராந்தத்தில் முப்பது அடிகள் தோண்டினால் ஒழிய நீர் ஊறாது. ஸ்வாமியிடம் தன் நிலையைக் கூறினார். 'நான்கு நாட்கள், பானை நிறையச் சாதம் வடித்து அதிலிருந்து சிறிது எடுத்துக் இணற்றில் போட்டு, பின்னர் நான்கு நாட்கள் வேலையை நிறுத்திவிட்டுப் பின்னர் என்ன ஆகிறதோ பார்' என்றார் ஸ்வாமி. அவர் அவ்வாறே செய்து ஒன்பதாவது நாள் வேலை ஆரம்பித்தபோது அந்தக் கடினமான பாறை மிருதுவாக ஆகி உடைய ஆரம்பித்தது. வேலை மிகச் சுலபமாக முடிவடைந்தது.

கோபாரம், பாலகொண்ட சுப்பாரெட்டி ஒரு முறை இணறு வெட்ட வேண்டும் என்று ஸ்வாமியைக் கேட்டபோது ''சமுத்திரம்''

என்று எழுதிக் கொள்ளச் சொல்லார். அந்தக் இணைற்றில் ஐந்து ஹார்ஸ்பவர் மோட்டார் போட்டு நீரிறைத்தாலும் கூடக் கொஞ்சம் கூட வற்றாத ஊற்று ஏற்பட்டது. அதனையே ஸ்வாமி 'சமுத்திரம்' என்று குறிப்பிட்டார்.

மல்லிக் வெங்கையா ஸ்வாமியின் குண்டத்துக்கு விறகு வெட்டிக் கொண்டு வருவார். ஒரு நாள் லித்தலஷ்ய மலையின் அருகில் முனி கன்னிகைகள் வெங்கையாவைத் தம்முடன் வரும்படி பீடித்தார்கள். உனக்கு வேறொரு உயர்ந்த குருவைக் காட்டுகிறோம் என்று ஆசை காட்டினார்கள். ஆனால் வெங்கைய்யா தன் குருவை விட்டுவிட்டு வர முடியாதென்று கூறி அவர்களை உடனே போய்விடும்படிக் கூறினார். அவர்கள் போய்விட்டனர். அவர்கள் இவ்வாறே பலமுறை காட்சி யளித்துத் தொல்லைப்படுத்தினர். ஒருநாள் அவர் ஸ்வாமி ஸந்நதியில் இருக்கும்போது அவை துணிவோடு வந்து அவரை அழைத்தன. ஸ்வாமி வெங்கைய்யாவைத் தம் அருகில் அழைத்து அவரது இதயத்தின் மேல் ஒரு அடி அடித்து ''இனி உனக்கு அவற்றின் தொல்லை இருக்காது, போ'' என்றார். அன்று முதல் அந்த முனிகன்னிகைகள் அவரிடம் வருவது நின்றுவிட்டது.

ஒருநாள் ஸ்வாமி ''வெங்கையா, எந்த ஆவியாவது, பூதமாவது, பிசாசாவது, உன் சொற்படி நடக்கவில்லை என்றால், நான் சொன்னபடி செய்கிறாயா அல்லது எனது குருதேவரின் நெருப்புத்தூணைப் பிடித்துக் கொள்கிறாயா? என்று கண்டிப்பாக அதட்டி நிற்க வை. நான் கூறும் நியமங்களை நீ கடைப்பிடிக்கும் வரை நீ அவற்றைப் பார்த்துச் சிறிது கூட அஞ்ச வேண்டியதில்லை'' என்று அபயமளித்தார்.

ஒரு முறை கண்டேபல்லியில் உள்ள எருதுகளுக்கெல்லாம் கால் குளம்பில் நோய் ஏற்பட்டது. ஸ்வாமியின் குண்டத்துக்கு விறகு கொண்டு வரும் வெங்கையாவுக்கு எவரும் வண்டியும் காளைகளும் கொடுக்கவில்லை. வெங்கையா தம் குரு அருளிய மந்திரத்தை உச்சரித்துப் பொலேரம்மாவை வரவழைத்தார். அவள் அவர் எதிரே வந்து தன் தலைமுடியை விரித்துக் கொண்டு, முடியில் உள்ள எண்ணற்ற கண்களைக் காட்டினாள். அதைப் பார்த்து அவர் அஞ்சிப் போய் விடுவாரென்று அவள் நினைத்தாள். ஆனால் சிறிதும் அஞ்சாமல், ''உன் ஆட்டம் என்னிடம் பலிக்காது. நீ உடனே கண்டேபல்லியின் எல்லையை விட்டுப் போகிறாயா? அல்லது என் குருதேவரின் அக்னி ஸ்தம்பத்தைப் பிடித்துக் கொள்கிறாயா'' என்று அதட்டினார். அவள் உடனே கன்னத்தில் போட்டுக் கொண்டு ''மூன்றாம் நாள் காலையில் போய் விடுகிறேன். இதற்கு பூமிதேவி, ஆகாயம், சூர்ய சந்திரர்களே சாட்சி'' என்று சத்தியம் செய்தாள். அவ்வாறே மூன்றாம் நாள் அவள் அந்தக் கிராமத்தை விட்டுப் போனவுடன் அந்தவூர் எருதுகளுக்கு

ஆரோக்கியம் மீண்டது. ஸ்வாமியின் குண்டத்துக்கு விறகுகள் எடுத்துச் செல்ல வண்டி கட்டினார்.

ஸ்வாமி கோடி தீர்த்தத்தில் தங்கி இருந்தபோது ஒரு பக்தர் ஸ்வாமியிடம் ''ஸித்தலய்யமலையின் மேலுள்ள கோவிலில் ஒரு கல் உடைந்தபோது ஒரு சாது தான் அதை ஒட்டியதாகக் கூறினார்'' என்றார். ''உண்மைதான். ஒட்டிக்கொள்ளும். நானும் ஒரு முறை இந்தக் கோவிலில் சிவலிங்கத்தின் முன் அக்னி வளர்த்திக் கதவை மூடிவிட்டு சந்து வழியாகப் பார்த்தேன். நிலத்தின் மேல் பதிக்கப்பட்டிருந்த கற்கள் உடைந்து அந்தத் துண்டுகள் மேலே போயின. அதைப் பார்த்து நான் ''காலையில் ஊர்வாசிகள் வந்து பார்த்தால் என்ன நினைப்பார்களோ?'' என்று எண்ணியவுடனே அந்தத் துண்டுகள் எல்லாம் கீழே வந்து முன்புபோலவே ஒட்டிக்கொண்டு விட்டன'' என்றார் ஸ்வாமி. அதாவது சங்கல்பத்தினால் கற்களை ஒட்டவைக்க முடியுமென்று ஸ்வாமி கூறினார்.

ஸ்வாமி நடந்து கொண்டிருந்த காலத்தில் ஆசிரமத்தின் கற்றுச் சுவருக்குள் இருவர் சேர்ந்து தூக்கினால் கூடத் தூக்க முடியாத பெரும் பாறை ஒன்று இருந்தது. ஒருநாள் ஸ்வாமி தாம் ஒருவரே அந்தக் கல்லை எடுத்துத் தலையில் வைத்துக் கொண்டு மேற்குத் திசையில் நடந்தார். மூன்று மணி நேரத்திற்குப் பிறகு திரும்பிவந்தார். ''பாறை எங்கே ஸ்வாமி?'' என்று கேட்டபோது ''அது இங்கே இருக்கக் கூடாதய்யா'' என்றார்.

ஒருமுறை ஒரு பக்தர் வீடு கட்டுவதற்காக ஒரு வேப்பமரத்தூண் ஒன்று வாங்கி வைத்திருந்தார். அன்றிரவு ஸ்வாமி தாம் ஒருவரே போய் அதனை எப்படிக் கொண்டு வந்தாரோ, விடியற்காலையில் அந்த மரத்தூண் ஸ்வாமியின் குண்டத்தில் எரிந்து கொண்டிருந்தது. அந்த பக்தர் வந்து 'லபோ' 'திபோ' என்று அடித்துக் கொண்டார். ஸ்வாமி அவர் கையில் ஒரு கோடாரியைக் கொடுத்து அந்த எரிகின்ற மரக்கட்டையை இரண்டாகப் பிளக்கச் சொன்னார். அவ்வாறே பிளந்தபோது அந்த மரக்கட்டையிலுள்ள பொந்தில் நாகப்பாம்பு இருந்தது. அத்தகைய தூணை வீடுகட்டுவதற்கு உபயோகித்தால் அந்த வீடு சர்வ நாசமடையும் என்று வாஸ்து சாஸ்திரம் கூறுகிறது.

மல்லிக் வெங்கையா ஸ்வாமியின் முதல் ஆராதனைக்கு விறகுகள் ஏற்றிக் கொண்டு வந்து கொண்டிருந்தார். விடிகாலை நான்கு மணி சமயத்தில் இருட்டில் எருதுகள் பாம்பை மிதித்தனவோ என்னமோ? ஒரு இடத்தில் ஒரு பாம்பு படமெடுத்துவாலின் மீது நின்று கொண்டு வண்டியைத் தடுத்தது. வெங்கையா வண்டியை நிறுத்தி

விட்டுக் கோடாரியை எடுத்துக் கொண்டு அதை வெட்டுவதற்காக அருகில் போனார். அது புஸ்ஸென்று சீறிக் கொண்டு படமெடுத்தபடி அங்குமிங்கும் நிரிந்ததே தவிர எருதுகளையோ வெங்கையாவையோ ஒன்றும் செய்யவில்லை. வெங்கையா அதை வெட்டும் எண்ணத்தை விட்டு ஸ்வாமி தனக்குக் கற்பித்த மந்திரத்தை உச்சரித்தார். உடனே பாம்பு தன் படத்தைச் சுருட்டிக் கொண்டு போய்விட்டது.

நெல்லூர் பொட்டேபாளம் அருகிலுள்ள பெண்ணாநதியில் குடியானவர்கள் தர்பூசணிச் செடிகள் நட்டனர். ஸ்வாமி அங்கே ஒரு மணல்திட்டின் மீது வழக்கம் போல் அக்னிகுண்டத்தை வளர்த்தி அங்குத் தங்கினார். இந்த முனியவர் இருக்கிறார். நம் தோட்டத்துக்குக் காவல் ஆயிற்று என்று மகிழ்ந்தனர் குடியானவர்கள். நதி வரும் வழியில் மழை பெய்து அதனால் நதியில் நீர்ப்பெருக்கு அதிகமாயிற்று. நதியில் வெள்ளம் வருகிறதென்று ஸ்வாமியை ஊருக்குள் வரும்படி அவர்கள் எவ்வளவு கெஞ்சினாலும் ஸ்வாமி அசையவில்லை. குடியானவர்கள் போய்விட்டனர். பின்னர் நதியின் கரைகளை உடைத்துக் கொண்டு நீர் பெருக்கெடுத்தது. மூன்றாவது நாள் குடியானவர்கள் வந்து பார்த்தபோது ஸ்வாமி தாம் இருந்த இடத்திலேயே இருந்தார். அவரைச் சுற்றிலும் பத்து கஜதூரம் வரை உலர்ந்த மணல் இருந்தது. நதியின் கரையிலுள்ள மரங்களின் மீது சேர்ந்திருந்த குப்பைகளைப் பார்த்தால் நதி சுமார் 15, 20 அடி ஆழம் புரண்டோடியது என்று தெரிந்தது. நதியில் ஸ்வாமியைச் சுற்றிலும் உள்ள உலர்ந்த மணலைக் கண்டு உழவர்கள் ஆச்சரியப்பட்டு ஸ்வாமியை வணங்கினர். இந்நிகழ்ச்சி அன்று மோஸஸ்கு நதி வழி விட்டதைப் போல உள்ளது!

7. துன்பங்களில் துணை நிற்பவர்

சாதாரணமாக நாம் நமது முந்திய பிறவிகளில் செய்த தீவினைகளின் பயனை அனுபவித்தே தீரவேண்டும்; பிரம்மா அன்று எழுதிய எழுத்தை அழித்து எழுத முடியாது என்பது நம் எல்லோரின் அபிப்பிராயம் ஆகும். ஆனால் மஹான்களின் அருளுக்குப் பாத்திரமானவர்கள் அத்தகைய தீவினைகளின் பயனிலிருந்து விடுபடுகிறார்கள் என்பதை நம் ஸ்வாமி மற்றும் ஷீரடி சாயி முதலிய மஹான்களின் சரித்திரங்களிலிருந்து அறிகிறோம். ஸத்குருவின் அருள் நாம் பிரார்த்தித்த சமயங்களில் மட்டுமின்றி நமக்கு வரப்போகும் துன்பத்தைப் பற்றி நமக்குத் தெரியாமல் இருக்கும் சமயத்தில் கூட, எப்போதும் கவனத்துடனிருந்து நம்மைக் காத்து வருகிறது என்பதை இந்த அத்தியாயத்திலுள்ள நிகழ்ச்சிகள் விளக்குகின்றன.

கொர்ரகூடி புஜ்ஜையாவின் தங்கை பத்மாவுக்குத் திருமணம் நிச்சயமாயிற்று. திருமணத்தைக் காஞ்சி வரதராஜஸ்வாமியின் சந்நிதியில் நடத்தும்படி ஸ்வாமி கூறினார். அவரையும் திருமணத்துக்கு வந்து தம்பதிகளை ஆசீர்வதிக்கும்படி அவர்கள் கேட்டுக் கொண்டனர். ஸ்வாமி தம் பரிவாரத்தோடு விவாகத்துக்கு வந்து தாலியையும் தலையின் மீது தூவும் அக்ஷதைகளையும் தம் கரத்தால் தொட்டு ஆசீர்வதித்து அருகிலிருந்து அந்தத் திருமணத்தை நடத்தினார். தம்மிடமிருந்து ஒரு ரூபாய் அளித்துக் கற்பூரம் வரவழைத்து அதனை ஏற்றித் தம் அருகில் வைத்துக் கொண்டார். ஸ்வாமி எவருடைய வீட்டுக்கோ அல்லது திருமணத்துக்கோ தம் வாழ்நாளில் ஒரு போதும் சென்றவரல்ல. ஒரு முறை ஸ்வாமி பத்மாவிடம் ''அம்மா, எவ்வளவு கஷ்டங்கள் வந்தாலும் கண்கலங்கக் கூடாது அம்மா'' என்றார். பின்னர் அவர்களுக்கு எவ்வளவு கஷ்டங்கள் வந்தாலும் அவையாவும் ஸ்வாமியின் அருளினால் விலகி நிம்மதியாக வாழ்ந்து வருகின்றனர்.

ஒரு முறை ஸ்வாமி தனுப்பூரிலிருந்து கொலகமூடிக்கு வந்து கொண்டிருக்கும்போது தெல்லூர் பஸ்டாண்டை அடைந்ததும் ''ஐயா, நாம் ஆஸ்பத்திரிக்குப் போகவேண்டும்'' என்று கூறித் தாமே ஜீப்பிலி ஆஸ்பத்திரிக்குப் போகும் வழியைக் காட்டினார். ஒரு போதும்

வைத்தியசாலைக்குப் போய் அறியாத ஸ்வாமி இப்போது எதற்காகப் போகிறாரென்று ஒருவருக்கும் விளங்கவில்லை. அவர் ஆஸ்பத்திரிக்குப் போனவுடனே அங்கிருந்த அவரது அனன்ய பக்தர் புஞ்ஜையாவும், உடல்நலமின்றி இருந்த அவரது தங்கை பத்மாவும் அளவற்ற ஆனந்தத்தோடு ஸ்வாமியை தரிசித்து வணங்கினர். ஸ்வாமி அங்குச் சிறிது நேரம் இருந்த பிறகு ''இங்கே கணக்கு சரியாகிவிட்டது; வாருங்கள், நாம் போகலாம்'' என்றார். பத்மாவுக்குச் சில நிமிஷங்களிலேயே குணம் ஏற்பட்டு வீட்டுக்குச் சென்று ஸ்வாமியின் அருளை வியந்து போற்றினாள்.

கம்மம்பாடு கிராமத்தைச் சேர்ந்த லலிதம்மாவுக்குத் திருமணமாகி நான்கு ஆண்டுகள் வரை குழந்தைகள் பிறக்கவில்லை. அவளுக்கு நரம்பு பலவீனத்தால் உடல்வலி முதலியவை இருந்தன. டாக்டர்கள் அளித்த மருந்துகளாலும் ஊசிகளாலும் பயன் இல்லை. அவள் ஸ்வாமியின் தரிசனத்துக்காக வந்தபோது அவள் எதுவும் கூறுவதற்கு முன்பே ஸ்வாமி ''இவளுக்கு வியாதி ஐயா; போய்விடும். கூடூர் கர்ணம் இறந்துவிட்டார். அவரை இவளுடைய வயிற்றில் வைத்தேன்'' என்று கூறி, விரல் முத்திரைக் காணிதமும் பிரசாதமான நூலும் அளித்து அனுப்பினார். அவள் அதன்பின் எந்த மருந்தும் இல்லாமலே ஆரோக்கிய மடைந்து கர்ப்பம் தரித்து ஒரு ஆண்டுக்குள்ளேயே ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். இப்போதும் அவள் ஐம்பது மைல் தூரத்திலிருந்து வந்து ஸ்வாமி சமாதியைத் தரிசிக்கிறாள்.

ஒருநாள் ரோசிரெட்டியை ஏதோ பூச்சி கடித்துவிட்டது. கால் சிவந்து வீங்கி, நடக்க முடியவில்லை. நதிக்கு குளிக்கப் போனபோது ஸ்வாமியை நினைத்து ''உன்னையன்றி எனக்கு வேறு எவர் நிக்கு அப்பா?'' என்று மணலால் தன் காலைத் தெய்த்துக் கழுவிவிட்டு ஸ்வாமியிடம் வந்தார். சாயங்காலத்துக்கெல்லாம் கால் சரியாகிவிட்டது. அன்றிரவு ஸ்வாமி ரோசிரெட்டியிடம் ''குளிக்கப்போன போது பார்த்துக் கொள் புரியும்'' எனறார். குளிக்கப்போனபோது தான் முறையிட்டுக் கொண்டதை ஸ்வாமி கேட்டருளி, அவரை நினைத்து காலைத் தெய்த்துக் கொண்டதால் தன் துன்பம் நீங்கியது என்று உணர்ந்து கொண்டார் ரோசிரெட்டி.

கொலகமூடி கர்ணம் கூறிய ஒரு சம்பவம் : ஒரு முறை ஒரு அரசாங்க உத்தியோகஸ்தர் மீது பல புகார்கள் அரசாங்கத்துக்கு அனுப்பப்பட்டன. அவையாவும் உண்மையே என்று நிருபிக்கப் பட்டதால் கலெக்டர் அவரை ஸஸ்பென்ஷன் செய்யப்போவதாகத் தெரியப்படுத்தினார். அத்தகைய கஷ்டமான நிலையில் ஸ்வாமியின் ஆசிக்காக அவர் வந்தார். ''அவருக்கு வண்ணான் மூட்டையளவு பாவம்

உள்ளது. அவர் இங்கே இருந்தால் நமக்கு ஒரு பைஸா நஷ்டம் ஆகும். உடனே போகச் சொல்லய்யா'' என்றார் ஸ்வாமி. அவர் நகரவில்லை. அதே சொற்களை மீண்டும் மீண்டும் கூறி ஸ்வாமி அவரை அனுப்பி விட்டார். அந்த ஆபீஸர் அரை மணி நேரத்துக்குப் பிறகு மீண்டும் ஸ்வாமியைத் தரிசித்து ''ஸ்வாமி, நீங்கள் கருணை காட்டாவிடில் என் கதி என்னாகும்?'' என்று மன்றாடினார். ''உன் விலாசம் எழுதிக் கொடுத்துவிட்டுப் போ. காகிதம் எழுதி அனுப்புகிறேன்'' என்று அபய மளித்தார் ஸ்வாமி. ஸ்வாமியின் அருளால் அவரது வேலை நிறுத்த உத்தரவு நிறுத்தப்பட்டு மாற்றல் மட்டுமே ஏற்பட்டது.

ஒரு முறை ஸ்வாமி ரோசிரெட்டியிடம் ''வெங்கையாவுடையது ஒரே சொல் அல்லவா ஐயா'' என்றார். அவரது அமுதவாக்குக்கு எவ்வளவு சக்தி உள்ளதோ, அவர் செய்யும் சின்னக் குறிப்பின் பின் எவ்வளவு பலமான காரணம் உள்ளடங்கி உள்ளதோ என்பது அதை அனுபவித்தவருக்கே தெரியும்.

ஸ்வாமியின் சேவகர்களில் ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு வேலை ஒப்படைக்கப் பட்டிருக்கும். அவரவர்கள் தம் வேலையைப் பக்தி சிரத்தையோடு செய்வார்கள். அக்னி குண்டத்துக்கு விறகுகள் வெட்டிக் கொண்டு வருவது வை. ரமணய்யாவின் பணி. ஒரு நாள் தூங்கி எழுந்த உடனே ஸ்வாமி ரமணய்யாவை அழைத்து ''இன்று இங்கேயே குண்டத்தைக் கவனித்துக் கொண்டிரு ஐயா'' என்றார். சிறிது நேரத்தில் அந்தச் சொற்களைப் பொருட்படுத்தாமல் விறகு வெட்டச் சென்றார் ரமணய்யா. அங்கு ஒரு பெரிய மரத்தின் மேல் ஏறிக் கொம்புகளை வெட்டிக் கொண்டிருக்கையில் ஒரு பெரும் கொம்பு முறிந்து அவரது மார்பில் விழுந்ததால் அவர் இறே விழுந்தார். புஜத்தினருகில் எலும்பு முறிந்தது. நல்லவேளை, நான்கு [illegible]ற்குல தூரத்திலே இருந்த பாறையின் மேல் விழுந்திருந்தால் மண்டை [illegible]டந்து அப்போதே இறந்திருப்பார். ஸ்வாமியிடம் கூறியபோது ரமணய்யாவுக்கு ஆஸ்பத்திரியே கதி என்று சீட்டு எழுதுவித்தார்.

நீண்டகாலமாக ஸ்வாமி சேவை செய்துவந்த பரிகெல நாகய்யாவுக்கு ஒரு முறை வலது புற விலா எலும்புகளுக்குக் கீழே விபரீதமான வலி ஏற்பட்டுத் தவித்தார். பக்தர்கள் டாக்டரிடம் போகலாம் என்ற போது 'ஸ்வாமியே எனது டாக்டர். எனக்கு அவரே கதி' என்று ஸ்வாமியையே நினைத்துக் கொண்டிருந்தார். தாங்க முடியாத வலி குறையவே இல்லை. தாங்க முடியாத வேதனையின் வேகத்தில் ''ஏன் ஸ்வாமி, கலியுகத்தில் பூலோகத்தை விட்டுவிட்டு வைகுண்டத்துக்குப் போய்விட்டாயா? இல்லையென்றால் என்னை மறந்து விட்டாயா ஸ்வாமி?'' என்று உரத்த குரலில் ஸ்வாமியை அழைத்தார். உடனே வலி குறைந்து போய் கண்கள் மூடிக் கொண்டன.

ஸ்வாமி கனவில் காட்சியளித்து ''நான் எங்கே போனேன் ஐயா? உன் அருகிலேயே இல்லையா?'' என்று கேட்டார்.

ஸ்வாமியின் சேவகரான ஜயராமராஜு ஒரு நாள் வேலூர் சுப்பிரமணிய நாயுடுவுக்குத் தம் அனுபவத்தைக் கூறினார். ''ஒரு நாள் நான் என் எருதுகளை மேய்ப்பதற்காகக் காட்டுக்கு ஓட்டிப் போய்க் கொண்டிருந்த போது ஸ்வாமி'' அவற்றை அங்கே விட்டுவிட்டு வா ஐயா'' என்றார். ''நான் வந்தால் எப்படி ஸ்வாமி? மேய்ப்பவர்கள் இல்லையே?'' என்றேன். ''பரவாயில்லை! ஓட்டி விட்டு வந்துவிடு'' என்றார். நான் ஸ்வாமியின் மீது பாரத்தைப் போட்டுவிட்டு அங்கே எருதுகளை விட்டுவிட்டு அங்குள்ள மாடு மேய்க்கும் பிள்ளைகளிடம் சொல்லிவிட்டு வந்து ஸ்வாமியினருகில் அமர்ந்து கொண்டேன். சிறிது நேரத்தில் ஸ்வாமி திடீரென்று எழுந்து தடியை எடுத்துக் கொண்டு ''ஏய், ஏய்'' என்று கத்தியவாறு இருபது கெஜ தூரம் போய்விட்டுத் திரும்பி வந்து அமர்ந்தார். ''ஏன் ஸ்வாமி, அங்கு ஒன்றுமில்லாவிட்டாலும் விரட்டுகிறீர்களே'' என்று கேட்டேன். ''உன் எருதுதான் ஐயா'' என்றாரே தவிர வேறு ஒன்றும் கூறவில்லை. மறுநாள் விடிகாலை மாடுமேய்க்கும் பையன் ''நேற்று சிறுத்தைப் புலி ஒன்று வந்து உன் எருதைப் பிடிக்கப் போயிற்று. அந்த விரல் முத்திரை ஸ்வாமி வந்து தடியெடுத்து அதனை விரட்டினார். இல்லாவிடில் உன் எருது சிறுத்தையின் வாயில் போயிருக்கும்'' என்றான். ஜயராமராஜுவுக்கு இத்தகைய அனுபவங்கள் எவ்வளவோ ஏற்பட்டன. எனவேதான் அவர் ஸ்வாமியின் சேவைக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டார்.

ஒருநாள் ஸ்வாமி தமது இடது உள்ளங்கையின் மேல் வலது கை ஆள்காட்டி விரலை வைத்துக் 'குச்சி குத்திவிட்டதையா' என்றார். உண்மையில் அவருக்குக் குச்சி எதுவும் குத்தவில்லை. ஒரு மணி நேரத்துக்குப் பிறகே அவர்களுக்கு நடந்த விஷயம் தெரிந்தது. அந்தச் சமயத்தில் கொர்ரகூடி புஜ்ஜையா அரைமைல் தூரத்தில் இருந்தார். சரியாக உள்ளங்கையில் அதே இடத்தில் ஸ்வாமி அவ்வாறு கூறிய சமயத்திலேயே அவருக்குத் தேள் கொட்டியது என்று தெரியவந்தது. ஸ்வாமியை ஸ்மரித்த உடனே எந்த மருந்துமில்லாமலே அந்த வலி முழுதும் குறைந்து போய்விட்டது.

ஒரு முறை ஸ்வாமி கலிச்சேடில் இருக்கும்போது அவரது சேவகர் ரோசிரெட்டிக்கு கண் ஆபரேஷன் நடந்து கண்கள் வலியாக இருந்தன. ஒருநாள் ஸ்வாமி ''ஐயா, நீ வீட்டுக்குப் போய்வர வேண்டும். நாற்பது லட்சம் கட்டினால் வழியில் ராமலக்ஷ்மணர்கள் காப்பாற்றுவார்கள். ஊருக்குப் போனால் இராம தேவதை காப்பாற்றுவாள். நாளை காலை

எனக்குச் சொல்லாமலே போய் மறுபடியும் வந்துவிடு'' என்று சீட்டு எழுது வித்தார் ஸ்வாமி. அவர் அவ்வாறே புறப்பட்டார். ராஜம்பேட்டை ரெயில்வேஸ்டேஷனில் ப்ளாட்பாரம் மீது நடந்து கொண்டிருக்கும் போது, வெளிச்சம் சரியாக இல்லாததால் கண் தெரியாமல் பிளாட் பாரத்திலிருந்து வழுக்கி நாலடி ஆழத்திலுள்ள தண்டவாளங்களின் மீது விழுந்த போதும் கொஞ்சம்கூட அடிபடவில்லை. ஊரை அடைந்தவுடன் அவர் அங்கிருந்த நான்கு நாட்களும் இராமதேவதை எல்லம்மாவின் தரிசனம் கிடைத்தது. தண்டவாளத்தின் மேல் விழுந்தபோது 'வழியில் ராமலக்ஷ்மணர்கள் காப்பாற்றுவார்கள்' என்று ஸ்வாமி கூறிய சொற்களின் பொருள் விளங்கியது.

ஒரு முறை கொலகமூடி செத்தையா வயலில் சேற்றில் வேலை செய்து கொண்டிருந்தபோது சேற்றில் இருந்த தேள் உள்ளங்காலில் கொட்டியது. 'ஓம் குருதேவா' என்று காலைக் கெட்டியாகப் பிடித்தவாறே ஸ்வாமியை நினைத்தார். உடனே வலி குறைந்து போய் மீண்டும் தன் வேலையைத் தொடர்ந்தார்.

கொட்டடி சேஷய்யாவின் எருமைக்குத் தீவிரமான வியாதி ஏற்பட்டு அவர் ஸ்வாமியிடம் வந்தார். ஸ்வாமி அப்போது கஞ்சி பருகிக் கொண்டிருந்ததால் சேவகர்கள் அவரைச் சற்றுத் தூரமாக இருக்கும் படியும் பிறகு ஸ்வாமியைப் பார்க்கலாமென்றும் கூறினர். ஆனால் சேஷய்யாவோ மிகவும் அவசரப்பட்டார். ஸ்வாமி அவருடைய பக்கம் பார்த்துவிட்டு உடனே ''ஐயா, நீ போய்ச் சேரும் சமயத்துக்கு எருமை நன்றாக இருக்கும், போ'' என்றார். அவர் வீட்டை அடைந்தபோது எருமை வியாதி நீங்கி புல் மேய்ந்து கொண்டிருந்தது.

கொலகமூடிவாசியான தூபிலி வெங்கையா நீண்டகாலமாக ஸ்வாமி மற்றும் அவரது குழுவினரின் உடைகளைத் துவைத்து வந்தார். 1981-ஆம் ஆண்டு கோடைக்காலத்தில் ஒருநாள் நள்ளிரவில் எவரோ எழுப்பியதைப் போல் விழிப்பு ஏற்பட்டது. பிறகு எழுந்து பீடியைப் பற்றவைத்துக் கொள்வதற்காக உள்ளே நீபத்தினருகில் போனார். அப்போது அந்த அரைகுறை இருட்டில் நடுவீட்டில் அமர்ந்திருந்த ஒரு ஆளைக் கண்டு திடுக்கிட்டு உரக்கக் கத்தினார். அதைக் கேட்டு அந்த ஆள் கூடக் கத்தினான். இந்த இரைச்சலினால் எல்லோரும் எழுந்து கூடினர். பார்த்தால், வீட்டிலுள்ள பாத்திரங்கள் மற்றும் சாமான்களைத் தன்னைச் சுற்றிலும் வைத்துக் கொண்டு, ஒரு பக்கம் விலையுயர்ந்த துணிமணிகளைக் குவித்து வைத்துக் கொண்டு ஒரு திருடன் அமர்ந்திருந்தான். அவனைப் பிடித்துக் கட்டினார்கள். அவனிடம் ஒரு பெரும் தடிகூட இருந்தது. 'ஏண்டா, இவ்வளவு சுலபமாகப் பிடிபட்டு

விட்டாயே?' என்று கேட்டபோது அவன் கூறினாள். ''நான் வீட்டுக்குள் நுழையும்போதே யாரோ என் முதுகில் அடித்தது போல் தோன்றி என் சக்தி முழுதும் போய்விட்டது. எப்படியோ பலத்தைத் திரட்டிக் கொண்டு எல்லாச் சாமான்களையும் மூட்டை கட்டிக் கொண்டேன். அப்போது ''எடுத்த சாமான்களை எல்லாம் அவை இருந்த இடத்திலேயே வை'' என்று யாரோ கர்ஜித்த மாதிரி கேட்டது. அதை மீற முடியாமல் மூட்டையை அவிழ்த்து இப்படிப் பரப்பி வைத்தேன். கண்கள் தெரியாமல், எழுவதற்குச் சக்தியில்லாமல் இங்கேயே உட்கார்ந்து விட்டேன். இல்லாவிட்டால் நீங்கள் அனைவரும் சேர்ந்தாலும் எனது ஒரு அடிக்கு ஈடு கொடுக்க முடியுமா?''

பெம்மனாஸிஸ்ரீஹரிநாயுடு, ஸ்வாமி போக விரும்பிய இடங்களுக் கெல்லாம் தம் வண்டியில் அழைத்துக் கொண்டு போவார். ஒரு முறை அவரது மனைவி ஸ்வாமி தங்கியிருந்த இடத்துக்குச் சென்று அவரை நமஸ்கரித்தாள். ஸ்வாமி 'அம்மா, உன் மஞ்சன்குங்குமத்துக்கு கண்டம் இருக்கிறது. திருவள்ளூர் வீரராகஸ்வாமி காப்பாற்றுவார்'' என்றார். அன்றிரவு ஸ்வாமி அவர்களது வீட்டிற்கு வந்து துளியை ஏற்றி, விடிகாலை அவர்களது வண்டியிலேயே அருகிலுள்ள ஒரு மைக்காச் சுரங்கத்துக்குப் போனார். அன்று ஸ்ரீஹரிநாயுடு எருதுக்குப் புல் போடப் போனபோது, சாதாரணமாக மிகவும் சாதுவான அந்து எருது அவரது தொடை இடுக்கில் தன் கொம்புகளைச் செலுத்தி எடுத்துத் தூரத்தில் எறிந்தது. கொம்புகள் தொடை இடுக்கில் நன்றாகக் குத்தி ஆறங்குலம் தூரம் உள் வயிறு வரைக்கும் இறங்கியிருந்தன. நிரம்ப ரத்தம் போயிற்று. ஆஸ்பத்திரியில் காயத்தைத் தைத்தனர். ஆனால் ஸ்வாமியின் அருளினால் உயிர் தப்பினார். அவர் ஸ்வாமியின் காரியங்களில் பக்தியோடு பலவிதங்களில் பங்கேற்றுச் சேவை செய்தார்.

நெல்லூர்வாசியான மாகாளி வெங்கட்ராவ் சென்னைக்குப் போக ஸ்வாமியின் அனுமதியைக் கேட்டார். சாதாரணமாகப் 'போய்வரச் சொல்' என்றாவது 'தங்கமாகப் போய் வரச்சொல்' என்றாவது கூறும் ஸ்வாமி அன்று ''திருவள்ளூர் வீரராகவஸ்வாமியும் காஞ்சி வரதராஜ ஸ்வாமியும் உன்னைக் காப்பாற்றுவார்கள் போ'' என்றார். வெங்கட்ராவ் சென்னைக்குப் போய்க் கூட்டமாக இருந்த பஸ்ஸில் ஒரு கால் பஸ்ஸின் படி மீது வைத்து ஒரு கையால் பஸ் கைப்பிடியைப் பிடித்துக் கொண்டார். இரண்டாவது காலைத் தூக்குவதற்கு முன்பே பஸ் நகர்ந்த தால் அந்தக் கால் நிலத்தில் உராய்ந்தது. எல்லோரும் அவர் விழுந்து விட்டார் என நினைத்தனர். பின்னாலுள்ளவர்கள் கத்தினாலும் டிரை வருக்குக் கேட்கவில்லை. வெங்கட்ராவ் கூட நம்பிக்கையை இழந்து விட்டார். உடனே முன்பக்கச் சக்கரம் வெடித்து பஸ் திடீரென்று நின்றுவிட்டது. அவ்வாறு மட்டும் நிகழ்ந்திராவிடில் வெங்கட்ராவின்

பிடி நழுவிக்கீழே விழுந்து உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருந்திருக்கும். டயர் பிளந்தது அவரது அதிருஷ்டமே என்று பிரயாணிகள் அனைவரும் எண்ணினர். புறப்படும்போது ஸ்வாமி கூறிய ஆசிகளின் பொருள் அப்போது வெங்கட்ராவுக்குப் புரிந்தது.

ஒரு முறை ஸ்வாமி தம் குழுவினரோடு சேர்ந்து திருப்பதிக்குப் போனார். தவறுதலாக ரோசிரெட்டியை மட்டும் அங்கேயே விட்டுவிட்டு மற்றவர் யாவரும் கலிச்சேடை அடைந்தனர். ரோசிரெட்டி திருப்பதியிலிருந்து கூடூர் வரையுள்ள ரயில் பிரயாணத்தில் டிக்கெட்டும் வாங்கவில்லை. பின்னர் கூடூரிலிருந்து கலிச்சேடுக்கு எவ்வாறு போவது என்று யோசித்துக் கொண்டிருக்கும்போது யாரோ ஒரு பெண்மணி தட்டில் வாழைப்பழங்களும் ஒரு ரூபாயும் வைத்து அவருக்கு அளித்து ஏழை யான தான் அளிக்கும் அந்தச் சின்ன அன்பளிப்பை ஏற்குமாறு வேண்டினாள். ஸ்வாமி தனக்கு அருளிய அந்த ரூபாயை பிரயாணச் செலவுக்கு உபயோகித்து ரோசிரெட்டி கலிச்சேடு வந்து சேர்ந்தார்.

வல்லபுரெட்டி துளசம்மாவின் மகன் நாராயணரெட்டிக்குக் காசநோய் ஏற்பட்டு அவருடைய உடல்நிலை அபாயகரமாக இருந்தது. இனி அவர் பிழைக்க மாட்டார் என்று எல்லோரும் அவரைப் போய்ப் பார்த்து வந்தனர். நீண்டகாலமாக வீட்டைவிட்டு ஸ்வாமியின் சேவையில் இருக்கும் துளசம்மாவை அவரது நண்பர்கள் போய் மகனைப் பார்த்துவிட்டு வருமாறு கூறினார்கள். துளசம்மா அதற்கு ஸ்வாமியிடம் அனுமதி கோரினபோது "அவனுக்கென்ன அம்மா? நன்றாக இருப்பான். நீ போக வேண்டாம்" என்றார் ஸ்வாமி. அதனால் துளசம்மா போகவில்லை. நாராயண ரெட்டிக்கு உடல்நலமாகிப் பின்னர் திருமணம் நடந்து குழந்தைகளும் பிறந்தனர்.

கொலகமூடியின் கர்ணமான சுப்பாராவின் மகன் தன் சிநேகிதனோடு நடந்து வந்து கொண்டிருக்கும்போது அவனது பின்பக்கத்திலிருந்து ஒரு ட்ராக்டர் அவன்மீது மோதியது. அவனது வயிற்றின் மீது ட்ராக்டரின் முன் சக்கரம் ஏறியது. விலா எலும்பு ஒன்று முறிந்து அவனை அரசாங்க மருத்துவமனையில் சேர்த்தனர். அவன் மூன்று மாதங்களில் நடப்பான் என்றார் மருத்துவர். அவனது நண்பன் நான்கு சக்கரங்களுக்கு மத்தியில் விழுந்து உடலில் சிராய்ப்புகள் ஏற்பட்டதே தவிர பெரிய அடியேதும் படவில்லை.

இந்த விபத்து நடந்த அதே சமயத்தில் ஸ்வாமி ஆசிரமத்தில் 'அபாயம், அபாயம்" என்று உரக்கக் கத்தியவராக "தீபம் ஏற்றுங்கள்' என்று பகல் வேளையில் தீபம் ஏற்றுவித்தார். மேற்கூறிய விபத்தைப் பற்றி விடிகாலையில் தெரிந்தபோதுதான் பக்தர்களுக்கு ஸ்வாமியின்

செயல்களுக்குப் பொருள் விளங்கியது. விபத்தைப் பற்றிய விஷயத்தைச் சேவகர்கள் ஸ்வாமிக்குக் கூறியபோது ''பதினைந்து நாட்களில் குணமாகி வந்துவிடுவான். கடவுள் காப்பாற்றினார்'' என்று சீட்டு எழுதுவித்து, தாம் உபயோகித்த கௌபீனத்தை அளித்து அதனை அவனது படுக்கையின் மீது விரிக்கும்படியும், தாள் அளிக்கும் விபூதியை அவள் வாயில் போடும்படியும் கூறி அனுப்பினார். டிராக்டரின் பின் சக்கரம் அவன் மீது ஏறாமல் அவன் தப்பியது ஆச்சரியமே. ஸ்வாமி கூறியபடியே அவன் பதினைந்து நாட்களிலேயே நடக்க ஆரம்பித்தபோது அவனை ஆஸ்பத்திரியிலிருந்து டிஸ்சார்ஜ் செய்தனர்.

8. அமுத வாக்கு

பரமாத்மாவின் தெய்வீக சக்தியே இந்தப் பிரபஞ்சத்திலுள்ள எல்லா உருவங்களாகவும் ஆயிற்று. அந்த சக்தியே நம் சரீரத்திலும் இயங்குகிறது. அது சரியாக இயங்கினால் உடல் நலமாக இருக்கும். நம் முன்வினைகளைப் பொறுத்து அந்த சக்தி கொஞ்சம் தாறுமாறாக இயங்கினால் நோய் ஏற்படுகிறது. மஹான்களிடம் இந்த சக்தி முழுமையாக இயங்குவதனால் அவர்கள் இயற்கையை அடக்கியாளு கின்றனர். குணப்படுத்துவதற்கு அரிய நோய்களைக் கூட அவர்கள் குணப்படுத்துகிறார்கள். அத்தகைய உதவியைப் பெற்ற பக்தர்கள் அந்த மஹான்களிடம் நன்றியோடு பக்தியையும் நம்பிக்கையையும் வளர்த்துக் கொண்டு தர்மத்தை அனுசரித்து வாழ முற்படுகிறார்கள். கடவுள் உள்ளார் என்ற நம்பிக்கை உலகியலிலேயே முழுதும் மூழ்கிக் கிடப்பவர்களுக்கு எவ்வாறு ஏற்படும்? அத்தகையவர்களுக்கு கடவுள் நம்பிக்கையை ஏற்படுத்தி நல்வழியில் நடத்த வேண்டும் என்ற எண்ணமே அவர்களது லீலைகளுக்குக் காரணம் ஆகும்.

பித்தன் வெங்கையா என்ற பட்டம் போய் வெங்கைய்யஸ்வாமி என்ற பட்டம் கிடைத்தது ஸ்வாமிக்கு. எங்காவது கால்நடைகளுக்கு பேதி, குடல்வியாதி போன்ற நோய்களோ ஜனங்களுக்குக் காலரா, அம்மை போன்ற நோய்களோ வந்தால் அந்தக் கிராமத்திலிருந்து ஒருவர் வந்து ஸ்வாமிக்குத் தெரியப்படுத்துவார்கள். ஸ்வாமி ஆசீர்வதித்து சாம்பிராணி, தமது நூல் முதலியவற்றை அளிப்பார். கால்நடைகளையெல்லாம் மந்தையாகச் சேர்த்து புகை போடுவார். அதன் பின்னர் அவ்வூரில் அந்த நோய்கள் அறவே நீங்கிவிடும். தேள், பாம்புக்கடிகளிலிருந்து அவர் பக்தர்களைக் காப்பாற்றிய நிகழ்ச்சிகள் ஏராளம். இன்றும் கூட ஸ்வாமியின் சமாதியைப் பிரதக்ஷிணம் செய்வ தால் விஷத்தின் வேகம் குறைந்து விடுகிறது. எவ்வளவோ பேர் நீண்ட காலமாக பீடிக்கப்பட்டுள்ள வியாதிகளிலிருந்து விடுபடுகிறார்கள்.

புஜ்ஜையாவுக்கு கழுத்தின் மேலுள்ள ரத்தக்குழாய் எலும்புக்குக் கீழே அழுத்தப்பட்டு ரத்த ஓட்டம் சரியில்லாமல் உடலெல்லாம் மரத்துப் போயிற்று. சென்னையிலுள்ள ராமமூர்த்தி முதலிய மருத்துவர்கள்

சிகிச்சை செய்தும் முழுமையான குணம் ஏற்படவில்லை. இந்தத் துன்பத்தைப் பற்றி ஸ்வாமியிடம் தெரிவித்தவுடனே புஜ்ஜையாவைக் குளியும்படிக் கூறி ஸ்வாமி தம் கரத்தால் அவரது கழுத்தைத் தொட்டார். உடனே அவரது நோய் நீங்கிவிட்டது.

ஸஞ்ஜீவையாவின் மகன் ஒபய்யா ஸ்வாமியோடு சிறுவயதில் விளையாடிய நண்பர். அவர் நீண்டகாலமாக ஆஸ்துமாவால் துன்பப் பட்டுக் கொண்டிருந்தார். தம் நோயைக் குறித்து ஸ்வாமிக்குத் தெரியப் படுத்திய உடன் ஸ்வாமி தம் உள்ளங்கையால் அவர் உடலை முழுதும் தேய்த்துவிட்டார். உடனே அவரது ஆஸ்துமா குணமடைந்து மீண்டும் ஒரு போதும் வரவில்லை.

பெனவர்த்திவாசியான வல்லபுரெட்டி துளசம்மாவுக்குக் காண்ஸர் வியாதி ஏற்பட்டு அமெரிக்கன் ஆஸ்பத்திரியில் சேர்த்தார்கள். டாக்டரம்மா, அவள் பிழைக்க மாட்டாள் என்று கூறி உடனே வீட்டுக்கு அழைத்துச் செல்லும்படிக் கூறினார். மறுநாள் வரைக்கும் வைத்துக் கொள்ளும்படி வேண்டினால்கூட ஒப்புக் கொள்ளவில்லை. உறவினர் கள் அவளை ஸ்வாமியிடம் அழைத்து வந்தனர். அவளை மூன்று நாட்கள் ஸ்வாமியிடம் வைத்திருந்தனர். ஸ்வாமி ''அவளை மூன்று நாட்கள் வீட்டில் வைத்திருந்து விட்டு அழைத்து வாருங்கள்'' என்றார். அவ்வாறே செய்தனர். அந்த வியாதி மாயமானதோடு அவள் மேலும் இருபது வருஷங்கள் வாழ்ந்து ஸ்வாமி சேவை செய்தாள். அவளைக் குறித்து ஸ்வாமி ஒரு முறை ''ஐயா, அம்மா பிரம்மத்தின் அருகில் அல்லவா இருக்கிறாள்!'' என்றார். அவளை ஸ்வாமி எப்போதும் அம்மா என்று அழைப்பார். அம்மா என்பது இயற்கைத் தாய்க்குச் சங்கேதம். ஆண்டவனால் அளிக்கப்பட்ட புது வாழ்வை அவள் இறைவனின் சன்னிதியிலும் சேவையிலுமே கழிக்க வேண்டுமென்பது அவரது நிர்மானம். அவளுக்கு அவ்வளவு காலம் ஸ்வாமியின் சந்நிதியும் சேவையும் எதனால் கிடைத்த தென்பதையும் ஒரு முறை ஸ்வாமியே கூறினார். ''ஐயா, அம்மா நமக்கு நான்கு பிறவிகளாக உணவு படைத்து வருகிறாளய்யா'' என்றார். அவ்வாறு அன்போடு சில பிறவிகளாக ஸத்குரு சேவை செய்தவர்களுக்கே நிரந்தரமான சந்நிதியும் சேவையும் கிடைக்கின்றன.

பல்லம்ரெட்டி கிருஷ்ணாரெட்டி அடிக்கடி ஸ்வாமியின் தரிசனத்துக்குப் போவார். சங்கம் கிராமத்தைச் சேர்ந்த ஒருவர் ஒரு கல்யாண விஷயமாக கிருஷ்ணா ரெட்டியோடு கொலகமூடிக்கு வந்து ஸ்வாமியைப் பார்த்தார். ''இவர் என்ன ஸ்வாமி, இப்படி இருக்கிறாரே' என்று நினைத்துக் கொண்டு ஆசிரமத்தருகில் நின்று கொண்டிருந்தார். அப்போது ஒருவருக்குத் தேள் கொட்டி விபரீதமான வலியோடு

ஸ்வாமியிடம் வந்தார். ஸ்வாமி, ''அது என்ன செய்யும் ஐயா? போய் விடும்'' என்றார். உடனே அவருடைய துன்பம் நீங்கி விட்டுக்குத் திரும்பினார். இதைப் பார்த்தவுடன் மேற்கூறப்பட்ட பெரிய மனிதருக்கு மனது மாறி பக்திபாவத்தோடு ஸ்வாமியை வணங்கினார்.

கலிச்சேடு நரஸாரெட்டியின் எருதைப் பாம்பு கடித்துவிட்டது. அதனுடைய வயிறு வீங்கி, தினி தின்னாமல், உமிழ்நீர் ஒழுகியது. இறக்கும் தறுவாயிலிருந்த அதை வண்டியில் ஏற்றி ஸ்வாமியிடம் கொண்டு சென்றனர். ஸ்வாமி, பாம்பு கடித்த காயத்தின் மேல் கையை வைத்து சுவாசத்தை நன்றாக இழுத்து வெளியே விட்டார். அது வரைக்கும் தினி தின்னாமலிருந்த எருது உடனே எழுந்து, சாணிபோட்டு விட்டுப் புல்தின்ன ஆரம்பித்தது. ஸ்வாமியின் யோக சக்தியைக் கண்டு அனைவரும் வியந்தனர்.

ஒருநாள் ஸ்வாமி ''நரசாரெட்டிக்குப் பாம்பு கண்டம் உள்ளது. திருவள்ளூர் வீரராகவஸ்வாமி காப்பாற்றுவார்'' என்று சீட்டு எழுதி வித்தார். சில நாட்களுக்குப் பின் ஒருநாள், குதிரின் அடிப்பாகத்தில் கொஞ்சம் நெல் இருக்கவே அதனை எடுப்பதற்காக ரெட்டி அதற்குள் இறங்கினார். காலுக்கடியில் மிருதுவாக தவளையைப் போல் ஏதோ தட்டுப்படவே காலை மற்றொரு இடத்தில் வைக்க அங்கும் அவ்வாறே தட்டுப்பட்டது. எந்த இடத்தில் கால் வைத்தாலும் அப்படியே இருக்க, ''இது என்ன இவ்வளவு தவளைகள் உள்ளனவே'' என்று லாந்தரை வரவழைத்துப் பார்த்தபோது, தான் பெரிய நாகப்பாம்பை மிதித்துக் கொண்டிருப்பது தெரிந்து உடனே வெளியே குதித்தார். பாம்பை அடித்து விட்டனர். நாகப்பாம்பை மிதித்த பிறகும் கூட அது கடிக்கவில்லை என்றால் அது அன்று ஸ்வாமி எழுதியளித்த சீட்டின் மகிமையே என்று உணர்ந்து கொண்டார்.

ஒருமுறை குத்தா நரஸம்மாவுக்கு முழங்கால் வலி ஏற்பட்டு காலை மடக்க முடியவில்லை. ஸ்வாமியின் விபூதியைப் பூசினாலும் வலி குறையவில்லை. ''ஸ்வாமி, நமக்குச் சமையல் செய்யும் நரஸம்மாவுக்கு முழங்கால் வலி ஏற்பட்டு முழங்காலை மடக்க முடியாமல் இருக்கிறாள்'' என்று கூறியபோது ''இனி எப்போதுமே வலி வராதபடி சீட்டு எழுதிக் கொடுங்களய்யா!'' என்றார். அவ்வாறே அவர்கள் எழுதி அளிக்க, அதோடு அவளுடைய அந்தத் துன்பம் முழுமை யாக நீங்கியது.

ஒருநாள் ஸ்வாமி தமக்கு மந்திரிக்க வேண்டுமென்று மிகவும் தொல்லை செய்தார். உடல்நலத்தோடு உள்ள ஸ்வாமி எதற்காக அவ்வாறு கூறுகிறாரென்று எவருக்கும் புரியவில்லை. சிறிது நேரத்தில் தூபிலி பிச்சம்மாவுக்குப் பாம்பு கடித்து அவளை ஸ்வாமியிடம்

அழைத்து வந்தனர். எல்லாமறிந்தவரான ஸ்வாமி தம் பக்தையின் துன்பத்தை நீக்கவே மந்திரிக்கும்படிக் கூறினாரென்று அனைவரும் புரிந்து கொண்ட னர். அவளுக்கு எந்த மருந்தும் இல்லாமல் ஸ்வாமியின் விபூதியினாலேயே குணம் ஏற்பட்டது.

கொலகமூடி கர்ணம் சுப்பாராவின் மனைவி சகுந்தலம்மா நீண்ட காலமாக ஆஸ்துமாவால் அல்லல்பட்டுக் கொண்டிருந்தாள். ஆயிரக் கணக்கான பணம் செலவழித்து எவ்வளவோ டாக்டர்களுக்குக் காட்டிச் சிகிச்சை செய்தும் கொஞ்சம் கூடக் குறையவில்லை. இனி ஆஞ்சநேய ஸ்வாமிக்குப் பிரதக்ஷிணம் செய்வது ஒன்றே வழியென்று கருதி அநிகே பல்லியிலிருந்து கொலகமூடிக்கு வந்து ஸ்வாமியிடம் தம் நிலையைத் தெரிவித்துக் கொண்டனர். அவர், ''இருபது நாட்களில் இந்த வியாதி குணமடையும். நீங்கள் தற்போது வசித்துவரும் அநிகேபல்லிவைவிட்டு விட்டுக் கொலகமூடியிலுள்ள மண்குடிசையிலேயே ஸ்திரமாக இருங் கள். நான் கூறும்வரை கல்கட்டிடம் வேண்டாம்'' என்றார். அவ்வாறே செய்தபோது அவ்வளவு ஆண்டு காலமாக அவளைத் துன்புறுத்தி வந்த ஆஸ்துமா நோய் முற்றிலும் நீங்கிவிட்டது.

1981-ஆம் ஆண்டு புயலில் கொலகமூடியிலுள்ள அவர்களது மண் குடிசை விழுந்து விட்டது. ஸ்வாமிக்குக் கூறாமலேயே அவர்கள் அநிகேபல்லியிலுள்ள தம் மாடிவீட்டுக்குத் தற்காலிகமாக, மீண்டும் கொலகமூடியில் வீடுகட்டும் வரை இருக்கலாமென்று போயினர். மீண்டும் நோய் ஏற்பட்டு ஆபரேஷன் செய்ய வேண்டி வந்தது. மீண்டும் ஸ்வாமியிடம் முறையிட்டபோது ''இங்கே மண் குடிசையிலேயே இருங்கள். உடல்நலம் நன்றாக இருக்கும்'' என்று எழுதுவித்துக் கொடுத் தார். அவர்கள் அவ்வாறே செய்ய, ஸ்வாமியின் அருளால் நோய் நீங்கியது. அவர்கள் நன்றியோடு இன்றோறும் பூஜாநிரவியங்கள் கொண்டு வந்து ஸ்வாமி தம் திருமேனியை உருத்த இடத்தில் வைக்கப் பட்டுள்ள பாதுகைகளுக்குப் பூஜை செய்து வருகிறார்கள்.

1979-ஆம் ஆண்டு பெத்தகோபாரம் என்ற ஊரிலிருந்து ஒரு பெண்மணி ஸ்வாமியின் தரிசனத்துக்காக வந்தாள். அவளது இருபத் திரண்டு வயது மகனுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பைத்தியம் பிடித்து விட்டது. ஸ்வாமி அந்த இளைஞனைத் தம்மிடம் விட்டு வைக்கும்படிப் பணித்தார். கிரமமாகப் பைத்தியம் தெளிந்து நல்ல நிலையடைந்தான். அந்தப் பெண்மணி இன்றும் தன் வீட்டில் ஸ்வாமிக்கு இனமும் நீபம் ஏற்றிப் பூஜித்து வருகிறாள்.

கலிச்சேடு ஈஸ்வரம்மாவுக்கு வயிற்றில் கட்டி ஏற்பட்டு ஒன்பது மாதக் கர்ப்பிணி போலத் தோற்றமளித்தாள். டாக்டர்கள் அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும் என்றனர். ஆனால், ஸ்வாமியிடம் அவளுக்கு

ஏற்பட்ட எவ்வளவோ அனுபவங்களால் ஸ்வாமியின் மீது நிடமான நம்பிக்கை கொண்டு ஈஸ்வரம்மா அவரிடமே தன் நோய்க்கு நிவாரணத்தை வேண்டினாள். ''அம்மா, நீ நூறு ரூபாய் கட்டினால் நாளைக்கே உன் வியாதி குணம் ஆகும்'' என்று பதிலளித்தார் ஸ்வாமி. அவள் வீட்டுக்குக் கூடப் போகாமல் அந்த வரிலேயே தெரிந்தவரிடம் கேட்டு வாங்கி உடனே நூறுரூபாய்களை ஸ்வாமிக்குச் சமர்ப்பித்தாள். அன்றிரவு ஸ்வாமி அவளுக்கு ஆபரேஷன் செய்வது போலக் கனவு ஏற்பட்டது. காலையில் கொஞ்சம் கொஞ்சமாக வலி குறைந்து சில நாட்களிலேயே வயிறு வீக்கம் முற்றிலும் குறைந்து முழு ஆரோக்கியம் அடைந்தாள்.

கொலகமூடி கொர்ரகூடி ஹரநாதநாயுடு வாயில் ரத்தம் கசிந்தது. ஆங்கில மருந்துகள் மூலமாகக் குணம் ஏற்பட்டது. ஆனால் மீண்டும் சிலநாட்களில் ரத்தம் வர ஆரம்பித்தது. இம்முறை மருத்துவர்களுக் கெல்லாம் மருத்துவரான ஸ்வாமியைத் தஞ்சமடைந்தார். ''எந்த மருந்தும் இல்லாமல் குணமானால் தேங்காய் உடைக்கிறேன்'' என்று நேர்ந்து கொண்டார். ஆச்சரியப்படும்படி அது முதல் எந்த மருந்தும் இல்லாமலே இரத்தம் வருவது நின்று விட்டது.

ஒரு முறை ஸ்வாமி பெண்ணபத்வேலில் தங்கியிருக்கும்போது, மஹிமலூர் வாசியான முனிகூடிராமய்யாவுக்கு வயிற்றுவலி, படபடப்பு, பலஹீனம், உடல்வலி முதலியவை ஏற்பட்டன. மருத்துவர்களால் அவற்றைக் குணப்படுத்த இயலவில்லை. பெண்ணபத்வேலில் வசிப்பவர் ஒருவர் அவர் வீட்டுக்கு வந்து ஸ்வாமியின் மகிமையைக் குறித்துச் சொல்லி ஸ்வாமியைத் தரிசித்து அந்த நோயிலிருந்து விடுபடும்படிக் கூறினார். அன்றிரவு ஸ்வாமி ராமய்யாவுக்குக் கனவில் காட்சியளித்து ''நான் பெண்ணபத்வேலில் உள்ளேன். என்னிடம் வா, நான் குணமாக்கு கிறேன்'' என்றார். அவ்வாறே அவர் ஸ்வாமியைத் தரிசித்தபோது கனவில் வந்ததைப் போலவே ஸ்வாமி இருப்பதைக் கண்டு வியந்தார். ஸ்வாமி அவரை ஒரு மாதகாலம் தம் சந்நிதியிலேயே இருக்கும்படிப் பணித்தார். அவ்வாறே இருந்த ராமய்யா எந்த மருந்தும் இல்லாமலே குணமடைந்தார். அது முதல் அவர் தம் வீட்டில் ஸ்வாமிக்கென்றே ஒரு மண்குடிசை கட்டி அதில் ஸ்வாமிக்கு பிக்ஷை அளித்து, ஏழையானாலும் மிகவும் பக்தியோடு ஸ்வாமியை வழிபட்டார்.

ஸ்வாமி முனிகூடி ராமய்யாவின் வீட்டில் இருக்கும்போது ஒரு நாள் அவரைக் கொஞ்சம் அரிசி கொண்டு வரும்படிக் கூறி, அதனை அங்கேயிருந்த குடிநீர்ப் பானையருகில் போட்டு ''ஐயா! இது மாடிக் கட்டிடம் ஆகப்போகிறது'' என்று ஆசீர்வதித்தார். பரம தரித்திரரான ராமய்யா, சிறிது காலத்தில் உண்மையாகவே செல்வந்தராய் மாடிவீடு கட்டிக் கொண்டார். ஸ்வாமி தன் கனவில் இட்ட ஆணைப் பிரகாரம்,

அவரது சமாதிக்குப் பிறகு கூட மாதமொரு முறை ஸ்வாமியின் சமாதியைத் தரிசிக்க கொலகமூடி வருவார்.

நாராயணரெட்டியின் தாயான துளசம்மா, நரலம்மாவுக்குக் கூறியது : ஒருவருக்கு வயிற்றுவலி வந்து நீண்ட காலம் துன்பப்பட்டார். எவ்வளவோ சிகிச்சைகள் செய்த போதும் குணம் ஏற்படவில்லை. ஸ்வாமியைக் குறித்துக் கேள்விப்பட்டு அவரது சந்நிதியில் சிலநாட்கள் இருந்தார். கொஞ்சம் வலி குறைந்தது. ஆனால் முழுமையாகக் குறைய வில்லை. ஒரு நாள் இரவு அவருக்குக் கனவில் பனைமரம் உயரம் மேலெழும்பி எரிகின்ற குண்டத்தின் மேல் பாகத்தில் அமர்ந்தவராக ஸ்வாமி காட்சியளித்தார். அதைக் கண்டு அவர் பயங்கரமாக அலறினார். அருகிலுள்ளவர்கள் அவரைத் தட்டி எழுப்பிச் சமாதானப் படுத்தினர். மறுநாள் காலையில் அவரது துன்பத்தில் முக்கால்பாகம் குறைந்து விட்டது. காலையில் ஸ்வாமி அவரிடம் ''ஐயா உன் வலி இதைவிட அதிகமாகாது; குறையவும் குறையாது. இனி நீ விட்டுக்குப் போகலாம்'' என்று கூறி அனுப்பி வைத்தார்.

நெல்லூர்வாசி தாள்ளூர் ஸ்ரீனிவாஸுலுவுக்கு இதயவலி இருந்தது. சிறுவயது முதலே பயம் இருந்து வந்தது. ஸ்வாமியைத் தரிசித்தபிறகு அவரது உடல் நோய்கள் மற்றும் மனநோய்கள் யாவும் மாயமாய் மறைந்தன. அவர் எப்போதும் வந்து ஸ்வாமி சமாதியைத் எவ்வளவு உண்மை!

ஒரு முறை இவருக்கு விபரீதமான கைவலி ஏற்பட்டது. அவரது தமக்கையும் மனைவியும் அவரை மருத்துவமனைக்கு அழைத்துப் போகையில், ஆஸ்பத்திரிக்கருகில் சென்றபோது ''நான் ஸ்வாமியிடம் போகிறேன். இந்த மருந்துகள் ஒன்றும் என்னைக் குணப்படுத்தாது'' என்று கூறி கொலகமூடியிலுள்ள ஸ்வாமியின் சந்நிதியை அடைந்தார். ஆச்சரியப்படும்படி பஸ் ஏறியது முதல் வலி இல்லை. இதே போல் எனக்கும் (ஆசிரியர்) ஒரு மாதகாலமாக வருத்திய இருமலும், குளிரும் ஸ்வாமியிடம் செல்ல வேண்டும் என்று பஸ் ஏறியவுடன் நின்று விட்டன. நம்பிக்கை என்பது மலைகளையே அசைக்கும் என்பர். அது எவ்வளவு உண்மை!

டேகபூடி கிராமவாசியான மத்தினேனி காமாக்ஷியம்மா நீண்ட காலமாக ஸ்வாமியிடம் பக்தி பூண்டிருந்தாள். ஒரு முறை அவள் இடுப்பு வலியால் மிகவும் துன்பப்பட்டு ஸ்வாமியிடம் முறையிட்டாள். ஸ்வாமி, சில மூலிகைகளைக் குறிப்பிட்டு அவற்றின் சாற்றைப் பற்றாகப் போடும்படிக் கூறினார். ஆனால் அவற்றால் குணம் ஏற்பட வில்லை. மீண்டும் ஒரு நாள் ஸ்வாமியிடம் இதைப் பற்றிக் கூறியபோது ''நாளை மறுநாள் வலி குறையும்'' என்று சீட்டு எழுதுவித்தார். அன்றோடு அந்த

வலி முற்றிலும் நீங்கி, ஐந்து, ஆறு ஆண்டுகளாகியும், இன்றுவரை மீண்டும் வரவில்லை. ஒரு முறை அவள் ஸ்வாமியின் அருகில் நின்று கொண்டிருந்த போது ஸ்வாமி ''அம்மா, வீரராகவ ஸ்வாமி உன் தம்பி. பழனை செல். நோய்கள் வராது, மீன் மாமிசம் உண்ண வேண்டாம்'' என்று கூறினார்.

காமாக்ஷியம்மாவின் மகனுக்குத் திருமணமாகிப் பத்து ஆண்டுகள் ஆனாலும் குழந்தைகள் பிறக்கவில்லை. ஸ்வாமியைக் கேட்டபோது அவனுக்கு மூன்று குழந்தைகள் பிறப்பார்களென்று கூறினார். ''இவ்வளவு ஆண்டுகள் குழந்தை பிறக்கவில்லையே? இனி மேல் எங்கே பிறக்கப் போகிறது ஸ்வாமி?'' என்று கேட்டபோது 'வேறே குலத்தைச் சேர்ந்தவர்கள் வந்ததால் நிறுத்தி வைத்தேன். இப்போது வெங்கடகிரியிலுள்ள வையரின் பிள்ளைகளைப் பிறப்பிக்கின்றேன்' என்று கூறி எழுதுவித்துக் கொடுத்தார். சிறிது காலத்தில் அவனுக்கு ஆண்குழந்தை பிறந்தது. தாய்க்கு சரியாகப் பால் கரக்காததால் ஸ்வாமியை பிரார்த்தித்தனர். அன்றிரவு கனவில் ஸ்வாமி காட்சியளித்துத் தம் கோவணத்திலிருந்து கொஞ்சம் துணி கிழித்துக் கயிறுபோலத் திரித்துக் கொடுத்து அதனை அந்தப் பெண்ணை ஸ்பர்சிக்கச் செய்யும்படிக் கூறினார். விடிகாலையில் தாய்க்குப் பால் சுரந்தது. அன்று முதல் அந்தக் குடும்பம் முழுதும் ஸ்வாமியை வழிபட்டு வருகிறது.

ஸ்வாமி சஞ்சாரம் செய்து கொண்டிருந்த காலத்தில் முதிகேடு நிம்மாரெட்டியின் வீட்டுக்குத் தம் கூட்டத்தினருடன் அடிக்கடி வருவது வழக்கம். ஆனால் கோடூர் வெங்கம்மா தன் வீட்டிற்கு வரும்படி ஸ்வாமியை எவ்வளவு முறை அழைத்தாலும் பிறகு பார்க்கலாம் என்று கூறிவிடுவார். ஒரு நாள் இரவு வேளையில் ஸ்வாமி வந்து வெங்கம்மாவின் வீட்டிலுள்ள மாட்டுக் கொட்டிலில் உட்கார்ந்திருந்தார். எருது களுக்கு வைக்கோல் போடுவதற்காக வந்த வெங்கம்மாவின் மைத்துனர் ஸ்வாமியைக் கண்டு எல்லோரையும் எழுப்பி ஸ்வாமியை வீட்டிற்குள் வரவேற்றனர். அது முதல் ஸ்வாமி அவர்களது வீட்டிற்கு அடிக்கடி வந்து ஒரு மாதகாலம் இருந்து அவர்களது விருந்தோம்பலை ஏற்பார்.

ஒரு முறை வெங்கம்மாவுக்கு அன்னத்வேஷம் ஏற்பட்டு ஐந்து வருடங்களாக உணவு தின்னாமல் பலவீனமாகக் கட்டிலில் இடந்தாள். அபோது அவளுக்கு வயது இருபதுக்கும் குறைவே. எந்த வைத்தியத் தாலும் குணம் ஏற்படவில்லை. ஸ்வாமி தன் வீட்டுக்கு வரும் போதெல்லாம் வெங்கம்மாவின் தாய் இதைப்பற்றி ஸ்வாமியிடம் கூறுவாள். ஸ்வாமி பென்னபத்வேலில் இருக்கும்போது வெங்கம்மாவைத் தன்னிடம் அழைத்து வரும்படிக் கடிதம் எழுதுவித்தார்.

ஸ்வாமியைக் கண்டவுடன் அவளுக்கு விபரீதமான பசி ஏற்பட்டது. இரண்டு சேர் அரிசியைச் சமைத்தால் முழுவதும் தின்றுவிடுவாள். அவளைத் தூங்கவிடாமல் இரவும் பகலும் ஸ்வாமி அவளைக் கொண்டு விரல் முத்திரை வைக்கச் சொன்னார். மூன்றாவது நாள் அவளை முற்றிலும் உணவு உண்ணாமலிருக்கச் செய்தார். மூன்றாவது நாள் இரவு ஒரு வாழைப்பழமும் ஒரு பிடி வெல்லம் சேர்த்த பொரிமாவும் உண்பித்தார். அது முதல் அவளது உடல்நிலை குணமாகிச் சாதாரண மாகப் பசி எடுக்க ஆரம்பித்தது. அப்போதிருந்து அவரது சேவையில் ஈடுபட்டு இன்றும் சமாதியைத் தரிசித்து வருகிறாள்.

கொலகமூடியைச் சேர்ந்த கௌனி பெஞ்சலம்மா ஆஸ்துமா இருமல் ஆகியவற்றால் நீண்டகாலமாக துன்பப்பட்டு வந்தாள். எந்தவித வைத்தியமும் பயன்தரவில்லை. ஒரு நாள் ஸ்வாமியிடம் கூறியபோது ''ஆறுரூபாய்கள் கொடு'' என்றார். அவளிடம் பணம் இல்லாததால் பேசாமல் நின்றாள்.'' என்னம்மா? வியாதி குணமாகவேண்டும் என்று நினைக்கிறாயா? குண்டத்தில் ஆயிரம் ரூபாய்களைப் போடு. வியாதி நீங்கும்'' என்றார். அதற்கும் பதிலளிக்காமல் நின்றாள். மற்றொரு நாள் அவள் ஐந்து ரூபாய்களை ஸ்வாமிக்கு அர்ப்பித்து மீண்டும் தன் நோயைக் குறித்துத் தெரிவித்தாள். ''உன்னைக் குணப்படுத்தப்போவது நானல்ல. அம்மா சரிசெய்வாள் போ'' என்று அந்த ஐந்து ரூபாய்களை அவளுக்குத் திருப்பிக் கொடுத்துத் துளஸிப்பாட்டியிடம் அனுப்பினார். அதைக் கேட்டு துளஸிப்பாட்டி சிரித்து ''அவர் சில சமயங்களில் அப்படித்தான் கூறுவார். உண்மையில் உன் நோயை அவர் நீக்கிவிட்டார் போ'' என்றாள். படிப்படியாக இரண்டு வாரங்களில் அவளது துன்பம் முற்றிலும் நீங்கியது. தற்போது சுமார் எட்டு ஆண்டுகள் கடந்தபின்னும் ஆஸ்துமாவும் இருமலும் மீண்டும் ஏற்படவில்லை.

பல்லம்ரெட்டி கிருஷ்ணாரெட்டிக்கு இருந்த ஒரே எருமைக்கு நோய் ஏற்பட்டு வயிறு வீங்கி, பிழைக்குமா என்ற சந்தேக நிலை ஏற்பட, ''ஸ்வாமியை நம்பியதற்கு இந்த ஒரே எருமையைக் கூடச் சாகடிக் கிறாரே'' என்று வருந்தியவராக அவர் படுத்துக் கொண்டு உறங்கிப் போய்விட்டார். கனவில் ஸ்வாமி எருமையின் அருகில் அமர்ந்தவராகக் காட்சி அளித்தார். விழிப்பு ஏற்பட்டுப் போய் எருமையைப் பார்த்த போது அது அசைபோட்டுக் கொண்டிருந்தது. அதனை எழுப்பியபோது ஒரு பக்கெட் சிறுநீர் கழித்துவிட்டுத் தீனி தின்ன ஆரம்பித்தது. வயிற்று வீக்கம் எப்படிப் போயிற்றோ என ஆச்சரியப்பட்டார் ரெட்டியார்.

ஒரு முறை ஸ்வாமி தலுப்பூரிலுள்ள மாதிகதாம் என்ற மைக்காச் சுரங்கத்துக்கருகில் தங்கியிருந்தார். அங்கிருந்து புறப்படுவதற்காக

சாமான்களை எல்லாம் கட்டிவிட்டார்கள். ஸ்வாமி மட்டும் ''வலி ஏற்பட்டுள்ளது. போவதற்கில்லை'' என்று கூறி நகரவில்லை. ஒரு மணி நேரத்தில் வயிற்றுவலியால் அவதிப்படும் குழந்தையை எடுத்துக் கொண்டு ஒரு தாய் வந்தாள். ஸ்வாமி சீட்டு எழுதின உடனே நிமிட நேரத்தில் குழந்தை குணமடைந்துவிட்டது.

தலுப்பூர்வாசியான விஞ்ஜம் மீனம்மா கூறியது: எனது மகள் பிரசாத் பதினான்கு மாதக் குழந்தையாக அப்போதே நடக்கத் தொடங் கிய சமயத்தில் இடது கால் பாதிக்கப்பட்டு அதனை அசைக்க முடியா மல் போயிற்று. நெல்லூரிலுள்ள மருத்துவர்களுக்குக் காட்டி அவர்கள் கொடுத்த மருந்துகளை உபயோகித்தோம். நான்காவது நாள் எங்கள் பக்கத்து வீட்டுக்கு ஸ்வாமி வந்து தங்கினார். குழந்தையை அவருக்குக் காட்டும்படி எல்லோரும் கூறினர்.

அதுவரை ஸ்வாமியின் கூட்டத்தினரை வயிற்றுப் பாட்டுக்காகத் திரியும் சோம்பேறிக் கூட்டம் என்று இகழ்ந்து வந்த நான், மற்றவர்களின் பலவந்தத்தின் பேரில் குழந்தையை எடுத்துக் கொண்டு போய் நின்றேன். காலையிலிருந்து எவ்வளவோ பேர் வந்து காத்திருந்த போதும் எதுவும் பேசாத ஸ்வாமி நான் போன உடனே ''இந்தப் பிள்ளைக்கு பதினாறா வது நாள் கால் போகும். அவனது ஆயுள் ஆறு, அல்லது ஏழு, அல்லது ஒன்பது, இல்லை பதினாறு ஆண்டுகள்; அவ்வளவே'' என்று எழுது வித்துச் சீட்டுக் கொடுத்தார். எனக்குத் துக்கம் கரைபுரண்டோட ''என் குழந்தையை இந்தப் பாழும் இழவனிடம் எதற்காகக் கொண்டு வந்தேன்? இப்படி ஆசீர்வதித்தாரே'' என்று அழுதவாறே வந்து விட்டேன்.

பதினாறாவது நாள் எப்போது வரும் என்று காத்துக் கொண்டிருந் தேன். அன்று தூங்கி எழுந்தவுடனே என் மகள் என்னிடம் ஓடி வந்த போது எனக்கு ஏற்பட்ட ஆனந்தம் சொல்லத் தரமல்ல. எல்லா வேலை களையும் விட்டுவிட்டுக் குழந்தையை எடுத்துக் கொண்டு நானும் என் கணவரும் முப்பது மைல் தூரத்திலுள்ள கொலகமூடிக்கு வந்து ஸ்வாமிகளிடம் எங்களை மன்னிக்கும்படி வேண்டிக் கொண்டு அவருக்குப் பொங்கலும் தேங்காயும் நிவேதனம் செய்து விட்டு வந்தோம். அன்று முதல் பத்து ஆண்டுகளாக என் மகன் எவ்வித மருந்துமில்லாமலேயே உடல் நலத்துடன் இருக்கிறான். அவனது ஆயுளைப் பற்றி ஸ்வாமி குறிப்பிட்டது கூட நமக்குப் பொருள் விளங்காத முறையில் கூறப்பட்ட ஒரு ஆசியே என்று நினைக்கிறேன். ஏனெனில் ஸ்வாமி ஒரு போதும் இறக்கப் போகிறவர்களைக் குறித்து ஆயுள் முடிந்தது என்று கூறியதே இல்லை. 'பத்திச்சாப்பாட்டுக்குப்

போவான்' என்றோ 'திருமணத்துக்குப் போவான்' என்றோ கூறுவது வழக்கம்.

பிரிஜேபல்லி ரமணய்யா கூறியது : ராஜபத்மாபுரவாசி ஒருவர் ஒரு ஒட்டி உலர்ந்த காளையை உழவுப்பணிக்காக ஒட்டிப் போகும்போது அந்தக் காளை நடக்க முடியாமல் விழுந்து, எவ்வளவு அடித்தாலும், வாலைப்பிடித்து எழுப்பினாலும் எழவில்லை. தூரத்திலிருந்து அதைப் பார்த்த ஸ்வாமி தன் சேவகனை அழைத்து ''அய்யா, இந்த வழியாகப் போய், காளையை அடிக்கும் மனிதனிடம் அடிக்க வேண்டாமென்று கூறு'' என்றார். சேவகர் கூறிய சொற்களைக் கேட்காமல் அவர் காளையை அடித்துக் கொண்டே இருந்தார். சேவகர் வந்து ஸ்வாமியிடம் நடந்ததைத் தெரிவிக்க, ஸ்வாமியே அங்குப் போய் அந்த எருதைத் தொட்டு 'எழு' என்றார். அது உடனே எழுந்து நின்றது. ஸ்வாமி அந்த மனிதரிடம் ''ஐயா, நான்கு நாட்கள் வண்டி கட்டாதே. பிறகு நன்றாகவே உழைக்கும்'' என்று ஆசீர்வதித்தார். அந்த எருது ஒட்டி உலர்ந்ததாக இருந்தாலும் மிக நன்றாக இடைவிடாமல் உழைத்தது.

ஒரு நாள் ஸ்வாமி நெல்லூர் ரங்கநாயகுலபேட்டையிலுள்ள கோயிலுக்குப் போனார். கர்ப்பக்கிருஹத்தை மூட வேண்டிய நேரம் வந்து விட்டாலும், ஸ்வாமியின் மேலுள்ள கௌரவத்தால் பூஜாரி அதனை மூடாமலேயே உணவுக்காகப் போனார். அங்கு ஸ்வாமி பேசிய விதம் மிகவும் விநோதமாக இருந்தது. ''அடே, ரங்கநாயகா! கூப்பிட்டால் பதில் பேச மாட்டாயா என்ன? கண் விழிகளை எடுத்து விடுவேன் ஜாக்கிரதை! என்ன நீ செய்வது? சொன்னபடி செய்கிறாயா, இல்லை பல்லைத்தட்டிக் கையில் கொடுக்கட்டுமா? என்ன நினைத்துக் கொண்டாய்? நாம் கூறியபடி கேட்கிறானாம். நாம் வந்த வேலை முடிந்து விட்டது. போகலாம், வாருங்கள்'' என்று எல்லோரையும் அழைத்துக் கொண்டு வந்து விட்டார். இவ்வாறே பெஞ்சல நரசிம்மஸ்வாமியைக் கூடக் கோபமாகத் திட்டுவார் ஸ்வாமி. ஸ்வாமியின் சொற்களின்படி அவர் நடப்பதாக வாக்கு அளித்தபிறகு சாந்தமடைந்து திரும்புவார்.

9. கருணைக்கடல்

பரமகருணாமூர்த்தியான ஸ்வாமி தமது பக்தர்கள் இப்பிரபஞ்சத்தில் எங்கிருந்தாலும் தம்மை நினைத்தவுடனே அவர்களை விசித்திரமான முறைகளில் காப்பாற்றுகிறார். பொறுக்க முடியாத துன்பத்தை அனுபவிக்கும் பக்தர்கள் ஸ்வாமியைப் பிரார்த்திக்கும்போது அவர்களது துன்பத்தைத் தாமே ஏற்றனுபவித்து அவர்களுக்கு நிவாரணம் அளிக்கிறார்.

ஒரு முறை ஸ்வாமி ஆஸ்துமா நோயினால் மிகவும் வருந்திக் கொண்டிருந்தார். வெள்ளைப் பூண்டுச்சாறு ஒரு சின்ன கிளாஸ் அளவு பருக வைத்தனர். ஸ்வாமியின் நாடித்துடிப்பு மிகவும் குறைந்துவிட்டது. ஸ்வாமி சரீரத்தை விட்டு விடப் போகிறார் என்று அனைவரும் அழுதவாறு அமர்ந்தனர். தம்மையறியாமல் தூக்கத்தில் ஆழ்ந்து போன அவர்கள் விழித்துப் பார்த்த போது ஸ்வாமி அங்கு இல்லை. எல்லாரும் அவரைத் தேட ஆரம்பித்தனர். அரை மணி நேரத்தில் ஸ்வாமி குளித்து விட்டுப் புத்துணர்ச்சியோடு புன்னகை பூத்தவராக வந்தார். எவருடைய வியாதியை அவர் ஏற்று அனுபவித்தாரோ யாருக்குத் தெரியும்?

ஒரு சமயம் ஒரு குஷ்டநோயாளி ஸ்வாமியின் ஸந்நிதியில் இருந்தார். ஸ்வாமி மிகவும் துன்பத்தோடு முனகினார். அவரது துன்பத்தைக் காணச் சகிக்காமல் நள்ளிரவில் ரோசிரெட்டி அவரது காலைப் பிடித்து விடலாமென்று கால்களைப் பற்றினார். ''என்னை இப்போது தொடக் கூடாதய்யா; தூரமாகப்போ'' என்றார் ஸ்வாமி. ஒரு மணி நேரத்திற்குப் பின் ரோசிரெட்டியின் காலில் கட்டை விரலுக்குக் கீழே காரணமில்லாமல் தோல் பிளந்து குஷ்டவியாதி போலவே பரவிற்று. குஷ்ட ரோகியின் துன்பத்தை ஸ்வாமி ஏற்றனுபவிக்கும் சமயத்தில் தான் அவரைத் தொட்டதன் விளைவே இது என்று உணர்ந்த ரோசிரெட்டி நான்கு நாட்கள் நாமஸ்மரணை செய்து அதனைப் போக்கிக் கொண்டார்.

கொலகமூடி கௌனி பெஞ்சலம்மாவுக்கு உடம்பு முற்றிலும் அரிப்பு ஏற்பட்டு எந்த வைத்தியம் செய்தாலும் பலன் ஏற்படவில்லை. மாதக்கணக்கில் சொறிந்து சொறிந்து உடல் எல்லாம் எரிச்சல் ஏற்பட்டது.

குரவையய்யாவின் மூலம் ஸ்வாமிக்குத் தெரியப்படுத்தினாள். அவளைக் குண்டத்தில் ஆயிரம் ரூபாய்கள் போடச் சொன்னார் ஸ்வாமி. அவ்வளவு பணம் இல்லை என்று அவள் கூற, பத்து ரூபாய்கள் போடச் சொன்னார். மறுநாள் வந்து தன்னிடம் பத்து பைசாக்கள் கூட இல்லையென்று அவள் முறையிட்டாள். ''அவளை என் எதிரில் ஐந்து நிமிடங்கள் நிற்கச் சொல்லய்யா'' என்றார் ஸ்வாமி. ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு அவளைப் போகச் சொன்னார் ஸ்வாமி. அந்தக் கணத்திலிருந்து அவளது அரிப்பு நிரந்தரமாக நீங்கிவிட்டது. ஆனால் அந்தக் கணத்திலிருந்து ஸ்வாமி விபரீதமான உடல் அரிப்பால் ஒரு வாரம் துன்பப்பட்டார்.

ஸ்வாமி சிலரைக் குறிப்பிட்ட ஒரு குலத்தவரின் வீட்டில் சாப்பிட்டால் வியாதி நீங்கும் என்று கூறுவார். அவர் கூறியபடியே நம்பிக்கையுடன் செய்தவர்களுக்கு மிகுந்த நன்மை ஏற்படும்.

நூதேடி ஸ்ரீராமநாயுடு ஒரு நாள் ஸ்வாமியைத் தரிசித்த போது, ஸ்வாமி அப்போதே உணவு உண்ணப் போகிறார். ஸ்ரீராமய்யாவை உண்ணும்படி ஸ்வாமி எவ்வளவு பலவந்தம் செய்த போதும் அவர் உண்ணவில்லை. தான் உண்டால் ஸ்வாமிக்கு உணவு பற்றாது என்பது அவரது எண்ணம். ''அய்யா இலை வெறும் சோற்றுப்பருக்கை என்று நினைத்தாயா? வரப்போகும் காலத்தில் அல்லவா தெரியும்'' என்றார் ஸ்வாமி. ஸ்ரீராமய்யாவின் இருகரங்கள் நிரம்பச் சாதம் போட்டு ''அந்தப் பக்கமாகப் போய் உண்டுவிட்டு அந்தக் குயவரின் வீட்டில் தண்ணீர் குடித்துவிட்டுப் போ'' என்றார். அவர் அப்படியே செய்தார். ஸ்வாமியின் சேவைக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட அவர் இன்றைக்கும் தினந்தோறும் ஸ்வாமியின் சேவகர்களுக்காக அநிகேபல்லியிலிருந்து பிக்ஷான்னம் கொண்டு வருகிறார். இதைத்தான் ஸ்வாமி அன்று 'வரப்போகும் காலத்தில் அல்லவா தெரியும்' என்றார் போலும்.

கலிச்சேடுவாசியான போலிரெட்டி கல்யாண்ராம் மைக்கார் சுரங்கத்தில் ஸர்வேயராக இருந்தார். கோவாபரேடிவ் சொசைடியில் அவருக்குச் சில பிரச்னைகள் எழுந்த காரணத்தால், அப்போது சுரங்கத்தில் காலியாக இருந்த மானேஜர் வேலையைத் தனக்குக் கொடுக்கும்படி சுரங்க முதலாளியை அவர் கேட்கவில்லை. ஒருநாள் போலிரெட்டி ஸ்வாமியைத் தரிசித்து நமஸ்கரித்தார். அவர் எதுவும் கூறுவதற்கு முன்பே ஸ்வாமி ''ஐயா இவர் பாதாளலோகத்துக்கு அதிபதி ஆவார். அவர்கள் குறுக்கே வருகிறார்கள். கடவுள் அவை எல்லாவற்றையும் நீக்கிவிடுவார்'' என்று கூறித் தம் ஆசீர்வாதச் சீட்டு எழுதுவித்துக் கொடுத்தார். அவர் எந்தவித முயற்சியும் செய்யாமலே அவரையே சுரங்க மானேஜராக நியமித்தனர். அன்றிலிருந்து ஸ்வாமியின் நிடபக்தரான

இவர் இன்றும் மாதாமாதம் ஆசிரமத்திற்கு ஐம்பது ரூபாய்கள் தக்ஷிணை அனுப்பி வருகிறார்.

செல்லோபல்லிவாசியான கூசிஸல்வரம்மா ஒரு முறை ஸ்வாமிக்காக பாசிப்பயிறுச் சுண்டல் செய்து கொண்டு ஸ்வாமியிடம் போகும் போது இரவு ஒன்பது மணி ஆகிவிட்டது. எல்லோரும் தூங்கி விட்டார்கள். ஸ்வாமி மட்டும் அமர்ந்துள்ளார். அவரருகில் ரமணய்யா உட்கார்ந்து கொண்டே தூங்கி விழுகிறார். ஈஸ்வரம்மா தூரத்தில் நின்று கொண்டு ''எல்லாரும் தூங்குகிறார்களே. இந்தச் சுண்டல் வீணாக வேண்டியது தானா?'' என்று எண்ணிக் கொண்டிருக்கையில் ஸ்வாமி ரமணய்யாவிடம் கை நீட்டித் தனக்குப் பாசிப்பயிறுச் சுண்டல் வேண்டும் என்று கேட்டார். ரமணய்யா ''ஸ்வாமி இது ராத்திரி. விடிந்தவுடனே செய்து போடுகிறோம்'' என்றார். மீண்டும் ஸ்வாமி ''எனக்கு இப்போதே வேண்டும்'' என்று உரக்கக் கேட்க, ஈஸ்வரம்மா மகிழ்ச்சியுடன் சென்று சுண்டலை ஸ்வாமிக்குச் சமர்ப்பித்தாள்.

கலிச்சேடுவாசி நரஸாரெட்டியின் மனைவி ஈஸ்வரம்மா மிகவும் ஏழை. அவளுக்கு ஸ்வாமியின் மீது அபாரமான அன்பு. அந்தப் பிராந்தத்தில் ஸ்வாமி சஞ்சரிக்கும் சமயத்தில் அவளுடைய வீட்டுக்கு எதிரே உள்ள மரூபியின் முன் உள்ள வேப்பமரத்தடியில் தங்குவார். அவள் தன் வீட்டில் ஒரு கிலோ சர்க்கரையை மிகவும் ஜாக்கிரதையாக எவரையும் அதனைத் தொடவிடாதபடி ஸ்வாமிக்காக எடுத்து வைத்திருப்பாள். ஸ்வாமி வந்து இறங்கிய உடனே முதலில் வெந்நீரில் சர்க்கரையைக் கலந்து சமர்ப்பிப்பாள். அவரும் அதை அதேவிதமான பிரியத்துடன் வாங்கிப் பருகுவார். பின்னர் சிறிது காலம் வரை ஸ்வாமி அவளுடைய வீட்டில் அடிக்கடி பிக்ஷை ஏற்பார். பின்னர் அவரது சிடர்களின் எண்ணிக்கை பெருகத் தலைப்பட்டவுடன் அவளுக்குப் பொருளாதார ரீதியாகக் கஷ்டமாக இருக்கும் என்று கருதி எப்போதோ ஒரு முறையே அவளுடைய வீட்டிற்குப் போவார்.

ஒருநாள் அவள் தன் வழக்கப்படி ஸ்வாமியின் பாதங்களைத் தொட்டு வணங்கப் போனபோது ஸ்வாமியின் சேவகர்கள் அவளைத் தூரமாகப் போகும்படி அதட்டினர். அவள் தூரத்தில் அமர்ந்தபடி ''ஸ்வாமி உனது தெய்வீகமான பாதங்களைத் தொடும் அதிருஷ்டம் இல்லாமல் என்னை விலக்கி விட்டாயே'' என்று மனதில் வருந்தினாள். உடனே ஸ்வாமி ''அம்மா, காலில் முள் இருக்கிறது. எடுக்கிறாயா?'' என்று கூறியவாறு தம் காலை நீட்டினார். நீண்டநேரம் முள்ளைத் தேடினாள். முள்ளே இல்லை. ''முள் இல்லை, ஸ்வாமி'' என்றபோது ''இல்லையா அம்மா? அப்படியானால் சரி'' என்று காலை இழுத்துக் கொண்டார்.

டோலியில் போகும் ஸ்வாமிக்கு எப்படி முன் குத்தும்? அவர் முள்ளை எடுக்கச் சொன்ன காரணம் எல்லோருக்கும் விளங்கியது. ஸ்வாமி அதிதமான யோக நிலையில் இருக்கும்போது வருபவர்கள் எல்லோரும் சேவை என்ற சாக்கில் அவரைத் தொட்டால் அவருக்குத் துன்பமாக இருக்கும் என்று எவரும் தன்னைத் தொடாதபடி சேவகர் களைக் காவல் வைத்தது ஸ்வாமியே. இப்போது அவர்களது சொற் களுக்கு மாறாகத் தன்னைத் தொட்டு வணங்கும்படிக் கூறினால் அவர் கள் வருந்துவார்களென்றே முள்ளை எடுக்கும் சாக்கில் தம் பாத ஸ்பர்சத்தை அவளுக்கு அருளினார் ஸ்வாமி.

தாபிலி பிச்சம்மா ஸ்வாமியின் துணிகளைத் துவைப்பதோடு தனது எருமையின் பாலை ஸ்வாமிக்கு ஸமர்ப்பிப்பாள். ஒரு முறை, அவளது குழந்தைகளுக்கு உடல் நலம் சரியாக இல்லாதிருத்தல், கணவனின் கோழிப் பந்தயங்கள், குடி வழக்கம் போன்ற பல பிரச்னைகளால் வருந்தினாள். துளசிப்பாட்டி, அவர்களது வீட்டைக் காலி செய்து ஆசிரமத்துக்குப் பக்கத்தில் சின்னக் குடிசை கட்டிக் கொண்டு இருக்கும்படிக் கூறினாள். ஆனால் ஆசிரமத்தினருகில் இவர்களுக்குக் கிடைத்த இடம் பிசாசுகள் குடியிருக்கும் இடம் ஆதலால் அது வேண்டாம் என்று வாஸ்து சாஸ்திரி கூறினார். ஸ்வாமியைக் கேட்டபோது அரசாங்கம் கொடுக்கும் பணத்தில் அவர்கள் வீடுகட்டிக் கொள்வார்கள் என்றாரே தவிர அந்த இடம் நல்லதா அல்லவா என்று கூறவில்லை. சிலநாட்களுக்குப் பிறகு புயல் நிவாரண நிதியிலிருந்து எதிர்பாராதவிதமாக அவளுக்கு அரசாங்கப் பணம் கிடைத்தது. எனவே அந்தப் பிசாசுகளின் இடத்திலேயே கொட்டகை கட்டிக் கொண்டு குடி புகுந்தனர். ஸ்வாமி வந்து தன் வீட்டில் தம் திருவடிகளை வைத்தால் எல்லாவிதமான பீடைகளும் போய் விடுமென்று பிச்சம்மா ஸ்வாமியை வரும்படி வேண்டினாள். ''இப்போது ஸ்வாமி அவளுடைய வீட்டுக்குப் போனால், இனிமேல் எல்லோரும் தத்தம் வீட்டிற்கு வரும்படி ஸ்வாமியைத் தொல்லைப்படுத்துவர்'' என்று சில சேவகர்கள் ஆட்சே பித்தனர். ஆனால் ஐந்தாம் நாள் ஸ்வாமி ''என்னைப் புதுவீட்டிற்கு அழைத்துச் செல்லுங்கள்'' என்று கூறினார். ஆனால் சேவகர்கள் அவரை ஆஞ்சநேயஸ்வாமி கோயிலுக்கு அழைத்துச் சென்றனர். 'இங்கு அல்ல' என்று கூறிய ஸ்வாமி தெற்குப் புறத்திலுள்ள பிச்சம்மாவின் வீட்டைக் காட்டினார். ஆனால் சேவகர்கள் மேற்குப் பக்கத்திலுள்ள சிறிய பாலத்தின் பக்கத்துக்கு அழைத்துச் சென்றனர். ஸ்வாமி எல்லோரையும் பலவந்தமாகத் தெற்குப் புறமாக நடக்க வைத்து நேராகப் பிச்சம்மாவின் வீட்டிற்கு அழைத்துச் செல்லும்வரை அவர்களை விடவில்லை. அங்கு

போய்ச் சேர்ந்த உடனே ''நாம் இங்கே மூன்று நாட்கள் இருக்கவேண்டும் ஐயா'' என்றார். அந்தச் சமயத்தில் பிச்சம்மா வண்ணான் துறையில் இருந்தாள். சிறிது நேரத்தில் திரும்பிவந்த அவள், ஸ்வாமியைக் கண்டு தான் காண்பது கனவா, நனவா என்று ஆச்சரியத்திலும், மகிழ்ச்சியிலும் திக்கு முக்காடினாள். ஆண்டவன் பக்கிக்கு அடிமை அல்லவா!

பெள்ளபத்வேல் பிராந்தத்தில் ஸ்வாமி இருக்கும்போது வக்கெம்மா, ஸ்வாமியின் கூட்டத்தினருக்குச் சமையலுக்குத் தேவையான விறகுகள், இலைகள் ஆகியவற்றைச் சேகரித்து அளித்த பின்னர் மரத்தடியில் ஏகாந்தமாக அமர்ந்து தியானம் செய்வாள். உணவு பற்றியே அவளுக்கு நினைவு இருக்காது. அன்பின் உருவமான ஸ்வாமி ''வக்கெம்மா சாப்பிட மறந்து விட்டாளய்யா! அவளைக் கூப்பிட்டுச் சாதம் போடுங்கள்'' என்று சேவகர்களிடம் கூறுவார்.

வக்கெம்மா அடிக்கடி வந்து ஸ்வாமியைத் தரிசித்துக் கொண்டு வீட்டுக்குப் போய் விடுவாள். ஸ்வாமி அவளிடம் என்ன மாற்றத்தை ஏற்படுத்தினாரோ? அதன் பின்னர் அவளுக்கு ஸ்வாமியை விட்டுவிட்டு வீட்டுக்குப் போகமுடியவில்லை. அவள் வந்து வணங்கிய போது ''வக்கெம்மா இறந்து விட்டாள் என்று நினைத்தேனே'' என்றார் ஸ்வாமி. நம்மிடமுள்ள ஆசை, மோகம், உறவினரிடம் பற்று முதலிய சபலங்களை ஸ்வாமி தம் யோகசக்தியால் நீக்குவார். நமது ஆத்மீக முன்னேற்றத்தைப் பற்றி அவருக்குள்ள ஈடுபாடு, அவரது சக்தி ஆகிய வற்றை நாம் உணர்ந்து கொண்டு நாம் தகுந்த சாதனைகளைச் செய்ய வேண்டுமென்றே மேற்கூறிய சொற்களால் தாம் செய்த மாற்றத்தை நமக்குத் தெரியும்படிச் செய்தார்.

இவ்வாறே, நிரந்தரமான ஸ்வாமி சேவையில் இருக்கும் குத்தா நரசம்மாவுக்கு அடிக்கடி வீட்டுக்குச் சென்று உறவினர்களைப் பார்த்து வர வேண்டு மென்று ஆசை இருந்தது. ஸ்வாமியைக் கேட்டால் அனுப்ப மாட்டார். ஒரு நாள் ''நரசம்மா செத்து விட்டாள்'' என்று சீட்டு எழுதுவித்து ஆசீர்வாத முத்திரை வைத்து அவளுக்குக் கொடுத்தார் ஸ்வாமி. அது முதல் அவளுக்கு வீட்டு நினைவே இல்லாமல் போயிற்று.

ஒருநாள் சேவகர்கள் அனைவரும் தத்தமது பணிகளுக்காகப் போய்விட்டனர். 'நான் இன்னும் ஸ்னானம் செய்யவில்லை. நீ ஸ்வாமிக்குக் கஞ்சி கொடு' என்று கூறி துளசம்மா வக்கெம்மாவை அனுப்பினாள். வக்கெம்மா ஒரு போதும் இத்தகைய வேலைகளைச் செய்ததில்லை. தவிர தான் ஹரிஜன குலத்தைச் சேர்ந்தவளாதலால்

அவருக்குக் கஞ்சி அளிக்கத் தனக்குத் தகுதி உண்டோ, இல்லையோ என்று தயங்கினாள். பயத்தோடு கஞ்சியை எடுத்துக் கொண்டு போய் ஸ்வாமியின் பின்னால் நின்றாள். உடனே ஸ்வாமி ''வா வக்கெம்மா, பயமெதற்கம்மா, வா, தொன்னையில் கஞ்சி ஊற்றிக் கொடு'' என்று அழைத்தார். ஸத்புருஷர்களிடம் பக்தி, தூய நடத்தை முதலியவை இல்லாமல் போவதே தாழ்ந்த குலம் என்பது ஸ்வாமியின் கருத்து.

உண்மையில் அவளது மனோபாவம் மிக உயர்ந்தது. ஒரு முறை அவள் நெல்லூர் பஸ் ஸ்டாண்டில் தூங்கிக் கொண்டிருக்கும் போது ஒரு திருடன் அவளது வலது காதிலிருந்த கம்மலைக் கழற்ற ஆரம்பித்தான். அதை உணர்ந்த அவள், அதனைக் கழற்றும்வரை அசையாமலிருந்து பின்னர் மறுபக்கம் திரும்பிப்படுத்து இடதுகாதுக் கம்மலையும் கழற்றிப் போவதற்கு அவனுக்கு உதவினாள். மறுநாள் ஆசிரமவாசிகள் அந்தக் கம்மல்களைப் பற்றிக் கேட்டபோது, ''என்னைவிட ஏழை ஒருவன் வந்து கம்மலைக் கழற்றிய போது பாவம், எடுத்துக் கொண்டு போகட்டும் போ, என்று விட்டு விட்டேன்'' என்றாள்.

கோபவரத்தில், ஒரு குடியானவனின் மந்தையிலுள்ள ஆடுகளை நாய் ஒன்று தினம் ஒன்று வீதம் கொன்று தின்று வந்தது. அவன் வயிறெரிந்து அந்த நாயைக் கத்தியால் வெட்டினான். பின்னர் அவனுக்குப் பிறந்த ஒவ்வொரு குழந்தையும் நாயைப்போலக் குரைத்து இறந்துவிடும். அவன் தன் துன்பத்தைக் குறித்து ஸ்வாமியிடம் முறையிட்டான். ஸ்வாமி ''பிறப்பான், பிறப்பான், பிறப்பான்'' என்று மும்முறை கூறினார். அவரது அமுதவாக்குப்படியே பின்னர் அவனுக்கு மூன்று ஆண் குழந்தைகள் பிறந்து நலமுடன் வாழ்ந்தனர்.

மந்தல வெங்கையாவுக்கு ஸ்வாமியைப் பற்றிய அறிமுகம் ஏற்படுவதற்கு முன்பே 1956-ம் ஆண்டில் ஒருநாள் காலையில் ஸ்வாமி வீதியில் வெங்கையாவுக்கு எதிர்ப்பட்டார். தம் இரண்டுகைகளாலும் தலையைச் சொறிந்து கொண்டே ''உன்னிடம் ஒரு விஷயம் கூற வேண்டும். பிறகு வா என்ன?'' என்று கூறிவிட்டுப் போனார். பின்னர் ஒருநாள் அந்தக்கிராமத்தைச் சேர்ந்தவர் ஒருவர் ஸ்வாமியைத் தம் வீட்டுக்கு அழைத்துப் போய்க்கொண்டிருந்தபோது, வெங்கையா ஸ்வாமியிடம் சென்றார். ஸ்வாமி சட்டியையும் ஒரு தடியையும் எடுத்துக் கொண்டு போய்க்கொண்டிருந்தார். வெங்கையா அவரோடு கூட நடந்தார். ஸ்வாமி வெங்கையாவின் வீட்டுக்கு வந்து நான்கு பக்கங் களிலும் பார்த்து ''இங்கே நாம் பார்க்கவேண்டியது ஒன்றும் இல்லை. எல்லாம் நன்றாகவே உள்ளது. வெள்ளைக் கட்டிடம், இது வரை கட்டுவாள்'' என்று கையால் நிலத்தின் மீது கோடுபோட்டுக் காட்டினார்.

பின்னர் வெங்கையாவின் மண்குடிசைக்குள் போய் வடகிழக்குத் திசையில் உள்ள தூணுக்குக் கீழே ஒரு ஜாண் அகலமும் ஒரு ஜாண் ஆழமும் உள்ள குழி வெட்டி அதில் பால் ஊற்றினார். அப்போது குழி நிரம்பி பால் ஈசான்ய திசையில் வழிந்தது. ''அவ்வளவு தான்; இனி யென்ன? எல்லாம் நன்றாக உள்ளது'' என்று கூறியவாறு போய் விட்டார் ஸ்வாமி. வெங்கையாவின் வேண்டுகோளின்படி அன்று பகல் அவருடைய வீட்டிலேயே உணவு கூட உண்டார் ஸ்வாமி.

அப்போது மாடிவீடு கட்டும் சக்தி வெங்கையாவுக்கு இல்லை. ஆனால் சிறிதுகாலத்தில் செல்வந்தராகி நிலம் வாங்கியதோடு ஸ்வாமி கூறியபடியே மாடிவீடு கூடக் கட்டினார். சரியாக அன்று ஸ்வாமி கோடு போட்டுக் காட்டியவரைக்கே வாஸ்து அறிஞர் கூட வீட்டு வரைபடத்தை வரைந்தார். ஸ்வாமியின் அருளினால்தான் இத்தகைய நல்ல நிலையில் இருக்கிறேன் என்று வெங்கையா நன்றியோடு கூறுகிறார்.

திருப்பதி ஜானகிராமய்யாவின் மகள் ரமணம்மா ஸ்வாமியைப் பற்றிக் கேள்விப்பட்டு அவரை தரிசிக்க வேண்டுமென்று மிகவும் ஆவல் கொண்டாள். ஆனால் நீண்ட காலம் அவளது ஆவல் நிறைவேற வில்லை. ஒருமுறை ஸ்வாமி நெல்லூரிலுள்ள அரசாங்க ஆஸ்பத்திரிக்கு எதிரே உள்ள காலி இடத்தில் தங்கினார். அந்நாட்களில் அந்த இடமெல்லாம் வெறும் காடாக இருந்தது. கட்டிடங்கள் எதுவும் இல்லை. ரமணம்மாவின் சிநேகிதிகள் சிலர் ஸ்வாமியின் தரிசனத்துக் காகப் போகும்போது, ரமணம்மாவையும் அழைத்தனர். அப்போது பகல் ஒரு மணி இருக்கும். ரமணம்மா இன்னும் சாப்பிடவில்லை எனினும் உடனே புறப்பட்டு விட்டாள். மற்றவர்கள் அனைவரும் உண்டு விட்டனர்.'நீயும் சாப்பிட்டுவிட்டு வந்தால் நன்றாக இருக்கும்' என்ற சிநேகிதிகளிடம் 'ஸ்வாமி எனக்குச் சாதம் போடமாட்டாரா?' என்று கேட்டாள். ''ஸ்வாமி சேவகர்கள் பன்னிரண்டு மணிக்கே சாப்பிட்டு விடுவார்கள். இப்போது எப்படி உனக்குச் சாதம் கிடைக்கும்?'' என்றார்கள் அவர்கள்.

ஸ்வாமி சேவகர்களிடம் தம் தங்குமிடத்தை வேறொரு இடத் திற்கு மாற்றவேண்டும் என்று கூறியதால் அவர்கள் சாப்பிட்டு முடித்துச் சாமான்களைக் கட்டிய பிறகு ஸ்வாமியைப் புறப்படும்படி வேண்டினர். ஸ்வாமியோ பகபகவென்று சிரித்துக் கொண்டே ''பிள்ளைகள் வர வேண்டாமா ஐயா? பிள்ளைகள் இங்கே இருக்கும் போது நாம் போனால் எப்படி?'' என்றார். அப்போது ரமணம்மாவும் சிநேகிதிகளும் வந்து சேர்ந்தனர். எல்லோருக்கும் தம் ஆசிச்சிட்டுகள் எழுதுவித்து ரமணம்மாவைப் பார்த்து ''இவள் நாம் சாதம் போடுவோமென்று

வந்திருக்கிறாள். சாதம் போடுங்கள் ஐயா'' என்றார் ஸ்வாமி. உணவு தீர்ந்துவிட்டது என்று எண்ணிய சேவகர்கள் போய்ப் பார்த்தபோது பாத்திரத்தில் இரண்டுபேர் உண்ணுமளவுக்குச் சாதம் மீந்து இருந்தது. ரமணம்மா வயிறார உண்டதோடு அவளது சிநேகிதிகளுக்கும் கூடப் பிரசாதமாக உணவு கிடைத்தது. ''இவள் சாமான்யமானவள் அல்ல. பத்தாவது பார்வை உள்ள பெண்மணி'' என்று ரமணம்மாவுக்குச் சீட்டு எழுதுவித்தார் ஸ்வாமி.

'வெக்கம்மா தொண்ணூற்றொன்பது வாசல்கள் ஏற வேண்டும்' என்று ஒரு முறை ஸ்வாமி சீட்டு எழுதுவித்தார். அதைக் கேட்ட வக்கெம்மா தாங்க முடியாத துக்கத்தோடு அழுதவளாக ஸ்வாமியின் பாதங்களில் விழுந்து ''ஸ்வாமி, உங்களுக்கு இஷ்டமில்லாவிடில் என்னைக் காட்டில் எட்டி மரமாகவாவது பிறப்பியுங்கள். மீண்டும் எனக்கு இந்த மனிதப் பிறவி வேண்டாம்'' என்று இரண்டு மணிநேரம் அவரது பாதங்களைத் தன் கண்ணீரால் கழுவினாள். கருணையே உருவான ஸ்வாமி ''அவள் இனி வர மாட்டாள் என்று இறைவனின் மீது ஆணையாக எழுதிக் கொடுங்களய்யா'' என்றார்.

தனுப்பூர்வாசி வி. சுந்தரராமிரெட்டி கூறியது : 1977-ஆம் ஆண்டில், ஸ்வாமியின் கூட்டத்தினரும் நானும் சில நாட்கள் தங்குவதற்காக வி.கே. ரெட்டியாரின் பத்மாவதி சுரங்கத்திலுள்ள விசாலமான குடிசையை ஏற்பாடு செய்தேன். ஒரு நாள் விடியற்காலையிலேயே ஸ்வாமி இனி ஒரு கணம் கூட இங்கே இருக்கக் கூடாது. உடனே வேறே ஒரு இடத்துக்குப் போகவேண்டும் என்று அவசரப்படுத்தினார். ஆனால் அவரது சேவகர்கள் பகல் இரண்டு மணி வரை தாமதம் செய்தனர். ஸ்வாமி மீண்டும் மீண்டும் உடனே அங்கிருந்து போகவேண்டுமென்றும் துன்பம் வருகிறதென்றும் கூறி அவசரப்படுத்திக் கொண்டே இருந்தார். அதற்குள் குடிசை எப்படியோ தீப்பற்றி எரியலாயிற்று. ஸ்வாமியை தூரத்தில் அமர்த்தினர். ஸ்வாமி அந்த தீஜ்வாலையைக் காண்பித்து 'எல்லாம் தங்கமே, பாருங்கள், எல்லாம் தங்கமே' என்று கத்தினார். குடிசை முழுதும் எரிந்து போயிற்று.

''எரிந்து போனதைப் பற்றி அவரை வருந்தவேண்டாமென்று கூறு. அவருக்கு இருபது கோடிகள் லாபம் வரும்'' என்று ஒரு சீட்டு எழுதுவித்து என்னிடம் கொடுத்து அனுப்பினார். சிறிது காலத்திலேயே வி.கே. ரெட்டியாருக்கு மிகுந்த அளவில் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டது. அது ஸ்வாமியின் ஆசிகளின் விளைவே.

ஒரு முறை ஸ்வாமி வி. சுந்தரராமிரெட்டியின் தோட்டத்தில் தங்கி இருந்தபோது அங்கேயிருந்த காய்ந்த இலைச்சருகுகளை எல்லாம் அக்னி

குண்டத்தில் போட்டார்கள். அந்தச் சருகுகளின் மத்தியில் டைனமைட்டுகளில் உபயோகிக்கும் வெடிமருந்து இருந்ததால் தீயில் போட்டவுடனே அது பயங்கரமான சப்தத்தோடு வெடித்தது. அங்குள்ளவர்கள் எல்லோரும் பயத்தால் அலறியடித்துக் கொண்டு இசைக்கொருவராகச் சிதறிப் போயினர். அக்னிகுண்டத்துக்கு எதிரில் அமர்ந்துள்ள ஸ்வாமி மட்டும் சிறிது கூட அசையவில்லை; அவரது முகத்தில் பயத்தின் சின்னமே இல்லை. ஸ்வாமியின் நிலையைக் கண்டு எல்லோரும் வியந்தனரே தவிர அவரது உண்மையான நிலையை உணர்ந்து கொள்ளவில்லை.

10. பாவிகளைப் புனிதமாக்குபவர்

மஹான்கள் செய்யும் எவ்வளவோ அற்புதமான லீலைகளில் மிக முக்கியமானது, அவர்கள் தீயவர்களை உய்விக்கும் செயல் ஆகும். நாரத மஹரிஷியின் தரிசனத்தால் கயவனான வால்மீகி, மஹரிஷியாக ஆனது போல ஸ்வாமி பல துஷ்டர்களையும் குடிகாரர்களையும் நல்லவர்களாக மாற்றியமைத்த நிகழ்ச்சிகளில் சிலவற்றை இங்கே காண்போம்.

சகவாஸ தோஷத்தினாலோ, தீர்க்க முடியாத பிரச்னைகளைக் குறித்து யோசித்து யோசித்து மனச்சாந்தி இழந்ததாலோ அல்லது, மற்ற காரணங்களாலோ சிலர் குடி சூதாட்டம் முதலிய கெட்ட பழக்கவழக்கங்களுக்கு அடிமையாகித் தம் வாழ்க்கையையும் தம்மைச் சேர்ந்தவரின் வாழ்க்கையையும் துக்கத்தில் மூழ்கடிக்கிறார்கள். அப்படிப்பட்ட பல வீனங்களிலிருந்து அவர்களால் விடுபடமுடியாதபோது அவர்களை ஸ்வாமி போன்ற மஹான்களே தம் சக்தியால் காப்பாற்ற முடியும்.

கொலகமூடி ஆசிரமத்துக்குச் சமீபத்திலுள்ள ஒரு மரத்தில் மீது ஒரு கொக்கு கூடு கட்டிக் கொண்டு தன் குஞ்சுகளுடன் வாழ்ந்து வந்தது. ஒரு நாள் அந்தப் பிராந்தத்திலுள்ள பாம்பாட்டி ஒருவன் அந்தக் கொக்கை அடிக்க வேண்டுமென்று தன் வில்லைத் தயார் செய்து கொண்டிருந்தான். அதைக் கண்ட ஆசிரமவாசிகள் அவனை எவ்வளவு தடுத்தும் கேட்காமல் அவன் பறவையைக் குறிவைத்து அடிக்கப் போனான். ஸ்வாமியிடம் பக்தர்கள் முறையிட்டபோது 'அதற்கு அடிபடாது ஐயா' என்றார் ஸ்வாமி. அவ்வாறே அவனது பாணம் குறி தவறியது. பறவை தப்பிப் பறந்து போயிற்று. அந்தப் பாம்பாட்டி உடனே தன் வில்லை உடைத்தெறிந்து விட்டான். மீண்டும் வில்லையே தொட வில்லை. ஸ்வாமி பறவையை மட்டுமன்றி அதனைக் கொல்ல நினைத்த வனையும் காப்பாற்றினார்.

அதிகமான குடிப்பழக்கத்துக்கு ஆளான பேத்து ஐயராமய்ய நாயுடு, 1978-ஆம் ஆண்டில் ஸ்வாமியிடம் வந்து அவரது பாதங்களைப் பற்றிக் கொண்டு "இந்த நல்ல புத்தியும் பக்தியும் எப்போதும் இப்படியே இருக்குமாறு செய்யுங்கள் ஸ்வாமி" என்று பிரார்த்தித்தார்.

ஸ்வாமியின் பாதங்களை விட்டுவிடும்படி சேவகர்கள் எவ்வளவு கூறினாலும் அவர் கேட்கவில்லை. இறுதியில் ஸ்வாமி ''அவ்வாறே ஆகட்டும். எழுந்திரு'' என்றார். அன்று முதல் அவரது போக்கே முற்றிலும் மாறிவிட்டது. குடிப்பழக்கத்தை விட்டார். யாரோடும் பேசாமல் மௌனமாகக் காலம் கழிக்க ஆரம்பித்தார். அதற்கு முன், முன்கோபத்தோடு தீவிரமாகச் சண்டைபோடும் அவர் முற்றிலும் மாறிவிட்டார்.

கொலகமூடிவாசி தூபிலி வெங்கய்யா குடி மற்றும் கோழிப் பந்தயம் முதலியவற்றால் வீட்டையே நரகமாக்கினார். ஸ்வாமியிடம் மிகுந்த பக்திபூண்ட இவரது மனைவி ஆசிரமத்திலுள்ள சேவகர் களுக்கும் ஸ்வாமிக்கும் துணி துவைத்துக் கொடுப்பாள். தன் கணவனின் நடத்தையைக் குறித்து எவ்வளவு முறை ஸ்வாமியிடம் முறை விட்டாலும் அவர் மௌனம் சாதித்தார். தங்களுடைய எருமையின் பாலை இனமும் ஸ்வாமிக்கு ஸமர்ப்பிப்பது அவளது வழக்கம். ஒரு நாள் அவளுக்கு வீட்டு வேலைகளின் காரணமாகப் பால்கொண்டு போக முடியாத போது தன் கணவனிடம் கொடுத்து அனுப்பினாள். உடனே அந்தப் பாலைக் குடித்து விட்டு ஸ்வாமி ''கொக்கரக்கோ'' என்று கோழியைப் போலக் கூவினார். அவருக்குக் கோழிப்பந்தய வழக்கம் உண்டு என்று தெரிவிப்பதற்காகவே ஸ்வாமி அவ்வாறு கூவினார் என்று உணர்ந்து எல்லோரும் சிரித்தனர். ஆச்சரியப்படும்படி அன்றோடு வெங்கையா கோழிப்பந்தயம், குடி முதலிய எல்லாவற்றையும் விட்டு விட்டார்.

ஒரு முறை ஸ்வாமி கொலகமூடியில் எட்டு ஆண்டுகள் நிரந்தர அக்னிஹோத்ரம் செய்தார். அவரது சேவகர்கள் பக்கத்திலுள்ள காடு களில் உள்ள மரங்களை எல்லாம் வெட்டி எருமைக்கடா வண்டிகளில் ஏற்றிக் கொண்டு வருவர். அந்தக் கிராமத்து வரிவசூலிக்கும் அதிகாரி சுப்பாராவின் மனிதர்கள் ஸ்வாமியின் சேவகர்களை மரம் வெட்டாமல் தடுக்க வேண்டுமென்று முயற்சித்தனர். ஆனால் அவர்கள் வெட்டுவதை நிறுத்தவில்லை. ஒரு நாள் சுப்பாராவே சேவகர்களைத் தடுக்க நேரில் வந்தார். தூரத்தில் ஸ்வாமியைப் பார்த்தவுடன் அவரது மனம் மாறி, ''டேய்! இவர் பைத்தியக்காரர் அல்லவா, பாவம் வெட்டிக் கொள்ளட்டும்'' என்று கூறி ''ஐயா, வேப்பமரத்தைத் தவிர மற்ற மரங்களையெல்லாம் வெட்டிக் கொள்ளுங்கள்'' என்று கூறிவிட்டுப் போய்விட்டார்.

ஸ்வாமியின் மகிமையைக் கண்ணாரக் கண்ட கொலகமூடி வாசியான கொர்ரகூடி வெங்கமநாயுடு தம் அனுபவத்தைக் கூறுகிறார் : ஸ்வாமி எட்டு ஆண்டுகள் எங்கும் போகாமல் கொலகமூடியிலேயே அக்னிஹோத்ரம் செய்து கொண்டிருந்த நாட்களில் கொலகமூடிக்கு

தென் மேற்கு திசைகளிலுள்ள காடுகளிலுள்ள மரங்களை வெட்டி நாளொன்றுக்கு மூன்று, நான்கு வண்டி விறகுகளை எரித்து வந்தார். காடு பெரும்பாலும் அழிந்து விட்டது. இப்படியே போனால் இனிமேல் கொலகமூடி, கண்டேபல்லி கிராமத்தவர்களுக்கு சமையலுக்கு விறகுக்குக் கஷ்டம் ஏற்படுமென்று சிலர் நினைத்தனர்.

ஒருநாள் கண்டேபல்லியைச் சேர்ந்த இளைஞர்கள் சிலர் ஸ்வாமியின் சேவகர்கள் மரங்களை வெட்டாமலிருக்க அவர்களை நன்றாக அடித்துப் பாடம் கற்பிக்க வேண்டுமென்று தடிகளை எடுத்துக் கொண்டு புறப்பட்டனர். அதே சமயத்தில் ஸ்வாமியிடம் பக்தியுள்ள நான் என் ஆடுகளைத் தேடிக்கொண்டு கண்டேபல்லிக்குப் போயிருந்தேன். அந்த இளைஞர்கள் ஸ்வாமியை வாய்க்கு வந்தபடி ஏசிக் கொண்டு மேலும் சிலரைச் சேர்த்துக் கொண்டிருந்தனர். அந்த மஹா புருஷரை அப்படித் திட்டக்கூடாதென்று நான் தடுக்கத் தடுக்க அவர்கள் மேலும் மேலும் இன்னும் அதிகமாக ஏசினர். அந்தக் கூட்டம் தடிகளை எடுத்துக் கொண்டு ஒரு வித ஆவேசத்தோடு ஸ்வாமி சேவகர்கள் விறகு வெட்டும் காட்டுப் பக்கம் வேகமாகப் போனார்கள். அவர்கள் தம் வேகத்தில் ஸ்வாமியையும் அவரது சேவகர்களையும் அடிக்கப் போகிறார்களே என்ற பயத்தில் நானும் அவர்கள் பின்னாலேயே ஓடினேன்.

இந்தக் கூட்டத்தினர் ஸ்வாமிக்கு ஒரு பர்லாங் தூரத்தில் வந்து சேர்ந்ததும் ஆச்சரியப்படும்படி எல்லோருக்கும் வாயடைத்துப் போய் விட்டது. அவர்கள் நடக்கும் வேகமும் குறைந்தது. எல்லோரும் ஸ்வாமியின் அருகில் சென்று அங்கிருந்த காலியான வண்டியில் விறகுகளை அடுக்கினார்கள். ''இந்த விறகுகளை இவர்கள் தம் வீடுகளுக்கு ஒட்டிக் கொண்டு போகப் போகிறார்கள் போல் இருக்கிறது. அப்படியானால் இன்று ஸ்வாமியின் குண்டத்துக்கு விறகு எப்படி?'' என்று நான் யோசித்துக் கொண்டிருக்கும்போதே வண்டி நிரம்பிவிட்டது. அவர்களில் சிலர் ஸ்வாமியிடம் போய் ''ஸ்வாமி, இவ்வளவு தானா, இன்னும் விறகுகள் இருக்கின்றனவா? கூறுங்கள். நாளை நாங்கள் எங்கள் வண்டிகளில் ஏற்றிக் கொண்டு வருகிறோம்!'' என்று கேட்டனர். ஸ்வாமி ஒன்றுமறியாதவர் போல ''இந்தப் பெரிய மரங்களை எங்கள் ஆட்களால் வெட்ட முடியவில்லை. இவற்றை நாளை நீங்கள் வெட்டிக் கொண்டு வருகிறீர்களா ஐயா?'' என்றார். 'அப்படியே செய்கிறோம் ஸ்வாமி' என்று கூறி அங்கே மிகுந்திருந்த சில பெரிய கொம்புகளை ஆளுக்கொன்றாக தோளில் சுமந்து கொண்டு அந்த விறகு வண்டியின் பின்னாலேயே கொலகமூடி ஆசிரமத்துக்கு நடந்து வந்து விறகுகளை எல்லாம் இறக்கினார்கள். ''ஸ்வாமி! நாளை நீங்கள் கூறிய மரங்களை எல்லாம் வெட்டிக் கொண்டு வருகிறோம். போய் வருகிறோம்'' என்று

கூறிவிட்டு வந்த வேகத்திலேயே திரும்பிப் போய்விட்டனர். அவர் களிடம் ஏற்பட்ட இத்தகைய மாற்றத்தைக் கண்ட எனக்குத் தலை சுற்றியது. ஸ்வாமியின் மேன்மை சொல்லத் தரமன்று.

மாலேபாடி செஞ்சம்மா முதல் முறையாக ஸ்வாமியைத் தரிசித்த போதே ''ஸ்வாமி, மீண்டும் பிறவாமலிருக்க அருளுங்கள்'' என்று வேண்டினாள். ''இவள் பத்தாவது பார்வையுள்ளவள். இவளுக்கு எல்லாம் சரியாக நிறைவேறும்'' என்றார் ஸ்வாமி. அவளைத் தம்மிடமே இருக்கும்படிக் கூறினார். ஆனால் அவளால் தன் சம்சாரத்தை உதற முடியவில்லை. ஸ்வாமியிடம் சொல்லிக் கொள்ளாமலேயே ஆசிரமத்தி லிருந்து போய் விட்டாள். பின்னர் இவள் ஸ்வாமியைத் தரிசிக்க வரும்போது அவள் வீடு திரும்புவதற்கு ஸ்வாமி அனுமதிக்க மாட்டார். எனவே அவள் ஸ்வாமியிடம் கூறாமலேயே போய் விடுவாள். ஒரு நாள் ஸ்வாமி அவளுக்குக் கனவில் மந்திரோபதேசம் செய்தார். மற்றொரு முறை அவளுக்குக் கனவில் பேரொளியில் ஸ்வாமி சந்திர மண்டலத்தில் அமர்ந்தவாறு காட்சி அளித்தார். 'இதுதான் அம்மா லோகத்தின் மாற்றம்' என்று அவளுக்குச் சந்திரனைக் காண்பித்தார். ஒரு முறை நீண்ட காலமாக அவள் ஸ்வாமியிடம் வராமலிருந்தபோது ஸ்வாமி அவளது மனதில் ஆச்சரியமான மாற்றத்தை ஏற்படுத்தினார் போலும். ஒருநாள் உடுத்திய உடைகளுடனே ஸ்வாமியிடம் வந்து விட்டாள். தற்போது அவளுக்கு எந்தவிதமான சாதனையும் செய்ய வேண்டும் என்ற எண்ணமில்லை. எந்தவித உலகியல் விவகாரங்களும் உறவும் அவளுக்கு நினைவிருப்பதில்லை. எப்போதும் குருத்வானத்திலேயே இருக்கிறாள். மனம் முழுமையாகத் தனக்கு வசமாகவில்லை என்று வருந்துகிறாள். ஒரு நாள் ஸ்வாமி கனவில் ''நல்ல முரட்டுக் குதிரை நம் சொற்படி நடவாது. அதனை எனக்களித்துவிட்டால் பிரச்சனை தீர்ந்து விடும் அல்லவா'' என்றார். அதாவது ஸ்வாமி அவளது மனதைச் சோதித்து தன்னைத் தவிர வேறே சிந்தனைகளை விட்டுவிடும்படி யோசனை கூறினார். வேண்டியவர்களுக்கு இதைவிட ஆத்மீக முன்னேற்றத்துக்கு யார் வழி காட்டுவார்கள்?

ஸ்வாமியின் நீண்டகால பக்தரான நூதேடி ஸ்ரீராமய்யா தன் குடும்ப பாரத்தை எல்லாம் மகனிடம் ஒப்படைத்து ஸ்வாமியின் சந்நிதி யிலேயே இருக்க வேண்டும் என்ற கருத்தோடு கொலகமூடி வந்தார். அப்போது இரண்டு நாட்களாகக் கஞ்சி கூடக் குடிக்காமல் ஸ்வாமி மௌனத்தில் இருந்தார். ஸ்ரீராமய்யா வந்தவுடன் ஸ்வாமியை வணங்கி விட்டு ''உன் அருளினால் தான் நான் இன்னும் இந்த உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். இல்லாவிடில் எப்போதோ பிடி சாம்பலாகிப் போயிருப்பேன்'' என்று எண்ணினார். உடனே ஸ்வாமி கண்களைத் திறந்து பக்கென்று சிரித்தார். அன்று முதல் அவர் ஸ்வாமி சேவையில்

ஈடுபட்டார். தம் கடைசி மூச்சுவரை, ஸ்வாமியின் கட்டளைப்படி அறிகேபல்லிக்குப் போய் தினந்தோறும் பிக்ஷை கொண்டு வருவார்.

எல்லம்ராஜு ஈஸ்வரராஜு, வித்வாதகர் வீரபத்ர சாயிபாபா ஆலயக் கும்பாபிஷேக சந்தர்ப்பத்தில் வெளியிட்ட 'ஸத்குருதரிசனம்' என்ற நினைவுமலரைப் படித்தார். அதில் ஸ்வாமியைக் குறித்த கட்டுரையைப் படித்துவிட்டு அவரைத் தரிசிக்க கொலகமூடி வந்தார். ஸ்வாமியின் பாதநிர்த்தத்தைப் பருகினபோது மிகவும் இனிப்பாக இருந்து, மின்சார அதிர்ச்சி ஏற்பட்டது போல் தோன்றி கூறத் தரமற்ற ஒருவித பரவச உணர்வு ஏற்பட்டது. அப்போது முதல் எவ்வளவு தூரத்திலிருந்தாலும் ஸ்வாமி தரிசனத்துக்காக வருவார்; இன்றும் அவர் ஸ்வாமி சமாதியைத் தரிசித்து வருகிறார்.

பத்லேலு சுப்பாரெட்டி கூறியது : ஒரு முறை ஸ்வாமிக்கு விறகுகள் ஏற்றப்படும் வண்டியின் எருமைக் கடாக்கள் இரண்டும் பக்கத்து வயலில் மேய்ந்தன. குடி போதையில் இருந்த அந்த வயலின் சொந்தக்காரர் அவற்றைக் கொட்டடிக்கு ஓட்டிப் போனார். ஸ்வாமியின் சீடர்கள் எவ்வளவு மன்றாடினாலும் அவற்றை விடவில்லை. வழியில் ஸ்வாமியே எதிர்ப்பட்டு ''எங்கு எருமைக் கடாக்களை ஒட்டிச் செல்கிறாய்?' என்று கேட்ட போதும் அவர் பதில் பேசவில்லை. ஸ்வாமி அவரைக் கூர்ந்து பார்த்தவராக, நிற்கும்படிக் கையால் சைகை செய்தார். உடனே அவர்மட்டுமன்றி எருமைக் கடாக்கள் இரண்டும் கூட ப்ரேக் போட்டது போல நின்று விட்டன. ''இது என் சொந்த வேலை அல்ல; உலகத்துக் காகச் செய்யும் பணி. வேண்டுமானால் குண்டத்தில் பாகம் எழுதிக் கொள் : இவ்வாறு ஒரு போதும் செய்யாதே. அம்மாவைக் கேட்டுச் சாப்பிடு'' என்றார் ஸ்வாமி. அந்தக் குடிகார மனிதர் எருமைக் கடாக்களைத் திருப்பி ஒட்டிக் கொண்டு வந்தார். அதுமட்டுமன்றி அன்று முதல் நாள்தோறும் ஸ்வாமியின் அருகிலேயே நடமாடிக் கொண்டிருந்தார்.

திருப்பதி ஜானகிராமய்யாவின் மகளான ரமணம்மா தன் அக்காவின் மகளோடு ஸ்வாமியின் தரிசனத்துக்காக கொலகமூடிக்கு வந்தாள். அவர்கள் அரை பர்லாங் தூரத்திலிருக்கும்போதே, அவர்களைத் தம்மிடம் வர வேண்டாமென்று கூறும்படி ஒருவரை அனுப்பினார் ஸ்வாமி. ஸ்வாமி மிகுந்த கோபத்தோடு பொருட்களை எல்லாம் தூளியில் வீசிவிட்டுத் தாமும் அதில் குதிக்கப் போனார். ஸ்வாமி அனுப்பிய மனிதர்கள், அவர்களை தூரத்திலேயே இருக்கும்படி நிறுத்தி வைத்தார்கள். சிறிது நேரத்திற்குப் பிறகு, தான் ஸ்வாமியிடம் ஒரு விஷயம் கூறவேண்டுமென்று செய்தி அனுப்பினாள் ரமணம்மா. கருணையே உருவான ஸ்வாமி அவளை அறுபதடி தூரத்திலிருந்து பேசுமாறு கூறினார். அவள் வந்து ''ஸ்வாமி நீங்கள் எல்லா தண்டனை

கொடுத்தாலும் ஏற்கிறேன். உங்களைப் பார்க்காமல் திரும்பிப் போக மாட்டேன்'' என்று அழுதாள். ''ஐயோ, இவள் தண்டனை அனுபவிப் பாளாமே, எப்படி ஐயா? சரி. நான்கு பேரை அழைத்துக் கொண்டு போய் ஆஞ்சநேயஸ்வாமி கோவிலில் பழனை செய்து விட்டு விடி காலை அம்மாவிடம் வரச் சொல்லு'' என்று கூறினார். அவள் அவ்வாறே செய்து ஸ்வாமியின் ஆசிகளைப் பெற்றுக் கொண்டு போனாள். ஆனால் அவளது அக்காமகள் மட்டும் உடனே திரும்பிப் போய்விட்டாள்.

ஒருநாள் ஸ்வாமியைத் தரிசிப்பதற்காகப் பட்டுப்புடவை கட்டிய மூன்று பெண்மணிகள் வந்தனர். ஸ்வாமி மூன்று முறை உட்காரும்படிக் கூறினாலும் இருவர் தம் புடவையில் மண் ஆகிவிடும் என்று பனை ஓலைகளின் மீது அமரவில்லை. ஒருவள் மட்டும் உடனே பனை ஓலையின் மீது அமர்ந்தாள். ஸ்வாமி அவளுக்கு மட்டும் சீட்டு எழுது வித்தார். நின்று கொண்டிருந்த இருவரிடமும் மேலே உள்ளவர்கள் ஒத்துக் கொள்ளவில்லை என்று கூறி சீட்டு எழுதிக் கொடுக்காமல் திருப்பி அனுப்பி விட்டார். ஸ்வாமி கருணையே உருவானவர் என்றாலும் மற்றவர்களைப் பற்றிப் பொருட்படுத்தாமல் அவரது சொற்களைப் பக்தியோடு தலைவணங்கி ஏற்பவரே, அவரது அருளைப் பெறுவார்கள்.

ஒரு நாள் ஸ்வாமி வேலூர் சுப்ரமணியத்திடம் ''ஐயா, இராம தேவதையான பங்காரம்மா ஸமுத்திர ஸ்னானம் செய்து விட்டு வந்திருக்கிறாள். இனிமேல் உங்கள் ஊரிலுள்ளவர்கள் அனைவரும் பால் பொங்கலே நிவேதனம் செய்ய வேண்டுமென்று தண்டோரா போட்டு அறிவிப்புச் செய்''என்றார். அவர் அவ்வாறே செய்தார். அது முதற் கொண்டு அந்த இராமத்தில் அதுவரை செய்து வந்த பிராணிகளின் பலியை நிறுத்திவிட்டு எல்லோரும் பங்காரம்மாவுக்குப் பால் பொங்கலே நிவேதனம் செய்து வருகிறார்கள்.

11. அவதூத வைத்தியம்

பரப்ரம்மமே உருவான ஸத்குரு, தமது வெறும் சங்கல்பத்தால் மட்டுமே பயங்கரமான வியாதிகளைக் குணப்படுத்துதல், இறந்தவரைப் பிழைப்பித்தல் முதலிய தெய்வீக லீலைகளைச் செய்கிறார் என்பதை குருசரித்திரம், சாயி சரித்திரம் முதலிய மஹான்களின் சரித்திரங்களில் பார்க்கலாம். தத்தாத்ரேய பரம்பரையில் வந்த அவதூத சம்பிரதாயத்தில் நோயாளிக்கு எது விஷத்துக்குச் சமமானதோ அத்தகைய பொருளாலேயே அந்த வியாதியைக் குணப்படுத்துவது ஒரு திவ்ய லீலை. குருவின் சொற்களில் நம்பிக்கையுள்ளவருக்கு அதுவே அமிர்தமாகி அவருக்கு ஆரோக்கியம் ஏற்படுகிறது. ஸ்வாமி எவ்வளவோ பேருக்கு இவ்விதமாகச் சிகிச்சை செய்துள்ளார்.

வேலூர் ராமாநாயுடுவுக்குக் காசவியாதி ஏற்பட்டு நெல்லூரிலுள்ள டாக்டர்களால் குணப்படுத்த முடியாதபோது சென்னைக்குப் போக எண்ணி, ஸ்வாமியிடம் ஆசி பெறுவதற்காகச் சென்றார். ஸ்வாமி ''ஐயா, உனது நுரையீரலில் செப்புக்காசு அளவுக்கு மச்சம் உள்ளது. அது ஒன்றும் செய்யாது. நீ மதராஸ் போக வேண்டிய அவசியம் இல்லை. கள்ளிப்பாலைக் குடி, போய்விடும்'' என்றார். அதைக் கேள்விப்பட்ட அவரது வீட்டிலுள்ளவர்கள் சிரித்து, ''அப்படி ஏதாவது செய்து வைக்காதே, கண் போய்விடும். வயிறு வெந்து சாவாய்'' என்றனர். ''டாக்டர்களிடம் போய் ஆபரேஷன் செய்து கொண்டாலும் நீண்ட நாள் வாழப்போவதில்லை. ஸ்வாமி கூறியதைக் கேட்காமல் சாவதை விட, ஸ்வாமி சொன்னபடி செய்து சாவதே மேல்'' என்று கருதி அவர் ஸ்வாமியின் ஸந்நிதிக்குப் போய்க் கள்ளிப்பாலைக் குடித்தார். அதன் பின்னர் எந்த மருந்தும் இல்லாமலே நோய் குணமாகி இன்றும் ஆரோக்கியமாக உள்ளார்.

ஸ்வாமி வெங்கடரெட்டிபல்லியில் தங்கி இருக்கும்போது, பத்வேல் பாவளபல்லியில் வசிக்கும் ஒருவர் தீவிரமான குளிர் காய்ச்சலால் அவதிப்பட்டார். அந்தப் பிராந்தத்தில் வைத்தியம் செய்து வந்த நாட்டு வைத்தியர்களால் அவரைக் குணப்படுத்த முடியவில்லை. அவர் ஸ்வாமியைத் தஞ்சமடைந்தார். ஸ்வாமி அவருக்கு இருகை நிரம்ப

பச்சை வேர்க்கடலைகளைக் கொடுத்துத் தின்னும்படிக் கூறினார். அவர் பயப்பட்டுத் தயங்கிய போது ''ஐயா, உன் வியாதி எல்லாம் போய்விடும். தின்ன வேண்டும் ஐயா''' என்றார் ஸ்வாமி. அவர் அதைத் தின்ற பின் ஒரு சட்டி புளித்த நீரைக் கொடுத்துக் குடிக்கச் சொன்னார். அவர் பயந்து கொண்டே குடித்தார். பக்கத்திலிருந்த நதிக்கரையில் உள்ள ஈரமணலில் நாலடி ஆழமுள்ள குழி வெட்டி அதில் அவரை அமர வைத்து கழுத்துவரை மணலில் புதைத்துவிட்டு அரைமணி நேரத்திற்குப் பிறகு அவரை அழைத்துவருமாறு பணித்தார் ஸ்வாமி. அவ்வளவு தீவிரமான குளிர்காய்ச்சலில் அவரை ஈரமண்ணில் புதைத்தால் அவர் சாவது நிச்சயமென்று அனைவரும் தயங்கினார்கள். ஆனால் ஸ்வாமி மீண்டும் மீண்டும் கண்டிப்பாகக் கூறி அவரைப் புதைக்க வைத்தார். குழியிலிருந்து அவரை வெளியே எடுத்தவுடனே அவரது வியாதி மாயமாய் மறைந்து எப்போதும்போலச் சாப்பிட்டார்.

ஸ்வாமியின் மேன்மையைப் பற்றிக் கேள்விப்பட்ட முதிகேடு கிராமவாசிகள் ஸ்வாமியைத் தம் ஊருக்கு விஜயம் செய்யும்படிப் பிரார்த்திக்க, ஸ்வாமியும் முதல் முறையாக அவ்வூருக்கு எழுந்தருளினார். அவ்வூரிலுள்ள ரோசய்யா என்ற வண்ணான் தன் கன்னத்தில் ஏற்பட்ட புண்ணால் நீண்ட காலமாக வருந்திக் கொண்டிருந்தான். மேலிருந்து கீழ்வரை ஒட்டை ஏற்பட்டுவிட்டது. எப்போதும் சீழ் வடிந்து கொண்டு துர்வாசனை அடித்தது. நிரவ ஆகாரத்தைத் தவிர வேறு எதுவும் உண்ண முடியவில்லை. அந்த ஓட்டையில் வைத்து அடைத்த பஞ்சை எடுத்துவிட்டால் சீழ் கடகடவென்று வழியும். எந்த டாக்டராலும் நாட்டு வைத்தியராலும் அதனைக் குணப்படுத்த இயலவில்லை.

அவனது இரங்கத்தக்க நிலையைக் குறித்துக் கேள்விப்பட்ட ஸ்வாமி தமது இடது கால் கட்டை விரலால் பூமியிலிருந்து சிறிது மண்ணைத் தோண்டி அதை ஒரு துணியில் மூட்டை கட்டிக் கொடுத்து ''இந்த மண்ணைப் பொடி செய்து ஓட்டையில் வைத்துக் கட்ட வேண்டும். மணிக்கட்டு அளவு பருமனும் ஒரு கை நீளமும் உள்ள மூன்று சிடிகேஸரி மரக்கொம்புகளைக் கொண்டு வந்து வைக்கோல் போர் அருகிலுள்ள வேலி ஓரமாக நாட்டித் தண்ணீர் உற்று ஐயா! உன் புண் ஆறிவிடும்'' என்றார். ஒரு வாரத்துக்குள்ளேயே அந்தக் கொம்புகள் தளிர்விட்டபோது அவனது புண் முழுமையாக ஆறிவிட்டது. இந்தத் தெய்வலீலையால் முதிகேடு கிராமவாசிகள் ஸ்வாமியின் பால் இடமான பக்தியோடும், நம்பிக்கையோடும் ஸ்வாமியை சிரத்தையாக வழி படலாயினர்.

கொல்லா ஜயராமராஜு சிரங்கு மற்றும் குளிர்காய்ச்சலால் வருந்திக் கொண்டிருந்தார். இதனை ஸ்வாமியிடம் தெரியப்படுத்திய போது ஸ்வாமி அவரிடம் ஒரு சேர் பச்சை வேர்க்கடலையைக்

கொடுத்துப் பலவந்தமாகத் தின்ன வைத்து, மோர் குடிக்க வைத்துப் பிறகு, நதியில் முழுகிவிட்டு வருமாறு பணித்தார். அவ்வாறே செய்த உடனே அவரது வியாதிகள் அகன்றன. ஸ்வாமியின் பாலுள்ள அவரது பக்தியும் நம்பிக்கையும் மேலும் பெருகின.

ஒரு முறை ஐந்து வயதுள்ள ஒரு பெண் குழந்தைக்கு வயிற்றில் கட்டி ஏற்பட்டு வயிறு மிகவும் வீங்கி எந்த வைத்தியம் செய்தாலும் குணமடையவில்லை. அந்தக் குழந்தையை ஸ்வாமியிடம் எடுத்துச் சென்றனர். ஸ்வாமி குழந்தையைத் தம் கைகளில் குப்புறப்படுக்க வைத்துக் கொண்டு எடுத்துப் போய் இறங்கு இணற்றில் உள்ள நீருக்கு ஒரு மீட்டர் உயரத்துக்குக் கைகளை உயர்த்திக் குழந்தையை நீரின் மீது குப்புறப் போட்டார். பின்னர் குழந்தையைக் கரைக்கு எடுத்து வந்து அதன் வயிற்றின் மீது தமது காலை வைத்து மிருதுவாக மிதித்தார். அதன் வயிற்றிலிருந்த ரத்தமும் சீழும் வாய் மூலமும் ஆசனத் துவாரம் மூலமும் வெளியேறிற்று. வேறு எந்தவித மருந்துமில்லாமலே அந்தக் குழந்தை சில நாட்களில் பூரண ஆரோக்கியமடைந்தாள்.

1975-ஆம் ஆண்டில் ஸ்வாமி தாடிபர்த்தியில் இருக்கையில் ஒரு பைத்தியம் பிடித்த இளைஞனைக் கயிற்றால் கட்டி அவரிடம் அழைத்து வந்தனர். அந்த இளைஞனைக் குண்டத்திலிருந்து வரும் புகையைப் பிடிக்குமாறு செய்யச் சொன்னார் ஸ்வாமி. நான்கு பேர் அந்த இளைஞனைப் பிடித்துக் கொண்டு பலவந்தமாக ஒன்றரை மணி நேரம் அவனைப் புகை பிடிக்குமாறு செய்தனர். மறுநாள் காலையிலிருந்து அவனுக்குக் கிரமமாக குணமாக ஆரம்பித்து ஒரு வார காலத்தில் முழுமையாக நலம் அடைந்தான்.

ஒரு முறை ஸ்வாமி வேலூர் ராமாநாயுடுவை பதினைந்து நாட்கள் திருவள்ளூர் முதலிய ஸ்தலங்களுக்குத் தீர்த்த யாத்திரை போய்வரு மாறு பணித்தார். அதன்படியே நாயுடு புறப்பட்ட போது ஸ்வாமி அவரை அழைத்து இரண்டு பொருட்களைக் குறிப்பிட்டு, "அவற்றை வாங்கி உன் அரைஞாணில் கட்டிக்கொள். உன் கண்ணில் பட்ட எந்த வியாதி ஆனாலும் நீ 'போ' என்றால் போய்விடும்" என்று கூறினார். அவ்வாறே செய்த நாயுடு ரயிலில் குளிர்காய்ச்சலால் நடுங்கிக் கொண்டிருந்த பிச்சைக்காரியைப் பார்த்து, அந்தக் காய்ச்சலைப் 'போ' என்று கூறிய மறுகணமே அவள் குணமடைந்ததைக் கண்டு ஆச்சரியப்பட்டார். இவ்வாறே அவர் போன இடத்திலெல்லாம் எவ்வளவோ பேருக்குத் தன் சொற்களின் மூலமே நோய்களைக் குணப்படுத்தினார். பதினைந்து நாட்களானவுடன் வீட்டுக்குத் திரும்பி ஸ்வாமியைத் தரிசித்தார். அரைமணி நேரத்தில் ஒருவர் சாவுக்கும் வாழ்வுக்குமிடையே ஊசலாடிக்

கொண்டிருக்கும் தம் எருதை ஒட்டிக் கொண்டு வந்தார். உடனே ராமாதாயுடு அதன் அருகில் போய் 'நோயே போய்விடு' என்று முன்பு போலவே கூற, அந்த எருது இறந்துவிட்டது. இவ்வளவு நாட்கள் இருந்த தன் சக்தி இப்போது என்ன ஆயிற்று என்று வியந்த அவர் ஸ்வாமியிடம் சென்று விஷயத்தைத் தெரிவித்தார். அப்போது ஸ்வாமி ''இனிமேல் அந்தப் பொருட்கள் உன் சொற்களுக்குப் பணிந்து வேலை செய்யாது'' என்றார். அவர் யாத்திரை முடித்து வந்தவுடனே ஸ்வாமி அவருக்கு அருளிய சக்தி முடிவுக்கு வந்துவிட்டது. எல்லோருடைய நோய்களையும் நீக்கியது ஸ்வாமியின் அருட்சக்தியே அன்றி அந்தப் பொருட்கள் அல்ல என்பது தெளிவு.

ஒருநாள் ஸ்வாமி தன் சேவகர் ஒருவருக்கு மந்திரிக்கும் துணியைக் கொடுத்து துன்பங்களில் உள்ளவர்களுக்கு மந்திரிக்கும்படிக் கூறினார். அவர் தேள் கொட்டியவர்கள், பாம்பு கடித்தவர்கள் முதலிய பதிமூன்று பேருக்கு மந்திரிக்க, அனைவருக்கும் உடனே வலியும் நீங்கியது. அதன் பின்னர் மந்திரித்தவர்களுக்குக் கொஞ்ச நேரம் வலியை அனுபவித்த பிறகே குணமாயிற்று. ''ஏன் ஸ்வாமி முதலில் உடனே குணமடைந்தது போல இப்போது குணமடைவதில்லை?'' என்று ஸ்வாமியைக் கேட்ட போது ''ஐயா, லக்ஷம் பாவங்களுக்கு ஒரு முறை தேள் கொட்டுகிறது. பாவத்தின் பயனைக் கொஞ்சம் கூட அனுபவிக்காமல் உடனே குணப் படுத்தினால் மேலுலகத்தவர் நீ இல்லாதபோது மீண்டும் கொட்ட வைப்பார்கள். அப்போது முழுமையாக அனுபவிக்க வேண்டி வருகிறது. அதைவிட இப்போதே கொஞ்சம் அனுபவித்துவிட்டால் போயிற்று இல்லையா'' என்றார் ஸ்வாமி. கர்மபலன் எவ்வாறு ஏற்படுகிறது, ஸத்குரு அந்தத் துன்பத்திலிருந்து பக்தர்களை எவ்வாறு விடுவிக்கிறார் என்பதை ஸ்வாமி நமக்குத் தெளிவுறுத்துகிறார்.

ஸ்வாமி உடலோடு வாழ்ந்த காலத்திலிருந்து 1986-ஆம் ஆண்டு வரை மல்லிக் வெங்கையா, ஸ்வாமியின் குண்டத்துக்கு கள்ளிச்செடி களை வெட்டிக் கொண்டு வருவார். அதனுடைய பால் நம் உடலில் பட்டால் கொப்புளங்கள் ஏற்பட்டுப் புண் வரும். வெங்கையா அந்தச் செடிகளை வெட்டும்போதும் அதனைச் சுமக்கும் போதும் அவரது உடலில் அதன் பால் படும். ஆனால் அவருக்குக் கொஞ்சம் கூட புண் ஏற்படாது. எவ்வளவோ முறைகள் பால் அவரது கண்ணில் கூடப்படும். அப்போது கண்கள் சிவந்து வீங்கும். கண் மருந்து போட்டுக் கொண்டால் இரண்டாவது நாளே கண்கள் சாதாரணமான நிலைக்கு வந்து விடும். கள்ளிப்பால் கணணில் பட்டால் கண் போய்விடும் என்பதே உலக வழக்கு.

ஒரு முறை ஸ்வாமி முதிகேடு இராமத்தில் தங்கி இருக்கும்போது, ஒரு நாள் தீவிரமான வெள்ளை படும் வியாதியால் துன்புற்றுக் கொண்டிருந்த ஒரு பெண்மணியை அவரிடம் அழைத்து வந்தனர். இரண்டு மூன்று நாட்கள் அவரிடம் காத்துக் கொண்டிருந்த போதும் ஸ்வாமி ஏதும் கூறாமல் போகவே மூன்றாவது நாள் இரவு அனைவரும் உறங்கும் போது ஸ்வாமியின் சந்நிதியில் இறப்பதே மேல் என்று கருதி அவள் அக்னி குண்டத்தில் குதித்தாள். அவளது உடலில் எந்தவிதத் தீக்காயமும் ஏற்படவில்லை. துணிகளும் தீப்பற்றவில்லை. அன்று முதல் அவளது நோய் நிரந்தரமாக நீங்கிவிட்டது.

பாலகொல்லு சுப்பம்மாவுக்கு தைராய்டு கான்சருக்காக ராய வேலூரில் ஆபரேஷன் செய்வித்தார்கள். ஆபரேஷன் என்றவுடனே மிகவும் பயந்த அவள் ஸ்வாமியையே சரணடைந்தாள். ஆபரேஷன் முடியும் வரை அவளது அருகிலேயே ஸ்வாமி அமர்ந்திருப்பதாக அவளுக்கு தரிசனம் ஏற்பட்டது. ஸ்வாமியின் அருளால் அவளுக்கு ஆரோக்கியம் ஏற்பட்டு அதன் பின்னர் பதிமூன்று ஆண்டுகள் வாழ்ந்தாள்.

கூசிபட்டாபிராமய்யா இளமையில் தனது ஐந்தாவது வயது வரை குளிர்காய்ச்சல், பேதி ஆகியவற்றால் துன்புற்று வந்தார். எல்லாவிதமான வைத்தியங்கள், மந்திரம், தந்திரம் எல்லாவற்றையும் கையாண்டு பயனின்றி இளிப்பிள்ளை பிழைக்க மாட்டான் என்ற முடிவுக்கு வந்த அவரது பெற்றோர் இறுதி முயற்சியாக பத்வேலு குன்று மீது இருந்த ஸ்வாமியிடம் அழைத்துச் சென்றனர். ''அட, அவனுக்கென்னய்யா, மாடிமேல் மாடி கட்டுவான், நன்றாக இருப்பான்'' என்றவராக ஸ்வாமி பச்சை வேர்க்கடலைப் பருப்புகளைத் தின்னவைத்து துணியால் மந்திரித்தார். அவ்வளவுதான். அன்றிலிருந்து பட்டாபிராமய்யா பூரண ஆரோக்கியமடைந்தார்.

இவர் 1971-ஆம் ஆண்டு ஸ்வாமியிடம் கூறாமலேயே மாடிவீடு கட்ட ஆரம்பித்தார். சுவர்கள் கட்டி எட்டு மாதங்களானாலும் மேல்தளம் போடுவதற்கு இயலவில்லை. இறுதியில் தன் தவறை உணர்ந்து ஸ்வாமியிடம் சென்று முறையிட்டார். ஸ்வாமி ''ஐயா அது இடுகாட்டுப் பிரதேசம். அந்த இடத்தை விட்டு நான்கு முழம் தென்மேற்குப் பக்கமாகத் தள்ளிக் கட்டிக்கொள். எல்லாம் நன்றாக இருக்கும்'' என்றார். பத்தாயிரம் ரூபாய்கள் செலவு செய்து கட்டின சுவர்களை இடித்துவிட்டு ஸ்வாமி கூறியபடியே கட்ட ஆரம்பித்த போது விரைவில் கட்டிடவேலை பூர்த்தி அடைந்தது. அவரது குழந்தை குட்டிகள் நலமாக உள்ளனர்.

நூதேடி ஸ்ரீராமய்யாவின் எலுமிச்சைச் செடிகள் எவ்வளவு கால மானாலும் காய்க்க ஆரம்பிக்கவில்லை. ஸ்வாமியிடம் கூறியபோது, ''ஏரியின் அருகிலுள்ள கால்வாயிலிருந்து நீர் கொண்டு வந்து அந்த நீர் கீழே விழாமல் ஒவ்வொரு செடியின் மேலும் ஒரு கிண்ணம் ஊற்றுங்கள். செடிகள் நன்றாகக் காய்க்கும்'' என்றார் அவர். அவ்வாறே செய்த அவர்கள் மிகுந்த நீரைக் கிணற்றில் ஊற்றினார்கள். அவர்களது செடிக ளோடு அந்தக் கிணற்று நீரை ஊற்றிய செடிகள் எல்லாமும் ஒரே சமயத்தில் காய்க்க ஆரம்பித்தன.

பகபுலேடி லக்ஷ்மம்மாவுக்குப் பிறந்த குழந்தைகள் எல்லாரும் இறந்துவிட்டனர். அவள் அடிக்கடி ஸ்வாமியைத் தரிசிப்பாள். ஸ்வாமி மிடம் போனபோதெல்லாம் அவளைச் சில நாட்கள் தம்மிடம் இருக்கும் படியும் கோடிக் கணக்கில் லாபம் ஏற்படுமென்றும் கூறுவார். ஒரு நாள் ஸ்வாமி அவளது கனவில் ஒரு மாதம், இரண்டு நாட்கள் பஜனை செய்தால் இறைவனின் கணக்கில் அவள் வருவாள் என்று கூறினார். அவள் அதன்படி ஸ்வாமியிடம் இருந்து கொண்டு பஜனை செய்தாள். ஸ்வாமி கூறிய காலக்கெடு தாண்டியபோதும் ஸ்வாமி அவளுக்குப் போக அனுமதி கொடுக்கவில்லை. படுத்த படுக்கையாக உள்ள தன் தாய்க்குச் சேவை செய்ய வேண்டும் என்று ஸ்வாமியைக் கேட்ட போது ''யாருக்காவது பணம் கொடுத்துத் தாய்க்குச் சேவை செய்யச் சொல். உனக்கு இங்கே லக்ஷக்கணக்கில் லாபம் வருகிறது'' என்றார். அவளது தமையனார் வந்த போது கூட இவ்வாறே கூறி அனுப்பி விட்டார் ஸ்வாமி. மீண்டும் அவள் சேவகர்களில் மூலம் ஸ்வாமியிடம் கேட்ட போது ''அவளது காலில் கட்டி ஏற்பட்டுப் படுத்துக் கிடக்கிறாள் என்று கூறி அனுப்பு'' என்றார் அவர். உண்மையில் அவளுக்கு அத்தகைய கட்டி எதுவும் இல்லை.

ஆனால் ஆச்சரியப்படும்படி மறுநாள் காலையில் அவளது கணுக்காலில் எலுமிச்சைஅளவு கட்டி ஏற்பட்டிருந்தது. இந்த விஷயத்தை ஸ்வாமிக்குத் தெரிவித்தபோது ''பாருங்களய்யா, பஜனை செய்து கொண்டு இங்கு விழுந்து கிட என்றால் துர்ப்புத்தியோடு பேசுகிறாள்'' என்றார். வீட்டுக்குப் போக வேண்டுமென்று நினைத்ததற்குச் சரியான தண்டனை கிடைத்ததென்று கழிவிரக்கப்பட்டாள் அவள். அன்று மாலை ஸ்வாமி அவளிடம் மிக அன்பாக ''ஏனம்மா கட்டி வந்தது? போய்விடும் போ'' என்று அவற்றைத் தம் கரங்களால் தொட்டார். இரண்டாம் நாள் எந்த மருந்தும் இல்லாமலே கட்டி மறைந்துவிட்டது. பின்னர் எவ்வளவோ முறை அவள் ஸ்வாமியை தரிசித்துச் சேவை செய்தாள்.

தஞ்சாவூர் கர்ணம் ஜி.வி. ரமணய்யா, இருபது ஆண்டுகளாக வயிற்றுவலியால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார். எத்தனையோ வைத்தியமும் பயனளிக்கவில்லை. ஒருநாள் ஒரு விஷயத்தைப் பற்றி ஸ்வாமியிடம் குறி கேட்க வேண்டுமென்று வாழைப்பழங்கள், தக்ஷிணை, தாம்பூலம் முதலியவற்றோடு சென்றார். எவ்வளவு மன்றாடியும் ஸ்வாமி வாழைப்பழங்களை ஏற்றுக் கொள்ளாமல், அக்னி குண்டத்தில் போடச் சொன்னார். தன்னையறியாமலே அவர், தாம் கேட்க நினைத்த விஷயத்துக்குப் பதில் தமது வயிற்று வலியைப் பற்றி ஸ்வாமியிடம் கூறினார். ''ஊருக்கு வடக்குப் பாகத்திலுள்ள ஒருவரது வீட்டிற்கு இரவு ஒன்பதரை மணி அளவில், முன்பாக சாப்பிடுவதற்கு வருவதாக எதுவும் கூறாமலே சென்று சாப்பிடு. உன் வயிற்று வலி போய்விடும்'' என்றார் ஸ்வாமி. ஸ்வாமியைப் பற்றி எதுவும் தெரியாத அவர் ஸ்வாமி கூறிய சொற்களைப் பொருட்படுத்தவில்லை. அவரது வயிற்று வலியும் நீங்கவில்லை. ஆனால் ஸ்வாமியின் சொற்கள் வீண் போகவில்லை. ஒரு நாள் இரவு ஒன்பதரை மணியளவில், வீட்டில் எவரும் இல்லாததால் ரமணய்யா தானே சமைப்பதற்காகக் கரியடுப்பைப் பற்ற வைத்துக் கொண்டிருக்கும்போது, கிராமத்துக்கு வடபுறத்தில் வசிக்கும் பூஜாரி அவரது வீட்டுக்கு வரும்படி நேர்ந்தது. அவர் ரமணய்யாவைத் தம் வீட்டிற்கு அழைத்துச் சென்று காதம் போட்டார். அவர் தின்றது ஊறுகாயும் மோரும் சேர்ந்த எளிய உணவே. ஆனாலும் அன்று முதல் அவரது வயிற்றுவலி மறைந்து ஆரோக்கியமடைந்தார். எல்லே ஸ்வாமியின் சொற்களின் சக்தி!

12. நல்லோரால் வணங்கப்படுபவர்

ஞானியை ஞானியே அறிய வல்லவர் என்பது ரமணமஹரிஷியின் கூற்று. வைரத்தின் மதிப்பு சிறந்த வைர வியாபாரிக்கே தெரியுமே தவிர கத்திரிக்காய் விற்பவனுக்கு எப்படித் தெரியும்? ஸ்ரீஸ்வாமி நன்றாகக் குறி கூறுவார் என்று மட்டுமே உலகத்தவர் அறிந்திருந்த காலத்தில் ரிஷிகேசத்திலிருந்து ஸ்ரீ சிதானந்த ஸ்வாமியும் ஸ்ரீதேவானந்த ஸ்வாமியும் வந்து ஸ்வாமியை பரப்ரம்மஸ்வரூபமாக உணர்ந்து அவரது பாதங்களில் வணங்கினார்கள். அவ்வாறே ஆசார்யா ஸ்ரீ பரத்வாஜா அவர்களும் தாம் ஸ்வாமியைத் தரிசித்தநிலிருந்து தமக்குத் தெரிந்தவர்கள் அனைவரிடமும் ஸ்வாமியைத் தரிசிக்கும்படியும் அவர் பூமியில் அவதரித்துள்ள தெய்வப்பிறவி என்றும் புகழ்ந்தார். இவ்வாறே அநேக அவதூதர்கள் வந்து ஸ்வாமியைத் தரிசித்து அவரது ஆசிகளைப் பெற்றுச் சென்றதாக ஸ்வாமியின் சேவகர்கள் கூறுகின்றார்கள். ஆனால் அவர்கள் வந்தவர்களைப் பற்றிய குறிப்பு எதுவும் எடுக்கவில்லை.

கோபாரம்வாசியான பாலகொண்ட சுப்பாரெட்டியார் கூறியதாவது: அன்றைய நாட்களில் இப்போது போல மக்கள் அதிகமாக ஸ்வாமியிடம் வர ஆரம்பிக்கவில்லை. அவரது அக்னி குண்டம், கோணிப்பை, பனையோலை ஆகியவற்றைப் பார்த்தவர்கள் அவரைப் பைத்தியக்காரர் என்று கருதினார்கள். அவரிடம் அனுபவம் பெற்ற சிலரே அவரைத் தரிசிக்க வருவார்கள்.

ரிஷிகேசத்திலிருந்து ஸ்ரீ சிதானந்தஸ்வாமி, ஸ்ரீ தேவானந்தஸ்வாமி மற்றும் ஸ்ரீ மாதவானந்தஸ்வாமி மூவரும் ஸ்ரீ ஸ்வாமியைத் தரிசிக்க வருகிறார்களென்று தெரிந்து அவர்களைப் பார்க்க ஜனங்கள் கூட்டங் கூட்டமாக வந்தனர். மாலை நாலரை மணி ஆகியும் அவர்கள் வராமல் போகவே ஜனங்கள் உற்சாகமிழந்தார்கள். அதைப் பார்த்த ஸ்வாமி ''வருகிறார்க ளய்யா, சீக்கிரத்தில் வந்து விடுவார்கள்'' என்றார். ஸ்வாமி கூறியபடியே சில நிமிடங்களிலேயே அம்மூவரும் காரில் வந்தனர். வந்தவுடனே நாராயண நாமஸ்மரணையுடன் ஸ்வாமியின் பாதங்களில் வணங்கினர். உடனே ஜனத்திரள் மொத்தமும் பகவந்

நாமஸ்மரணையால் அந்தப் பிரதேசத்தை எதிரொலிக்கச் செய்தனர். ''வந்த ஸ்வாமி களைவிட நம் ஸ்வாமி உயர்ந்தவர்'' என்று அவர்கள் கருதினர். இனிப்புப் பதார்த்தம் ஒன்றை ஸ்வாமிக்கு அளித்து அதனை உண்ணும் படி மூன்று பேரும் வேண்டினார்கள். ''ஐயா, (மற்றவர்களுக்கு அளிக்காமல் நான் மட்டுமே) அதைத் தின்பது விஷம் தின்பதற்கு நிகரல்லவா? இவ்வளவு பேர் இங்கே உள்ளனர். அவர்கள் அனைவருக்கும் அளித்தால் எனக்குக் கொடுத்ததாக ஆகும்'' என்றார் ஸ்வாமி. அச்சொற்களைக் கேட்டவுடனே ஸ்ரீசிதானந்தஸ்வாமி கன்னத்தில் போட்டுக் கொண்டார். பின்னர் ஸ்வாமி அவர்களை ஆசீர்வதித்து ''சிக்கிரத்தில் சமுத்திரம் தாண்டிப் போவாய்'' என்றார். சிதானந்தஸ்வாமி தம் ஆசிரமத்தை அடைந்த போது அமெரிக்காவி லிருந்து அவருக்கு அழைப்புக்கடிதம் வந்திருப்பதைக் கண்டார்.

நந்தியாலா பிராந்தத்திலிருந்து வந்த சுப்பண்ணா என்ற ஸாது ஒருவர் ஸ்வாமியைத் தனுப்பூர் நாராயணதாஸ் ஆசிரமத்தில் தரிசித்தார். இவர் பல சித்திகளை அடைந்தவர். உதாரணமாகச் சாப்பிட அமர்ந்து விட்டால் பத்துபேர், இருபது பேர் சாப்பிடக்கூடிய அளவு உணவு பரிமாறினாலும் சாப்பிட்டுக் கொண்டே இருப்பார்; போதும் என்றே கூறமாட்டார். அதே போல் நாமாக அழைத்துச் சாதம் போட்டால் உண்பார்; இல்லாவிடில் எவ்வளவு நான் ஆனாலும் சாதம் போடும்படிக் கேட்கமாட்டார். கோயில், திராமச்சாவடி, பாழடைந்த கட்டிடங்கள் ஆகியவற்றிலேயே தங்குவார். இவர் நடக்கும் விதம் விசித்திரமாக இருக்கும். இடது கால் கட்டைவிரலுக்கு வலது குதிகால் படும்படியாக அடிவைத்து முன்நோக்கிப் போய்க்கொண்டு, முணுமுணுத்துக் கொண்டு, அடிகளை எண்ணிக் கொண்டு ஒய்வில்லாமல் நடந்த இடத்திலேயே அப்படியும் இப்படியும் நடந்து கொண்டிருப்பார்.

இவர் ஸ்வாமியைப் பற்றி பக்தர்களிடம் ''ஸ்வாமியைப் போலவே இருக்கிறார். மிகவும் ஜாக்கிரதையாக இருங்கள்'' என்றார். ''ஸ்வாமியைக் கேட்டு நீங்கள் ஏதாவது எழுதுவித்துக் கொள்ளுங்கள்'' என்று சேவகர்கள் கூறியபோது ''வரும்போதே வழியில் இருவரும் சந்தித்துப் பேசிக் கொண்டோம். இனி ஏதும் கேட்ட வேண்டியது இல்லை'' என்றார்.

ஸ்வாமி சோமசிலா அருகில் தங்கியிருந்தபோது ஒரு திகம்பர யோகி ஸ்வாமியைத் தரிசிக்க வந்தார். ஸ்வாமி ''ஐயா, அவருக்குக் கோவணம் அளியுங்கள் ஐயா'' என்றார். அந்தத் திகம்பரயோகி ''பிள்ளையாண்டான் பெரியவரே ஆனாலும் உடைகளைப் பற்றிய அறியாமை போகவில்லையே'' என்றார். இந்தச் சம்பாஷணையின் உண்மையான பொருள் அவர்கள் இருவருக்கே தெரியும். இவ்வாறாக

பற்பல சாதகர்கள், யோகிகள், ஸாதுக்கள் முதலியோர் ஸ்வாமியின் தரிசனத்துக்காகவும் ஆசிகளுக்காகவும் வந்து தாம் அடைய வேண்டியதை அடைந்து சென்றனர்.

இத்தகைய நிகழ்ச்சிகளைப் பற்றியும் அப்போது நடந்த பேச்சுக்களைப் பற்றியும் நமக்கு எந்தவிதமான குறிப்புகளும் கிடைக்காமற் போனது நமது துரதிருஷ்டமே. ஆனால் ஸ்வாமி இன்றும் ஆத்மீக வழியில் செல்பவருக்குக் கற்பகத் தருவாக, வாயால் எதுவும் கூறாமலே தேவையான மானஸீகமான மாற்றங்களை ஏற்படுத்தியும், அவசியமான போது பி. மாதவராவ், நந்தகிரி சுந்தரராவ் போன்ற பக்தர்களுக்கு பௌதிக தரிசனம் கூட அளித்து அவர்களை ஆத்மீக வழியில் கைகொடுத்து அழைத்துச் செல்கிறார்.

ஒரு முறை இரண்டு புகழ்பெற்ற மந்திரவாதிகள் கொலகமூடிக்கு வந்து ஆசிரமத்திலுள்ள பூவரச மரத்தடியில் காலையில் அமர்ந்தார்கள். மாலை நான்கு மணி ஆகியும் அங்கிருந்து நகரவில்லை. யாரிடமும் பேசவில்லை. அன்று ஸ்வாமி அதிகமாகக் குண்டத்தை எரியவிட்டார். மாலை நான்கு மணிக்கு அவர்களுக்கு உணவளிக்கச் சொன்னார். ''இவர்கள் மிகவும் களைத்துப் போயிருக்கிறார்கள். தலா இரண்டு ரூபாய்கள் கொடுங்கள்'' என்று கூறினார். பக்தர்கள் அவ்வாறே கொடுத்தனர். அவர்கள் போகும்போது சில பக்தர்களிடம் ''ஸ்வாமியின் மேன்மையைப் பற்றிக் கேள்விப்பட்டு, பொறாமையால் அவர் மீது மந்திரப் பிரயோகம் செய்வதற்காக வந்தோம். என்னமோ தெரியவில்லை. இங்கே வந்தது முதல் அந்த விஷயத்தையே மறந்துபோய் இந்த மரத்தடியில் உட்கார்ந்து விட்டோம். அது ஸ்ரீஸ்வாமியின் மகிமையே. நாங்கள் இவ்வளவு கெட்ட புத்தியோடு வந்தும் ஸ்வாமி எங்களை ஆதரவாக நடத்தினார். அவரது கருணைக்கு நாங்கள் தகுதியுள்ளவர்களல்ல'' என்று கூறி ஸ்வாமியை மனப்பூர்வமாக வணங்கினர்.

13. தக்ஷிணை

தெய்வம், குரு, மற்றும் ஸத்புருஷர்கள் மீது நம் இதயத்திலுள்ள பூஜ்யபாவத்தையும், அன்பையும் சிரத்தையையும் வெளிப்படுத்துவதற்காக நாம் சமர்ப்பிப்பதே தக்ஷிணை ஆகும். சம்ஸ்கிருதத்தில் 'தக்ஷ' என்றால் சிரத்தை என்பது பொருள். அத்தகைய உயர்ந்த எண்ணங்கள் இல்லாமல் அளித்த தக்ஷிணை எவ்வளவு அதிகமாக இருந்தாலும் அது பயனற்றதே. அத்தகைய சிறந்த உணர்ச்சிகளுடன் கொடுத்தால் அந்த காணிக்கை எவ்வளவு குறைவானாலும் அவர்களுக்கு உயர்வாகத் தோன்றும். அதனால்தான் கீதையில் கூட பத்ரம், புஷ்பம், பழம், நீர் ஆகிய எதுவானாலும் பக்தியோடு அளித்தால் நான் பிரியத்தோடு ஏற்பேன் என்றார் கிருஷ்ணர்.

எல்லாவற்றையும் செய்விப்பது இறைவனே என்றும், அவரே பக்தர்களைக் காக்கவும் தர்மத்தைக் குறித்து போதனை செய்வதற்காகவும் வெவ்வேறு மஹான்களின் உருவில் அவதரிக்கிறார் என்றும் அறிந்திருப்பதே சிரத்தையோடு கூடிய பக்தியாகும். இந்த உண்மையைத் தம் பக்தர்கள் உணருவதற்காகவே ஸ்வாமி அடிக்கடி தம் பக்தர்களிடமிருந்து தக்ஷிணை கேட்டு வாங்குவார். ஒவ்வொரு பக்தரின் நிலையைப் பொறுத்து அவர் கேட்கும் தக்ஷிணைக்கு வேறு வேறு அர்த்தங்களும் தனித்தன்மையும் இருக்கும்.

1980-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் துளஸிப்பாட்டியிடம் பதினொன்று துப்பட்டிகளைச் சமர்ப்பிக்கும்படிக் கூறினார் ஸ்வாமி. ஸ்ரீ சாயிகூட ஆத்மீக உண்மைகளைப் போதிக்க விரும்பிய போது தக்ஷிணை கேட்பதன் மூலம் அவர்கள் விடவேண்டிய தூர்குணங்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுவார். ஸ்வாமி துளஸிப்பாட்டியிடமிருந்து கேட்டது ஐந்து ஞானேந்திரியங்கள், ஐந்து கர்மேந்திரியங்கள், மனசு ஆக மொத்தம் பதினொன்று. ஆத்மாவை மறைத்து, பிரம்மத்திலிருந்து நம்மை உடலின் எல்லைக்குட்பட்டவர்களாகச் செய்யும் இந்த பதினொன்று மறைப்புகளைத்(துப்பட்டிகள்) தனக்கு அர்ப்பணித்து பிரம்மத்தோடு ஐக்யம் ஆக வேண்டும் என்பதே ஸ்வாமியின் கருத்து போலும்.

ஒரு முறை ஸ்வாமி நாகய்யாவிடம் நமது ஒன்பது துப்பட்டி களைத் தமக்குக் கொடுக்கும்படிக் கேட்டார்.

நாகய்யா : ''ஸ்வாமி உங்களுக்கிருப்பது ஆறு துப்பட்டிகள் தானே; இதோ அவற்றை எடுத்துக் கொள்ளுங்கள்''.

ஸ்வாமி : ''ஆஹா, அந்த ஒன்பது துப்பட்டிகளைக் கொடு''.

நாகய்யா மேலும் மூன்று டவல்களைச் சேர்த்து ஸ்வாமியிடம் கொடுக்க,

ஸ்வாமி : ''என்னய்யா? இந்தச் சின்னத் துணிகளைக் கொடுத் தாய்? என்னுடையவை பெரிய துப்பட்டிகளல்லவா?''

நாகய்யா தனது மற்றும் ரோசிரெட்டி, குரவையா இருவரின் துப்பட்டிகளையும் சேர்த்து மொத்தம் ஒன்பது துப்பட்டிகளை அளித்த வுடன் ஸ்வாமி 'ஆ, இப்போது சரியாகிவிட்டது. அவ்வளவு தான், அவ்வளவுதான்' என்றார்.

பஞ்சபூதங்கள், மனம், புத்தி, அஹங்காரம் என்ற எட்டுவித பிரகிருதிகளோடு அவற்றிற்கு ஆதாரமான பரமாத்ம தத்துவமும் சேர்ந்தது தான் இறைவன். எல்லாவற்றையும் இறைவனின் உருவமான ஸ்வாமியாக உணர்வதே ஒன்பது துப்பட்டிகளை அவருக்கு சமர்ப்பிப்ப தன் பொருள் என்பதே அவருடைய கருத்து போலும்.

மற்றொரு முறை ஸ்வாமி துளஸிப்பாட்டியிடம் 'ஆறு துப்பட்டி களைக் குண்டத்தில் போடம்மா'' என்று மீண்டும் மீண்டும் கூறினார். ஆறுவரிகளாகிய துப்பட்டிகளை எரித்துவிடு என்றார் என்று தோன்று கிறது.

உண்மையான பக்திக்கும் அன்புக்குமே ஸ்வாமி மதிப்பு அளிப் பாரே தவிர நாம் அளிக்கும் பொருட்களுக்கு அல்ல. பக்தியும் அன்பும் இல்லாமல் நாலுபேர் நம்மைக் குறித்து உயர்வாக எண்ணுவதற்காகவோ அல்லது நமது ஹோதாவைக் காப்பாற்றுவதற்காகவோ அளிக்கும் பொருட்கள் எந்த விலை மதிப்புள்ளவை ஆனாலும் ஸ்வாமியின் பார்வையில் அவை காகத்தின் எச்சத்திற்குச் சமமே.

என்னை (ஆசிரியர்) ஸ்வாமி ஆஸ்துமா வியாதியிலிருந்து விடுவித்ததற்கு நன்றியுணர்வோடு நான் தலுப்பூரில் தினமும் நான்கு இட்லிகள் வாங்கி வந்து ஸ்வாமிக்கு ஸமர்ப்பிப்பேன். அவ்வாறு வாங்கி வரும்போது வழிநெடுக சாயிநாமம் ஜபித்துக் கொண்டே வருவேன். ஒரு

நாள் என்னிடம் பத்து பைசாக்களே இருந்தன; அதற்கு ஒரு இட்லி மாத்திரம் வாங்கிப் போவதா அல்லது கடனுக்கு நான்கு இட்லிகளை வாங்கிப் போவதா என்று யோசிப்பதிலேயே என் நேரம் கழிந்துவிட்டது. இறுதியில் ஒரு இட்லியாக அளித்தால் நன்றாக இராது என்று கடனுக்கு நான்கு இட்லிகள் வாங்கிவந்து அளித்தேன். எவ்வளவு மன்றாடியும் ஸ்வாமி அவற்றைத் தொடவில்லை. நாமஜபமும் இல்லை; மேலும் ஒரு இட்லி அளிப்பது அற்பத்தனம் என்று கருதிக் கடன்பட்டது ஸ்வாமிக்குச் சம்மதமில்லை போலும்; அதனால்தான் அவர் இட்லிகளை ஏற்க வில்லை.

பண்டிகை கொண்டாடுவதற்காகவும், யாத்திரை போவதற்காக வும் மற்றும் மதச்சடங்குகளை நடத்துவதற்காகவும் கடன்படக்கூடாது என்று வீரபத்ர சாமிபாபா கூட பக்தர்களுக்குப் போதித்தார்.

ஒருநாள் கலிச்சேடு ஹிந்தி பண்டிதர் மஸ்தான்ஸாஹேப், ஸ்வாமிக்கு இரண்டு ரூபாய்கள் அளித்து நமஸ்கரித்தார். "இவருக்கு இருபத்தாறு ரூபாய்கள் வரவேண்டும் என்று எழுதிக் கொடுங்களய்யா!" என்றார் ஸ்வாமி. மூன்று மாதங்களுக்குப் பிறகு அவருக்கு அரசாங்கம் நீண்டகாலமாக கொடுக்கத் தாமதித்து வந்த சம்பள உயர்வு இருபத்தாறு ரூபாய்களைக் கொடுக்குமாறு உத்தரவு வந்தது. ஸ்வாமிக்கு தக்ஷிணை சமர்ப்பித்த மாதம் முதல் சம்பள உயர்வு வந்ததே ஆச்சரியமான விஷயம்.

ஸ்வாமி சிலபேரிடம் இவ்வளவு பணம் கொடுக்காவிட்டால் வாக்கு வராது என்று கூறுவார். பண ஆசை பிடித்தவர்கள், கருமிகள் முதலியோர் ஸ்வாமிக்குப் பணத்தாசை என்று எண்ணுவார்கள். ஸ்வாமியின் தூய வைராக்கியமான வாழ்க்கை முறையைப் பற்றி அறிந்த வர்களுக்கு மட்டுமே பணம் என்றால் ஸ்வாமிக்கு ஒரு பொருட்டே அல்ல என்பது தெரியும். அவர் ஒரு போதும் பணத்தைப் பத்திரப்படுத்தி வைத்து அறியார். இருக்கும் பணத்தை எல்லாம் மாலைக்குள் தம் சேவகர்களுக்கு அவர்கள் செய்த கஷ்டமான வேலையையும் அவர்களது தேவையையும் பொறுத்துப் பகிர்ந்தளித்து விடுவார். சிலர் அளிக்கும் தக்ஷிணையை அவர் ஏற்க மாட்டார்.

ஸ்ரீராமய்யா, சில காரணங்களால் தம் பக்கத்து வயலை விட மிகவும் தாமதமாக ராகி பயிர் செய்தார். வயலில் சரியான செழிப்பு இல்லாததால் தமக்குப் பயிர் நன்றாக விளையாது என்று பயப்பட்டு, ராகி நன்றாக விளைத்தால் ஸ்வாமிக்கு 12 மூட்டைகளுக்கு ஒரு மரக்கால் வீதம் சமர்ப்பிப்பதாக நேர்ந்து கொண்டார். இறுதியில் அவர் எதிர் பார்த்ததை விட அதிகமாகவே விளைச்சல் ஏற்பட்டது. தான் நேர்ந்து

கொண்ட படி ராகி சமர்ப்பிக்காமல் அதில் கொஞ்சமாகவே அளித்தார். அதை மறந்தும் இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. எப்போதாவது நினைவு வந்த போது மாத்திரம் வருத்தப்படுவார். ஒரு நாள் ஸ்வாமியைத் தரிசித்து நமஸ்கரித்தார். ஸ்வாமி தமக்குத்தாமே ''அந்த ராகி அப்படியே போய்விட்டது'' என்று இரண்டு மூன்று முறை உரக்கக் கூறிக் கொண்டிருந்தார். தனது நேர்த்திக் கடனைக் குறித்தே ஸ்வாமி கூறுகிறார் என்று உணர்ந்த ஸ்ரீராமய்யா உடனே தான் கொடுக்க வேண்டிய மீதி ராகியின் விலையை அபராதத் தொகையுடன் சேர்த்துச் சமர்ப்பித்தார்.

ஸ்ரீசாமிநாதரைப் போலவே ஸ்ரீ ஸ்வாமியும் தமக்கு வரவேண்டிய நேர்த்திக் கடன்களைக் கேட்டு வாங்கிக் கொள்வார். ஒவ்வொரு முறை, வரவேண்டிய தக்ஷிணையை சிறு சிறு தொகைகளாகப் பலமுறை கேட்டு, வர வேண்டிய தொகை முழுதும் வந்த பிறகு பின்னர் ஒரு பைசா கூட ஏற்கமாட்டார்.

ஒரு முறை தெற்குப் பிராந்தத்திலிருந்து வந்த குடியானவன் ஒருவன் இரண்டு ரூபாய் தக்ஷிணை அளித்து ஒரு விஷயத்தைக் குறித்து ஸ்வாமியிடம் கேட்டான். ஸ்வாமி ஒரு சொல் கூறிவிட்டு 'இவிவாக்கு வராது; தக்ஷிணை கொடு' என்றார். இவ்வாறே பல முறை கூறி அவனிட மிருந்த பணம் முழுவதையும் வாங்கிக் கொண்டு விட்டார். இறுதியில் அவனுக்குச் சீட்டு எழுதுவித்துக் கொடுத்தார். பின்னர், அவனிடம் திரும்பிச் செல்வதற்குக் கூடப் பயணச்செலவுக்குப் பணம் இல்லை என்பதை அறிந்திருந்த ஸ்வாமி அவனுக்கு ஆறு ரூபாய்கள் கொடுத்தனுப்பினார்.

கடப்பா ஜில்லாவிலிருந்து ஒரு பக்தர் ஸ்வாமியின் தரிசனத்துக் காக வந்தபோது ஸ்வாமி பலமுறை தக்ஷிணை கேட்டு அவரிடமிருந்த பணம் முழுவதையும் வாங்கிக் கொண்டார். அந்த பக்தர் இது நமது நன்மைக்கே என்று சந்தோஷமாக ஆசிரமத்தில் சாப்பிட்டுவிட்டு ஸ்வாமியிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு தம் கிராமத்துக்குப் புறப் பட்டார். ஆச்சரியப்படும் விதமாக, அவர் மூன்று பஸ்களிலும் பிறகு படகிலும் பிரயாணம் செய்தபோது ஒருவரும் அவரிடம் பயணத்துக்கான பணத்தைக் கேட்கவில்லை.

14. பிக்ஷான்னம்

எவ்வளவோ செல்வந்தர்கள் ஸ்வாமியின் பாதங்களில் பணத்தைக் கொட்டினாலும் அவர்களுக்கு ஸ்வாமி குறி கூறமாட்டார். மேலே உள்ளவர்கள் அனுமதி கொடுக்கவில்லை என்றோ, வாக்கு வரவில்லை என்றோ கூறித் திருப்பி அனுப்பிவிடுவார். பக்தி சிரத்தை யோடு வருபவர்களுக்கு அவர்கள் பணம் கொடுக்காவிட்டாலும் அவர் கள் கேட்காமலேயே தமது ஆசிகளை எழுதுவித்து அபய முத்திரை வைத்துக் கொடுப்பார். எனவே எப்போதும் அவர் பிச்சை எடுத்துக் கொண்டு வரும் உணவையே நம்பி வாழ்ந்தார். தமது கோரிக்கைகள் நிறைவேறப் பெற்ற பக்தர்கள் ஸ்வாமி தங்கியுள்ள விடுதியில் சந்தர்ப்பணை நடத்தினாலும், பண்டிகை நாளானாலும் பிச்சை எடுக்கப் போகவேண்டியதே. ''ஐயா, இன்று இவர்கள் உணவு கொடுத்தார்க ளென்று நாம் பிச்சையெடுக்கப் போகாவிட்டால், நாளைக்குப் பிச்சை போட மாட்டார்கள் ஐயா'' என்பார்.

ஒரு முறை தசய்யா ஸ்வாமியிடம் ''ஸ்வாமி, ஆசிரமத்தைச் சார்ந்து அதற்கு வேண்டிய பணிகளைச் செய்பவர் இருபது பேர் உள்ளோம். நாங்கள் பிழைப்பது எப்படி?'' என்று கேட்டபோது ''இதோ விளைவது எல்லாம் எவருடையது என்று எண்ணினாய்?'' என்றார்.

எல்லோருக்கும் பசியை அளித்த இறைவனே அதற்குத் தகுந்த உணவையும் விளையும்படிச் செய்கிறான். நம் வயலில் விளைந்த மொத்தத்தையும் நாமே உண்ண வேண்டும் என்ற சுயநல எண்ணத்தை விட்டு, விளைச்சலைக் கொடுத்த இறைவனின் மீது நன்றியுணர்வோடு, தானதர்மங்கள் செய்ய வேண்டுமென்று ஸ்வாமி போதிக்கிறார்.

ஸ்வாமிக்கு பிக்ஷையோ, நிவேதனமோ, தானமோ சமர்ப்பிக்கும் போது இத்தகைய நன்றியுணர்வோடு அளித்தால் அது மிகுந்த பலனை அளிக்கும். பிச்சைக்காரர் என்ற எண்ணத்தோடு அளித்தால் அதற்குத் தக்க அற்பபலனே விளையும்.

தமது மஹாசமாதிக்குப் பின்னும் இவர் தமது சேவகர்களைப் பிரேரேபித்து இந்த நிரந்தர பிக்ஷையெடுக்கும் வழக்கத்தைத் தொடர்வித்து வருகிறார்.

ஸ்ரீஸ்வாமியின் கட்டளைப்படி சாதம் உண்பதை விட்டு விட்டு அவல், சர்க்கரை, நீர் முதலியவற்றையே உண்டு வாழ்ந்து வரும் ரோசிரெட்டி கூறியது. ''முதுமையால் எனக்குக் கண்பார்வை முற்றிலும் போய்விட்டது. மேலும் இரவ ஆகாரம் மட்டுமே உண்பதால் எனக்கு மிகவும் பலவீனமாக இருக்கும். அதிசயிக்கத்தக்க விதத்தில், பிச்சைக்குப் போக வேண்டிய நேரம் வந்ததும் பலம் ஏற்பட்டு விடும். பிச்சைக்குப் போகும்போது ஸ்வாமியின் அருளால் வழியில் வெள்ளை நூலைப் பிடித்தாற்போல சிறிதளவு வழி தெரியும். அதன் படியே போகும் போது ஒரு நாள் கூட முள் குத்தியதோ, கல் தடுக்கியதோ இல்லை. இரண்டரைக்கிலோ சாதம் கொள்ளும் டிபன் காரியர், மோர்க் கிண்ணம் மற்றும் பக்தர்கள் கொடுத்த இதர பதார்த்தங்கள் ஆகியவற்றைச் சுமந்து கொண்டு ஆசிரமத்தை அடையும் வரை நன்றாயிருப்பேன். பின்னர் ஸ்நானம் செய்து ஸ்வாமிக்கு நமஸ்காரம் செய்தவுடன் சக்தியெல்லாம் போய் பலவீனமாகப் படுக்கையில் விழுவேன். மறுநாள் பிக்ஷை வேளைக்கே மீண்டும் சக்தி வரும். இது ஸ்வாமியின் அருளே தவிர வேறு ஏதும் இல்லை. ஸ்வாமி எனக்குக் கொடுத்த இந்த சேவையை இறுதி மூச்சுவரை செய்வதே எனது லக்ஷியம்.''

1986-ஆம் ஆண்டு மே மாதத்தில் ரோசிரெட்டி பரமபதம் அடைந்தபின் ஸ்ரீராமய்யா போன்ற மற்ற சேவகர்கள் இந்த சேவையைச் செய்து வந்தனர். ஒரு முறை தவிர்க்க முடியாத காரணங்களால் ஆசிரமத்தில் பிக்ஷைக்காகச் செல்ல ஆடவர்கள் எவரும் இல்லாதநிலை ஏற்பட்டது.

சிறுவயதிலேயே கணவனை இழந்த துக்கத்தால் பசியில்லாமல் நோயுற்றுச் சாகும் நிலையில் இருந்த கோடூர் வெங்கம்மா ஸ்வாமியின் அருளால் ஆரோக்கியம் அடைந்து அப்போது ஆசிரமத்தில் இருந்தாள். இவள் ஒரு போதும் ஊருக்குள் போனதில்லை. பிக்ஷைக்குச் செல்ல எவரும் இல்லாத நிலையில் ஸ்வாமியின் பிரேரணையால் அவள் பிக்ஷைக்குக் கிளம்பினாள். இவ்வாறு அவள் சுமார் ஒரு ஆண்டுகாலம் இந்த சேவையைத் தொடர்ந்து செய்தாள். இன்றும் இந்த சேவை தொடர்ந்து நடந்து கொண்டே வருகிறது. ஸ்வாமியின் கருணையால் உணவு வேளைக்கு வரும் பக்தர்கள் அனைவருக்கும் ஆசிரமத்தில் இலவச உணவு வசதி ஏற்பட்டுள்ளது.

ரோசிரெட்டி ''ஆசிரமத்தில் அதிகம்பேர் வரும் நாளன்று அதிக உணவு கிடைக்கும். கொஞ்சம் பேரே வந்திருந்தால் அவர்களுக்குச் சரியாகும் அளவுக்கே பிக்ஷான்னம் கிடைக்கும். இன்று ஊர் முழுவதும்

என்னால் சுற்றிப் பிச்சை எடுக்க முடியுமா என்று மலைப்பாக இருக்கும் நாட்களில் எவ்வாறு சுற்றுவேனோ, கணநேரத்தில் இரண்டு பாத்திரங் களும் நிரம்பிவிடும். ஸ்வாமியின் மகிமை சொல்லத் தரமானதல்ல; அவரவர்களே தெரிந்து கொள்ள வேண்டியதே'' என்றார்.

ஆசிரமத்தில் அவசியமான பொருட்கள் இல்லையென்றால் எவரோ ஒருவர் தக்க நேரத்தில் கொண்டு வந்து அளிப்பார். ''நான் மறைந்த பிறகும் நான் இருந்த போது நடந்தது போலவே நடக்கும்'' என்று ஸ்வாமி கூறிய அபய மொழிகள் இன்று உண்மையாயின.

15. முற்பிறவிகளின் தொடர்பு

பரமாத்ம ஸ்வரூபமான மனிதன் அஞ்ஞானத்தால் விருப்பு வெறுப்புகளுக்கு அடிமையாகி, நல்லவையும் தீயவையும் ஆன கர்மங்களைச் செய்கிறான். அந்தக் கர்மங்களின் விளைவை அனுபவிப்பதற்காக எவ்வளவோ பிறவிகள் எடுக்கிறான். அத்தகையவர்களில் எவரோ ஒருவர் மஹான்களின் கருணையால் அறியாமையை அழித்து ஞானி ஆகிறார். அத்தகைய ஞானிக்கு ஜீவர்களின் பூர்வஜன்மங்கள், அவர்களது கர்மபலன்கள் முதலியவை குறித்துத் தெளிவாகத் தெரியும். இதனை எல்லா மஹான்களின் சரிதங்களிலும் காணலாம். ஸ்வாமி கூட பலபேருக்குப் பூர்வ ஜன்மத்தில் அவர்களுக்கும் தமக்கும் உள்ள தொடர்பைப் பற்றிச் சீட்டு எழுதிக் கொடுப்பார்.

ஒரு நாள் குரவைய்யாவைப் பற்றி ''இவள் பெங்களூரில் தெற்கு வீதியில் ஆசாரி வீட்டில் பிறந்தாள். பிறகு வைசியர் வீட்டில் பிறந்தாள். பின்னர் நான் வெங்கடகிரி ராஜாவின் வீட்டிலும் குரவைய்யா ராஜாவின் மாமா வீட்டிலும் பிறந்தோம்'' என்றார் ஸ்வாமி.

ஒரு முறை ஸ்வாமி சலமாநாயுடுவிடம் ''சலமாநாயுடா, போன ஜன்மத்தில் வெங்கடகிரி ராஜாவின் வீட்டில் நான் கவர்னர் படிப்பும், நீ ஜட்ஜ் படிப்பும் படித்தோம். அரண்மனைகளில் வசித்தோம். நம்மிருவருக்கும் அப்போது திருமணம் இல்லை. இப்போது மண்குடிசையில் இருக்கிறோம். எப்போதும் மாடி வீடு கிடைக்குமா? அதன் பின்னர் பிடாபுரம் ராஜாவின் வீட்டிலிருந்து இப்போது நாகலேடுருக்கு வந்தேன்'' என்றார்.

மல்லிக் வெங்கையா தமது இருபத்தைந்தாவது வயதில் ஸ்வாமி மிடம் வந்தார். ஒரு நாள் ஸ்வாமி அவரிடம் ''என்னிடம் வந்துவிடு'' என்று அழைத்தார். ''ஸ்வாமி, நான் வரமாட்டேன். ''உங்களிடம் வந்தால் பிச்சை எடுக்கப் போக வேண்டும். அது என்னால் முடியாது'' என்றார். ''அதெல்லாமொன்றுமில்லை. ராமேஸ்வரத்தில் நான் மானேஜராகவும் நீ தலைமைக் கணக்கனாகவும் இருந்தோம். இந்தப் பிராந்தத்தில் உனது கடன் எல்லாம் தீர்ந்துவிட்டது. என்னிடம் வந்துவிடு'' என்றார்.

''ஸ்வாமி எனக்குப் பேய்களை விரட்டும் மந்திரம், கால்நடைகளின் குளம்பு வியாதியைப் போக்கும் மந்திரம், காடேரி மந்திரம், போலேரம்மா மந்திரம் ஆகியவற்றைச் சொன்னால் உங்களிடம் வருவேன்'' என்றார் வெங்கய்யா. ''சொல்கிறேன் வா'' என்றார் ஸ்வாமி. ''நீ என் மடத்தில் மேஸ்திரியாக இருந்து விறகு வெட்டிக் கொண்டிரு. உன் பின்னால் இவர்கள் அனைவரும் வருவார்கள்'' என்று சீட்டு எழுதுவித்தார் ஸ்வாமி. அவர் கேட்டுக் கொண்டபடியே அந்த மந்திரங்களையும் அவற்றை உச்சரிக்கும் முறைகளையும் அதற்குத் தேவையான நியம நிஷ்டைகளையும் ஸ்வாமி அவருக்குக் கூறியருளினார்.

ஸ்வாமி, கோடூர்வெங்கம்மாவைப் பற்றி ''பூர்வத்தில் கொடிகள் உள்ளவர்களின் வீட்டில் மருமகளாகப் பிறந்து நல்ல அந்தஸ்தோடு உடல் முழுதும் தங்க நகைகளணிந்து உயர்ந்த பார்வையோடு இருந்தாய். ஒரு நாள் உன்கால் கொடி மரத்தில் பட்டு அந்தக் கொடி மரம் முறிந்தது; நீ குப்புற விழுந்தாய். ''நீ பூமியில் பிறந்து விதவையாக இருப்பாய் போ!'' என்று அந்தக் கொடி சபித்தது. அந்தச் சாபம் இல்லாவிடில் உனக்குத் திருமணமே நடந்திருக்காது. சாபத்தினால் தான் சிறுவயதிலேயே மணமாகிக் கணவன் இறந்தான். ஆனால் நான் உன்னை விட்டுவிட மாட்டேன்'' என்றார்.

இலுகுர்த்தியைச் சேர்ந்த ஒரு உபாத்தியாயரின் மகனுக்கு புத்திக் குறைவு ஏற்பட்டுக் கைகால்கள் ஸ்வாதீனம் இல்லாமல் மருத்துவர் களால் குணப்படுத்த முடியாமல் போகவே ஸ்வாமியிடம் அழைத்து வந்தனர். ''என்ன செய்வது ஐயா, இவன் பூர்வஜன்மத்தில் பந்தயக் குதிரைகளை ஓட்டியவன். குதிரைகளை அடித்த பாவத்தை அநுபவிக்க வேண்டும் அல்லவா?'' எனறார் ஸ்வாமி.

இவ்வாறே அடிக்கடி மயக்கம் ஏற்பட்டுவிழும் ஒரு சந்நியாசி ஸ்வாமியிடம் வந்தார். ''என்ன ஸ்வாமி, இவ்வளவு தூய்மையான வாழ்க்கையை நடத்துபவருக்கு இந்த வியாதி ஏற்பட்டது?'' என்று பக்தர்கள் கேட்டனர். ''முற்பிறவியில் இவன் பறவைகளை வேட்டை யாடுவான். அந்தப் பாவத்தை அநுபவிக்க வேண்டாமா?'' என்றார் ஸ்வாமி. அந்த சந்நியாசி மூர்ச்சை அடையும்போது மேலேயிருந்து கிறுகிறு என்று சுற்றிக் கொண்டே விழும் பறவையைப் போலவே கிறுகிறுவென்று சுற்றி விழுவார். கர்மசூத்திரம் எவ்வளவு சரியாக வேலை செய்கிறதென்பதை ஸ்வாமி விவரித்தார்.

நாகுலவெல்லடூரில் ஒரு சிறுவனுக்கு இரண்டு கட்டை விரல் களிலும் தொடு உணர்ச்சியே இல்லை. ஸ்வாமியிடம் அழைத்து வந்த போது ''கிட்டிப்புள்ளால் விளையாட்டாகக் கிளிகளை அடிப்பான். அந்தப் பாவத்தை அநுபவிக்க வேண்டாமா?'' என்றார் ஸ்வாமி.

ஒருநாள் ஸ்வாமி ரோசிரெட்டியை அழைத்து ''ஐயா, நீ போன பிறவியில் சுப்பையா என்ற பிராமணனாக இருந்தாய். நீ எனக்குக் கல்வி கற்பித்த குரு. இந்த ஒரு ஜோடி வேஷ்டிகளையும் பத்து ரூபாய்களையும் குருதக்ஷிணையாக எடுத்துக் கொள்'' என்று கூறி அவருக்குக் கொடுத்தார்.

1979-ஆம் ஆண்டில் ஸ்வாமி இனுகுர்த்தியில் இருக்கும்போது ஒரு ஏழைப் பெண்மணி தன் மூன்று மகள்களோடு மிகவும் பசியோடு வந்தாள். அவர்களுக்கு ஸ்வாமி உணவளிக்கச் செய்தார். இலையிலுள்ள சாதத்தைத் தாயை முந்திக் கொண்டு பிள்ளைகளே தின்று விட்டனர். மீண்டும் சாதம் போடச் செய்து எல்லோரையும் திருப்தி அடையச் செய்தார் ஸ்வாமி. ''இவர்கள் மட்டுமேயன்றி இவளுக்கு வீட்டில் இன்னும் நான்கு குழந்தைகள் உள்ளனர். முற்பிறவியில் இவள் ராஜாவின் பட்டமஹிஷி. ஊஞ்சலில் ஆடியவாறே இவள் தன் ஏழு வேலைக்காரிகளுக்கும் உணவு அளிக்காமல், தான் மட்டும் ஹாயாக பலகாரமும், சாதமும் சாப்பிடுவாள். அந்த ஏழு வேலைக்காரிகளும் இப்போது இவளது குழந்தைகளாகப் பிறந்து இவளைத் தின்ன விடாமல் வருத்துகிறார்கள்'' என்றார் ஸ்வாமி. அவள் திருப்தியாக உணவு சாப்பிட்டபின் அவளுக்குப் பத்து ரூபாய்களும் ஒரு புடவையும் அளித்து அனுப்பினார். கர்மபலன் எவ்வாறு வேலை செய்கிறது என்பதை நாம் உணர்ந்து நடந்து கொள்ள வேண்டும்.

1969-ஆம் ஆண்டுச் சமயத்தில் கொலகமூடி ஆசிரமத்துக்குத் தினந்தோறும் ஒரு மலைஜாதிச் சிறுமி பிக்ஷைக்கு வருவாள். துளஸம்மா அவளுக்குப் பிச்சையளித்து அனுப்புவாள். ஒரு நாள் அந்தச் சிறுமி வந்தவுடன் வெளிப்புறம் விரல்முத்திரை வைத்துக் கொண்டிருந்த ஸ்வாமி ''அவள் வந்திருக்கிறாளம்மா'' என்று உள்ளே இருந்த துளஸம்மாவை அழைத்தார். அவள் அளித்த சாதத்தை எடுத்துக் கொண்டு அந்தச் சிறுமி போய்விட்டாள். ஸ்வாமி ''அரசனின் குடும்பத்திலிருந்து பிராம்மண குடும்பத்துக்கு வந்து அங்கிருந்து இப்போது ஏழைக் குடும்பத்துக்கு வந்திருக்கிறாள். என்ன சிருஷ்டி ஐயா இது'' என்று பக பக என்று சிரித்தார். தான தர்மம் குறையக் குறைய மனிதன் மாடி வீட்டிலிருந்து, ஒட்டு வீட்டுக்கும் அங்கிருந்து குடிசைக்கும் வரவேண்டி இருக்குமென்பது ஸ்வாமியின் கருத்து.

வேலூர் சுப்பிரமணியம் தன் மனைவி முழங்கால் வலியால் துன்பப்படுவதாக ஸ்வாமியிடம் கூறினார். ''ஐயா, அவள் பூர்வ ஜன்மத்தில் கடிவேடு கிராமத்தில் ஆணாக இருந்து, தன் வீட்டில் நெல்லைத் தின்ற பசுமாட்டை உலக்கையால் அடித்தாள். அந்தக் கர்மாதான் இது. கிராமதேவதை பங்காரம்மாவும் வீரராகவஸ்வாமியும் ஒரளவுக்கு வலியைக் குறைப்பார்கள். ஆனால் வலி முற்றிலும் குறையாது'' என்றார் ஸ்வாமி. அவ்வாறே நடந்தது என்றார் சுப்பிரமணியம்.

16. தெய்வீக அநுபவங்கள்

அசுரர்களை அழித்து பூமியின் பாரத்தைக் குறைத்து ரிஷிகளுக்கு அருள்புரிவதற்காகவே ராமன் அவதரித்தார். அவ்வாறே மஹாபாரத யுத்தத்தின் மூலம் துஷ்டர்களை அழிப்பதற்கும் அர்ஜுனன், உத்தவர், யசோதை, கோபர்கள், கோபிகைகள் முதலியோருக்கு அருள் புரிவதற் காகவும் கிருஷ்ணன் அவதரித்தார்.

மேலும் முமுக்ஷுக்களுக்கு ஆத்மீக போதனைகளை அளித்து தெய்வீகமான அநுபவங்களால் அவர்களை முன்னேற்றவும் ஏழை எளியவராயுள்ள ஜனங்களை உய்விப்பதற்காகவும் அந்தப் பரமாத்மாவே மஹான்களின் உருவில் அவதரிக்கிறார். அத்தகைய மஹான்களை முக்தியை நாடுபவர்கள் நாடியே தீர வேண்டும் என்று உபநிஷத்துக் களும், பகவத் கீதையும் கூறுகிறது. அர்ஜுனனும் உத்தவரும் கிருஷ்ண னையும், கிருஷ்ணன் ஸாந்தீபனி மஹரிஷியையும், ராமர் வசிஷ்ட மஹரிஷியையும் குருவாக அடைந்ததன் மூலம் நமக்கு இந்த இரகசியம் தெளிவாகிறது. ஏனெனில் மஹான்களே சகல சாஸ்திர சாரங்களையும் போதிக்க வல்லவர் என்பதோடு நாம் நம்ப இயலாத விஷயங்களை நேருக்குநேரான அநுபவங்களின் மூலம் நமக்குக் கற்பிக்கின்றனர். கிருஷ்ணர் அர்ஜுனனுக்கு அளித்த விஸ்வரூப தரிசனம் இத்தகையதே ஆகும்.

ஸ்ரீதத்தாத்ரேயரின் அம்சங்களான ஸ்ரீஷீரடி சாயிபாபாவும் அக்கல்கோட் ஸ்வாமியும் தம் பக்தர்களுக்கு இல்லித அநுபவங்களை அளித்தருளியதை அவர்களின் சரித்திரங்களில் காணலாம். அல்லாறே 'ஸ்ரீகுரு சரித்திரம்' என்ற நூலில் தத்தாத்ரேயஸ்வாமியின் அவதாரங் களான ஸ்ரீஸ்ரீபாதவல்லபரும் ஸ்ரீநரசிம்மஸரஸ்வதியும் தம் பக்தர்களுக் கருளிய தெய்வீக அநுபவங்களை அறியலாம். இத்தகைய மஹான்களில் ஒருவர்தான் நம் காலத்தில் நமக்குக் காணக்கிடைத்த அவதூத வெங்கையஸ்வாமி. உண்மையில் மேற்கூறப்பட்ட மற்ற மஹான்களின் சரித்திரங்களை கவனத்தோடு படித்தால்தான் வெங்கைய ஸ்வாமியைப் பற்றி நாம் முழுமையாக அறிந்து கொள்ள முடியும். இல்லாவிடில் அவர் ஒரு பைத்தியக்காரர் என்றோ, வெறும் குறி கூறிப் பிழைக்கும் ஒரு

சாதாரண சாது என்றோ நாம் பிழையாகக் கருதுவதற்கு இடமுண்டு. அவர் தம் பக்தர்களுக்கருளிய தெய்வீக அநுபவங்களை இந்த அத்தியாயத்தில் காண்போம்.

முதிகேடுவாசியான அக்கிம் வெங்கட்ராமிரெட்டியார் கூறியது. ஒரு முறை ஸ்வாமி முதிகேடுக்கு வந்தார். மற்றவர்களெல்லாம் தூங்கிய பிறகு என்னைப் பேரை மாற்றி சுப்பராமையா என்று அழைத்து, ''நீ எனக்குத் தலுப்பூருக்கு வழிகாட்டு, வா ஐயா'' என்று அழைத்துச் சென்றார். நாங்கள் சிறிது நேரம் நடந்து கற்கள் நிறைந்த குன்றை அடைந்தோம். ஸ்வாமி என்னை அங்கு உட்கார்ந்திருக்கும்படிக் கூறி அந்தக் குன்றை மிதித்தால் அது மிருது ஆகும் என்றும் தான் போய் அந்த வேலையைச் செய்துவிட்டு வருவதாகவும் கூறிப் போனார். சிறிது நேரம் கழிந்தவுடன் அவர் என்ன செய்கிறாரோ பார்க்கலாமென்று மெதுவாக அவரை அணுகி ஒரு பக்கமாக மறைந்து கொண்டேன். அவர் அந்தக் குன்றின் மேல் ஏறி ஒரு பெரிய பாறையின் மேல் நிமிர்ந்து படுத்துக் கொண்டு கால்மேல் கால் போட்டுக் கொண்டு அசைத்தாடிக் கொண்டே பாட்டுப் பாடிக் கொண்டிருந்தார். அவரது பாட்டைக் கேட்க வேண்டுமென்று நான் சிறிது சிறிதாகத் தவழ்ந்து சென்று அந்தப் பாறையின் கீழே சென்று அமர்ந்தேன். உடனே அவர் அதைத் தெரிந்து கொண்டு ''பூதங்கள் திரியும் இந்த ஜாமத்தில் நீ இப்படி வரலாமா ஐயா'' என்றார். நான் தவறு செய்து விட்டேனோ என்று பயந்தேன். உடனே அவர் ''மேற்குப்புறத்திலுள்ள பக மந்தையைப் பார்!'' என்றார். பார்த்த போது கமார் மூன்று மைல்கள் விஸ்தீரணத்திற்கு இடைவெளியில்லாமல் பசுக்கூட்டங்கள் தெரிந்தன. பட்டப்பகல் போல் வெளிச்சமாக இருந்தது. சில ஆண்கள் பால் கறந்து கொண்டிருக்க எவ்வளவோ கோபிகைகள் பால்குடங்களைத் தலைமீது வைத்துக் கொண்டு போய்க் கொண்டிருந்தனர். அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்கையில் எனக்குத் தேவலோகத்தில் சஞ்சரிப்பது போல் இருந்தது. ''நானும் கூட ஒரு பால்குடம் எடுத்துக் கொண்டு போய் அவர்களிடம் கொடுத்து விட்டு வருகிறேன்'' என்றேன். ''அடேயப்பா, அவர்கள் ஆயர்பாடிக்கு எடுத்துக் கொண்டு போகிறார்கள்; மற்றொரு பக்கம் பொழுது புலர்ந்து கொண்டு வருகிறது'' என்றார் ஸ்வாமி. அப்போது நான் பார்த்தபோது கிழக்கு, மேற்கு எல்லாமே அந்தகாரமாகக் காட்சியளித்தது. முன்பு பார்த்த காட்சியே இல்லை. ''போகலாம், வா ஐயா. தலுப்பூருக்குப் போய் விரல் முத்திரைகள் வைக்க வேண்டும்'' என்று ஸ்வாமி என்னை அங்கிருந்து புறப்படச் செய்தார். என்னை மாலை வரை தலுப்பூரில் தம்மோடு இருக்கச் செய்தார். இருவரும் உணவு கூட ஏதும் உண்ணவில்லை. பின்னர் என்னை ஊருக்குப் போகச் சொன்னார்.

ஒரு முறை மழைக்காலத்தில் ஸ்வாமி தலுப்பூரில் ஈஸ்வர நாயுடுவின் வீட்டில் தங்கியிருந்தார். ஸ்வாமி நள்ளிரவு வரை காகிதங்களில் தம் விரல் முத்திரைகளை வைத்துக் கொண்டிருந்தார். அப்போது ஈஸ்வரநாயுடு மிகவும் நேரமாகி விட்டதால் உணவு உண்ண வரும்படி ஸ்வாமியையும் அக்கிம் வெங்கட்ராமி ரெட்டியையும் அழைத்தார். அப்போது ஸ்வாமி ''நீ உன் ஊருக்குப் போ ஐயா'' என்று வெங்கட்ராமிரெட்டியிடம் கூறினார். அப்போது அங்கிருந்து சலமாநாயுடு ''இப்போது இந்த நள்ளிரவில் மழையில் எப்படிப் போவார்?'' என்று ஸ்வாமியிடம் உள்ள நெருக்கத்தால் அவரைக் கோபித்துக் கொண்டார்; அப்போது ஸ்வாமி ''அவன் இங்கே இருக்கக் கூடாதய்யா'' என்றார். உடனே ஸ்வாமியின் சொற்களை மீறாத வெங்கட்ராமிரெட்டி அந்த நள்ளிரவில் மழையில் தலை மீது துணியைப் போட்டுக் கொண்டு புறப் பட்டார். ''தலுப்பூர் எல்லையைத் தாண்டும் வரை எனக்கு நினை விருந்தது. அதன் பின்னர் நான் எங்கே இருக்கிறேன். என்ன செய்கிறேன் என்பது எதுவும் எனக்கு நினைவில்லை. என் வீட்டு வாயிலில் எங்கள் ஊர் ஸ்வாமி மாடு 'அம்மா' என்று கத்தியபோது எனக்கு நினைவு வந்தது. நான் என் ஊரை அடைந்துவிட்டதும் அது என் வீட்டு வாயில் என்பதும் அம்மா என்று கத்தியது எங்கள் ஊர் ஸ்வாமி மாடு என்பதும் எனக்கு மிகத் தெளிவாகத் தெரிந்தது. அது மிகவும் ஆச்சரியமான ஒரு அனுபவம். மழைக் காலத்தில் பதினைந்து அடி ஆழத்துக்கு ஓடிக் கொண்டிருக்கும் நதியை என்னையே மறந்த நிலையில் என்னைத் தாண்டுவித்து வீட்டில் சேர்த்தார் ஸ்வாமி. அந்த மஹானின் திவ்ய சக்தியை வர்ணிக்க ஆயிரம் தலையுள்ள ஆதிசேஷனுக்கும் இயலாது.

மற்றொரு முறை ''மலையைச் சுற்றிலும் மிதித்துவிட்டு வர வேண்டும்'' என்று கூறி எங்களில் எட்டுபேரை பெஞ்சலக்கோனா வுக்குக் கால்நடையாக அழைத்துச் சென்றார். அங்குச் சிலர் சமையல் பணியிலும், மற்றும் சிலர் குண்டம் தயார் செய்யும் பணியிலும் ஈடுபட்டனர். ஸ்வாமி ''ஐயா, அவர்கள் பணிசெய்கிறார்கள். நாம் மல்லங்கொண்டக்குப் போய் வரலாம் வா'' என்று என்னை அழைத்துக் கொண்டு இளம்பினார். சுமார் மூன்று மைல் தூரத்திலுள்ள அந்த மலையை அடைந்தோம். அங்கே மல்லீஸ்வரர் என்ற சிவலிங்கம் இருந்தது. ஸ்வாமி அதனருகில் சென்று எனக்கு விளங்காத வித்தையான மொழியில் அந்த சிவலிங்கத்திடம் பேசினார். பின்னர் அங்கிருந்து சுமார் ஒரு மைல் தூரத்திலிருந்த மாமிள்ள கோனாவுக்குப் போனோம். அங்கு ஸ்வாமி ஒரு குகையில் இறங்கியபோது நானும் பின் தொடர்ந் தேன். அந்தக் குகைக்குள் எங்கு பார்த்தாலும் அடர்ந்த மாந்தோப்பு இருந்தது. இதே எல்லாம் ஒரு முழ உயரத்துக்கு மாம்பழங்கள் விழுந்து

இடந்தன. மரங்களின் மேல் கூடக் கொத்துக் கொத்தாக மாம்பழங்கள் தொங்கிக் கொண்டிருந்தன. நாங்கள் இருவரும் அந்தப் பழங்களை மிதித்துக் கொண்டே மூன்று மைல்கள் தூரம் நடந்தோம். நாங்கள் அந்தக் குகையின் இறுதியை அடையும்போது ஒரு பெரும் கரடி கத்திய வாறு மனிதனை அப்படியே விழுங்குவதற்கேற்றபடி வாயைப் பெரி தாகத் திறந்தபடி எங்கள் மீது பாய்ந்தது. அதன் வாயிலுள்ள பற்கள் மூன்றங்குல நீளம் நீட்டிக் கொண்டிருந்தன. முன்னால் ஸ்வாமியும் பின்னால் நானும் இருந்தோம். நான் பயப்பட்டு ஒரு மாமரத்தின் மறைவில் சென்று நின்று கொண்டு பார்த்தேன். ஸ்வாமி, நாயை அழைப்பது போன்று சப்தம் செய்து கொண்டே அதன் அருகில் போய் தம் வலக்கரத்தால் அதனது தலையிலிருந்து முதுகின் மீதாக வாலின் இறுதி வரைக்கும் மூன்று முறை தடவிக் கொடுத்தார். உடனே கரடி குனிந்து அவரது பாதங்களில் தன் தலையை வைத்துப் பின் எழுந்து போய்விட்டது. உடனே நான் ஸ்வாமியிடம் சென்றேன்.

அங்கே ஒரு நடைபாதையும் ஒரு சிவலிங்கமும், இரண்டு பெண் விக்ரஹங்களும் இருந்தன. மலைமேலிருந்து அந்த மூன்று சிலைகளின் மீதும் மூன்று நீர்த்தாரைகள் விழுந்து கொண்டிருந்தன. யாரோ அங்கு பூஜை செய்திருந்தனர் போலும்; விக்ரஹங்களின் மேல் உள்ள மஞ்சள், குங்குமம் மற்றும் பத்ரி தளங்களின் நறுமணம் அந்தப் பிராந்தம் எங்கும் வியாபித்திருந்தது. ஸ்வாமி தம் இடக்கரத்தில் தடியைப் பிடித்துக் கொண்டு அந்த விக்ரஹங்களிடம் ஒரு புதுமையான மொழியில் பேசினார். அதற்குள் ஆறு கஜ தூரத்திலுள்ள நீர்க்குண்டத்தினருகில் சென்றேன். அந்தக் குண்டத்தின் வடக்குப் பக்கத்திலும் தென் புறத்திலும் இரண்டு மாமரங்கள் இருந்தன. அடர்த்தியான அம்மரங்களின் கொம்பு கள் கீழ்ப்புறமாக வளைந்திருந்தன. நான் வடக்குப் புறமுள்ள மரத்தைப் பிடித்துக் கொண்டு குண்டத்துக்குள் எட்டிப் பார்த்தேன். அதில் நீர் மிகவும் ஆழத்தில் இருந்தது. அதற்குள் தங்க நாணயங்களும் வெள்ளி நாணயங்களும் குவியல் குவியலாக இருந்தன. நான் பார்த்துக் கொண் டிருந்த போதே மேற்குப் புறமிருந்து ஒரு பெரும் மீனின் தலை குண்டத்தில் நுழைந்தது. அதனுடைய உதடுகளிலும் செதில்களிலும் தங்கக் கம்பிகள் இழைத்தது போல் இருந்தது. அதனுடைய தலை யானையின் தலைபோலவும் அதனுடைய செதில்கள் ஒரு கதவு அளவும் இருந்தன. அது தன் செதில்களை அசைத்த போது நீர் பரபரவென்று நுரையுடன் மேலே பொங்கியது. நான் பயத்தோடு ஸ்வாமியிடம் ஓடி ''ஸ்வாமி அந்தக் குண்டத்திலுள்ள நீர் பொங்குகிறது. நாம் எப்படி வெளியே போவது?'' என்றேன்.

அவர் ''அது என்ன ஐயா, வெறும் ஒரு விரற்கடை ஆழம்தான்'' என்றார். அங்கிருந்து நாங்கள் மூன்று மைல்கள் தூரம் அந்தக்

குண்டத்திலிருந்து பிரவகித்த விரற்கடை ஆழம் நீரில் நடந்து வெளியே வந்து பெஞ்சலகோனாவை அடைந்தோம். ஸ்வாமி எங்களைவரையும் தெகசேர்லா வழியாகக் கல்லூருக்கு வரும்படியும் தாம் சாதுவையாவைச் சந்தித்து விட்டு வருவதாகவும் கூறி மலைக்குப் போய்விட்டார். நாங்கள் சென்றதே எல்லாவற்றையும்விட குறுக்குவழி என்றாலும் நாங்கள் கல்லூரை அடைந்தபோது ஸ்வாமி பெத்தையாவின் வீட்டு முன்புறத்தில் துளியின் அருகில் விரல்முத்திரை வைத்துக் கொண்டு அமர்ந்திருந்தார். ஸ்வாமி என்னை அழைத்து, ''உன் பெயர் மாறி விட்டது. உனக்குப் பழி ஏற்பட்டுள்ளது. உடனே வீட்டுக்குப் போ'' என்றார்.

பயணச் செலவுக்காக துளஸம்மா அளித்த இரண்டு ரூபாய் களைப் பெற்றுக் கொண்டு நான் வீட்டை அடைந்த போது அங்கு ஊர் மக்கள் யாவரும் கூடியிருந்தனர். எல்லோரும் என்னை ஆச்சரியமாகப் பார்த்தனர். மாடுமேய்க்கும் பிள்ளைகள் என்னைக் கொலை செய்து பாயில் சுற்றி ஈச்ச மரங்களிடையே மறைத்து வைத்துள்ளனர் என்று வதந்தி எழுந்ததாம். அவர்கள் யாவரும் எனது உடலைத் தேடுவதற்காகக் குழுமியுள்ளார்கள் என்று தெரிந்தது. எல்லோரும் போய் ஈச்ச மரங்களிலருகில் பார்த்தபோது வெறும் பழைய பாய் மட்டுமே இருந்தது. ஸ்வாமி கூறிய சொற்களின் பொருள் அப்போது எனக்கு விளங்கியது.

ஒரு முறை ஸ்வாமியோடு சில நாட்கள் கொலகமூடியில் இருந்தேன். ஒரு நாள் இரவு பன்னிரண்டு மணி சமயத்தில் ஸ்வாமி தனியே எங்கோ புறப்படுவதைக் கண்ட நான் என் வழக்கப்படி அவருக்குத் தெரியாமல் அவரைப் பின்தொடர்ந்தேன். ஸ்வாமி நாகுலவரம் என்ற காட்டுக்குள் போய் அங்குள்ள பெகட்ராஜுகுண்ட என்ற இடத்தில் நின்றார். நான் அருகிலுள்ள அடர்த்தியான புற்களின் அடிப்பாகத்தில் மறைந்து கொண்டேன். ஸ்வாமி கொஞ்ச நேரம் நின்ற பிறகு நான் மறைந்துள்ள இடத்துக்கு வந்து ''நான் எவ்வளவு முறை கூறினாலும் நீ மறைவாக வந்து கொண்டே இருக்கிறாய். இது எவ்வளவு நீய நேரம் என்பது தெரியுமா?'' என்று என்னைக் கண்டித்துவிட்டு ஒரு திசையில் பார்க்கச் சொன்னார். அங்கே பெரிய புளியமரத்தின் அடிப்பாகம் அளவு பெரிய பாம்பொன்று துண்டு துண்டாக வெட்டப் பட்டிருந்தது. ''மேலே உள்ளவர்கள் அதை அவ்வாறு செய்திராவிடில் அது உன்னையும் என்னையும் என்ன செய்திருக்குமோ? நீ இது போல் ஒரு போதும் வரக்கூடாது'' என்று கூறி என்னைத் திருப்பி அனுப்பி விட்டார். நான் ஊரை அடைந்தேன். காலை ஏழு மணியளவில் ஸ்வாமி கொஞ்சம் விறகுகளையும் கள்ளிச் செடிகளையும் கட்டு கட்டிக் கொண்டு எடுத்து வந்தார்.

ஸ்வாமி நள்ளிரவில் புறப்பட்டு விருப்பம்போல் திரிவார். ஒரு முறை நல்ல மழைக்காலத்தில் இடி மின்னலுடன் பெரும் மழை பெய்து கொண்டிருந்தது. அந்தக் காரிருளில் ஸ்வாமி ஒரு பனை ஓலையைத் தலைமீது போட்டுக் கொண்டு துனியின் அருகிலிருந்து புறப்பட்டார். நானும் ஆர்வத்தை அடக்க முடியாமல் அவருக்குத் தெரியாமல் அவரைப் பின்தொடர்ந்தேன். முதிகேடு கிராமத்தருகிலுள்ள சிறுநதியின் கரையிலுள்ள வண்ணாள்துறையை அடைந்து தம் துணிகளை அவிழ்த்துக் கரையில் வைத்தார். நல்ல ஆழத்தோடு ஓடிக்கொண்டிருக்கும் நதியின் மேல் ஸ்வாமி சின்னக் குழந்தையைப் போல் ஓடிக் கொண்டும் தண்ணீரை வாரி இறைத்துக் கொண்டும், நமக்குப் புரியாத பாஷையில் தமக்குத் தாமே ஏதோ பேசிக் கொண்டும் இக்கரையிலிருந்து அக் கரைக்குப் போவதும் வருவதுமாக இருந்தார். சிறிது நேரத்திற்குப் பின் கரையிலுள்ள துணியை உடுத்திக் கொண்டு நான் மறைந்துள்ள பனை மரத்தருகில் வந்து தம் கைத்தடியால் என்னைக் குத்தியவராக ''ராகூஸ லக்ஷத்தில் நீ இப்படி வரலாமா?'' என்று அந்தத் தடியை என் கழுத்தின் மீது வைத்து என்னை நெட்டித் தள்ளிக் கொண்டே வீட்டுக்கு அழைத்து வந்தார். வீட்டுக்கு வந்தபின் அவர் ஒன்றும் அறியாதவரைப் போல் துனியருகில் அமர்ந்தார். நானும் நேராகப் போய்ப் படுத்துக் கொண் டேன்.

அந்தக் காலத்தில் நான் முதிகேடு என்ற ஊரில் ஒரு மண் குடிசையில் இருந்தேன். எனக்கு வீடுகட்டிக் கொள்ளும் வசதி இல்லை. ஒரு நாள் ஸ்வாமி என்னை வீடு கட்டிக் கொள்ளும்படிக் கூறித் தம் கரங்களாலேயே அஸ்திவாரக் கல் நாட்டினார். மற்ற பணிகளை எவ்வாறு செய்வது என்று நான் கவலைப்பட்டுக் கொண்டிருக்கையில் ''நீ நேராக இந்தத் திசையில் போ; உன் வேலைகள் எல்லாம் நடக்கும்'' எனறார் ஸ்வாமி. நான் அவர்கூறிய திசையிலேயே போனபோது கட்டிடப் பணி செய்பவர்கள், செங்கல் அனுப்புபவர்கள், அவற்றைக் கொண்டு வருபவர்கள் ஆகியோர் எதிர்ப்பட்டு 'எங்கு போகிறாய்' என்று கேட்டுத் தாங்களே வந்து அந்த வேலைகளைச் செய்வதாகக் கூறி என் வேலை களை முடித்துச் சென்றனர். என் நண்பர்கள் நான் கேட்காமலேயே வீட்டுக்கு வந்து பணம் கொடுத்து வேலைகளை முடித்துக் கொடுத்தனர். நான் தலையிடாமலேயே இந்த வேலை நடந்து முடிந்தது. சில நாட்களுக்குப் பின் ஸ்வாமி என் வீட்டிற்கு வந்து குறுநகை புரிந்தவராய் துனியை ஏற்றினார். எல்லோருடைய வீடுகளையும் விட என்வீடே நன்றாக இருப்பதாக கிராமத்தில் எல்லோரும் சொல்வார்கள். எல்லாம் ஸ்வாமியின் அருள்.''

ஒரு முறை சிலபக்தர்கள் காசியாத்திரைக்குச் செல்ல எண்ணினர். அவர்களது சிநேகிதியான துளஸம்மாவையும் தம்முடன் வரும்படி

அழைத்தனர். அவள் ஸ்வாமியையும் கூட யாத்திரைக்கு வரும்படி பிரார்த்தித்தாள். ''அவர்களைப் போகச் சொல்; நாம் நாளை போகலாம்'' என்று கூறியபின் நான்கு நாட்களைக் கழித்துவிட்டார் ஸ்வாமி. ஸ்வாமி காசி வருவதாகச் சொன்னது வெறும் வெற்று மொழிகளே என்று பிணங்கி, துளஸிப்பாட்டி அன்று இரவு உணவு உண்ணாமல் படுத்து விட்டாள். காலையில் எட்டு மணியானாலும் எழவில்லை. பக்தர்கள் அவளைத் தட்டி எழுப்பினார்கள். ''இதென்ன நான் இங்கே இருக் கிறேன்?'' என்று கூறியபடி அவள் எழுந்தாள். இரவு முழுதும் தான் காசியாத்திரை செய்தது போலக் கனவு ஏற்பட்டது என்று அவள் எவ்வளவோ விவரமாகக் கூறினாள். ஸ்வாமியே தன்னை யாத்திரை செய்ய வைத்ததாக அவள் கருதினாள். ஆனால் கனவில் கண்டது நிஜ மாக யாத்திரை செய்ததாக ஆகுமோ என்று பக்தர்கள் கருதினர். ஒரு மாதத்துக்குப் பின் யாத்திரை செய்து திரும்பிய பக்தர்களுக்கு அவள் எந்த எந்த இடங்களில் எவை எவை இருந்தனை என்பதை விவரித்தாள். அதைக்கேட்ட அவர்கள் ஆச்சரியமடைந்து ஸ்வாமி அவளை நிஜ மாகவே காசி யாத்திரை செய்ய வைத்தார் என்பதை உணர்ந்தனர்.

ஸ்வாமி அக்னி குண்டத்துக்கு மிக அருகில் படுத்துக் கொள்வார். கொலகமூடி ஆசிரமத்தில் புளிய மரத்தடியில் குரவையா ஸ்வாமியின் அருகில் படுத்துக் கொண்டிருந்தார். எல்லோரும் உறங்கிக் கொண்டிருந் தனர். சில திகம்பரமான ரிஷிகள் வந்து ஸ்வாமியைச் சுற்றிலும் அமர்ந்து கொண்டு பேசிக் கொண்டிருந்தனர். குரவையாவுக்கு விழிப்பு ஏற்பட்டு குண்டத்தை சரிசெய்வதற்காகப் போனார். ''என்னய்யா, இப்போது எழுந்தாய்?'' என்றார் ஸ்வாமி. அவ்வளவுதான். குரவையாவுக்கு மயக்கம் ஏற்பட்டு குண்டத்தினருகில் விழுந்துவிட்டார். ரிஷிகள் போகும் வரை எழவில்லை.

ஒரு முறை ஸ்வாமியும் ராஜபாளையம் ஜயராமய்யாவும் பத்வேல் குன்று மீது போய்க்கொண்டிருந்தனர். ''ஆகாயத்தில் போகிறவர்களைப் பார் ஐயா'' என்றார் ஸ்வாமி. தனக்கு எவரும் காணப்படவில்லை என்ற ஜயராமய்யாவின் கண்களைத் தொட்டுவிட்டு மீண்டும் பார்க்கச் சொன்னார் ஸ்வாமி. ஆகாயத்தில் மிகவும் உயரமுள்ள மனிதர்கள் நடந்து போவதைப் பார்த்தார் ஜயராமய்யா. மீண்டும் ஸ்வாமி அவரது கண்களைத் தொட்ட போது அவருக்கு அந்தக் காட்சி மறைந்து சுற்றுப் புறம் தெரிய ஆரம்பித்தது.

ஒரு முறை வக்கெம்மா ஆஞ்சநேயஸ்வாமியின் கோயிலுக்குப் போன போது அங்கு தேவதைகள் சபை கூடியிருப்பதைப் போல அவருக்குத் தரிசனம் கிடைத்தது. அந்தக் கூட்டத்தின் வைபவத்தைச் சொல்லத் தரமில்லை என்றாள் அவள். பிரம்மா பொம்மைகளைச்

செய்து அதன் தலைமில் எழுதிக் கொண்டிருக்க, ஒரு பெண் தெய்வம் அந்தப் பொம்மைகளிலுள்ள குறைகளை மண்பூசி சரிசெய்வது போலக் காட்சி ஏற்பட்டதாம். இத்தகைய காட்சிகள் வெறும் மனப்பிரமையே என்று கூறுவதற்கில்லை. விசாகப்பட்டணத்திலுள்ள யாசின்பாபா என்ற முஸ்லீம் மஹான் சோமய்யா என்ற ஒரு பக்தருக்கு இத்தகைய காட்சியை அருளினார்.

ஒருநாள் வக்கெம்மா ஸ்வாமிக்குக் கொஞ்ச தூரத்தில் நின்று கொண்டிருந்தாள். ஸ்வாமி அவளை மிகவும் அன்பாக அருகில் அழைத்தார். அருகில் வந்த போது ஸ்வாமியின் இடத்தில் குழலூதிக் கொண்டிருக்கும் கண்ணன் நடனம் ஆடியபடி காட்சியளித்தான். பரவசத்துடன் ஆனந்தக் கண்ணீர் உருத்துக் கொண்டே சிறிது நேரம் பார்த்தாள். பின்னர் அங்கே ஸ்வாமியே எப்போதும்போலக் காணப்பட்டார்.

ஒருநாள் அவள் கொலகமூடியிலுள்ள ஆஞ்சநேயரின் கோவிலுக்குப் போன போது, ஆஞ்சநேயர் அவள் அருகில் நின்று 'பூமாலை போட்டுப் பூஜை செய்'' என்று தெளிவாகக் கூறினார். ஸத்குருவின் அருளைப் பெற்றவர்களுக்கு தேவதைகள் கூட தாமாகவே தரிசனமளிப்பர் என்ற உண்மையை 'ஸ்ரீ குருசரித்திரத்தில்' காணலாம்.

ஒரு முறை பெரும் பக்தையான வக்கெம்மா ஸ்வாமியின் மகிமையைப் பார்க்க வேண்டும் என்று நினைத்தாள். ஒரு நாள் ஆசிரமத்தில், ஸ்வாமிக்கு எதிரில் முப்பதடி தூரத்தில் நிலத்தின் மீது படுத்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு இருபதடி தூரத்தில் ராமலக்ஷ்மணர்கள் நின்றுகொண்டு அவளுக்குத் தரிசனமளித்தனர். அவர்கள் மறைந்து அதே இடத்தில் கிருஷ்ணன் தரிசனமளித்தான். தான் எண்ணியபடி தனக்குத் தரிசனம் கொடுத்தார் என்று அவள் ஸ்வாமியை நமஸ்கரித்தாள். வக்கெம்மாவுக்கு இத்தகைய அநுபவங்கள் ஏற்பட்ட போது அதை மற்றவர்களுக்குக் கூற ஸ்வாமி அநுமதிக்காததால் அவர் ஸமாதி அடையும் வரை வக்கெம்மா எவருக்கும் கூறவில்லை. மற்றொரு முறை அவள் நெல்லூரில் சூர்ய நமஸ்காரம் செய்து கொண்டிருந்தபோது இமைப்பொழுதில் அவளுக்கு ஆகாயத்திலுள்ள வேறொரு பிரதேசத்தை அடைந்த அநுபவம் ஏற்பட்டது. அங்கும் அவளுக்கு பூமியைப் போலவே கற்களும் பாறைகளும் காணப்பட்டன.

ஒரு நாள் வக்கெம்மாவுக்கு ஏற்பட்ட கனவில் ஸ்வாமி படுத்துக் கொண்டு முன்னும் பின்னுமாக ஆடும்போது ஒரு அசைவில் நான்கு மைல்தூரம் வழுக்கிக் கொண்டு போவதைப் பார்த்தாள். இவ்வாறு மூன்று முறை அசைந்தாடியபின் வக்கெம்மாவின் அருகில் வந்து தம் வாயைத் திறந்து விஸ்வரூபம் காட்டுகிறார். இதற்குள் துளஸம்மா ''அடே, பலே தரிசனம் கொடுக்கிறாரே'' என்று கூறிக்கொண்டே தன்

குதி காலினால் ஸ்வாமியின் வாயை மறைத்தாள். வக்கெம்மா கோபத்தோடு அவளைத் தள்ளிவிட்டாள். ஆனாலும் விஸ்வரூபதரிசனம் அதோடு நின்றுவிட்டது. துளஸம்மா காலைக் கொண்டு மறைத்தாள் என்பதற்கு இயற்கைத் தாயே அந்தத் தரிசனத்தை மறைத்தாள் என்பது பொருள்.

ஒரு நாள் ரோசிரெட்டி கொலகமூடி ஆசிரமத்தில் பகல் சமயத்தில் உறங்கியபோது தொண்ணூறு கிலோ மீட்டர் தூரத்திலுள்ள அவரது இராமம் காணப்பட்டது. அவரது குடும்பத்தினர் மழையில் என் மகரூல் செய்து கொண்டிருந்தனர். அவரது வீட்டில் பறித்த எலுமிச்சங்காய்கள் குவியலாகப் போடப்பட்டுள்ளன. சிறிது நேரத்தில் அந்தக் காட்சி மறைந்து விழிப்பு ஏற்பட்டது. மூன்றாவது நாள் அவரது சின்ன மகன் அவரைப் பார்க்க கொலகமூடி வந்தான். வீட்டில் நடந்த என் மகரூலைப் பற்றியும் எலுமிச்சங்காய்களைப் பற்றியும் விவரமாக ரோசிரெட்டி கேட்டபோது 'இந்த விஷயங்கள் எல்லாம் உங்களுக்கு எப்படித் தெரிந்தன?' என்று அவரது மகன் வியந்து போனான்.

ஒருநாள் ரோசிரெட்டியிடம் ஒரு மரப்பலகையைக் கொடுத்து அதை நன்றாகப் பார்க்கச் சொன்னார் ஸ்வாமி. ரோசிரெட்டியின் இஷ்ட தெய்வமான வெங்கடேஸ்வர ஸ்வாமி, லக்ஷ்மிதேவி, கணபதி ஆகியோரின் உருவங்கள் பலகையின் மீது மிகத் தெளிவாகக் காட்சியளித்தன. சிறிது நேரத்திற்குப் பின் அக்காட்சி மறைந்துவிட்டது.

ஸ்வாமியின் பக்தர்களான ஏலூர் ராமாநாயுடுவின் மனைவியும் மகனும் ஒரு நாள் கட்டில் மீது அமர்ந்திருந்த போது, அவரது மகனுக்கு ஸ்வாமி கிரீடம் மற்றும் புஜந்தில் அணியும் ஆபரணங்களை அணிந்து விஷ்ணுவாக குண்டத்தில் அமர்ந்தபடி காட்சி அளித்தார். மகன் ஆச்சரியமடைந்து தன் தாயையும் அதைப் பார்க்கும்படிக் கூற, அவளுக்கு எதுவும் காணப்படவில்லை. அந்தச் சமயத்தில் ஸ்வாமி அவர்களின் இராமத்திலேயே இருந்தார். மறுநாள் காலை அவன் ஸ்வாமியைத் தரிசித்தபோது "அம்மா, மேலே உள்ளவர்கள் வந்து இரவு குண்டத்தில் தங்கிப் போனார்கள்" என்று ஏதும் அறியாதவரைப் போலக் கூறினார். இரவு அவளது மகனுக்குக் கிடைத்த தரிசனம், பிரமையல்ல, நிஜமே என்று தெளிவுபடுத்தினார் ஸ்வாமி.

அனந்தசாகரம்வாசியான சட்டா வெங்கடரெட்டியின் வீட்டுக்கு ஸ்வாமி அடிக்கடி போவார். ரெட்டியார் மிகவும் அன்போடு ஸ்வாமிக்கு சேவை செய்வார். அந்த ஊரையும் சுற்றுப் பக்கத்திலுள்ள ஊர்களையும் சேர்ந்தவர்கள் பலரும் வந்து ஸ்வாமியைத் தரிசித்து ஆசி பெறுவர். தம் துன்பங்களை ஸ்வாமியிடம் கூறிக் கொண்டு ஸ்வாமி பிரசாதமாக

அளிக்கும் நூல், மற்றும் விரல் முத்திரைக் காகிதங்களைப் பெற்றுக் கொண்டு போய் பத்திரமாக வைத்துக் கொள்வார்கள். ஒரு நாள் ரெட்டியார் ''ஸ்வாமி எல்லோரும் உங்களைப் பெரும் மஹான் என்கிறார்களே. எனக்கு ஏதாவது அநுபவம் கொடுங்கள்'' என்று கேட்டார். ஸ்வாமி அவரைக் கண்ணை மூடிக் கொள்ளச் சொல்லி அவரது தலையைத் தொட்ட பிறகு கண்ணைத் திறக்கச் சொன்னார். பார்த்தால், கண்ணுக்கெட்டிய தூரம் வரை எதுவுமே இல்லை; செடிகள் விடுகள் எல்லாம் மாயமாகிவிட்டன. சுற்றிலும் எங்கு பார்த்தாலும் கணக்கற்ற நீர்க்குட்டைகளும் ஒவ்வொன்றிலும் கழுத்துவரை நீரில் மூழ்கி நின்றுள்ள ஸ்வாமியின் தலை மட்டுமே காணப்பட்டது. சிறிது நேரம் பார்த்தபின் அந்தக் காட்சியை அதற்கு மேலும் பார்க்க முடியாமல் ''ஸ்வாமி, நீங்கள் தெய்வத்தின் உருவமே. ஆதி அந்தமில்லாதவர் நீங்கள். தயை செய்து எனக்குச் சாதாரணமான காட்சியைக் கொடுங்கள்'' என்று அன்று விஸ்வரூபத்தைப் பார்த்த அர்ஜுனனைப் போலவே கைகுவித்துப் பிரார்த்தித்தார். மீண்டும் ஸ்வாமி அவரது தலையின் மேல் கைகளை வைத்தவுடன் அவருக்குச் சாதாரணமான காட்சி ஏற்பட்டது.

17. எதில் உழல்கிறார்களோ அதற்கே போய்ச் சேர்வர்

''ஸ்வாமி! மனிதன் இறந்தபிறகு என்ன ஆகிறான்? மீண்டும் மனிதனாகப் பிறந்து பாவ புண்ணியங்களை அனுபவிப்பானா?'' என்று கேட்டவர்களிடம் ஸ்வாமி சுருக்கமாக ''வாழ்வு முழுதும் எதில் உழல் கிறார்களோ இறுதிக் கணத்தில் அவர்கள் அதற்கே போய்ச் சேரு கிறார்கள்'' என்றார்.

இறுதிக் கணத்தில் ஜீவர்கள் எதை நினைக்கிறார்களோ அதையே அவர்கள் அடைகிறார்களென்று பகவத்கீதை முதலிய சாஸ்திரங்கள் கூறுகின்றன. வாழ்வின் இறுதிவரை உலக விவகாரங்களிலேயே மூழ்கி இருக்கும் சாதாரண மனிதர்களுக்கு இறுதிக் கணத்தில் அத்தகைய எண்ணங்களே எழும். முற்பிறவியில் செய்த புண்ணியத்தால் மஹான் களை அடைந்தவர்கள் எப்போதும் அவரது நினைவு மற்றும் அவரது சேவையிலேயே தமது வாழ்க்கையைக் கழிப்பதால் அவர்களது இறுதிக் கணத்தில் சாதாரணமாக நல்ல நினைவுகளே ஏற்படும்.

நம் சாஸ்திரங்கள் வித்தையை பரவித்தை, அபரவித்தை என இரு பிரிவுகளாகக் கூறுகின்றன. முக்தியை அளிக்கும் கல்வியே பரவித்தை. ஜோதிடம், வியாகரணம் முதலியவை புறமுகமான உலகியலைச் சேர்ந்த அபர வித்தைகளாகும். இவை மனிதனைப் பிராந்தியில் மூழ்கடிப்பதால் முக்தியை வேண்டுபவர் இவற்றை நாடாமல் ஸத்குருவின் மீதே தம் கவனம் அனைத்தையும் வைக்க வேண்டும்.

லோம்பல்லி ராமாநாயுடு சோதிட சாஸ்திரத்தைக் கற்றுத் தமது காலத்தின் பெரும்பகுதியையும் ஸ்வாமியின் அருகிலேயே கழித்தார். சோதிட சாஸ்திரத்தில் புலமை பெறவேண்டும் என்ற நோக்கத்தோடு ஸ்வாமியை அடைந்தாரோ என்னமோ, சிறிது காலத்தில் அவர் மிகவும் சரியாகக் குறி கூறத் தொடங்கினார். ஒரு முறை ஒருவரது நெக்லஸ் காணாமல் போய்விட்டது. அது அவரது வீட்டுப் பனையோலைத் தடுப்பில் ஒளித்து வைக்கப்பட்டுள்ளது என்று கூறினார். தடுப்பை அவிழ்த்தவுடன்

நெக்லஸ் அதிலிருந்து கீழே விழுந்தது. காணாமல் போன எருமையைப் பற்றிக் கேட்டவருக்கு ''உன் ஊருக்கு வடக்கே மூன்று மைல் தூரத்தி லுள்ள கிராமத்துக்கு, நாளை மறுநாள் சூர்யோதயமாகும் சமயத்துக்குப் போனால் எருமை கிடைக்கும்'' என்றார். சரியாக அதே சமயத்துக்கு அந்த ஊருக்குத் தேடச் சென்ற மனிதனுக்கு எதிராக ஒரு வீட்டிலிருந்து அந்த எருமை வெளியே வந்தது.

ஒரு முறை ஸ்வாமி வேறொரு ஊருக்குப் புறப்பட்ட போது ராமா நாயுடு ''ஸ்வாமி! எனக்கு உடல் நிலை சரியில்லை. நான் இங்கேயே இருக்கிறேன்'' என்று கூறிவிட்டார். அதற்கு இரண்டாவது நாள் ராமாநாயுடு ஆசிரமத்தில் இறந்தார். இந்த விஷயத்தை ஸ்வாமிக்குத் தெரியப்படுத்தினபோது ராமாநாயுடுவினை உடலை ஆசிரமத்திலேயே ஒரு பக்கத்தில் சமாதி செய்யும்படிச் சேதி அனுப்பினார்.

அந்த சமாதிக்குப் பக்கத்திலே ஸ்வாமியின் பக்தரான போலி ரெட்டியின் சமாதியும் உள்ளது. போலிரெட்டி எப்போதும் ஸ்வாமியின் அருகிலிருந்து அவருக்குச் சேவை செய்து வந்தார். ஸ்வாமிக்குக் கீரை என்றால் இஷ்டம் என்பதால் ஸ்வாமி எந்த இடத்தில் தங்கினாலும் அவ்விடத்தில் சுற்றுப்புறத்தில் கிடைக்கக்கூடிய கீரைகளைத் தேடிப் பறித்துக் கொண்டு வந்து சமைத்து ஸ்வாமிக்குப் போடுவார். அதைத் தவிர அவர் ஸ்வாமியிடம் ஏதும் வேண்டியதில்லை. அடைந்ததும் இல்லை. போலிரெட்டி இறப்பதற்கு நாற்பது நாட்களுக்கு முன்பே ஸ்வாமி ''இன்றைக்கு நாற்பதாவது நான் இறைவன் விசாரணைக்கு வருவார். அன்று நாம் நீர்கூடப் பருகக்கூடாது'' என்றார். அவர் கூறியதின் பொருள் எவருக்கும் விளங்கவில்லை. அந்த குறிப்பிட்ட நாளன்று மைப்பாடு என்ற ஊரிலிருந்த ஸ்வாமி ''அய்யா நாம் ஆசிரமம் அடையும்வரை நான் மட்டுமின்றி நீங்களும் நீர் கூடக் குடிக்கக் கூடாது. உடனே கொலக மூடிக்குப் போக வேண்டும், புறப்படுங்கள்'' எனறார். மழையினால் பயணம் செய்வது கஷ்டமாயிருந்த போதும் சேவகர்களை அவசரப் படுத்திக் கால்நடையாக நெல்லூர் வரை சென்று அங்கிருந்து காரில் கொலகமூடியை அடைந்தனர். அன்று காலையிலேயே ஆசிரமத்தில் போலிரெட்டி இறந்தார். ஸ்வாமி எங்கு இருக்கிறார் என்று அவர்களுக்குத் தெரியாததால் அவருக்கு அந்திமக் கிரியைகளை எவ்வாறு எங்கே செய்வது என்று பக்தர்கள் தர்க்கித்துக் கொண்டிருந் தனர். எல்லாமறியும் ஸ்வாமி ஆசிரமத்தை அடைந்து தாமே போலிரெட்டியின் உடலைச் சமாதி செய்தார்.

போலிரெட்டியின் இறுதிச் சடங்குகளில் அவ்வளவு ஈடுபாடு காட்டிய ஸ்வாமி சோதிடத்தில் புலமைபெற்ற ராமாநாயுடு இறந்தபோது

ஆசிரமத்துக்கு ஏன் வரவில்லை என்று பக்தர்கள் இன்றும் விவாதித்துக் கொண்டிருக்கின்றனர். ஸ்வாமியின் சேவையைத் தவிர வேறு எதுவும் வேண்டாத குருபக்தர் போலிரெட்டி. ஸ்வாமி தாமே சமாதி செய்தது, அந்த பக்தருக்குத் தாம் நற்கதியை அளித்தார் என்பதைக் காட்டுகிறது. ராமாநாயுடுவோ ஸ்வாமியிடமிருந்து சோபிடக் கலையை மட்டுமே வேண்டிய பக்தர். ஆனால் பூர்வ புண்ணியத்தால் அவரது உடலை பரம பவித்திரமான ஸ்வாமியின் ஆசிரமத்திலேயே சமாதி செய்வித்தார் ஸ்வாமி. ஸ்ரீசாயிசரித்திரத்தில் கூட சாயியிடமிருந்து எதுவும் கோராமலே பக்தியோடு சேவை செய்த மேகாவைக் குறித்து சாயி "இவனே எனது உண்மையான பக்தன்" என்று புகழ்ந்து அவனது உடலோடு சிறிது தூரம் வரை சென்று விடையளித்ததோடு தம் சொந்தச் செலவில் அன்னதானம் செய்தார். எதுவும் எதிர்பார்க்காத சேவையே உண்மையான பக்தியாகும்.

நெல்லூர்வாசியான வருமானவரி அதிகாரிக்கு ஒரு வளர்ப்பு நாய் இருந்தது. எவ்வளவோ ஆசையாக வளர்த்த அந்த நாய்க்கு நோய் ஏற்பட்டு மருத்துவர்களால் குணப்படுத்த முடியாதபோது ஸ்வாமியிடம் காரில் அழைத்து வந்தார். ஸ்வாமி நாயைப் பார்த்தபோது அதுவும் அவரையே பார்த்துவிட்டு விழுந்து இறந்துவிட்டது. ஸ்வாமியின் சந்நிதியில் பிராணனைவிட்ட அந்த நாய் நற்கதி அடைந்தது. சாயி சரித்தத்தில் சாயியை தரிசித்துத் தன் உயிரைவிட்டு நற்கதியை அடைந்த புலியைப் பற்றிக் காணலாம்.

கொலகமூடியைச் சேர்ந்த கே. நரஸிம்ஹுலுநாயுடுவும் அவரது மனைவியும் ஸ்வாமியின் நெருங்கிய பக்தர்கள். ஒரு முறை ஸ்வாமி அவர்களை ஒரு ஆண்டு கொலகமூடியை விட்டு மேற்குப் புறமாகப் போகும்படி ஆக்ஞாபித்தார். அவர்கள் அவ்வாறே தம் வீட்டை விட்டுவிட்டு மீண்டும் ஸ்வாமி வரச் சொல்லும்வரை தலுப்பூரில் மண்குடிசை வேய்ந்து கொண்டு மகிழ்ச்சியாக வாழ்ந்தனர். 1963-ஆம் ஆண்டு நாயுடுவின் மனைவிக்குக் கான்சர் வியாதி வந்தது. மருத்துவர் கள் கைவிட்டு விட்டனர். ஸ்வாமியைச் சரணடைந்து அவரது விபூதியை உபயோகித்து வந்தனர். ஸ்வாமியின் பக்தரான புஜ்ஜையா ஸ்வாமியின் ஸமாதியின் மேல் வைத்து எடுக்கப்பட்ட நூலை நாயுடுவுக்குக் கொடுக்க, அதைக் கட்டி, சாம்பிராணி தூபம் போட்டு ஸ்வாமியின் விபூதியை நீரில் கலந்து குடிக்கச் செய்து அவர் ஸ்வாமியைப் பிரார்த்தித் தார்.

அன்றிரவு புஜ்ஜையாவின் கனவில் அந்தப் பெண்மணியைப் பெரிய பாடையில் வைத்து பூமாலை போட்டு அலங்கரித்திருப்பது போலவும், அவளது முகம் விஜயவாடா கனகதுர்க்கம்மாவின் முகத்தைப்

போலப் பிரகாசிப்பது போலவும் காட்சி ஏற்பட்டது. காலையில் அவள் மரணமடைந்தாள். ஸ்வாமி அவளைக் காப்பாற்றவில்லை என்று புஷ்ஷையா முதலிய பக்தர்கள் கருதுவார்களென்று, அவளுக்கு ஆயுள் தீர்ந்து விட்டதாகையால் வேறு எதுவும் செய்வதற்கு வழியில்லை என்று அந்தக் கனவு மூலம் அவர்களுக்குத் தெளிவுறுத்தினார் ஸ்வாமி. அவள் தெய்வீகக் களையோடு கனவில் காட்சியளித்ததால் ஸ்வாமி அவளுக்கு நற்கதியை அளித்தார் என்பது தெளிவு.

கல்லூருபல்லிவாசியான சுப்பம்மா மிகவும் கருணையும், எல்லாப் பிராணிகளையும் பரமாத்மாவின் உருவங்களாகப் பார்க்கும் சுபாவமும் உடையவள். ஊரார் இருடன் ஒருவனைப் பிடித்து அவளது வீட்டுக்கு முன்பு ஒரு வண்டியோடு சேர்த்துக் கட்டிப் போட்ட போது, அவள் ரகசியமாக அவனுக்குத் தயிர்சாதம் போட்டுவிட்டுக் கட்டை அவிழ்த்து விரட்டி விட்டாள்.

தன் முதுமையில் கலிச்சேடு கிராமத்தில் படுத்த படுக்கையாக இருந்த போது இரவும் பகலும் சாயி நாமஸ்மரனை செய்து வந்தாள். இவரது பேரனான பி. சுப்பராமையா ஒரு நாள் சித்தலய்யமலை அருகில் ஸ்வாமியைத் தரிசித்தார். அப்போது, இரண்டு தினங்களாக மௌனத்தில் படுத்து இருந்த ஸ்வாமி, உடனே எழுந்து அவருக்கு ஒரு சீட்டு எழுதுவித்து அபயமுத்திரையும் ஆசீர்வாதமும் வைத்துக் கொடுத்தார். கஞ்சி குடிக்கும்படிக் கேட்ட போது குடிக்காமல் மீண்டும் தம் மௌனத்தைத் தொடர்ந்தார். அடுத்த கணத்திலேயே சுப்பராமையாவைத் தேடிக் கொண்டு அவரது பாட்டிக்கு உடல்நிலை தீவிரமாக உள்ளது என்று ஒரு மனிதர் வந்தார். இந்த விஷயத்தைத் தெரிந்து கொண்டே ஸ்வாமி அவளது நற்கதிக்காக ஆசிகள் எழுதுவித்துக் கொடுத்தார். உடனே வீட்டையடைந்த சுப்பராமையா பாபா விபூதியும் ஸ்வாமியின் தீர்த்தமும் அவளது வாயில் ஊற்றியபின்னர் உடனே உயிரை விட்டாள். சகல சாதுஸ்வரூபமான சாயி வெங்கையஸ்வாமியின் மூலமாக அவளுக்கு நற்கதி அளித்தார்.

துளஸம்மா ஸ்வாமியிடம் வருவதற்குப் பல ஆண்டுகள் முன்பிருந்தே ஸ்வாமி ''இழக்கில் நம் அம்மா இருக்கிறாள். அவள் நமக்கு ஐந்து ஜன்மங்களாகச் சாப்பாடு போடுகிறாள். இனிமேல் நாம் யாவரும் அவள் போடும் சாதத்தைச் சாப்பிட வேண்டும்'' என்று கூறுவார். ''யார் ஸ்வாமி அந்த அம்மா? அவளுடைய ஊர் எது?'' என்று கேட்டால் ஸ்வாமி ஏதும் பதிலளிக்க மாட்டார். காலக்கிரமத்தில் துளசம்மா ஸ்வாமியின் சேவையில் ஈடுபட்டபோது பக்தர்கள் ஸ்வாமி குறிப்பிட்ட அம்மா அவளே என்று அறிந்து கொண்டனர். அவள் தன்

வீடு, வாசலை விட்டுவிட்டு ஸ்வாமியே தனக்கு எல்லாம் என்ற உணர்வில் சுமார் இருபத்தைந்து ஆண்டு காலம் ஸ்வாமி சேவையிலேயே தன் வாழ்வைக் கழித்த புண்ணியசாலி. ஸ்வாமி அவளை எப்போதும் உயர்வாக 'அம்மா' 'அம்மா' என்று அழைப்பார். தம்மைச் சுற்றியுள்ள மற்ற பெண்மணிகளை அவ்வாறு ஒரு போதும் அவர் அழைத்ததில்லை. அவளது பக்திமிகுந்த சேவையின் பலனாக அவள் நற்கதியைப் பெற்றாள்.

அவளது உடலை எரித்தபோது வாசனைத் திரவியங்கள் எதுவும் உபயோகிக்காத போதும், எந்தவித துர்வாசனையும் எழவில்லை. இறப்பதற்கு இரண்டு மாதங்கள் முன்பிருந்தே நிரந்தர நியாஸநிலையில் இருந்தாள். ஆச்சரியப்படும் விதத்தில் அவளுக்கு சேவை செய்த இருவர் பெயரும் வெங்கம்மா, வெங்கையா ஆகும். அவர்கள் அவளைத் தம் பெற்ற தாயைவிட மேலாக அவள் ஸ்வாமியே என்ற பாவனையோடு அன்பாகப் பணிவிடை செய்தனர். இவையனைத்துக்கும் காரணம் ஸ்வாமியின் அருளே.

18. ஸ்வாமி அளித்த அபய மொழிகள்

ஸ்வாமியே தமக்குக் குரு, அன்னை, தந்தை, மற்றும் அனைத்தும் ஆவார் என்ற பாவனையோடு அவரது சேவைக்காகவே தம் வாழ்வை அர்ப்பணித்த பக்தர்களுக்கு ஸ்வாமியின் பிரிவு என்ற எண்ணமே இதயத்தைப் பிழிந்தது. அவர் சமாதியடைந்தால் தமக்கு எவர் திக்கு என்று அவர்கள் ஸ்வாமியைக் கேட்ட போது அவர் கூறிய அபய மொழிகள் அவரது நெருங்கிய சேவகர்களுக்கு மட்டுமின்றி ஸ்வாமியோடு தொடர்புள்ள நம் போன்ற மற்றவர்களுக்கும் மிக ஆறுதல் அளிப்பவை. அத்தகைய அபயமொழிகளை இப்போது காண்போம்.

வல்லபுரெட்டி நாராயணரெட்டி சென்னையில் ஒரு கார் வாங்கினார். ஸி புக் விஷயத்தில் சில பிரச்னைகள் ஏற்பட்டு எவ்வளவு தடவை போய் வந்தாலும் வேலை நடக்கவில்லை. அப்போது ஒரு நாள் பெனவர்த்தியிலுள்ள தம் இல்லத்திலிருந்த ஸ்வாமியின் படத்தை வணங்கி ''அடுத்த தடவை சென்னைக்குப் போகும் போதாவது அந்த வேலை முடியும்படி அருள்புரியுங்கள் ஸ்வாமி'' என்று வேண்டிக் கொண்டு மூன்றாவது நாள் சென்னைக்குப் போகும் வழியில் கொலகமூடியில் ஸ்வாமியை தரிசித்துத் தாம் செல்லும் வேலையைப் பற்றிக் கூறினார். ''மூன்று நாட்களுக்கு முன்பே உன் வேலையைப் பூர்த்தி செய்து விட்டேனே'' என்றார் ஸ்வாமி. அதாவது மூன்று நாட்களுக்கு முன் ஸ்வாமியின் படத்துக்கு முன் அவர் வேண்டியவுடனே ஸ்வாமி அந்த விஷயத்தை நிறைவேற்றிவிட்டார். ஸ்வாமி படத்தை வெறும் படமாகக் கருதாமல் அதில் ஸ்வாமி பிரத்யக்ஷமாக உள்ளார் என்று பக்தி சிரத்தையோடு நாம் வழிபட்டால், அது உண்மையே என்று நமக்கு அனுபவம் அளிப்பார் ஸ்வாமி.

ஸ்வாமி தாம் சமாதி அடைவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே ''எல்லாப் பிராணிகளிலும் வெங்கையா உள்ளார் என்று எழுதிக் கொள் ஐயா'' என்றார். எனவே நாம் எந்தப் பிராணியை அன்புடன் நடத்தினாலும் அல்லது துன்புறுத்தினாலும், அது ஸ்வாமியையே நடத்தியவாறு ஆகிறது என்பதை நினைவில் கொண்டு எப்போதும்

கவனத்துடன் நடந்து கொள்வதே உண்மையில் நாம் ஸ்வாமிக்குச் செய்யும் நித்யபூஜை என்று அறிந்து கொள்ள வேண்டும். எல்லா உயிர்களிலும் இறைவன் உறைவதால்தான் அவருக்கு அவற்றின் மீது எல்லையற்ற அன்பு. அதனால்தான் தினமும் பூதபலிக்காக நிறைந்த அளவில் சாதம் போடுவார். சாதம், ராகி முதலியவற்றை எறும்பு களுக்காகப் போடுவார். பக்தர்களால் பொறுக்க முடியாத வியாதிகளைத் தாம் ஏற்று அநுபவிப்பார்.

ஒரு முறை ஸ்வாமி தான் நடக்க முடியாமலிருந்த சமயத்தில் தம்மை சித்தலய்யமலையின் உச்சிக்கு அழைத்துப் போகும்படிச் சேவகர்களிடம் கூறினார். டோலியில் அவரை எடுத்துச் செல்வதற்கேற்ற பாதை இல்லை. எனவே ஒரு பக்தர் ஸ்வாமியைத் தம் முதுகில் சுமந்து கொண்டு மலை உச்சிக்கு எடுத்துச் சென்றார். ''முழுத்துக்கு மூன்று ஆயிரம் வரவு எழுதிக் கொள் ஐயா'' என்றார் ஸ்வாமி. அவ்வளவு மிகுதியான புண்ணியம் அவருக்கு ஏற்பட்டது என்பது ஸ்வாமியின் கருத்து. ''ஸ்வாமி! நீங்கள் சமாதியடைந்தால் நாங்கள் வீட்டுக்குப் போகாமல் பிக்ஷை எடுத்து வாழ்ந்து உங்கள் சமாதியின் அருகிலேயே இருப்போம்'' என்ற பக்தர்களிடம் ஸ்வாமி ''அப்படி இருக்க வேண்டிய அவசியமில்லை. நீங்கள் காட்டிலிருந்தாலும் உணவு உங்களைத் தேடி வருமென்று எழுதிக் கொள்ளுங்கள்'' என்றார். அதாவது அவர் புக்தியையும் முக்தியையும் தம் சேவகர்களுக்கு அருளினார்.

மற்றொரு முறை குரவையா ''ஸ்வாமி! நீங்கள் சமாதி அடைந் தால், நாங்கள் என்ன செய்ய வேண்டும்? எங்கே போக வேண்டும்?'' என்று கேட்டபோது ஸ்வாமி ''எங்கும் போகவேண்டிய அவசியம் இல்லை ஐயா. என் சமாதியருகில் அமர்ந்து கொண்டால் எல்லாம் நான் இருக்கும்போது நடந்தது போலவே நடக்கும்'' என்று அபயமளித்தார். வீரடி சாயிபாபா ''என் பக்தர்களோடு என் சமாதியே பேசும். பதிலளிக்கும்; என் நாமம் சமாதானம் அளிக்கும்'' என்று கூறிய மொழிகள் கூட ஸ்வாமியின் அபய மொழிகளை மிகவும் ஒத்துள்ளன.

ஒவ்வொரு சமயம் நல்ல கோடைகாலத்துப் பட்டப்பகல் வெயிலில் மத்தியானம் பன்னிரண்டு மணிக்கு நேராக ஒரு குறிப்பிட்ட மலைக்குப் போக வேண்டும் என்பார். நடந்து போவதற்குரிய நடை பாதை அல்லது தெருவின் வழியாகப் போகக் கூடாது. 'நேராக' என்றால் முட்கள் ஆனாலும், பாறைகள், குளம், குட்டைகள் ஆனாலும் நேராக அவற்றைக் கடந்தே செல்ல வேண்டும். அவரது டோலியைச் சுமப்பவர் கள் செருப்புக்கள் கூட அணியமாட்டார்கள் என்பது கவனிக்கத்தக்கது.

பி. நாகய்யா ''ஸ்வாமி முட்களின் மீதே நடந்து போகச் சொல்லும்போது, ஸ்வாமியின் மீது பாரத்தைப் போட்டுவிட்டு ஒங்காரம் செய்து கொண்டு முட்களின் மீது நடந்தால் ஒரு முள் கூடக் குத்திய தில்லை. நேராக ஸ்வாமி காட்டிய திசையிலேயே நடப்போம். அல்வளவு வெயிலில் பகல் பன்னிரண்டு மணியிலிருந்து மூன்று மணிவரை ஒய்வு இன்றித் திரிந்துவிட்டு விடுதிக்கு வந்தாலும் களைப்பே ஏற்படாது. ''ஐயா, நீங்கள் சுமந்ததற்கு முப்பது கோடிகள் கட்டி ரசீது வாங்கிக் கொண்டு போகிறார்கள்'' என்பார் ஸ்வாமி.

ஒரு முறை தமது துளியைக் குறித்து ''இங்கே நடப்பது கோடி லிங்கங்களின் பூஜை அல்லவா ஐயா'' என்றார் ஸ்வாமி. திருப்பதியில் நடந்த ஒரு யாகத்தைக் குறித்து ஸ்வாமியிடம் கூறியபோது ''ஐயா அங்கே நாற்பது நாட்களில் இடைக்கும் பலன் இங்கே நான்கு மணி நேரத்தில் இடைக்கிறதல்லவா?'' என்றார். மற்றொரு சமயம் ''பாலயோகி தன் வேலையைப் பார்த்துக் கொண்டு போகிறார். நாம் எல்லாரையும் காப்பாற்றுவதில்லையா'' என்றார். ஒரு நாள் குரவையாவிடம் ''ஐயா, வீரப்பிரம்மம் மாதிரிக் குழி வெட்டிக் கொண்டு மறைவாக அமர மாட்டேன். எல்லோருக்கும் எல்லா ஏற்பாடுகளும் செய்து விட்டே போவேன்'' என்றார். அந்தக் கருணாமூர்த்தி அவ்வாறே செய்து வருகிறார்.

ரோஜி ரெட்டியிடம் ''ஐயா எல்லோருக்கும் தேவையான அளவு விளைச்சல் ஏற்படுத்திக் கொடுத்து விட்டேன். திருடர்கள் கொண்டு போகாமல் காவல் காத்துக் கொள்ளுங்கள்'' என்றார் ஸ்வாமி. ஆத்மீக வாழ்வில் எல்லோருக்கும் முழுமையாக அவர் அருள் புரிந்துவிட்டார். நம்மிலுள்ள நீய லம்ஸ்காரங்கள் என்ற திருடர்கள் அந்த அருளைப் போக்கடிக்காமல் காத்துக் கொள்ள வேண்டும் என்பதே ஸ்வாமியின் கருத்து. ஸ்வாமியை நம்பியதால் நாம் என்ன தவறுகள் செய்தாலும் ஸ்வாமி காப்பாற்றுவார் என்று எண்ணுவது தவறாகும். நாம் தவறுகள் செய்யாமலும் நம்மிடமுள்ள நீயகுணங்களை நீக்கிக் கொண்டும் வாழ்ந்தால் ஸ்வாமியின் அருள் நமக்கு அனுபவத்தில் தெரியும். 'நீங்கள் போய்விட்டால் எங்களுக்கு யார் திக்கு, ஸ்வாமி!' என்று கேட்டபோது ஸ்வாமி ''ஐயா, நான் போவது எங்கே? சூர்ய சந்திரர்கள் உள்ளவரை நான் இருப்பேன்'' என்றார். மேலும் ''வெங்கையாவின் பேரில் ஒரு பிடி சாதம் போட்டவர்களுக்கும், கொண்டு வந்தவர்களுக்கும், அவர்களது நன்மை தீமைகளை நான் கவனிக்க வேண்டாமா ஐயா'' என்றார் ஸ்வாமி.

ஒரு நாள் ஸ்வாமி ''இப்போது யார் யார் எந்தெந்த வேலைகளைச் செய்கிறார்களோ இனிமேலும் அவரவர் அந்தந்தப் பணிகளையே செய்யுங்கள். அந்தப் பணிகளில் நானே இருக்கிறேன்'' என்றார்.

தேள் கொட்டியவர்கள் சிலருக்கு ஸ்வாமியிடம் வந்தால் அது குணமாகிறது. மற்றும் சிலருக்கு பிரதக்ஷிணங்கள் செய்தால் வலி குறைகிறது. வேறு சிலருக்குத் தேள் கொட்டியவுடன் ஸ்வாமியை நினைத்த மாத்திரத்தில் வலி நீங்குகிறது. ஏன் இவ்வாறு நிகழ்கிறது என்று ஸ்வாமியைக் கேட்டபோது ''அவர்கள் இருப்பதைப் பொறுத்துத் தானே நாம் இருக்கிறோம்'' என்றார். அவரவர்களின் நம்பிக்கைக்குத் தக்கபடி பலன் விளைகிறது என்று பொருள். இன்னொரு சமயம் ஸ்வாமி ''சாவதாவது, பிழைப்பதாவது? செத்துச் சாம்பலானாலும் வா என்றால் வரவேண்டியதே'' என்றார்.

சிற்சில சமயங்களில் ஸ்வாமி ரோசிரெட்டியிடம் ''ஐயா, ஊருக்குள் போய் யாரையாவது கேட்டுப் பழைய துணிகள் வாங்கி வா ஐயா. நமக்கு உபயோகப்படும். கொடுத்தவர்களுக்கு வியாதிகள் நீங்கும்'' என்பார்.

''ஏதாவது ஒரு வேலை ஆரம்பிப்பதற்கு எந்தக் கிழமை நல்லது ஸ்வாமி?'' என்று கேட்ட பக்தரிடம் ''அந்த வேலை எப்படிச் செய்ய வேண்டும் என்று அறிந்து கொண்டால் செவ்வாய்க்கிழமைகூட நல்லதே ஐயா'' என்றார் ஸ்வாமி.

''ஸ்வாமி நீங்கள் எப்போதும் சுற்றிக் கொண்டே இருப்பதால் எங்களுக்கு உங்களைத் தரிசிப்பது கஷ்டமாக இருக்கிறது'' என்ற பக்தரிடம் ''நீங்கள் எங்கே என்னை நினைத்தாலும் நான் அங்கேயே இல்லையா'' என்றார் ஸ்வாமி. ''இப்போது என்ன இருக்கிறது ஐயா? வெங்கையா மறைந்த மூன்று ஆண்டுகளில் இங்கு நெல்லூர் ரங்கநாயக ஸ்வாமிக்கு கருடசேவை நடப்பது போலல்லவா நடக்கும்! முழு நம்பிக்கையுடன் இங்கு வந்து எது நினைத்தாலும் அது நிறைவேறும் ஐயா'' என்று ஒரு முறை கூறினார். இவ்வாறு ஸ்வாமி கூறிய மொழிகள் ஒவ்வொன்றும் உண்மையே என்பதை பக்தர்களின் அனுபவங்கள் நிரூபிக்கின்றன.

''அவர்கள் இருப்பதைப் பொறுத்துத்தானே நாம் அருளுவது'' என்று ஸ்வாமி கூறிய மொழிகள் வக்கெம்மாவின் விஷயத்தில் நிரூபிக்கப்பட்டன. ஒரு நான் சலமாநாயுடு, வக்கெம்மா இருவரும் ஸ்வாமியின் தரிசனத்துக்காக நதியைத் தாண்டுகையில் சலமா நாயுடுவுக்கு இடுப்பு வரை இருந்த நீர் அவர் பின்னாலேயே வந்து கொண்டிருந்த வக்கெம்மாவுக்கு முழங்கால் வரைக்கே இருந்தது!

19. தர்மத்தைக் கடைப்பிடித்தல்

ஒவ்வொரு மனிதனும் சுகமாகவும் மனச்சாந்தியோடு திருப்தியாகவும் வாழ வேண்டுமென்று நினைக்கிறான். ஆனால் அந்த சுகம், சாந்தி, திருப்தி முதலியவை நாம் தர்மத்தை அநுசரித்து நடப்பதன் மூலமே கிடைக்கின்றன என்று சாஸ்திரங்கள் மட்டுமேயன்றி மஹான்களும் கூறினாலும் ஆசையில் சிக்குண்ட மனிதனுக்கு அவ்வாறு தர்மத்தையொட்டி வாழ்வது கஷ்டமாகவே உள்ளது. மஹான்களின் கூட்டுறவு ஒன்றினால் தான் தர்மத்தைக் கடைப்பிடித்து வாழ்வது என்பது நமக்குக் கைகூடுகிறது என்று பகவத்கீதை முதலிய சாஸ்திரங்கள் கூறுகின்றன. மஹான்களின் பிரத்யட்ச சந்நிதி கிடைக்காதபோது, அவர்களது சரித்திரத்தைப் பாராயணம் செய்வது கூட அவர்களது சந்நிதியைப் போலவே நமக்கு உதவுகிறது என்பது பல பக்தர்களின் அநுபவம். இத்தகைய தர்மானுஷ்டானத்தைப் பற்றி ஸ்வாமி ஏதும் சொற்களால் கூறாவிட்டாலும் அவரது வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகளிலிருந்து அதனைப் பற்றிய போதனையை நாம் கவனித்து அறியலாம்.

கொர்ரகூடி புஜ்ஜையா ஸ்வாமியின் சந்நிதியில் தம் காலத்தின் பெரும் பாகத்தைக் கழிப்பவர். ஒரு முறை ஊரிலேயே இருந்தும் பத்துநாட்கள் ஸ்வாமியின் தரிசனத்துக்கு வராமல் விதிகளிலுள்ள மேடையில் அமர்ந்து வீண் பேச்சில் காலத்தைக் கழித்தார். பதினொன்றாம் நாள் அவர் ஸ்வாமியிடம் வந்தபோது ஸ்வாமி அவரைக் காட்டி "அவர் எந்த ஊர்?" என்று கேட்டார். தன் நடத்தைக்காக புஜ்ஜையா வருந்தினார். ஒருவர் தம் குருவைப் பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை அல்லது மாதம் ஒரு முறை அல்லது குறைந்தது ஆறு மாதங்களுக்கு ஒரு முறையாவது தரிசிக்க வேண்டும் என்பது சாஸ்திரம். இந்த விதியை மஹாசமாதி அடைந்த பிறகும் கடைப்பிடிக்க வேண்டும். ஏனெனில் ஸத்குரு மரணத்துக்கு அப்பாற்பட்டவராதலால், அவரோடு பக்தர்களுக்குள்ள தொடர்பு அவரது சமாதிக்குப் பிறகும் தொடரும் என்று ஸ்ரீரமணமஹரிஷி கூறியுள்ளார். சூரிய சந்திரர்கள் உள்ளவரை தாம் அங்கே இருப்பதாக ஸ்வாமி நமக்கு வாக்குறுதி அளித்த பிறகு, அவரது சமாதியைத் தரிசிப்பதும் அங்கு முடிந்த அளவு காலம் கழிப்பதும் நமக்கு மிகவும் நன்மையைத் தரும்.

நாகுலவெல்லடுரைச் சேர்ந்த மங்கம்மா ஒரு நாள் உபவாச மிருந்தாள். அன்று ஸ்வாமியே அவளிடம் ''எல்லோருக்கும் சாதம் போட்டு விட்டு நீயும் சாப்பிட்டுவிட்டு வா'' என்றார். ''ஸ்வாமி, இன்று சிவராத்திரியல்லவா, நான் உபவாசம் இருக்கிறேன்'' என்றாள் மங்கம்மா. என்றாலும் உணவுண்டு வரும்படி மீண்டும் கூறினார் ஸ்வாமி. சாப்பிட வேண்டும் என்ற அவாவும், பசியும் இருக்கும்போது சாப்பிடுவதே நல்லது என்பது ஸ்வாமியின் கருத்து. அவள் ஸ்வாமி கூறியபடி உணவு உண்டாள். உபவாசம் இருக்கும்போது பசியையும், உணவைப் பற்றியுமே நினைத்துக் கொண்டு எப்போது நம் விரதம் முடியும், சாப்பிடலாம்? என்ற எண்ணம் இருந்தால் அது உபவாசமே ஆகாது. அதைவிட உணவு உண்பதே சிறந்தது. இதனையே பகவத்கீதை மித்யா சாரம் என்று கூறுகிறது. ஆனால் தருணியுள்ள சிலரை உபவாசமிருக்கும் படி ஊக்குவித்தார் ஸ்வாமி. ரோசிரெட்டியை ஒரு முறை ஐந்து நாட்கள் உபவாசம் இருக்கச் செய்தார்.

சாதாரணமாக ஸ்வாமி யாருடைய வீட்டுக்கும் போகமாட்டார். ஆனால் 1978-ஆம் ஆண்டு ஸ்வாமி கலிச்சேடு கிராமத்தில் நரஸா ரெட்டியின் வீட்டில் மூன்று இரவுகள் தங்கினார். ஒரு நாள் அவர்களது வீட்டின் நடுவில் துளிஏற்றி வீட்டுக்குள்ளேயே அமர்ந்தது மிகவும் விசேஷமான நிகழ்ச்சி. நான்காவது நாள் காலையில் ''ஸித்தலய்ய மலைக்குப் போக வேண்டும் வண்டி கொண்டு வாருங்கள்'' எனறார். வண்டி வந்து சாமான்களை எல்லாம் ஏற்றியபின் ஸ்வாமி ''இப்போது போவதற்கில்லை; வண்டிக்காரனுக்கு ஆறு ரூபாய்கள் கொடுத்தனுப்புங் கள்'' என்றார். வண்டியில் போகாமலேயே வண்டிக்காரனுக்கு அவ்வளவு பணம் எதற்கு கொடுக்க வேண்டும் என்று எவருக்கும் புரியவில்லை. ஆனால் அன்று வண்டி கட்டியதன் மூலம் தான் வழக்கமாகப் போகும் கூலி வேலைக்குப் போகாத அவனுக்கு அந்தப் பணம் நஷ்டமானது; அதைத் தாம் கொடுத்து ஈடுகட்ட வேண்டுமென்பது ஸ்வாமியின் கருத்து. ஷீரடி சாயிபாபா கூட ''யாருடைய சேவையையும் இலவசமாகப் பெறக் கூடாது; எந்தவிதமான சேவைக்கும் தாராளமாகக் கூலி கொடுக்க வேண்டும்'' என்று கூறினார். ஸ்வாமி தமக்கு சேவை செய்த நாவிதனுக்கு இரண்டு ரூபாய்கள் கொடுப்பார். மற்றவர்கள் ஐம்பது பைசாக்களே கொடுப்பர். அதேபோல் வண்ணானுக்கும் மற்றவர்கள் கொடுப்பதைப் போல் இரட்டிப்புப் பணம் கொடுப்பார்.

ஸ்வாமியின் தங்கை மங்கம்மா ஸ்வாமியை மிகவும் அன்போடு நடத்தினாள். ஸ்வாமி எங்கெங்கோ திரிந்துவிட்டு அவளது வீட்டுக்குத் திரும்பும்போது அவள் எவ்வளவு பசியானாலும் தமையனுக்காகக் காத்திருந்து சாதம் போடுவாள். அதற்குக் கைமாறாக ஸ்வாமி தம் குடும்ப சொத்திலிருந்து தமக்குள்ள பாகத்தை மங்கம்மாவுக்கு

அளிக்கும்படிச் செய்தார். நன்றியோடு இருப்பது எப்படி என்பதை நடத்திக் காட்டினார் ஸ்வாமி.

ஒருநாள் ஸ்வாமி கொர்கூடி புஜ்ஜையாவிடம் ''ஐயா, என்னைக் கவனித்துக் கொள்பவர்களை நீ கவனித்துக் கொள்ள வேண்டும்'' என்றார். அதனால் அவர் ஸ்வாமி சமாதி அடைந்த பிறகும் அவரது சேவகர்களை மிகவும் ஆதரவுடன் கவனித்துக் கொண்டார். உண்மையில் குருசேவை என்பது குரு சமாதியடைந்த பிறகும் கூடத் தொடர்கின்றது. அதனால்தான் நம் சாஸ்திரங்கள் ஆயுள் முழுதும் பிரம்மசரிய விரதத்தை ஏற்றுக் கொண்டவர்கள் எப்பொழுதும் குருவின் அருகிலேயே இருக்க வேண்டுமென்றும் குரு சமாதியடைந்தால் அவரது அக்னியையே அவரது உருவமாக வாழ்நாள் முழுதும் வழிபட்டு வர வேண்டும் என்று கூறுகின்றன. வீரராகவ சாயி அந்த நியமத்தைக் கடைப்பிடித்தார். ஸ்வாமியும் கூட அவ்வாறுதான் செய்தார் போலும். அதனால்தான் சாயியைத் தம் சகோதரர் என்றார் ஸ்வாமி. அதேபோல் நல்ல சீடர்கள் தம் குருவின் மற்ற சீடர்களை அன்போடு ஆதரிப்பது தர்மமாகும்.

''வயிறு நிரம்பி ஏப்பம் விடுபவர்க்கல்ல; பசியோடு கையேந்து பவர்களுக்கு உணவளிக்க வேண்டும்'' என்றார் ஸ்வாமி.

ஸ்வாமி தாம் இரண்டு மூன்று நாட்களாக உணவு உண்ணாம லிருந்தபோதும் உணவு சமயத்தில் தமது கூட்டத்தவர் மட்டுமன்றி தரிசனத்துக்காக வந்தவர் அனைவரும் சாப்பிட்ட பின்பே தாம் கஞ்சி குடிப்பார். தன்னைச் சேர்ந்தவர்கள் யாவரும் உணவு கொண்ட பின்பே எஜமான் உணவு கொள்ள வேண்டும் என்று தர்ம சாஸ்திரம் கூறுகிறது.

ஸ்வாமி சாதத்தில் வெறும் மிளகாய்ப்பொடி போட்டுக் கொண்டு உண்பார். மோர் கொடுத்தால் குடிப்பார்; இல்லாவிட்டால் கேட்க மாட்டார். ருசியைப் பொருட்படுத்தாமல் வெந்ததோ இல்லையோ என்று கூடப் பாராமல் உண்பார். ஒரு முறை கம்புக்களி செய்து கொண்டிருக்கும்போது பாதியே வெந்திருந்த களியைப் பரிமாறச் செய்து உப்பில்லாத மிளகாய்ப்பொடியைத் தொட்டுக் கொண்டு உண்டார். உணவு, பசிக்கே தவிர ருசிக்கல்ல; இது மருத்துவத்துக்கும் சாதனைக் கும் முக்கியமான உண்மையாகும்.

ஆதிநாராயணரெட்டியார் ஒரு நாள் ஸ்வாமியைத் தம் காரில் நெல்லூரிலிருந்து பெனுபார்த்தியிலுள்ள தம் வீட்டுக்கு வருமாறு அழைத்தார். ஸ்வாமி ''மேலே உள்ளவர்கள் சம்மதிக்க மாட்டார்கள்'' என்றார். சற்று யோசித்த ரெட்டியார் ''ஸ்வாமி நம்மவர்கள் எல்லோரை யும் பஸ்ஸில் அழைத்து வருகிறேன். நீங்கள் காரில் போங்கள்'' என்று

பிரார்த்தித்தபோது ஸ்வாமி புறப்பட்டார். காரில் இடமில்லாதவர்களை ரெட்டியார் பஸ்ஸில் அழைத்துச் சென்றார்.

ஒருநாள் ஸ்வாமி சாப்பிடும்போது ஒரு நாய் அவரது இலையில் வாய் வைத்தது. அதை ஒன்றும் செய்யாமல் ஸ்வாமி எழுந்துவிட்டார். நாய் திருப்தியாகத் தின்றுவிட்டுச் சென்றது. ஸ்வாமி நாய்களுக்குச் சாதம் போட்டால், ஒன்றோடொன்று சண்டையிடாமல் ஒன்று சேர்ந்து தின்னும். அதேபோல் துளஸம்மா சாதம் போடும்போது நாய்களும், பூனைகளும் பகையின்றி ஒரே இலையில் தின்னும்.

ஒருநாள் ஸ்வாமி காலையில் தூங்கி எழுந்தவுடனே ''இன்று ஒருவரும் வாய் திறக்கக் கூடாதய்யா'' என்று பன்முறை கூறினார். சிறிது நேரத்தில் ஆசிரமத்தில், ஐந்து வேஷ்டிகளை ஒன்றோடொன்று முடித்துப் போட்டுச் செய்த மந்திரம் போடுவதற்கான துணியை யாரோ திருடிக் கொண்டு போய்விட்டார்கள் என்று தெரிந்தது. அந்தத் திருடர்களைத் தாம் தூஷிக்காமலிருக்கவே அவ்வாறு ஸ்வாமி கூறினார் என்பதை சேவகர்கள் புரிந்து கொண்டனர்.

ஒருநாள் ஆசிரமத்தில் வெந்நீர் காய்ச்சும் பெரிய தாமிர அண்டா திருட்டுப் போயிற்று. ஸ்வாமிக்குக் கூறியபோது ''பாவம், அவர்களுக்கு இல்லாததால் தானே எடுத்துக் கொண்டு போனார்கள். அவர்களை நாம் ஒன்றும் சொல்லக்கூடாது'' என்றார் அந்தத் தர்மப்பிரபு.

20. ஸ்வாமியின் போதனைகள்

''ஸ்வாமி! எங்களுக்கு ஏதாவது போதனை செய்யுங்கள்'' என்று பலரும் ஸ்வாமியைக் கேட்டதுண்டு. அப்போது அவர் ''பார்த்துக் கற்றுக் கொள்ளுங்கள்'' என்று சுருக்கமாகக் கூறுவார். அவர் பிரத்தியேகமாக போதனை என்று எதுவும் செய்யாமல் போனாலும் பக்தர்களிடம் அவர் பேசிய பேச்சுக்களே நமக்கு தெய்வீக போதனையாக விளங்குகின்றன. அவற்றில் சிலவற்றைக் காண்போம்.

காரி ராமஸ்வாமி ''நான் பொதலக்கூரில் இரட்டைக்காளை வண்டி வாங்குவதற்காக முன்பணம் கொடுத்துவிட்டு ஸ்வாமிக்குத் தெரியப்படுத்தியபோது ''ஐயா, அந்த வண்டி வீட்டுக்கு வந்தால் நல்ல தல்ல. அதனுடைய இருசில் சேவல்கள் சண்டைபோடுகின்றன. அது வேண்டாம்'' என்றார். செர்லோபல்லியில் வேறொரு வண்டியை வாங்க எண்ணி ஸ்வாமியிடம் கேட்க, ''ஐயா அந்த வண்டி வந்தால் பெண்மணி களுக்கு வியாதிகள் வரும்; அது வேண்டாம்'' என்றார். பின்னர் துரிமெர்லாவில் இன்னொரு வண்டியைப் பார்த்துவிட்டு வந்தேன். ''ஐயா அந்த வண்டி வந்தால் பிள்ளைகளுக்கு நோய் வரும், அது வேண்டாம்'' என்றார் ஸ்வாமி. ஒரு வாரத்துக்குப் பின் எந்தக் கிராமத்துக்குப் போய் வண்டி வாங்க வேண்டும் என்று கேட்பதற்காக ஸ்வாமியிடம் போனேன். நான் எதுவும் கேட்பதற்கு முன்பாக அவரே ''ஐயா, ராஜுபாளையத்தில் நானூறு ரூபாய்களுக்கு புதுவண்டி கொடுப் பார்கள். ஒட்டிக் கொண்டு வா'' என்றார். அந்த வண்டியை எந்த நாள் அன்று ஒட்டிக் கொண்டு வந்தால் நல்லதென்று அவரைக் கேட்க, ''ஐயா திங்கட்கிழமை காலையில் சூர்யோதயத்துக்கு முன்பே நீ வண்டி வாங்கிய கிராமத்தைவிட்டுப் புறப்பட்டு வண்டியை ஒட்டிக் கொண்டு வந்துவிட வேண்டும். உன் கிராமத்தில் ராமர் கோயிலில் மூன்று இரவுகள் வண்டியை நிறுத்தியபிறகு உன் குழந்தைகள் எல்லோரையும் வண்டியில் ஏற்றிக் கொண்டு ஊர்முழுவதும் சுற்றிக் கொண்டு கடலை, பொரி, வெல்லம், சர்க்கரை முதலியவற்றை எல்லோருக்கும் விநியோ கித்துக் கொண்டு வண்டியை வீட்டுக்கு ஒட்டி வரவேண்டும்'' என்று கூறினார். அந்த வண்டியை இருபத்தைந்து ஆண்டுகளாக உபயோகித்து வருகிறேன். எந்தவித விபத்துக்களும் நேரவில்லை. அந்த வண்டி

வந்தபிறகு நான் நிலபுலன்கள் வாங்கினேன். இன்றைக்கும் அந்த வண்டியை குருப்பிரசாதமாக மிகவும் பவித்திரமாக உபயோகித்து வருகிறேன்'' என்றார்.

வண்டியின் இருபில் சேவல்கள் சண்டை போடுவதாலது? மரத்தால் செய்யப்பட்ட ஒரு வண்டி வீட்டுக்கு வந்தால் வீட்டிலுள்ள பெண்மணிகளுக்கு நோய் வருவதாவது? மற்றொரு வண்டி வந்தால் பிள்ளைகளுக்கு வியாதி ஏற்படுவதாவது? இவற்றை எல்லாம் கேட்கும் போது அஞ்ஞானிகளான நமக்கு மூடநம்பிக்கைகள் போன்று தோன்றும். இத்தகைய விஷயங்களில் சர்வத்தையும் அறிய வல்லவரான ஸ்வாமி யின் சொற்களையே தலைவணங்கி ஏற்க வேண்டும்.

ஸ்வாமியின் சேவகர்கள் எவராவது துடுக்காகப் பேசியபோது அதைக் குறித்து ஸ்வாமிக்குத் தெரியப்படுத்தினால் ''அவனுக்குள் பொம்மை எழுந்தது ஐயா? அவன் என்ன செய்வான்'' என்பார் ஸ்வாமி.

ஒருநாள் பேச்சினிடையே ஸ்வாமி பரிகெலநாகய்யாவிடம் ''பொம்மைகளைக் கத்திரிப்பது நம் கையில் உள்ளதல்லவா ஐயா?'' என்றார். நம்மிடமுள்ள தீயகுணங்களே நம்மிடமுள்ள பொம்மைகள். ஸ்வாமிக்கு நம்பால் கருணை ஏற்பட்டால் பொம்மைகளைக் கத்திரித்து விட்டு அந்தந்த தீயகுணங்களை வேரறுப்பார்.

ஒரு மனிதரால் பலருக்கு அசௌகரியங்களும் தீமையும் ஏற்படும் என்று ஸ்வாமி கருதினால் அவரோடு பேச்ச வார்த்தை இல்லாமல், அவரைக் கண்டிக்காமல் தம் பிரேரணை ஒன்றினாலேயே அவர் தாமாகவே அங்கிருந்து போய்விடும்படிச் செய்வார். ஒரு பக்தர், ஸ்வாமியின் தினசரி பூஜைக்குத் தாம் வருவதற்குத் தாமதமானாலும் தாம் வந்த பிறகே ஆரம்பிக்க வேண்டும் என்றும் தானே ஸ்வாமியின் சமாதிபூஜை செய்ய வேண்டும் என்றும் கட்டளையிடுவார். சிறிது காலத்தில் அந்த பக்தர் தாமாகவே இந்த விஷயங்களில் தலையிடாமல் ஒதுங்கியதோடு ஸ்வாமியின் சேவையையே விட்டுவிட்டார். நம் செயல்கள் சரியா தவறா என்று யோசிக்காமல் நாம் நடந்து கொண்டால் ஸ்வாமி நம்மீதும் இத்தகைய கத்தரிப்புப் பிரயோகம் செய்து விடுவார் என்பதை நாம் உணர வேண்டும்.

ஒரு முறை ஸ்வாமி சேவகர்கள் இருவரிடையில் சண்டை மூண்டது. ஒருவர் கோடாரியை எடுத்துக் கொண்டார். மற்றவர் அதைப் பிடுங்கிக் கொண்டு முன்னவரது கழுத்தின் மீது கடித்து விட்டார். அவருக்கு ரத்தம் ஒழுகியது. அதைக் கிராமத்துப் பெரியவர் களுக்குக் கூறினார். அவர்கள் யாவரும் ஸ்வாமியிடம், அவ்வாறு செய்தவனை ஆசிரமத்திலிருந்து விரட்டி விட வேண்டுமென்று

வேண்டிக்கொண்டனர். அப்போது ஸ்வாமி ''ஒருவரைப் போ என்று சொல்வதைவிட நாமே போய்விடுவது மேல் அல்லவா ஐயா'' என்றார். இந்த நியாயமான தீர்ப்பைக் கேட்டு வந்தவர்கள் பேச்சு மூச்சில்லாமல் நழுவி விட்டனர்.

1980-ஆம் ஆண்டில் ஸ்வாமிக்கு தனுர்வாதம் ஏற்பட்டது. சேவகர்கள் ஊசி போட வேண்டுமென்று மருத்துவரை அழைத்து வந்தனர். ஸ்வாமிக்கு இஷ்டமில்லாவிட்டாலும் மருத்துவர் ஊசி போட்டால் அவரது நோய் குணமடையும் என்று சேவகர்கள் மீண்டும் மீண்டும் கூறியதால் அதற்கு ஒப்புக் கொண்டார். மூன்று நாட்களுக்குப் பிறகு ஸ்வாமி, ''ஊசி போட்டாரே, குணமடைந்ததா ஐயா வியாதி?'' என்று கேட்டார். நாகய்யா, ''குறையவில்லை ஸ்வாமி, நீங்கள் குணமடைய வேண்டும் என்று கூறினால் குறையும்'' என்றார். ''அது எப்படி? என்றார் ஸ்வாமி. ''ஆமாம், ஸ்வாமி குணமடையும், நீங்கள் கூறுங்கள்'' என்றார். ''ரொம்ப நன்றாகப் பேசுகிறாய் ஐயா'' என்றார் ஸ்வாமி.

வீரபத்ர சாயியைப் போலவே சுவாமியும் தம் வியாதிகளுக்கு மருந்து உண்ணாமல் பொறுமையோடு அநுபவிப்பார். சேவகர்களிடம் கூட ''வலிகளை எவ்வளவு அநுபவிக்கிறீர்களோ அவ்வளவு நல்லது'' என்பார். சில சமயங்களில் வேகவைக்கப்பட்ட பூண்டு, கருவேப்பிலைப் பொடி, தனியாத்தூள் ஆகியவற்றைத் தம் நோய்களுக்கு மருந்தாக ஏற்பார். சிலரது வியாதிகளுக்கு சில மூலிகைகள், சில வேர்கள் முதலிய வற்றைப் பற்றிக் கூறி அவற்றை உண்ணும்படிக் கூறுவார்.

ஒருநாள் ரோசிரெட்டி ''ஸ்வாமி தாங்கள் எப்போதும் மௌன மாக இருக்கிறீர்களே, எங்களுக்கு நல்லது கெட்டது எப்படித் தெரியும்?'' என்று கேட்ட போது ஸ்வாமி ''முந்நூறு ரூபாய்கள் கொடுத்தால் ஸாதய்யா வந்து கூறுவார்'' என்றார். மற்றொரு நாள் ''ரோசிரெட்டி, நீ பெரியவனல்லவா, மற்றவர்களுக்கு நல்லது கெட்டது சொல்லய்யா'' என்று கூறினார்.

ஒருநாள் குரவையா ''ஸ்வாமி, கடவுளைக் காண்பது எப்படி?'' என்று கேட்க, ''எல்லோரையும் சமமாகப் பார்த்தால் கடவுளைக் காணலாம்'' என்றார். மற்றொரு நாள் இதே கேள்வியைக் கேட்ட போது ''வீரபிரம்மஸ்வாமியின் சரித்திரத்தைப் படித்தால் அந்த அநுபவம் கிடைக்கும்'' என்றார்.

இங்கே ஸ்வாமி தம் பக்தர்களைப் பல மஹான்களின் சரித்திரங்களைப் படிக்கும்படிக் கூறுகிறாரென்பதை உணர வேண்டும். இல்லாவிடில் தம்மையே குருவாக எண்ணி சேவை செய்யும் அவரை மற்றொரு மஹானின் சரித்திரத்தைப் படிக்கும்படி எதற்குக் கூற

வேண்டும்? அவதூதர்களின் மூல புருஷரான தத்தாத்ரேய ஸ்வாமியே, ஸ்வாமியின் உருவத்தில் நமக்கு அருள்புரிந்து அந்த தத்த ஸம்பிரதாயப் படி இவ்வாறு நமக்கு வழிகாட்டுகிறார்.

குரவையா ஒரு முறை ''ஏதாவது கூறுங்கள்'' என்றபோது ''ஸம்பன்னத்வத்தோடு சாதாரணமாக நடந்துகொள்; சத்யமும் தர்மமும் தவறாமல் இரு'' என்றார் ஸ்வாமி. ஸம்பன்னத்வம் என்றால் சத்வகுணத் தோடு கூடிய தெய்வீக குணங்கள். ''எனக்குச் சிறந்த குணங்கள் உள்ளன'' என்ற அகம்பாவமின்றி ஸ்வாமியைப் போல எளிமையாகச் சாதாரண மனிதனைப் போல நடந்து கொள்ள வேண்டும் என்பது ஸ்வாமியின் கருத்து. மேற்கூறிய கூற்றை ஸ்வாமி தம் வாழ்க்கையில் கடைப்பிடித்துக் காட்டினார்.

''ஸ்வாமி, கோபம் எப்படிப் போகும்?'' என்ற கேள்விக்கு ஸ்வாமி ''பொழுது விடிவதும், சாய்வதும் தெரியாமல் போகும்போது, கோபம் போகும்'' எனறார். மற்றொரு முறை ''சூர்யசந்திரர்களுக்கு மனுப்போட்டால் கோபம் போய்விடும்'' என்றார்.

ஒரு நாள் தசய்யா பூக்களைப் பறித்துக் கொண்டிருக்கும்போது ஸ்வாமி அவரை அழைத்து ''ஒரு பூவே போதும் ஐயா'' என்றார். மனம் என்ற ஒரு பூவைத்தான் இறைவன் கேட்கிறான் என்று ஸ்வாமி குறிப்பிட்டார் என்பதை அவர் உணர்ந்தார்.

பக்தன் தன் மனம் அல்லது இதயத்தை குருவிடமோ அல்லது இறைவனிடமோ அர்ப்பணிப்பது என்பது ஒரு முறை மட்டுமே நிகழக்கூடியது. அதற்கு சங்கேதமே ஒரு பூ போதும் என்ற கருத்து. பூஜைக்காக அதிக அளவில் துளஸி பறித்துக் கொண்டிருந்த பக்தையிடம் இந்த விஷயத்தையே ரமணமஹரிஷியும் குறிப்பிட்டார். அவ்வாறே மீண்டும் வணங்குவதற்கு முற்பட்ட ஒரு பக்தரிடம் சாயிபாபா ''நீ மனப்பூர்வமாகச் செய்த ஒரு நமஸ்காரமே போதும்'' என்றார்.

ஒரு பக்தை ஜனங்களுக்கு நெல் கடன் கொடுத்து அதற்கு வட்டியாக 'நாமு' என்ற பெயரில் அதிகமான நெல் பெற்று வந்தாள். ஒரு சமயம் அவளது வீடு எரிந்து போய் விட்டது. அப்போது தானியம் கூட அதிகமாக எரிந்து போயிற்று. அக்கம்பக்கத்தவர்களின் உதவியால் ஓரளவு தானியத்தை எரிந்து போகாமல் காப்பாற்றிக் கொண்டாள். ஆனாலும் நஷ்டமடைந்த தானியத்தைப் பற்றி மிகவும் வருந்திக் கொண்டே இருந்தாள். ஒரு முறை ஸ்வாமியைத் தரிசித்து ''ஸ்வாமி வீடு எரிந்து எல்லாம் நாசமாகிவிட்டது'' என்று முறையிட்டாள். ''அம்மா, லாபம் தான் போயிற்று; முதல் தப்பியது இல்லையா?'' என்று ஸ்வாமி கூற அவள் அதை ஒப்புக் கொண்டாள். அநியாயமாகச் சேர்த்த தானியம்

தான் எரிந்து போயிற்று. அதனால் தான் ஸ்வாமி, ''வட்டி விஷயத்தில் கூட தர்மத்தை அநுசரித்து நடக்க வேண்டுமய்யா'' என்பார்.

கோடூர் வெங்கம்மாவின் கணவன் இறந்தபோது அவள் சோகத் தோடு உடல் நலமிழந்து படுத்த படுக்கையாக இரவும் பகலும் வருந்திக் கொண்டிருந்தாள். ஸ்வாமி அப்போது அவளிடம் கூறியதாவது: ''அம்மா ஒரு மாம்பழம் சொத்தை ஆகிவிட்டால் அது எதற்கும் பயன்படாமல் போகிறது. அந்தப் பழம் தைரியமாக இருந்தால் அந்த சொத்தை அதை எதுவும் செய்ய முடியாது. அந்தப் பழம் இனிமையாக ஆகித் தன் பங்குக்கு எவ்வளவோ காய்களையும் உற்பத்தி செய்கிறது. அது பலமுறை இவ்வாறு மரங்கள் ஆனபிறகு மனிதனாக ஆகிறது. பல முறை மனிதப்பிறவி எடுத்த பிறகு சிறிது புத்தியுள்ளவன் ஆகிறான். இத்தகைய பல பிறவிகள் எடுத்தபின் ஒரு பிறவியில் தர்மப்படி பரிபாலிக்கும் அரசனாகிறான். அத்தகைய பிறவிகள் பல எடுத்த பிறகு இறைவனுக்காகப் பாடுபடுகிறான். அத்தகைய பிறவிகள் பல எடுத்தபின் இறைவனின் சந்நிதியில் இருப்பான். அப்போது இறைவன் தன் கண்களைச் சற்றே திறந்து அவனைப் பார்ப்பார். தம் கட்டை விரலுக்கடியிலுள்ள சூத்திரக் கயிறை மிதித்தால் பிரபஞ்சத்திலுள்ள பொம்மலாட்டமெல்லாம் அவனுக்குக் காட்சியளிக்கிறது. அப்போது அவனைத் தன்னோடு ஐக்கியம் செய்து கொள்வார்.'' அதைக் கேட்ட வெங்கம்மா ''இப்போதே எவ்வளவோ பிறவிகள் எடுத்துத் துன்பப் படுகிறேன். இந்த துக்கம் அப்படி என்ன பெரிய துக்கம்? தைரியமாக மாம்பழம் போல இருக்கவேண்டும்'' என்று நிச்சயித்துக் கொண்டு அழுவதையும் வருந்துவதையும் நிறுத்திவிட்டாள்.

''வேலை செய்யாவிட்டால் உத்தியோகம் போய்விடும்; வேலை செய்யாமலே பணம் வரலாம், ஆனால் அந்தப் பணம் உன்னிடம் நீடித்து நிலைக்காது. கஷ்டப்பட்டு வேலை செய்து கொண்டிரு; அல்லது இறைவனைத் தியானித்துக் கொண்டாவது இரு; வியாதியோடு முனகிக் கொண்டாவது இரு; வறுமையில் உழன்று கொண்டாவது இரு'' என்றார் ஸ்வாமி. இந்த நான்கு நிலைகளிலும் மனிதனுக்கு எப்போதும் கடவுளின் நினைவு இருக்குமென்று ஸ்வாமி இவ்வாறு கூறினார் போலும். அது மட்டுமன்றி, கஷ்டப்பட்டு உழைத்தாலும், வியாதியால் வருந்தினாலும், வறுமையில் உழன்றாலும் தீவினைகள் கழிந்து போகின்றன. தியானம் செய்து கொண்டிருந்தால் புதிய வினைகள் ஏற்படாது.

ஒரு பக்தர் அடிக்கடி ஸ்வாமியின் தரிசனத்துக்காக வருவார். தமக்கு ஸ்வாமியின் பாதுகாப்பு உண்டு என்ற தைரியத்தில் காரியாலயப்

பணிகளை அலட்சியம் செய்து வந்தார். மேலதிகாரியைக் கூடப் பொருட் படுத்தமாட்டார். ஒரு நாள் ஸ்வாமி அவரது கனவில் தோன்றி "'What do you mean by negligence of duty, bloody idiot' (முட்டாளே, காரியா லயப் பணிகளை அலட்சியம் செய்வது என்றால் என்னவென்று நினைத்துக் கொண்டிருக்கிறாய்?) என்று உரத்த குரலில் கண்டித்தார். பக்தர் ''ஸ்வாமி, உங்களுக்கு ஆங்கிலம் கூட வருமா?'' என்று கேட்க ''ஆங்கிலமென்ன, பிரபஞ்சத்திலுள்ள எல்லா மொழிகளும் தெரியும்' என்று கூறி ஸ்வாமி தம் பக்தரைப் பாவம் செய்வதிலிருந்து தடுத்தார்.

எப்போதும் தமது சேவையில் ஈடுபட்ட குரவையாவிடம் 'பறையர், சக்கிலி, ஜோகி, ஜங்கம ஜாதிக்காரர்கள் சேராமல் பார்த்துக்கொள். ஸம்பன்னத்வத்தோடு ஸத்குருவை வழிபடு' என்றார். இம்மொழி ''நம்மில் ஒரு இழிந்த சாதிக்காரன் இருக்கிறான். அவனை விரட்ட வேண்டும்'' என்று வீரபத்ரசாமிநாதர் கூறிய மொழியை ஒத்துள்ளது. மால, மாதிக, ஜோகி, ஜங்கம சாதிக்காரர்கள் என்றால் நமக்குள்ளே உள்ள நீயகுணங்கள் என்பது ஸ்வாமியின் கருத்து.

ஒரு முறை ஸ்வாமி குரவையாவிடம் ''தவறு செய்தால் சாணப் புழுவாகப் பிறக்க வேண்டும். சக்கிலிய ஜாதியில் பிறப்பார்கள்'' என்றார் ஸ்வாமி. ''மீண்டும் எவ்வளவோ பிறவிகள் எடுத்த பிறகும் கூட என்னிடம் வர முடியாது'' என்று கூட ஸ்வாமி கூறினார்.

தசய்யா ''உய்வடைவது எப்படி ஸ்வாமி?'' என்று கேட்டபோது ''ஆசை போய்விட்டால் எல்லாம் போய்விடும் ஐயா'' என்றார் ஸ்வாமி. துளஸம்மா ''ஸ்வாமி உங்களை அறிந்து கொள்வது எப்படி?'' என்று கேட்க ஸ்வாமி ''அம்மா, பத்ராசலத்துக்குப் போய் கர்ப்பக்கிரகத்தைத் திறந்து பார்; தெரியும்'' என்றார். இதே கேள்வியைக் கேட்ட சல்லா சுப்பம்மாவிடம் கோடிதீர்த்தம் கோவிலுக்கு மேல் பார்க்கச் சொன்னார். அவள் போய்க் கோவிலுக்கு மேல் பார்த்தபோது அவளுக்கு முடி வில்லாத ஒளி காட்சியளித்தது. இவ்வாறாக பரப்ரம்மஸ்வரூபமான நானே, காணப்படுகின்ற இந்த ஜகம் முழுவதிலும் வெளிப்படு கின்றேன். எல்லாவற்றிலும், எல்லா இடங்களிலும் என்னையே காண வேண்டுமென்று ஸ்வாமி போதித்தார்.

ஒரு முறை மேப்பூர் தசய்யா ஸ்வாமியிடம் ''ஸ்வாமி, காட்டில் ஒரு ரிஷி காட்சி அளித்து உங்கள் நாக்கில் பீஜாக்ஷரங்களை எழுதினார் என்று கூறுகிறார்களே, அது உண்மைதானா?'' என்று கேட்க ஸ்வாமி ''மைசூர் மகாராஜா வழியில் போய்க் கொண்டிருக்கும்போது பார்த்தால் நமக்கென்ன கிடைக்கும்? நாம் செய்ததே தான் நமக்குக் கிடைக்கும்'' என்றார். அதாவது நாம் இயன்ற அளவு ஜபம், தியானம், தர்மம், ஸத்குரு சேவை முதலியவை செய்து கொண்டிருந்தால் தவிர நமக்கு

எந்த மஹானின் அநுக்கிரகமும் கிடைக்காது. நாம் சாதனை செய்து பரிபாகம் அடைந்தால்தான் எவரோ ஒரு மஹான் நமக்கு அருள்புரிவார் என்பது ஸ்வாமியின் கருத்து. எனவே நாம் சிரமப்பட்டு சாதனை செய்தால் தான் ஸ்வாமி நமக்கு அருள் புரிவார் என்பதை நாம் உணர வேண்டும்.

வண்டிக்காரர் ஒருவர் வெங்கையாவின் மூலம் ஸ்வாமிக்கு விறகுகள் கொண்டு வந்து போட்டுவிட்டு வண்டிக்கு வாடகை நான்கு ரூபாய்கள் வாங்கிக் கொண்டு பின்னர் வெங்கையாவிடம் மற்றும் சில வேலைகள், இலவசமாகச் செய்வித்துக் கொண்டார். அந்த வண்டிக்காரர் ஸ்வாமியிடம் வந்தபோது ''ஐயா, இவர் வண்டிக்காரரா? இவர் நமக்கு நூற்றைம்பது ரூபாய்கள் செலுத்த வேண்டி இருக்கிறதே? அதற்கு அபராதமாக திருப்பிக்குப் போய்வர வேண்டும்'' என்று கூறி எழுதிக் கொடுத்தார். அவர்கள் அவ்வாறே திருப்பதி போனார்கள். ஸ்வாமிக்குக் கட்ட வேண்டிய பணம் திருட்டுப் போயிற்று. ஸ்வாமியின் சேவகர்கள் ஆண்டவனுக்குச் சொந்தம். அவர்களுக்கு அளிக்க வேண்டிய பணத்தை ஆண்டவனுக்கோ, அவர்களது குருவுக்கோ அல்லது அவர்களுக்கோ கொடுக்காவிடில் அந்தப் பணம் வேறு விதத்தில் நஷ்டமாகும்.

நீண்டகாலமாக ஸ்வாமிக்கு சேவை செய்து வந்த ரோஸிரெட்டி ஒரு முறை எவரோ ஏதோ கூறினார்கள் என்று விட்டுக்குப் போக எண்ணினார். ஸ்வாமி அவரைத் தனியே அழைத்து ''விளைந்த பூமியை விட்டுவிட்டு, இறைந்து கிடக்கும் தானியத்தை சேகரித்துக் கொள்கிறேன் என்கிறாயா?'' என்று எச்சரித்தார். உடனே அவர் அந்த எண்ணத்தைக் கைவிட்டார்; ஸத்குருவின் ஸந்நிதியே விளைநிலம், வேறு இடத்தில் வாழ்ந்து கொண்டு சாதனை செய்வது தானியங்களைச் சேகரிப்பது போன்றது என்று உணர்ந்து கொண்டு தம் கடைசி மூச்சு வரை பிசகு கொண்டு வரும் சேவையைச் செய்து தம் வாழ்க்கையைப் பயனுள்ளதாகச் செய்து கொண்டார்.

ரோஸிரெட்டியின் சுயநலமற்ற குருசேவையின் விளைவால் அவருக்கு ஆசை, பாசம், உற்றாரிடம் பற்று மற்றும் தம் சரீரத்தின்மீது கூட பற்றற்ற தன்மை ஏற்படும்படிச் செய்தார் ஸ்வாமி. தம் சொந்த முயற்சியால் மட்டுமே இவற்றைச் சாதிப்பது மிகவும் கஷ்டம் என்பது சாதகர்களின் அநுபவம். மனப்பூர்வமான அன்போடு குருவுக்கு சேவை செய்ததால் முதுமையினால் ஏற்படும் சரீரக் கஷ்டங்கள் எதுவும் இல்லாமல் செய்தார் ஸ்வாமி. சில சமயங்களில் சில முக்கியமான விஷயங்களைப் பற்றிய காட்சிகளை இவருக்கு அளித்தார் ஸ்வாமி.

ஒருநாள் ரோசிரெட்டியின் வீட்டில் அவர்கள் புயலிலும் மழையிலும் அவதிப்பட்டுக் கொண்டு எள் மகசூல் செய்வதும், பணத் தேவையினால் பிஞ்சுகளாக இருந்த எலுமிச்சங்காய்களைப் பறித்துக் குவித்துள்ளதும் ஸ்வாமி சந்நிதியிலிருந்த ரோசிரெட்டிக்குக் காட்சியளித்தது. மூன்றாவது நாள் அவரது மகள் வந்தபோது அவருக்கு ஏற்பட்ட காட்சிகள் நடந்த உண்மையே என்பது தெரிய வந்தது.

ஸ்ரீபரத்வாஜ மாஸ்டரை எல்லோரும் கடவுள் என்றும் குரு என்றும் பூஜிப்பதைப் பார்த்து அவரது உண்மைநிலை என்ன என்று அறியாமல் குழம்பிய ரோசிரெட்டிக்கு ஒரு காட்சி ஏற்பட்டது. மாஸ்டர் அவர்கள் ஒரு பாலைவனத்தில் நின்று கொண்டிருக்கிறார். திடீரென்று அவர் சங்கு சக்கரங்கள் தரித்த மஹாவிஷ்ணுவாக மாறிவிட்டார். அவரது பாதங்களைச் சுற்றிலும் நல்ல பச்சைப் பசும் புல் உள்ளது. ரோசிரெட்டி எருமைக்கடாவாக மாறி அந்தப் புல்லை மேய்வதுபோலக் காட்சி ஏற்பட்டது. இவ்வாறே வேறு ஒரு மனிதரைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கையில் அந்த ஆள் பூட்டு, சாவிகளை ரிப்பேர் செய்வது போலக் காட்சி அளித்தார். அதாவது அந்த மனிதர் எல்லோருடைய குறைகளையும் நீக்கவல்ல சாமர்த்தியசாலி என்று ஸ்வாமி அவருக்குத் தெளிவுறுத்தினார்.

ஒரு நாள் ரோசிரெட்டியின் மகனும், மருமகனும், ரோசிரெட்டியை வீட்டுக்கு அழைத்துச் சென்று பத்து நாட்கள் வைத்துக் கொள்ள வேண்டுமென்று ஸ்வாமியின் ஆசிரமத்துக்குப் புறப்பட்டார்கள். அதே சமயத்தில் நெல்லூரில் ஸ்வாமியோடு இருந்த ரோசிரெட்டியிடம் ஸ்வாமி ''வழியைப் பற்றிக் கொண்டு நேராகப் போ'' என்று கூறினார். அப்போது, பார்வை சரியாகத் தெரியாத காரணத்தால் தனியாக எங்கும் போக இயலாத ரோசிரெட்டி, குருவின் ஆணையைச் சிரமேற்கொண்டு, எட்டு கிலோ மீட்டர் தூரம் நடந்து நெல்லூரிலிருந்து கொலகமூடிக்குப் போய்ச் சேர்ந்தார். அவரது மகனும் மருமகனும் பஸ்ஸில் சென்றதால் முன்னதாகவே ஆசிரமத்தை அடைந்தபோது அங்கு ரோசிரெட்டி இல்லாததால் அவரைத் தேடிக் கண்டுபிடிப்பது கஷ்டம் என்று நினைத்துத் திரும்பிப் போய்விட்டனர். தம் உறவினர்களின் சொற்களில் மயங்கி வீட்டுக்குச் சென்று பத்த பாசங்களில் உழலாமல் குருசேவையில் காலத்தைக் கழிப்பதையே நேராகப் பாதையைப் பார்த்து நட என்று ஸ்வாமி குறிப்பிட்டார். மற்றொரு சமயத்தில் ஒரு பக்தர் ''ஸ்வாமி நாங்கள் உய்வடைவது எப்படி?'' என்று கேட்டபோது கூட ''அதற்கென்ன? நேராக என் வழியைப் பார்த்துக் கொண்டு போக வேண்டியதே ஐயா'' என்றார்.

ரோசிரெட்டி மிகவும் சிரத்தையோடும் நம்பிக்கையோடும் குருவின் சொற்களின் படி நடந்து கொண்டு குருசேவையே தமது லக்ஷியமாகக் கொண்டு வாழ்ந்ததாலேயே அவரது இறுதிக் காலத்தில் நோயுற்றுப் பிறரது சேவையை எதிர்பார்க்கும் அவசியம் இல்லாமல் செய்தார் ஸ்வாமி. அவர் மரணமடைந்தபோது அவரது முகத்திலிருந்த களையும் உடலின் தேஜஸும் அவர் நிச்சயமாக முக்தியை அடைந்தா ரென்பதைக் காட்டின. குருசேவையின் மகிமை அத்தகையது!

ஒருநாள் ஸ்வாமி ''உடனே நாம் இடம் மாறவேண்டும் புறப் படுங்கள்'' என்றார். சேவகர்கள் ''இப்போது வேண்டாம்; மாலையிலோ அல்லது சாப்பிட்ட பிறகோ போகலாம்'' என்று கூறிவிட்டு தலா ஒரு வழியில் போய்விட்டனர். ஸ்வாமியின் அருகிலிருந்து நாகய்யா, ''இவர்கள் ஸ்வாமியிடம் வந்தது எதற்காக? ஸ்வாமி கூறியபடி கேட்க மாட்டார்கள். அவர்கள் ஒவ்வொருவர் ஒவ்வொரு திசையில் போகும் போது ஸ்வாமி அவர்களை ஒன்றும் அதட்டிக் கேட்பதில்லை. இது என்னய்யா'' என்று நினைத்துக் கொண்டார். ''இவ்வாறு செய்யுங்கள்'' என்று மஹான்கள் தம் அபிப்பிராயத்தைக் கூறுவார்களே தவிர அவர் களை பலவந்தம் செய்ய மாட்டார்கள். கேட்காவிடில் நமது கர்மத்தை அநுபவிக்கும்படி விட்டுவிடுவார்கள். நாம் தவறுகள் செய்து ''ஸ்வாமி பார்த்துக் கொள்வார்'' என்று நினைப்பது அறிவீனம். உண்மையில் எல்லாவற்றையும் அவரே பார்த்துக் கொள்வார். ஒருவர் செய்வதைப் பொறுத்து பட்சபாதமின்றி நன்மைக்கு நன்மையும் தீமைக்குத் தீமையும் அளித்தருள்வார்.

நெல்லூர் வாசியான தாள்ளூரி ஸ்ரீநிவாஸுலு,ஸ்வாமி மஹா சமாதி அடைந்த போது மௌனம் வாசிப்பதற்காக இருபத்தைந்து ரூபாய் கள் கொடுப்பதாகப் பேசிக் கொண்டு ஆட்டோரிக்ஷாவில் கொலக மூடிக்கு வந்தார். ஆட்டோக்காரர் ஆசிரமத்தாரிடமிருந்து ஐந்து ரூபாய்கள் அதிகமாகப் பெற்றுக் கொண்ட விஷயம் ஸ்ரீநிவாஸுலுவுக்குத் தெரிந்தது. திரும்பிப்போகும்போது ஆட்டோரிக்ஷா ஒரு பர்லாங் தூரம் ஓடியபின் எவ்விதக் காரணமுமின்றி நின்று விட்டது. எவ்வளவு முயன்றாலும் அது நகரவில்லை. அப்போது ஸ்ரீநிவாஸுலு ''நீ பொய் கூறி ஸ்வாமியின் பணம் ஐந்து ரூபாய்கள் அதிகமாக வாங்கிக் கொண்டதால்தான் இவ்வாறு நேர்ந்தது. இனி இவ்வாறு செய்ய மாட்டேன் என்று கன்னத்தில் போட்டுக் கொண்டால் ஆட்டோ நகரும்'' என்றார். ஆட்டோக்காரர் கன்னத்தில் போட்டுக் கொண்ட மறுகணமே ஆட்டோ ஓட ஆரம்பித்தது.

ஸ்வாமி தமது நெருங்கிய சேவகர்களையும், சிரத்தை மிகுந்த பக்தர்களையும் கூடியவரை வெறும் லௌகிகத்தில் உழலும் மக்களுடன்

சேரக்கூடாது என்று குறிப்பாக எச்சரிப்பார். ஒரு பக்தர் சிலகாலம் மிகவும் நெருக்கமாக அவருக்குச் சேவை செய்தபின், அதிகமான நெருக்கத்தால் அவரிடமுள்ள பிரத்தை குறைந்து அடிக்கடி பாமர ஜனங்களோடு கலந்து சுற்ற ஆரம்பித்தார். அதற்கு முன் அவர் நிவேதனம் செய்தால் தவிர உணவு கொள்ளாத ஸ்வாமி, பின்னர் அவர் அளித்ததை ஏற்றுக் கொள்ளாமல் ''அவர் மனிதர்களிடையே சேர்ந்து விட்டார் ஐயா. அவர் வேண்டாம்; நீ சாதம்போடு'' என்று மற்றொரு சேவகரைக் கேட்டுக் கொண்டார். அவரது நெருங்கிய சேவகரான குரவையா, எப்போதாவது அவரது சந்நிதியை விட்டுத் தூரமாகப் போனால் ஸ்வாமி ''நீயும் மனிதர்களிடையே போகிறாயா'' என்று கண்டிப்பார்.

அதாவது மனிதர்களின் சகவாசம் முமுகூக்களுக்குத் தகாது என்பது அவரது எச்சரிக்கை. மனிதன் ஆறுவைரிகளையுடையவனும் விஷயவாசனைகள் உடையவனுமாயிருப்பதால் அவன் பரமலௌகிகன் என்பது ஸ்வாமியின் கருத்து.

மற்றவர்களைக் குறித்துப் பழித்துப் பேசுதல், அரசியலைக் குறித்து விவாதித்தல், எப்போதோ எங்கோ நடந்த விஷயங்களைப் பற்றி நினைத்துக் கொண்டிருத்தல் முதலியவை நம்மிடம் சேர்ந்துள்ள மாசே. அந்த அழுக்கு ஏற்பட்டபின் எவ்வளவு முறை குளித்தாலும் அது நம்மை விட்டு நீங்காது என்று ஸ்வாமி தம் நடத்தையால் நமக்கு போதித்தார்.

மேப்பூர் தசய்யா ஒரு முறை ''ஸ்வாமி நீங்கள் மலைகளிலும் காடுகளிலும், சுற்றிக் கொண்டிருக்கிறீர்கள். உங்களைத் தரிசிக்க முடிவ தில்லை. என்ன செய்வது ஸ்வாமி?'' என்று கேட்டபோது ''அதற் கென்ன ஐயா, மலைமீதுஏறி உச்சியின் மீது கண்ணாடியை வைத்து நேராகப் பார்த்தால் உனக்கும் எனக்குமுள்ள தூரம் நான்கு விரற்கடை தானே ஐயா?'' என்றார்.

மலை என்றால் உடலின் மேல் பாகமான மூளை. உலக விவகாரங்களில் உழலும் மனதை, சற்று நேரம் அவற்றுக்கு அப்பா லுள்ள நிலையில் கண்ணாடியைப் போல் தூய்மையாகவும் சஞ்சல மில்லாமலும் நிறுத்தினால், ஸ்வாமி எங்கிருந்தாலும் நம் மனக் கண்ணால் அவரைப் பார்க்க முடியும் என்பதே ஸ்வாமியின் கருத்து.

மற்றொரு சமயம் ''நீங்கள் என்னைப் பார்த்தால் நான் உங்களைப் பார்க்கிறேன் ஐயா'' என்றார் ஸ்வாமி. பக்தர்கள் எவ்வளவு பக்தி சிரத்தையுடன் ஸத்குருவை நினைக்கிறார்களோ அதற்குத் தக்கபடி ஸத்குருவின் அருள்நோக்கு அவர்களுக்குக் கிடைக்கிறது. இதனைக்

குறித்தே ஸ்ரீஷீரடி சாயிபாபா கூட 'நீ என்னை நோக்கினால் நான் உன்னை நோக்குவேன்'' என்றார். மற்றொரு சந்தர்ப்பத்தில் தமது சேவகர்களைக் குறித்து ''நீங்கள் பறையர்கள், நான் சக்கிலியன்'' என்றார். ஸ்ரீ அக்கல்கோட் ஸ்வாமி தாம் காஸ்யபச கோத்திரத்தைச் சேர்ந்த யஜுர்வேத பிராம்மணரென்று ஒருவரிடமும், தாம் சக்கிலியர் என்றும் தம் தொழில் செருப்புத் தைப்பதே என்றும் மற்றொருவரிடம் கூறியதாக அவரது சரித்திரத்தில் பார்க்கிறோம். இன்று மக்கள் கண் மூடித்தனமாகப் பின்பற்றும் ஜாதி அமைப்புகள் எத்தகைய அர்த்த மற்றவை என்று தெளிவு செய்தலே மஹான்களின் நோக்கம் ஆகும்.

குருவின் சொற்களின்படி நடவாமல், சரியாக சாதனை செய்யாமல் தமக்குள் சண்டை சச்சரவுகளில் ஈடுபடும் சேவகர்களைக் குறித்து ''துரதிருஷ்டசாலிகளாக, விதவைகளாக, ஆண்மையற்றவர் களாக உள்ளார்கள். எல்லா விதத்திலும் கடன்பட்டுக் கொண்டிருக் கிறார்கள். ஒரு அரையணா ஆவது சம்பாதித்திருக்கிறார்களா?'' என்றார். சகல சிருஷ்டிக்கும் ஒவ்வொரு ஜீவனுக்கும் ஆதாரமான ஸத்குருவை மறந்து மற்ற உணர்ச்சிகளுக்கு அடிமையாவதை பதிவிரதா தர்மத்திலிருந்து பிறழ்வதாக ஸ்வாமி குறிப்பிடுவார்.

ஒரு நாள் திருட்டைப் பற்றிப் பேச்சு எழுந்தபோது ஸ்வாமி ''நாலணாவுக்குப் பத்து ரூபாய்கள் போகும்'' என்றார். அதாவது ஒன்றுக்கு நாற்பது மடங்கு நஷ்டம் ஏற்படும். அதேபோல் தெய்வத்துக்குப் பக்தியோடு சமர்ப்பிக்கும் நாலணாவுக்கு நமக்கு எவ்வளவு மடங்கு நன்மை ஏற்படும் என்பதையும் நாம் இதிலிருந்து ஊகிக்கலாம். ஸ்வாமிக்காக நாம் செய்த ஒரு சிறு சேவைக்குக் கூட பெரும் புண்ணியப் பயனை ஸ்வாமி நமக்கு அருளுகிறார் என்பதைக் கீழ்க்காணும் நிகழ்ச்சி காட்டுகிறது.

ஒரு குடியானவன் புதிதாக வாங்கிய எருதை வண்டி நுகத்தடியில் கட்ட முயன்ற போது அது மிரண்டு அங்குமிங்கும் நகர்ந்து அவனைத் தொல்லைப்படுத்தியது. அப்போது அவ்வழியாகப் போன ஸ்வாமி ''ஐயா, வண்டிகட்டி என்னை அந்த நதியைத் தாண்டி மறுபக்கத்தில் கொண்டு போய்விடு'' எனறார். ''ஸ்வாமி! இந்தக் காளை புதிது; மிரள்கிறது. வேறு காளை என்னிடம் இல்லையே'' என்றான் அவன். ''இது நன்றாகவே வண்டியிழுக்கும். கவலைப்படாதே; வண்டி கட்டு பார்க்கலாம்'' என்ற ஸ்வாமியின் மீது பாரத்தைப் போட்டுவிட்டு வண்டி கட்டினபோது, அந்தக்காளை முழங்கால் வரையுள்ள சகதியில் கூடக் கஷ்டப்படாமல் சுலபமாக வண்டியை இழுத்துச் சென்றதோடு மிகவும் பழக்கப்பட்ட காளையைப் போல உழவுப் பணிகளைக் கூடச் செய்தது.

ஸ்வாமிக்காகச் சிரமப்பட்டதற்குப் பயனாக குடியானவனுக்குச் சிரமமும் எருதிற்கு அடிகளும் தவிர்க்கப்பட்டன. அந்தச் சின்ன சேவை செய்ததற்காக ஸ்வாமி அவரை வாழ்நாள் முழுதும் காப்பாற்றினார்.

மந்திரோபதேசம் கேட்ட ஒரு பக்தரிடம் ஸ்வாமி ''மந்திரமாவது, தந்திரமாவது!' பார்த்துக் கொண்டே போக வேண்டியது தானே ஐயா'' என்றார். சாயிபாபா, ரமணமஹரிஷிபோன்ற பூரண ஞானிகளான ஸத்குருக்கள் மந்திரோபதேசம் செய்யவில்லை. நிரந்தரமான ஸத்குரு பக்தியே எல்லா சாதனைகளையும் கடந்த சிறந்த சாதனையாகும்.

ஸ்வாமி குரவய்யாவிடம் ஒருநாள் ''எல்லாவற்றையும் சமதிருஷ்டியோடு பார்த்தால் கடவுள் ஆகிவிடுவாய்'' என்றார். ஒரு நாள் ரோசிரெட்டியிடம் ''மனதைத் தூய்மையாக்கிக் கொண்டால் இரண்டு அக்ஷரங்களே போதுமய்யா'' என்றார். அதாவது நம்மிடமுள்ள விருப்பு, வெறுப்புக்கள், ராஜஸ, தாமஸ குணங்களை சாதனையால் வேரறுத்து தெய்வீக குணங்களை வளர்த்துக் கொண்டால் எந்த நாமத்தினாலும் உய்வடைய முடியும் என்பது ஸ்வாமியின் கருத்து.

ஸ்வாமி சமாதி அடைவதற்கு ஒரு நாள் முன்பு ஸம்பன்னத்வம், ஸாதாரணத்வம், ஸத்குரு சேவை'' என்று நாள் முழுவதும் கத்திக் கொண்டே இருந்தார். எனவே இதுவே அவரது இறுதி உபதேசமென்று நாம் உணர வேண்டும்.

ஒரு சமயம் ஸ்வாமி ''ஐயா, நாம் காணும் இவையெல்லாம் உண்மை என்று எண்ணுகிறீர்களா?'' என்றார். நாம ரூபங்கள் போன்ற வித்தியாசங்களை விட்டுவிட்டு எல்லாவற்றிலும் உறையும் இறைவனையே எப்போதும் நினைத்திருக்க வேண்டுமென்பது ஸ்வாமியின் கருத்து.

நெல்லூரைச் சேர்ந்த ரெட்டியார் ஒருவர் நோய்வாய்ப்பட்டு எவ்வளவோ வைத்தியத்துக்காகச் செலவழித்தும் நோய் குணமாகாமல் ஸ்வாமியிடம் வந்தார். ஸ்வாமி ஏதும் பேசவில்லை. அவர் சேவகர் களிடம் 'என் நோயைக் குணப்படுத்தினால் நிறையப் பணம் கொடுப் பேன்'' என்றார். ஸ்வாமி ''அவர் என்ன சொல்கிறார்? எல்லோருக்கும் நாம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அவர் என்ன நமக்குக் கொடுப்பது?'' என்றார். உண்மையில் எல்லோருக்கும் எல்லாம் கொடுப்பது இறைவனே அல்லவா?

ஒரு முறை ஸ்வாமி ''ஆறு கலப்பைகளுள்ள ஏர்பூட்டி நானும் ஜயராமராஜுவும் உழுதோம். அவரது ஏர் உதயகிரியில் மோதி நின்று விட்டது. எனது ஏர் மாத்திரம் நிற்காமல் தொடர்ந்து உழுதது. வடக்குப்புற சமுத்திரத்தின் நீர் தென்புற சமுத்திரத்துக்குப் பாய்ந்தது''

என்றார். ஆறு கலப்பைகளுள்ள ஏர் என்றால் ஆறு வைரிகளை அடக்கும் சாதனை. சமுத்திரங்கள் ஒன்றாவது என்பது எல்லாம் பரப்ரம்மமே என்ற அநுபவத்தைக் குறிக்கும். ஜயராமராஜு தன் சாதனையை நிறுத்தி விட்டு உலக வாழ்வில் சிக்கிக் கொண்டதையே அவரது ஏர் நின்றுவிட்டது என்பது குறிக்கிறது.

ஸ்வாமி பக்திரத்தை உள்ளவர்கள், இல்லாதவர்கள் என்ற வித்தியாசத்தைக் கவனித்தாரே தவிர ஏழை, செல்வந்தர் என்ற பாகுபாடு காட்டியதே இல்லை. பக்தியுள்ளவர்கள் மிக ஏழையானாலும் தம்மை அழைக்காவிட்டாலும் கூட அவர்களிடம் போவார். செல்வத்தினால் கர்வப்படுபவர்கள் எவ்வளவு பணம் கொடுப்பதாகக் கூறினாலும் ஸ்வாமி அவர்களிடம் போக மாட்டார்.

ஸ்வாமி தமக்கு சேவை செய்பவர்களிடம் நீய எண்ணங்கள், உலக நினைவுகள், புறங்கூறுதல், கோபம் முதலியவை ஏற்பட்டால் அவரகளது சேவையை ஏற்றுக் கொள்ளாமல் வேறு ஒருவரின் மூலம் தன் பணிகளை நிறைவேற்றிக் கொள்வார். இனமும் ஸ்வாமிக்குக் கஞ்சி ஊற்றிக் கொடுக்கும் பக்தர், நதிக்குக் குளிக்கப் போனபோது பிறர் பேசிக் கொண்ட பரதூஷணையைக் கேட்டுவிட்டு வந்தார். ஸ்வாமிக்குக் கஞ்சி ஊற்றப் போனபோது ''பரநிந்தனையைக் கேட்டுவிட்டு வந்திருக் கிறாய். நீ கஞ்சி ஊற்ற வேண்டாம்'' என்று நிராகரித்தார். இதிலிருந்து ஸ்வாமியின் சமாதியைத் தரிசிப்பதற்காக வரும் பக்தர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

1975-ஆம் ஆண்டு வரை பக்தர்கள் அளிக்கும் புதுத்துணிகளை ஸ்வாமி ஏற்றுக் கொள்ளவில்லை. பழந்துணிகளையும் பழைய துப்பட்டிகளையும் மட்டுமே ஏற்றுக் கொள்வார். தம் சேவகர்கள் கூடப் புதுத்துணிகளைப் பெற்றுக் கொள்வதற்கு அவர் ஒப்புக் கொள்ள மாட்டார்.

ஒரு முறை ஒரு செல்வந்தர் விலையுயர்ந்த துப்பட்டி ஒன்றைப் பலவந்தமாக ஸ்வாமியின் அருகில் வைத்துவிட்டுப் போனார். ஸ்வாமியின் சேவகர்கள் அதனை எடுத்துக் கொண்டனர். சித்தலய்ய மலை அருகில் ஸ்வாமி ஏதுமறியாதவர்போல் ''ஐயா, ஒரு புதுத்துப்பட்டி வேண்டும்'' என்று கேட்டார். சேவகர்கள் அந்தப் புதுத் துப்பட்டியைக் கொடுத்தனர். அதனை ஜாண் அகலமுள்ள பல துண்டுகளாகச் செய்த பின்னர் ''ஐயா இந்தத் துண்டுகளை நோயுற்றவர்களுக்குக் கொடுங்கள்; அவர்களது நோய் குணமாகும்'' என்றார்.

கோணிப்பைகள், பனைஓலைத் தொன்னைகள், பனை ஓலையா லான சதுரப்பாய்கள், மண்பாத்திரங்கள், அலுமினியத் தவலைகள்,

முதலியவற்றையே அவர் உபயோகித்தார். விலையுயர்ந்த பொருட்களைத் தம்மிடம் வைத்துக் கொள்ள மாட்டார். ஒரு முறை ஒரு பணக்காரர் விலையுயர்ந்த, பிரயாணத்துக்கு எடுத்துச் செல்லும் பை ஒன்றை, வேண்டாமென்றாலும் கேட்காமல் ஸ்வாமியின் அருகில் வைத்துவிட்டுப் போனார். அதற்குள் தம் துணிகளை வைத்துக் கொண்டனர் சேவகர்கள். இரவில் எல்லோரும் உறங்கிய பின்னர் ஸ்வாமி அந்தப் பையை எடுத்துத் துளியில் போட்டுவிட்டார்.

ஒரு முறை பெரும் மழை பெய்தபோது ஸ்வாமி மரத்தடியில் அமர்ந்து தம் துளியை அணையாமல் காத்துக் கொண்டிருந்தார். மரத்தின் இலைகளிலிருந்து இழே சொட்டும் நீர் நெருப்பை அணைக்க முயன்றது. மற்றொரு புறத்திலிருந்து சிறு சிறு சுள்ளிகளையும் உலர்ந்த குப்பைகளையும் போட்டு ஸ்வாமி நெயை எரியவிட்டுக் கொண்டிருந்தார். அவர்படும் கஷ்டத்தைப் பார்த்த பக்தர்கள் ''ஸ்வாமி, இந்தச் சிரமம் எதற்கு? கோவிலின் முன்பக்க வராந்தாவில் துளியை வைத்துக் கொள்ளலாமே'' என்றனர். ஸ்வாமி ''ஐயா, ஓட்டைவிழும் இல்லையா'' என்று சுருக்கமாகப் பதிலளித்தார். பக்தர்களுக்கு அவற்றின் பொருள் விளங்கவில்லை. இந்தச் சிரமத்துக்குப் பயந்து தாம் அக்னி வளர்க்கும் நியமத்தை விட்டு விட்டால் தமது சுவதர்மம் என்ற கோவிலின் மேற்கூரையில் ஓட்டை விழுந்தது போல் ஆகும்; எப்போதும் எரியும் அக்னியைப் போன்ற தமது தர்மநிஷ்டை மழையினால் அணையும் நெருப்பைப் போல, அணைந்தது போல் ஆகும் என்பது அவரது சுருத்து. மற்றொரு விதமாகவும் பொருள் கொள்ளலாம். அந்தக் குறிப்பிட்ட சமயத்தில் மழைத்துளிகளால் தமது அக்னிக்கு சோதனை ஏற்படுவதே தெய்வ நிர்ணயமாயிருக்கும் பக்ஷத்தில், ஆலயத்தின் முன்புற வராந்தாவிற்கு அக்னியை மாற்றினாலும் மேற்கூரையில் ஓட்டை விழுந்தாவது அவ்வாறு நடந்தே தீரும் என்றும் கொள்ளலாம். நாம் மேற்கொண்ட பணியில் ஈடுபாடு எவ்வாறு இருக்க வேண்டும் என்பதையும், தெய்வ நிர்ணயத்தைப் பற்றி நமக்கு எத்தகைய நம்பிக்கை இருக்க வேண்டும் என்பதையும் ஸ்வாமி இந்நிகழ்ச்சியினால் நமக்குத் தெளிவுறுத்தினார்.

ஒரு முறை ஸ்வாமியும் பக்தர்களும் நடந்து வந்து கொண்டிருக்கும்போது ''எல்லோரும் திருட்டுச் சாதுக்கள், வயிற்றுப் பிழைப்புச் சாமியார்கள்'' என்று சிலர் இழித்துப் பேசினர். ஒரு பக்தர் அவ்வாறு பேசியவர்களில் முக்கியமானவரோடு கைகலக்கப் போனார். ஸ்வாமி அவரைத் தடுத்து ''என்னய்யா இது! அவர்கள் கூறும்போது பொறுத்துக் கொண்டால் தானே ஐயா நாம் உண்மையான சாதுக்கள் ஆவோம்?'' என்று கூறி ''உனக்குப் பொறுமை இல்லை. எனவே நீ உண்மையில் திருட்டுச் சாதுதான்'' என்று பரிவாக அவருக்குப் போதித்தார். இது அவர் நம் அனைவருக்கும் கூட போதித்த பாடமே ஆகும்.

ஒருநாள் ஸ்வாமி லந்நிதியிலிருந்த ரமணய்யா அங்கிருந்த மஸ்தானய்யாவை ''டேய் மஸ்தானய்யா இங்கே வா'' என்று கூப்பிட்டார். அவர் பதிலளிக்கவில்லை. ரமணய்யா மீண்டும் மீண்டும் அவ்வாறே அழைத்தார். தன்னை 'டேய்' என்று ஏகவசனத்தில் அழைத்ததற்காக மஸ்தானய்யா வருந்தி தன் மனதில் ''நீ ஆசிரமத்தை விட்டு வெளியே வா, உன்னைக் கவனித்துக் கொள்கிறேன்'' என்று எண்ணிக் கொண்டார். உடனே ஸ்வாமி ''ஐயா, டேய் என்றது யார்? அவனுக்குப் பாவக் கணக்கில் முன்னூறு எழுதியுள்ளார்கள்'' என்றார். உடனே ரமணய்யா ''அந்தக் கணக்கு எப்படித் தீரும்?'' என்றபோது ''அநுபவித்தால் தீரும்'' என்றார் ஸ்வாமி. ''என்னை அவமரியாதையாகப் பேசினதற்கு நன்றாக அநுபவிப்பான்'' என்று மஸ்தானய்யா மனச் சமாதானமடைந்தார்.

நாம் சின்னச் சின்னத் தவறுகள் என்று நினைப்பது உண்மையில் சின்னவை ஒன்றும் அல்ல. வைக்கோல் மிகவும் பலவீனமானதுதான். அவற்றைக் கயிறாகத் திரிக்கும்போது அந்தக் கயிறு மதயானைகளைக் கூடக் கட்ட உதவுகிறது. அவ்வாறே நாம் செய்யும் செயல்கள் தனை கனை ஏற்படுத்துகின்றன. ஷீரடிசாயிபாபா கூட, நம்மைச் சேர்ந்தவர் களைப் பழித்துப் பேசுவது, பன்றி மலத்தைத் தின்பதற்கு நிகர் என்று கூறினார். 'புத்தியற்றவனே' என்று பிறரைக் கூறினால் கூட நரகத்துக்குப் போக வேண்டும் என்று இறிஸ்து கூறினார். எனவே நாம் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். இதையே வாக்கு நியமம் என்று ரிஷிகள் கூறினர். சாயியின் காலத்தைச் சேர்ந்த தாஜுத்தீன் பாபா என்ற மஹான் ''காபாவை எரித்தாலும், குரானை எரித்தாலும், மது அருந்தினாலும் விக்ரக ஆராதனை நடக்கும் கோயிலில் வசித்தாலும் கூடப் பரவாயில்லை; ஆனால் மனிதனின் இதயத்தை மட்டும் ஒருபோதும் புண்படுத்தாதே; இறைவனின் நிலையமான ஏழாவது சொர்க்கம் மனித இருதயத்தில் மறைந்துள்ளது'' என்றார்.

ஒரு முறை ஸ்வாமிக்கு பேதி ஏற்பட்டு பதினைந்து நாட்களாகியும் குணமடையவில்லை. பலவீனமாக இருந்த அவரிடம் ''மருந்து சாப்பிடுங்கள் ஸ்வாமி'' என்ற சேவகர்களிடம் ''இறைவன் கொடுத்ததை அநுபவிக்க வேண்டாமா ஐயா?'' என்றார்.

கத்திக் கொண்டே இருக்கும் காகத்தைக் கல்லால் அடித்து விரட்டுவதை ஸ்வாமி ஒத்துக் கொள்ள மாட்டார்; நாய்களை அடிப்பதையும் அவர் அநுமதிக்க மாட்டார் என்று குரவைய்யா கூறினார்.

ஒரு முறை ஸ்வாமி ரோசிரெட்டியிடம் ''கஷ்டம் என்றால் என்ன, சுகம் என்றால் என்ன என்று எனக்குத் தெரியாது ஐயா'' என்றார். சாதனை செய்தால் கடவுளின் அருள் எவ்வாறு கிடைக்கிறது என்று கேட்ட பக்தரிடம் ''ஐயா, மேல்மாடி என்று எண்ணிக் கொண்டால்

நன்றாயிருக்கும்'' என்றார். அமரநாராயண சதகம் என்ற நூலில் ஆத்மீக வாழ்வில் தெய்வீக குணங்களை வளர்த்துக் கொள்வதை மேல்மாடி கட்டுவதற்கு ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது. மற்றொரு பக்தர் ''ஸ்வாமி, எந்த இடத்தில் இருந்து கொண்டு நான் சாதனை செய்வது?'' என்று கேட்ட போது ''ஒரே ஒரு தூண் உள்ள வீட்டைக் கட்டிக் கொண்டு எங்கு வேண்டுமானாலும் இருக்கலாம்'' என்றார். எந்த ஊரில், எந்த ஆசிரமத்தில் இருக்க வேண்டும் என்று திரும்பத் திரும்பக் கேட்ட போதும் மேற்கூறிய மொழியையே கூறினார். வீடு என்றால் நம் உடல், இதற்கு ஆதாரமான ஒரு தூண் என்பது தெய்வம். ஒன்றை மட்டுமே சரணடைந்து வாழ்தல். மனிதர்கள் பணம், பொருட்கள், வாகனங்கள் ஆகியவையே தமது வாழ்க்கைக்கு ஆதாரமென்று நினைக்கிறார்கள். உண்மையில் அவை நிலையற்றவை. கடவுளையே ஆதாரமாகக் கொண்டு கடவுளை அடைவதையே லட்சியமாகக் கொண்டு வாழ்ந்தால் எந்த இடத்தில் இருந்தும் சாதனை செய்து கொள்ளலாம்.

தம்மிடமுள்ள ஆத்மீகச் செல்வத்தைக் குறித்து ஸ்வாமி ''மலைமலையாகச் செல்வம் இருந்தாலும், ஒருவர்கூடக் கேட்பதில்லை ஐயா? மலைகள் புரண்டு நழுவி வருகின்றன ஐயா'' என்றார். மற்றொரு முறை ஸ்வாமி ''ஏழுமலைகள் ஏலத்துக்கு வந்துள்ளன. ஏலம் கேட்டு வாங்குபவர்கள் வாங்கிக் கொள்ளலாம் ஐயா'' என்றார். மீண்டும் ''கருத்த மலைகள் ஏலத்துக்கு வந்துள்ளன. வாங்குபவரே இல்லையே'' என்றார். சாயிநாதர் ''ஞானமாகிய செல்வம் குவியல்குவியலாக இருந்தாலும் கேட்பவர் இல்லையே'' என்று கூறியதை ஒத்துள்ளன ஸ்வாமியின் மொழிகள்.

''தெற்கு மலை மிதந்து வந்துள்ளது. வாங்குபவர்கள் எவராவது இருந்தால் வாங்கும்படி எல்லோருக்கும் கூறய்யா'' என்றார்.

ஒரு சமயம் ஸ்வாமி ''பிராமணர்களில் சக்கிலி சாதியினர் உள்ளனர்; சக்கிலியரில் பிராம்மணர்கள் இருக்கின்றனர். வைசியர்களில் கம்மஜாதியினர் உள்ளார். கம்மசாதியில் வைசியர்கள் உள்ளனர். யாதவர்களில் பறையர்களும் பறையர்களில் யாதவர்களும் இருக்கிறார்கள். உலகம் முழுதும் இவ்விதமாகவே உள்ளது ஐயா'' என்றார்.

மற்றொரு நாள் ஸ்வாமி ''லாபத்தில் பங்கு பெற்றால் பாவத்தில் கூடப் பங்கு வரும்'' என்றார். ஒரு பக்தர் ''ஸ்வாமி, மனிதன் இறந்த பிறகு மீண்டும் பிறப்பானா? மனிதனாகவே பிறப்பானா அல்லது மிருகமாகவோ பறவையாகவோ பிறப்பானா?'' என்று கேட்க, ஸ்வாமி 'மனிதனாக இறந்தால் மனிதனாகவே வருவானய்யா' என்றார். அதாவது மனிதத்தன்மையோடு வாழ்ந்தவன் மனிதனாகப் பிறப்பான். அவ்வாறின்றி புலன்களின் வசப்பட்டு மிருகத்தனமான வாழ்க்கை நடத்தினால்

தாழ்ந்த பிறவி ஏற்படுமாதலால் மனிதப் பிறவியின் பயனை அடையுமாறு வாழவேண்டுமென்று ஸ்வாமி தெளிவுறுத்தினார்.

மறுபிறவி உள்ளதென்று கூறியதைப் போலவே, பல பக்தர்கள் முற்பிறவிகளில் எங்கெங்கு பிறந்தார்கள், என்னென்ன செய்தார்கள் என்பதைப் பற்றியும் கூட ஸ்வாமி கூறுவார். மறுபிறவி எப்படி ஏற்படும் என்பதற்கு மற்றொரு முறை ஸ்வாமி ''எவர் எந்த விஷயத்தில் நாட்டம் கொண்டு உழல்கிறார்களோ இறக்கும் தருணத்தில் அதையே நினைந்து இறந்த பின் அதற்கே திரும்புகிறார்கள்'' என்றார். இறுதிக்காலத்தில் எதை நினைந்துக் கொண்டு உயிரை விடுகிறோமோ அதன்படியே பிறக்கிறோம் என்று கூறப்பட்ட உண்மைக்கு ஸ்வாமியின் விளக்கமே இது.

ஒரு பக்தர் முக்தியடையும் வழியைப் போதிக்கும்படிக் கேட்டபோது ஸ்வாமி ''ஐயா அவரை மூன்று லட்சங்கள் கட்டச் சொல்'' என்றார். 'அவ்வளவு பணம் இல்லையே ஸ்வாமி' என்றால், ''ஆறு லட்சங்கள் கட்டச் சொல்'' என்றார். 'பணமே இல்லை ஸ்வாமி' என்றபோது ''எட்டு லட்சங்களாவது கட்டச் சொல்'' என்றார். மூன்று லட்சங்கள் என்று மூன்று வித ஆசைகளையும் (பணம், மனைவி, மகன் மீதுள்ள பாசம்) ஆறு லட்சங்கள் என்று ஆறு வைரிகளையும் (காம, க்ரோத, லோப, மோஹ, மத, மாச்சர்யம்) எட்டு லட்சங்கள் என்று எட்டுவித கர்வங்களையும் குறிப்பிட்டு அவற்றை விட்டுவிடும்படிக் கூறினார் ஸ்வாமி. ஸ்வாமிக்கு எவ்வித ஆத்மீக சாஸ்திரங்களும் தெரியாது என்று எப்படிக் கூறமுடியும்?

ஒரு முறை ஒரு திருட்டுக் குற்றத்தைப் பற்றிய விசாரணையில் ஸ்வாமியைச் சந்தேகித்து கலுவாய் காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்று அங்கு ஒரு அறையில் பூட்டி வைத்தனர். அந்தக் கிராம மக்களுக்கு அவ்விஷயம் தெரிந்ததும் அவர்கள் சப்இன்ஸ்பெக்டரிடம் ஸ்வாமியைப் பற்றிக் கூறி அவரை விடுவிக்கும்படிக் கேட்டனர். அவர் ஸ்வாமியிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு அவரை விடுவித்தார். ஸ்வாமி, கிராம மக்களிடம் ''ஐயா, இங்கே கூட எனக்கு மிகவும் நன்றாகவே உள்ளது ஐயா'' என்று கூறி இன்னும் அங்கே அரைமணி நேரம் இருக்க வேண்டும் என்று கூறி மேலும் சிறிது நேரம் இருந்துவிட்டு வந்தார்!

ஒரு பக்தர் ஸ்வாமியிடம் ''ஸ்வாமி! மழைக்காலத்தில் சோளம் பயிர் செய்கிறேன்'' என்றார். ஸ்வாமி ''ஊரிலுள்ள சோளமெல்லாம் உன்னுடையதே ஐயா!'' என்று பதிலளித்தார். அதைக் கேட்ட அந்த பக்தர் ''ஊரில் தனக்கு ஒருவனுக்கே சோளம் நன்றாக விளையப் போகிறது'' என்று எண்ணிச் சோளம் பயிரிட்டார். ஆனால் அவருக்கு

மட்டும் சோளம் விளையவே இல்லை. மற்றக் குடியானவர்கள் அனைவருக்கும் மிக நன்றாக விளைந்தது. எனவே அந்த ஆண்டு முழுதும் அந்த பக்தர் ஒருவர் மாற்றி ஒருவரைக் கேட்டுச் சோளம் கடன் வாங்கித் தம் வாழ்க்கையை நடத்த வேண்டி வந்தது. இவ்விதமாக ஊரிலுள்ள சோளமெல்லாம் அவருடையது ஆயிற்று.

நூதேடி ஸ்ரீராமுலுநாயுடு தமது எலுமிச்சைத் தோட்டத்திலுள்ள குடிசையில் ஸ்வாமியின் படத்தை வைத்துப் பூஜித்து வந்தார். ஒரு நாள் நிவேதனத்துக்காக எதுவும் இல்லாமல், ஒரு எலுமிச்சம்பழத்தை அறுத்து ஸ்வாமிக்கு நிவேதனம் செய்தார். ஆனால் அதைப் பிரசாதமாக அவர் தின்னவில்லை. அன்று மாலை அவருக்கு விட்டிலிருந்து சோளத்தை வறுத்துப் பொடித்து வெல்லம் கலந்த பேலபிண்டி கொண்டு வந்தனர். இரவு ஸ்வாமிக்கு அதை நிவேதனம் செய்தார். பூஜை முடிந்தபின் பிரசாதத்தை வாயில் போட்டுக் கொண்ட போது அது எலுமிச்சைச்சாறு போலவே மிகவும் புளிப்பாக இருப்பதை உணர்ந்து ஆச்சரியமடைந்தார். நிவேதனம் செய்யாமல் மீதி வைத்திருந்த பேலபிண்டியைச் சுவைத்தபோது அது இனிப்பாகவே இருந்தது. நாம் தின்ன முடியாத எலுமிச்சை முதலியவற்றை இறைவனுக்கு நிவேதனம் செய்யக் கூடாது. நாம் பிரியமுடன் தின்னக் கூடியவற்றையே ஸ்வாமிக்கு நிவேதனம் செய்ய வேண்டும் என்று ஸ்வாமி தனக்கு போதிக்கிறார் என்பதை அவர் உணர்ந்து கொண்டார். இது நம் அனைவருக்கும் கூட ஒரு சிறந்த பாடமே ஆகும்.

ஒருநாள் ஸ்ரீராமுலுநாயுடு தம் குடிசையைத் துப்புரவாக்கு வதற்காக கோமயத்தைத் தெளிக்கும்போது ஸ்வாமியின் படத்தின் மீது கூடப்பட்டது. அவ்வாறு படத்தின் மேல் பட்டால் நல்லதுதான் என்று துடைக்காமல் விட்டு விட்டார். அன்றிரவு அவர் அமர்ந்து கொண்டிருக்கும் போது அவர் மேல் ஏதோ நிரவம் விழுந்தது. பல்லியிடமிருந்து விழுந்திருக்குமோ என்ற மேலே பார்த்தால் பல்லி எதுவும் இல்லை. நிரவம் விழுந்த இடத்தை முகர்ந்து பார்த்தபோது அது கோமயத்தின் (பசுவின் சிறுநீர்) வாசனையாக இருந்தது. அவருக்கு அருவருப்பாக இருந்தது. தன்மீது எப்படி கோமயம் விழுந்தது என்று யோசிக்கையில் ''உன் மீது கோமயம் பட்டபோது அருவருப்பாக இருந்ததே; என்மீது பட்டபோது துடைக்காமல் விட்டாயே'' என்று ஸ்வாமி தமக்கு அறிவுறுத்தியதை உணர்ந்தார் ஸ்ரீராமுலு நாயுடு. தம் படத்துக்கும் தமக்கும் வேறுபாடு இல்லை என்பதையும் ஸ்வாமி உணர்த்தினார்.

21. ஸ்வாமியின் உபதேச மொழிகள்

1. 'நிரம்பிய வயிறோடு ஏப்பமிடுபவருக்கல்ல, பசியோடு யாசிப்பவர் களுக்கே உணவளிக்க வேண்டும் ஐயா.'

2. லெர் ஸ்வாமியை நினைத்த மாத்திரத்தில் அவர்களுக்கு ஸ்வாமி யின் பாதுகாப்புக் கிடைக்கிறது. வேறு சிலருக்குத் தாமதமாகிறதே. இது ஏன் என்று ஸ்வாமியைக் கேட்டபோது ''அவர்கள் இருப் பதைப் பொறுத்துத்தானே நாம் இருப்பது'' என்றார். அதாவது அவர்களது நம்பிக்கைக்கு ஏற்ப ஸ்வாமியின் அருள் கிடைக்கிறது.

3. 'முழுநம்பிக்கையோடு இங்கு வந்து எதை நினைத்தாலும் அது நிறைவேறும் ஐயா'.

4. ''எல்லா உயிர்களிலும் வெங்கையா இருக்கிறார் என்று எழுதிக் கொள்'' - இது ஒவ்வொருவரும் எப்போதும் நினைவில் வைக்க வேண்டிய விஷயம். எந்தப் பிராணியை ஆதரவோடு நடத்தினாலும் அல்லது துன்புறுத்தினாலும் அவை சத்குருவுக்கே செய்தது போலாகும் என்பதை நினைவிலிருத்தி வாழ்ந்தால் குருவின் அருள் எப்போதும் நமக்குக் கிடைக்கும்.

5. ''மைசூர் மகாராஜாவைப் பார்த்ததனால் மட்டும் நமக்கு என்ன கிடைக்கிறது? நாம் செய்து கொண்டதே நமக்குப் பயன் தரும்''. மைசூர் மகாராஜாவைப் போன்ற குரு கிடைத்தாலும், நாம் சாதனை செய்து தகுதியை அடையாவிட்டால், அவர் அருள் புரிந்தாலும் நாம் அதை நிலைநிறுத்திக் கொள்ள முடியாது.

6. ''எல்லோருக்கும் தேவையான விளைச்சலை விளைவித்தேன்; அதனைத் திருடர்கள் கொண்டு போய் விடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்'' - நம்மிடமுள்ள தீய குணங்களே திருடர்கள்.

7. ''நீங்கள் என்னை விட்டாலும் நான் உங்களை விட்டுவிட மாட்டேன்.''

8. ''ஆயிரம் ஆடுகளின் இடையே இருந்தாலும் நம்முடைய ஆட்டைக் காலைப்பிடித்து இழுத்துக் கொண்டு வரலாம்.''

9. ''எல்லோரையும் சமானமாகப் பார்த்தால் இறைவனைக் காண முடியும்.''

10. 'பசியில்லை; எனக்கு உணவு வேண்டாம்' என்ற பக்தனைக் கொஞ்சமாவது சாப்பிடும்படிச் சிலர் மன்றாடினர். அவர்களிடம் ஸ்வாமி ''மந்தம்-பந்தம்; பசியில்லாத போது உணவு கொண்டால் அது ஒரு தளையாக மாறுகிறது. இயற்கையிலுள்ள சக்திகளின் உருவத்தில் நமக்கு உணவளிக்கும் இறைவனுக்கு நாம் கடன்படு இறோம்'' என்றார்.

11. ''வெங்கையாவின் பேரில் ஒரு பிடி சாதம் போட்டவர்களுக்கும் அந்தப் பிக்ஷாண்னத்தைக் கொண்டு வந்தவர்களுக்கும் அவர்களது நன்மை தீமைகளை நாமே கவனித்துக் கொள்ள வேண்டாமா ஐயா?''

12. ''எங்களுக்கு ஏதாவது போதனை செய்யுங்கள் ஸ்வாமி'' என்று கேட்டபோது ''போதிப்பதற்கு என்ன இருக்கிறது? என்னைப் பார்த்துக் கற்றுக் கொள்ளுங்கள்'' என்றார். இந்த விஷயத்தைக் குறித்து ''அவதூத போதாம்ருதம்'' என்ற புத்தகத்தில் விவரமாகக் கூறப்பட்டுள்ளது.

13. மந்திரோபதேசம் செய்யும்படிக் கேட்ட பக்தனிடம் ''மந்திரமாவது, தந்திரமாவது! பார்த்துக் கொண்டே போகவேண்டியது தானே ஐயா'' என்றார் ஸ்வாமி. நம்மில் நிய குணங்கள் சேராமல் பார்த்துக் கொண்டு, ஸத்குரு நடந்து காட்டும் நல்வழியைப் பார்த்துக் கொண்டு அவ்வழியே நடந்து கொள்வதே நாம் செய்ய வேண்டியது.

14. ''சன்யாசிகள் தர்மத்தை அநுசரித்து வாழ்வதில் என்ன பெருமை உள்ளது? சம்சாரிகள் தர்மத்தை அநுசரித்து வாழ்வதே பெருமை.''

15. ''வட்டி வாங்கும் விஷயத்தில் கூட தர்மத்தை அநுசரிக்க வேண்டுமய்யா.''

16. ''எங்களுக்கு ஏதாவது போதியுங்கள் ஸ்வாமி' என்று கேட்ட பக்தரிடம் ''ஸம்பன்னத்வம், சாதாரணத்வம், ஸத்குருசேவை முதலியவற்றைச் சாதியுங்கள்'' என்றார்.

ஸம்பன்னத்வம் என்றால் தெய்வீக குணங்கள்; சாதாரணத்வம் என்றால் எவ்விதமான கர்வமும் அகங்காரமும் இன்றி 'அல்லா மாலிக்' என்ற எண்ணத்தை நம் வாழ்வில் கடைப்பிடித்தல். சத்

குருசேவை என்றால் எல்லா உயிர்களிலும் ஸர்வ வியாபியான நம் குரு இருப்பதை உணர்ந்து கொண்டு அவற்றின்பால் தகுந்த முறையில் நடந்து கொள்வதே ஆகும்.

17. தமக்குள் சச்சரவுகளில் ஈடுபடும் சேவகர்களில் சிலரைத் தனியாக அழைத்து ''வாய் நிறவக் கூடாது ஐயா'' என்று ஒரே வார்த்தையில் போதிப்பார்.

18. ''எனக்கு உடல்நிலை சரியில்லை, அங்கே வலி, இங்கே வலி'' என்று தன்னிடம் கூறும் சேவகர்களிடம் ''வலியை எவ்வளவு அநுபவிக்கிறீர்களோ அவ்வளவு நல்லது உங்களுக்கு'' என்பார்.

19. ''காலணா திருடினால் பத்து ரூபாய்கள் இழப்பீர்கள் ஐயா.''

20. ''மனிதனாகப் போனால் மனிதனாகவே வருவான்.''

21. தவறு செய்யும் சேவகர்களை ஸ்வாமி கண்டிப்பதில்லை என்று கருதியவர்களிடம் ஸ்வாமி ''போகிறவர்களைப் போகவிட வேண்டியது தானே ஐயா'' என்றார்.

22. ''வருங்காலத்தில் கரண்டியால் இறைப்படாத சாதம் தின்பார்கள் ஐயா.''

23. ''ஆசை போய்விட்டால் எல்லாமே போய்விடும் ஐயா'' - இது எல்லா சாஸ்திரங்களின் சாரமான உண்மையாகும்.

24. ''நூல் அறுந்து போகாமல் பார்த்துக் கொண்டால் நான் எப்போதும் உன்னுடனேயே இருப்பேன் ஐயா.''

25. ''ஒருவரைப் போ என்று கூறுவதைக் காட்டிலும் நாமே போய் விடுவது மேல் ஐயா.''

22. நம்பியவர்களுக்கு நன்மை - நம்பாவிடில்?

இறைவன் அருள் புரிந்தால் கூட நம்பிக்கையற்றவர்கள் அதனை அடைய முடியாது. இறைவன் அல்லது சத்குருவின் மொழிகளை முழுமையாக நம்பி அதிலிருந்து சற்றும் பிசகாமல் நடந்து கொள்பவர்களுக்கே அவரது அருள் கிடைக்கும். அவர் கூறியபடி நடக்காதவர்களுக்கு அருள் என்பது காட்டில் காய்ந்த நிலவுக்குச் சமமாகும்.

இவ்வாறு ஸ்வாமியின் மொழிகளில் நம்பிக்கை கொள்ளாதவர்களின் அநுபவங்களைக் காண்போம் : உடல்நிலை சரியில்லாத கொட்டடி சேஷய்யா ஸ்வாமியிடம் வந்து தமது தொல்லையைப் பற்றிக் கூறினார். ''குண்டகலகராக்கு (தெலுங்குச் சொல்) வேர்கள்மேல் உள்ள பட்டையை மசித்து மூன்று வேளைகளும் விழுங்கு'' என்றார் ஸ்வாமி. அவ்வாறே செய்து இன்னப்போகும் சமயத்தில் ''இதைச் சாப்பிட்டால் குணமாகுமா?'' என்று சந்தேகத்தோடு விழுங்கினார். மறுநாள் விடிகாலை அவர் ஸ்வாமியிடம் சென்றவுடனே அவர் ''அந்த மருந்து சாப்பிட்டால் குணமாகாது தான். இப்போது ஒருவர் வருவார். அவரிடமிருந்து மருந்து வாங்கிக்கொள்'' என்றார். அவரது மனதில் ஏற்பட்ட சந்தேகம் ஸ்வாமிக்குத் தெரியாமல் போகுமா என்ன?

வி. ராமமூர்த்தியின் தமையனார் மகனுக்கு வரிசையாக மூன்று பெண் குழந்தைகள் பிறந்தனர். நாலாவது பிரசவத்துக்கு முன்பு ஸ்வாமியிடம் வந்து ஆண் குழந்தை பிறக்கும்படி அருளுமாறு வேண்டினர். ''ஏதாவது ஒரு கோயிலில் நள்ளிரவில் மூன்று பிரதக்ஷிணங்கள் வீதம் மூன்று நாட்கள் செய்தால் ஆண்குழந்தை பிறக்கும்'' என்றார் ஸ்வாமி. நள்ளிரவில் பிரதக்ஷிணம் செய்வது கஷ்டம் என்றும் ஒன்பது மாதங்கள் நிரம்பிய பிறகு பிரதக்ஷிணம் செய்தால் குழந்தை எவ்வாறு மாறும் என்றும் எண்ணி ஸ்வாமி கூறியதை அவர்கள் அலட்சியம் செய்தனர். அவர்களுக்கு நாலாவது குழந்தையும் பெண்ணாகவே பிறந்தது. ஸ்வாமி அருள் புரிந்தாலும் அவர்களது அலட்சியத்தால் அதை நழுவ விட்டனர் அன்றோ!

ஆதிமகூர் வெங்கையாவிடம் ஸ்வாமி ''ஐயா, உன் எருதிற்கு வண்டி கண்டம் இருக்கிறது. அதை விற்றுவிடுங்கள்'' எறார். விற்க நினைத்தபோதிலும் வாங்குவதற்குச் சரியான ஆட்கள் கிடைக்காததால் தாமதம் ஆயிற்று. ஒரு நாள் இரவு அந்த எருது வண்டிச்சக்கரத்தின் மரச்சட்டங்களுக்கிடையே தலையை நுழைத்து தலையைச் சொறிந்து கொள்ள முயற்சித்தபோது கொம்புகள் சக்கரத்தில் சிக்கிக் கொண்டு தலை மரச்சட்டங்களுக்கிடையேயிருந்து வரவில்லை. இரவு முழுதும் தலையை வெளியே இழுக்க முயற்சித்து விடிகாலையில் அது இறந்து விட்டது.

பெனுபர்த்தி கிராமவாசியான ஸ்ரீராமுலுசெட்டியாருக்குக் குஷ்ட வியாதி ஏற்பட்டது. அவர் ஸ்வாமியைப் புகலடைந்தார். ஸ்வாமி அவரது உடலுக்கு எண்ணெய் தடவுவார். செட்டியாரின் வீட்டுக்கு அடிக்கடி செல்வார் ஸ்வாமி. ஸ்வாமி எங்கிருந்தாலும் வந்து தரிசித்துக் கொள்வார் செட்டியார். சில நாட்களில் அவரது வியாதி குணமாயிற்று. ஆனால் அவர் ஸ்வாமி கூறிய பத்தியங்களையும் நியமங்களையும் கடைப் பிடிக்காததால் மீண்டும் அந்த வியாதி ஏற்பட்டது.

ஒரு முறை வேலூர் சுப்ரமணியம் ஸ்வாமியுடன் திருவள்ளூருக்குச் சென்றார். அங்கே தரையில் கிடந்த ஒரு ரூபாய் நாணயத்தை அவருக்குக் காட்டிய ஸ்வாமி அதைக் கொண்டு கற்பூரம் வாங்கி கடவுளுக்கு ஏற்ற வேண்டும் என்றார். சரி என்று ஒப்புக் கொண்ட சுப்பிரமணியம் தன்னிடம் சில்லரை வேண்டுமென்று கேட்ட துளசம்மாவுக்கு அந்த ஒரு ரூபாயைக் கொடுத்து விட்டார். அன்று மாலை ஸ்வாமி ''கற்பூரம் வாங்கி ஏற்றினாயா?'' என்று கேட்டபோது 'ஏற்றிவிட்டேன்' என்று கூறி விட்டார். துளசம்மா அந்த ரூபாயைக் கடவுளுக்குத்தானே செல வழித்திருப்பாள் என்று எண்ணிக் கொண்டார். மூன்று மாதங்களுக்குப் பிறகு ஒரு நாள் இரவு கனவில் ஒரு பெரும் கற்பூரக்கட்டி பெரும் ஜ்வாலையோடு எரிவது கண்டு பயத்தால் அவருக்கு விழிப்பு ஏற்பட்டது. உடனே அப்போதே புறப்பட்டு திருவள்ளூருக்குச் சென்று கன்னத்தில் போட்டுக் கொண்டு வீரராகவஸ்வாமிக்கு கற்பூரம் ஏற்றி விட்டு மன்னிப்பு வேண்டினார்.

இவரே தமக்கு ஏற்பட்ட மற்றொரு அனுபவத்தைக் கூறுகிறார் : ''1970-ஆம் ஆண்டு நானும் என் மனைவியும் ஸ்வாமியைத் தரிசித்த பிறகு எங்கள் ஊருக்குத் திரும்புவதற்காக கொலகமூடி பஸ் ஸ்டாண்டில் நின்றிருந்தோம். கருணைக்கடலான ஸ்வாமி எங்களிடம் வந்து ''ஐயா, உனக்கு மிகவும் நல்லகாலம் வருகிறது. உனக்கு எழுதிக் கொடுத்தால் உன்னால் அந்த இடத்தைக் கண்டறிய முடியாது. நான் உனக்கு அந்த

இடத்தைக் காண்பிக்கிறேன். தலுப்பூரில் எகவர்களின் வீட்டுக்கு மேற்குப் புறத்தில் உள்ளது. அந்த வீடு கூட நான் கூறினால் உனக்குக் கிடைக்கும். நீ அங்கேயே குடித்தனம் செய்'' என்றார். அவ்வாறு அங்கு குடிபுகுவது எனக்கு விருப்பமில்லை என்றாலும் ஸ்வாமி கூறினாரே என்று ''சரி, வாருங்கள் ஸ்வாமி, எனக்கு அந்த இடத்தைக் காட்டுங்கள்'' என்று கூறிவிட்டு தவிர மனதில் மட்டும் இந்தப் பைத்தியக்கார வெங்கையாவோடு கற்றுகிறேன் என்று தலுப்பூரிலுள்ள என் உறவினர்கள் சிரிப்பார்களே என்று எண்ணினேன். உடனே எனது எண்ண ஓட்டங்களை அறிந்த ஸ்வாமி, ''ஐயா! பைத்தியக்கார வெங்கையா என்றே கூறு. பரவாயில்லை'' என்று கூறி பஸ்ஸில் என்னோடு நெல்லூர் வந்தார். நாங்கள் தலுப்பூர் செல்லும் பஸ்ஸில் ஏறி அமர்ந்தோம். ஆனால் சில நிமிடங்களில் எனது மனது மாறிவிட்டது. தலுப்பூருக்குப் போய் எல்லோருடைய நகைப்புக்கும் ஆளாக விரும்பாமல் ''ஸ்வாமி, நீங்கள் முதிகேடுக்குப் போங்கள். நான் என் உறவினர்கள் வீட்டுக்குப் போகிறேன்'' என்று கூறிவிட்டு பஸ்ஸை விட்டு இறங்கினேன். உடனே ஸ்வாமியின் முகம் மிகவும் வாடி விட்டது. ''ஐயா நான் உனக்காக வந்தால், நீ என் சொற்களைக் கேட்காமல் போகிறாயே? உன் மனைவிக்கு இடது காலில் கட்டி வரும்போல் இருக்கிறது. மதராஸ் ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டி வரும். நீ நெல்லூர் ரங்கநாயகரின் கோவிலில் காலணா கொடுத்து பிரசாதமான சாதத்தை வாங்கி அவளுக்கு மூன்றுவேளை கொடு; நோய் ஓரளவு குறையும்'' என்று கூறினார்.

ஸ்வாமியின் சொற்களில் சிரத்தையில்லாத நான் ஒரு முறை மட்டுமே பிரசாதம் வாங்கிக் கொடுத்தேன். ஸ்வாமி கூறியபடியே அதன் பிறகு இரண்டு மாதங்களில் என் மனைவிக்குத் தொடையில் கட்டி ஏற்பட்டு மதராசுக்குச் சென்று அந்நாட்களில் ஐந்நூறு ரூபாய் செலவில் ஆபரேஷன் செய்ய நேர்ந்தது. அன்று ஸ்வாமியின் சொற்களைக் கேட்காததற்குத் தகுந்த தண்டனை அனுபவித்தேன். அவர் கூறியபடி தலுப்பூருக்குக் குடித்தனம் போயிருந்தால் நல்ல செல்வத்தோடு நல்ல சுகமாக இருந்திருப்பேன். அவரது சொற்களைக் கேட்காத காரணத்தாலேயே இவ்வாறு இருக்கிறேன்.''

மற்றொரு முறை இந்த பக்தர் ஸ்வாமியிடம் தமது நிலத்தில் தண்ணீர் எவ்விடத்தில் ஊறும் என்று கூறினால் கிணறு தோண்டிக் கொள்வதாகக் கூறினார். ஸ்வாமி அவரது நிலத்தில் நான்கு புறத்திலும் நடந்து பார்த்துவிட்டு ''ஐயா, இந்த நிலத்தில் நீர் இல்லை. இந்தப் பக்கத்திலுள்ள அரை ஏக்கர் நிலத்தில் எண்பத்திநாலு ஏக்கர் நிலத்துக்குத்

தேவையான அளவு நீர் உள்ளது. அந்த அரை ஏக்கர் நிலத்தை வாங்கிக் கிணறு தோண்டு. இங்கே கிணறு வெட்டினவர்கள் எப்போதும் சுகமாக "வாழ்வார்கள்'' என்று கூறிக் கிணறு தோண்ட வேண்டிய இடத்தைக் கூடக் குறித்துக் காட்டினார். இந்த நிலத்தை மாத்திரம் எந்தச் சூழ்நிலையிலும் விற்கவேண்டாமென்றும் கூறினார். ஆனால் என்ன பயன்? அவரது சொற்களைக் கேளாமல் நிலத்தை விற்று விட்டேன். இப்போது அங்கு கிணறு தோண்டியவர் லக்ஷாதிபதியாக உள்ளார்.

காடம்ரெட்டி சுப்பாரெட்டி கூறியதாவது ''என்னிடமுள்ள இருபத்திரண்டு ஏக்கர் புன்செய் பூமியை விற்க எண்ணி ஸ்வாமியைக் கேட்டேன். ''வருங்காலத்தில் அதன் விலை ஏறப்போகிறது. எதற்காக அதை விற்க நினைக்கிறாய்?'' என்றார் ஸ்வாமி. அவரது சொற்களைக் கேட்காமல் ஏக்கர் ஐந்நூறு ரூபாய் விலைக்கு விற்று விட்டேன். இப்போது அந்த நிலத்தின் மதிப்பு ஏக்கருக்கு லக்ஷரூபாயாக உயர்ந்து விட்டது.

மற்றொரு சமயம் எனது விளைநிலத்தை மாற்றிக் கொள்ள நினைத்து ஸ்வாமியைக் கேட்டேன். ''ஐயா, நிலத்தை விற்றால் மிகவும் கஷ்டப்படுவான் என்று சொன்னாலும் கேட்க மாட்டான். கர்ம வினை மிகவும் பலமாக உள்ளது. என்ன செய்வது'' என்றார். சுவாமியின் சொற்களைக் கேட்காமல் நிலத்தை மாற்றிக் கொண்ட பிறகு மூன்று ஆண்டுகள் விளைச்சலே இல்லாமல் இருபதாயிரம் ரூபாய்கள் கடன் ஏற்பட்டதோடு வாழ்க்கையில் இதுவரை அநுபவித்திராத மன உளைச்சலும் அநுபவித்தேன். ஸ்வாமியின் அருளால், பத்தாயிரம் ரூபாய்களைக் கொடுத்து மீண்டும் என் நிலத்தை மாற்றி வாங்கிக் கொண்டேன். அது முதல் எனது பொருளாதார நிலையும் மனநிலையும் நல்ல விதமாக மாறி நான் சுகமடைந்தேன். என் தந்தையார் மீது ஸ்வாமிக்குள்ள அன்பால் என் நிலம் மீண்டும் எனக்கு வரும்படி அருள்புரிந்தார் ஸ்வாமி.

23. ஸ்வாமிக்கும் ஷீரடி சாயிக்கும் இடையேயுள்ள வேறுபாடற்ற நிலை

ஸ்வாமிக்கும் ஷீரடி சாயிபாபாவிற்கும் தமது வாழ்க்கை முறையில் எவ்வளவோ ஒற்றுமை உள்ளது. இது தவிர அவர்கள் தமது பக்தர்களுக்கு அளித்த அநுபவங்களால் தம்மிடையே மிக நெருங்கிய சம்பந்தம் உள்ளதென்று காட்டியுள்ளார்கள்.

இருவரும் நிஜ பிரம்மசாரிகள்; தமக்கென்று ஒரு இருப்பிடமும் இல்லாதவர்கள்; பிக்ஷை எடுத்து வாழ்ந்தவர்கள். சித்தர்களானாலும் மக்களுக்கு எடுத்துக்காட்டாக சாதகர்களைப் போலவே வாழ்ந்தவர்கள். இருவரும் எப்போதும் நெருப்பு வளர்த்திக் கொண்டிருந்தனர். இருவருடைய லீலைகளும் போதனைகளும் கூட எவ்வளவோ ஒற்றுமை யுடையவையாயிருந்தன. சாயிநாதர் தாம் பக்தர்களைக் காத்த பின்னர் தாம் அவ்வாறு செய்தாரென்பதை அந்தப் பக்தர்களுக்கு உணர்த்துவார். ஆனால் ஸ்வாமியோ தமது செயல்களைத் தம் வாழ்க்கையின் இறுதி வரை ரகசியமாகவே வைத்திருந்தார்.

ஸ்வாமி ஒரு முறை பக்தர்களிடம் வடக்கே தமது தமையனார் இருந்தார் என்றும் அவரும் எப்போதும் அக்னி வழிபாடு செய்தார் என்றும் கூறினார். இருவரும் நமக்குப் புரியாத முறையில் சங்கேதமாகப் பேசுவார்கள். இருவரும் தாம் சமாதி அடையப் போவதைப் பற்றி முன்பாகவே சொன்னதோடு, சமாதியான பிறகும் எப்போதும் தம் பக்தர்களுக்கு அருள் புரிவார்களென்று அபயமளித்து அதை நிறை வேற்றியும் வருகிறார்கள். இவர்கள் இருவரும் சேர்ந்து பக்தர்களுக் கருளிய அநுபவங்களைப் பார்ப்போம்.

புகழ்பெற்ற சாயிபக்தரும் பெரும் மஹாணுபாவ ஆசார்யா ஸ்ரீ எக்கிராலை பரத்வாஜா அவர்கள் முதன்முறையாகத் தாம் ஸ்வாமியைத் தரிசித்த விஷயத்தைக் குறித்துக் கூறியதாவது: ''1975-ஆம் ஆண்டு திவராத்திரியன்று காலையில் பூஜை முடிந்தவுடன் எனக்கு கொலக மூடியிலுள்ள அவதூத வெங்கையஸ்வாமியைத் தரிசிக்க வேண்டு

மென்று தோன்றியது. அவரது பக்தனும் எனது மாணவனுமான ராம கிருஷ்ணரெட்டியை என்னுடன் வரும்படிக் கூறினேன். அவள் ''ஸ்வாமி கொலகமூடியில் இருக்கிறாரோ இல்லையோ என்பதை முன்னதாகத் தெரிந்து கொண்டுதான் நாம் போக வேண்டும். அவர் பக்கத்துக் கிராமங்களுக்குப் போயிருக்கலாம்'' என்றாள். ஆனால் நானோ காலை எட்டரைமணியளவில் சாயிக்கு அகர்பத்தி ஏற்றி வைத்து ''சாயி, நீங்கள் எல்லாச் சாதுக்களின் உருவம் ஆனவர். ஸ்ரீ வெங்கையஸ்வாமியின் உருவத்திலுள்ள உம்மைத் தரிசிக்கச் செல்கிறேன். அவரது சந்நிதியும் ஆசிகளும் சிறப்பான முறையில் எனக்குக் கிடைக்கும்படி அருள் புரிய வேண்டும்'' என்று பிரார்த்தனை செய்து விட்டுப் புறப்பட்டேன். நாங்கள் காலை பத்து மணி சமயத்தில் கொலகமூடி செல்லும் பஸ்ஸில் ஏறியபோது, ஸ்வாமியின் தம்பூராவை வைத்துக் கொண்டிருந்த ஒரு சாதுவை ராமகிருஷ்ணா அடையாளம் கண்டு கொண்டு, ஸ்வாமியைப் பற்றி விசாரித்தார். ''நான்கு நாட்களுக்கு முன்பு ஸ்வாமி நெல்லூருக்குப் போய் அங்குள்ள தத்தாத்ரேய மடத்தில் தங்கினார். அவர் பத்து நாட்கள் அங்கு தங்க வேண்டுமென்று எண்ணியதால் பக்தர்கள் பத்து நாட்களுக்கு அவரது துளிக்குத் தேவையான விறகுகள் கூட வாங்கி விட்டனர். ஆனால் அவர் இன்று காலை எட்டரை மணியளவில் திடீரென்று தாம் உடனே கொலகமூடிக்குப் போக வேண்டுமென்று கூறினார். பக்தர்கள் அவரைக் குதிரை வண்டியில் அனுப்பி வைத்தனர். அவர் அரை மணிக்கு முன்பாக கொலகமூடி சேர்ந்திருக்க வேண்டும்'' எனறார். சில நிமிடங்களில் நாங்கள் ஸ்வாமியின் சந்நிதியை அடைந்தோம். ஸ்வாமி எவரும் எதிர்பாராத விதமாக கொலகமூடிக்கு வந்ததால் அவரது தரிசனத்துக்காக யாரும் வரவில்லை. நானும், ராமகிருஷ்ணாரெட்டியும் மட்டுமே சுமார் ஆறு மணி நேரம் அவரது சந்நிதியில் அமைதியாகக் கழித்தோம். எங்கள் இருவரையும், எங்கள் ஊர் வியாழக்கிழமை பஜனைக் கூட்டத்தினரையும் எவ்வளவோ மேன்மையாக ஆசீர்வதித்தார் ஸ்வாமி. எனவே ஸ்ரீஸ்வாமி தமது உருவமே என்று ஸ்ரீசாயி எனக்கு தெளிவுபடுத்தினார் என்று உணர்ந்தேன். பின்னர் அடிக்கடி நானும், எங்களது ஸத்ஸங்க அங்கத்தினர்களும் ஸ்வாமியை தரிசிக்க முற்பட்டோம்.''

ஒருநாள் ஸ்வாமி கலிச்சேடிலிருந்து வேறிடத்துக்குப் போக வேண்டுமென்று கூறினார். சாமான்களை எல்லாம் வண்டியில் ஏற்றிய பிறகு இப்போது போவதற்கில்லை என்று கூறிச் சாமான்களை இறக்கச் சொல்லி வண்டிக்காரனுக்கு ஆறு ரூபாய்கள் கொடுத்தனுப்புமாறு பணித்தார். அதே நாள் ஒன்பது மணியளவில் வித்யாதகரிலிருந்து ஸ்வாமியின் தரிசனத்துக்காக சேஷாத்ரி வந்தார். அப்போதுதான் சேவகர்களுக்கு ஸ்வாமி தம் பிரயாணத்தை நிறுத்திய காரணம் புரிந்தது.

சேஷாத்ரி புறப்படும் சமயத்தில் சாமியிடம் ஸ்வாமி தரிசனம் நல்ல முறையில் கிடைக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்ட அதே நேரத்தில் தான் ஸ்வாமி தம் பிரயாணத்தை நிறுத்தினார். சாயியும் ஸ்வாமியும் வேறு அல்லர் என்பதை இந்நிகழ்ச்சி நிரூபித்தது.

1980-ஆம் ஆண்டு ஆசிரமத்தில் சமாதி மந்திரம் கட்டுவதற்காகச் செங்கல் லாரி வந்தது. அன்று ஸ்வாமி எல்லோரையும் இப்போது சமாதி மந்திரம் உள்ள இடத்தில் படுக்கும்படிக் கூறினார். ''ஐயா, இங்கே பெஞ்சலக்கொண்ட அளவு பெரிய மசீது வரப்போகிறது'' என்றார். ஒரு ஆண்டுக்குள்ளேயே அவரது சமாதிமந்திர் எழுந்தது.

ஆனால் அவர் தமது சமாதியை மசீது என்று எதற்காகக் கூறினார் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். 'துவாரகாமாயி' என்று பெயரிட்ட மசீதில் வாழ்ந்த மஹான் சாயிநாதர் ஒருவரே. அங்கு மத பேதமின்றி எல்லா மதத்தவர்களும் தத்தம் மதப்படி தெய்வத்தை ஆராதிக்கிறார்கள். தவிர மசீது என்று அழைக்கப்பட்டு இந்தியக் கோவில்களில் நடப்பதைப் போலவே மணி அடிப்பது, துளசியைப் பூஜிப்பது முதலியவை வீரடியைத் தவிர வேறெங்கும் நிகழவில்லை. எனவே ஸ்வாமி தமக்கும் சாயிக்கும் வேறுபாடு இல்லை என்று தெளிவுறுத்துகிறார். வீரடியைப் போலவே கொலகமூடியில் கூட எல்லா மதத்தவர்களும் ஸ்வாமியை வழிபட்டு அவரது அருளைப் பெறுகிறார்கள்.

1980-ஆம் ஆண்டில் ஸ்வாமி தலுப்பூரில் நாராயணதாஸ் ஆசிரமத்தில் தங்கி இருந்தார். அப்போது குரவைய்யாவுக்கு நான் (ஆசிரியர்) ஸ்ரீசாயிலீலாம்ருதம் என்ற புத்தகத்தைப் படித்துக் காட்டிய பின்னர், அவர் அந்தப் புத்தகத்தைப் பாராயணம் செய்து வந்தார். ஒரு நாள் நாங்கள் இருவரும் ஸ்வாமி சந்நிதியில் அருகே படுத்து உறங்கிக் கொண்டிருந்தோம். நள்ளிரவில் குரவையா நாற்பது கஜதூரம் போய்த் திரும்பி வந்து ''நீ தூக்கத்தால் உடனே எழுந்து வரமுடியாமல் போனாய். சாயிபாபா வந்து என் பக்கத்தில் நின்று கொண்டார். எனக்கு விழிப்பு வந்து பாதங்களுக்கு நமஸ்காரம் செய்ய முயன்றபோது போக ஆரம்பித்தார். நான் வாயில் வரை அவரைப் பின் தொடர்ந்தேன். அங்குச் சென்றதும் அவர் மறைந்து விட்டார்'' என்றார். அவரது பரவசமான உணர்ச்சி அவர் கூறியது உண்மையே என்று உறுதிப்படுத்தியது. ஸ்வாமியின் சந்நிதியில் அவரது நெருங்கிய சேவகருக்கு சாயி தரிசனம் அளித்தருளியது அவ்விருவருக்கிடையேயுள்ள நெருங்கிய உறவை வெளிப்படுத்துகிறது.

சுதாகர் என்ற வைத்தியரின் மைத்துனியான தோபவாணி கூறியது : ''என் பெற்றோர் என்னை எனது மாமாவுக்கு மணம் செய்விக்க விரும்பினர். ஆனால் அதற்கு மாமா சம்மதிக்கவில்லை. அதனால் நான் ஸ்வாமியிடம், அவருக்கும் எனக்கும் மணம் செய்வித்தால், தம்பதி களாக வந்து ஸ்வாமியைத் தரிசித்து அங்கு ஆசிரமத்தில் ஒரு இரவு நித்திரை செய்கிறோம் என்று வேண்டிக் கொண்டேன். என் தமக்கை ஸ்வாமியின் நூலைக் கையில் கட்டிக் கொண்டால் நல்லதென்று என் மாமாவின் மணிக்கட்டில் கட்டிவிட்டாள். ஒரு மாதகாலத்திற்குள்ளேயே மாமா என்னை மணக்கச் சம்மதித்ததன் பேரில் உடனே திருமணம் நடந்தது. எனது வேண்டுதல்படி நாங்களிருவரும் ஸ்வாமியின் ஆசிரமத்தில் நித்திரை செய்தோம். அன்றிரவு என் கனவில் சாயி ''உனக்கு மணமாகி விட்டது அல்லவா. எனக்கு சத்தியநாராயணபூஜை செய்'' என்றார். ''ஸ்வாமி, என் வீடு மிகவும் சிறியது. பெரிய வீடு கட்டிக் கொடுத்தால் பூஜை செய்கிறேன்'' என்றேன். ''இந்த நூலைக் கட்டிக் கொள்'' என்று கூறி ஒரு நூலை அருளிவிட்டு மறைந்துவிட்டார். காலையில் பார்த்த போது எனது படுக்கையில் சாயி அருளிய நூல் இருந்தது.''

சாயி தம் பக்தர்களுக்கு விபூதியைப் பிரசாதமாக அளிப்பதும் வெங்கைய ஸ்வாமி விபூதி, மற்றும் நூலும் அளிப்பதும் அவர்களது வழக்கம். வெங்கைய ஸ்வாமியிடம் தம் பிரார்த்தனையைச் செலுத்த வந்த தம்பதிகளிடம் சாயி கனவில் தரிசனம் அளித்து வெங்கைய ஸ்வாமியின் நூலை அருளிய செயல் அவருக்கும் வெங்கைய ஸ்வாமிக் கும் வித்தியாசம் எதுவும் இல்லை என்று தெளிவுறுத்துகிறது.

குண்டூர்வாசியான ஜி.வி. ரமணமூர்த்தி கூறியது : ''ஷீரடி சாயி நாதரின் சரித்திரத்தைப் பாராயணம் செய்வதன் மூலம் எனக்கு எவ்வளவோ அநுபவங்கள் ஏற்பட்டன. அவருக்கும் வெங்கைய ஸ்வாமிக்கும் வேறுபாடு இல்லையென்பதையும் கீழ்க்கண்ட விதமாக எனக்கு நிரூபித்தார். ஒரு சமயம் நான் ஒரு பிரச்னையால் தொல்லைப் பட்டுக் கொண்டிருக்கும் போது ஸ்வாமியின் சரித்திரம் எனக்குக் கிடைக்க, அதனைத் திறந்தவுடனே எனக்குத் தேவையான தீர்வு கிடைத்தவுடனே அந்தப் புத்தகத்தை முழுதும் பாராயணம் செய்தேன். அப்போது என்னைப் பீடித்திருந்த கிரகங்களின் கோளாறுகளைத் தீர்த்துக் கொள்வதற்காக நான் ஜொன்னவாடா காமாக்ஷிதேவியின் சந்நிதிக்குப் போனேன். அன்று இரவு காமாக்ஷிதேவியும், மல்லிகார் ஜுன ஸ்வாமியும் எனக்கு மந்திரோபதேசம் செய்துவிட்டு எல்லாம் சரியாகிவிடும் என்றனர். அப்போது எனக்கு விழிப்பு ஏற்பட்டாலும் கண்மூடியே படுத்திருந்தேன். ''ஐயா நீ மூன்று நாட்கள் என் அருகில் இருக்கவேண்டும் ஐயா'' என்ற சொற்கள் மிகத் தெளிவாகக் கேட்டன.

அலை வெங்கைய ஸ்வாமியின் சொற்களே என்று காலையில் கொலக மூடிக்குச் சென்றேன். அன்றிரவு நான் விழித்துக் கொண்டே படுத்திருந் தேன். இரவு பத்துமணி அளவில் அருகில் பஜனை நடந்து கொண்டிருந் தது. என் காலருகில் ஒரு புறம் சாயியும், மறுபுறம் ஸ்வாமியும் நின்றிருந்தனர். கண்களைத் திறந்து தெளிவாகப் பார்த்துக் கொண்டிருந் தேன். எனக்கு எழவேண்டும் என்றோ, பேசவேண்டும் என்றோ தோன்ற வில்லை. அவர்கள் என் பக்கமே பார்த்துக் கொண்டு ''வாவெளியே'' என்றனர். என்னிடமிருந்து பச்சைநிறப் புடவையணிந்த விகாரமான உருவமுடைய ஒரு பெண்மணி வெளிப்பட்டாள். ''இங்கிருந்துபோ'' என்று ஸ்வாமி கட்டளையிட்டார். ''நான் இவளை நம்பிக்கொண்டிருக் கிறேன். வேறு எங்கு போவேன்? வேறு எவரையாவது காட்டுங்கள், அவளிடம் போகிறேன்.'' என்றாள் அவள். உடனே பாபாவின் கையிலிருந்த தடியை எடுத்து, அவனது கழுத்தில் வைத்து நெட்டித் தள்ளினார் ஸ்வாமி. உடனே அவள் மின் அதிர்ச்சி ஏற்பட்டது போல் அலறியவளாகப் போய்விட்டாள். அன்றுடன் என்னைப் பீடித்த இரகபீடை நீங்கியது.''

''குண்டூரில் வாடகைக்கு எடுத்த இடத்தில் நான் நடத்திவந்த மக்கடையை விற்க நினைத்தேன். அன்றிரவு சாயிபாபா என் கனவில் ''அதைவிற்று விட்டால் உன் வயிற்றுப் பிழைப்பு எப்படி நடக்கும்?'' என்றார். மற்றொரு பெண் ''உனக்கு வேறொரு இடம் காட்டுகிறேன்'' என்றாள். அதோடு கனவு முடிந்தது. சாயியின் சொற்களைப் பொருட் படுத்தாமல் மக்கடையை விற்றுவிட்டு பல துன்பங்களுக்கு ஆளாகி உணவுக்கே கஷ்டமான நிலை ஏற்பட்டது.''

''மற்றொரு முறை பாபா கனவில் காட்சிஅளித்து'' என்னைப் போன்ற பெண் குழந்தை பிறக்கும்'' என்றார். ஆனால் எனக்குப் பெண் குழந்தை வேண்டாமென்று அபார்ஷன் செய்வித்தேன். அதனால் பல கஷ்டங்களை அநுபவித்தேன். பின்னர் என் மனைவி மீண்டும் கருவுற்ற போது ஏழாம் மாதத்தில் ஸ்வாமி என் கனவில் ''குளிர்ந்து போகும்; என்னிடம் வா'' என்றார். அந்தச் சொற்களுக்குப் பொருள் விளங்காமல் அவரது தரிசனத்துக்குப் போகாமல் அலட்சியம் செய்தேன். என் மனைவியின் கருவிலுள்ள பிண்டம் செயலிழந்து இறந்துவிட்டது. அறுவைச் சிகிச்சை மூலம் பிண்டத்தை எடுக்கும் முயற்சியில் அவளது உயிருக்கே அபாயமான நிலை ஏற்பட்டது. அப்போது நான் செய்த பிரார்த்தனைக்கு இரங்கி பாபா அவனது நெஞ்சில் கைவைத்ததுபோல் தரிசனம் ஏற்பட்டது. அவள் கண்டத்திலிருந்து தப்பிப் பிழைத்தாள்.''

''இன்னொரு சமயம் என் கனவில் பாபா தோன்றி ஊருக்கு வெளியே ஒரு இடத்தைக் காட்டி அதை வாங்கும்படிக் கூறினார். அது வியாபாரத்துக்குத் தகுந்த இடம் அல்லவே என்று பாபா, ஸ்வாமி இருவரையும் பிரார்த்தித்தேன். வெங்கையஸ்வாமி கனவில் தோன்றி ''உனக்கு அந்த இடம் வேண்டாமா? வேறு இடம் காட்டுகிறேன்'' என்றார். மறுநாள் இருவரும் கனவில் வந்து ஊர் மத்தியிலுள்ள ஒரு இடத்தைக் காட்டி வாங்கும்படிக் கூறினர். இடத்துக்குச் சொந்தக்காரன் இடத்தை விற்பதற்கில்லை என்று கூறிவிட்டான். இதற்கு முன் ஸ்வாமியின் பேச்சைக் கேளாததால் பெரும் துன்பங்களுக்கு ஆளான நான் இம்முறை எவ்வளவு விலை சொன்னாலும் அதை வாங்க வேண்டுமென்று முயற்சித்தேன். இறுதியில் நாற்பது ஆயிரம் ரூபாய்கள் முன் பணமாகக் கொடுத்தால் பின்னர் தனக்கு முடிந்தபோது ரிஜிஸ்தர் செய்வதாக இடத்துக்குச் சொந்தக்காரன் கூறினான். நாற்பதாயிரம் கடன் வாங்கி வந்து அவனுக்குக் கொடுத்து விட்டுப் பொறுப்பனைத்தும் ஸ்வாமியின்மீது போட்டுவிட்டுக் கவலையின்றி இருந்தேன். ஆச்சரியப் படும்படி ஒரு நாள் காலை அவனே வந்து ரெஜிஸ்ட்ரேஷன் செய்து விட்டுப் போனான்.''

வல்லபுரெட்டி நாராயணரெட்டியாருக்கும் அவரது தாய்க்கும் ஸ்வாமி உயிர்ப்பிச்சை அளித்த விஷயம் பக்தர்களுக்குத் தெரிந்ததே. காலக்கிரமத்தில் வீரபத்ர சாயிபாபாவின் சரித்திரத்தைப் படித்ததன் வாயிலாக அவருக்கு அவர்மீது பக்தி ஏற்பட்டு சாயியையும் ஸ்வாமியையும் எப்போதும் நினைத்துக் கொண்டிருப்பார். ஒரு நாள் ஆபத்தான நிலையில் அவர் சாயியையும் ஸ்வாமியையும் பிரார்த்தித்தபோது அன்றிரவு ஸ்வாமி மிகத்தெளிவாக ''அவரை நினைத்தால் என்னை நினைத்ததற்குச் சமமே'' என்று கூறினார்.

ஒரு முறை ஸ்வாமியின் மேன்மையைப் பற்றிக் கேள்விப்பட்டு அவரைத் தரிசிக்க வேண்டுமென்று பரத்வாஜ மாஸ்டர் அவர்களின் மாமியார், மைத்துனி, மற்றும் சிலர் தனுப்பூருக்கு வந்தனர். ஆனால் அதே சமயத்தில் ஸ்வாமி குறுக்கு வழியாகப் பக்கத்துக் கிராமமான கலிச்சேடுக்குப் போய்விட்டார். அப்போது பஸ் இல்லாத காரணத்தால், மாஸ்டர் அவர்களுடைய மாமியார் (56 வயது) தமது முதுமையையும் பலவீனத்தையும் பொருட்படுத்தாமல் பட்டப்பகல் வெயிலில் மூன்று மைல்கள் நடந்து சென்று ஸ்வாமியைத் தரிசித்தார். அந்தச் சமயத்தில் எப்போதும் மௌன விரதத்தில் இருந்தவராய்த் தன்னை எவரும் தொட விடாத ஸ்வாமி, காகிதங்களில் விரல் முத்திரை வைத்து பக்தர்களுக்குக் கொடுத்துக் கொண்டே, விரைவாகக் காகிதங்களைத் தம் கட்டை விரலுக்கடியில் வைக்கும்படி அவர்களை ஊக்குவித்தார். அந்த வேலை மும்முரத்தில் பெண்களின் கைகள் அவர் மீது பட்ட போதும் ஸ்வாமி

ஆட்சேபிக்கவில்லை. வந்தவர்களின் பக்தி சிரத்தையை உணர்ந்து அவ்விதம் அவர்களுக்கு அருள் புரிந்தார். ஸ்வாமியின் தரிசனமும் அவரது ஸ்பர்சமும் ஸ்ரீ சாயிநாதரின் அருளினாலேயே தமக்குக் கிடைத்தது என்றும் சாயியும், ஸ்வாமியும் வேறு அல்லர் என்றும் உணர்ந்து அவர்கள் மகிழ்ந்தனர்.

தன் இறுதி நாட்களில் சாயியையே நினைத்துக் கொண்டிருந்த சுப்பம்மா என்ற பக்தைக்கு ஸ்வாமி மரணந்தறுவாயில் தம் பாத தீர்த்தமும் விபூதியும் அனுப்பி நற்கதி அளித்த சம்பவத்தைப் பற்றி ஏற்கனவே கண்டோம். இந்நிகழ்ச்சியும் அவர்களிருவருக்கிடையே வேறு பாடு இல்லை என்பதை உணர்த்துகிறது.

சாதாரணமாக ஸ்வாமி ஒரு போதும் புது கிராமங்களுக்கும், புதிய இடங்களுக்கும் போக மாட்டார். தாம் அடிக்கடி போகும் ஊர்களுக்கே, தங்கும் இடங்களுக்கே மீண்டும் மீண்டும் சென்று தங்குவார். எப்போதாவது பக்தர்கள் மிகவும் மன்றாடி ஸ்வாமியை எங்காவது புது இடத்துக்கு அழைத்துச் சென்றால் அங்கு ஸ்வாமி ஒரு நாள் இருப்பதே அரிதாகும். உடனே அந்த இடத்தை விட்டுச் சென்று விடுவார். அப்படிப்பட்ட ஸ்வாமி ஒரு நாள் எவருடைய அழைப்புமில்லாமலே தம் கூட்டத்தினருடன் நெல்லூர் ஜில்லாவிலுள்ள வித்யாநகருக்குச் சென்றார். அப்போதே புதிதாகக் கட்டிக் கொண்டிருந்த வீரடி சாயிபாபா மந்திரத்தில், அவரது சமாதி கட்டப்பட இருந்த மேடையின் மீது தமது புனித அக்னிகுண்டத்தை ஏற்படுத்தி அந்தக் கோயிலைப் பாவனம் செய்தார்.

இரண்டாம் நாள் அவரது சேவகர் 'வேறு ஊருக்குப் போகலாம் ஸ்வாமி' என்றபோது ''போவதற்கு வழி தெரியவில்லை ஐயா. இங்கு இருபத்தோரு கோடி நாம் கட்ட வேண்டியுள்ளது'' எனறார் ஸ்வாமி. ஆச்சார்யா எக்கிரால பரத்வாஜா அவர்கள் சாயிக்கு பூஜை செய்யும்போது ஆசனம் சமர்ப்பித்தபோது, அதுவரை படுத்துக் கொண்டிருந்த ஸ்வாமி எழுந்து அமர்ந்து கொண்டார். நைவேத்தியம் அளிக்கும் சமயத்தில் கஞ்சி வேண்டுமென்று கேட்டு ஸ்வாமி அதனைப் பருகினார். பாபாவுக்கு பக்தர்கள் ஆரத்தி செய்தபோது மிகவும் சிரத்தையோடு ஆரத்தியைக் கண்களுக்கு ஒற்றிக் கொண்டார். ''இந்தக் கோயிலில் உங்களுக்கு எப்படி இருக்கிறது?'' என்று கேட்டபோது ''மிகவும் நன்றாக உள்ளது'' என்று கூறித் தமது சங்கேத மொழியில் கோயிலை ஆசீர்வதித்தார்.

ஒருபோதும் பூக்களை ஏற்காத ஸ்வாமி ஸ்ரீபரத்வாஜா அவர்கள் அவரது பாதங்களில் ஜவந்திப்பூக்களை அர்ப்பித்து நமஸ்கரித்தபோது மௌனமாக ஏற்று ஆசீர்வதித்தார். ஸ்வாமி பூக்களை ஏற்றுக் கொள்ள

''இன்னொரு சமயம் என் கனவில் பாபா தோன்றி ஊருக்கு வெளியே ஒரு இடத்தைக் காட்டி அதை வாங்கும்படிக் கூறினார். அது வியாபாரத்துக்குத் தகுந்த இடம் அல்லவே என்று பாபா, ஸ்வாமி இருவரையும் பிரார்த்தித்தேன். வெங்கையஸ்வாமி கனவில் தோன்றி ''உனக்கு அந்த இடம் வேண்டாமா? வேறு இடம் காட்டுகிறேன்'' என்றார். மறுநாள் இருவரும் கனவில் வந்து ஊர் மத்தியிலுள்ள ஒரு இடத்தைக் காட்டி வாங்கும்படிக் கூறினர். இடத்துக்குச் சொந்தக்காரன் இடத்தை விற்பதற்கில்லை என்று கூறிவிட்டான். இதற்கு முன் ஸ்வாமியின் பேச்சைக் கேளாததால் பெரும் துன்பங்களுக்கு ஆளான நான் இம்முறை எவ்வளவு விலை சொன்னாலும் அதை வாங்க வேண்டுமென்று முயற்சித்தேன். இறுதியில் நாற்பது ஆயிரம் ரூபாய்கள் முன் பணமாகக் கொடுத்தால் பின்னர் தனக்கு முடிந்தபோது ரிஜிஸ்தர் செய்வதாக இடத்துக்குச் சொந்தக்காரன் கூறினான். நாற்பதாயிரம் கடன் வாங்கி வந்து அவனுக்குக் கொடுத்து விட்டுப் பொறுப்பனைத்தும் ஸ்வாமியின்மீது போட்டுவிட்டுக் கவலையின்றி இருந்தேன். ஆச்சரியப் படும்படி ஒரு நான் காலை அவனே வந்து ரெஜிஸ்ட்ரேஷன் செய்து விட்டுப் போனான்.''

வல்லபுரெட்டி நாராயணரெட்டியாருக்கும் அவரது தாய்க்கும் ஸ்வாமி உயிர்ப்பிச்சை அளித்த விஷயம் பக்தர்களுக்குத் தெரிந்ததே. காலக்கிரமத்தில் ஷீரடி சாயிபாபாவின் சரித்திரத்தைப் படித்ததன் வாயிலாக அவருக்கு அவர்மீது பக்தி ஏற்பட்டு சாயியையும் ஸ்வாமியையும் எப்போதும் நினைத்துக் கொண்டிருப்பார். ஒரு நான் ஆபத்தான நிலையில் அவர் சாயியையும் ஸ்வாமியையும் பிரார்த்தித்தபோது அன்றிரவு ஸ்வாமி மிகத்தெளிவாக ''அவரை நினைத்தால் என்னை நினைத்ததற்குச் சமமே'' என்று கூறினார்.

ஒரு முறை ஸ்வாமியின் மேன்மையைப் பற்றிக் கேள்விப்பட்டு அவரைத் தரிசிக்க வேண்டுமென்று பரத்வாஜ மாஸ்டர் அவர்களின் மாமியார், மைத்துனி, மற்றும் சிலர் தலுப்பூருக்கு வந்தனர். ஆனால் அதே சமயத்தில் ஸ்வாமி குறுக்கு வழியாகப் பக்கத்துக் கிராமமான கலிச்சேடுக்குப் போய்விட்டார். அப்போது பஸ் இல்லாத காரணத்தால், மாஸ்டர் அவர்களுடைய மாமியார் (56 வயது) தமது முதுமையையும் பலவீனத்தையும் பொருட்படுத்தாமல் பட்டப்பகல் வெயிலில் மூன்று மைல்கள் நடந்து சென்று ஸ்வாமியைத் தரிசித்தார். அந்தச் சமயத்தில் எப்போதும் மௌன விரதத்தில் இருந்தவராய்த் தன்னை எவரும் தொட விடாத ஸ்வாமி, காகிதங்களில் விரல் முத்திரை வைத்து பக்தர்களுக்குக் கொடுத்துக் கொண்டே, விரைவாகக் காகிதங்களைத் தம் கட்டை விரலுக்கடியில் வைக்கும்படி அவர்களை ஊக்குவித்தார். அந்த வேலை மும்முரத்தில் பெண்களின் கைகள் அவர் மீது பட்ட போதும் ஸ்வாமி

ஆட்சேபிக்கவில்லை. வந்தவர்களின் பக்தி சிரத்தையை உணர்ந்து அவ்விதம் அவர்களுக்கு அருள் புரிந்தார். ஸ்வாமியின் தரிசனமும் அவரது ஸ்பர்சமும் ஸ்ரீ சாயிநாதரின் அருளினாலேயே தமக்குக் கிடைத்தது என்றும் சாயியும், ஸ்வாமியும் வேறு அல்லர் என்றும் உணர்ந்து அவர்கள் மகிழ்ந்தனர்.

தன் இறுதி நாட்களில் சாயியையே நினைத்துக் கொண்டிருந்த கப்பம்மா என்ற பக்தைக்கு ஸ்வாமி மரணத்தறுவாயில் தம் பாத தீர்த்தமும் விபூதியும் அனுப்பி நற்கதி அளித்த சம்பவத்தைப் பற்றி ஏற்கனவே கண்டோம். இந்நிகழ்ச்சியும் அவர்களிருவருக்கிடையே வேறு பாடு இல்லை என்பதை உணர்த்துகிறது.

சாதாரணமாக ஸ்வாமி ஒரு போதும் புது இராமங்களுக்கும், புதிய இடங்களுக்கும் போக மாட்டார். தாம் அடிக்கடி போகும் ஊர்களுக்கே, தங்கும் இடங்களுக்கே மீண்டும் மீண்டும் சென்று தங்குவார். எப்போதாவது பக்தர்கள் மிகவும் மன்றாடி ஸ்வாமியை எங்காவது புது இடத்துக்கு அழைத்துச் சென்றால் அங்கு ஸ்வாமி ஒரு நாள் இருப்பதே அரிதாகும். உடனே அந்த இடத்தை விட்டுச் சென்று விடுவார். அப்படிப்பட்ட ஸ்வாமி ஒரு நாள் எவருடைய அழைப்புமில்லாமலே தம் கூட்டத்தினருடன் நெல்லூர் ஜில்லாவிலுள்ள வித்யாநகருக்குச் சென்றார். அப்போதே புதிதாகக் கட்டிக் கொண்டிருந்த வீரடி சாயிபாபா மந்திரத்தில், அவரது சமாதி கட்டப்பட இருந்த மேடையின் மீது தமது புனித அக்னிகுண்டத்தை ஏற்படுத்தி அந்தக் கோயிலைப் பாவனம் செய்தார்.

இரண்டாம் நாள் அவரது சேவகர் 'வேறு ஊருக்குப் போகலாம் ஸ்வாமி' என்றபோது ''போவதற்கு வழி தெரியவில்லை ஐயா. இங்கு இருபத்தோரு கோடி நாம் கட்ட வேண்டியுள்ளது'' எனறார் ஸ்வாமி. ஆச்சார்யா எக்கிரால பரத்வாஜா அவர்கள் சாயிக்கு பூஜை செய்யும்போது ஆசனம் சமர்ப்பித்தபோது, அதுவரை படுத்துக் கொண்டிருந்த ஸ்வாமி எழுந்து அமர்ந்து கொண்டார். நைவேத்தியம் அளிக்கும் சமயத்தில் கஞ்சி வேண்டுமென்று கேட்டு ஸ்வாமி அதனைப் பருகினார். பாபாவுக்கு பக்தர்கள் ஆரத்தி செய்தபோது மிகவும் சிரத்தையோடு ஆரத்தியைக் கண்களுக்கு ஒற்றிக் கொண்டார். ''இந்தக் கோயிலில் உங்களுக்கு எப்படி இருக்கிறது?'' என்று கேட்டபோது ''மிகவும் நன்றாக உள்ளது'' என்று கூறித் தமது சங்கேத மொழியில் கோயிலை ஆசீர்வதித்தார்.

ஒருபோதும் பூக்களை ஏற்காத ஸ்வாமி ஸ்ரீபரத்வாஜா அவர்கள் அவரது பாதங்களில் ஜவந்திப்பூக்களை அர்ப்பித்து நமஸ்கரித்தபோது மௌனமாக ஏற்று ஆசீர்வதித்தார். ஸ்வாமி பூக்களை ஏற்றுக் கொள்ள

மாட்டாரே என்று எண்ணிய ஒரு சேவகர் அந்த பூக்களை எடுத்துவிட முயற்சித்தபோது ஸ்வாமி அவரைத் தடுத்து அந்தப் பூக்களை அங்கிருந்து எடுக்க விடவில்லை. ஸ்ரீபரத்வாஜா அவர்கள் ஸ்வாமியின் உருவத்திலுள்ள சாயிக்கு பூக்களை அர்ப்பித்ததால் ஸ்வாமி அவற்றை ஏற்றுத் தமக்கும் சாயிநாதருக்கும் வேறுபாடில்லை என்று தெளிவுறுத்தினார்.

பொதலகூர்வாசியான வி. பெஞ்சலய்யா கூறியது : ஸ்வாமி நடந்து கொண்டிருந்த நாட்களில் நான் அவருக்குச் சிறிது காலம் சேவை செய்தேன். பின்னர் வீட்டில் அவரது படத்தை வைத்துத் தினமும் பூஜை செய்து வந்தேன். ஒரு நாள் நான்கு வயதான என் மகள் பத்மாவை சைக்கிளில் அழைத்துப் போய்க் கொண்டிருந்த போது விபத்து ஏற்பட்டு அவளது கால் எலும்பு முறிந்தது. அவளது காலைச் சரி செய்யுமாறு ஸ்வாமியை மனமுருகிப் பிரார்த்தித்தேன். அன்றிரவு ஸ்வாமிக்கு பதிலாக சாயி கனவில் ''கால் சரியாகிவிடும் அப்பா. கவலைப்படாதே'' என்று கூறி அவளுக்கு ஒரு சாறு பூசி கட்டுப் போட்டார். சாயி கூறிய படியே ஒரே ஒரு முறை கட்டியவுடனே முறிந்த எலும்பு சேர்ந்து கொண்டு மகள் நன்றாக நடக்க ஆரம்பித்தாள். கனவில் பாபா வந்த மறுநாள் நெல்லூரிலுள்ள சாயிமந்திரத்துக்குப் போய் பாபாவுக்கு பூஜை செய்வித்து ஒரு பாபாவின் படம் கொண்டு வந்து ஸ்வாமியின் படத் தருகே வைத்து இருவரையும் பூஜித்து வருகிறேன். அவர்கள் இருவருக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை. இல்லாவிடில் சாயியைப் பற்றி எதுவுமே தெரியாமல், ஸ்வாமியைப் பூஜித்துவந்த எனக்கு சாயிபாபா எப்படி தரிசனமளிப்பார்?

''1986-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில், ஸ்வாமியின் பால் ஆழ்ந்த பக்தியும் என்னிடமும் பாசம் உள்ள எனது மைத்துனி அபாய கரமாக நோய்வாய்ப்பட, அவளை உடனே சென்னைக்கு அழைத்துச் சென்றனர். அவளைக் காத்தருளி அவளை நான் மீண்டும் பார்க்கும்படிச் செய்யுமாறு ஸ்வாமியைப் பிரார்த்தித்தேன். உடனே என் கண்கள் மூடிக்கொள்ள எனக்கு ஒரு காட்சி ஏற்பட்டது. சாயிபாபா என் அருகில் வந்து என் மைத்துனியைக் காட்டுவதாகக் கூறி ஒரு கணத்தில் என்னைச் சென்னைக்கு அழைத்துச் சென்று அவளது கட்டிலருகில் நிற்க வைத்தார். ''அவளுக்கு நிச்சயமாகக் குணமாகிவிடும். இதோ ஊசி போடுகிறேன்'' என்று ஊசி போட்டார். உடனே எனக்கு விழிப்பு ஏற்பட்டது. என் மைத்துனிக்குக் கடிதம் எழுதி விசாரித்தபோது சரியாக எனக்குக் காட்சி ஏற்பட்ட அதே சமயத்தில் அவளுக்கும் சாயி கனவில் காட்சியளித்து ஊசி போட்டு விட்டுக் குணமாகிவிடும் என்று ஆசீர்வதித்தாரென்று கடிதம் வந்தது. விரைவிலேயே அவள் பூரண குணமடைந்தாள். சாயியும் ஸ்வாமியும் வேறு அல்லர். நாமரூபங்களைக் கடந்த குரு தத்துவமே அவர்கள்.''

24. மஹாசமாதி

ஸ்வாமி தாம் சமாதியடைவதற்கு இரண்டரை ஆண்டுகளுக்கு முன்பு தமது சஞ்சாரங்களை நிறுத்திவிட்டு கொலகமூடியிலுள்ள மண் குடிசையில் வசிக்க ஆரம்பித்தார். இரவும் பகலும் பொருள் விளங்காத மொழியில் உரத்த குரலில் கத்தியவராக, தாம் கூறிய மொழிகளை குரவையாவை உரக்கத் திரும்பக் கூறும்படிக் கூறுவார். குரவையா களைத்துப் போய் அவ்வாறு கூறுவதை நிறுத்திவிட்டால், ''என்னய்யா, சொல்லவில்லை; சொல்லு'' என்று அவசரப்படுத்துவார். ஸ்வாமியின் மொழிகளைத் திரும்பக் கூறிக் கொண்டு இரவும் பகலும் குரவையா அருகில் இருக்க வேண்டியதுதான். அவர் உணவுக்காகப் போனபோது வேறொருவர் அவ்வாறே பின்மொழிய வேண்டியதுதான்.

சமாதியடைவதற்குச் சில நாட்களுக்கு முன் ஸ்வாமி தமது துப்பட்டிகள், கோவணங்கள் முதலியவற்றை குரவையாவிடம் எண்ணிக் கொடுத்து ''இவற்றை எல்லாம் பத்திரமாக வை ஐயா'' என்றார். ''ஸம்பன்னத்வம், சாதாரணத்வம், ஸத்குரு சேவை'' என்று அடிக்கடி உரத்த குரலில் கூறிக் கொண்டே இருந்தார்.

சமாதியடைய ஒரு ஆண்டு இருக்கையில் ''செருப்புக்கள் ஐயா செருப்புக்கள்'' என்று அடிக்கடி கேட்டார். மரப்பலகைகள் முதலியவை அளித்தபோது ''இவையல்ல ஐயா, நிஜமான செருப்புக்கள் வேண்டும்'' என்றார். சந்தன மரத்தாலான பாதுகைகள் செய்ய பக்தர்களுக்கு முடியவில்லை. ஒரு நாள் ரோசிரெட்டியின் மகன் மரப்பாதுகைகள் செய்வித்து ஸ்வாமிக்கு சமர்ப்பிக்க வேண்டுமென்று கொண்டு வந்து கொண்டிருக்கையில் ஸ்வாமி ஆசிரமத்தில் ''செருப்புக்கள், செருப்புக்கள்'' என்று கத்திக் கொண்டிருந்தார். அவர் கொண்டு வந்த பாதுகைகளை ஸ்வாமியிடம் அளித்த போது அவற்றை மார்போடு அணைத்துக் கொண்டு நீண்ட நேரம் அமர்ந்திருந்தார். அந்தப் புனிதமான பாதுகைகளை ஸ்வாமி உடலைவிடுத்த மண்குடிசையில் காணலாம்.

அன்று ஸ்ரீராமன் தன் பிரதிநிதியாகத் தன் பாதுகைகளையே பரதனுக்கு அருளினார். தத்தகேஷ்திரங்களான கந்தர்வபுரத்திலும், நரஸோபாவாடியிலும், ந்ருஸிம்ஹஸரஸ்வதி போன்ற மஹான்கள் தமது பிரதிரூபமாகத் தம் பாதுகைகளையே பிரதிஷ்டை செய்தனர். அக்கல்

கோட் ஸ்வாமி கூடத் தம் சிஷ்யர்களுக்குத் தம் பாதுகைகளையே அருளினார். அத்தகைய மஹான்களின் சம்பிரதாயத்தில் வந்த ஸ்வாமி கூடத் தம் திவ்ய சக்தியைத் தம் பாதுகைகளில் அடக்கி அவற்றைத் தமது பிரதிஉருவமாக நமக்கு அளித்துள்ளார். அவற்றை நாம் மிகவும் பக்தி யோடு பூஜித்து அவரது அருளைப் பெற வேண்டும்.

1982-ஆம் ஆண்டு ஸ்ரீராமநவமியன்று சீதா, ராம, லக்ஷ்மணர்கள் வந்து ''உனது காலம் முடிந்துவிட்டது; உடலை விட்டுவிட்டு வந்துவிடு'' என்று ஸ்வாமியை அழைத்த காட்சியைக் குரவையா தெளிவாகக் கண்டார்.

ஸ்ரீராமநவமி அன்று ஸ்வாமிக்கு மிகவும் தீவிரமாக நோய் ஏற்பட்டது. அன்றே அவர் தேகத்தியாகம் செய்து விடுவாரோ என்று பக்தர்கள் பயந்தனர். ஆனால் மறுநாளே அவர் ஆரோக்கியமடைந்தார்.

சமாதியடைய இரண்டு மாதங்கள் இருக்கையில் ஸ்வாமிக்கு ஆஸ்துமா நோய் ஏற்பட்டுப் பலவீனம் அடைந்தார். ஒரு நாள் ''நான் போகிறேன்'' என்று சீட்டு எழுதுவித்தார். நினைவு இல்லாமல் பலமணி நேரம் இருந்தார். எல்லோரும் ஸ்வாமி உடலை விடப்போகிறார் என்று கருதிச் சோகமடைந்தனர். சிலமணி நேரத்துக்குப் பின் அவர் எழுந்து அமர்ந்து ''மேலுலகத்தவர் ஒத்துக்கொள்ளவில்லை. இன்னும் சிறிது காலம் இருந்து விட்டு வரும்படிக் கூறினார்கள் ஐயா'' என்றார்.

ஸ்வாமி சமாதி அடைய ஒரு வாரம் முன்பிருந்து அவரது முகத்திலுள்ள களை குறைய ஆரம்பித்தது. குரவையாவுக்கு அடிக்கடி ஸ்வாமியிடம் எட்டுதலை கொண்ட ஒரு நாகம் காட்சியளித்து வந்தது. சமாதி அடைவதற்கு முன்னிரவு (23.8.82) அது ஸ்வாமியைவிட்டுப் போனதாக குரவையாவுக்குக் காட்சி ஏற்பட்டது.

ஸ்வாமி சமாதியடைய நான்கு நாட்கள் இருக்கும் போது குரவையாவுக்கு ஒரு கனவுக் காட்சி ஏற்பட்டது. ஒரு தெய்வீகமான ரதம் வர, அதில் ஸ்வாமியை ஏற்றிக் கொண்டனர். குரவையா தானும் ஏற முயல ''நீ இப்போது வருவதற்கில்லை, இறங்கு'' என்று பலவந்தமாக அவரை இறக்கிவிட்டு ஸ்வாமியை மட்டும் ரதத்தில் ஆகாயத்தில் அழைத்துக் கொண்டு சென்றனர். மூன்று நாட்களுக்கு முன்பு, ஏற்கனவே கட்டப்பட்டுள்ள ஸ்வாமியின் சமாதி மந்திரில் பூஜிக்கப் பட்டு வரும் ஸ்வாமியின் படம், ஸ்வாமியின் பின்னாலுள்ள ஷீரடி சாயிபாபாவின் படத்துக்கருகில் வந்து நின்றது போல் குரவையாவுக்குக் காட்சி ஏற்பட்டது. அப்போது ஸ்வாமி மிகவும் பலவீனமாக இருந்தார். ஸ்வாமி கூட பாபாவைப் போல் மறைந்துவிடப் போகிறார். இனிமேல் அவரது படத்துக்குத்தான் பூஜை செய்து கொள்ள வேண்டும் போலும் என்று கருதினார் குரவையா. அதே உண்மையாயிற்று. மூன்று நாட் களுக்குப் பிறகு ஸ்வாமி சமாதியடைந்தார்.

சமாதி அடைவதற்கு முதல் நாள் ஸ்வாமி ''பொழுது சாய்கிறது ஐயா'' என்று மீண்டும் மீண்டும் உரக்கக் கூறினார். ஸ்வாமி தமது காலம் முடிவுக்கு வந்து கொண்டிருப்பதையும் அதே சமயத்தில் பக்தர்களின் ஆயுள் கூடக் கழிந்து கொண்டிருப்பதால் அவர்கள் விரைவாகத் தம் காலத்தை நல்ல முறையில் கழிக்க வேண்டுமென்பதையும் உணர்த்தினார். ரோசிரெட்டியின் இறுதி நாட்களில் அவருக்குக் கூட இதே விதமாகப் பொழுது சாய்வதைப் போன்ற காட்சி ஏற்பட்டது.

ஸ்வாமி சமாதி அடைவதற்கு முன்பு அவரது குடிசையிலுள்ள எல்லாப் படங்களுக்கும் பூஜை செய்துவிட்டு, ஸ்வாமிக்கு ஆரத்தி செய்த பின்னர் எல்லாப் படங்களுக்கும் ஆரத்தி எடுப்பது புஜ்ஜையாவின் வழக்கம். ஸ்வாமி சமாதி அடைந்த தினமான ஆகஸ்டு 24, 1982 அன்று பகல் ஸ்வாமி ஒரு பக்கமாக ஒருக்களித்துப் படுத்துக் கொண்டிருந்தார். புஜ்ஜையா ஆரத்தி எடுத்த போது அவர் சரேல் என்று புஜ்ஜையாவின் பக்கம் திரும்பி தம் வலது உள்ளங்கையை ஆரத்தியை நோக்கிக் காட்டிவிட்டுப் படுத்துக் கொண்டார். அதே, ஸ்வாமி உடலோடு இருக்கும் போது பக்தர்கள் அவருக்கு அளித்த இறுதி ஆரத்தியாகும். சிலநாட்களாக குரவைய்யா படித்து வந்த மாதவதாஸ் ஸ்வாமியின் சரித்திரம் அன்றே பூர்த்தி ஆயிற்று. அந்தச் சரித்திரத்தில் விமானம் வந்து மாதவதாஸ் ஸ்வாமியை மேலுலகத்திற்கு அழைத்துச் சென்ற நிகழ்ச்சி இருந்தது. அன்றே சற்று நேரத்தில் ஸ்வாமி மஹாசமாதி அடைந்தார்.

ஸ்வாமியின் சேவகர்களும் பக்தர்களும் துக்கம் அடைத்தனர். ஸ்வாமியின் உடலை ஐந்தாவது நாள் அதாவது ஆகஸ்டு இருபத் தெட்டாம் தேதிவன்று சமாதி செய்வார்களென்று ஆந்திரஜோதி, ஆந்திரப்பத்திரிகை போன்ற தினசரிப் பத்திரிகைகளில் வெளியிட்டனர்.

அந்த ஐந்து தினங்களிலும் ஜனங்கள் கூட்டங்கூட்டமாக வந்து ஸ்வாமியைத் தரிசித்துக் கொண்டனர். ''ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே, ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே'' எந்த மஹாமந்திர பஜனை நிரந்தரம் தொடர்ந்து நடந்தது. யோகநிஷ்டையில் உள்ள ஸ்வாமி எந்த நிமிடத்திலும் கண் விழிப்பார் என்று சேவகர்களும் பக்தர்களும் எதிர்பார்த்து ஏமாந்தனர். மூன்று நாட்கள் கழிந்த போது உடல் மிகவும் உப்பிவிட்டது. அதைக் கண்ட பல்லம்ரெட்டி கிருஷ்ணா ரெட்டி, மஹானான ஸ்வாமியின் உடல் சாதாரண மனிதரின் உடல் போல உப்பி விட்டதே என்று நினைத்தார். ஸ்வாமியின் உடலுக்கு ஸ்னானம் செய்வித்த போது கைபட்ட இடத்தி லெல்லாம் தோல் உரிந்துவந்தது.

தன் உடலின் மேல்புறம் உள்ள உடைகளை அகற்றிவிட்டு கிருஷ்ணாரெட்டி சமாதிக் குழியில் இறங்கி ஸ்வாமியின் திருவுடலை

ஏந்தி ஸமாதியில் வைத்துவிட்டு வெளியே வந்தபோது அவரது மார்பின்மீது அப்போதே வடிந்த ரத்தம் ஒட்டிக்கொண்டிருப்பதைக் கண்டவர் யாவரும் வியந்தனர். அவருக்கு எந்தவிதக் காயமும் இல்லை. ஸ்வாமியின் சரீரத்தைக் குரவையா ஆவேசத்தோடு தன் கையில் எடுத்துக் கொண்டு ஆசிரமத்திலிருந்து சமாதி மந்திருக்கு எடுத்துச் செல்லும் போது ஸ்வாமியின் புஜத்தில் முள் கிறியிருக்க வேண்டும். அதனால் ஸ்வாமியின் உடலிலிருந்து வடிந்த ரத்தமே அது என்று அனைவரும் உணர்ந்தனர். மூன்று நாட்களுக்கு முன் சமாதி அடைந்த ஸ்வாமியின் உடலிலிருந்து புதுரத்தம் வந்தது மிகவும் ஆச்சரியம். அது கிருஷ்ணாரெட்டிக்கு ஏற்பட்ட சந்தேகத்துக்கு ஸ்வாமி அளித்த பதில் ஆகும்.

ஏற்கனவே ஸ்வாமி தம் கரத்தால் அஸ்திவாரக்கல் நாட்டி ஆசீர்வதித்தபின் எழுப்பப்பட்டிருந்த சமாதிமந்திரத்தில் நான்கு அடிகள் நீளம் நான்கு அடி அகலம், ஆறடி ஆழம் கொண்ட குழி வெட்டி அந்தக் குழியில் முற்றிலும் சிமெண்டின் உதவியோடு கற்கள் பதித்து, அதில் ஸ்வாமியின் படுக்கையை விரித்து ஸ்வாமியின் திருவுடலைக் கிழக்கு முகமாக அமரவைத்துப் பட்டுடையினால் போர்த்தினர். காலியிடத்தில் சந்தனத்தூள் கற்பூரம், உப்பு, பூமாலைகள் முதலியவற்றைப் போட்டு அவரது கழுத்துவரை நிரப்பினார்கள். பின்னர் கொஞ்சம் மண்போட்டு அதன் மேல் அத்தர், பன்னீர் முதலிய வாசனைத் திரவியங்களை ஊற்றினர். அவரது முகம் தெய்வீகக் களையோடு ஜொலித்துக் கொண்டிருக்கையில் மிகவும் துக்கத்தோடு கடப்பைக் கல்லால் மூடினர். அதன் மேல் ஸ்வாமி உபயோகித்த துப்பட்டியை விரித்து அதன் மேல் அவரது சட்டியையும் வைத்துச் சுற்றிலும் செங்கற்களால் விளிம்பு கட்டி, சமாதி முழுவதையும் பலிங்குக் கற்களைப் பதித்து மூடினர்.

நாற்பதாவது நாள் மண்டலாராதனை வரைக்கும் அன்னதானமும் பஜனையும் தொடர்ந்து நடந்து வந்தன. மண்டலாராதனை அன்று சுமார் பத்தாயிரம் பக்தர்கள் கலந்து கொண்டு ஸ்வாமிக்கு மரியாதை செலுத்தினர். அன்று பல ஊர்களிலிருந்து ஹரிதாசர்கள், பகவத்கீதை உபன்யாசகர்கள், பஜனைக் குழுவினர், பண்டரி பஜனைக்காரர்கள் முதலியவர்கள் வந்து தத்தம் நிகழ்ச்சிகளை நிறைவேற்றினர். வந்த பக்தர்கள் அனைவருக்கும் ஸ்வாமியின் அருளினால் அறுசுவை உணவு வழங்கப்பட்டது. அது முதல் தினமும் காலை நான்கு மணி, பகல் பதினோரு மணி, மாலை ஆறரை மணி சமயங்களில் பூஜையும், நிவேதனமும் இரவு ஒன்பது மணிக்கு பஜனையும் எவ்விதத் தடங்கலு மின்றி நடந்து வருகிறது. ஸ்வாமி ஏற்றிய அக்னியும் அவரது சமாதிக்குப் பின் தொடர்ந்து எரியவிடப்பட்டு வருகிறது. தினமும் இருமுறை அன்னதானம் செய்யப்படுகிறது.

25. ஸ்வாமியின் உண்மையான நிலை

ஸ்வாமியின் பௌதிக வாழ்வு முற்றுப் பெற்றாலும் அமரரான அவருடைய சக்தி அன்று போலவே இன்றும் பணிசெய்து வருகிறது. சூர்ய சந்திரர்கள் உள்ளவரைக்கும் தம் லீலைகள் நடக்கும் என்று அவரே கூறியுள்ளார். அவருடைய மொழிகளைக் கொண்டே அவருடைய உண்மையான நிலை எத்தகையது என்பதைக் காண்போம்.

ஒரு முறை பாலயோகியைப் பற்றிப் பேசும்போது ஸ்வாமி ''அவர் தன் வேலையைப் பார்த்துக் கொண்டு போகிறவர் தானே ஐயா. அவர் உலகத்தவர்களின் விஷயத்தைப் பற்றி அக்கறை கொள்ள மாட்டார். நான் எல்லோருடைய கணக்குகளையும் தீர்க்க வேண்டு மல்லவா'' என்றார். அதனால்தான் சமாதியடைய இரண்டு ஆண்டுகள் முன்புவரை, இடைவிடாமல் பல்வேறு இராமங்களில் சஞ்சரித்தவராய் பக்தர்களின் உலகியல் தேவைகளையும் ஆத்மீக வாழ்வு பற்றிய பொறுப்புக்களையும் நிறைவேற்றி வந்தார். அத்தகைய பிரயாணங்களில் அவர் எவ்வளவோ உடல் கஷ்டங்களை அனுபவித்தார். அந்த முதிய வயதில் அவர் உணவு விஷயத்தில் கூடப் பல அசௌகர்யங்களைப் பொறுத்துக் கொள்ள வேண்டி வந்தது. அன்று பக்தர்கள் பால் அத்தகைய கருணையை அவர் பொழிந்ததாலேயே இன்று அவரது ஆசிரமத்தில் எவ்வளவுபேர் வந்தாலும் இல்லையென்னாமல் அள்ள தானம் நடத்துகிறார்கள் ஸ்வாமியின் அன்பர்கள். தமது தபோசக்தியின் மூலம் அவர் மக்களுக்குச் செய்த நன்மைகளை விவரிப்பது என்பது நம்மால் இயலாத பணி ஆகும். மழையில்லாமல் ஜனங்கள் துன்பப் படும் இடங்களில் காலமில்லாத காலத்தில் எவ்வளவு முறை மழை பெய்வித்தாரென்று நம்மால் கணக்கிட முடியாது.

ஒரு முறை ஸ்வாமி ''ராவணனைக் கொன்றது தசரதனின் மகனான ராமன் அல்ல, நானே! மூன்று அடிகளில் அவன் விழுந்து விட்டான். பிரஹலாதனின் பாத்திரத்தில் நடித்ததும் நானே. எல்லோரை யும் விழுங்கியதும் நானே'' என்றார். ஸ்ரீராமகிருஷ்ணர், விவேகானந்தரிடம் ''யார் ராமனோ, யார் கிருஷ்ணனோ அவனே தான் இந்த ராம கிருஷ்ணன்'' என்று கூறியது இங்கே ஒப்பிடத்தக்கது.

மற்றொரு முறை ஸ்வாமி ''எல்லா உயிர்களிலும் வெங்கையா இருக்கிறார் என்று எழுதிக்கொள்'' என்று சீட்டு எழுதுவித்தார்.

ஸ்வாமி ஸமாதி அடைந்தபோது அவரைத் தரிசித்துக் கொள்ள முடியவில்லையே என்று மாலேபல்லி செஞ்சம்மா வருந்தினாள். அன்றிரவு ஸ்வாமி அவளது கனவில் தரிசனமளித்து ''நான் எங்கும் போகவில்லை; இங்கேயே உள்ளேன்'' என்றார்.

ஸ்வாமி சமாதியடைந்த அன்று இரவு ஸ்ரீராமய்யா நாகுல வெல்லடூரில் ஸ்வாமியின் படத்துக்குப் பூஜை செய்து கொண்டிருக்கும் போது ஸ்வாமி பெரும் ஒளியோடு காற்றிலே வந்து அவரது குடிசையில் சுற்றிலும் திரிந்தது போல் காட்சி கிடைத்தது. விடிகாலையில் ஸ்வாமி உடலை நீத்துவிட்ட செய்தி அவருக்குத் தெரிந்தது.

'ஆயிரம் ஆடுகளிடையே இருந்தாலும் நம் ஆட்டைக் காலைப் பிடித்து இழுத்துக் கொண்டு வரலாம் ஐயா' என்றார் ஸ்வாமி. அதாவது சாயியைப் போலவே அவரும் தம் பக்தர்கள் எங்கே இருந்தாலும் அவர்களைத் தம்மருகே சேர்த்துக் கொள்வார் என்று அபயமளித்தார்.

வேலூர் ராமாநாயுடுவிடம் ஸ்வாமி ''ஐயா நான் எல்லோரையும் போலவே பிச்சம்மா, பெஞ்சலநாயுடுவுக்குப் பிறந்தேன் என்று எண்ணுகிறாயா?'' என்று கேட்டார். பிறந்த போதே தாம் பிறப் பிறப்புக்களைக் கடந்த ஆத்மா என்ற ஞானம் அவருக்கிருந்தது என்பதை இம்மொழிகள் தெளிவுறுத்துகின்றன.

சலமாநாயுடு ஸ்வாமியிடம் ''ஸ்வாமி, ராமன், கிருஷ்ணன், முதலியவர்களுக்குக் கூட குரு இருக்கிறார்கள். உங்களுக்கு மட்டும் குரு இல்லையே, ஏன் ஸ்வாமி?'' என்று கேட்டார். ஸ்வாமி ''சலமாநாயுடா, உனக்கென்ன பைத்தியமா? இது பத்தாவது பார்வை; உனக்குத் தெரியாது. உனக்கு என்ன வேண்டுமென்று எண்ணினாலும் அவை தானாகவே வரும். பிறகு எனக்குக் குரு எதற்கய்யா?'' என்றார். அதாவது அவர் அப்போதுள்ள இரண்டற்ற ஆத்மீக நிலையில் அவருக்குக் குரு அவசியமில்லை என்பது அவரது கருத்து.

அன்றிரவு சலமாநாயுடுவின் மனைவிக்கு ஒரு கனவு ஏற்பட்டது. அதில் தங்கநகைகளணிந்து தங்கநிறமுடைய ஒரு பெண்மணி மற்றொரு சாதாரணப் பெண்மணிக்கு ஸ்வாமியைக் காண்பித்து ''இவரே வெங்கையஸ்வாமி'' என்று கூறுகிறாள்.

''பகவத்கீதை அறுபத்துநாலு பார்வைகளுக்குட்பட்டவருக்கே உபயோகப்படும். அதற்கு மேற்பட்ட பார்வை உள்ளவர்களுக்கு அது போதாது'' என்றார் ஸ்வாமி.

''ஒரு முறை பெஞ்சலகோனா காடுகளில் மூன்று நாட்கள் கழித்தேன். உலகத்தையே மறந்து இருந்தேன். பசியும், தாகமும் தெரியாம லிருந்தேன். மீண்டும் உலக உணர்வுக்கு வந்த போது கிராமத்துக்கு வந்து எவரையாவது கேட்டு உணவு யாசித்து உண்பேன்.''

''எனக்குப் பத்தொன்பது வயதிருக்கும்போது ஒரு பாம்பு என் காலைக் கடித்துவிட்டுப் படம் எடுத்து நின்றது. அதனைத் தடியால் அடிக்கப் போனேன். பின்னர் ''அது கடித்து விட்டதல்லவா, இனி அதை அடித்தால் என்ன பயன்?'' என்று எண்ணி வீட்டுக்குப் போனேன். ஆனால் எனக்கு விஷம் ஏறவில்லை. எப்போதும் போல உணவு உண்டு உறங்கினேன்'' என்று ஸ்வாமி தம் சேவகர்களிடம் கூறினார்.

''இவர்களெல்லாம் ரிஷிகள்; பார், எவ்வளவு பேர் எப்படித் திரிந்து கொண்டிருக்கிறார்கள், பாருங்கள்'' என்பார். ஆனால் மற்றவர் களுக்கு எதுவும் காணப்படாது.

தம்மைத் தரிசிக்க வந்த பக்தர்களுக்குத் தாம் கூறும் மொழிகளை பக்தர்களால் எழுதுவித்து ஆசீர்வதித்துக் கொடுப்பார். அவர் புதுமையாக கோடிகள், படங்கள், மணங்குகள், ராசிகள் என்று எழுதும்போது ''உங்கள் பாஷை புரியவில்லை ஸ்வாமி'' என்று கூறினால் ''பதினாறு மொழிகளுக்கு மேல் உயர்ந்த மொழி தேவநாகரி மொழி. இந்த மொழி கலியுக தெய்வங்களுக்கே பிடிபடவில்லை. உங்களுக்கெப்படி புரியும்? இது மேலுலகத்தின் கணக்கு'' என்றார். சிலருக்கு 'பத்தாவது பார்வை யுள்ள மனிதன்', 'பத்தாவது பார்வையில் எழுதியது' என்று கூறுவார். அதன் பொருள் என்னவென்று கேட்டபோது ''அது தெய்வீகப்பார்வை. சமுத்திரத்தின் மீது கூட அந்தப் பார்வைக்குத் தடங்கலே இல்லை' என்றார். மற்றொரு முறை ''கலியுகத் தெய்வங்களின் பார்வை ஆறு லட்சப் பார்வை. நாங்கள் கூட ஆறு லட்சப் பார்வை வரைக்கும் போய் வேலை செய்ய முடியும்'' என்றார். ஸ்ரீமும்முடிவரம் பாலயோகியின் பக்தர் வந்தபோது ''பாலயோகி நான்கு லட்சப் பார்வையில் இருக் கிறார்'' என்றார்.

தலுப்பூர் சொல்லோபல்லியில் ஸ்வாமி இருக்கும்போது நெல்லூரில் இருந்து வந்த ஒரு ரெட்டியாருக்கு இத்தகைய சங்கேதச் சொற்கள் நிரம்பிய ஒரு சீட்டு எழுதுவித்துக் கொடுத்தார். அப்போது அவர் அதன் பொருளைத் தமக்குப் புரியும்படி விளக்கிக் கூறும்படி வேண்டினார். அது தேவபாஷை என்றும் அதை விளக்கிக் கூறக்கூடாது என்று ஸ்வாமி கூறினாலும் அவர் மீண்டும் வற்புறுத்தி 'ஸ்வாமி நீங்கள் அதனை விவரித்துக் கூறினால் நீங்கள் கேட்கும் தக்ஷிணை கொடுப்பேன்' என்றார். 'அப்படியானால் நான்கு லக்ஷம் கட்டு, சொல்கிறேன்' என்றார் ஸ்வாமி. அவர் வாய் பேசாது போய்விட்டார்.

இதே போல் வேறு எவ்வளவோ பக்தர்கள் கேட்ட போது ''இது தேவ பாஷை ஐயா. இதற்குப் பொருள் கூற வேண்டுமென்றால் மீண்டும் ஒருவர் மேலுலகில் இருந்து இறங்கி வர வேண்டும்'' என்றார். ஸ்வாமியின் உண்மையான நிலை அத்தகையது.

ஸ்வாமியிடம் நான் (ஆசிரியர்) கண்ட சில உண்மைகள் :

ஸ்வாமி தலுப்பூரில் இருந்தபோது, அந்நாட்களில் மின்சாரவசதி இல்லாத காரணத்தால் ஒரு லாந்தர் விளக்கைத் தொங்க விட்டிருந்தனர். இரவு பத்துமணி அளவில் ஸ்வாமி, 'ஐயா, இது இரவா, பகலா?' என்று கேட்டார். ''ஸ்வாமி, லாந்தர் விளக்கு எரிகின்றதே, இரவா, பகலா என்று கேட்கிறீர்களே'' என்று சேவகர்கள் சிரித்தனர்.

மற்றொரு நாள் ஸ்வாமி ''ஐயா, இது எந்த ஊர்?'' என்று கேட்டார். அப்போது மாலை வேளை. ''ஸ்வாமி இது எந்த ஊர் என்று உமக்குத் தெரியவில்லையா? இது தலுப்பூர் அல்லவா ஸ்வாமி?'' என்று எல்லோரும் சிரித்துக் கொண்டனர். அதாவது இரவு பகல் தெரியாத நிலையில், எந்த இடத்தில் இருக்கிறோம் என்று தெரியாத நிலையில் ஸ்வாமி இருந்தார். அவதூதஸ்திதியைப் பற்றி அறியாத சேவகர்கள் சிரித்தனர். ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் கூட ஒரு முறை ''இன்று பௌர்ணமியா, அமாவாசையா?'' என்று கேட்டார்.

அது கடுமையான கோடைகாலம், ஏப்ரல் மாதம். தலுப்பூரின் கிழக்குக் கோடியில் உள்ள மஸ்தானய்யாவின் வீட்டில் தங்கியிருந்தார் ஸ்வாமி. அந்த வீட்டின் முன்புறம் சிறு முட்செடிகளைத் தவிர வேறு எந்தவித நிழலும் இல்லை. ஸ்வாமி அங்கு ஓரிடத்தில் நெருப்பை எரியவிட்டுக் கொண்டு அமர்ந்திருந்தார். பகல் இரண்டு மணியளவில் நானும் என் நண்பர் டி.வி. சேஷகிரிராவும் ஸ்வாமியைத் தரிசிப்பதற் காகச் சென்றோம். பத்து நிமிடங்களில் என் ரப்பர் செருப்புகள் உஷ்ணமடைந்து அவற்றின்மேல் நிற்கமுடியவில்லை. சேஷகிரிராவ் சற்று தூரத்திலுள்ள வேப்பமரத்தடிக்குப் போய்விட்டார். நான் சில முட்செடிகளை என் செருப்படியில் போட்டுக் கொண்டு ஸ்வாமியைப் பார்த்தவாறே அமர்ந்திருந்தேன்.

கிழக்கு முகமாக அமர்ந்திருந்த ஸ்வாமி, நெருப்பைத் தம் கையிலிருந்த தடியால் சரி செய்து எரியவிட்டுக் கொண்டு, நெருப்புக்கு அருகிலேயே இருந்தார். அவரது உடலில் கோவணம் தவிர வேறு எதுவும் இல்லை. உடல் முழுதும் வியர்த்துள்ளது. உடலிலும் முகத்தி லும் கரியும் விபூதியும் நிறையப் படிந்திருந்தன. ஸ்வாமியின் தலையில் கூட அடர்த்தியான முடி இல்லை. நான் நெருப்பிலிருந்து எவ்வளவோ

தூரத்தில் காலுக்குச் செருப்புக்கள், செருப்புக்களுக்குக் கீழே முள் சருகுகள், தலைமேல் கைக்குட்டை, உடல் முழுதும் துணிமணிகள் ஆகியவற்றோடு இருந்தும் என்னால் வெயிலின் கடுமையைத் தாங்க முடியவில்லை. ஸ்வாமி எப்படி அவ்வாறு இருக்கிறார் என்று ஆச்சரியத் தோடு பார்த்துக் கொண்டே அமர்ந்திருந்தேன். அது அவதூதஸ்திதி என்று எனக்கு அப்போது தெரியவில்லை.

அந்நாளைய ஜமீன்தார்களில் ஒருவரான வெங்கட்ராமராஜு யாகம் நடத்த விரும்பினார். மாதவதாஸ் ஸ்வாமியைப் போல் நாக்கில்லாத மணியை ஒலிக்க வைக்கக் கூடிய மஹானைத் தேடிய அவர் ஸ்வாமியைக் குறித்துக் கேள்விப்பட்டு அவரை அழைத்து வரும்படி ஒருமனிதனை அனுப்பினார். வெங்கட்ராமராஜுவின் பிறப்புச் செய்தி, அவரது பிறந்த தேதி முதலியவற்றை எழுதுவித்து அந்தச் சீட்டை வந்த மனிதரிடம் கொடுத்தனுப்பினார் ஸ்வாமி. மிகவும் சரியாகக் கூறப் பட்டிருந்த அந்தச் செய்திகளைக் கண்டு ஸ்வாமியின் மீது பக்தி ஏற்பட்டு ஜமீன்தாரும் அவரது மனைவி இருவருமாக ஸ்வாமியை அழைப்பதற் காக வந்தனர். அந்தச் சமயத்தில் ஸ்வாமி சேற்றில் இறங்கித் தலை யெல்லாம் சேற்றைப் பூசிக்கொண்டு பைத்தியக்காரனைப் போல் இருந்தாராம். ஜமீன்தார் தம்பதிகள் அந்தச் சேற்றில் இறங்கி நமஸ் கரித்துத் தாம் நடத்தும் யாகத்துக்கு வரும்படி ஸ்வாமியை வேண்டினர். பின்னர் ஸ்வாமி அந்த யாகத்துக்குப் போய் நாக்கு இல்லாத மணியை ஒலிக்க வைத்தார்.

26. ஸ்வாமியின் அருளைப் பெறும் வழி

எண்ணற்ற போலி குருக்களுக்கிடையே உண்மையான குருவைக் கண்டு தெரிந்து கொள்வதே பெரிய விஷயம். அதன் பின்னர் அவரது ஆத்மீக நிலையை ஆழ்ந்து புரிந்து கொள்ளுவதோ, ஊகிப்பதோ அவ்வளவு எளிதான பணியன்று. அவ்வாறு அவரது நிலையைத் தெரிந்து கொண்டபின் அவரது சொற்களில் திடமான நம்பிக்கை ஏற்பட்டு அவற்றை முழுமையாகக் கடைப்பிடிக்க வேண்டுமென்றால் நம்மிடம் முழுமையான பக்தியும் ஈடுபாடும் இருக்க வேண்டும். ஸத்குருவின் சந்நிதி, அவரது சேவை முதலியவற்றால் அவருடைய அருள் நமக்குக் கிடைத்தால் மட்டுமே நமக்கு அத்தகைய நற்குணங்கள் ஏற்படும். நேரடியாக மஹான்களின் சந்நிதி கிடைக்காதபோது அவர்களின் வாழ்க்கைச் சரித்தைப் பாராயணம் செய்வது அவர்களின் சந்நிதியில் இருப்பதற்குச் சமமாகும். மேற்கூறியபடி மஹான்களின் சந்நிதி, சேவை அவர்களின் சரித பாராயணம் செய்தல் முதலியவை நமக்குக் கிடைக்க வேண்டுமென்றால், நாம் செய்யும் நல்வினைகளின் பலன் தீவினை களின் பலனைவிட அதிகமாக இருந்தால்தான் முடியும். அத்தகைய நல்வினைகள் என்ன? தேவர்கள், அந்தணர்கள், குரு, பெரியோர்கள் ஆகியோரைப் பூஜித்தலும் இறைவனுடைய நாமத்தை எப்போதும் உச்சரித்துக் கொண்டும் நினைந்து கொண்டும் இருத்தலும் ஆகும்.

எனவே இறைவனின் அருளைப் பெற பூஜை, நாமஸ்மரணை ஆகியவற்றுக்கு மிகவும் முக்கியமான இடம் உண்டு. அதனால்தான் வெங்கையஸ்வாமி எப்போதும் பஜனைகளையும் நாமஸ்மரணை செய்வதையும் வலுக்குவித்தார். மேலும் அவரே 'ஓம் நாராயணா, ஆதி நாராயணா' என்ற நாமத்தை தம்பூரா மீட்டிக் கொண்டே மணிக்கணக் காக இனிமையாகப் பாடுவார். தன்னைத் தரிசித்துக் கொள்வதற்காக வந்தவர்களை 'பஜனை செய்யுங்கள் ஐயா' என்று கூறி, பக்தர்கள் பஜனை செய்யும்போது மிகவும் கவனமாகக் கேட்டுக் கொண்டு அமர்ந்திருப்பார். அவர்களின் பக்தி, சிரத்தை முதலியவற்றுக்குத்

தக்கபடி பக்தர்களை ஆசீர்வதிப்பார். சிற்சில சமயங்களில் பக்தர்கள் பாடும் பஜனைகளை நிறுத்தச் சொல்லி 'ஓம் நாராயணா, ஆதி நாராயணா' என்ற நாமங்களைப் பாட வைப்பார்.

ஒருநாள் பொந்தராஜுபாளையத்தில் பக்தர்கள் சிலர் கால்களுக்குச் சலங்கை அணிந்து, கைகளில் மரப்பலகைகளை ஏந்தியவாறு உற்சாகமாக அபிநயம் செய்து நடனம் செய்து கொண்டிருந்தனர். பார்த்துக் கொண்டிருப்பவர்கள் இறைவனை நினைப்பதை மறந்து யார் நன்றாக அடி வைக்கிறார்கள், யார் நன்றாக அபிநயம் செய்கிறார்கள் என்ற விமரிசனத்தில் முழுகிப் போனார்கள். பஜனை செய்பவர்களின் கவனமும் பார்வையாளர்களை ஆகர்ஷிப்பதிலேயே இருந்தது.

சற்றுநேரம் இதைப் பார்த்துக் கொண்டிருந்த ஸ்வாமி ''அவர்கள் என்ன செய்கிறார்கள்?'' என்று கேட்டுப் பலமாகச் சிரித்தார். அவர் கூறியதன் பொருள் எல்லோருக்கும் புரிந்தது. எனவே நாம் மனப்பூர்வமான பக்தியுணர்வோடு பஜனை, நாமசங்கீர்த்தனம் செய்து ஸ்வாமியின் அருளுக்குத் தகுந்தவர்கள் ஆகவேண்டும்.

ஒருநாள் ஒரு பக்தர், ''ஸ்வாமீ, உங்களுக்கு எங்கள் கிராமத்தில் கோயில் கட்டுகிறோம். அங்கிருந்து கொண்டு எங்கள் எல்லோருக்கும் அருள் புரியுங்கள்'' என்று வேண்டினார். ஸ்வாமி, ''ஒருவர் கட்டுவது என்ன ஐயா, வெங்கையா மறைவாகப் போனபின் ஒவ்வொரு ஊரிலும் கட்டுவித்துக் கொள்வாரல்லவா?'' என்று பதிலளித்தார்.

எனவே ஒவ்வொரு கிராமத்திலும் குறைந்தது ஒருவர் அல்லது இருவராவது ஸ்ரீஸ்வாமியின் படத்தை அந்தக் கிராமத்திலுள்ள எந்தக் கோவிலிலாவது வைத்துக் கொண்டு அகர்பத்தி ஏற்றிவைத்து நாள்தோறும் ஸ்வாமியின் சரிதத்தில் குறைந்தது நான்கு லீலைகளாவது படித்துப் பின் 'ஓம் நாராயணா, ஆதிநாராயணா' என்ற நாமத்தை பஜனை செய்து பின் ஸ்வாமியின் பஜனைகளைப் பாடினால் மிகவும் நலம் தரும்.

இவ்வாறு செய்யும் மஹான்களின் சரித்திர பாராயணம் நமக்கு மட்டுமேயன்றி அந்தக் கிராமம் முழுவதுக்கும் நலத்தை அளிக்கும். ஸ்வாமியின் பாதுகாப்பையும் ஆசிகளையும் அந்தக் கிராமத்திலுள்ள ஒவ்வொருவரும் பெறும்படிச் செய்யும். மழையின்மை, வறட்சி, அதிக வெயில் முதலிய துன்பங்கள் குறையும், தொத்து நோய்களிலிருந்து பாதுகாப்பு நிச்சயமாகக் கிடைக்கும். முதலில் ஒருவர் அல்லது இருவரோடு தொடங்கினாலும், போகப்போக ஸ்வாமியின் அருளால்

அந்த பழனைக் குழு வளர்ச்சியடைந்து ஒவ்வொருவருக்கும் ஸ்வாமியின் அருள் அனுபவத்தில் தெரியும். ஒரு வாரத்தில் இறக்கவிருந்த பரீக்ஷித்துக்கு சுகமஹரிஷி கூறியது மஹான்களின் சரித்திரமே. அதுதான் பாகவதம்.

முதலில் ஸத்ஸங்கத்தை ஆரம்பிப்பதுதான் சற்று சிரமமாக இருக்கும். ஆனால் எப்படியாவது ஒரிருவராவது சங்கோஜப்படாமல் ஆரம்பித்து நடத்த முயன்றால் அதன்பின் ஸ்வாமி தம் காரியத்தைத் தாமே நிறைவேற்றிக் கொள்வார். இவ்வாறு செய்து ஸ்வாமியின் அருள் அந்தக் கிராமம் முழுதுக்கும் கிடைக்கும்படிச் செய்வதே உண்மையான நிஷ்காம கர்மா ஆகும். வாரத்துக்கு ஒருநாள் செய்வதைவிட தினமும் சத்சங்கம் செய்வது மிகவும் நலமளிக்கும். மனிதப்பிறவியை பயனுள்ளதாக ஆக்கிக் கொள்ளும் முயற்சியே இது என்று எனது சொந்த அனுபவம் தெளிவுறுத்துகிறது.

27. மஹாசமாதிக்குப் பின் நிகழ்ந்த லீலைகள்

'சூரிய சந்திரர்கள் இருக்கும்வரை இருப்பேன் ஐயா' என்று ஸ்வாமி பக்தர்களுக்கு அளித்த வாக்கு அவர் சமாதியடைந்த பிறகு நிகழ்ந்த லீலைகள் மூலமாக உண்மையென்று நிருபிக்கப்பட்டு வருகிறது. தம்மை முற்றிலும் நம்பியவர்களுக்குப் பரிபூரணமான ஆத்ம ஞானம் ஏற்படும்வரை ஸ்வாமி அவர்களினருகிலிருந்து காத்து வருகிறார். அவர் உடலுடன் இருந்தபோது தமது மேன்மையை வெளிப் படுத்தாமல் இரகசியமாக வைத்திருந்து இன்று சமாதியடைந்த பிறகு தம் மேன்மையை எல்லாத் திசைகளிலும் பரவுமாறு செய்து கொண்டு, தம்மை அறியாதவர்களுக்குக் கூடக் கனவில் காட்சியளித்துத் தம்முடைய சமாதியைத் தரிசித்துக் கொள்ளும்படிக் கூறுகிறார். அன்றைக் காட்டிலும் இன்று அவர் பக்தர்களுக்கு மிகவும் சுலபமாக எட்டும் நிலையில் உள்ளார். ஒரு முறை ஸ்வாமியின் கால்களில் பிடிப்பு ஏற்பட்டபோது மருந்து உண்ணுமாறு கூறிய பக்தர்களிடம் ''மருந்து உண்டால் நான் வந்த பணி நின்று போய்விடும்'' என்றார். ஏழை எளியவர்களைக் காப்பதே அவரது பணி. அவரது சமாதியைத் தரிசித்த வர்களுக்குத் துன்பங்கள் விலகிப் போவதே இதற்குத் தக்க சான்றாக விளங்குகிறது.

1983-ஆம் ஆண்டு ஆகஸ்டு இருபதாம்தேதி ஸ்ரீராமய்யா தம் தோட்டத்திலுள்ள குடிசையில் இருக்கும்போது ஸ்வாமி தம் தலையின் மீது ஒரு துண்டைத் தொங்க விட்டவராகத் தரிசனமளித்து ''அங்கு அவ்வளவு வேலைகள் நடந்து கொண்டிருக்கையில் நீ இங்கு உட்கார்ந்து கொண்டு தம்பூரா மீட்டிக் கொண்டிருக்கிறாயா?'' என்று இரண்டு கைகளையும் விரித்துக் காட்டிச் சைகை செய்தார். மறுநாளே அவர் கொலகமூடிக்குப் போய் அங்கு நடக்கும் ஆராதனை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு இரண்டு மாதங்கள் ஆசிரமத்திலேயே தங்கினார்.

ஸ்ரீராமய்யா நாள்தோறும் அநிகேபல்லியிலிருந்து ஆசிரமத்திற்கு பிக்ஷாள்னம் கொண்டு வருவார். ஒரு முறை அவர் தம் சொந்த ஊருக்குப் போனபோது பத்துநாட்களுக்கு சுப்பராயுடு என்ற மற்றொரு

பக்தர் பிக்ஷைக்காகப் போனார். தமது ஊரிலிருந்து 1984, ஏப்ரல் 20-ஆம் தேதியன்று திரும்பிய ஸ்ரீராமய்யா, அன்று பிக்ஷைக்குப் போகாமல் மேலும் நான்கு தினங்களுக்கு சுப்பராயுடே பிக்ஷைக்குப் போவார் என்று நினைத்துக் கொண்டு சற்று இளைப்பாறியவாறு ஸ்வாமியை நினைத்த வராக அமர்ந்திருந்தார். அப்போது ஸ்வாமி தமது தலையின் மேல் துணியைப் போட்டு மறைத்தவராக, தமது மூடிய முகத்தைக் காட்டி அவரைக் கேலி செய்வது போல் அவருக்கு ஒரு காட்சி அளித்தார். ''பிக்ஷைக்குப் போகாமல் முகத்தை மூடிக் கொண்டு மூலையில் உட்கார்'' என்று ஸ்வாமி கேலி செய்வது போல் உணர்ந்து உடனே கன்னத்தில் போட்டுக் கொண்டு பிக்ஷைக்குக் கிளம்பினார்.

1984-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் கன்னவரம் ராஜய்யா ஒரு வாரமாகக் கடுமையான ஜுரத்தால் வருந்தினார். உணவு பிடிக்க வில்லை. மிகவும் பலவீனமாக ஆகிவிட்டார். இறந்து விடுவோமோ என்று பயந்த அவர் அன்றிரவு ஸ்வாமியிடம் தம் நிலையைக் குறித்து முறையிட்டுவிட்டுத் தூங்கினார். கனவில் தம்பூரா மீட்டிக் கொண்டு ஸ்வாமி தரிசனமளித்தார். ''எப்போதும் உன்னைப் பற்றி எனக்கு வருத்தமே ஐயா. இதோ இந்தத் தம்பூராவைப் பிடி'' என்று கொடுத்தார். உடனே விழிப்பு ஏற்பட்ட ராஜய்யாவுக்கு, கடந்த ஒரு வாரமாக 104 டிகிரியாக இருந்த ஜுரம் குணமடைந்து உடல் குளிர்ச்சியாக இருந்தது. மிகுந்த பசி ஏற்பட்டுப் பால் குடித்தார். விடிந்தவுடனே சாதாரணமாகச் சாதம் சாப்பிட ஆரம்பித்தார்.

1983-ஆம் ஆண்டு, போலுமஸ்தானய்யா ஸ்வாமியின் ஆராதனைக் காக நெல்லூரில் காய்கறிகள் வாங்கி ரிக்ஷாவில் போட்டுக் கொண்டு சில கஜதூரம் வந்த பிறகு, மார்க்கெட்டில் ஒரு பையை விட்டு விட்டு வந்ததை நினைவு கூர்ந்தார். ரிக்ஷாவை ரோட்டு ஓரத்தில் நிறுத்திவிட்டு மார்க்கெட்டுக்குப் போய்விட்டு வந்து பார்த்தபோது ரிக்ஷா அங்கே இல்லை. அங்கு சுற்றுப்புறங்களில் எல்லாம் ரிக்ஷாவைத் தேடினார். ஒன்றரை மணி நேரத்துக்குப் பின் ரிக்ஷாக்காரன் வந்தான். எங்கே போனான் என்று கேட்டபோது ''ஸ்வாமி, புத்தி கெட்டுப் போய் ரிக்ஷாவை ஓட்டிக் கொண்டு போய்விட்டேன். சிறிது தூரம் போனபின், ரிக்ஷாவை ஓட்டுவதற்குச் சக்தியில்லாமல் போயிற்று. கண்களும் பார்வையிழந்தன. எவ்வளவு முயன்றும் முடியவில்லை. உடனே செய்த தப்புக்குக் கன்னத்தில் போட்டுக் கொண்டு திரும்பி வந்தேன். என்னை மன்னித்து விடுங்கள்'' என்று வேண்டினான்.

1983-ஆம் ஆண்டு காக்கு ராஜய்யாவின் காளை ஒன்று தொலைந்து போய்விட்டது. ஒரு மாதமாகத் தேடியும் கிடைக்கவில்லை. ஒருநாள் இரவு கனவில் ஸ்வாமியின் பின்னால் நடந்து சென்ற ராஜய்யா கொலக

மூடிக்கு மேற்கிலுள்ள ஒரு கிராமத்தை அடைந்தார். அந்த ஊரிலுள்ள ஒரு மாட்டுக் கொட்டிலுக்குப் போனார்கள். அவரது காளை அந்தக் கொட்டிலில் உள்ள சாணக்குவியலின் மீது நின்று கொண்டிருந்தது. ராஜய்யாவுக்கு உடனே விழிப்பு ஏற்பட்டது. விடிந்தவுடனே கொலக மூடிக்கு மேற்கே உள்ள பெனவர்த்திக்குச் சென்றார். கனவில் கண்ட மாட்டுக் கொட்டிலுக்குப் போனவுடனே, கனவில் கண்டபடியே ஆச்சரியப்படும் வகையில் அவரது காளை அங்குள்ள சாணக்குவியலின் மீது நின்று கொண்டிருந்தது.

ராய் லக்ஷ்மிநரசாரெட்டியின் ஒரு ஜோடி எருதுகள் 1983-ஆம் ஆண்டில் காணாமல் போய்விட்டன. ஒரு மாதகாலம் தேடியும் கிடைக்க வில்லை. ரெட்டியாரின் மனைவி ஒரு இரவு ஸ்வாமியின் படத்துக்கு நமஸ்கரித்து 'ஸ்வாமி, எருதுகள் இல்லாமல் எப்படி விவசாயம் செய்து குடும்பத்தைக் காப்பாற்றுவது?' என்று முறையிட்டுவிட்டுத் தூங்கினாள். அன்றிரவு ஸ்வாமி அவளது கனவில் தோன்றினார். அவரது முழங்கால் களுக்குக் கீழே முட்கள் கிறி ரத்தம் வழிந்து கொண்டிருந்தது. ''உனது எருதுகளை ஒட்டி வருவதற்குள் என்காலில் எப்படி ரத்தம் வழிகிறது பாரம்மா'' என்றார். அவளுக்கு விழிப்பு ஏற்பட்டுக் கதவைத் திறந்து பார்த்தபோது எருதுகள் இரண்டும் வாசலில் நின்று கொண்டிருந்தன. அவற்றின் உடலிலும் முட்கள் கிறி ரத்தம் வழிந்து கொண்டிருந்தது.

பனபாக சுப்பராமையா 1984-ஆம் ஆண்டில் தமது சிநேகிதர் களிடமிருந்து மன்றாடிக் கடன் பெற்று நெல்லூரில் 450/- ரூபாய்க்கு உரம் மூட்டைகள் வாங்கிக் கொண்டு ரிக்ஷாவில் போட்டுக் கொண்டு பஸ் இருக்குமிடம் போய்க் கொண்டிருந்தார். சற்று தூரத்தில் பஸ் இளம்பத் தயாராக இருப்பதைப் பார்த்து இறங்கி பஸ்ஸை நிறுத்துவதற் காக விரைந்தார். ஆனால் அதற்குள் பஸ் போய்விட்டது. திரும்பி வந்து பார்த்தால் ரிக்ஷா காணப்படவில்லை. சுற்றுப் பக்கத்திலுள்ள தெருக் கள், சந்துகள் எல்லாம் தேடியும் ரிக்ஷா காணப்படவில்லை. ஸ்வாமியை நினைத்தவராகக் கண்ணீர் உகுத்தார் சுப்பராமையா. உரமூட்டைகள் இல்லாமல் திரும்பிச் சென்று கடன் அளித்தவர்களிடமிருந்து கண்டபடி பேச்சுக் கேட்பதைவிடத் தற்கொலை செய்து கொள்வதே மேல் என்று தீர்மானித்தார். எவரோ ஒரு புண்ணியாத்மா அவரைப் பிடித்து நிறுத்தி ''இவ்வளவு ஆத்திரத்தோடும் அவசரத்தோடும் ஓடினால் ஏதாவது காருக்கடியில் அகப்பட்டுக் கொண்டால் என்ன ஆவது? உனது மூட்டைகள் எங்கும் போகாது. நிம்மதியாக இரு'' என்று ஆறுதல் கூறினார். மேலும் ஒரு மணிநேரத்தில் ரிக்ஷாக்காரன் அதே இடத்துக்குத் திரும்பி வந்து உரமூட்டைகளை ஒப்படைத்தான்.

1983-ஆம் ஆண்டில் செருகூர் கிருஷ்ணையாவுக்கு இதயவலி ஏற்பட்டு நெல்லூர் அரசு மருத்துவமனையில் இருந்தார். ஒரு முறைகள்

கட்டிலிலிருந்து கீழே கூட விழுந்தார். மருத்துவமனையில் உள்ள ஊழியர்களின் வேலை நிறுத்தம் காரணமாக வீட்டுக்குத் திரும்பினார். ஒரு நாள் இரவு பத்துமணி அளவில் உடனே போய் ஸ்வாமியின் சமாதியைத் தரிசிக்க வேண்டுமென்ற பிரேரணை ஏற்பட்டது. தனியே நடந்து போனார். கொண்டாயபாளம் ஏரிக்கு அருகில் சிவப்பு வேஷ்டி யணிந்து கைத்தடி உள்ள ஒரு மனிதர் எதிர்ப்பட்டு ''எங்கு போகிறாய்?'' என்று கேட்டார். ''கொலகமூடி வெங்கய்யஸ்வாமியிடம்'' என்று பதிலளித்தார். ''தண்ணீருக்கு மடை திருப்பிவிட்டு விட்டு நானும் வருகிறேன் போ'' என்று கூறினார் அம்மனிதர். கிருஷ்ணய்யா நான்கு அடிதூரம் நடந்த பின் திரும்பிப் பார்த்த போது அவர் காணப்பட வில்லை. ஸ்வாமியின் ஸமாதியருகில் சென்றபின் கிருஷ்ணையாவுக்கு இதயவலி ஏற்பட்டு முன் வராந்தாவில் விழுந்துவிட்டார். அங்கு பஜனை செய்து கொண்டி ருந்த பக்தர்கள் ஒருவரும் அவரை அடையாளம் கண்டு கொள்ள வில்லை. வாயிலிருந்து நுரை தள்ளியது. அப்போது யாரோ ஒருவர் அவரது முதுகில் மேல் பலமாகத் தட்டி ''போய்விடும்'' என்று கூறியது போல் இருந்தது. விடிந்தபோது எந்த மருந்தும் இல்லாமலே இதயவலி குணமாகிவிட்டது. இரவு வேளையில், இதயவலி உடைய மனிதர் எட்டு கிலோ மீட்டர் தூரம் நடந்து வந்ததே மிக ஆச்சரியமான விஷயம்.

உப்பல வெங்கையாவின் மனைவி சேஷம்மாவுக்கு 1961-ஆம் ஆண்டிலிருந்து முழங்கால்களிலிருந்து பாதங்கள் வரை மிகுந்த வீக்கமும் வலியும் ஏற்பட்டதால் இரவும் பகலும் தூக்கம் என்பதே இல்லை. எந்த மருந்துகளாலும் பயன் ஏற்படவில்லை. பூ வியாபாரி ஒருவர் ஸ்வாமியைப் பற்றிக் கூறி அவரது சமாதியை தரிசிக்கும்படிக் கூறினார். அவள் 1983-ஆம் ஆண்டில் ஸ்வாமியின் சமாதியை தரிசித்துப் பிரார்த்தனை செய்தாள். தரிசனம் செய்த மாத்திரத்திலேயே அவளது துன்பம் சற்றுக் குறைந்து அன்றிரவு உறங்கினாள். மூன்று வாரங்களில் படிப்படியாக வலி குறைந்து முற்றிலும் குணம் ஏற்பட்டது. பின்னர் வாரத்துக்கொருமுறை தவறாமல் வந்து தரிசித்துக் கொண்டு போவாள். பின்னர் சில காரணங்களால் வீட்டிலேயே ஸ்வாமி படத்துக்குப் பூஜை செய்ய ஆரம்பித்தாள். மீண்டும் முன் போலவே வலி ஏற்பட்டது. அவள் ''ஸ்வாமி, உங்களது ஸமாதி தரிசனத்துக்கு அடிக்கடி வர முடியாமல் போனாலும், இங்கேயே உங்களை எப்போதும் ஸ்மரித்துக் கொண்டு இருக்கிறேனே? மீண்டும் எனக்கு இந்த வலி வந்ததே, கருணை காட்டுங்கள் ஸ்வாமி'' என்று பிரார்த்தித்தாள். அன்றிரவு ஸ்வாமி அவளது கனவில் காட்சி அளித்து அவளது முதுகின் மேல் அடித்து ''இது என்ன ஏதாவது தலைமேலுள்ள பளுவா, இறக்குவதற்கு? மூன்று ஆண்டுகளாக இருப்பதே அல்லவா? இங்கேயே இருந்து கொண்டு

'அப்பா' என்றால் சரியாகுமா'' என்றார். விடிந்தவுடனே அவ்வளவு வலியிலும் சமாதி தரிசனத்துக்காக நடந்து போனாள். அது முதல் அவளுக்கு வலி இல்லை. ''நான் ஸ்வாமியைப் பார்க்கக் கூட இல்லையே. எனக்கு மூன்று ஆண்டுகளாக வலி என்று அவருக்கு எப்படித் தெரிந்தது?'' என்று வியந்தாள் சேஷம்மா. ''கடவுள் எல்லா இடத்திலும் இருக்கிறார்'' என்று கூறுபவர்களின் கண்களைத் திறப்பதாக உள்ளது இந்நிகழ்ச்சி. இவளது மகளுக்கும் இரத்தப்போக்கு அதிகமாக இருந்தபோது ஸ்வாமியிடம் பிரார்த்தித்துக் கொண்டபின் அந்தத் துன்பம் நீங்கியது.

1983-ஆம் ஆண்டு கொர்ரகூடி நரசிம்முலுநாயுடுவின் எருதிற்கு நோய் கண்டது. அதனை ஆசிரமத்தருகில் கட்டி வைத்து அவரது விபூதியை அதன் வாயில் போட்டு, உடல் முழுதும் பூசி, மூன்று நாட்கள் ஸ்வாமியையே பிரார்த்தித்தார். அதற்கு நோய் குறைவதும், அதிக மாகவதுமாக இருந்தது. அவர் நம்பிக்கையிழந்து இனி இந்த எருது பிழைக்காது என்று நிச்சயித்துக் கொண்டு 'ஸ்வாமி மீது நம்பிக்கை வைத்தும் இதனை குணப்படுத்தவில்லையே' என்று வருந்தியவராகப் படுத்துக் கொண்டார். அன்றிரவு அவரது கனவில் ஸ்வாமி ஒரு ஒளி மயமான சிம்மாசனத்தில் வீற்றிருக்க, எவரோ சாமரம் வீசுகிறார்கள். நாயுடு ஸ்வாமியின் அருகில் சென்று எல்லோருடனும் நின்றபோது அவர் ''உன் எருது குணமடையும் போ'' என்றார். விழிப்பு வந்தவுடன் பார்த்த போது எருது எழுந்து நின்று மிகுந்த அளவில் சிறுநீர் கழித்துவிட்டுத் தீவி தின்ன ஆரம்பித்தது.

1984-ஆம் ஆண்டு தூபிலி வெங்கையா, பெரிய துணி மூட்டையைத் தலையின்மேல் வைத்துக் கொண்டு பஸ்ஸின் மேல் ஏற்றுவதற்காக ஏணியின் மேல் ஏறினார். இந்த விஷயம் தெரியாமல் எவரோ 'ரைட்' என்று கூற , உடனே பஸ் நகர்ந்தது. ஏணியின் மேலிருந்த வெங்கையா ஒரு புறம் விழ மூட்டை ஒரு புறம் விழுந்தது. அறுபதடி தூரம் போனபின் பஸ் நின்றது.''வெங்கையா தலையினந்து இறந்தான்'' என்று எண்ணினர் அனைவரும். ஆனால் சின்னஞ்சிறு காயம் கூட ஏற்படவில்லை. உடனே அவன் எழுந்து மூட்டையைத் தலைமேல் வைத்துக் கொண்டு பஸ்ஸை நோக்கி ஓடுவதைப் பார்த்து அனைவரும் அதிசயித்தனர். 'உன் மனைவியின் தாலி பாக்கியம் தான் ஐயா' என்றனர். ஆனால் அது ஸ்வாமியின் அருளே என்று அவரது மனைவி பிச்சம்மாவுக்கு மட்டுமே தெரியும். இந்நிகழ்ச்சி நடப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்பு பிச்சம்மாவின் கனவில், ஸ்வாமியின் பக்தரான சமாதிமந்திரபூஜாரி காட்சியளித்து அவளுக்கு குங்குமப் பொட்டு வைப்பதாகக் கூறினார். அவள் தன் கையில் குங்குமம் தரும்படிக் கேட்கவே அவ்வாறே கொடுத்தார். இந்தக் கனவு நிகழ்ச்சியே, அவள்

கணவன் ஸ்வாமியின் அருளினாலேயே தப்பினான் என்பதை அவளுக்கு அறிவுறுத்தியது.

1983-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், சமாதி மந்திரத்துக்கு எதிரில், நிலத்தில் ஒரு அடி பள்ளம் வெட்டி அதில் அக்னியை எரியவிட்டிருந்தனர். ஒரு நாள் மேற்கூறிய வெங்கையாவின் மூன்று வயது மகள் சியாமளா, மற்றொரு சிறுமியோடு துளியைச் சுற்றி விளையாடிக் கொண்டிருந்தாள். விளையாடும்போது அந்தச் சிறுமி சியாமளாவை நெருப்பில் தள்ளிவிட, எரிந்து கொண்டிருக்கும் நெருப்பில் அவள் விழுந்தாள். முன்கைகள் வரை நெருப்பில் இருந்தன. அந்தக் குழந்தை பயமடைந்து அலறினாள். இருபதடி தூரத்திலிருந்த நாகையா ஓடிப் போய் குழந்தையை வெளியே இழுத்தார். பிச்சம்மா கிணற்றடியிலிருந்து ஓடி வந்தாள். கைகளிலோ, மற்றும் எங்கும் கூட தீக்காயம் ஏற்பட வில்லை. தலைமயிர் கூடப் பொசுங்கவில்லை. என்னே ஸ்வாமியின் கருணை!

1984-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் செழுடுகண்ட ஆதய்யாவுக்குக் கால்களும், கைகளும் செயலிழந்து போயின. மற்றவர்கள் அவரை எழுப்பி அமர்த்தினால் தான் உண்டு. யாராவது பிடித்துக் கொண்டால் நிற்க முடிந்தது. பொருளாதார வசதி இல்லாததால் ஒரு மாதம் வரை எந்தவிதச் சிகிச்சையும் செய்து கொள்ளவில்லை. ஒரு நாள் ஸ்வாமியின் நினைவு வர ''நாளை விடிவதற்குள் கொஞ்சம் என் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டால் உமது தரிசனத்துக்கு வருகிறேன்'' என்று வேண்டுதல் செய்து கொண்டார். மறுநாள்காலை எவருடைய உதவியு மின்றி எழுந்து அமர முடிந்தது. உடனே ஸ்வாமியின் சந்நிதிக்குப் போனார். முதலில் தடியின் உதவியால் சிறிது நடக்க முடிந்தது. மூன்றாம் நாள் ஸ்வாமி கனவில் காட்சியளித்து ''தடி இல்லாமல் நட, பார்க்க லாம்'' என்றார். மறுநாளிலிருந்து தடியின் உதவி இன்றியே நடக்க ஆரம்பித்தார். இவரது மனைவிக்கு வயிற்றில் கட்டியால் வலி ஏற்பட்டு உணவு ஜீரணம் ஆகாமலிருந்தது. ஸ்வாமியிடம் வந்தபிறகு அவளது துன்பம் கூட விலகியது. எப்போதும் ஸ்வாமியின் சந்நிதியிலேயே இருக்க வேண்டுமென்று அவர் கொலகமூடிக்கே வந்து வசிக்கத் தொடங்கினார்.

கோணுகுண்ட ராமம்மாவை ஒரு ஆவி பீடித்ததால் அவளுக்கு உணவே பிடிக்காமல் உடல்வலி, பலவீனம் முதலியவற்றால் வருந்தி இளைத்துப் போய்விட்டாள். எவ்வளவோ மருத்துவர்களிடம் காட்டி விதவிதமான மருந்துகள் உண்டாலும் குணம் ஏற்படவில்லை. இறுதியில் தனது சிநேகிதிகளின் ஆலோசனைப்படி ஸ்வாமியின் சமாதியைத் தரிசித்தாள். அன்றிரவு அவளுக்குக் கனவில் யாரோ ஒருவர்

''சீ துஷ்டா, இங்கு கூட வந்தாயா, போ'' என்று கூறியதுபோல் காட்சி ஏற்பட்டது. மறுநாள் விடிந்தவுடனே அவளுக்குப் பசி ஏற்பட்டு உணவு உண்டாள். ஒரு வாரத்துக்குள் முழுமையாகக் குணமடைந்தாள்.

1983-ஆம் ஆண்டில் கோலுகுண்ட ராமம்மாவின் எருமை மூன்று நாட்களாகப் பிரசவ வேதனைப்பட்டுக் கொண்டிருந்தது. மிருக வைத்தியர் அதனைப் பரிசோதித்துவிட்டுக், கன்று வயிற்றிலேயே இறந்து விட்டதென்று கூறி இறந்த கன்றை இழுத்து வெளியே போட்டார். கன்றை அங்கிருந்து எடுத்து எறிந்துவிட்டு அந்த இடத்தைச் சுத்தம் செய்தால் பிறகு எருமைக்கு ஊசி போட வேண்டுமென்று வைத்தியர் கூறினார். அப்போது அவள் ''என் ஸ்வாமி எனக்குக் கன்றுக்குட்டி இல்லாமல் செய்வாரா? மூன்று மணி நேரம் கழியும்வரை கன்றுக் குட்டியை நகர்த்த மாட்டேன்'' என்றாள். ''ஏனம்மா, செத்துப்போன கன்று எப்படி பிழைக்கும்?'' என்று கேட்ட மருத்துவருக்கு எதுவும் பதிலளிக்காமல் ஒரு டவலைத் தண்ணீரில் நனைத்துப் பிழிந்து கன்றின்மேல் போட்டு மூடி'' ஸ்வாமி, இந்தக் கன்று பிழைத்தால் உன் ஆசிரமத்துக்கே அளித்து விடுகிறேன். ஒரு நாள் பால் கொண்டு வந்து உங்களுக்கு சமர்ப்பிப்பேன்'' என்று வேண்டிக் கொண்டு ஸ்வாமியையே ஸ்மரித்தபடி அமர்ந்தாள். மூன்று மணி நேரத்துக்கு முன்பே கன்று கண் திறந்தது. அதுவரை அங்கேயே இருந்த மருத்துவர் இது ஸ்வாமியின் மகிமையே என்று ஸ்வாமியை மனதார வணங்கினார்.

இது நடந்து நான்கு மாதங்கள் ஆனபிறகு கூட அவள் ஸ்வாமிக்குப் பால் அர்ப்பணிக்கவில்லை. ஒரு நாள் ஸ்வாமி கனவில் காட்சி அளித்து ''அம்மா, மூன்று மாதங்கள் கழிந்தாலும் என் விஷயத்தை மறந்து விட்டாயே' என்றார். மறுநாளே கன்னத்தில் போட்டுக் கொண்டு பால் எடுத்துக் கொண்டு போய் ஆசிரமத்தில் சமர்ப்பித்து ''கன்று பால் மறந்தவுடனே கொண்டு வந்து ஆசிரமத்தில் சேர்ப்பிக்கிறேன்'' என்று ஸ்வாமியிடம் கூறிவிட்டு வந்தாள். பணக்கஷ்டத்தால் எருமையை விற்று விட்டாள். கன்றின் விலை இரும்பது ரூபாய்களென்று நிர்ணயிக்கப் பட்டது. ஆனால் அந்தப் பணத்தைப் பதினெட்டு மாதங்கள் வரை அவள் ஸ்வாமிக்கு அளிக்கவில்லை. 18.1.1985-ஆம் தேதி அன்று ஸ்வாமி கனவில் காட்சி அளித்து ''நீ எனக்கு நூற்றுமுப்பது ரூபாய்கள் பாக்கி கட்ட வேண்டும். 19.12.85 தேதிக்குள் கட்டுகிறேன் என்று ஆசிரமத்தில் எழுதுவித்து விரல் முத்திரை வைத்துவிட்டு வா'' என்று கூறினார். அவ்வாறே எழுதுவித்துவிட்டு வந்தாள். உடனே பிரார்த்தனையைச் செலுத்தாமலிருந்ததற்காக என்பது ரூபாய்கள் அபராதம் போட்டார் ஸ்வாமி. இந்த நிகழ்ச்சியிலிருந்து நமது பிரார்த்தனைகளை நிறைவேற்று வதில் நாம் எவ்வளவு கவனமாக இருக்க வேண்டுமென்று தெரிகிறது.

குண்டபோயள நரஸய்யாவின் முதல் இரண்டு குழந்தைகளும் பிறந்த சில நாட்களிலேயே இறந்துவிட்டன. 1983-ஆம் ஆண்டில் மூன்றாவதாக ஒரு பெண் குழந்தை பிறந்தது. ஆனால் ஐந்தாவது நாளிலிருந்து அதற்கு ஜுரம் ஏற்பட்டு, பால், மருந்து எல்லாவற்றையும் வாந்தி செய்தது. அதன் உடல் மிகவும் சூடாக இருந்தது. மறுநாள் சாயங்காலமானபோது குழந்தை மிகவும் பலவீனமடைந்தது. கால் கைகளைக் கூட அசைக்கவில்லை. கண்கள் மூடிக் கொண்டன. திடீரென்று உடல் குளிர்ந்துவிட்டது. முதலிரண்டு குழந்தைகளைப் போலவே இதுவும் இறக்கப் போகிறதென்று வீட்டில் எல்லோரும் அழ ஆரம்பித்தனர். அக்கம்பக்கத்தவர் கூடினர். அந்த வீட்டு வழியாகப் போய்க் கொண்டிருந்த கோனுகுண்ட ராமம்மா உள்ளே நுழைந்து குழந்தையை அணுகினாள். ஸ்வாமி கண்டிப்பாக அந்தக் குழந்தையைக் காப்பாற்றுவாரென்று அவளுக்கு நம்பிக்கை ஏற்பட்டது. உடனே வசம்பு கொண்டு வந்து பக்கத்து வீட்டுக்காரியிடமிருந்து தாய்ப்பால் பெற்று அதில் வசம்பைச் சற்று அரைத்துக் கலந்து குழந்தைக்குப் புகட்டினாள். அதுவரை என்ன புகட்டினாலும் வாந்தி செய்த குழந்தை அதைக் குடித்தது. குழந்தையிடம் எந்தவித அசைவும் இல்லை. ராமம்மா ஸ்வாமியின் விபூதியை கட்டில் கால்களில் போட்டு, குழந்தையின் வாயில் கொஞ்சம் போட்டு, உடம்பு முழுவதும் பூசிவிட்டுக் குழந்தையைக் கட்டிலில் படுக்க வைத்துவிட்டுக் குழந்தை நிச்சயம் பிழைத்து விடும் என்று கூறிவிட்டுப் போய்விட்டாள். ஒரு மணி நேரத்திற்குள் குழந்தை கண் திறந்தது. மறுநாள் காலை பால் குடிக்க ஆரம்பித்தது. ஸ்வாமியின் அருளால் பிழைத்த அந்தக் குழந்தைக்கு ஸ்வாமியின் பெயரை வைத்தனர்.

பஞ்சாக்ஷரி மஸ்தானய்யா நீண்ட காலமாக ஸ்வாமியின் பக்தர். இவருக்குக் கனவில் தகுந்த ஆலோசனைகளை அளித்து ஸ்வாமி இவருக்கு வரவிருந்த பல ஆபத்துக்களிலிருந்து காத்தார். 7.7.84 அன்று ஸ்வாமி அவரது கனவில் காட்சியளித்து ''ஐயா ஒரேயடியாக ஐந்து சவங்கள் போக வேண்டியதாயுள்ளது. மாற்ற முடியாத நிலை. நீங்களோ சொன்னால் கேட்காத முரடர்கள்'' என்றார். ஸ்வாமி ஏன் இப்படிக் கூறினாரென்று அவர் தனக்குத்தானே குழம்பினாலும் எவருக்கும் தன் கனவைப் பற்றிக் கூறவில்லை. 8.7.84 தேதி காலையில் மடவனூரிலிருந்து பெனுகொண்டாவுக்கு டிராக்டரை ஓட்டிக் கொண்டு போக வேண்டும். மஸ்தானய்யாவுக்கு மனம் மிகவும் கலங்கி இருந்தது. போவதற்குக் கால்கள் வரவில்லை. அவரது கனவைப் பற்றி எதுவும் தெரியாத அவரது அண்ணன் கண்டிப்பாக டிராக்டரை ஓட்டிக் கொண்டு போக வேண்டியதே என்று பிடிவாதம் பிடித்தார். நடுவழியில் கூட டிராக்டரை நிறுத்திவிட்டார் மஸ்தானய்யா. ஆனால் அண்ணனின் பலவந்தத்தால்

மீண்டும் இளப்பினார். மதராஸ் ரோடிலிருந்து கொலகமூடி போகும் மண் ரோடில் திரும்பும் சமயத்தில் உரங்களை எடுத்துச் செல்லும் லாரி ஒன்று தவறான பக்கத்திலிருந்து வந்து டிராக்டரின் எதிர்ப்பக்கத்தி லிருந்து மோதியது. அந்த ஆபத்துச் சமயத்தில் ஆகாயத்தில் எவரோ ஆசீர்வதிப்பதுபோல் உள்ளங்கையைக் காட்டியது மஸ்தானய்யாவுக்குத் தெளிவின்றித் தெரிந்தது. டிராக்டர் மேலே எழும்பி ரோட்டருகில் விழுந்தது. டிராக்டரில் சரியாக ஐந்து பேர்களே ஏறியிருந்தனர்.

வண்டியை ஒட்டிக் கொண்டு வந்த மஸ்தானய்யாவுக்குத் தலையில் தோல் கிழிந்து ரத்தம் வழிந்தது. தொடையில் எலும்புக்கு அடிபடாமல் சதை மாத்திரம் பிளேடால் அறுத்தது போல் நாலங்குல நீளம் பிளவுபட்டது. அவரது அண்ணன் டிராக்டருக்குக் கீழே விழுந்து வயிற்றின் மீது பளு ஏறியதால் ரத்தம் கக்கிச் சரியாக சுவாசிக்க முடியாமல் இருந்தார். மற்ற மூவருக்கும் சாதாரண ரத்தக் காயமே ஏற்பட்டது.

ரத்த வெள்ளத்தில் கிடந்த மஸ்தானய்யா சமாளித்துக் கொண்டு தன் அண்ணனின் நிலையைக் கவனித்தார். ஸ்வாமியின் அருளால் தன் அருகிலேயே விழுந்திருந்த ஜாக்கியை எடுத்துத் தன் வலதுகாலால் ஜாக்கியின் ராடைத் திருப்பி அண்ணனின் மேல் விழுந்திருந்த டிராக்டரை நான்கு அங்குலங்கள் மேலே எழுப்பினார். அதனால் அண்ணன் சற்று மூச்சுவிட முடிந்தது. அதற்குள் பஸ் வந்து அவர்கள் அனைவரையும் மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். மஸ்தானய்யாவின் அண்ணனைத் தவிர மற்ற நால்வரும் பிழைத்தனர். டிராக்டர் விழுந்த முறையைப் பற்றிக் கவனித்தால் அவர்களது எலும்புகள் கூடக் கிடைக்க முடியாதபடி இருந்தது. அன்றிரவு ஸ்வாமி மஸ்தானய்யாவின் கனவில் காட்சி அளித்து ''உன்னுடைய வண்டியைக் கையால் எடுத்து வீசி எறிய வேண்டி வந்தது ஐயா'' என்றார். இந்தக் கனவுக் காட்சி மூலம் ஐந்து பேரும் போகவேண்டி இருந்தபோது ஸ்வாமியின் அருளாலேயே நான்கு பேர் பிழைத்தனர் என்று தெரியப்படுத்தினார் ஸ்வாமி.

ஸ்ரீஸ்வாமி சமாதியடைந்த பிறகு 1983-ஆம் ஆண்டில் ஒரு நாள் இவரது கனவில் காட்சியளித்து டிராக்டரை ஒட்டிக் கொண்டு போக வேண்டாம் என்று எச்சரித்தார். மறுநாள் காலை டிராக்டர் சாவியை எடுத்துக் கொண்டு போகும்போது இரண்டு முறை கீழே விழுந்தது. ஆனால் அன்று உழாவிட்டால் பின்னர் உழுவதற்கு நீர் கிடைக்காது; எனவே நாற்று நடமுடியாமல் நிலச் சொந்தக்காரருக்குப் பெருத்த நஷ்டம் ஏற்படும் நிலையில் இருந்தது. எனவே வேறு வழியின்றி ஸ்வாமிக்கு நமஸ்கரித்துவிட்டு டிராக்டரை ஒட்டிக் கொண்டு உழ ஆரம்பித்தார். வயலில் ஒரு இடத்தில் இருந்த குழியில் முன் சக்கரங்கள்

இறங்கினர். இயர் மாற்றி வண்டியை மேலே இழுக்க முயற்சித்தபோது பின்சக்கரங்கள் மேலே எழும்பி டிராக்டர் தலைகீழாக விழுந்தது. அவர் ஸ்டியரிங் அடியில் விழுந்து சேற்றில் மாட்டிக் கொண்டார். அதிலிருந்து எவ்வாறு தப்பித்து வெளியே வந்தாரோ அவருக்கே தெரியவில்லை. அதைப் பார்த்தவர்கள் அனைவரும் ''சேற்று உழவு நடக்கும்போது நடந்த இத்தகைய விபத்தில் டிரைவர்கள் இறந்துதான் போவார்கள். நீ தப்பியது இறைவனின் லீலையே'' என்று ஆச்சரியப்பட்டனர்.

ஒரு முறை ஆதிநாராயணரெட்டியாரின் நிலத்தில் குழாய்க்கிணறு தோண்டுவதற்காக நான்கு இடங்களில் முயற்சித்தபோதும் பலன் ஏற்படவில்லை. மஸ்தானய்யா இவ்விஷயத்தைப் பற்றி ஸ்வாமியிடம் முறையிட்டுக் கொண்டு தமக்கு வழிகாட்டும்படி பிரார்த்தித்தார். அன்றிரவு மஸ்தானய்யாவின் கனவில் ரெட்டியாரின் வயலில் ஓரிடத்தில் கொக்குகள், காகங்கள், நரிகள் முதலியவை நீர் பருகுவது போல் காட்சி ஏற்பட்டது. அந்தக் காட்சி ஏற்பட்ட இடத்தில் குழாய்க் கிணறு வெட்டியபோது தாராளமாக நீர் ஊறியது.

பட்ரெடி ஸ்ரீனிவாஸுலு ரெட்டியின் மனைவி மனோ ஜம்மாவுக்குத் திருமணமாகி நான்கு ஆண்டுகள் ஆகியும் குழந்தை பிறக்கவில்லை. 1966-ஆம் ஆண்டு பிப்ரவரிமாதம் அவள் ஸ்வாமி ஸமாதியைத் தரிசித்துத் தன் கோரிக்கையை ஸ்வாமிக்குத் தெரிவித்துக் கொண்டாள். அன்றிரவு ஸ்வாமி அவளது கனவில் காட்சியளித்து அவளுக்கு ஆசியளிக்கும் விதமாக நூல் அருளினார். விடிந்த பிறகு பார்த்தார் ஸ்வாமி அருளிய நூல் அவளது தாலிக்கயிற்றில் கற்றிக் கொண்டிருந்தது. கனவில் கொடுத்த நூல் உண்மையிலேயே காணப் பட்டது ஸ்வாமி லீலையில் இது இரண்டாவது அனுபவம் ஆகும்.

எனது (இந்நூலை எழுதிய ஆசிரியரின்) அனுபவங்கள் :

ஆச்சார்யா எக்கிரால பரத்வாஜா அவர்களின் ஆலோசனைப்படி வெங்கைய ஸ்வாமியைத் தரிசித்துத் தெய்வீக அனுபவங்கள் பெற்றுச் சென்ற பன்னிரண்டு ஆண்டுகளாக ஸ்வாமியை வழிபட்டு வருகிறேன். பதினைந்து ஆண்டுகளாக ஷீரடி சாயிநாதரின் சரித்திர பாராயணம், பூஜை செய்து வருகிறேன். அதன் விளைவாகத்தான் எனக்கு வெங்கைய ஸ்வாமியின் உருவத்தில் சாயிநாதர் இடைத்தார். சாயிலீலாம்ருதம் பாராயணம் செய்ததின் விளைவாக ஸ்வாமி ஒரு குருபூர்ணிமை நாளன்று என் இல்லத்துக்கு வந்து எனது விருந்தோம்பலை ஏற்று எனது சிநேகிதர் T.V. சேஷகிரிராவ் அவர்களின் வீட்டில் நடந்து கொண்டிருந்த அகண்ட நாம சங்கீர்த்தனத்திற்கும் சென்று பக்தர்களை ஆசீர்வதித்தார். இருபது ஆண்டுகளாக ஆஸ்துமாவால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த எனக்கு வெங்கைய ஸ்வாமியின் ஸந்நிதியில் அமர்ந்த உடனே எனது

துன்பம் விலகியது. இரண்டு முறை நான் ஸ்வாமியைத் தரிசித்த உடனேயே என்னை வீட்டுக்குத் திரும்பும்படி ஸ்வாமி கட்டளை யிட்டார். வாய் திறவாமல் நான் வீட்டுக்குப் போயிருந்தால் அன்றே என் வியாதி முற்றிலும் நீங்கி இருந்திருக்கும். எனது வியாதியையே 'போ' என்று ஸ்வாமி கட்டளையிட்டார் என்று நான் உணரவியலாமல் போனேன். ஆனால் நான் அவ்வாறு செய்யவில்லை. அதனால்தான் என் வியாதி என்னை முழுமையாக விட்டுப் போகவில்லை. அதன் பின்னர் நான் ஸ்வாமியின் கட்டளைகளைப் பூரணமாக ஏற்று நடக்காமல், எனது தேவைக்கேற்றபடி நியமங்களை மீறியதால் எனது உடல்நிலை மிகவும் சீர்கேடு அடைந்து, மதராஸ் சென்று வைத்தியம் செய்து கொள்ள வேண்டுமென்று மருத்துவர்கள் கூறிவிட்டனர். ஸ்வாமி ஸமாதியைத் தரிசித்த பிறகே மதராஸ் போக வேண்டுமென்று கொலகமூடி பஸ் ஏறின உடனே எனக்குப் பரிபூரணமான உடல்நலம் ஏற்பட்டது. எனவே அப்போதிருந்து ஸ்வாமியின் சமாதி அருகிலேயே வசிக்க ஆரம்பித்தேன். ஸ்வாமி எனக்கு விதித்திருந்த நியமங்களை நான் சரியாகக் கடைப் பிடிக்கும்படி அவரே செய்வித்த விதத்தைப் பற்றிக் கூறுகிறேன்.

ஸ்வாமி ''உன் உணவையே நீ உண்ணு'' அதாவது நான் கஷ்டப் பட்டு உழைத்துத் தின்ன வேண்டும் என்றும் மற்றவர்களிடமிருந்து இலவசமாகப் பெற்று உண்ணக் கூடாது என்றும் கூறினார். 'எண்ணெய் இல்லாமல் சுடு' என்றும் கூறினார். அதாவது எண்ணெய்ப் பண்டங்கள் உண்ண வேண்டாமென்று கூறினார். ஸ்ரீசாயிநாதர் உப்பு, புளிப்பு, காரம் உண்ண வேண்டாம் என்று கட்டளையிட்டார். இவற்றைப் பெருமளவில் நான் கடைப்பிடித்தே வருகிறேன். ஆனால் பிரசாதம் எடுத்துக் கொள்ளும் போதும் சிநேகிதர்களின் பலவந்தத்தாலும் சிறிய அளவில் நியமங்களை மீறியதால் துன்பத்துக்கு ஆளாவது சென்ற நான்கு ஆண்டு களாக நடந்து வந்தது. இந்தச் சிறிய அளவில் நியமங் களை மீறுவதைக் கூட ஸ்வாமி பொறுக்கவில்லை. 1985-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஒருவரது இருதயப்பிரவேசத்துக்காகச் சென்று, பிரசாதமாகச் சிறிது வாழைப்பழம் தின்றேன். அதோடு நிற்காமல் அந்த இல்லத்தலைவி நான் எதுவும் தின்னவில்லை என்று வருத்தப்படுவாளே என்று பாதி வாழைப்பழம் தின்று மிகுந்த பாதியைப் பையில் வைத்துக் கொண்டேன். உடனே இடது கண்ணில் அரிப்பு ஏற்பட்டு அதை நான் கசக்கவும், கண் வீங்கியது. வாழைப்பழம் தின்றதே இதற்குக் காரணமா யிருக்கக் கூடும் என்று எண்ணியவாறு பள்ளிக்கூடத்தை அடைந்தேன். காலை 11 மணிக்கே மிகவும் பசி ஏற்பட்டது. பையிலிருந்து மீத்த பாதி வாழைப்பழத்தையும் தின்றுவிட்டேன்.

உடனே கண்வலி அதிகரித்தது. நன்றாகக் குடித்தவனைப் போல மயக்கம் ஏற்பட்டுப் பெஞ்சின் மீது படுத்துவிட்டேன். அப்போது

எனக்குத் தூக்க மயக்கத்தில் ஒரு காட்சி ஏற்பட்டது. ஏழரை அடி உயர முள்ள ஒரு கதவின் முன் நின்று கொண்டிருந்த நான் இரண்டு கால் களையும் அருகருகே வைத்துக் கொண்டு இரண்டு கைகளாலும் அந்தக் கதவைத் தடவியவாறு அழுத்தினேன். ஏதோ ஒரு இடத்தில் அழுத்திய போது கதவு திறந்து கொண்டது. இந்த முயற்சியில் வலது காலை மூன்றங்குல தூரத்துக்கு நகர்த்தினேன். உடனே உள்ளே உள்ள சபையி லுள்ள பெரியவர்கள் ''தகுதி இல்லை; தள்ளிவிடு'' என்று என்னை ஒரு புறமாகத் தள்ளிவிட்டனர். ''காலைக் கொஞ்சம் நகர்த்தினால்கூடத் தப்பா?'' என்று வாதித்தேன். ''சின்னத் தப்பானாலும் தப்பு, தப்பே'' என்று மும்முறை கூறினர். உடனே விழிப்பு ஏற்பட்டுச் சாயந்திரம் ஆறுமணி ஆகியிருக்கும் என்று அதிர்ச்சியடைந்து மணியைப் பார்த் தேன். அதுவரை பத்து நிமிஷங்களே கழிந்திருந்தன. ''இந்தப் பத்து நிமிஷங்களில் இந்தக் காட்சி எதற்கு வந்தது?'' என்று யோசித்தபோது பிரசாதம் என்ற சாக்கில் சிறிய அளவில் நியமபங்கம் செய்தாலும் அது ஆத்மீக சாதனையில் பெரிய தப்பே என்று ஸ்வாமி எனக்கு அறிவுறுத்தினார் என்பதைப் புரிந்து கொண்டேன். அன்றிலிருந்து ஸ்வாமியின் அருளினால் அதற்கு முன் கடைப்பிடிக்க இயலாத நியமங் களைக் கூட எளிதாகக் கடைப்பிடிக்க முடிகிறது. எவ்வளவோ நாட் களாக நீக்கவியலாத எனது பலவீனங்கள் சில முழுமையாக நீங்கி விட்டன. என்னிடம் மற்றுமுள்ள பலவீனங்களைக் கூட ஸ்வாமி இவ்வாறே நீக்கியருளி 'நீங்கள் என்னை விட்டாலும் உங்களை நான் விடமாட்டேன்' என்ற தமது அபயமொழிகளைக் காப்பாற்றுவார் என்பது எனது நம்பிக்கை. அவரது உபதேசமொழிகளைப் பின்பற்று வதும் மனதார அவரைப் பிரார்த்திப்பதும் நாம் செய்ய வேண்டிய கடமையாகும்.

ஆத்மீக சாதனை என்பது தெய்வீக ராஜ்யத்தின் கதவுகளைத் திறக்கும் முயற்சி போன்றது. அந்த முயற்சியில் செய்யும் சிறிய தவறுகள் கூடத் தவறுகளே. அவை நம்மைச் சாதனை செய்யத் தகுதியற்றவர் களாக்கிவிடும் என்று ஸ்வாமி போதித்தார்.

ஸ்வாமியின் ஆணைப்பிரகாரம் நான் 1989-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரை ஸ்வாமி ஸமாதியின் அருகிலேயே குடித்தனம் இருந்தேன். ஐம்பது கி.மீட்டர் தூரத்துக்குப் போய் உத்தியோகம் செய்துவிட்டு தினந்தோறும் இரவு திரும்பி ஸ்வாமியின் சமாதி தரிசனம் செய்து வழிபட்டேன். அதே ஆண்டில் நவம்பர் மாதத்தில் ஸ்வாமியின் ஆணைப்படி விருப்ப ஓய்வு பெற்றுக் கொண்டு கொலகமூடியிலேயே வசித்துக் கொண்டு ஸ்வாமியை வழிபட்டுக் கொண்டிருக்கின்றேன்.

இப்ராஹீம் பட்டணம் எலக்ட்ரிகல் எஞ்சினீயர் பி. மாதவராவ் பலவித கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாகி மனச்சாந்தியே இன்றி

விஜயவாடா கனகதுர்காதேவியை வழிபடத் தொடங்கினார். தேவியின் தரிசனம் கிடைத்தது எனினும் மனச்சாந்தி கிடைக்கவில்லை. அந்த தேவியின் அருளால் வெங்கைய ஸ்வாமியின் சரித்திரம் கிடைத்து, பாராயணம் செய்தார். உடனே அவரது மனக்கலக்கமெல்லாம் விலகி மிகுந்த மன அமைதி ஏற்பட்டது. ஸ்ரீ ஸ்வாமியின் ஆசிரமத்துக்கு மாதந்தோறும் ஐம்பது ரூபாய்கள் அனுப்புவதுடன் வீட்டில் ஸ்வாமியின் சரித்திர பாராயணமும் பூஜையும் செய்யத் தொடங்கினார். ஸ்வாமியின் மூன்றாவது ஆராதனை விழாவுக்குக் குடும்பத்தோடு வந்து ஒரு வாரம் இருந்து ஸ்வாமியை வழிபட்டார். 24-8-85 அன்று ஸ்வாமியின் பளிங்குச் சிலையைப் பிரதிஷ்டை செய்தனர். ஜன நெரிசலில் ஸமாதியையும் அந்த விக்ரகத்தையும் தரிசிக்க முடியாமல் தூரத்திலிருந்து எம்பிப் பார்த்துக் கொண்டிருக்கும்போது ஸமாதியிலிருந்து ஸ்வாமி இடுப்பு வரை மேலே எழும்பித் தரிசனம் அளித்து ''இங்கு என்ன பார்ப்பதற்கு இருக்கிறது? எல்லோரிலும் என்னைப் பார்'' என்று கூறி மறைந்தார். அதுமுதல் அன்னதானம் நடக்குமிடத்தில் பரிமாறுவதில் ஈடுபட்டார்.

அவருக்கு ஒன்றரை ஆண்டுகளாக இதயத்துக்கு இடதுபுறம் வலியாக இருந்தது. அதிக நேரம் தியானத்தில் உட்கார முடியாது. மருத்துவர்கள் அளித்த மருந்துகளால் பயனில்லை. உயிருக்கு ஆபத்து என்று பயப்பட்டேன். ''எனது துன்பத்தைப் போக்கி என் காலத்தை எல்லாம் உமது தியானத்திலேயே கழிக்கும்படிச் செய்யுங்கள் ஸ்வாமி'' என்று ஆராதனைக்கு வந்த போது ஸ்வாமியிடம் பிரார்த்தித்துக் கொண்டு அவரது சமாதியை விட்டு வர மனமின்றி எவ்வளவோ துக்கத்தோடு திரும்பினேன். வீடு திரும்பிய பின் பதினைந்து நாட்கள் எனக்கு ரத்தபேதி ஆயிற்று. பதினாறாம் நாள் பேதி நின்றுவிட்டது. எனது இதயவலிகூட நிரந்தரமாக நீங்கி விட்டது. கனவில் லக்ஷ்மி நாராயணரின் தரிசனம் கூடக் கிடைத்தது. இப்போது முன்பைவிட ஆழ்ந்து தியானம் செய்ய முடிகிறது.''

ஆகஸ்டு மாதத்தில் சாயிநாதர் தரிசனமளித்து 'அறையின் உள்ளே சுத்தமாக உள்ளது. ஆனால் மேலே ஒட்டடை உள்ளது. அந்த ஒட்டடையைச் சுத்தம் செய்தால் நான் அறைக்குள் வருவேன்' என்று கூறினார். இது பாபா எனக்கு அளித்த ஆத்மீக போதனையாக நம்புகிறேன்.''

''1985ம் ஆண்டு செப்டம்பர் மாதத்திலிருந்து ஸ்வாமி எனக்கு ஆத்மீக போதனை செய்து ஆன்மீகப் பாதையில் நடத்திவருகிறார். நன்றாக ஆழ்ந்து புரிந்து கொள்ளும் திறமை, இதயத்தில் லயக்கம், மனச்சாந்தி முதலியவற்றை அருளினார். ஆத்மீக விஷயங்களைப் போதித்து, காட்சிகள் மூலமாகக் கர்மவினைகளைத் தீர்த்து வருகிறார்.

ஸ்வாமிக்கு அகண்டதீபம் ஏற்றி அவரது மகிமையை அநுபவித்து ஆனந்தமடைந்துள்ளேன். இந்தப் பிறவிக்கு இதைவிட வேறு எதுவும் எனக்குத் தேவையில்லை.''

''ஸ்வாமீ நீங்கள் சமாதியடைந்தால் எங்கள் கதி என்ன?'' என்று கேட்ட பக்தர்களிடம் ஸ்வாமி ''நான் போவது எங்கே ஐயா? சூரிய சந்திரர்கள் இருக்கும் வரை நான் இருப்பேன் ஐயா'' என்று கூறியபோது அது எப்படி என்று பக்தர்களுக்கு அப்போது புரியவில்லை. அவர் சமாதியடைந்த பிறகு அவர் சமாதியிலிருந்து பக்தர்களிடம் பேசுவதும் அவர்களை வழிநடத்துவதும் ஆகிய லீலைகள் எவ்வளவோ நடந்துள்ளன. ஸ்வாமியின் சமாதியைத் தரிசிக்க முடியாவிட்டாலும் தத்தம் வீடுகளில் அவரது படத்தின் முன் பிரார்த்தித்துக் கொண்டவர்களின் கஷ்டங்களைக் கூட ஸ்வாமி நீர்த்தருளுகிறார் என்பது நமக்கு எவ்வளவோ மகிழ்ச்சியளிக்கும் உண்மை.

நெல்லூர் அரசு மருத்துவமனையில் பணிபுரியும் C.I. சுப்பையாவுக்கு ஏற்பட்ட அநுபவம்: 1977-ஆம் ஆண்டில் ஏற்பட்ட புயலினால் எங்கள் வீடு விழுந்து விட்டது. இரண்டு பக்கம் வெறும் மண் சுவர்களும் மற்ற இரு பக்கங்களுக்குச் செங்கல்லும் மண்ணும் கலந்த சுவர்களும் எழுப்பி மீண்டும் வீடு கட்டிக் கொண்டோம். 1978-ஆம் ஆண்டு மீண்டும் புயலினால் அபாய நிலை ஏற்பட்டது. மின்சார இணைப்புப் போய் விட்டது. பெருங்காற்றினால் சுவர்களோடு வீடு ஆடத் தொடங்கியது. இரவு வேளையாதலால் வீட்டைவிட்டு எங்கும் போகமுடியாத நிலை. மண்ணெண்ணெய் இல்லாத காரணத்தால் ஏற்றப்பட்ட எண்ணெய் விளக்கு காற்றுக்கு அணைந்து போயிற்று. அந்தக் கஷ்டமான நிலையில் ''ஸ்வாமி, போன ஆண்டு வீடு விழுந்து கஷ்டப்பட்டோம். இப்போதும் அதே நிலைக்கே எங்களை ஆளாக்குகிறீர்களா? என்ன வந்தாலும் இந்த வீட்டை விட்டுப் போக இயலாது. உமது கருணையே துணை'' என்று பிரார்த்தித்துவிட்டுப் படுத்துக் கொண்டேன். உடனே கனவில் ஸ்வாமி, மழையில் நன்றாக நனைந்து போய் எங்கள் வீட்டிற்குள் நுழைந்து தம் கைகளால் தலையையும், உடலிலுள்ள நீரையும் துடைத்துக் கொள்வதாகத் தரிசனம் ஏற்பட்டது. உடனே எழுந்து ஸ்வாமி வந்துள்ளார் என்று நிபம் ஏற்றப் பார்த்தபோது எதுவும் இல்லை. ஸ்வாமியின் படத்துக்கு நமஸ்காரம் செய்துவிட்டுப் படுத்துக் கொண்டேன். எங்கள் சுற்று வட்டாரத்தில் பல வீடுகள் விழுந்து விட்டன. ஆனால் எங்கள் வீடு மாத்திரம் எந்தவிதச் சேதாரமுமின்றி இருந்தது. அவர் அவ்விதமாகத் தரிசனமளிக்காவிட்டால் வீடு காப்பாற்றப்பட்டது அவரது அருளால்தான் என்பது கூட நமக்குத் தெரிந்திருக்காது.''

''ஸ்வாமி உடலோடு இருந்த போது அவரது பாதங்களைத் தொட்டு வணங்குவதற்கு ஒரு போதும் எள்ளை அநுமதித்ததில்லை.

அத்தகைய வாய்ப்புக்காக நான் ஏங்கிக் கொண்டிருக்கையிலேயே அவர் சமாதி அடைந்துவிட்டார். ஸ்வாமி எனக்கு அந்த வாய்ப்பைக் கொடுக்க வில்லையே என்ற குறை மாத்திரம் எனது இதயத்தில் நிலைத்துப் போய் சிலசமயங்களில் மிகவும் மனவேதனைப்படுவேன்.''

''1985-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் எனக்கு ஒரு கனவு ஏற்பட்டது. ஸ்வாமி சரசரவென்று நடந்து வருகிறார். நான் ஆஹா, ஸ்வாமி கிடைத்தார் என்று எதிராகப் போய் அவரது இரு கால்களையும் கட்டிப் பிடித்துக் கொண்டு அவரை ஒரு அங்குலம் கூட அசைய விடவில்லை. ஸ்வாமி தலையைச் சொறிந்து கொண்டு சிரித்தவாறு நின்று கொண்டிருந்தார். நான் என் ஆசை தீரத் திருப்தியாக நமஸ்காரம் செய்து கொண்டேன். உடனே கனவு கலைந்து விட்டது. அன்றைய தரிசனம் எனது இதயத்தில் மாறாத முத்திரையைப் பதித்துவிட்டது. அந்தக் கனவு எப்போது என் நினைவுக்கு வந்தாலும் அந்த அநுபவம் என்னை மகிழ்ச்சியிலாழ்த்தும். எனது தீராத குறையை இவ்விதமாகத் தீர்த்து வைத்தார் ஸ்வாமி. அதற்குப் பின்னும் ஸ்வாமி எவ்வளவோ முறை எனக்குக் கை கொடுத்துதவி வருகிறார்.''

''எனக்குக் கொல்லகந்துகூருக்கு இரண்டு மைல்கள் தூரத்தில் விளைநிலம் இருந்தது. 1983-ஆம் ஆண்டில் ஒரு முறை வயலுக்கு நீர்பாய்ச்சுவதற்காக கனுபூர் கால்வாய்க்கு ஆயில் எஞ்ஜின் பொருத்தி விட்டுத் தேவையானபோது நீர் பாய்ச்சுவேன். ஒருநாள் அந்த எஞ்ஜி னுடைய சில பாகங்களைத் திருடர்கள் எடுத்துக் கொண்டு போய் விட்டனர். தினந்தோறும் எஞ்ஜினுக்குக் காவல் காப்பது என்றால் இயலவில்லை. இவ்வாறு திருடர்கள் தினந்தோறும் எஞ்ஜின் பாகங் களை எடுத்துக் கொண்டு போனால் இனிமேல் விவசாயம் செய்வதே என்னால் ஆகாத காரியம் என்று தோன்றியது. வாரம் ஒரு முறை கொலகமூடிக்குப் போய் ஸ்வாமி சமாதியை தரிசிப்பது என் வழக்கம். அவ்வாறு போனபோது, எனக்கு ஏற்பட்ட கஷ்டத்தைக் குறித்து அங்குள்ள ஸ்வாமி பக்தர்களுக்குக் கூறினேன். அதைக் கேட்ட பூஜாரி நாகய்யா ஸ்வாமியின் நூல் ஒன்று என் கையில் கொடுத்து ''இந்த நூலைக் கொண்டு போய் நம்பிக்கையோடு உன் ஆயில் எஞ்ஜினுக்குக் கட்டு ஐயா, திருடர்கள் வரமாட்டார்கள். வந்தாலும் போய்விடுவார்கள்'' என்றார். அதன்படியே ''இந்த எஞ்ஜினைக் காப்பாற்ற வேண்டிய பாரம் உம்முடையதே ஸ்வாமி! மீண்டும் திருடர்கள் கைவரிசையைக் காட்டினால் அந்த நஷ்டத்தை என்னால் பொறுக்க முடியாது'' என்று மனப்பூர்வமாகப் பிரார்த்தித்துக் கொண்டு நூலை எஞ்ஜினுக்குக் கட்டினேன்.''

''பிறகு பலநாட்கள் நான் எஞ்ஜின் பக்கம் போகவில்லை. 84-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் எனது சக குடியானவர்கள் என்னிடம்

வந்து 'இரண்டு நாட்களாக உனது எஞ்ஜின் பாகங்கள் எல்லாம் பிரித்தெடுக்கப்பட்டு வீசப்பட்டுள்ளன, போய்ப் பார்' என்றனர். நான் அதிர்ச்சியடைந்து விரைவாகச் சென்று பார்த்தேன். எஞ்ஜின் பாகங்கள் எல்லாம் பிரித்தெடுக்கப்பட்டு வீசப்பட்டிருந்தாலும் ஒரு பாகம் கூட கனவு போகவில்லை. அதனைக் காத்தவர் ஸ்வாமியைத் தவிர வேறு யார்?''

ஸ்வாமி நம்மிடமிருந்து எதிர்பார்ப்பது நமது காலம் மற்றும் மனம் என்ற தக்ஷிணையே. உலக விவகாரங்களில் வீண் செய்யாமல் நம் காலத்தை எல்லாம் ஸ்வாமி ஸ்மரணையில் செலவிட்டால் உடனே ஸ்வாமியின் பாதுகாப்பு நமக்கு எவ்விதம் கிடைக்கிறதென்று பார்ப் போம். நட்டெடி லக்ஷ்மம்மாவுக்கு தினமும் கனவில் யமகிங்கரர்கள் காட்சியளித்ததால் மிகவும் அஞ்சினாள். பகலில் கூட சொல்லத்தரமற்ற பயத்தால் அவளுக்கருகில் யாரோ ஒருவர் இருக்க வேண்டி வந்தது. ஸ்வாமி லமாநியைத் தரிசித்துக் காலை மாலைகளில் ஐந்தைந்து பிரதக்ஷிணங்கள் செய்துவிட்டு மீந்த காலத்தை வீண்பேச்சில் செல விட்டாள். இருபது நாட்கள் ஆனாலும் அவளுக்கு எவ்விதப் பலனும் கிட்டவில்லை. பக்தர் ஒருவரின் ஆலோசனைப்படி காலையிலும், மாலையிலும் நூற்றியெட்டு பிரதக்ஷிணங்கள் செய்து மற்ற நேரத்தை எல்லாம் ஸ்வாமியை நினைப்பதிலேயே கழித்தாள். மூன்றாம் நாள் ஸ்வாமியின் அக்னிகுண்டத்தினருகில் பன்னிரண்டு வயதுச் சிறுவன் காட்சியளித்து அவளது கையில் விபூதி போட்டான். அதனை வாயில் போட்டுக் கொண்ட உடனே அச்சிறுவன் மறைந்துவிட்டான். அப்போ திருந்து அவளது பயம் அவளை விட்டகன்றது. அவளுக்கு எப்போதும் ரத்தப் போக்கும், காலிலும் அள்ளையிலும் வலியும் இருந்தது. ஸ்வாமி கனவில் காட்சியளித்து ''உனது வலிகள் குணமாக மூன்று மாதங்கள் ஆகும். என்னை நம்பிக்கையோடும் சிரத்தையோடும் நினைந்திரு'' என்று கூறினார். ஸ்வாமி ஸ்மரணையும் மௌனமும் அவளைக் கடைத்தேற்றின.

கோலூர் வைத்தியர் சுதாகருக்கு 1983-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இரத்த அழுத்தம் 240/89 என்ற அளவில் இருந்தது. சாதாரண மாக அவ்வளவு அழுத்தம் இருந்தால் பக்கவாதம் அல்லது வேறுவித விளைவுகள் ஏற்படும். ஆனால் எனக்கு அத்தகையவை எதுவும் இல்லாதது கண்டு டாக்டர் ஆச்சரியமடைந்தார். டாக்டரின் உதவியாளர் ஒருவர் எனக்கு விரைவில் கண்பார்வை போய்விடும் என்றும் ஆபரேஷன் செய்தாலும் பலன் இல்லை என்றும் கூறினார். ''மதராஸுக்குச் சென்று வைத்தியம் செய்து கொள்ளுங்கள். வாழ்நாள் முழுதும் மருந்து களை உண்டு, உப்பும் காரமுமில்லாத உணவைத் தின்று விழிப்பாக இருக்கவேண்டும்'' என்று மருத்துவர்கள் ஆலோசனை கூறினர்.

''அத்தகைய நிலையில் சாயிலீலாம்ருதம், குருசரித்திரம் மற்றும் அவதூதலீலை என்ற வெங்கைய ஸ்வாமியின் சரித்திரம் முதலிய வற்றைப் பாராயணம் செய்தேன். பின்னர் கொலகமூடிக்குச் சென்று ஸ்வாமி சமாதி தரிசனம் செய்தேன். அன்றிரவு எனது நண்பனுடைய வீட்டில் ஒரு சாது எனக்குத் தீர்த்தம் அளித்தது போலக் கனவு ஏற்பட்டது. விழிப்பு ஏற்பட்டு எழுந்த போது விடிகாலை நான்கு மணி. ஸ்வாமியின் பூஜையைப் பார்ப்பதற்காக எழுந்து கொண்ட போது ஸமாதி மந்திரத்துக்கு மேற்குத் திசையில் ஆகாயத்தில் சிவந்த நிறத்தில் உருண்டையாக பெரும் ஒளி ஒன்று காட்சி அளித்தது. அதனை என் மனைவிக்குக் கூடக் காட்டினேன். என்ன யோசனை செய்தும் அந்த ஒளி என்ன என்று புரியவில்லை. பூஜைக்குப் பின் வந்து பார்த்தபோது அந்த ஒளி காணப்படவில்லை. ஸ்வாமியே அவ்வாறு தரிசனம் அளித்தா ரென்று கருதி மகிழ்ந்தோம். அது முதல் இரத்த அழுத்தம் படிப்படியாகக் குறைந்து ஆரோக்கியம் ஏற்பட்டது. உப்பு, காரம் கூடத் தின்ன முடிந்தது.''

''ஆனால் மருத்துவர்கள் கூறியபடி ஆகார விஷயத்தில் பத்தியத் தைக் கடைப்பிடிக்காததால் மீண்டும் 85-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இரத்த அழுத்தம் மிகவும் அதிகமாயிற்று. மருத்துவர்கள் இருபத்திநாலு மணி நேரத்துக்குப் பின்னர் தான் நிச்சயமாகக் கூற முடியும் என்றனர். எனது மனைவி ஸ்வாமியைச் சரணடைந்தாள். ஸ்வாமியின் அருளால் மீண்டும் ஆரோக்கியம் அடைந்து பின்னர் ஆகார விஷயத்தில் பத்தியத்தை விழிப்புடன் கடைப்பிடித்து வருகிறேன்.''

சிரமன வெங்கையா என்ற பக்தர் 1984-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலிருந்து இரண்டு மாதங்கள் உணவு சாப்பிட முடியாமல் இளைத்துப் போய், யாராவது பிடித்துக் கொண்டால் மட்டுமே அவரால் இரண்டு அடிகள் நடக்க முடிந்தது. இருமல், ஆஸ்துமா, கபத்தோடு இரத்தம் கூட வெளிப்பட்டது. மருத்துவர்களால் குணப்படுத்த முடியாத போது அவரது உறவினர்களின் ஆலோசனைப்படி ஸ்வாமி சமாதியைத் தரிசித்தார். மறுநாளிலிருந்து அவரது வியாதியின் உக்கிரம் சற்றுக் குறைந்து உணவு உட்கொண்டு நடக்க ஆரம்பித்தார். ஐந்தாம் நாள் இரவு ஸ்வாமி அவரது துரையீரலில் உள்ள பெரிய கட்டியைக் கையால் நகர்க்க, அதிலிருந்து வந்த சீழும் ரத்தமும் வாயிலிருந்து வழிவதைப் போலக் காட்சி ஏற்பட்டது. உடனே விழிப்பு ஏற்பட்டுத் தீவிரமாக இருமல் ஏற்பட்டது. இதுவரை ஒரு போதும் வெளியேறாத அளவு சுபம், சீழ், ரத்தம் முதலியவை வெளிப்பட்டன. உடனே உடம்பில் தொண்ணூறு சதவிதம் ஆரோக்கியம் ஏற்பட்டது. எட்டாம் நாள் ஸ்வாமி கனவில் மீண்டும் அந்தக் கட்டியை நகர்க்கி அதிலிருந்து வந்த நீய நிரவத்தை ஒரு இலையில் எடுத்துக் காட்டினார். அதன் பின்னர் நான்கு நாளில் பூரண ஆரோக்கியமடைந்து இன்றும் ஸ்வாமி சமாதியைத் தரிசித்து வருகிறார்.

ஸ்ரீபட்டணம் காதர் மஸ்தான் கூறியதாவது : ''1985-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் எனக்கு இரத்தபேதி ஆயிற்று. மதராஸிலுள்ள கான்சர் மருத்துவமனையில் எனக்கு கான்சர் என்று முடிவுகட்டி எனக்கு உடனே ஆபரேஷன் செய்து குடலை வெளியே எடுத்துப் போட்டால், டப்பா ஒன்றில் மலம் சேரும். அதைச் சுத்தம் செய்து கொண்டிருக்க வேண்டும். இவ்வாறு பத்து மாதங்கள் மருத்துவமனையில் இருந்தால் குணமாகலாம் என்றனர். இல்லாவிடில் மரணம் நிச்சயம் என்றனர். ஆஸ்பத்திரியில் அத்தகைய துன்பத்தை அனுபவிப்பதைவிட மரணமே மேல் என்று வீட்டுக்கு வந்து விட்டேன். ஒங்கோலில் நாட்டு மருந்து உபயோகித்ததில் குணம் ஏற்படவில்லை. ஸ்வாமி உடலோடு இருந்த போது அவரைத் தரிசித்த விஷயம் நினைவுக்கு வந்து ஒரு நாள் இரவு ஸ்வாமியை நினைத்து அழுதேன்.''

''அன்றிரவு ஸ்வாமி என் கனவில் காட்சியளித்துக் கட்டிலில் படுத்துக் கொண்டிருந்த எனக்கு வெல்வெட் துணியால் விசிறினார். விழிப்பு வந்து பார்த்தபோது உண்மையாகவே ஸ்வாமி என் கட்டில் அருகிலிருந்து போய்க்கொண்டிருந்தார். எனக்கு ஏற்பட்ட அதிர்ச்சியில் அவரை அழைக்க நா எழவில்லை; கைகால்கள் செயலற்றுப் போயின. விடிந்ததிலிருந்து எனக்கு ரத்த பேதி முழுமையாக நின்று விட்டது. ஒரு வாரத்தில் முழு ஆரோக்கியத்தைப் பெற்றேன். ஸ்வாமிக்கு நான்பட்ட கடனை எவ்வாறு தீர்ப்பேனோ!''

மனதாரக் கண்ணீருடன் வேண்டுகின்ற பக்தர்களின் கஷ்டங்களை ஸ்வாமி நீக்கி அவர்களுக்கு சாந்தியளிப்பதைப் பலரின் அனுபவங்களில் காணலாம். மனங்கசிந்து செய்யாத பிரார்த்தனை வீணே என்று ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்சர் கூறியிருக்கிறார் அன்றோ.

செருக்கூர் ராஜம்மாவுக்கு ஒரு முறை அப்பென்டிஸிடிஸ் ஆபரேஷனும் பின்னர் சில ஆண்டுகளில் குழந்தை பிறவாமலிருக்கும் ஆபரேஷனும் செய்தனர். 1985-ஆம் ஆண்டில் வயிற்றில் எரிச்சலும், உணவு சாப்பிட்டால் வாந்தி வருவது போன்ற உணர்வும், எப்போதும் தலைவலியும் இருந்தது. வயிற்றில் கட்டி இருப்பதாகவும் ஆபரேஷன் செய்ய வேண்டுமென்றும் டாக்டர்கள் கூறினர். மூன்றாம் முறை ஆபரேஷன் செய்து கொள்ள பயப்பட்டு, உறவினர்களின் ஆலோசனைப் படி ஸ்வாமியின் சமாதியைத் தரிசித்து நியமமாக நானொன்றுக்கு நூற்றியெட்டு பிரதக்ஷிணங்கள் செய்து கொண்டு, தன் நேரத்தை யெல்லாம் வீண்பேச்சில் கழிக்காமல் சிரத்தையோடு ஸ்வாமியை நினைத்துக் கொண்டு ஆசிரமப் பணிகளில் பங்கெடுத்துக் கொண்டு வழிபட்டாள். உணவைக் கண்டதுமே வாந்தி செய்யும் உணர்வு வந்து கொண்டிருந்த அவள் ஸமாதி தரிசனம் செய்தது முதல் சாதாரணமாகச்

சாப்பிட ஆரம்பித்தாள். ஐந்தாம் நாள் ஸ்வாமியின் காலம் சென்ற பக்தை துளசம்மா கனவில் காட்சி அளித்து மரவள்ளிக் கிழங்கு சாப்பிடுமாறு கூறினாள். அவ்வாறே தின்றபோது ஆரோக்கியம் பெரிதும் நன்னிலை அடைந்தது. ஆனால் ஸ்வாமி வீட்டுக்குப் போவதற்கு அனுமதி அளிக்காததால் போகவில்லை. ஒருநாள் ஸ்வாமி சமாதியைப் பூஜிக்கும் நாகய்யா அவளது கனவில் தோன்றி 'உனக்கு நோய் இல்லை; எப்போதும் ஆரோக்கியமாக இருப்பாய்' என்று கூறினார். ஆனால் வீட்டுக்குப் போகும்படிக் கூறவில்லை என்று அவள் போகவில்லை. மேலும் இரண்டு நாட்களுக்குப் பிறகு மற்றும் ஒரு ஸ்வாமி பக்தர் கனவில் தோன்றி ''இந்த மூலிகையை நீ யாருக்குக் கொடுத்தாலும் அவர்களுடைய வியாதிகூட குணமாகும்'' என்று கூறி ஒரு இலையை அவளுக்குக் கொடுத்தார். அதைப் பெற்றுக் கொண்ட அவள் வீடு திரும்பினாள். உடனே அவளுக்கு ஐந்நூறு ரூபாய்க்குத் துணி தைக்கும் உத்தியோகம் கூடக் கிடைத்தது. இவ்வாறு அவளுக்கு உடல்நலத்தோடு வயிற்றுப் பிழைப்புக்கும் வழி காட்டினார் ஸ்வாமி.

கொட்டடி சேஷய்யா ''எனது விளைநிலத்தில் பயிர் விளைந் திருந்தது. அங்குக் காவல் இல்லாவிட்டால் இரவு நேரத்தில் காட்டுப் பன்றிகள் வந்து பயிர்களை அழித்துவிடும். நிலத்தில் படுத்துக் கொண்ட போது கொசுத்தொல்லை, குளிர், இலேசாக மழைத்தூறல் முதலிய வற்றால் பத்து நாட்கள் உறக்கமின்றி இனி ஆரோக்கியம் கெட்டுப் படுக்கையில் இருக்க வேண்டிய நிலை வருமோ என்று பயந்து நேராக ஸ்வாமி சமாதிக்குப் போய் ''வயலைக் காவல் காப்பது உமது பாரம். அந்தப் பயிரைப் பன்றிகள் தின்றுவிட்டால் உமக்கு ஆண்டுதோறும் அளிக்கும் இரண்டு மூட்டை நெல்கூட உமக்குக் கொடுக்க இயலாது. உமது இச்சைப்படி செய்து கொள்ளுங்கள்'' என்று வேண்டிக் கொண்டு வீட்டுக்குப் போய்ப் படுத்துக் கொண்டேன். உடனே கனவில் காக்கிக் கலர்க் கால்சட்டை, பச்சைக் கலர் பனியன், பச்சைக்கலர் தொப்பி அணிந்த இருபது வயது இளைஞன் ஒருவன் ஸ்வாமி சமாதியருகில் இருந்து சரசரவென்று வந்து ''எங்கே, அந்தப் பன்றிகள் இன்னும் வருகின்றனவா?'' என்று கூறியவாறு என் கையிலிருந்த தடியை பிடுங்கிக் கொண்டு சென்றான். இந்தச் சிறுவன் நம் விளைநிலத்தைக் காவல் காப்பதாகத் தெரியவில்லையே, வேறே வழியாகப் போகிறானே என்று நான் எனது நிலத்துப்பக்கம் போனேன். அந்த இளைஞன் வேறு வழியாக எனக்கு முன்னதாகவே என் நிலத்துக்குப் போனான். உண்மை யாகவே இவன் காவல் காக்கிறான் என்று நினைத்துக் கொண்டேன். அதனோடு அந்தக் கனவு முடிந்துவிட்டது. அன்றிலிருந்து நான் ஒரு இரவு கூடக் காவலுக்குப் போகவில்லை. பன்றிகளும் வரவில்லை.

அறுவடை எல்லாம் முடிந்தபிறகு எனது பிரார்த்தனைப்படி மறுநாள் காலை ஸ்வாமிக்கு நெல் கொடுக்க வேண்டுமென்று எண்ணிக்

கொண்டு படுத்தேன். அன்றிரவு கனவில் நான் இரண்டு நெல்மூட்டை களை ஸமாதியின் முன் வைத்தேன். உடனே ஸ்வாமியின் சேவகரான புஜ்ஜையா காட்சி அளித்து 'நீ எவ்வளவு கொடுக்க வேண்டும்? எவ்வளவு கொடுத்தாய்?'' என்று கேட்கிறார். உடனே பூஜை செய்யும் பூஜாரியான நாகய்யா ''அவர் நான்கு மூட்டைகள் நெல் செலுத்த வேண்டும். கொடுப்பார்; வரவு வைத்துக்கொள்'' என்றார். உடனே கனவு முடிந்தது. எனது வயலில் காவல் காத்ததற்காக ஸ்வாமி இரண்டு மூட்டைகள் நெல் அதிகமாகக் கேட்டார் என்று உணர்ந்து ஸ்வாமிக்கு நாலு மூட்டைகள் நெல் சமர்ப்பித்தேன்.

நலுபாய் சுப்பராமையாவின் மனைவி லித்தம்மாவுக்கு மணமாகி எட்டு ஆண்டுகள் வரை குழந்தை பிறக்கவில்லை. அதற்காகச் செய்த பலவிதமான வைத்தியங்களும் தெய்வங்களுக்குச் செய்து கொண்ட பிரார்த்தனைகளும் பலனளிக்கவில்லை. தருணவாயிலுள்ள மஸ்தான் அவுலியாவின் சமாதியைத் தரிசித்தபோது மூன்று ஆண்டுகள் அங்கேயே இருந்து சேவை செய்தால் பலன் கிடைக்கும் என்று கூறினர். அவ்வாறு இருக்க முடியாமல் வந்து விட்டாள். 1982-ஆம் ஆண்டில் ஒரு முறை அவளுக்குத் தீவிரமான ஜுரம் ஏற்பட்டதால் நெல்லூர் இந்திரம்மா டாக்டரிடம் அழைத்துச் சென்றனர். ஒரு வாரம் கழிந்தாலும் ஜுரம் ஒரு டிகிரி கூடக் குறையவில்லை. உணவு கூடத் இன்னாததால் செத்துப் போய் விடுவோம் என்று பயந்து வீட்டுக்கு வந்து விட்டாள். அப்போது வெங்கையஸ்வாமியின் நினைவு வர, அவரிடம் போக நினைத்தாள். வீட்டில் உள்ளவர்கள் ''வெந்நீர் போட்டுத் தருகிறோம். ஸ்நானம் செய்துவிட்டுப் போ'' என்றனர். ஆனால் ஒரு பெட்டி தீக்குச்சிகளை உபயோகித்தும் அடுப்பு பற்றிக் கொள்ளவில்லை. அதைப் பார்த்த அவள் ''நான் இறந்தாலும் சரி, நதியில் ஸ்நானம் செய்து ஸ்வாமிக்கு பிரதக்ஷிணம் செய்வேன்'' என்று கூறி அவ்வாறே செய்து விட்டு அன்றிரவு ஆஞ்சநேயஸ்வாமி கோயிலில் படுத்துக் கொண்டாள். விடிந்த போது, அத்தனை நாட்களாகப் பிடித்த ஜுரம் மறைந்து எப்போதும் போல உணவு உண்டாள்.

அதிலிருந்து அவளுக்கு ஸ்வாமியிடம் இடமான நம்பிக்கை ஏற்பட்டு ஸ்வாமி தனக்குக் குழந்தை வரம் அருளும் வரை ஸ்வாமியை வழிபடுவதாகத் தீர்மானித்துக் கொண்டாள். தன் உணவைத் தானே சமைத்துக் கொண்டு, ஸ்வாமியின் ஆசிரமத்திலுள்ள மரத்தடியிலேயே வசித்துக் கொண்டு எவரோடும் பேசாமல் ஸ்வாமியையே ஸ்மரித்துக் கொண்டு நாள்தோறும் நூற்றியெட்டு பிரதக்ஷிணம் செய்யத் தொடங்கினாள். ஒரு நாள் அவளது கனவில் அவர்களது வளர்ப்புப் பன்றி, வயலில் நுழைந்ததால் குடியானவர்கள் அதனை அடிக்க அவள், அதனை அடிக்க வேண்டாமென்று மன்றாடினாள். அப்போது

வெங்கையஸ்வாமி வந்து ''இதனால்தான் உனக்கு இந்தக் கஷ்டங்கள் எல்லாம் வந்தன அம்மா, இதனைப் பிழைக்க விடக் கூடாது'' என்று கூறி ஸ்வாமியே அந்தப் பன்றியை எடுத்துச் சென்று சமுத்திரத்தில் விசினார். அதன் பின்னர் முப்பத்தைந்து தினங்கள் கழிந்தாலும் ஸ்வாமி தனக்குக் குழந்தை அருளுவதாகக் கூறவில்லையே என்று மனவேதனைப்பட்டு அந்த வேதனையால் அவளுக்கு உணவும் பாலும் உட்கொள்ள முடிய வில்லை. அன்றிரவு ஸ்வாமி பக்தராள கொர்ரகூடி பிஜ்ஜையா அவளுக்கு வளையல்கள் அணிவித்தது போல் கனவு வந்தது. ஆனால் ''ஸ்வாமியே எனக்குத் தரிசனமளித்து ஒரு வார்த்தைகூடக் கூற வில்லையே; நான் இவ்வளவு நாட்கள் செய்த சேவை வீணா? நான் வாழ்ந்து என்ன பயன்'' என்ற தீவிரமான மனவேதனையால் மறுநாள் கூட உணவு உண்ணவில்லை. அன்றிரவு ஸ்வாமி கனவில் காட்சியளித்து ஒரு கைப்பிடிப் பாக்குகளை அவளது புடவைத் தலைப்பில் போட்டு ''உனக்குக் குழந்தைவரம் கொடுத்தேன். இனி சாப்பிடம்மா'' என்று அன்பாகக் கூறினார். அதோடு அவள் தன் நிஷையை முடித்துக் கொண்டாள். அவளுக்குப் பிறந்த குழந்தைக்கு ஸ்வாமி பெயர் வைக்க வேண்டு மென்று நினைத்த போது ஸ்வாமி கனவில் காட்சியளித்து முதல் குழந்தைக்குக் குலதெய்வத்தின் பெயரும் இண்டாவது பிறக்கும் குழந்தைக்குத் தன் பெயரும் வைக்கும்படிக் கூறினார். இன்றும் இவளுக்கு எந்தத் துன்பம் வந்தாலும் ஸ்வாமியிடம் முறையிட்டுக் கொண்டு அவரது சமாதியருகில் படுத்துத் தூங்கினால் அன்றிரவே ஸ்வாமி தரிசனமளித்து அவளைச் சமாதானப்படுத்துவார்.

1985-ஆம் ஆண்டில் வல்லபுரெட்டி ஆதிநாராயணரெட்டிக்கு ஒரேயடியாகக் கஷ்டங்கள் வர ஆரம்பித்தன. அவரது டிராக்டருக்கு இருமுறை விபத்து ஏற்பட்டது. மனைவிக்கு உடல்நிலை சரியின்றி அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டி வந்தது. விளைச்சலில் மிகவும் நஷ்டம் ஏற்பட்டது. 'ஸ்வாமி, இந்தக் கஷ்டங்களுக்கு முடிவு இல்லையா' என்று ஸ்வாமியிடம் முறையிட்டார். அன்றிரவு அவருக்கு ஒரு விசித்திரமான கனவு ஏற்பட்டது. அவரும் மற்றும் இரண்டு பேர்களும் நன்றாக நீர் கரை புரண்டோடும் ஒரு நதியின் கரையில் உள்ளனர். ஒருவர் நதியில் இறங்கி, நீரோட்டத்தால் அடித்துச் செல்லப் பட, அவரைக் காப்பாற்றுவதற்காக மற்றவரும் நதியில் இறங்க முற்பட்டபோது இறங்க வேண்டாம் என்று நாராயணரெட்டி எவ்வளவு தடுத்தாலும் அதைக் கேளாமல் இறங்க, இருவருமே நீரோட்டத்தால் அடித்துச் செல்லப் பட்டனர். ரெட்டியார் பாதுகாப்பாகக் கரையிலிருந்து பார்த்துக் கொண்டே இருந்தார்.

நமது கர்மவினை பெரும் வேகத்துடன் ஓடும் நதியின் நீரோட்டம் போன்றது. அந்த மனிதர்களைப் போல் அவசரப்பட்டு நடந்து

கொண்டால் அடித்துச் செல்லப்பட்டு உயிரையே இழப்பாய்; பொறுமை யோடு நிரந்தரமான நாமஸ்மரணையோடு, கர்மவினைகள் காலமென்ற ஒட்டத்தில் அடித்துச் செல்லப்படும்வரை, நீவினைப்பயன் குறையும் வரைக்கும் பொறுமையோடிருந்தால் ஸம்ஸாரமாகிய நதியைத் தாண்ட முடியும் என்று மேற்கூறிய கனவின் மூலம் போதித்தார் ஸ்வாமி.

இவரது மனைவிக்கு நெல்லூரில் செய்த ஆபரேஷனில் தவறு ஏற்பட்டதால் மீண்டும் ஆபரேஷனுக்காக மதராஸுக்கு அழைத்துச் சென்று ரெட்டியார் ஸ்வாமியைப் பிரார்த்தித்தார். அன்றிரவு கனவில் அவரது கிராமத்தைச் சேர்ந்த சின்ன மெகானிக் என்பவர் வந்து ''உனக்காகப் பெனவர்த்தி போய் நீ அங்கில்லாததால் இங்கு வந்தேன். விபூதி அளித்து மூன்று மாதங்களில் குணப்படுத்தலாமென்று நினைத் தேன். ஆனால் ஏழுமாதங்கள் ஆகும்போல உள்ளது'' என்றார். 'நான் உன்கர்மங்களை நீக்குவதற்குக் கொஞ்ச நாட்கள் ஆகும். பொறுமையாக இரு' என்று ஸ்வாமி அக் கனவின் மூலம் அறிவுறுத்தினார்.

பணம் செலவு செய்வதைப் பற்றி ஒரு முறை ஸ்வாமி ரோசி ரெட்டியிடம் ''ஐயா, ஒரு ரூபாய் சம்பாதிக்க வேண்டுமென்றால் எவ்வளவு கஷ்டப்பட வேண்டும்? எனவேதான் அதை நாம் மிகவும் எச்சரிக்கையோடு உபயோகிக்க வேண்டும்'' என்றார். இன்னொரு கோணத்திலிருந்து பார்த்தால் இந்த போதனை ஆத்மீகச் செல்வத்துக்கும் பொருந்தும். எவ்வளவோ கஷ்டப்பட்டுப் புண்ணியம் செய்ததால் ஸத்குரு ஸந்நிதி கிடைத்துள்ளது. அதனை வீணாக்காமல் எச்சரிக்கை யுடன் எப்போதும் இது ஸத்குரு ஸந்நிதி என்ற உணர்வுடன் வாழ்ந்து அந்தச் சந்நிதியைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று எச்சரிக்கிறார் ஸ்வாமி.

ஒரு முறை ஸ்வாமி சேவகர்களிருவருக்கிடையே சச்சரவு ஏற்பட்டது. ஒருவரது பக்கம் நேர்மையும் மற்றவரிடம் அதர்மமும் இருந்தது. நேர்மையானவரை ஆதரித்து ரோசிரெட்டி மற்றவரிடம் 'நீ இப்படிப் பேசுவது உனக்கு நல்லதல்ல' என்று நீவிரமாகக் கண்டித்தார். 'நமக்கென்ன வந்தது?' என்று கம்மா இருக்கவில்லை. அன்று ரோசிரெட்டியிடம் ஸ்வாமி ''ரோசிரெட்டி, இன்று உனக்கு ஒரு உலகம் கிடைத்ததையா'' என்றார். அதாவது அதர்மத்தைக் கண்டித்து தர்மத்தை ஆதரிப்பது நமது கடமையாகும். அதன் மூலம் நமக்கு மிகவும் புண்ணியம் கிடைக்கிறது. அதே போல் அதர்மத்தை எதிர்த்து அதனை அழிக்க முயற்சி செய்யாவிட்டால் அது பாவம் ஆகும்.

கோணிதல நாகேஸ்வரராவ் பல ஆண்டுகளாக ஸ்வாமியை வழிபட்டு வருகிறார். ஸ்வாமியின் காரியங்களுக்குத் தன்னுடைய லாரி அல்லது டிராக்டரைக் கொண்டு வந்து தானே ஓட்டி சேவை செய்வார்.

''1985-ஆம் ஆண்டு ஆகஸ்ட் இருபத்தோராம் தேதியிலிருந்து ஸ்வாமியின் ஆராதனை விழாவுக்கு மண், கம்பங்கள், துணிப்பந்தல்கள், பாத்திரங்கள் முதலியவை இரவும் பகலும் கொண்டு வந்து கொண்டே இருப்பேன். 23-ஆம் தேதியன்று இரவு நெல்லூரிலிருந்து பூமாலைகள், வாழைக்கன்றுகள் முதலியவற்றை டிராக்டரில் போட்டுக் கொண்டு ஒட்டி வந்தேன். முதல் இரண்டு நாட்களாகத் தூக்கமே இல்லாத காரணத்தால் இரவு 12 மணியளவில் எனக்குத் தெரியாமலே தூங்கிவிட்டேன். பின்னர் எனக்கு விழிப்பு ஏற்பட்ட போது எனக்கு எதிரில் இருபது கஜ தூரத்தில் பெரிய பள்ளம் உள்ள கொலகமூடி பாலம் காணப்படவே அதிர்ச்சியடைந்தேன். எப்படியோ சக்தியை எல்லாம் திரட்டிக் கொண்டு எச்சரிக்கையோடு பாலத்தைக் கடந்தேன். அதுவரை சுமார் மூன்று கி.மீ. தூரம் பல திருப்பங்கள் வளைவுகள் கடந்து நானும் டிராக்டரும் கொலகமூடி பாலம் வரை எப்படி வந்தோம் என்பதே மிகவும் ஆச்சரியம். அவ்வாறு டிராக்டரைச் செலுத்தியதும் தகுந்த சமயத்தில் எனக்கு விழிப்பு ஏற்படுத்தி டிராக்டர் விழாமல் காத்ததும் அந்தக் கருணையே உருவெடுத்த ஸ்வாமியன்றி வேறு யார்?''

தான்ஞர் ஸ்ரீநிவாஸுலு ஸ்வாமி தமது உயிரைக் காப்பாற்றிய விஷயத்தைப் பற்றிக் கூறுகிறார். ''1986-ஆம் ஆண்டு மே மாதத்தில் என் வீட்டின் மாடியில் இரண்டு அறைகளும் ஒரு வராந்தாவும் கட்டினேன். தற்காலிகமாக கீழேயிருந்து மின்சாரக் கம்பிகளைக் கொண்டு வந்து ஒரு அறையில் ஒரு பல்பும் பிறகு வராந்தாவில் ஒரு பல்பும் பொருத்தினோம். பின்னர் வராந்தாவிலுள்ள பல்பை எடுத்து விட்டதால் ஹோல்டர் மட்டும் இருந்தது. மே மாதம் மூன்றாம்தேதி நல்ல நாளென்று அன்று புது அறைகளில் பால் காய்ச்ச வேண்டுமென்று அன்று விடிகாலை 3 மணிக்கு என் மனைவியும் அவளது சகோதரியும் வீடு கழுவிக் கொண்டிருந்தனர். ஒரு அறையில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. நான் குளித்துவிட்டு ஈர உடையுடன் மேலே வந்தேன். வராந்தாவிலுள்ள ஹோல்டரை, பல்பு இல்லாத மற்றொரு அறையில் மாட்ட வேண்டுமென்று மின்சாரக் கம்பியோடு அதைக் கழற்றினேன். இதற்கிடையில் எலி கடித்ததால் இன்சுலேஷன் இல்லாத இடத்திலேயே நான் வயரைப் பற்றினேன். உடனே மின்சார அதிர்ச்சி ஏற்பட்டு அலறினேன். வயரை என் கையிலிருந்து விடுவிக்க வேண்டுமென்று நான் செய்த முயற்சிகள் பலனளிக்கவில்லை. அப்படியே நெட்டுக்குத்தாக விழுந்து கைகால்களை அடித்துக் கொண்டிருந்தேன். அறையின் தரையில் ஈரம், வயர் என் கையை நன்றாகப் பிடித்துக் கொண்டிருந்தது. எனது அலறலைக் கேட்டு மேலே வந்த என் மைத்துனி நான் அடித்துக் கொண்டு கிடப்பதைக் கண்டாள். அதே சமயத்தில் ஈரத்தரையிலிருந்து அவளது காலில் மின்சார அதிர்ச்சி ஏற்பட்டது. உடனே கீழே விரைந்து

சென்று ''பாவா (சகோதரியின் கணவர்)வுக்கு மின்சார அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது'' என்று கத்தினாள். இதனைக்கேட்ட என் மனைவி கீழே குடியிருப்பவர்களை எழுப்பி பயத்தால் கீழே விழுந்துவிட்டாள். அவர்கள் விழித்தபிறகு எதுவும் பரியாமல் என் மனைவியைக் கட்டிலில் படுக்க வைத்தனர். இதற்குள் மீண்டும் என் மைத்துனியின் அலறலைக் கேட்டு விஷயம் புரிந்து உடனே ப்ளக்கிலிருந்து வயரை நீக்கினர்.

''மேற்கூறியவை அனைத்தும் ஐந்து நிமிடங்களில் நடந்து விட்டது. இதற்கிடையில் என் நிலை மோசமாகி சாவின் எல்லைக்கே சென்று விட்டேன். ஆனால் பிரக்ஞை இருந்தது. ''ஸ்வாமி எனக்கு இத்தகைய சாவை அருளினாரா'' என்று மனதிலே எண்ணியவுடன் என் கையிலிருந்த வயரை வேறு ஒருவர் பிடுங்கிப் போட்டது போல் அது கீழே விழுந்தது. சமாளித்துக் கொண்டு எழுந்து நாலடி வைத்தேன். அப்போது அடுத்த அறையிலுள்ள விளக்கு அணைந்தது. கீழே உள்ளவர்கள் மேலே வந்தனர்.''

''இதிலுள்ள அதிசயமான விஷயம் என்னவென்றால் அப்போது வரை என் கையை விடாத வயர் நான் ஸ்வாமியை நினைத்ததும் எவரோ பிடுங்கியது போல் விழுந்தது. மேலும் பின்னர் நான் எழுந்து, அந்த மின்சாரம் பாய்ந்து கொண்டிருந்த ஈரத்தரையில் எப்படி நடக்க முடிந்தது? நான் நான்கு அடிகள் வைத்த பிறகே பக்க அறையின் விளக்கு அணைந்ததால் அப்போது தான் மின்சார வயரின் இணைப்பைத் துண்டித்திருக்க வேண்டும்.''

''மின்சார அதிர்ச்சியினால் கறுப்பாகக் கன்றிப்போன என் கையைப் பார்த்த மருத்துவர், ''இப்படி நெருப்பில் கன்றினால் உள்ளிருந்து நிணநீர் வெளியே வர வேண்டுமே. அப்படி வராததால் உன்னை ஏதோ ஒரு தெய்வசக்திதான் காப்பாற்றியிருக்க வேண்டும்'' என்று ஆச்சரியப்பட்டார். 'உன் கை மூன்றிலிருந்து ஆறு மாதத்திற்குள் நலமடையும்' என்றார். ஊசிபோட்டு விட்டு எலும்பு முறிந்துள்ளதென்று மாவு வைத்துக் கட்டினார். அது வெயில் காலமானதால் அரிப்பைப் பொறுக்க முடியாமல் கட்டை அவிழ்த்து விட்டு எல்லா பாரத்தையும் ஸ்வாமி மீது போட்டுவிட்டு மே 14-ஆம் தேதியன்று கொலகமூடிக்கு வந்து ஸ்வாமியினருகில் அமர்ந்தேன். அன்றிரவு கனவில் எனது சிநேகிதர்கள் என் கால் கட்டை விரலில் ஆபரேஷன் செய்து கெட்டியான மஞ்சள் நிறமுடைய நிரவத்தை எடுத்தார்கள். ஒரு மாதத்திற்குள்ளாகவே என் கை முழு நலம் பெற்றது.''

இந்நிகழ்ச்சி நடப்பதற்குப் பத்தொன்பது தினங்களுக்கு முன்பு எனக்கு ஏற்பட்ட ஒரு கனவின் மூலம், இறக்கவிருந்த என்னை ஸ்வாமியே காப்பாற்றினார் என்று எனக்கு உறுதியாயிற்று. ஒரிடத்தில்

சினிமாப் பாடகரான முகம்மதுரபியின் பாட்டுக் கச்சேரி நடைபெற்றுக் கொண்டிருந்தது. மேடையில் காந்தி மஹாத்மா அமர்ந்துள்ளார். அவரது முகம் ஸ்வாமியின் முகத்தைப் போலவே உள்ளது. அவருக்கு இரு புறமும் ராஜேந்திரபிரசாத், நேரு, லால்பஹதூர் சாஸ்திரி, ராதா கிருஷ்ணன், டங்குடூரு பிரகாசம் முதலிய காலம் சென்ற தலைவர்கள் யாவரும் அமர்ந்துள்ளனர். இப்போது வாழ்ந்துள்ளவர்கள் ஒருவர் கூட அங்குக் காணப்படவில்லை. நான் சென்று 'இவர் வெங்கைய ஸ்வாமியே' என்று எண்ணிக் கொண்டு காந்திஜிக்கு நமஸ்காரம் செய்தேன். அவர் எழுந்து என்னருகில் வந்து 'இங்கு எதற்காக வந்தாய், போய்விடு' என்றார். ''நான் வெங்கையஸ்வாமி பக்தன். கொலக மூடிக்குப் போய் வருவது வழக்கம்'' என்றேன். ''இந்த விஷயம் எனக்குத் தெரியும். இதற்கு முன்பே இருமுறை கூறினாய் அல்லவா'' என்று கூறி ஐந்து பாக்கெட் அளவுள்ள வீரபத்ர சாமியின் புகைப் படங்களை என் கையில் வைத்து என்னை அங்கிருந்து அனுப்பி விட்டார். உடனே என் கனவு முடிந்தது. ஸ்வாமியளித்த ஐந்து புகைப் படங்களும் என் பஞ்சப்ராணங்களைக் குறிக்கும். அந்தத் தலைவர்கள் இருந்த பரலோகத்தைச் சேர வேண்டியவன் நான். ஆனால் கருணைக் கடலான ஸ்வாமி மேலும் சிலகாலம் இவ்வுலகிலே இரு என்று உயிர்ப் பிச்சை அளித்து அனுப்பினார். அதனால்தான் மேலே கூறிய விபத்தி லிருந்து நான் தப்பினேன்.''

யாமால செஞ்சையாவின் மனைவி வனம்மா தன் குழந்தையை ஸ்வாமி காப்பாற்றிய விவரத்தைக் கூறினார். எனது ஐந்தாவது குழந்தைக்கு மூன்று மாதத்தில் இடது செவியின் கீழே வீக்கமும் வலியும் வந்தது. எந்தவிதமான மருத்துவமும் மந்திரங்களும் பலனளிக்க வில்லை. அந்த வலி சிறுசிறிதாகக் கீழிறங்கி இடது முழங்காலுக்குக் கீழே பின்புறச் சதையில் மேல் கட்டி ஏற்பட்டு உடைந்து சீழ் வர ஆரம்பித்தது. சீழ் வழியும் துவாரங்களிலிருந்து இரண்டங்குலம் நீள முள்ள மெலிதான எலும்புத் துண்டுகள், ஆறு முறை ஆறு துண்டுகள் வெளிப்பட்டன. காலிலிருந்து துர்நாற்றமடித்ததால் குழந்தையின் அருகில் நிற்க முடியவில்லை. P.C. சாஸ்திரி என்ற டாக்டர் எக்ஸ்ரே எடுத்துப் பரிசோதித்துக் காலை எடுத்துவிட வேண்டும் என்றும் இல்லா விடில் குழந்தை இறந்து விடுவான் என்றும் கூறினார். மற்றும் இரண்டு மூன்று டாக்டர்களும் இவ்வாறே கூறினர். சென்னைக்கு அல்லது நெல்லூருக்கு அழைத்துச் சென்று அறுவைச் சிகிச்சை செய்யும்படிக் கூறினர். பெண் குழந்தையை ஊனமுள்ளவளாக வைத்திருப்பதை விட அவள் இறந்தாலும் பரவாயில்லை என்று என் தந்தை இந்த அறுவைச் சிகிச்சைக்கு ஒப்புக் கொள்ளவில்லை.

ஒரு சிநேகிதியின் ஆலோசனைப்படி 19.4.86 அன்று நானும் என் தந்தையும் குழந்தையை ஸ்வாமியின் சமாதிக்கு எடுத்துச் சென்றோம்.

''ஸ்வாமி, இந்தக் குழந்தைக்குக் கால் சரியானால் உமது மேன்மையை மூன்று வாரங்கள் ஒலி பெருக்கி மூலம் பரப்புவேன்'' என்று என் தந்தையும், பொங்கல் சமர்ப்பிப்பதாக நானும் வேண்டிக் கொண்டோம். பிறகு ஸ்வாமியின் அகண்ட நீபத்திலுள்ள எண்ணெயை எடுத்துச் சென்று விபூதியோடு கலந்து பூசத் தொடங்கினோம். அடுத்த வாரத்துக் குள் மூன்று துவாரங்கள் மூடிக்கொண்டன. ஒரு எலும்புத் துண்டு 2 அங்குல நீளத்தில் சதையில் சிக்கிக் கொண்டு 1/2 அங்குலம் வெளியே வந்திருந்தது. இரண்டாவது வாரத்தில் ஜன நெரிசலால் எண்ணெய்கூடக் கிடைக்கவில்லை. பழைய எண்ணெயை உபயோகித்தோம். அப்போது எனக்கு ஏற்பட்ட கனவில் என் குழந்தையின் கால் முறிந்து கீழே விழுந்தது. நான் மிகவும் வருந்தினேன். அப்போது ஒரு முதியவர் வந்து ''கால் விழுந்துவிட்டது என்று வருந்துகிறாயா? ஒன்றும் ஆகாது. ஊசியும் நூலும் கொண்டு வா'' என்று கூறி அந்தக் காலை ஒட்டிவிட்டுத் தைத்துவிட்டார். உடனே விழிப்பு ஏற்பட்டது.

பின்னர் காயத்திலிருந்த எலும்புத்துண்டு தானாகவே வெளியே வந்துவிட்டது. எந்தவித மருந்துமில்லாமலேயே ஸ்வாமியின் எண்ணெய், விபூதி முதலியவற்றினாலேயே கால் காயம் படிப்படியாகக் குண மடைந்ததோடு, முறிந்த எலும்பும் தானாகவே வளர்ந்து ஒட்டிக் கொண்டு விட்டது. ஸ்வாமியின் கருணையால் என் மகன் இன்று எந்தவிதக் குறையுமின்றி நன்றாக நடக்கிறான்.

கோவூர் ஜில்லா பரிஷத் ஹைஸ்கூலில் தையல் ஆசிரியையாகப் பணியாற்றும் பி. கோடேஸ்வரம்மாவின் அநுபவம் : '' என் தாய்க்கு 1982 - 1986க்கும் இடைப்பட்ட காலத்தில் மூன்று முறை இரத்தபேதி ஏற்பட்டு அதனால் இளைத்து எலும்புக்கூடாக ஆகிவிட்டாள். எந்தவித உணவு தின்றாலும் அதிகமாக இரத்தபேதி ஏற்பட்டு உடல் முழுதும் மிகுந்த வலிக்கு ஆளானாள். எனவே ஒரு சில இண்ணங்கள் இரவ ஆகாரமே கொடுக்க ஆரம்பித்தோம். அமெரிக்கன் மருத்துவமனையில் நான்கு நாட்கள் சிகிச்சை செய்தாலும் குணமேற்படவில்லை. மருத்து வர்கள் பிரத்தியேகமான பரிசோதனைகள் செய்து, 'வயிற்றில் புற்று நோய்க் கட்டி நன்றாக முதிர்ந்த நிலையில் உள்ளது. எந்த நிமிடத்திலும் அது உடைந்து அவள் இறக்கக்கூடும். அவளை வீட்டுக்கு அழைத்துச் சென்று அவளது கடைசி ஆசைகளை நிறைவேற்றுங்கள்' என்று கூறி அனுப்பிவிட்டனர். எங்களுக்கு சிகிச்சையை நிறுத்திவிட இஷ்ட மில்லாமல் அவர்களிடம் கடிதம் பெற்றுக் கொண்டு சென்னையிலுள்ள புற்றுநோய் மருத்துவமனைக்குச் செல்ல ஏற்பாடுகள் செய்து கொண்டிருந் தோம். அதைக் கவனித்த எங்கள் வீட்டுச் சொந்தக்கார அம்மா, வெங்கைய ஸ்வாமியிடம் போகும்படிப் பலமுறை கூறினாள்.''

''அத்தகைய சங்கடமான நிலையில் நான் ''ஸ்வாமி! நான் மதராஸ் போகாமல் உன்னிடம் வந்தால், பணம் செலவாகிறது என்று நான் வைத்தியம் செய்யவில்லை என்று என் தந்தையார் உட்பட எல்லோரும் என்னைப் பழிப்பார்கள். நான் மருத்துவமனைக்குப் போகிறேன். ஆனால் அங்கே அம்மாவுக்குக் கான்சர் இல்லை என்று கூறி அவள் உடல் நலம் அடைந்தால் உம் படத்தை வைத்துப் பூஜித்துக் கொள்வேன்'' என்று கூறி மிகுந்த துக்கத்தோடு கண்ணீர் விட்டுப் பிரார்த்தித்துக் கொண்டேன். நாங்கள் ரயிலில் பாதி தூரம் போனவுடனே அதுவரை எதுவும் உண்ணாத என் தாய் தானே சாதம் போடு என்று கேட்டாள். கடைசி நிமிஷங்கள் என்று எண்ணித் தயிர்சாதம் போட, நன்றாகவே சாப்பிட்டாள். பின்னர் பழங்கள், பிஸ்கட்கள் முதலிய வற்றையும் தின்ன முடிந்தது. பின்னர் ரத்தமே போகவில்லை. சென்ட்ரல் ஸ்டேஷனில் இறங்கியவுடன் எனக்கு உடல் நிலை நன்றாகவே உள்ளது. ஆஸ்பத்திரிக்குப் போவது எதற்கு? வீட்டுக்கே போகலாமென்று அவசரப்படுத்தினாள். எப்படியோ நல்ல வார்த்தைகள் கூறி அடையார் கான்சர் ஆஸ்பத்திரியில் ஆயிரத்து அறுநூறு ரூபாய்கள் செலவு செய்து எவ்வளவு பரிசோதனைகள் செய்தும் எந்தவிதமான நோயும் இல்லை. தவிர அவளுக்க இந்த வயதில் இரத்த அழுத்தம், இதயம், சிறுநீரகங்கள் யாவும் நலமான நிலையில் இருப்பதைப் பார்த்து டாக்டர்கள் ஆச்சரியத்தைத் தெரியப்படுத்தினர். இன்றும் எந்தவித மருத்தும் உபயோகிக்காமல் நல்ல ஆரோக்கியத்துடன் இருந்து வருகிறாள்.

கூடூர் நில்லாவிலுள்ள ஒஜிலியில் வசிக்கும் பாபு என்ற இளைஞனுக்கு இருபது வயது. 1988-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் திடீரென்று பித்தனைப் போல நடக்கத் தொடங்கினான். உடலிலுள்ள துணிகளை எல்லாம் அவிழ்த்துப் போட்டுவிடுவான். பெண்கள் காணப் பட்டால் பின்னால் போய் அவர்களைத் துரத்துவான். கால்களையும், கைகளையும் சேர்த்துக் கட்டி எவ்வளவோ வைத்தியங்கள் செய்தனர். கூலி வேலை செய்து பிழைப்பவர்களானதையால் இரண்டாயிரம் ரூபாய் கள் வரை கடன் வாங்கி வைத்தியம் செய்து பின்னர் வேறு வழியின்றி ஸ்வாமியைப் புகலடைந்தனர். அந்த இளைஞன் இரவும் பகலும் தூங்கமாட்டான். பயங்கரமாகக் கத்திக் கொண்டே ஒருக்களித்துப் படுத்துக் கொண்டு கைகால்களைக் கட்டியுள்ள கயிற்றைப் பற்களால் கடித்து அவிழ்த்து விடுவான். எனவே அவனது கைகளும், கால்களும் வாய் வரை வரமுடியாமல் கட்டிப் போட்டார்கள். பார்ப்பதற்கு பயங்கரமாயிருக்கும் அவனது நிலை.

ஸ்வாமி சன்னிதானத்திலுள்ள சிலர் அந்தச் சிறுவனை வேறு சில இடங்களுக்க அழைத்துச் சென்றால் நலம் கிடைக்கும் என்று விதவித மான யோசனைகள் கூறினர். ஆனால் அந்தச் சிறுவனுடைய தமையனார்

மாத்திரம் ஸ்வாமியையே நிட விசுவாசத்தோடு நம்பிக்கொண்டு ''ஸ்வாமி அவனைக் குணப்படுத்தினால் அவருக்கு ஒரு தேங்காய் உடைப்பேன். அல்லது அவன் இறந்துவிட்டால் இங்கேயே புதைத்து விட்டுப் போவேன். அதைத்தவிர எனக்கொன்றும் தெரியாது'' என்று கூறினார்.

மூன்றாவது நாளிலிருந்து, கத்துவதும் உடலில் உள்ள பட படப்பும் குறைந்தது. கட்டுக்களை அவிழ்த்தபோது அமைதியாக அமர்ந் திருந்தான். ஒரு வாரத்துக்குள் சாதாரண மனநிலையைத் திரும்பப் பெற்றான். பொறுமையாகக் காத்திருந்து இரண்டு மாதங்களுக்குப் பின் ஸ்வாமி உத்தரவு கொடுத்த பிறகே வீட்டுக்குத் திரும்பினர். பின்னர் சனிக்கிழமை தோறும் வந்து உளமார்ந்த அன்புடன் ஸ்வாமியைத் தரிசித்துவிட்டுச் செல்வார்கள்.

பொம்மவரம் கிராமத்தைச் சேர்ந்த பார்லபல்லி வெங்கடேஸ் வரலு ''1970-ஆம் ஆண்டு எனது ஆடுகள் நோயுற்று இறக்க ஆரம்பித்த போது ஸ்வாமியின் ஆசிகளுக்காக சிலகலமர்ரி கிராமத்துக்குப் போனேன். ஸ்வாமியைச் சுற்றி நூற்றுக்கணக்கானவர் நின்று கொண் டிருந்ததால் தூரத்திலேயே நின்று கொண்டு மனதில் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தேன். உடனே ஸ்வாமியின் சீடர் ஒருவர் வந்து பொம்மவரக்காரரை ஸ்வாமி அழைக்கிறார் என்று கூறி என்னை ஸ்வாமியின் அருகில் அழைத்துச் சென்றதைக் கண்டு நான் வியந்தேன். ''இனிமேல் கால்நடைகளுக்கு எதுவும் ஆகாது. எல்லாம் நன்றாக இருக்கும்'' என்று சீட்டு எழுதுவித்து அளித்து என்னை அனுப்பினார். அதன் பின்னர் ஒரு ஆடு கூட இறக்கவில்லை. ஸ்வாமி ஸஞ்சாரம் செய்து கொண்டிருந்த காரணத்தால் அவரை மீண்டும் தரிசிக்கவில்லை. ஆனால் அந்தக் கருணாமூர்த்தி நான் அழைக்காவிடினும் என்னைக் காப்பாற்றுகிறார். 1978-ஆம் ஆண்டில் புயலினால் ஆடுகளை மலைமேல் ஒட்டிவிட்டோம். அவை திரும்பி வரும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. அப்போது ஒரிரவு ஸ்வாமி கனவில் காட்சியளித்து ''நம் பிராணிகள் எல்லாம் நலமாக இருக்கின்றன ஐயா'' என்றார். கிராமத்தி லுள்ள மற்ற ஆர்களின் ஆடுகளில் பெரும்பான்மையும் இறந்து விட்டன. எங்களது ஆடுகள் மாத்திரம் ஒன்று கூட இறக்கவில்லை.

1984-ஆம் ஆண்டில் எனக்கு இதயத்துடிப்பு அதிகரித்து அபாயகர மான நிலையில் ஆத்மகூரிலுள்ள கந்தரராமிரெட்டி டாக்டரிடம் அழைத்துச் சென்றனர். இரண்டு நாட்களுக்கு இரண்டாயிரம் ரூபாய்கள் செலவழித்தனர். பின்னர் நான் இறந்துவிட்டேனென்று காரில் வீட்டுக்கு அழைத்து வந்தனர். எல்லோரும் அழுது அழுது உட்கார்ந்தவாறே உறங்கிப் போயினர். எனது பெற்றோருக்கு ஸ்வாமி கனவில் காட்சி

யளித்து ''எனது பக்தனை நான் காப்பாற்றுவேன்'' என்று கூறினார். விடிந்தவுடன் நான் கண்களைத் திறந்து, படிப்படியாக இரண்டு மாதங்களில் எந்த மருந்தும் இல்லாமலேயே பூரண ஆரோக்கியத்தைப் பெற்றேன். இந்த அதிசயத்தைக் கண்ணுற்றவர்கள் யாவரும் ஸ்வாமி மகிமையைப் புகழ்ந்தனர்.

1984-ஆம் ஆண்டு ஸ்வாமியின் ஆராதனைக்கு வந்து, ஸ்வாமி உடலோடு இருக்கும்போது என்னை அவரது சேவையில் ஈடுபடுத்திக் கொள்ளாமல் விட்டுவிட்டாரே என்று வருந்தினேன். அன்றிரவு ஸ்வாமி கனவில் அக்னிகுண்டத்தில் அமர்ந்தவாறு காட்சியளித்தார். அன்றே மற்றொரு காட்சியில் ஸ்வாமியின் உடலில் எண்ணற்ற கற்பூரக்கட்டிகள் எரிவதுபோல் காட்சி ஏற்பட்டது. தான் எல்லோரையும் போல இறக்க வில்லை என்றும் அந்த அக்னியைப் போலவே நிரந்தரமாக பிரகாசித்துக் கொண்டிருப்பார் என்றும் ஸ்வாமி எனக்கு அறிவுறுத்தினார்.

பிறகு நான் வீட்டுக்குத் திரும்பிய நான்காம் நாளிலிருந்து தீவிர மான ரத்தபேதி ஏற்பட்டது. ''போகவேண்டாமென்றால் கேட்காமல் ஆராதனைக்குப் போய் வேண்டாத வியாதியை வரவழைத்துக் கொண்டார்; இனி ஆசையில்லை, இறந்துவிடுவார்'' என்று எல்லோரும் வாய்க்கு வந்தபடி பேசினர். 'ஸ்வாமி என்னைக் காப்பாற்றினால் காப்பாற்றட்டும், இல்லாவிடில் தன்னோடு என்னை ஐக்கியம் செய்து கொள்ளட்டும்' என்று நான் மருந்து கூடச் சாப்பிடவில்லை. அன்றிரவு மூடப்படாத தமது சமாதியின்மேல் நின்றவராக ஸ்வாமி அபயஹஸ்தத் தோடு காட்சியளித்தார். மறுநாள் காலையிலிருந்து நான் நோய் ஏதுமின்றி நடப்பதைக் கண்டு அனைவரும் வியந்தனர்.

கோடூர் யாளாதிரெட்டியார் தமது பதினாறாவது வயதிலிருந்தே ஸ்வாமியின் பக்தர். அவரது ஆஸ்துமா வியாதியை ஸ்வாமியே குணப் படுத்தினார். ஆனால் இவரோ எப்போதும் பணத் தொல்லையில் சிக்கியவராக ஸ்வாமி தமது இராமத்துக்கு வந்தாலொழிய மற்ற சமயங் களில் அவரைப் பற்றி நினைக்கக் கூட மாட்டார். 1985-ஆம் ஆண்டில் ஜூன் மாதத்தில் அவருக்கு நோய் ஏற்பட்டு, ஆகாரம் என்றாலே வெறுப்பு ஏற்பட்டுச் சரியாக உண்ணாமல் எலும்புக்கூடாக மாறி விட்டார். ஆகஸ்ட் மாதத்தில் நாளொன்றுக்கு முப்பது முறை பேதி ஏற்பட்டது. மருத்துவர்களுக்கு என்ன வியாதி என்று தெளிவாகவில்லை. உயிரின்மேல் ஆசையை விட்டுவிட்டார் ரெட்டியார். ஆகஸ்ட் 22-ஆம் தேதியன்று அவரது நண்பரான அக்கிம் வெங்கட்ராமிரெட்டி, அவரை கொலகமூடிக்கு வந்து ஸ்வாமியின் ஆராதனை உத்ஸவத்தின் போது அவரைத் தரிசித்துக் கொண்டால் நோய் குணமடையும் என்று கூறினார். மற்றவர்கள் உதவியின்றி எழமுடியாத யாளாதிரெட்டி நண்பரின்

தூண்டுதலால் போவதற்கு ஒப்புக் கொண்டார். வண்டி கொண்டு வருவதற்காக வெங்கட்ராமிரெட்டி வீட்டுக்குப் போனார்.

யானாதி ரெட்டி ''நான் ஸ்வாமி தரிசனத்துக்கு வருகிறேன் என்று கூறிய மறுகணமே என்னுள் மிகுந்த மாற்றம் ஏற்பட்டது. எவருடைய உதவியுமின்றி நடந்து வீட்டிற்குள் சென்று மிகவும் பசியாயிருந்ததால் சாதம் போடும்படி அவசரப்படுத்தினேன். எனது நடத்தையைப் பார்த்து வீட்டிலுள்ளவர்கள் திக்பிரமையடைந்து, மரணமடைவதற்கே இந்தப் பசி என்று நினைத்து வருந்த ஆரம்பித்தனர். நான் எப்போதும் போலவே சாப்பிட்டு, குளிர்ந்த நீரில் குளித்து, துவைத்த ஆடைகள் உடுத்திக் கொண்டு கொலகமூடிக்குப் போகத் தயாராக அமர்ந்தபோது எல்லோரும் என்னையே அதிசயமாகப் பார்த்துக் கொண்டிருந்தனர். வெங்கட்ராமி ரெட்டி பார்த்துவிட்டு, 'இறப்பவனைப் போல இருந்தாயே, பிறகு எப்படி அதற்குள் மாப்பிள்ளை போல் தயாரானாய்?' என்று கேட்டு விட்டு 'அதெல்லாம் ஸ்வாமியின் மகிமை அல்லவா' என்றார்.

வண்டி இல்லாமலேயே இரண்டு மாதங்களாக உணவு சாப்பிடாத நான் ஒரு மைல் தூரம் நடந்து பஸ் ஏறி கொலகமூடியை அடைந்து அங்குச் சாப்பிட்டேன். அது முதல் எவ்வித மருந்தும் இல்லாமல் ஆரோக்கியமாக உள்ளேன்''.

''நான் (பெசல சுப்பராமய்யா) கலிச்சேடு கிராமத்தை விட்டு விட்டு ஸ்வாமி சந்நிதியில் குடித்தனம் செய்து கொண்டிருந்த நாட்களில், எனக்கிருந்த இரண்டு பிரச்னைகளைக் குறித்து ஸ்வாமியிடம் ஆலோசனை கேட்க வேண்டும் என்று நினைத்தேன். பின்னர், ஸ்வாமி தம் பதிலை எப்போதும் குறிப்பால்தான் உணர்த்துவார்; ஆனால் சாயிநாதர் தெளிவாகக் கூறுவார் என்று கருதி ஷீரடிக்குப் போய் ஒரு வாரம் தீக்ஷை மேற்கொண்டேன். ஆனால் சாயிநாதரும் எனது பிரச்னை களுக்குக் குறிப்பாகவே பதிலளித்து, ''பைத்தியக்காரா, எனக்கும் ஸ்வாமிக்கும் வேறுபாடு இல்லை. நீ அங்கேயே ஸ்வாமியை மனப் பூர்வமாக வழிபடு'' என்று உணர்த்தினார். தவிர சாயி தமது பக்தர்களின் தவறுகளைச் சுட்டிக்காட்டி அவர்களின் நடத்தையை மாற்றுவார்; ஆனால் ஸ்வாமி எப்போதும் மௌனமாக இருப்பார்; நம் தவறுகளைச் சுட்டிக்காட்ட மாட்டார் என்று கருதினேன். மேலும் ஸ்வாமி உடலோடு இல்லாததால் நமது தவறுகளைச் சுட்டிக்காட்டித் திருத்துவதற்கு எவரு மிலர் என்று எண்ணினேன்.''

''ஆனால் 1988-ஆம் ஆண்டு மே மாதத்தில் பதினைந்து நாட்கள் ஸ்ரீ ஸ்வாமியின் சமாதிக்குப் பூஜை செய்யும் அதிருஷ்டம் எனக்குக் கிடைத்தது. அந்தக் குறுகிய கால அளவிலேயே ஸ்வாமி எப்போதும்

நம்முடனே இருந்து நமது தவறுகளை நமக்கே உணர்த்தி தவறுகளுக்கு உடனுக்குடன் தண்டனை கூட அளிப்பாரென்று அறிந்து கொண்டேன். அன்றுமட்டுமல்ல, இன்றும்கூட நமது மனதில் எத்தகைய தீய எண்ணங்கள் தலையெடுத்தாலும் உடனே எச்சரிப்பார். அத்தகைய தீய எண்ணங்கள் தோன்றியபோது சாம்பிராணி தூபம் போட நெருப்பு கிடைக்காது; கஷ்டப்பட்டு நெருப்புக் கொண்டு வருவதற்குள் பூஜைக் காலம் தாண்டிவிட்டிருக்கும். சில சமயங்களில் பூஜையின் முடிவில் தூபம் போடுவதற்குப் பார்த்தால் நெருப்பு அணைந்து போயிருக்கும். சில சமயங்களில் பூஜையில் வேறுவிதக் குறை ஏற்படும். எதற்காக இப்படி நிகழ்ந்தது என்று யோசிக்கும்போது சற்று முன்னால் எனக்கு ஏற்பட்ட அகம்பாவத்துக்குத் தண்டனையே இது என்று உணரும்படிச் செய்வார். இன்றும் ஸ்வாமி நமது சேவையை நிராகரிப்பதின் மூலம் நம்மை எச்சரிக்கத்தான் செய்கிறார். நாம் எப்போதும் கவனமாக இருந்து அவரது குறிப்புக்களை உணர்ந்து நம்மைத் திருத்திக் கொள்ள வேண்டும்.''

கடப்பழில்லா வாகமடஇராமத்தைச் சேர்ந்த ஷேக் ரஹ்மத்துல்லா தமது அநுபவத்தை விவரித்தார் : ''எனது வலது முழங்காலுக்குக் கீழே எலும்புகளில் தீவிரமான வலி இருந்து வந்தது. எந்தவித வைத்தியத் திற்கும் அந்த வலி கட்டுப்படாதபோது சிநேகிதர்கள் மூலமாக ஸ்வாமியைப் பற்றிக் கேள்விப்பட்டு பென்னபத்வேலு குன்றின்மீது தங்கியுள்ள ஸ்வாமியைத் தரிசித்தேன். ஸ்வாமி தமது இருக்கரங்களால் எனது காலை இருபது நாட்கள் வரை இனமும் சிறிது நேரம் பிடித்து விட்டார். கடைசியில் எந்த மருந்துமின்றி எனது கால்வலி முழுமையாக நீங்கிவிட்டது.''

''அந்த நாட்களில் ஸ்வாமி இருந்த அந்த இடத்தில் மின்சார விளக்குகள் இல்லை. இரவில் சிறுநீர் கழிப்பதற்காக எழுந்த நான், நன்றாக எரிந்து கொண்டிருந்த அக்னி குண்டத்தின் வெளிச்சத்தில் குண்டத்தைச் சுற்றிலும் ஸ்வாமியின் வெட்டப்பட்ட அவயவங்கள் யாவும் தலை ஒரு பக்கம், கால்கள் ஒரு புறம், கைகள் ஒரு புறம், உடல் மறுபுறம் என்று விழுந்து கிடப்பதைக் கண்டேன். இந்தக் காட்சியைக் கண்டு பீதி அடைந்த நான் ஓடிப்போய் அருகிலிருந்த மண்குடிசைக்குள் நுழைந்து கொண்டேன். அரைமணி நேரம் கழித்து குடிசையிலிருந்த என்னிடம் வந்து ''என்னய்யா, ரந்து சாயபா, உனக்கு உலகம் காட்சி யளித்ததல்லவா? விடிந்தவுடனே நீ உன் கிராமத்துக்குப் போய்விட வேண்டும், இங்கே இருக்கக் கூடாது'' என்று பன்முறை கூறிப் பயணச் செலவுக்கு என் கைகளில் பணமளித்து ''நான்கு நாட்கள் வரை நீ இங்கிருக்கக் கூடாது'' என்று அவசரமாக என்னை என் கிராமத்துக்கு அனுப்பிவிட்டார். நான் பார்த்த கண்டயோகக் காட்சியை நான் எல்லோருக்கும் கூறுவேன் என்றே என்னை அனுப்பிவிட்டார்.''

''ஐந்தாம் நாள் இரவு நான் ஸ்வாமியிடம் வந்து தூங்கினேன். விடிந்ததும் விடியாததுமாகவே 'ஐயா ரந்துசாயபா, உன் தம்பியின் கை முறிந்தது. கட்டுக்கட்டினார்கள். அது ஒன்றும் ஆகாது போ ஐயா'' என்று என்னை என் கிராமத்துக்கு அனுப்பினார். அங்கு போனபோது ஸ்வாமி கூறியபடியே நிகழ்ந்திருந்தது. ஸ்வாமியின் ஆசியினால் என் தம்பிக்குச் சில நாட்களிலேயே எந்த மருந்தும் இல்லாமல் முறிந்த கை நல்ல முறையில் சேர்ந்து கொண்டது.''

கோலூர் கௌசல்யாம்மா தனது அனுபவத்தைக் கூறுகிறார் : ''1991-ஆம் ஆண்டு மே மாதம் ஒன்றாம் தேதியன்று திடீரென்று வலது கண் விபரீதமாக வலிக்கத் தொடங்கியது. கோலூரில் கண் டாக்டர் இல்லாததால் இரவு ஊசி போட்டு உறங்க வைத்தனர். விடிகாலையில் நெல்லூருக்குச் சென்று கண் மருத்துவருக்குக் காட்டியபோது ராய வேலூருக்குப் போகும்படி கூறினர். அப்போது கண்ணிலிருந்து கெட்டி யான திரவம் வழிந்து துர்நாற்றமடித்தது; வலி பொறுக்க முடியவில்லை. ராயவேலூரில் மூன்று நாட்கள் சிகிச்சைக்குப் பிறகும் வலி குறையாமல் சித்தூரில் ஸ்பெஷலிஸ்டிடம் காட்டினேன். ஆனால் எந்தவிதப் பலனுமின்றி மதராஸுக்குப் போய்ப் பத்து நாட்கள் சிகிச்சையிலும் எவ்விதப் பலனுமின்றி பின்னர் ஒங்கோலில் செய்து கொண்ட மருத்துவ மும் வீணாயிற்று. அந்தச் சமயத்தில் கண்விழி நன்றாக உள்ளுக்குள் போய் இமைகளும் மூடிக் கொண்டு விட்டன. எனது துன்பத்தைப் பார்க்கச் சகிக்காமல் என்னைச் சேர்ந்தவர்கள் பல டாக்டர்களிடம் காட்டி இறுதியில் திருப்பதியிலுள்ள மஞ்சுளாம்மாவுக்குக் காட்டினபோது, 'இனி இந்தக் கண்ணுக்குப் பார்வை வராது. இரண்டாவது கண்ணுக்குக் கூட இந்த வியாதி வரும் அபாயம் உள்ளது. உடனே கண் விழியை எடுத்து விட்டு பீங்கானால் ஆன கண்ணைப் பொருத்திவிடுகிறேன்; ஒரு கண் பார்வையோடு திருப்தியடைய வேண்டியதுதான்'' என்று கூறிவிட்டார்.

அதைக்கேட்டு எல்லையற்ற துக்கத்தால் அழுதழுது உறங்கி விட்டேன். என் கனவில் எப்போதோ இறந்துவிட்ட என் தந்தை காட்சி அளித்து 'அங்கே வா' என்று மும்முறை கூறினார். உடனே எனக்கு விழிப்பு ஏற்பட்டது. இறந்த தந்தை என்னைத் தம்மிடம் வரும்படிக் கூறியதால் நான்கூட இறக்கப்போவதாக எண்ணி வருந்தினேன். கரு விழியை எடுத்துவிட்டு மாற்றுக்கண் பொருத்திக் கொள்ள ஒப்புக் கொள்ளாமல் வீட்டுக்கு வந்து விட்டேன்.

அதற்கு முன்பு நான் வெங்கையல்வாமியைக் குறித்துக் கேள்விப் பட்டிருக்கிறேனே தவிர ஒரு போதும் கொலகமூடிக்குப் போனதில்லை. ஆனால் எனது உள்ளேயிருந்து 'உடனே கொலகமூடிக்குப் போ' என்று ஏதோ ஒரு சக்தி என்னைத் தூண்டியது. விட்டிலுள்ளவர்கள் நான்

கொலகமூடிக்குப் போவதை விரும்பவில்லை. எனவே எவரிடமும் சொல்லிக் கொள்ளாமல் நள்ளிரவில் புறப்பட்டு கொலகமூடிக்கு வந்தேன். ஸமாதி மந்திரத்தின் வலது பக்க வராந்தாவில் படுத்துக் கொண்டேன். முகத்தைத் துணியால் மறைத்துக் கொண்டு மிகுந்த துக்கத்தோடு வருந்தியவனாக மூன்று நாட்களைக் கழித்தேன். வலி கொஞ்சம் கூடக் குறையவில்லை. மூன்றாவது நாள் சனிக்கிழமை. நல்ல கூட்டம். அக்னி குண்டத்திலிருந்து மிகுந்த புகை வந்து சுற்றிக் கொண்டிருந்தது. வலி பொறுக்க முடியாமல் ஸ்வாமியிடம் ''ஏன் ஸ்வாமி என்னை எதற்காக உன் சந்நிதிக்கு அழைத்து வந்தாய்? இந்தப் புகையில் என்னை எதற்காக கஷ்டப்படுத்துகிறாய்? உன் மகிமையைக் காட்டவா அல்லது என் மீது பழி தீர்த்துக் கொள்ளவா?'' என்று என்னென்னவோ எண்ணிக் கொண்டேன். நன்றாக உறக்கம் ஏற்பட்டது. அப்போது ஏற்பட்ட கனவில் பீங்கான் கிண்ணத்தில் தண்ணீர் எடுத்துக் கொண்டு ஒரு வெள்ளைப்புடவை கட்டிய யுவதியும், மருந்துப் பெட்டியை எடுத்துக் கொண்டு கருப்புக் கோட்டு போட்டுக் கொண்டிருந்த ஒரு வைத்தியரும் என்னை அணுகினர். அவர்களிருவரும் ஏதோ பேசிக் கொண்ட பிறகு டாக்டர் பஞ்சை நீரில் நனைத்து என் கண்ணைத் துடைத்துவிட்டு உடனே அதிசயப்படும்படி தன் விரல்களாலேயே கண் இமைக்கும் நேரத்தில் என் கண்ணைப் பெயர்த்துக் கிண்ணத்தில் போட்டார். பஞ்சைச் சிவப்பான மருந்தில் நனைத்து என் கண்ணைத் துடைத்து அந்தப் பஞ்சை அப்படியே கண்ணில் அழுத்தி வைத்துவிட்டு அவர்களிருவரும் போய்விட்டனர். எனக்கு உடனே விழிப்பு ஏற்பட்டு ''எனக்குக் கண் வந்துவிட்டது; கண் பார்வை வந்துவிட்டது' என்று கத்தியவனாக எழுந்து அமர்ந்து கொண்டேன். என் அருகிலுள்ளவர்கள் யாவரும் தூக்கம் கலைந்து எழுந்து எனது கருவிழிகள் சாதாரணமான நிலைக்கு வந்திருப்பதையும் நான் தெளிவாகப் பார்க்க முடிவதையும் கண்டு ஸ்வாமியின் மேன்மையை வியந்து கொண்டாடினர். அன்று முதல் என் கண்ணில் வலி நீங்கித் தெளிவாகப் பார்க்க முடிந்தது. ஒரு நாள் ஸ்வாமியின் சீடர் ஒருவர் கனவில் காட்சியளித்து, ''அம்மா, உனக்கு வயதாகி உனது இரண்டாவது கண்ணுக்குப் பார்வை குறைந்தாலும் நான் அளித்த கண்ணுக்கு எவ்விதக் குறையுமின்றிப் பார்வை இருக்கும்'' என்று கூறினார்.''

மேற்கூறிய சம்பவத்தில் அவளது பூர்வ புண்ணியம் மற்றும் ஸ்வாமியுடன் அவளுக்கிருந்த பூர்வஜன்மத் தொடர்பு முதலியனவே ஸ்வாமியின் அருளுக்குக் காரணம். எனவே நமக்கு எவ்விதப் பிரச்னையும் இப்போது இல்லாவிடினும், ஸ்வாமியை மனதார நாம் இந்தப் பிறவியில் வழிபட்டால் நமது எதிர்காலத்தில் நமக்கு நாம் கேட்காமலேயே ஸ்வாமியின் அருளை அடையும்படிச் செய்யும்.

நான் (ஆசிரியர்) நன்றியோடு ஸ்வாமியை ஆறுமாதங்கள் விடாமல் வழிபட்டேன். எனது ஐந்தாவது வயதிலிருந்து என்னைப் பீடித்து வந்த ஈசனோபீலியா வியாதி முழுமையாகக் குணமடைந்து தற்போது பனியில் படுத்தாலும், குளிர்ந்தநீரில் குளித்தாலும் ஆஸ்துமா வருவதில்லை. இதைத்தவிர எவ்வளவோ ஆண்டுகளாக என்னை வருத்திவந்த எனது குடும்பப் பிரச்னைகூடத் தீர்ந்தது. எவ்வளவோ மேலான முறையில் ஸ்வாமி அருள்புரிந்தபோது கூட எனது வக்ரபுத்தி என்னைவிட்டுப் போகவில்லை. அதையும் கூட எவ்வாறு நீக்கினார் என்று பாருங்கள்.

எல்லோரும் ஸ்வாமிக்குத் தலைமுடியை அர்ப்பணிப்பதைப் பார்த்து நானும் அப்படியே செய்ய வேண்டும் என்று நினைத்தேன். ஆனால் பின்னர் மொட்டையான தலையோடு காட்சியளிக்க விருப்பமில்லாமல் அந்த எண்ணத்தைக் கைவிட்டேன். இரண்டு நாட்களில் என் தலை முழுவதும் புண்கள் ஏற்பட்டன. ஒரு வாரம் ஊசி போட்டுக் கொண்டேன். ஆனால் புண்கள் கொஞ்சம்கூடக் குணமாகவில்லை. இறுதியில் இது ஸ்வாமியின் வேலையே என்று உணர்ந்து அபிஷேக ஜலத்தைத் தலைக்குப் பூசிக் கொண்டு புண்கள் குணமானபின் தலை முடி சமர்ப்பிப்பதாக நேர்ந்து கொண்டேன். எவ்வளவு ஆச்சரியமான முறையில் புண்கள் ஏற்பட்டனவோ அவ்வாறே அவை ஒரே நாளில் மாயமாகிப் போயின. உடனே கன்னத்தில் போட்டுக் கொண்டு தலைமுடியை ஸ்வாமிக்கு அர்ப்பணித்தேன்.

ஆதோனியைச் சேர்ந்த பக்தர் N. ஸ்ரீராமுலு கூறிய அநுபவம் : ''1991-ஆம் ஆண்டு ஜூலை மாதம் வரை எனக்கு வெங்கைய ஸ்வாமியைப் பற்றி எதுவும் தெரியாது. வீரடிபசாயிபாபா பக்தரான M.K. ஆனந்த வெங்கடேஸ்வரலு எனக்கு வெங்கையஸ்வாமியின் சரித்திரமான அவதூதலீலை என்ற நான்கு பாகங்களுள்ள புத்தகத்தை அளித்துப் படிக்கும்படிக் கூறினார். 19.8.91 அன்று சரித்திரத்தை முழுதும் படித்து முடித்த நான் அன்றிரவு படுக்கும் முன் ஸ்வாமியிடம் ''ஸ்வாமி, நீங்கள் ஸமாதி அடைந்த பிறகு கூடப் பலருக்குப் பிரத்யக்ஷமாகவும், கனவுகளிலும் தரிசனம் அளித்து எவ்வளவோ நன்மைகளை அளித்திருக்கிறீர். எனக்கும் கூட அத்தகைய ஒரு அநுபவத்தை அளித்து என்னையும் உம் சமாதிக்கு அழைத்துக் கொள்ள வேண்டும்'' என்று பிரார்த்தித்துக் கொண்டு படுத்தேன். அன்றிரவு எனக்கு ஏற்பட்ட கனவில் எனக்கு முன் பின் அறிமுகமில்லாத ஒருவர் என்னைத் தம் வீட்டிற்கு அழைத்து ஸ்வாமியை என்மீது மோதுமாறு ஏவி விடுகிறார். ஸ்வாமியும் பயில்வான் ஒருவர் மற்ற பயில்வானோடு குஸ்தி போடுவதற்கு மோதுவது போலவே என்னை நோக்கி வந்தார். பயமென்றால் என்ன வென்று தெரியாத எனக்கு என்னை மோத வரும் ஸ்வாமியைக் கண்டு

பயம் ஏற்பட்டது. அப்போது நான் கைகளைக் குவித்து ஸ்வாமியிடம் ''ஸ்வாமி, எனக்கு சர்க்கரை வியாதி, இரத்தக் கொதிப்பு, மற்றும் இதயவியாதி கூட இருக்கிறது. நீங்கள் ஒரு அடி அடித்தால் கூட நான் பிழைக்க மாட்டேன். தயவு செய்து என்னை அடிக்க வேண்டாம்'' என்று மன்றாடினேன். ஆனாலும் ஸ்வாமி பயின்வானைப் போல் என்னை அச்சுறுத்தியவாறு வந்து கொண்டே இருந்தார். இறுதி யில் ஒருவழியாக அந்தக் கனவு முடிவுற்றது.''

''மறுநாள் இந்தக் கனவைப் பற்றி ஆனந்தவெங்கடேஸ்வரலுக்கு கூறியபோது அவர் 'அந்தக் கனவு மிகவும் நல்லது. ஸ்வாமி உம்மிடமுள்ள நோய்களையே அச்சுறுத்தினார், உங்களையல்ல' என்றார். உடனே நான் பரிசோதனைச் சாலைக்குச் சென்று பரிசோதனை செய்த போது, சிறுநீரிலும், இரத்தத்திலும் சர்க்கரை இல்லை; இரத்தக் கொதிப்பு மிக நார்மலாக இருந்தது. நான் நம்பமுடியாமல் வீட்டுக்குத் திரும்பி இரண்டு நாட்கள் மாத்திரைகளை நிறுத்திவிட்டு சர்க்கரை வியாதிக்குத் தின்னக்கூடாத பதார்த்தங்களை எல்லாம் இஷ்டம் போலத் தின்று விட்டு மீண்டும் பரிசோதித்தபோது கூட எனது வியாதிகளின் சுவடு கூட இல்லை. மீண்டும் ஐந்தாறு வெவ்வேறு மருத்துவர்களிடம் பரிசோதித்துக் கொண்ட பின்பே எனக்கு சர்க்கரை வியாதியும் இரத்தக் கொதிப்பும் இல்லையென்று நான் நம்பினேன்.''

''எனக்கு ஸ்வாமி அருளிய இரண்டாவது கனவு: 20.9.91 அன்றிரவு கனவில் ஸ்வாமி பல்லக்கில் ஊர்வலமாக வந்து கொண்டிருந்தார். பல்லக்கைச் சுற்றிலும் மக்கள் பெரும் அளவில் கூடி ஸ்வாமியைத் தரிசித்துப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தனர். நான் தூரத்தில் நின்று கொண்டு ஸ்வாமியிடம் ''ஸ்வாமி, இந்த ஜனத்திரளைத் தாண்டிக் கொண்டு உம் அருகில் வர என்னால் இயலாது. எனது நமஸ்காரத்தை இங்கிருந்தே ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்று பிரார்த்தித்தேன். உடனே ஸ்வாமி ஜனக் கூட்டத்தை விலக்கிக் கொண்டு ''அவரிடம் எனக்கு ஒரு வேலையிருக்கிறது. நகருங்கள்'' என்று கூறியவராக என்னை அணுகினார். பல்லக்கில் ஸ்வாமியின் அருகில் மற்றொருவர் இருந்தார். ஸ்வாமி அவரிடம் பணம் கொடுக்கும்படிக் கேட்க, அவர் பல்லக்கின்மேல் விழுந்துகிடந்த பணத்திலிருந்து ஒரு நூறு ரூபாய் நோட்டு, பத்து ரூபாய் நோட்டு மற்றும் சில ரூபாய்களை அளித்தார். ஸ்வாமி அவற்றை வாங்கிக் கொண்டு ''நூற்றுப் பதினாறு ரூபாய்கள் வாங்கிக் கொள் ஐயா'' என்றார். 'இந்தப் பணம் எனக்கெதற்கு ஸ்வாமி?' என்றேன். ஸ்வாமி ''வாங்கிக் கொள் ஐயா'' என்று என் கைகளில் போட்டார். நான் அதனை என் சட்டைப் பையில் போட்டுக் கொண்டேன்.

அக்டோபர் இரண்டாம் தேதி காந்திஜெயந்தியன்று, கர்நூல் St. ஜோசப் காலேஜ் ஸ்ரீமதி ரோஜம்மாவின் வித்யாலயத்தில் நிகழவிருந்த அஷ்டாவதான நிகழ்ச்சியில் என்னையும் பங்கு பெறும்படி அழைப்பு வந்தது. அந்த அழைப்பை ஏற்று நிகழ்ச்சியில் கலந்து கொண்டேன். நிகழ்ச்சியின் முடிவில் அதில் பங்கு பெற்றவர்களுக்கெல்லாருக்கும் வெற்றிலை பாக்கு, நல்ல உல்லன்சால்வை, தேங்காய், ஒரு கவரில் பணம் முதலியவற்றை எவ்சில்வர் தட்டோடு அளித்தார் ஸ்ரீமதி ரோஜம்மா. பின்னர் நான் கவரைத் திறந்து பார்த்தபோது அதில் 116.00 ரூபாய்கள் இருந்தன!''

''நான் 3.10.91 அன்று கர்நூலிலிருந்து ஆதோனிக்குத் திரும்பி அன்றிரவு ''ஸ்வாமி, என்மேல் கருணைகொண்டு உன் திவ்யலீலை களைக் காட்டினீர். என்னைக் கூடிய விரைவில் கொலகமூடிக்கு அழைத்துக் கொள்ள வேண்டும். அதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்'' என்று பிரார்த்தித்தேன். எனக்கு ஒன்பதாம் தேதியி லிருந்து தசரா விடுமுறை ஆரம்பமாகியது. எனக்கு அப்போது அந்த மாதம் சம்பளம் இன்னும் வரவில்லை. கொலகமூடிக்கு மூன்று பேருக்கு இலவசப் பயண வசதியோடு செலவுக்குத் தேவையான 550 ரூபாய்களும் என் சிநேகிதர்களின் மூலம் ஸ்வாமி ஏற்பாடு செய்தார். அக்டோபர் பன்னிரண்டாம் தேதியன்று நான், என் தாய், மூன்று மகள்கள், மகன், மொத்தம் ஆறுபேர் கொலகமூடிக்குப் போய் ஸ்வாமியைத் தரிசித்து மகிழ்ந்தோம். பதினாறாம் தேதி இரவு ஆதோனியை அடைந்து மறுநாள் விஜயதசமிப் பண்டிகையை விட்டில் எல்லோரும் கொண்டாடினோம்.''

''நாங்கள் கொலகமூடிக்குப் புறப்பட்ட அன்று இரவு, விட்டில் இருந்த என் மனைவிக்கு ஸ்வாமி கனவில் தரிசனமளித்ததோடு, சனிவாரமான அன்று கொலகமூடியில் நடக்கும் எல்லா வைபவங்களின் தரிசனத்தையும் அளித்தார். நாங்கள் திரும்பி வந்தவுடனே எனது மனைவி இவ்விஷயத்தைத் தெரிவித்தாள். உடனே விஜயதசமிக்கு மறுநாள் என் மனைவி, பெரிய மகன், சின்னமகன் முதலியவர்களை அழைத்துக் கொண்டு உடனே புறப்பட்டு அன்றிரவு பத்துமணிக்கு கொலகமூடியை அடைந்தோம். கொலகமூடியை அடைந்தவுடன் தான் கனவில் கண்டபடியே அங்குள்ள இடங்கள் யாவும் இருப்பதைக் கண்டு என் மனைவி அதிசயித்தாள்.''

காமலாளி சந்திரசேகரரெட்டி கூறுவதாவது : 1991-ஆம் ஆண்டில் எனது முகம் முழுதும் தடிப்புக்கள் ஏற்பட்டு அவற்றிலிருந்து சீழ்கூட வடியத் தொடங்கியது. முதலில் பருக்கள் போல இருந்ததால் நான் அவற்றைப் பொருட்படுத்தவில்லை. பின்னர் முகம் முழுதும் பரவி

இரவும் பகலும் பொறுக்க முடியாத வலியாக இருந்தது. மருந்துகளை உண்டு, சீழ் ஏற்படும் உணவுகளைத் தின்னாமல் பத்தியம் கூடக் கடைப் பிடித்தேன். ஆனால் சீழ் வடிந்து கொண்டே இருந்தது. சென்னை, பெங்களூர், திருப்பதி முதலிய ஊர்களில் சிறந்த ஆஸ்பத்திரிகளில் ஸ்பெஷலிஸ்ட்களிடம் காட்டி பத்தாயிரம் ரூபாய் செலவழித்து வைத்தியம் செய்து கொண்டும், நாட்டு வைத்தியம் மற்றும் மந்திர தந்திரங்கள் முதலியவற்றாலும் பலன் ஏற்படவில்லை. வலி பொறுக்க முடியாமல் தூக்க மாத்திரைகள் விழுங்கினாலும், மீண்டும் சிறிது நேரத்திலேயே வலியினால் தூக்கம் கலைந்துவிடும். என் நண்பர்களுக்குப் பார்ப்பதற்கு மிகவும் அருவருப்பாக உள்ள என் முகத்தைக் காட்ட விருப்பமின்றி, இரவு நேர இருட்டில் மட்டுமே வெளியே வருவேன். என் துன்பம் பொறுக்க முடியாமல் தற்கொலை செய்து கொள்ள எண்ணினேன்.

எனது எதிர்வீட்டிலிருந்த ஸ்வாமியின் பக்தையான ஸரோஜனம்மாவின் தாய் என்னிடம் ஸ்வாமியின் எண்ணெய் கொடுத்து பூசிக் கொள்ளுமாறு கூறியதுடன் தீர்த்தம் அளித்து, ஸ்வாமியின் நூலைக் கழுத்தில் கட்டிக் கொள்ளும்படிக் கூறினாள். எண்ணெய் தடவிக் கொண்ட அன்றிரவு எனக்கு வலி குறைந்து நல்ல தூக்கம் ஏற்பட்டது. படிப்படியாக இரு தினங்களில் என் வலி மிகவும் குறைந்தது. உடனே கொலகமூடிக்குப் போய் ஸ்வாமியைத் தரிசிக்க வேண்டுமென்று துடித்தேன். ஸரோஜனம்மா என்னைச் சிலநாட்கள் ஆசிரமத்தில் இருக்க அனுமதிக்கும்படி ஆசிரமவாசிகளுக்கு ஒரு கடிதம் எழுதிக் கொடுத்தார். ஸ்வாமியின் அருளால் நான் கொலகமூடியை அடைந்தபோது, அப்போது கட்டிக் கொண்டிருந்த கட்டிடங்களுக்கு நீர் ஊற்றும் வேலை எனக்காகக் காத்துக் கொண்டிருந்தது. ஸ்வாமியின் பிரசாதத்தை உண்டு, க்யூரிங் வேலை செய்து சில நாட்களைக் கழித்தேன். நான் செய்து வந்த வேலையால் சரியாகப் பிரதக்ஷிணங்கள் கூடச் செய்ய முடியவில்லை. எனினும் என் முகத்தில் ஏற்பட்ட கட்டிகள், தடிப்புக்கள், சீழ் முதலியவை மறைந்து என் முகம் இயல்பான நிலையை அடைந்தது. தற்கொலை செய்து கொள்ள முடிவு செய்த என்னை இவ்விதம் தம்மிடம் அழைத்துக் கொண்டு அருள்புரிந்த ஸ்வாமிக்கு நான் என்ன செய்து அவரது கடனைத் தீர்ப்பேன்?''

நெல்லூர் விமலம்மா தமது அனுபவத்தை விவரிக்கிறார் : ''ஸ்வாமியைப் பற்றி ஸ்ரீபரத்வாஜ மாஸ்டரிடமிருந்து அறிந்து கொண்டேன். ஆனால் நான் ஒரு போதும் கொலகமூடிக்குப் போனதில்லை. 1989-ஆம் ஆண்டு ஒரு நாள் நான் ஸ்வாமியிடம் ''ஸ்வாமி உமது 'அவதூதலீலை' என்ற புத்தகத்தை மூன்று முறை பக்தியோடு பாராயணம் செய்வேன். என் பாராயணம் முடிந்தவுடன் நான் அழைக்

காமலே நாங்கள் வந்து எனது வீட்டிலுள்ள பாரிஜாதமரத்தின் அடியில், நான் சாணிதெளித்துக் கோலம் போட்டுள்ள இடத்தில் அமர்ந்து கொண்டு என்னிடமிருந்து உணவு ஏற்க வேண்டும்; அதுவும் சரியாக பன்னிரண்டரையிலிருந்து ஒன்றரை மணி வரையுள்ள நேரத்திலேயே வர வேண்டும்'' என்று பிரார்த்தித்துக் கொண்டபின் அவ்வாறே பாராயணம் முடித்தபிறகு சமையல் செய்துவிட்டு அவரது வரவுக்காக எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். மத்தியானம் ஒரு மணி ஆகிவிட்டது. ஸ்வாமி வரவில்லை. ''என்ன ஸ்வாமி, எனது பாராயணம் எல்லாம் வீணா? நான் செய்த தவறு என்ன?'' என்று மிகவும் வருந்தினேன். எனது வருத்தத்தைப் பார்த்துப் பக்கத்து வீட்டுப் பெண்மணி யாராவது பிச்சைக்காரனை அழைத்து வருவதாகக் கூறினாள். ஆனால் நான் சம்மதிக்கவில்லை. உள்ளே சென்று படத்தருகில் அமர்ந்தவுடன் ''அம்மா'' என்ற இனிய குரல் வீட்டு வாசல் பக்கத்திலிருந்து கேட்க, உடனே போனேன். முழங்கால் வரை வேஷ்டி, சின்ன துண்டு, காக்கிச் சட்டை போட்டுக் கொண்டு ஒரு கையில் தடி மறுகையில் அலுமினியக் கிண்ணம் வைத்திருந்த ஒருவர் ''அம்மா, கொஞ்சம் சாதம் போடுகிறாயா'' என்று இனிய குரலில் யாசித்ததைக் கேட்டு நான் ஆனந்த பரவசத்தில் முழுகிப் போனேன். ''வாருங்கள் ஸ்வாமி, போஜனம் செய்யுங்கள்'' என்று அவரை வீட்டுக்குள் அழைத்தேன். நான் முன்பும் அவர் பின்னாலும் நடந்தோம். வீட்டுக்குள் விரைந்து சாப்பாடு எடுத்துக் கொண்டு வெளியே வந்த போது மற்றொரு ஆச்சரியம் காத்திருந்தது. பாரிஜாத மரத்தடியில் கோலம் போட்டிருந்த இடத்திலேயே அமர்ந்திருந்தார் ஸ்வாமி. சாதாரண பிச்சைக்காரன் என்றால் அவ்வாறு அமர்ந்திருப் பானா? சாதத்தைத் தம் கிண்ணத்தில் போடும்படிக் கூறினார். ஆனால் என் பிரார்த்தனைக்கிணங்கி இலையிலே பரிமாறச் செய்து உள்ளங் கையைக் குழிவாகச் செய்து நெய் விடும்படிக் கேட்டார். தன் கையைச் சாதத்தின் மீது விசித்திரமாக இப்படியும் அப்படியும் திருப்பி விட்டுப் பெருமளவு சாதத்தை இலையைச் சுற்றிலும் வைத்துவிட்டு மத்தியி லுள்ள சாதத்தை ஒரு கணத்தில் தின்று விட்டுக் கை கழுவி விட்டார். போகும்போது பின்னால் திரும்பி, ''தக்ஷிணை ஏதாவது கொடுக் கிறாயா அம்மா'' என்று கேட்டார். நான் ஆனந்தமும் ஆச்சரியமு மடைந்து தக்ஷிணை அளித்து சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தேன். அப்போது அவர் என் தலை மீது கைவைத்து ஆசீர்வதித்தார். அப்போது எனக்கு ஆனந்த அநுபூதி ஏற்பட்டு வெளியுலகே தெரியாமல் போய் விட்டது. அந்த ஆனந்தபரவசம் பலநாட்கள் வரை அப்படியே இருந்து பின்னர் படிப்படியாக இயல்பான நிலை ஏற்பட்டது. நான் அவருக்கு விடைகொடுத்தபடி அவரது பின்னாலேயே சென்றேன். மூன்று வீடுகள் தாண்டும் வரை ரோட்டில் சென்ற அவர் என் கண் முன்பாகவே மறைந்தார்.''

''பாரிஜாத மரத்தடியிலேயே உட்கார வேண்டும்; 12.30, 1.30க்கு இடைப்பட்ட நேரத்தில்தான் வரவேண்டுமென்ற எனது நிபந்தனைகள் நிறைவேறினாலும், வந்தவர் ஸ்வாமியைப் போன்ற வேறு ஒருவரா யிருக்கலாம் என்று நான் சந்தேகப்படக்கூடும். அவ்வாறு சந்தேகம் வரக்கூடாதென்றே அவர் அவ்வாறு என் கண் முன்பே மறைந்தார்; மேலும் அவர் அளித்த ஆனந்த அநுபவம் அவர் ஸ்வாமியே என்பதை நிரூபிக்கிறது.''

பாண்டிச்சேரி டாக்டர் சுபாஷிணி கூறுவதாவது : ''ஸ்வாமியின் விபூதி, நூல் முதலியவற்றின் மகிமையைப் பற்றிப் படித்த நான் கொலகமூடியைத் தரிசித்து, விபூதி, நூல் முதலியவற்றைக் கொண்டு வந்து பாண்டிச்சேரியிலுள்ள என் வீட்டில் வைத்துக் கொண்டு தினமும் பூஜை செய்து கொண்டிருந்தேன். ஸ்வாமி எனக்குக் கனவில் தரிசனம் அளித்து ''மகன் பிறந்தால் என் பெயர் வை'' என்று கூறினார்.

எனக்கு ஒன்பது மாதங்கள் நிறைவடைந்தன. ஸ்வாமியின் படம் என்னிடம் இல்லை. நாள்தோறும் பூஜைக்குப்பின் விபூதியை வாயில் இட்டுக் கொண்டு ''ஸ்வாமி! என் பாரம் அனைத்தும் உமதே'' என்று பிரார்த்திப்பேன். பிரசவத்துக்கு இரண்டு மூன்று நாட்களே இருக்கும் போது எனக்கு மனக்கலக்கமும் பயமும் அதிகரித்தன. நானும் என் கணவரும் மருத்துவர்களானாலும் இது முதல் பிரசவமாதலால் எனக்கு பயம் அதிகமாய் இரவு முழுதும் அழுது கொண்டே தூங்கினேன்.

அன்றிரவு மூன்று மணியளவில் ஸ்வாமி எனக்குக் கனவில் காட்சியளித்தார். என் வீட்டிலுள்ள ஸ்வாமி படங்களுக்கு அடியில் உள்ள ஒரு அக்விகுண்டத்தில் ஸ்வாமி பிரகாசமாக ஒளிர்ந்து கொண்டு அமர்ந்திருந்தார். ''உனக்கு பயம் எதற்கம்மா! நான் தான் உன் கூடவே இருக்கிறேனே'' என்றார். அப்போதிருந்து எனக்கு தைரியம் வந்தது. ஒரு மணி நேரத்திற்கொருமுறை ஸ்வாமி விபூதியை நீரில் கலந்து குடித்தேன். ஸ்வாமியின் அருளால் எனக்கு சுகப்பிரசவம் ஆகி மகன் பிறந்தான். அவனுக்கு ஸ்வாமியின் ஆணைப்படி 'ஹரித்' என்று பெயர் வைத்தோம். ஸ்வாமி என் அண்ணா தம்பிகளுக்குக் கூட அவசியமான போது தரிசனமளித்து தக்க ஆலோசனைகள் அளித்து வருகிறார். நம்பியவரை ஆதரிக்கும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவே வெங்கையஸ்வாமி!''

ரயிலடியில் விழுந்த மனிதனை ஸ்வாமி காப்பாற்றிய அதிசயம் :

கொலகமூடியைச் சேர்ந்த உடதா ரமணய்யாவின் அநுபவம் : 16.6.92 அனலில் நான் இமேன் வேலை செய்தவனாக வேதாய பாளையம் - வெங்கடாசலம் ஆகிய ஸ்டேஷன்களுக்கிடையே லைன் பரிசோதனை செய்தபடி நெல்லூரை நோக்கிச் சென்று கொண்டிருந்தேன். மதராஸ்

செல்லும் ரயில் ஒன்றைத் திரும்பி நெல்லூர் வரும்படி அழைத்ததால், அந்த ரயிலை வேதாயபாளையம் வரை பின்புறமாக ஒட்டிக் கொண்டு வந்தார் டிரைவர். அவ்வாறு பின்புறமாக ஒட்டிக் கொண்டு வருகையில் விசில் அடித்துக் கொண்டு 15 கி.மீ. வேகத்தில் வரவேண்டும். ஆனால் எஞ்ஜினில் ஏதோ வேலை செய்து கொண்டு விசில் அடிக்காமல் வந்த டிரைவர், லைன்மீது செல்லும் என்னைப் பார்க்கவில்லை. அதே சமயத்தில் பக்கத்து லைன் மீது வேறு ஒரு வண்டி வந்ததால் எனக்குப் பின்னால் வந்த வண்டியின் சப்தம் எனக்குக் கேட்கவில்லை. பதினைந்து கி.மீ. வேகத்தில் வந்து கொண்டிருந்த அந்த ரயில் என்னைப் பின்புறத்திலிருந்து மோதியது. உடனே தடுமாறிய நான் என்னை யறியாமலேயே 'ஸ்வாமீ' என்று அலறியபடி இரண்டு தண்டவாளங் களுக்கிடையில் குப்புற விழுந்தேன். என்மேல் போன ரயில் எனது சட்டை, பனியன், வேஷ்டி எல்லாவற்றையும் இழுத்துக் கொண்டு போயிற்று. எனது முகத்திலும் கன்னத்திலும் ஜல்லிக் கற்கள் குத்திச் சிறு காயமே ஏற்பட்டது. எனது வலது குதிகால் சதை வெட்டுப்பட்டது. என்னை ரெயில்வே மருத்துவமனையில் சேர்த்தனர். டிரைவரைக் கைது செய்தனர். பத்துநாட்களில் நான் மருத்துவமனையிலிருந்து வெளி வந்தேன். பல பரிசோதனைகள் செய்து எனக்கு எதுவும் ஆகவில்லை என்று முடிவுகட்டின பிறகே என்னை மீண்டும் வேலைக்குச் செல்லும் படிக் கூறினர். ஸ்வாமியே என் உயிரைக் காத்ததோடு எவ்வித அங்கஹீனமும் ஏற்படாமல் அருளினார். ரயில்வே சரித்திரத்திலேயே இவ்வாறு பிழைப்பது மிகவும் அதிசயம் என்று எல்லோரும் கூறினர்.''

இவர் தமக்கேற்பட்ட மற்றொரு அநுபவத்தையும் கூறுகிறார் : ''எனக்குப் பத்தொன்பது வயதாக இருக்கும்போது நாள்தோறும் ஒன்றே கால் ரூபாய் கூலிக்கு ரயில்வே காங்க் (Gang) வேலை செய்து வந்தேன். அதைக் குறித்து என் மாமியார் ஏளனம் செய்யவே நான் அந்த வேலையை விட்டு விட்டு விவசாயப் பணிக்குச் செல்ல ஆரம்பித்தேன். ஒரு ஆண்டுக்குப் பின் ஒரு நாள் நீர்க்காவடி ஒன்றைச் சுமந்தவாறு ஆஞ்சநேயஸ்வாமி கோயிலருகில் இருந்த ஸ்வாமியிடம் சென்றேன். நான் எதுவும் கேளாமலேயே ஸ்வாமி என்னிடம்'' ஐயா, பத்துரூபாய் செலவு செய்தால் நூறு ரூபாய்கள் லாபம் ஏற்படுமில்லையா? உன் கையால் எவ்வளவோ அன்னதானம் நடக்கப் போகிறதில்லையா? உன்னை அரசாங்கத்தினர் அழைப்பார்கள். உத்தியோகத்துக்குப் போ ஐயா'' என்றார். ''போ ஸ்வாமி! நான் தான் ரயில் வேலைக்குப் போகாமல் விட்டுவிட்டு விவசாய வேலை செய்து பிழைக்கின்றேனே'' என்று கூறிவிட்டுப் போய் விட்டேன். அவரது மொழிகளுக்கு நான் எந்தவித மதிப்பும் அளிக்கவில்லை.''

''இதற்குப் பின்னர் சில நாட்களில் ரயில்வே இலாகாவில் ஒரு புது உத்தரவு போட்டனர். அதன்படி 1960-ஆம் ஆண்டுக்கு முன்பு ஆறு மாதங்கள் தொடர்ந்து பணி செய்தவர்களுக்குத் தற்காலிக உத்தியோகம் அளித்து, நிரந்தர உத்தியோகஸ்தர்களுக்கு அளிக்கும் சம்பளத்தைக் கொடுக்க வேண்டுமென்றனர். அந்த ஜாபிதாவில் என் பெயரும் வந்தது. மாதம் 170 ரூபாய் சம்பளத்தில் உத்தியோகத்தில் சேர்ந்தேன். பின்னர் ஐயாயிரம் ரூபாய்கள் பழையபாக்கி (arrears) வரவே அதைக் கொண்டு ஏழு ஏக்கர் நிலம் வாங்கினேன். ஸ்வாமியின் ஆசிரமத்தில் அன்ன தானத்துக்காக ஆண்டு தோறும் நான்கு மரக்கால் நெல் அளித்து வருகிறேன். இப்போது எனக்கு மூவாயிரம் ரூபாய்கள் சம்பளம். ரெயிலில் இலவசப் பயணச் சலுகைகள், ஒய்வு பெற்றபின் பென்ஷன் முதலியவையும் உண்டு. ஸ்வாமியின் வாக்கு சத்தியவாக்கு.''

ஸ்ரீ குத்தேடி ஆஞ்சநேயலு தமது அநுபவத்தை விவரிக்கிறார் : ''1965-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் நான், என் மனைவி, மற்றும் சிலரும் ஒரு குதிரை வண்டியில் போய்க்கொண்டிருந்தபோது பின்புறத்தி லிருந்து ஒரு பஸ் குதிரை வண்டியின் மேல் மோதியது. வண்டியி லுள்ளவர்கள் யாவரும் சிதறி விழுந்தனர். ஆனாலும் குதிரை உட்பட யாருக்கும் பெரிய காயங்கள் எதுவும் ஏற்படவில்லை. வண்டி மாத்திரம் சுக்கல் சுக்கலாக உடைந்து போய்விட்டது. எனது முதுகெலும்பில் எங்கு அடிபட்டதோ, மிகுந்த வலி ஏற்பட்டது; படுக்க முடியவில்லை. ஒரு லட்சம் ரூபாய் செலவு செய்து மதராஸ், ஹைதராபாத், குண்டூர் முதலிய இடங்களில் சிறந்த டாக்டர்களிடம் சிகிச்சை செய்தும் பலனில்லை. இவ்வாறு இரண்டு ஆண்டுகள் சித்திரவதைப் பட்டேன். இறுதியில் நான் அதிகநாட்கள் உயிர்வாழ மாட்டேன் என்று மருத்துவர்கள் கூறி விட்டனர். அதனால் ஏற்பட்ட கலக்கத்தால் சாப்பிடப் பிடிக்காமல் போயிற்று. நான் சாப்பிடாததால் வீட்டில் ஒருவரும் சாப்பிடவில்லை. எனவே அவர்களுக்காக எப்படியோ உணவை விழுங்கி வைத்தேன். உடல் துன்பத்தோடு மனக்கவலையும் என்னை மிகவும் வாட்டியது.''

''இந்நிலையில்தான் எனது சிநேகிதர்களின் ஆலோசனைப்படி கொலகமூடிக்குச் சென்று ஸ்வாமி தரிசனம் செய்தேன். உடனே ஸ்வாமி மின் அருள் நோக்கினால் எனது துன்பத்தில் எழுபத்தைந்து சதவீதம் குறைந்துவிட்டது. சாவின் பிடியில் ஊசலாடிக் கொண்டிருந்த எனக்குப் புதுவாழ்வு அளித்தார் ஸ்வாமி. அது முதல் வாரத்துக்கு ஒரு முறை வந்து ஸ்வாமியைத் தரிசித்துக் கொண்டிருக்கிறேன். படிப்படியாக தொண்ணூற்றைந்து சதவீதம் உடல்நலம் ஏற்பட்டது. எனது தீவினைப் பயனான மீதமுள்ள துன்பத்தை அநுபவிப்பதே மேல் என்று கருதி ஸ்வாமியிடம் அதைத் தீர்க்கும்படி நான் கோரவில்லை.''

''1988-ஆம் ஆண்டில் எனக்கு நாகார்ஜுனாசாகரில் ட்யூடி போட்டார்கள். நான் புறப்படுவதற்கு இன்னும் ஐந்து நாட்களிருக்கையில் எனது ஆறு வயது மகனுக்குத் திடீரென்று உடல் நலம் கெட்டது. வலிப்பு வியாதிபோல் ஒரு நாளுக்கு நான்கு முறை ஏற்பட்டது. நான் காம்புக்கு (Camp) போவதற்கு முன்னால் அவனுக்கு உடல் நலம் ஏற்பட வேண்டுமென்று ஒருவர் மாற்றி ஒருவராக மூன்று டாக்டர்களுக்குக் காட்டி வைத்தியம் செய்தாலும் குணமேற்படவில்லை. ட்யூடிக்குப் போவதா வேண்டாமா என்று புரியாமல் என்ன செய்ய வேண்டுமென்று கேட்டு ஸ்வாமியையே வேண்டினேன். அன்றிரவு ஸ்வாமி கனவில் தரிசனம் அளித்து 'ஐயா, பையனுக்கு உடம்பு சரியாகிவிடும்; நீ காம்புக்குப் போ' என்று கூறினார். அவ்வாறே போய் விட்டுத் திரும்பிய போது மகனின் உடல்நிலை முழுமையாகக் குணமடைந்திருந்தது. ஸ்வாமி கனவில் காட்சியளிக்காமலிருந்தால் மருந்துகளாலேயே என் மகன் குணமடைந்தான் என்று எண்ணியிருப் போம். நமது பக்தியை வளர்ப்பதற்கே ஸ்வாமி அவ்வாறு தரிசனை மளித்துக் குழந்தையைக் குணப்படுத்தினார்.''

''எனக்கு சர்க்கரை வியாதி இருந்தது. மருந்துகளை நிறுத்திவிட்டு ஸ்வாமியின் விபூதியை உபயோகிக்க ஆரம்பித்தேன். ஸ்வாமியின் அருளால் என் உடல்நிலை நன்றாக உள்ளது.''

ஸ்ரீ பாபோலு பிச்சையா தமது அநுபவத்தை விவரிக்கிறார் : ''1982-ஆம் ஆண்டில் எனக்கு வலது கால் தொடையின் பின்புறம் பாதிப்பயிறு அளவு வீக்கம் ஏற்பட்டது. அது படிப்படியாக வளர்ந்து டென்னிஸ் பந்து அளவு பெரிதாயிற்று. மேலும் கூட வரை ஆரம்பித்தது. நெல்லூரில் இரண்டு முறை ஆபரேஷன் செய்து கொண்ட பிறகும் கூட மூன்றாவது முறை அப்படியே பெரிதாக வளர்ந்தது. இம்முறை கான்சர் என்று சந்தேகப்பட்டு திருப்பதிக்குக் கொஞ்சம் மாதிரிக்கு அனுப்பிச் சோதித்தபோது அது கான்சரே என்று கூறினர். மதராஸிலுள்ள கான்சர் மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சை செய்து, மின்சாரம் செலுத்தி இரண்டு மாதங்களுக்கு முப்பதாயிரம் செலவு செய்து ஒருவழியாக வெளியே வந்தேன். மீண்டும் அவ்வாறு உடலில் எங்காவது வந்தால், பணம் வீணாகுமே தவிர குணமாகாது; உயிருக்கு அபாயம் என்று கூறினர்.''

''பின்னர் ஒரு ஆண்டில் அதே காலில் கட்டைவிரலுக்கும் அதன் பக்கத்து விரலுக்கும் நடுவில் மீண்டும் முன்போலவே வீங்க ஆரம்பித்துப் பின் வளர்ந்து வந்தது. சில நாட்களில் கடுக்காய் அளவு பெரிய செருப்புகள் கூடப் போட்டுக் கொள்ள முடியவில்லை. முன்பு


மருத்துவர்கள் கூறியதை நினைத்து எனக்குப் பிராண பயமும் தீவிரமான மனவேதனையும் ஏற்பட்டது. எனக்கு மணம் செய்விக்க வேண்டிய இரண்டு மகள்கள் இருக்கிறார்கள். இந்தச் சங்கடமான நிலையில் நான் சனிக்கிழமை தோறும் கொலகமூடிக்குப் போய் ஸ்வாமியைத் தரிசித்துக் கொண்டிருந்தேன். ஒரு நாள் அக்கிராமத்திலிருந்த என் மகளின் ஆலோசனைப்படி ஸ்வாமியிடம் ஒரு சின்ன வேண்டுதல் செய்து கொண்டு பிரார்த்தித்தேன். ஆச்சரியப்படும் விதமாக அடுத்த சனிக் கிழமைக்குள் அந்தக் கட்டி முழுமையாகப் போய்விட்டது. இது ஸ்வாமியின் எல்லையற்ற கருணைக்கு எடுத்துக்காட்டாகும்.''

நெல்லூர், காந்திநகரில் வசிக்கும் ஜூதா நாராயணனின் அனுபவம் : ''1992-ஆம் ஆண்டில் என் மனைவி ஒரு திருமணத்துக்குப் போய் வந்த பிறகு வலது பக்க இடுப்பில் வலி ஏற்பட்டது. பின்னர் சிறுநீர் கழிக்கப் போனபோது விழுந்துவிட்டாள். அப்போதிருந்து காலை மடக்கிக் கொண்டே இருப்பாளே தவிர நீட்டமுடியவில்லை. பலவிதமான வைத்தியங்களும் செய்த பார்த்துப் பலனில்லாமல் இறுதியில் கொலக மூடிக்கு வந்தோம்.''

''கொலகமூடிக்கு வந்த சமயத்தில் அவளால் கொஞ்சம்கூட நடக்க முடியவில்லை. நானே குழந்தையை எடுத்துக் கொள்வதைப் போல அவளைக் கையில் எடுத்துக் கொண்டு பிரதக்ஷிணம் செய்தேன். மிகவும் பலவீனமாக, எலும்புக்கூடாக இருந்தாள். முதன்முதலில் துளிக்குப் பக்கத்தில் கூடப் போகமுடியவில்லை. இரண்டு மூன்று பிரதக்ஷிணங்கள் செய்வித்தபோது அவளுக்குத் தானாகவே சிறுநீர் போக ஆரம்பித்தது. எனவே அந்தப் பவித்திரமான இடத்தில் இருக்க முடியாமல் அவளை வெளியே உட்காரவைத்துவிட்டு அவளுக்கு பதில் நானே பிரதக்ஷிணங்கள் செய்தேன். ஸ்வாமி ஸந்நிதியில் நாற்பது நாட்கள் சேவை செய்ய வேண்டும் என்று நினைத்த எங்களுக்கு மூன்று மாதங்கள் ஆகிவிட்டன. ஸ்வாமியின் அருளால் வந்த மூன்று நான்கு நாட்களிலேயே அவளது உடலிலுள்ள எரிச்சல் குறைந்தது. அவள் வீட்டுக்கு விலக்கான போது வீட்டுக்குப் போவோம். மீண்டும் வந்து ஸ்வாமி சேவை செய்வது என்று இவ்வாறு ஒரு ஆண்டுக்காலம் வீட்டுக்கும் கொலகமூடிக்குமாகப் பிடிவாதமாகத் திரிந்தேன். ஸ்வாமி எங்கள்மேல் கருணை காட்டி அவள் தடியைப் பிடித்துக் கொண்டு தானாகவே நடக்கும்படிச் செய்தார். தற்போது தன் வேலைகளைத் தானே செய்து கொள்வதுடன் சமையல் வேலைக்குக் கூட உதவி செய்கிறாள்.''

வலஸ்தலிபுரத்தைச் சேர்ந்த ஸ்ரீமதி சோபா தமது அநுபவத்தைக் கூறுகிறார். ''எனக்கு 1992-ஆம் ஆண்டில் தோல் வியாதி ஏற்பட்டு முகம் முழுவதும் தீப்புண்களால் ஏற்பட்ட தழும்புகள் போல மிகவும் விகாரமாக இருந்தது. முகம் முழுவதும் அரிப்பு; உடலிலும் சில இடங்களில் இத்தகைய தழும்புகள் ஏற்பட்டன. எத்தனை எத்தனையோ மருந்துகள் உபயோகித்தும் குறையாமல் உடல் முழுதும் பரவி விட்டது. இத்தனைக்கும் என் அண்ணன்கள் இருவரும் டாக்டர்களே. அவர்களே எப்படிக் குணமாகுமோ என்று வருந்தினார்கள். இறுதியில் அலுத்துப் போய் எல்லா மருந்துகளையும் நிறுத்திவிட்டு ஸ்வாமியைச் சரணடைந்தேன். ''ஸ்வாமி! எனது தீவினைப் பயனை அழித்து எனக்கு இந்த வியாதியைக் குணப்படுத்தி உம்மீது முழுமையான நம்பிக்கை ஏற்படும்படிச் செய்வீர். உங்கள் விபூதியை ஒரு வாரகாலம் பூசிக்கொள்வேன்'' என்று பிரார்த்தித்து விபூதியைப் பூசிக் கொள்ளத் தொடங்கினேன். அந்தக் கருணாநிதி எனது கர்மத்தை அழித்து நான்கு நாட்களில் முகம் மட்டுமன்றி உடல் முழுவதுமுள்ள தழும்புகளைப் போக்கி அருளினார். வெங்கையஸ்வாமி, கலியுகத்தின் கண்கண்ட தெய்வமே.''

***



PUJYA SRI ACHARYA E. BHARADWAJA

இந்த நூலைப்பற்றி

" உங்களை நாடியவர்களில் சிலருக்கு உடனே துன்பங்கள் நீங்குகின்றன. மற்றும் சிலருக்குக் கொஞ்சம் தாமதம் ஆகிறதே, ஏன் ஸ்வாமி?" என்று கேட்டபோது ஸ்வாமி "அவர்கள் இருப்பதைப் பொறுத்துத்தானே நாம் இருப்பது" என்று பதிலளித்தார்.

அதாவது ஸ்வாமியைப் பற்றி சரியாகப் புரிந்து கொண்டு மனப்பூர்வமான அன்போடும் நம்பிக்கையோடும் அவரை வழிபடுவதையே ஸ்வாமி குறிப்பிடுகிறார். ஸ்வாமியைப் பற்றி நாம் சரியாக அறிந்து கொள்வதற்காகவே பல்வேறு பக்தர்களுக்கு அவர் அருள் புரிந்த நிகழ்ச்சிகளைத் தொகுத்து இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. ஸ்வாமி, ஸமர்த்த ஸத்குரு என்பதையும் இந்த சிருஷ்டியில் அவரால் செய்ய இயலாதது எதுவும் இல்லை என்பதையும் நமக்கு உணர்த்தி, இடைவிடாது ஸ்வாமியை நினைப்பதற்கு உதவி செய்து, இக, பர நன்மைகளை அளிக்கவல்லது இந்நூல்.

பதிப்பாளர்கள்